கிருஷ்ண எசுர்வேதம்

தைத்திரீய சங்கிதை

மகாக்கினி சயனத்தின் சேடப் பிரகரணம்

சாயணபாடியக் கருத்து மொழிப்புரையுடன் கூடியது

எட்டாம் பகுதி

இது

உயர் திரு.

காசிவாசி சிவானந்த யதீந்திர சுவாமிகளால்

மொழி பெயர்க்கப்பெற்று

சென்னை

திருவொற்றியூரான் அடிமை என்னும்

த. ப. இராமசாமிப் பிள்ளை யவர்களால்

தமது சொந்தப் பொருட்செலவிற் பதிப்பித்து

நன்கொடையாக அளிக்கப்பெற்றது.

விஷு வருஷ சித்திரைத் திங்கள்

1941

PRINTED AT
THE GEETHACHARYA PRESS,
WASHERMANPET, MADRAS.

கிருஷ்ண எசுர்வேத தைத்திரீய சங்கிதை

ஐந்தாங்காண்டம் முதற்பிரபாடக

விடயச் சுருக்கம்

பக்கம்	அநுவாகம்	விடயங்கள்.
1	1	சாவித்திர ஆகுதிகளேயும், கட்டப்பாரையைக் கைக்கொள்ளுதலேயுங் கூறும் பிராமணங்கள்.
8	2	குதிரை, களிமண்ணிருக்குமிடஞ் செல்லுதலும் புத்தைத் தாண்டுதலேயுங் கூறும் பிராமணங்கள்.
16	3	குதிரை, புத்தைத் தாண்டுதலுடன் பூமியைப் புனிதமாக்கல்.
25	4	மண்ணேக் கெல்லல், தாமரை இலேயிலும் மான்தோலிலும் எடுத்தல் என்பவற்றைக் கூறுகின்றன.
32	5	எடுத்த மண்ணே வேள்வி செய்யுமிடத்திற்குக் கொண்டு வருவதைக் கூறுகின்றது.
46	6	உகா (மண் தொட்டி) செய்வதைக் கூறும் பிராமணங்கள்.
54	7	உகாவை (மண் தொட்டியை)ச் சுடுதற்குரிய பிராமணங்கள்.
60	8	அக்கினியும் பசுவுஞ் சொல்லப்படுகின்றன.
71	9	மண் தொட்டியில் தீ யுண்டாக்குவதைக் கூறும் பிராமணங்கள்.
79	10	உகாவைத் தரித்துக்கொள்ளல்.
87	11	அசுவமேதத்தின் பிரயாஜ யாஜ்யங்களேக் கூறும் மந்திரங்கள்.

ஐந்தாங்காண்டம் இரண்டாம்பிரபாடக

விடயச் சுருக்கம்

பக்கம்	அநுவாகம்	விடயங்கள்.
94	1	நாற்காலியில் உகாவை வைப்பதையும், அதைப் போற்று வதையுங் கூறும் பிராமணங்கள்.
102	2	உகாக்கினியை எடுத்துக்கொண்டு வேட்குமிடஞ் செல்லு தலைக் கூறும் பிராமணங்கள்.
111	3	காருகபத்ய சயனம் என்னுஞ் செங்கலடுக்கைக் கூறும் பிராமணங்கள்.
120	4	உகாவிலுள்ள தீயை, காருகபத்திய சயனத்தில் வைக்கும் வகையைக் கூறும் பிராமணங்கள்.
126	5	வேள்விப் பூமியை அளக்கும் வகையைக் கூறும் பிராம ணங்கள்.
136	6	மணலைப் போடுதலை விதிக்கும் பிராமணங்கள்.
142	7	பொன் தகடு முதலியவற்றை வைக்கும் முறையைக் கூறும் பிராமணங்கள்.
150	8	இயற்கைத் துளையுடைய சுக்கான்கல்லை வைத்தலைக் கூறும் பிராமணங்கள்.
160	9	உகா, என்னுந் தொட்டி முதலியவைகளை வைத்தலைக் கூறும் பிராமணங்கள்.
167	10	முதலாவது அடுக்கில் வைக்கவேண்டிய அபஸ்யம் என் னுஞ் செங்கல் முதலியவைகளைக் கூறும் பிராமணங்கள்.
176	11	குதிரையிற் கோடு கிழிப்பவைகளைக் கூறும் மந்திரங்கள்.
180	12	குதிரையை அறுப்பதற்குரிய மந்திரங்கள்.

ஐந்தாங்காண்டம் மூன்றும்பிரபாடக

விடயச் சுருக்கம்

பக்கம்	அநுவாகம்	விடயங்கள்.
185	1	ஆசுவினி முதலிய நான்கு வகைச் செங்கல்களைக் கூறும் பிராமணங்கள்.
193	2	இயற்கைத் துளையுடைய சுக்கான் கல் முதலியவற்றைக் கூறும் பிராமணங்கள்.
199	3	அக்ஷ்ண்யாஸ்தோமம், என்னுஞ் செங்கல்களைக் கூறும் பிராமணங்கள்.
207	4	எஞ்சிய அக்ஷ்ண்யாஸ்தோமங்களைக் கூறும் பிராமணங் கள்.
216	5	அசபத்னம், விராஜம் என்னுஞ் செங்கல்களைக் கூறும் பிராமணங்கள்.
222	6	ஸ்தேமபாகச் செங்கல்களைச் சிறப்பாய்க் கூறும் பிராமணங் கள்.
226	7	நாகசத் என்பது முதலிய ஐவகைச் செங்கல்களைக் கூறும் பிராமணங்கள்.
233	8	சந்தங்கள் என்னுஞ் செங்கல்களைக் கூறும் பிராமணங்கள்.
237	9	சயுக் என்பது முதலான மூவகைச் செங்கல்களைக் கூறும் பிராமணங்கள்.
239	10	'விருஷ்டி சனி' என்பது முதலான ஐவகைச் செங்கல் களைக் கூறும் பிராமணங்கள்.
244	11	'பூயஸ்கிருத்' என்பது முதலிய ஆறுவகைச் செங்கல்களைக் கூறும் பிராமணங்கள்.
248	12	அசுவமேதயாக விதியைக் கூறும் பிராமணங்கள்.

ஐந்தாங்காண்டம் நான்காம்பிரபாடகம்

விடயச் சுருக்கம்.

பக்கம்	அநுவாகம்	விடயங்கள்.
254	1	இந்திரதனு முதலிய மூவகைச் செங்கல்களைக் கூறும் பிராமணங்கள்.
258	2	ரிதவ்யம் முதலிய மூவகைச் செங்கல்களையும், புரோக்ஷணத்தையுங் கூறும் பிராமணங்கள்.
263	3	உருத்திராத்தியாயத்தை விநியோகிக்கும் பிராமணங்கள்.
269	4	தண்ணீர்வார்த்தல் முதலிய புநிதமாக்குங் கருமங்களைக் கூறும் பிராமணங்கள்.
276	5	வியாகார ஹோமத்தைக் கூறும் பிராமணங்கள்.
281	6	சமித்துக்களை வைத்தல் முதலிய விதிகளைக் கூறும் பிராமணங்கள்.
290	7	சயனத்தின்மேல் அக்கினியை வைத்தலைக் கூறும் பிராமணங்கள்.
301	8	வசோர்த்தாரையைக் கூறும் பிராமணங்கள்.
309	9	பல்வகைத் தானியக் கஞ்சிகளாற்செய்யப்படும் ஓமங்களைக் கூறும் பிராமணங்கள்.
315	10	அக்கினிசயனத்தை, சுவர்க்கலோகஞ் செல்லும் இரதமாகக் கூறும் பிராமணங்கள்.
322	11	காமியச் செங்கல் அடுக்கு முதலியவைகளைக் கூறும் பிராமணங்கள்.
329	12	அசுவமேத யாகத்துதியின் இருக்கு முதலானவைகளைக் கூறும் பிராமணங்கள்.

ஐந்தாங்காண்டம் ஐந்தாம்பிரபாடக

விடயச் சுருக்கம்.

பக்கம்	அநுவாகம்.	விடயங்கள்.
335	1	தீக்ஷிணீயேஷ்டி முதலானவைகளின் விதியைக் கூறும் பிராமணங்கள்.
345	2	மகாக்கினி சயனத்தையும், அதனுடைய பயனையுங் கூறும் பிராமணங்கள்.
353	3	உகாவின் ஹோம முதலானவைகளைக் கூறும் பிராமணங்கள்.
358	4	ரேதசிக், என்பது முதலானவைகளை வைக்கும்முறையைக் கூறும் பிராமணங்கள்.
364	5	பொன் கல், முதலான கல்லுகளைக் கூறும் பிராமணங்கள்.
369	6	பகல் வடிவங்களென்னும் ஐந்து செங்கல் முதலானவைகளைக் கூறும் பிராமணங்கள்.
373	7	யூபம் ஒன்றே என்று விதிக்கும் பிராமணங்கள்.
378	8	மகாக்கினிசயன உபஸ்தானத்தைக் கூறும் பிராமணங்கள்.
382	9	நெய்யாகுதிகளைக் கூறும் பிராமணங்கள்.
387	10	சர்ப்பாகுதி முதலானவைகளைக் கூறும் பிராமணங்கள்.
393	11	அசுவமேத பசுக்களைக் கூறும் பிராமணங்கள்.
394	12	இதில் இரண்டாவது பத்துப் பசுக்கள் கூறப்படுகின்றன.
395	13	இதில், மூன்றாவது பசுக்கூட்டங் கூறப்படுகின்றன.
396	14	இதில், பசுக்களின் நான்காவது கூட்டஞ் சொல்லப்படுகிறது.
397	15	இதில், ஐந்தாவது பசுக்கூட்டஞ் சொல்லப்படுகிறது.
,,	16	இதில், ஆறாவது பசுக்கூட்டவகை சொல்லப்படுகிறது.
398	17	இதில், ஏழாவது பசுக்கூட்டவகை கூறப்படுகின்றது.
399	18	இதில், எட்டாவது பசுக்கூட்டவகை கூறப்படுகின்றது.
400	19	இதில், ஒன்பதாவது பசுக்களின் கூட்டவகை கூறப்படுகின்றது.
,,	20	இதில், பத்தாவது பசுக்கூட்டவகை கூறப்படுகின்றது.
401	21	இதில், பதினோராவது பசுக்கூட்டவகைக் கூறப்படுகின்றது.
402	22	நாட்டுப் பசுக்கூட்டங்கள் மூன்றனுள்—முதலாவது பசுக்கூட்டங் கூறப்படுகின்றது.
403	23	இதில், இரண்டாவது நாட்டுப் பசுக்களின் கூட்டங் கூறப்படுகின்றது.
,,	24	இதில், மூன்றாவது நாட்டுப் பசுக்களின் கூட்டங் கூறப்படுகின்றது.

ஐந்தாங்காண்டம் ஆரும்பிரபாடக

விடயச் சுருக்கம்

பக்கம்	அநுவாகம்	விடயங்கள்.
405	1	கும்பேஷ்டகைகளைப் போற்றுதற்குரிய மந்திரங்கள்.
412	2	கலசச் செங்கல்களை வைப்பதைக் கூறும் பிராமணங்கள்.
419	3	பூதச் செங்கல் முதலியதைக் கூறும் பிராமணங்கள்.
425	4	தருப்பைக் கொம்பிற்செய்யும் ஆகுதிகளைக்கூறும் பிராமணங்கள்.
431	5	சில அவிகளைக் கூறும் பிராமணங்கள்.
435	6	முற்கூறியதை அநுவதித்துப் புகழும் பிராமணங்கள்.
440	7	தீட்சைகளின் விகற்பங்களை விதிக்கும் பிராமணங்கள்.
444	8	சிதியின்மேல் ஏறுதல் முதலியதைக் கூறும் பிராபணங்கள்.
452	9	உகாத்தியை வைக்கும் நாற்காலி முதலியவைகளைக் கூறும் பிராமணங்கள்.
456	10	அக்கினி சயனத்தை பல்வகையாகத் துதிக்கும் பிராமணங்கள்.
460	11	அசுவமேத யாகத்திற்குரிய பதினெட்டுவகை நிற வேறுபாடுகளையுடைய ஆட்டுக்கூட்டங்களுள் முதலாவது கூட்டம்.
461	12	இதில், இரண்டாவது ஆட்டுக்கூட்டஞ் சொல்லப்படுகின்றது.
463	13	இதில், மூன்ருவது ஆட்டுக்கூட்டஞ் சொல்லப்படுகின்றது.
,,	14	இதில், நான்காவது ஆட்டுக்கூட்டஞ் சொல்லப்படுகின்றது.
464	15	இதில், ஐந்தாவது ஆட்டுக்கூட்டஞ் சொல்லப்படுகின்றது.
465	16	இதில், ஆருவது ஆட்டுக்கூட்டஞ் சொல்லப்படுகின்றது.
466	17	இதில், ஏழாவது ஆட்டுக்கூட்டஞ் சொல்லப்படுகின்றது.
467	18	இதில், எட்டாவது ஆட்டுக்கூட்டஞ் சொல்லப்படுகின்றது.
468	19	இதில், ஒன்பதாவது ஆட்டுக்கூட்டங் கூறப்படுகின்றது.
,,	20	இதில், பத்தாவது ஆட்டுக்கூட்டங் கூறப்படுகின்றது.
469	21	இதில் மாத்திரம், இரட்டை இரட்டையான பசுக்கள் கூறப்படுகின்றன.
470	22	அதிராத்ரியில் அநுட்டிக்கத்தக்க சில பசுக்கள் கூறப்படுகின்றன.
471	23	இவ்வநுவாகத்தில் இருது பசுக்கள் கூறப்படுகின்றன.

ஐந்தாங்காண்டம் ஏழாம்பிரபாடக

விடயச் சுருக்கம்.

பக்கம்	அநுவாகம்	விடயங்கள்.
474	1	செங்கலடுக்கைத் தொடுவதை விதிக்கும் பிராமணங்கள்.
478	2	இடபச் செங்கலைக் கூறும் பிராமணங்கள்.
486	3	வச்சிரிணீ என்னுங் கூழாங்கல்லுகள் முதலானதைக் கூறும் பிராமணங்கள்.
491	4	சில ஹோமங்களையும், ராஷ்ட்ர பிருத்து என்னுஞ் செங்கல்களையுங் கூறும் பிராமணங்கள்.
49[illegible]	5	உகாத் தியை மீண்டும் வளர்த்தல் முதலானவற்றைக் கூறும் பிராமணங்கள்.
503	6	விரதா நுட்டான முதலியவைகளைக் கூறும் பிராமணங்கள்.
510	7	ஆகூதி மந்திரங்கள்.
515	8	சுயஞ்சிதி முதலியவைகளைக் கூறும் பிராமணங்கள்.
519	9	அக்கினியை தன்பால் கொள்ளுகல் முதலியவைகளைக் கூறும் பிராமணங்கள்.
524	10	பசுக்களின் தலைகளை வைத்தலைக் கூறும் பிராமணங்கள்.
527	11	ஹோம மந்திரம்.
528	12	இரண்டா மநுவாக மந்திரங்கள்.
529	13	மூன்றும் அநுவாக மந்திரங்கள்.
530	14	நான்கா மநுவாக மந்திரங்கள்.
531	15	ஐந்தா மநுவாக மந்திரங்கள்.
532	16	ஆறு மநுவாக மந்திரங்கள்.
,,	17	ஏழா மநுவாக மந்திரங்கள்.
533	18	எட்டாம் அநுவாக மந்திரங்கள்.
534	19	முற்கூறிய ஒன்பதா மநுவாகத்திலுள்ள மந்திரங்கள்.
535	20	பத்தாம் அநுவாகத்திலுள்ள மந்திரங்கள்.
536	21	பதினோராம் அநுவாக மந்திரங்கள்.
537	22	பன்னிரண்டாவது அநுவாக மந்திரங்கள்.

பக்கம்	அநுவாகம்	விடயங்கள்
538	23	பதின்மூன்றும் அநுவாக மந்திரங்கள்.
539	24	பதிநான்காம் அநுவாக மந்திரங்கள்.
,,	25	குதிரையைப் போற்றும் மந்திரங்கள்.
540	26	குதிரை அன்னத்தை முகர்ந்து பார்ப்பதற்குரிய மந்திரங்கள்.

ஐந்தாங்காண்டத்தின்

விடயச் சுருக்கங்கள்

முடிந்தன.

கிருஷ்ண எசுர்வேத தைத்திரீய சங்கிதை

ஐந்தாங்காண்டத்தின்

பிழை திருத்தங்கள்.

பக்கம்	வரி	பிழை	திருத்தங்கள்
1	7	முதற் பிரபாடக	முதலநுவாக
15	19	புத்தைத்வடக்கில்	புத்தைதவடக்கில்
16	8	வாஹுலஷ	வாஹுலக
17	3	वा॒हु	वाहु॑
25	6	सा॑ऽग्नि	सो॑ऽग्नि
33	7	भोप	भोप॑
54	4	பிரமணங்கள்	பிராமணங்கள்
57	9	ஜனயர்கள்	ஜனயர்கள்
,,	21	காரணத்ஸத	காரணத்தை
60	17	அக்கினியும் பசுவுஞ்	அக்கினியின் பசுக்கள்
70	2	தசஸ்பரி	தமசஸ்பரி
71	22	लै॒॑	लै॒
72	8	ज्ये॒न॑	ज्ये॑न॒
74	15	देववा	देवाव
76	23	भ्रात	भ्रातृ
,,	24	भ्रात	भ्रातृ
77	22	ऋमुकं	ॠमुकं
,,	,,	ऋमुकं	ॠमुकं
80	19	छे॒	छे॒
,,	21	स्यौदुं॒॑	स्यौदुं॑
87	15	அசுமேதத்திற்	அசுவமேதத்திற்

பக்கம்	வரி	பிழை	திருத்தங்கள்
94	10	रेवै	रेवे
102	7	முதல் நான்	முதல் நாள்
,,	22	முதற்	இரண்டாம்
114	15	அக்னேர்டஸ்ம	அக்னேர்பஸ்ம
116	14	उपादधत	उपादधतद्दे
118	9-10	முதளானவைகளால்	முதலானவைகளால்
120	1	கான்டம்	காண்டம்
,,	,,	முதற்	இரண்டாம்
124	27	நின்று	உட்கார்ந்து
127	1	दह	दह
142	4	பிரசாபதிபிலேயே	பிரசாபதியினலேயே
146	19	தேடுவதால்	தொடுவதால்
,,	20	வணன்	வருணன்
148	19	तिष्ठते	तिष्ठेते
149	6	ததட்டின்மேல்	தகட்டின்மேல்
151	14	ग्राम्य	ग्राम्यं
,,	20	सनाभि	सनाभि
160	17	यदु	यदु
161	10	गो अ	गो अ
176	26	रेवतं	रेवतं
183	1	பிர-3-அ-1	பிர-2-அ-12
185	3	சாயுக்	சயுக்
190	13	பசுக்தளாம்	பசுக்களாம்
,,	22	पशमिः	पशुभिः
193	5	ஆறு	நான்கு
200	8	तद्दे	यद्दे

பக்கம்	வரி	பிழை	திருத்தங்கள்
201	4	அக்ஷிண்யா	அக்ஷண்யா
204	23	மதிஞோராம்	பதிஞோராம்
,,	31	மாதலிண்	மாதலின்
216	1	கான்டம்	காண்டம்
226	7	யுனர்ந்தவனே	யுணர்ந்தவனே
233	16	नामे॒वं	ना ए॒वं
236	7	नामेवं	ना एवं
239	21	கான்டம்	காண்டம்
248	1	ஜன்யம்	ஜன்யம்
249	1	அநு-22	அநு-12
251	17	ஹோமம்	ஸ்தோமம்
254	1	மூன்றும்	நான்காம்
,,	13	वाग्निः॒	वाग्निः
267	6	மஸ்யவே	மன்யவே
284	19	அக்கினீந்திர	அக்கினீத்திர
301	19	म	म॒
307	6	கல்ப்யதாம்	கல்பதாம்
308	19	நான்கில்	எட்டில்
316	5	ग्नि॒	ग्नि
320	22	धौंति	ध्नौंति
322	2	புநச்கிதியை	புநச்சிதியை
,,	10	நற்பத்தெட்டு	நாற்பத்தெட்டு
329	16	अश्वो॑	अश्वो
346	12	द्वा॑	द्वा
,,	16	धा॑वि	ध॑वि
355	10	सुवर्यो	सुवर्ग्यो

பக்கம்	வரி	பிழை	திருத்தங்கள்
365	24	கா-4 அ-7ல்	கா-4 பிர-4 அ-7ல்
378	24	प्र॒क्षा	प॒क्षा
391	25	ஐந்து	ஆறு
396	14	त्वाष्टाः	त्वाष्ट्राः
403	12	கோ எருமையில்	கோ மானில்
404	16	அநீதவத்	ஆநீகவத்
431	7	त्रि	त्रि॑
441	10	डि॒	ड्वि॒
446	4	या॒	या
453	1	ष्मि	ष्मिं॑
481, 483, 485, 487	1	பிர-6	பிர-7
487	6	ताभि	ताभि॑
,,	7	च	च॑

பிழைத் திருத்தம்
முற்றிற்று.

கிருஷ்ண எசுர்வேத தைத்திரீய சங்கிதை

ஐந்தாங் காண்டம்.

ஈண்டு, நான்காங்காண்டத்தில், (சிதி) செங்கலடுக்கின் மந்திரங்கள் கூறப்பட்டன. இவ்வைந்தாங் காண்டத்தில் ஏழு பிரபாடகங்கள் உள் ளன. அவற்றுள், நான்காம் பிரபாடகம் வரை மந்திரங்களின் உரைகள். எஞ்சியவைகள் ஔபாநு வாக்கியத்தைச் சேர்ந்தவைகள்.

முதற் பிரபாடக விடயச் சுருக்கம்.

सावित्राहुतिरभ्रेश्च स्वीकारः प्रथमे भवेत् ॥

இதில், சவிதா தேவதையின் ஆகுதியும், மரக்கட்டப்பாறையை எடுத் துக் கொள்ளுதலுங் கூறப்படுகின்றன என்பது.

முதற் பிரபாடகம்.

முதலநுவாகம்.

நான்கு பஞ்சாதிக்கு மேல் இருபத்தேழு பதங்களைக் கொண்டது.

சாவித்ர ஆகுதிகளையும், கட்டப்பாறையைக் கைக்கொள்ளுதலையுங் கூறும் பிராமணங்கள்.

सावित्राणिजुहोतिप्रसूत्यैचतुर्गृहीतेनजुहोतिचतुष्पादःपशवः
पशूनेवावरुन्धे चतस्रोदिशोदिक्ष्वेवप्रतितिष्ठतिछन्दाꣳसिदेवेभ्योऽ-
पाक्रामन्नवोऽभागानि हव्यंवक्ष्याम इति तेभ्य एतच्चतुर्गृहीतम-
धारयन्पुरोनुवाक्यायै याज्यायैदेवतायैवषट्काराययच्चतुर्गृहीतञ्जु-
होतिछन्दाꣳस्येव तत् प्रीणाति तान्यस्य प्रीतानि देवेभ्योहव्यंवहन्ति
यङ्कामयेत [१] पापीयान्थ्स्यादित्यैकैकन्तस्य जुहुयादाहुतीभि-

रेवैनमपगृह्णाति पापीयान्भवति यङ्कामयेत वसीयान्थ्स्यादिति सर्वाणि तस्यानुद्रुत्यजुहुयादाहुत्यैवैनमभिक्रमयति वसीयान्भवत्यथो यज्ञस्यैवैषाऽभिक्रान्तिरेतिवा एषयज्ञमुखादृध्यायोऽग्नेर्देवतायाएत्यष्टावेतानिसावित्राणिभवन्त्यष्टाक्षरा गायत्रीगायत्रः [२] अग्निस्तेनैव यज्ञमुखादृध्या अग्नेर्देवतायैनैत्यष्टौसावित्राणि भवन्त्याहुतिर्नवमीत्रिवृतमेव यज्ञमुखेवियातयतियदि कामयेतछन्दाꣳसि यज्ञयशसेनार्पयेयमित्यृचमन्तमाङ्कुर्याच्छन्दाꣳस्येव यज्ञयशसेनार्पयतियदिकामयेत यजमानं यज्ञयशसेनार्पयेयमिति यजुरन्तमङ्कुर्याद्यजमानमेव यज्ञयशसेनार्पयत्यृचा स्तोमꣳसमर्द्धयेति [३] आहसमृद्ध्यैचतुर्भिरभ्रिमादत्तेचत्वारि छन्दाꣳसिछन्दोभिरेव देवस्यत्वासवितुःप्रसव इत्याह प्रसूत्या अग्निर्देवेभ्योनिलायतसवेणुं प्राविशथ्स एतामूतिमनु समचरद्यद्वेणोस्सुषिरꣳसुषिराऽभ्रिर्भवतिसयोनित्वायसयत्रयत्रावसत्तत्कृष्णमभवत्कल्माषी भवति रूपसमृद्ध्या उभयतःक्ष्णूर्भवतीतश्चामुतश्चार्कस्यावरुध्यैव्याममात्री भवत्येतावद्वैपुरुषेवीर्यंवीर्य सम्मिताऽपरिमिताभवत्यपरिमितस्यावरुध्यै यो वनस्पतीनां फलग्रहिस्स एषां वीर्यावान्फलग्राहिर्वेणुर्वैणवीभवति वीर्यस्यावरुध्यै [४] कामयेत गायत्रोऽर्धयेतिच सप्तविꣳशतिश्च ॥

சாவித்ர ஹோம மந்திரப் பொருள்.

பிராமணம்—1

सावित्राणि जुहोति प्रसूत्यै ।

என்பது.

கட்டப்பாறையை எடுத்தலும்)

உரை.

ஈண்டு, சவிதா, என்னுஞ் சொல்லைக்கொண்ட மந்திரங்கள் சாவித்ர மெனப்படும். அம்மந்திரங்களால் ஓமஞ்செய்யில் எசமானனை, சவிதா தேவதை கருமத்திற் செலுத்துகின்றது என்பதாம்.

திரவியத்தை விதிக்கின்றது.

பிராமணம்—2

चतुर्गृहीतेन जुहोति चतुष्पादः पशवः पशूनेवावरुन्धे ।

என்பது.

உரை.

பசுக்கட்கு நான்கு கால்களிருத்தலின், நான்கு முறை நெய்யெடுக்கில் பசுக்களை அடைகின்றான் என்பதாம்.

மீண்டும், நான் கென்னுந் தொகையைப் புகழ்கின்றது.

பிராமணம்—3

चतस्रोदिशोदिक्ष्वेव प्रतितिष्ठति ।

என்பது.

உரை.

திக்குக்கள் நான்காதலின் நான்கு திக்குக்களிலும் பெருமையை யடைகின்றான் என்பதாம்.

மீண்டும், மற்றொரு வகையில் எண்ணைப் புகழ்கின்றது.

பிராமணம்—4

**छन्दांसि देवेभ्योऽपाक्रामन्नवोऽभागानि हव्यंवक्ष्याम इति तेभ्य एतच्चतु-
र्गृहीतमधारयन्पुरोनुवाक्यायै याज्यायै देवतायैवषट्काराययच्चतुर्गृही-
तञ्जुहोति छन्दांस्येव तत् प्रीणाति तान्यस्य प्रीतानि देवेभ्योहव्यंव-
हन्ति ।**

என்பது.

உரை.

பலவகைச் சந்தங்களைக்கொண்ட, புரோநுவாக்கியாபிமானி தேவதைகள், தேவர்களிடத்தில் வெறுப்புற்று, உங்களின் பொருட்டு அவிகளை ஏற்

றுக்கொண்டு செல்லமாட்டோமென்று வேறிடத்திற்குப் போய்விட்டன. அதைக்கண்ட தேவர்கள், ஹோமஞ் செய்யும்போது, முதன்முறை நெய் யெடுத்தல் புரோநுவாக்கியத்தின் காயத்திரிச் சந்தத் திருப்தியின் பொருட் டென்றும், இரண்டாமுறை நெய் யெடுத்தல், யாஜ்யா வாக்கியத் திரிஷ்டுப் சந்தத் திருப்தியின் பொருட்டென்றும், மூன்றும் முறை நெய் யெடுத் தல், தேவதை யென்னும் சகதிச்சந்தத் திருப்தியின் பொருட்டென்றும், நான்காம் முறை நெய் யெடுத்தல் சந்த தேவதையின் திருப்தியின் பொருட் டென்றும் கற்பித்தனர். பிறகு, களிப்புற்று அத்தேவதைகள் அவிகளை யேற்றன என்பதாம்.

ஈண்டு, நான்கு முறை நெய் யெடுத்தல் விதிக்கப்பட்டிருப்பினும், சூத் திரப்படி எட்டு முறை நெய் யெடுத்தல் வழக்கிலிருக்கின்றது என்பதை யுணர்க.

ஒவ்வொரு மந்திரத்தை ஓதி ஒவ்வொரு ஆகுதி செய்தல் வேண்டுமோ? அல்லது, எல்லா மந்திரங்களையும் ஓதிவிட்டு ஒரு ஆகுதிசெய்தல் வேண்டுமோ? என்றுசங்கித்து, முறையே, கொள்ளும், விடும் பட்சங்களைக் கூறுகின்றது:—

பிராமணம்—5

यङ्कामयेत पापीयान्थ्स्यादित्येकैकन्तस्य जुहुयादाहुतीभिरेवैन मपगृह्णाति पापीयान्भवति यङ्कामयेत वसीयान्थ्स्यादिति सर्वाणि तस्यानु-द्रुत्यजुहुयादाहुत्यैवैन मभिक्रमयति वसीयान्भवत्यथोयज्ञस्यैवैषाऽभि-क्रान्तिः ।

என்பது.

உரை.

தலைவனை வறியவனக்க விரும்பில் ஒவ்வொன்றுக்கு ஒவ்வொரு ஆகுதி செய்வானுக. அதாவது, ஒவ்வொரு மந்திரத்திற்கு ஒவ்வொரு ஆகுதி செய் யில் தரித்திரனுகின்றுன் என்பதாம். எல்லா மந்திரங்களாலும் ஒரு ஆகுதி செய்யில் தனமுடையவனுகின்றுன் என்பது பொருள்.

மந்திரங்கள் எட்டானதைப் புகழ்கின்றது.

பிராமணம்—6

एतिवा एषयज्ञमुखाद्दध्यायोऽग्नेर्दैवताया एत्यष्टावेतानि सावित्राणि भव-न्त्यष्टाक्षरा गायत्रीगायत्रः अग्निस्तेनैव यज्ञमुखाद्दध्या अग्नेर्दैवतायै-नैति ।

என்பது.

கட்டப்பாறையை எடுத்தலும்)

உரை.

எட்டு எழுத்துக்களையுடையது காயத்திரிச் சந்தம். காயத்திரி அக்கினியாம். எட்டு மந்திரங்களாற் செய்யப்படும் சாவித்திர ஹோமம் எக்ஞ முகமாம் அதனால் எக்ஞபயனாகிய சம்பத்தை யடைகின்றான் என்பதாம்.

எட்டு மந்திரங்களுடன் கூடிய ஒரு ஆகுதியைப் புகழ்கின்றது.

பிராமணம்—7

अष्टौसावित्राणि भवन्त्याऽऽहुतिर्नवमीत्रिवृतमेव यज्ञमुखेवियातयति ।

என்பது.

உரை.

திரிவிருத் (மும்முறை திருப்பும்) துதியாகிய இருக்கு மந்திரம் ஒன்பதாகின்றது. ஆதலின், எட்டு மந்திரங்களுடன் கூடிய ஒரு ஆகுதியால் திருவிருத் ஸ்தோமத்தை எக்ஞத் தொடக்கத்தில் விரித்தவனாகின்றான் என்பதாம்.

எட்டு மந்திரங்களுக்குள், முடிவில் இருக்கை ஓதல் வேண்டுமோ? அல்லது, எசுரை ஓதல் வேண்டுமோ? என்று சங்கிக்கொண்டு இரண்டு பக்ஷங்களையும் விளக்குகின்றது.

பிராமணம்—8

यदि कामयेत छन्दाꣳसि यज्ञयशसेनार्पयेयमित्यृचमन्तमाङ्कुर्याच्छन्दाꣳस्येव यज्ञयशसेनार्पयति यदि कामयेत यजमानंयज्ञयशसेनार्पयेयमिति यजुरन्तमङ्कुर्याद्यजमानमेव यज्ञयशसेनार्पयति ।

என்பது.

உரை.

சந்தங்களை, எக்ஞத்தாற் பெருமையடையுமாறு செய்ய விரும்பில், முடிவில் இருக்குமந்திரத்திரத்தை ஓதல் வேண்டும். வேள்வித்தலைவனை, எக்ஞத்தாற் பெருமையடையும்படி செய்ய விரும்பில், முடிவில் எசுர் மந்திரத்தை ஓதல் வேண்டுமென்பதாம்.

இரண்டாம் மந்திரத்தினுள், "சமர்த்தயா" என்னுஞ் சொல்லின் கருத்தைவிளக்குகின்றது.

பிராமணம்—9

ऋचास्तोमꣳसमर्द्धयेति आहसमृद्ध्यै ।

என்பது.

உரை.

'ரிசாஸ்தோமம் சமர்த்தய' என்றது நிறைந்த சம்பத்தை யடைவிப்பாயாக என்பதாம்.

நான்கு மந்திரங்களால் கட்டப்பாறையை எடுக்கவேண்டு மெனல்.

பிராமணம்—10

चतुर्भिरभ्रिमादत्तेचत्वारि छन्दाꣳसिछन्दोभिरेव ।

என்பது.

உரை.

சந்தங்கள் நான்கானதால் நான்கு மந்திரங்களால் எடுக்கில் சந்தங்களால் எடுக்கப்பட்டதாகும் என்பதாம்.

'பிரசவ' என்னுஞ் சொல்லின் கருத்தை விளக்குகின்றது.

பிராமணம்—11

देवस्यत्वासवितुःप्रसव इत्याह प्रसूत्यै ।

என்பது.

உரை.

பரமேசுரனுடைய ஆணையில் என்றது, ஆக்ஞை வேண்டுமென்பதாயிற்றென்பதாம்.

கட்டப்பாறையில் துளையிருத்தல் வேண்டு மெனல்.

பிராமணம்—12

**अग्निर्देवेभ्योनिलायतसवेणुं प्राविशथ्स एतामूतिमनु समचरद्यद्वेणोस्सुषि-
रꣳसुषिराऽभ्रिर्भवति सयोनित्वाय ।**

என்பது.

உரை.

முன்னொருபோது, அக்கினி, தேவர்களைவிட்டு வெளியேறி, மூங்கிலின் உள் துளையில் ஒளித்திருந்ததால் இப்போதும் உள்ளே துளையுடையதாற் கட்டப்பாறையைச் செய்யில் அக்கினிக்கு இடமுந் தேடியதாயிற்றென்பதாம்.

கட்டப்பாறையை எடுத்தலும்)

கட்டப்பாறையில் கறுப்புக்குறி யிருத்தல் வேண்டுமேனல்.

பிராமணம்—13

सयत्रयत्राऽवसत्तत्कृष्णमभवत्कल्माषी भवति रूपसमृद्ध्यै ।

என்பது.

உரை.

மூங்கிலின் துளையிலுள்ள அக்கினி எங்கெங்கு உளதோ, அங்கங்கு சூட்டால் கறுப்பாய் விடுகின்றமையின் இந்த கட்டப்பாறை அக்கினிக்கு இடமாமென்னுங் குறியின் பொருட்டு கருமை வடிவமாம். இதனால், எசமானனுக்கு வடிவம் அழகுடையதாமென்பதாம்.

இரண்டு பக்கங்களும் கூர்மையாயிருத்தல் வேண்டுமேனல்.

பிராமணம்—14

उभयतःक्ष्णूर्भवतीतश्चामुतश्चार्कस्यावरुद्ध्यै ।

என்பது.

உரை.

கட்டப்பாறையின் அடியும் நுனியும் கூர்மையாயிருக்கில் இரண்டு உலகத்து பூசைக்கும் உரிமை யுண்டாகின்றது என்பதாம்.

நீளம் இவ்வளவேனல்.

பிராமணம்—15

व्याममात्री भवत्येतावद्वैपुरुषेवीर्यंवीर्यसम्मिता ।

என்பது.

உரை.

நான்கு முழங்கள் கொண்ட ஒரு மார் அளவு என்றது, எழும்பியவனிடத்து இவ்வளவே வீரியமாதலின் இது வீரிய சம்பத்தைக் கொடுக்கின்றது என்பதாம்.

குறித்த அளவினின்று மிகுதியுங்கூடு மேனல்.

பிராமணம்—16

अपरिमिताभवत्यपरिमितस्यावरुद्ध्यै ।

என்பது.

உரை.

கூறிய அளவையினும் மிகுதியாயிருக்கில் மிகுந்த உணவுப்பொருள் முதலான சம்பத்தை யடைகின்றான் என்பதாம்.

மூங்கிலினாலேயே கட்டப்பாறை செய்யவேண்டுமேனல்.

பிராமணம்—17

यो वनस्पतीनां फलग्रहिस्स एषांवीर्यावान्फलग्रहिर्वैणुर्वैणवी भवति वीर्य-स्यावरुध्यै ।

என்பது.

உரை.

கொடிசெடிகளுள், மிகுந்த பயனையுடையது மூங்கிலாம். என்னை? முத்தினதில் விதைகள் நிறைய இருத்தலானென்க. மூங்கிற் பட்டையும் சாரத்துடன் கூடியதாம். ஆதலின், மூங்கிலால் கட்டப்பாறை செய்யில் வீரியசம்பத்தை யடைகின்றான் என்பதாம்.

முதலாம் அநுவாகம்

முற்றிற்று.

இரண்டாம் அநுவாகம்

விடயச் சுருக்கம்.

द्वितीये मृत्खननं गच्छन्नश्वेनाऽऽक्रमयेद्ध्रुवम्

களிமண் இருக்குமிடஞ் செல்லுதலுடன் குதிரை புத்தைத் தாண்டுதல் என்பது.

ஐந்தாங்காண்டம் முதற்பிரபாடகம்

இரண்டாவது அநுவாகம்

ஆறு பஞ்சாதிக்கு மேல் பதினேழு பதங்களைக் கொண்டது.

குதிரை, களிமண்ணிருக்குமிடஞ் செல்லுதலும் புத்தைத் தாண்டுதலையுங் கூறும் பிராமணங்கள்.

व्यृद्धं वा एतद्यज्ञस्य यदयजुष्केण क्रियत इमामगृभ्णन्रशना-मृतस्येत्यश्वाभिधानीमादत्तेयजुष्कृत्यै यज्ञस्य समृद्ध्यै प्रतूर्तवा-

புத்தைத் தாண்டுதலும்)

जिन्नाद्रवेत्यश्वमभिदधाति रूपमेवास्यै तन्महिमानंव्याचष्टे-
युञ्जाथाꣳरासभंयुवमिति गर्दभमसत्येव गर्दभं प्रतिष्ठापयति
तस्मादश्वाद्गर्दभोऽसत्तरोयोगेयोगेतवस्तरमित्याह [५] योगेयोग
एवैनंयुङ्क्ते वाजेवाजेहवामह इत्याहान्नंवैवाजोऽन्नमेवावरुन्धे
सखाय इन्द्रमूतय इत्याहेन्द्रियमेवावरुन्धेऽग्निर्देवेभ्योनिलायततं
प्रजापतिरन्वविन्दत्प्राजापत्योऽश्वोऽश्वेन संभरत्यनुवित्त्यैपापवस्य
संवा एतत् क्रियतेयच्छ्रेयसाचपापीयसाचसमानङ्कर्मकुर्वन्ति
पापीयान् [६] ह्यश्वाद्गर्दभोऽश्वं पूर्वन्नयन्ति पापवस्यसस्य
व्यावृत्त्यै तस्माच्छ्रेयाꣳसंपापीयान्पश्चादन्वेति बहुर्वैभवतो भ्रातृव्यो
भवतीव खलु वा एषयोऽग्निश्चिनुते वज्र्यश्वः प्रतूर्वन्नेह्यवक्रामन्न-
शस्तीरित्याहवज्रेणैवपाप्मानं भ्रातृव्यमवक्रामति रुद्रस्य गाण-
पत्यादित्याह रौद्रावै पशवोरुद्रादेव [७] पशून्निर्याच्यात्मने कर्म-
कुरुते पूष्णासयुजा सहेत्याह पूषावा अध्वनाꣳसन्नेतासमष्ट्यैपुरी-
षायतनोवा एषयदग्निरङ्गिरसोवा एतमग्रेदेवतानाꣳसमभरन्पृथिव्या
स्सधस्थादग्निं पुरीष्यमङ्गिरस्वदच्छेहीत्याह सायतन मेवैनन्देवता-
भिस्संभरत्यग्निं पुरीष्यमङ्गिरस्वदच्छेम इत्याह येन [८] सङ्गच्छते
वाजमेवास्य वृङ्क्ते प्रजापतये प्रतिप्रोच्याग्निस्संभृत्य इत्याहुरियं
वैप्रजापतिस्तस्या एतच्छ्रोत्रंयद्वल्मीकोऽग्निं पुरीष्यमङ्गिरस्वद्भरि-
ष्याम इति वल्मीकवपामुपतिष्ठतेसाक्षादेव प्रजापतये प्रति-
प्रोच्याग्निꣳसंभरत्यग्निं पुरीष्यमङ्गिरस्वद्भराम इत्याह येन सङ्गच्छते-
वाजमेवास्य वृङ्क्तेऽन्वग्निरुषसामग्रम् [९] अख्यदित्याहानु-

ख्यात्या आगत्यवाज्यद्ध्वन आक्रम्यवाजिन्पृथिवीमित्याहेच्छत्ये-
वैनं पूर्वयाविन्दत्युत्तरयाद्वाभ्यामाक्रमयति प्रतिष्ठित्याअनुरूपा-
भ्यान्तस्मादनुरूपाः पशवः प्रजायन्तेद्यौस्ते पृष्ठं पृथिवीसधस्थमित्या-
हैभ्यो वा एतंलोकेभ्यः प्रजापतिस्समैरयद्रूपमेवास्यैतन्महिमानं
व्याचष्टे वज्रीवा एष यदश्वोदद्भिरन्यतो दद्भयो भूयान्लोमभि-
रुभयादद्भचो यन्द्विष्यात्तमधस्पदन्ध्याये द्वज्रेणैवैनंस्तृणुते ॥
[१०] आहपापीयान्रुद्रादेवयेनाग्रंवज्रीवैसप्तदशच ॥ २ ॥

இதில், களிமண் கொண்டுவருவதற்குப் போதல் முதலியவைகள் கூறப்படுகின்றன.

குதிரை பிடிக்குங் கயிற்றை எடுத்தல்.

பிராமணம்—1

व्यृद्धं वा एतद्यज्ञस्य यदयजुष्केण क्रियत इमामगृभ्णन्रशनामृतस्येत्यश्वाभि-
धानीमादत्तेयजुष्कृत्यै यज्ञस्य समृद्ध्यै ।

உரை.

எசுர் மந்திரம் ஓதாமல் செய்யும் வேள்வியின் அங்கமாகிய காரியங்களனைத்தும் சம்பத்து இல்லாதவைகளாகின்றன. அதாவது பயனற்றவைகளாகின்றன. இங்கு இம்மந்திரம் இருக்காம்; ஆனாலும் எசுர்வேதத்திற் கூறியிருத்தலால் இதுவும் எசுர்மந்திரம் போன்றதே. ஆதலின், இதை ஓதிக்கொண்டு குதிரையின் கயிற்றை எடுக்கில் சம்பத்து உண்டென்பதாம்.

ஈண்டு, பாத முதலியவைகளாலாக்கப்பெற்று காயத்திரி முதலிய சந்தங்களையுடைய மந்திரம் இருக்கெனப்படும். அஃதின்றியவைகள் எசுர் எனப்படும் என்பதை யுணர்க.

குதிரையைக் கட்டுதலின் விதி.

பிராமணம்—2

प्रतूर्तं वाजिन्नाद्रवेत्यश्वमभिदधातिरूपमेवास्यै तन्महिमानंव्याचष्टे ।

புத்தைத் தாண்டுதலும்)

உரை.

இம்மந்திரத்தால் குதிரையைக் கட்டுகின்றான். இம்மந்திரங்களிலுள்ள சொற்கள் இதனுடைய வடிவத்தின் மகிமையை விளக்குகின்றன என்பதாம்.

கழுதையைக் கட்டும் விதி.

பிராமணம்—3

युञ्जाथाꣳरासभंयुवमिति गर्दभमसत्येव गर्दभं प्रतिष्ठापयति तस्मादश्वाद्गर्दभोऽसत्तरः ।

உரை.

மண்சுமத்தலாகிய தாழ்ந்த செய்கையில் கழுதையை விநியோகப்படுத்துகின்றது. இதுபற்றியே இக்காலத்தும், வண்ணார், கழுதையை, மண்சுமப்பதில் ஈடுபடுத்துகின்றனர் என்பதாம்.

மண்ணிருக்குமிடஞ் செல்லுதற்குரிய மூன்று மந்திரங்களுள் முதலாம் மந்திரத்திலுள்ள, 'யோகே யோகே' (அவ்வக்கருமத்தில்) என்னுஞ்சொற் பொருளைச் கூறுகின்றது.

பிராமணம்—4

योगेयोगेतवस्तरमित्याह योगेयोग एवैनंयुङ्क्ते ।

உரை.

தேரை யிழுத்தல், வீரனைத்தாங்குதல் முதலிய எல்லாச் செயல்களிலும் குதிரை உபயோகிக்கப்படுதலின் அவ் வக்கருமம் எனப்பட்டது என்பதாம்.

மந்திரத்தின், இரண்டாம் பகுதியிலுள்ள 'வாஜே வாஜே' (அவ்வவ் வன்னங்களை) என்பதன் பொருளைக் கூறுகின்றது.

பிராமணம்—5

वाजेवाजेहवामह इत्याहान्नंवैवाजोऽन्नमेवावरुन्धे ।

உரை.

வாஜம் என்பது உணவாம். உணவுப்பொருள் அனைத்தையும் அடைகின்றான் என்பதாம்.

மந்திரத்தின் மூன்றும் பகுதியிலுள்ள, இந்திரன், என்பதன் கருத்தைக் கூறுகின்றது.

பிராமணம்—6

सखाय इन्द्रमूतय इत्याहेन्द्रियमेवावरुन्धे ।

உரை.

இந்திரன் என்னுஞ் சொல்லால் இந்திரிய சம்பத்தை யடைகின்றான் என்பதாம்.

இம்மந்திரம், குதிரையை, முன்னர் ஒட்டிக்கொண்டு போதல் வேண்டுமென்னும் விதி.

பிராமணம்—7

अग्निर्देवेभ्योनिलायततं प्रजापतिरन्वविन्दत्प्राजापत्योऽश्वोऽश्वेन संभरत्यनुवित्त्यै ।

உரை.

அக்கினி முன்னொருகால், தேவர்களிடத்திலிருந்து பிரிந்துபோய், பிரசாபதியை (பிரமனை) அடைந்திருந்தது, குதிரையும் பிரசாபதியால் உண்டானதால் பிரசாபதியின் சம்பந்தமுடையதாம். ஆதலின், அக்கினிக்குக் காரணமாகிய குதிரையுடன் கூட மண்ணெடுக்கச் செல்லல் வேண்டுமென்பதாம்.

கழுதைக்கு முன் குதிரை செல்லல் வேண்டுமென்னும் விதி.

பிராமணம்—8

पापवस्यसंवा एतत् क्रियते यच्छ्रेयसाचपापीयसाचसमानङ्कर्मकुर्वन्ति पापीयान् ह्यश्वाद्गर्दभोऽश्वं पूर्वन्नयन्ति पापवस्यसस्य व्यावृत्त्यै तस्माच्छ्रेयाꣳसं पापीयान्पश्चादन्वेति ।

உரை.

சிறந்ததாலும், தாழ்ந்ததாலும் ஒரு காரியஞ்செய்தல் கூடாது. செய்யில், மிகுந்த பாவமாம். இங்கு, தாழ்ந்த கழுதையாலும், உயர்ந்த குதிரையாலும் மண்ணெடுக்கச் செல்லல் அமையாது. செய்யில் பாவமாம்; அதை நீக்குவதற்கு, குதிரையை முன்னர்க் கொண்டுபோதல்வேண்டுமென்பதாம்.

புத்தைத் தாண்டுதலும்)

இரண்டாம் மந்திரத்திலுள்ள, அசஸ்தீரவக்ராமன், (பாவத்தடைகளைநீக்கி) என்பதன் கருத்தை விளக்குகின்றது.

பிராமணம்—9

बहुर्वैभवतो भ्रातृव्योभवतीव खलु वा एषयोऽग्निञ्चिनुते वज्रयश्वः प्रतूर्वन्नेह्यवक्रामन्नशस्तीरित्याहवज्रेणैवपाप्मानं भ्रातृव्यमवक्रामति ।

உரை.

ஐசுவரியத்தை (மகாக்கினிசயனத்தை) அடைவதற்கு தடை செய்வன பல. அவற்றைப் போக்குதற்கு, இங்கு, குதிரை, வச்சிராயுதந்தாங்கிய இந்திரனுக்கொப்பா மாதலின், அதைக் கூப்பிட்டு, அத்தடைகளை நீக்குவாயாக வென்று சொல்லப்படுகின்றது என்பதாம்.

அம்மந்திரத்திலுள்ள, 'காணபத்யாத், என்பதன் கருத்தை விளக்குகின்றது.

பிராமணம்—10

रुद्रस्य गाणपत्यादित्याह रौद्रावै पशवोरुद्रादेव पशून्निर्याच्यात्मने कर्म कुरुते ।

உரை.

உருத்திரன், "யானே பசுக்கட்கு இறைவனுகின்றேன்" என்று வரம் பெற்றமையின், உருத்திரனிடத்தில் இரந்து கேட்டு வாங்கிய அப்பசுக்களால் யாகத்தைச் செய்கின்முன் என்பதாம்.

மூன்றும் மந்திரத்திலுள்ள ஸயுஜா, என்பதன் கருத்தை விளக்குகின்றது.

பிராமணம்—11

पूष्णासयुजा सहेत्याह पूषावा अद्ध्वनाꣳसन्नेतासमष्ट्यै ।

உரை.

பாதுகாக்குந் தேவதை, துன்பை நீக்கி நல்வழியிற்கொண்டு போய்ச் சேர்ப்பதாமாதலின், பூஷா, என்னுந்தேவதை, வழியைச் சீர்ப்படுத்தும் என்பதாம்.

அம்மந்திரத்திலுள்ள, "புரீஷ்யம்" என்னும் விசேடணத்திற்கும், "அங்கிரச்வத்" என்னும் உவமைக்குங் கருத்தைக் கூறுகின்றது.

பிராமணம்—12

पुरीषायतनो वा एषयदग्निरङ्गिरसोवा एतमग्रेदेवतानाꣳसमभरन्पृथिव्यास्सधस्थादग्निं पुरीष्यमङ्गिरस्वदच्छेहीत्याह सायतन मेवैनन्देवताभिस्संभरति ।

உரை.

களிமண், உகை (தொட்டி) யாகிற அக்கினிக்கு இருப்பிடமாம். ஆதலின், புரீஷ்யம் என்பதால் அக்கினியின் இடத்தைத் தேடுகின்றான். அவ்வாறே, தேவர்களுக்குள், அங்கிரச ரிஷிகளானவர்கள் இத்தகைய உகாக்கினியை முதலில் தேடியவர்களாதலின் அவர்களை உவமையாக்கினது; இதனால், தேவர்களால் இது தேடப்பெற்றது என்பதாம்.

இம்மந்திரத்தால், பகைவனுடைய உணவுப்பொருள் கெடும் என்பதை விளக்குகின்றது.

பிராமணம்—13

अग्निं पुरीष्यमङ्गिरस्वदच्छेम इत्याह येन सङ्गच्छते वाजमेवास्य वृङ्क्ते ।

உரை.

பகைவனுடைய உணவுப் பொருள்கள் கெடுவதால் அவனுங் கெட்டு விடுகின்றான் என்பதாம்.

இம்மந்திரத்தால் புத்து மண்ணைப் போற்றுவதை விதித்தல்.

பிராமணம்—14

प्रजापतये प्रतिप्रोच्याग्निस्संभृत्य इत्याहुरियं वैप्रजापतिस्तस्या एतच्छ्रोत्रंय-द्वल्मीकोऽग्निं पुरीष्यमङ्गिरस्वद्भरिष्याम इति वल्मीकवपामुपतिष्ठते-साक्षादेव प्रजापतये प्रतिप्रोच्याग्निँ संभरति ।

உரை.

பிரமனைக் கேட்டு உகாவிற்கு மண் கொண்டுவரல் வேண்டுமென்று பெரியார் சொல்கின்றார்கள். என்னை? இப்பூமி, பிரமனாற் படைக்கப்பெற்றதால் பிரமனுடையதாம் ஆதலினென்க. மற்றும், புத்து, பிரமனுடைய செவியாம். ஆதலின், இவ்வாறு போற்றில், பிரமனுக்குக் கூறிவிட்டு தடையின்றிக் களிமண்ணைக் கொண்டுவருகின்றான் என்பதாம்.

போகும்போது ஓதவேண்டிய மந்திரம்போல் இதற்கும் கருத்தென்று விளக்குகின்றது.

பிராமணம்—15

अग्निं पुरीष्यमङ्गिरस्वद्भराम इत्याहयेन सङ्गच्छतेवाजमेवास्य वृङ्क्ते ।

புத்தைத் தாண்டுதலும்)

உரை.

வரும்போது, பகைவனை எண்ணிக்கொண்டு இதை ஒதில், அவனுடைய உணவுப்பொருள் கெடுவதால் அவனுங் கெட்டுவிடுகின்றான் என்பதாம்.

இம்மந்திரத்தால் உஷாக்கால முதலிய காலத்தோற்றமுங் கூடும் என்கின்றது.

பிராமணம்—16

अन्वग्निरुषसामग्रमख्यदित्याहानुख्यात्यै ।

உரை.

இம்மந்திரத்தால் புத்தை யடைவதால் உஷாக்காலம் முதலிய காலங் களும் உணர்த்தப் பெற்றவைகளாயின என்பதாம்.

குதிரை, புத்தைத் தாண்டுதற்குரிய இரண்டு மந்திரங்களின் தனித்தனி பிரயோகத்தை விளக்குகின்றது.

பிராமணம்—17

आगत्यवाज्यद्ध्वन आक्रम्यवाजिन्पृथिवीमित्याहेच्छत्येवैनं पूर्वयाविन्दत्युत्तरया ।

உரை.

முறையாய் இரண்டு மந்திரங்களினும், சிகீர்ஷத, நோ ப்ருஹி, என் னுஞ் சொற்களிருத்தலின், முதலாம் மந்திரத்தால் விருப்பமும், இரண்டாம் மந்திரத்தால் அவ்விடத்தின் பிராப்தியும் உண்டாகின்றது என்பதாம்.

அவ்விரண்டு மந்திரங்களாலும் புத்தைத் வடக்கிலிருந்து, தெற்காகத் தாண்டும் விதி.

பிராமணம்—18

द्वाभ्यामाक्रमयति प्रतिष्ठित्या अनुरूपाभ्यान्तस्मादनुरूपाः पशवः प्रजायन्ते ।

உரை.

இரண்டு மந்திரங்களால் தாண்டுவதால், விருப்பப்படி அடையப்படும். அதாவது, அக்கினி ஹோத்திர முதலிய கருமாநுட்டானப்படி கோக்கள் முதலான விலங்குச் சாதிகள் உண்டாகின்றன என்பதாம்.

மந்திரத்திற்கூறிய வானுலகம் என்பது முதலியவைகளை அமைத்துச் கூறுகின்றது.

பிராமணம்—19

द्यौस्ते पृष्ठं पृथिवीसधस्थमित्याहैभ्यो वा एतँल्लोकेभ्यः प्रजापतिस्समैरय-द्रूपमेवास्यैतन्महिमानं व्याचष्टे ।

உரை.

பிரமன் முன்னொருகால், இக்குதிரையை, இவ்வுலகங்கட்குத் தேடிக் கொண்டு வந்தனன். என்பதனாலே வானுலக சம்மந்தம் முதலியவைகள் நன்கு விளங்குகின்றன. இதை, மந்திரமே கூறுகின்றது என்பதாம்.

மண்ணைத் தாண்டும்போது குதிரையின் காலில் பகைவன் இருப்பதாக நினைத்தல் வேண்டும் என்பதை விதிக்கின்றது.

பிராமணம்—20

वज्री वा एष यदश्वोदद्भिरन्यतो दद्भ्यो भूयाल्लोमभिरुभयादद्भ्यो यन्द्वि-ष्यात्तमधस्पदन्ध्या येद्वज्रेणैवेनःस्तृणुते ॥

உரை.

மேல்வாயிலும் கீழ்வாயிலும் பற்களிருத்தலின் அது வச்சிராயுதம் போன்றதாம் ஆதலின், காலின் குளம்பின் கீழ் பகைவன் இருக்கின்றான் என்று நினைக்கில், குளம்பாகிய வச்சிராயுதத்தாற் பகைவனைக் கொல் கின்றது என்பதாம்.

இரண்டாம் அநுவாகம்

முற்றிற்று.

மூன்றாம் அநுவாகம்

விடயச் சுருக்கம்.

तृतीयेतूत्क्रमय्याश्वं भूसंस्कारो जलादिभिः ॥

குதிரை, புத்தைத் தாண்டுதலுடன் பூமியைப் புநிதமாக்கலும்.

ஐந்தாங்காண்டம் முதற்பிரபாடகம்

மூன்றாவது அநுவாகம்.

ஐந்து பஞ்சாதிக்கு மேல் பதின்மூன்று பதங்களைக் கொண்டது.

उत्क्रामोदक्रमीदिति द्वाभ्यामुत्क्रमयति प्रतिष्ठित्या अनुरूपा-भ्यान्तस्मादनुरूपाः पशवः प्रजायन्तेऽप उपसृजति यत्रवा आप

பூமியைப் புநிதமாக்குதலும்)

उपगच्छन्ति तदोषधयः प्रतितिष्ठन्त्योषधीः प्रतितिष्ठन्तीः पशवोऽनु-
प्रतितिष्ठन्ति पशून् यज्ञोयज्ञंयजमानो यजमानं प्रजास्तस्मादप
उपसृजति प्रतिष्ठित्यै यदध्वर्युरनग्नावाहुतिञ्जुहुयादन्धोऽध्वर्युः
[११] स्याद्रक्षाꣳसियज्ञꣳहन्युर्हिरण्यमुपास्यंजुहोत्यग्निवत्येवजुहोति
नान्धोऽध्वर्युर्भवतिनयज्ञꣳरक्षाꣳसिघ्नन्तिजिघर्म्यग्निं मनसाघृतेने-
त्याह मनसाहिपुरुषो यज्ञमभिगच्छति प्रतिक्ष्यन्तं भुवनानि विश्वे-
त्याह सर्वꣳह्येषप्रत्यङ्क्षेतिपृथुन्तिरश्चावयसा बृहन्तमित्याहाल्पो
ह्येष जातोमहान् [१२] भवतिव्यचिष्ठमन्नꣳरभसंविदानमित्याहा-
न्नमेवास्मैस्वदयतिसर्वमस्मैस्वदतेय एवंवेदाऽऽत्वाजिघर्मिवचसाघृ-
तेनेत्याह तस्माद्यत्पुरुषोमनसाऽभिगच्छति तद्वाचावदत्यरक्षसेत्याह
रक्षसामपहत्यैमर्यश्रीस्स्पृहयद्वर्णो अग्निरित्याहापचितिमेवास्मिन्द-
धात्यपचितिमान्भवतिय एवम् [१३] वेदमनसात्वैतामाप्तुमर्हति-
यामद्ध्वर्युरनग्नावाहुतिञ्जुहोति मनस्वतीभ्याञ्जुहोत्याहुत्योराप्त्यैच
द्वाभ्यां प्रतिष्ठित्यै यज्ञमुखेयज्ञमुखे वैक्रियमाणे यज्ञꣳरक्षाꣳसि
जिघाꣳसन्त्येतर्हि खलु वा एतद्यज्ञमुखंयर्ह्येनदाहुतिरश्नुतेपरि-
लिखति रक्षसामपहत्यैतिसृभिः परिलिखतित्रिवृद्वा अग्निर्यावाने-
वाग्निस्तस्माद्रक्षाꣳस्यपहन्ति [१५] गायत्रियापरिलिखति तेजोवै
गायत्रीतेजसैवैनं परिगृह्णाति त्रिष्टुभापरिलिखतीन्द्रियंवै त्रिष्टु-
गिन्द्रियेणैवैनंपरिगृह्णात्यनुष्टुभापरिलिखत्यनुष्टुप्सर्वाणि छन्दाꣳसि
परिभूःपर्याप्त्यैचमध्यतोऽनुष्टुभावाग्वा अनुष्टुप्तस्मान्मध्यतो वाचाव-
दामोगायत्रिया प्रथमया परिलिखत्यथानुष्टुभाऽथत्रिष्टुभातेजोवै

(புத்தைத் தாண்டுதலும்

गायत्री यज्ञोऽनुष्टुगिन्द्रियन्त्रिष्टुप्तेजसाचैवेन्द्रियेण चोभयतोयज्ञं परिगृह्णाति ॥ [१५] अन्धोऽद्ध्वर्युर्महान्भवति यएवꣳहन्ति त्रिष्टुभातेजोवैगायत्रीत्रयोदशच ॥ ३ ॥

அம்மந்திரங்களிரண்டையும் விநியோகப் படுத்துகின்றது.

பிராமணம்—1

उत्क्रामोदक्रमीदिति द्वाभ्यामुत्क्रमयति प्रतिष्ठित्या अनुरूपाभ्यान्तस्मादनुरूपाः पशवः प्रजायन्ते ।

என்பது.

உரை.

இரண்டு மந்திரங்களாலும் பெருமையின் பொருட்டு ஒத்துக் குதிரையைத் தாண்டச் செய்தலின், அக்கினிட்டோமம் முதலிய வேள்விகளுக்கு ஒத்ததான பசுக்கள் உண்டாகின்றன என்பதாம்.

ஈண்டு, முதல் இரண்டு மந்திரங்களால் தாண்டவேண்டு மென்பதே அநுட்டானத்திற்கு ஒத்ததாயிற்று என்பதை யுணர்க.

இம் மந்திரத்தால் குதிரை அடியில் நீர் தெளிப்பதை விதிக்கின்றது.

பிராமணம்—2

अप उपसृजति यत्रवा आप उपगच्छन्ति तदोषधयः प्रतितिष्ठन्त्योषधीः प्रतितिष्ठन्तीः पशवोऽनु प्रतितिष्ठन्ति पशून् यज्ञोयज्ञंयजमानो यजमानं प्रजास्तस्मादप उपसृजति प्रतिष्ठित्यै ।

என்பது.

உரை.

தண்ணீரால் கொடி செடிகளும், கொடி செடிகளால் பசுக்க (ஆடுக) ளும், ஆடுகளால் வேள்வியும், வேள்வியால் எசமானனும், நிலைத்த பெருமையை யடைகின்றன ஆதலின், குதிரை அடியில் நீர் தெளித்தலால் நிலையாகிய பெருமை யுண்டாகின்றது என்பதாம்.

குதிரையடியில் பொன்வைத்து இரண்டு மந்திரங்களால் ஓமஞ்செய்தலின் விதி.

பிராமணம்—3

यदध्वर्युरनग्नावाहुतिञ्जुहुयादन्धोऽध्वर्युः स्याद्रक्षाꣳसियज्ञꣳहन्युर्हिरण्यमुपास्यजुहोत्यग्निवत्येव जुहोति नान्धोऽध्वर्युर्भवति न यज्ञꣳरक्षाꣳसिघ्नन्ति ।

என்பது.

பூமியைப் புநிதமாக்குதலும்)

உரை.

வேட்போன், அக்கினியின்றி ஹோமஞ் செய்யில் குருடனுவன், அசுரர்கள் வேள்வியைக் கெடுத்து விடுவார்கள். ஆதலின், குதிரை அடியின் மீது பொன்னை வைத்து அதில் ஹோமஞ் செய்யில், பொன்னுகிய தீயில் ஹோமஞ் செய்தல் வேண்டும்; செய்யில் அவ்விரண்டு குற்றங்களும் இல்லை என்பதாம்

முதலாம் மந்திரத்தின் முற்பகுதியிலுள்ள, மனம், என்னுஞ் சொல்லின் விநியோகத்தைக் காட்டுகின்றது.

பிராமணம்—4

जिघर्म्यग्निं मनसाघृतेनेत्याह मनसाहिपुरुषो यज्ञमभिगच्छति ।

என்பது.

உரை.

மனதால் எக்ஞம் அடையப்படுகின்றது. அதாவது 'எக்ஞத்தைச் செய்வேனுக, என்று எண்ணிக்கொள்ளலாம். இது பற்றியே மனம் என்றது என்பதாம்.

இரண்டாம் பகுதியின் கருத்தை விளக்குகின்றது.

பிராமணம்—5

प्रतिक्ष्यन्तं भुवनानि विश्वेत्याह सर्वं ह्येषप्रत्यङ्ङेति ।

என்பது.

உரை.

இவ்வக்கினி, எசமானனை நோக்கிக்கொண்டிருக்கின்றது என்பதாம்.

மூன்றும் பாதத்திலுள்ள, பிருதும், (விரிந்த) பிருஹந்தம் (பெருத்த) என்னும் இரண்டு சொற்களின் கருத்தை விளக்குகின்றது.

பிராமணம்—6

पृथुन्तिरश्चावयसा बृहन्तमित्याहाल्पो ह्येष जातोमहान् भवति ।

என்பது.

உரை.

இவ்வக்னி உதித்தன் மாத்திரத்தால் சிறிதாம்; பிறகு ஆகுதிகளால் வளர்ச்சியடைந்து, தேச காலங்களின் நிறைவால் பெரிதாகின்றது என்பதாம்.

நான்காம் பாதத்திலுள்ள 'வ்யசிஷ்டம்' என்னுஞ் சொல்லாற் குறிப்பித்த போற்றுதலாகிய இன்சுவையை விளக்குகின்றது.

பிராமணம்—7

व्यचिष्ठमन्नँ रभसंविदानमित्याहान्नमेवास्मैस्वदयति ।

என்பது.

உரை.

சுவை மிகுந்த உணவுப் பொருளைக் கொடுக்கின்றது எனல், சுவை மிகுந்த அன்னங்களை யருந்தும்படி செய்கின்றது என்பதாம்.

அறிவைப் புகழ்தல்.

பிராமணம்—8

सर्वमस्मैस्वदतेय एवंवेद ।

என்பது.

உரை.

இத்தன்மையதென்று அறியும் அறிவைப் புகழ்கின்றது. அதாவது இவ்வாறுணர்ந்தவனுக்கு எல்லா இன்சுவைகளையுஞ் சுவைக்கும்படி செய்கின்றது என்பதாம்.

இரண்டாம் மந்திரத்தின் முதலாம் பாதத்திலுள்ள 'வசஸா' (வாக்கால்) என்பதன் கருத்தை விளக்குகின்றது.

பிராமணம்—9

आत्वाजिघर्मिवचसाघृतेनेत्याह तस्माद्यत्पुरुषोमनसाऽभिगच्छति तद्वाचा-वदति ।

என்பது.

உரை.

முதன் மந்திரத்தில் மனதால் என்றதால் இரண்டாம் மந்திரத்தில் வாக்கால் எனப்பட்டது. மனத்தால் நினைப்பதுவே வாக்காற் பேசப்படுதல் உலகிலும் உண்டென்பதாம்.

பூமியைப் புநிதமாக்குதலும்)

இரண்டாம் பாதத்தில் இராக்கதரைப் போக்குஞ் சொல்லின் கருத்தைக் கூறுகின்றது.

பிராமணம்—10

अरक्षसेत्याह रक्षसामपहत्यै ।

என்பது.

உரை.

குரோதமின்றிய (பொறுமையுடைய) மனது என்றதால், இராக்கதர்கள் நீக்கப்படுகின்றனர். ஈண்டு, இராக்கதர்கள் என்றது குரோதங்களை என்பதாம்.

மூன்றும் பாதத்தில், மக்களால் வழிபடப் பெறுவதாலும் நிறம் விரும்பத்தக்கதாமாதலானும் அக்கினிக்கு போற்றப்படுந் தன்மைத் தேடுகின்றது.

பிராமணம்—11

मर्यश्रीस्स्पृहयद्वर्णो अग्निरित्याहापचितिमेवास्मिन्दधाति ।

என்பது.

உரை.

மக்களின் ஐசுவரியம், விரும்பத்தக்க நிறத்தையுடையது என்றதால் அக்கினி மிகுந்த உயர்வை யுடையது எனப்பட்டதாயிற்று என்பதாம்.

அறிவைப் புகழ்கின்றது.

பிராமணம்—12

अपचितिमान्भवतिय एवंवेद ।

என்பது.

உரை.

இவ்வாறுணர்ந்தவன் உயர்வுடையவனாகின்றான் என்பதாம்.

இரண்டு மந்திரங்களும் ‘மனம், என்னுஞ் சொல்லை யுடையவைகளான மையைப் புகழ்கின்றது.

பிராமணம்—13

मनसात्वैतामाप्तुमर्हतियामध्वर्युरनग्नावाहुतिञ्जुहोति मनस्वतीभ्याञ्जुहो-त्याहुत्योराप्त्यै ।

என்பது.

உரை.

அக்கினி யில்லாவிடத்துச் செய்யப்படும் ஆகுதிகளையும் 'இவை அக்கினியில் ஆகுதி செய்யப்பட்டன என்று மனதால் எண்ணிக்கொள்ள முடியுமாதலின் மனம் என்னுஞ் சொல்லைக்கொண்ட இருக்கு மந்திரங்களிரண்டாலும் ஆகுதிகள் செய்தல் வேண்டும் என்பதாம்.

மந்திரங்கள் இரண்டானதைப் புகழ்கின்றது.

பிராமணம்—14

द्वाभ्यां प्रतिष्ठित्यै ।

என்பது.

உரை.

மந்திரங்கள் இரண்டாயிருத்தலின் நிலைத்து நிற்றல் உண்டாகின்றது என்பதாம்.

மூன்று மந்திரங்களால் கோடுகள் கீறல் வேண்டுமென்னும் விதி.

பிராமணம்—15

यज्ञमुखंयज्ञमुखे वैक्रियमाणे यज्ञꣳरक्षाꣳसि जिघाꣳसन्त्येतर्हि खलु वा एतद्यज्ञमुखंयर्ह्येनदाहुतिरश्नुतेपरिलिखति रक्षसामपहत्यै ।

என்பது.

உரை.

யாண்டாண்டு வேள்வி தொடங்கப்படுமோ, ஆண்டாண்டு, இராக்கதர் வந்து வேள்வியைக் கெடுப்பார்கள். ஆதலின், இங்கு, குதிரையின் அடியில் ஆகுதி செய்தலும் வேள்வித் தொடக்கமாதலின் அங்குவரும் இராக்கதரை நீக்குதற் பொருட்டுக் கோடுகள் கிழித்தல் என்பதாம்.

மூன்று மந்திரங்களால் கோடு கிழித்தல் இதன் பொருட்டெனப் படுகின்றது.

பிராமணம்—16

तिसृभिः परिलिखतित्रिवृद्वा अग्निर्यावानेवाग्निस्तस्माद्रक्षाꣳस्यपहन्ति ।

என்பது.

உரை.

அக்கினிகள் மூன்றானதால். மூன்று மந்திரங்களாற் கோடு கிழிக்கில் மூன்றக்கினிகளாலும் அசுரர்கள் கொல்லப்படுவார்கள் என்பதாம்.

பூமியைப் புநிதமாக்குதலும்)

'பரிவாஜபதிஃ' என்பது முதலிய மந்திரத்தைச் சிறப்பாக விதிக்கின்றது.

பிராமணம்—17

गायत्रियापरिलिखति तेजोवै गायत्रीतेजसैवैनं परिगृह्णाति ।

என்பது.

உரை.

இம் மந்திரம் மூன்று அடிகளையுடையதாமாதலின் காயத்திரியாம். காயத்திரியோ, பிரமாவினுடைய முகத்திலிருந்து உண்டானதால் ஒளியுடையத்தாம். இவ்வாற்றால் ஒளியாலேயே இவ்வேள்வி செய்யுமிடத்தை அடைகின்றான் என்பதாம்.

'த்வம் அக்னே' என்பது முதலிய மந்திரத்தை விதிக்கின்றது.

பிராமணம்—18

त्रिष्टुभापरिलिखतीन्द्रियंवै त्रिष्टुगिन्द्रियेणैवैनं परिगृह्णाति ।

என்பது.

உரை.

திரிஷ்டுப் சந்தம் இந்திரியமாதலின் இந்திரியத்தால் இது கொள்ளப் பெற்றதாகின்றது என்பதாம்.

என்பது.

'பரித்வா' என்பது முதலிய மந்திரத்தை விதிக்கின்றது.

பிராமணம்—19

अनुष्टुभापरिलिखत्यनुष्टुप्सर्वाणि छन्दाꣳसि परिभूःपर्याप्त्यै ।

என்பது.

உரை.

அநுஷ்டுப் என்பது வாக்கு வடிவாமாதலின் எல்லாச் சந்தங்களும் நாற்புறமும் வந்து சூழ்ந்து கொள்கின்றன. ஆதலின், இது, நிறைவுக்குக் காரணமாம் என்பதாம்.

(மண் கெல்லுதலும்

இவ்வநுஷ்டுப்ச் சந்தமானது, இரண்டு மந்திரங்கட்கு நடுவில் இருப்பதைப் புகழ்கின்றது.

பிராமணம்—20

मध्यतोऽनुष्टुभावाग्वा अनुष्टुप्तस्मान्मध्यतो वाचावदामः ।

என்பது.

உரை.

வாக்குவடிவ அநுஷ்டுப்ச் சந்தம் நடுவில் இருத்தலின், யாமும், வாயின் நடுவிலுள்ள நாக்கால் வார்த்தை பேசுவோம் என்பதாம்.

காயத்திரி, திரிஷ்டுப் என்னும் இரண்டும், முதலிலும், கடையிலும் கூறப்பட்டிருத்தலைப் புகழ்கின்றது.

பிராமணம்—21

गायत्रिया प्रथमया परिलिखत्यथानुष्टुभाऽथ त्रिष्टुभा तेजोवैगायत्री यज्ञोनुष्टु-
गिन्द्रियन्त्रिष्टुप्तेजसाचैवेन्द्रियेण चोभयतोयज्ञं परिगृह्णाति ॥

என்பது.

உரை.

அநுஷ்டுப் எக்ஞவடிவமாம். காயத்திரி ஒளிவடிவாம். திரிஷ்டுப் இந்திரிய வடிவமாம். ஒளியாலும், இந்திரியத்தாலும் இரண்டு பக்கமும் நடுவிலுள்ள எக்ஞத்தைக் கொள்ளப்பட்டதாகின்றது என்பதாம்.

மூன்றும் அநுவாகம்.

முற்றிற்று.

நான்காம் அநுவாகம்

விடயச் சுருக்கம்.

चतुर्थेतुमृदंखात्वा संभरेच्चर्मपत्रयोः ॥

மண்ணைக் கெல்லல், தாமரை இலையிலும், மான் தோலிலும் எடுத்தல் என்பவற்றைக் கூறுகின்றன.

எடுத்துக் கொள்ளுதலும்)

ஐந்தாங்காண்டம் முதற்பிரபாடகம்

நான்காம் அநுவாகம்.

ஐந்துபஞ்சாதிக்கு மேல் இருபத்தேழு பதங்களைக் கொண்டது.

देवस्यत्वासवितुः प्रसव इति खनतिप्रसूत्या अथोधूममेवैतेन
जनयति ज्योतिष्मन्तन्त्वाऽग्नेसुप्रतीकमित्याह ज्योतिरेवैतेन जन-
यति सोऽग्निर्जातः प्रजाश्शुचाऽऽर्पयत्तन्देवा अर्द्धर्चेनाशमयञ्छिवं
प्रजाभ्योऽहिꣳसन्तमित्याह प्रजाभ्य एवैनꣳशमयति द्वाभ्याङ्गनति
प्रतिष्ठित्या अपांपृष्ठमसीति पुष्करपर्णमा [१६] हरत्यपांवा एत-
त्पृष्ठंयत्पुष्करपर्णꣳरूपेणैवैनदाहरति पुष्करपर्णेनसंभरति योनिर्वा
अग्नेःपुष्करपर्णꣳसयोनिमेवाग्निꣳ संभरति कृष्णाजिनेन संभरति
यज्ञोवै कृष्णाजिनंयज्ञेनैव यज्ञꣳसंभरति यद्ग्राम्याणां पशूनाञ्चर्मणा
संभरेद्ग्राम्यान्पशूञ्छुचाऽर्पयेत्कृष्णाजिनेनसंभरत्यारण्यानेव पशून्
[१७] शुचाऽर्पयति तस्मात्समावत्पशूनां प्रजायमानानामारण्याः
पशवः कनीयाꣳसश्शुचाह्यृतालोमतस्संभरत्यतोह्यस्यमेद्ध्यङ्कृष्णाजि-
नञ्च पुष्करपर्णञ्च सꣳस्तृणातीयं वै कृष्णाजिन मसौ पुष्करपर्ण-
माभ्यामेवैन मुभयतः परिगृह्णात्यग्निर्देवेभ्यो निलायत तमथर्वाऽ-
न्वपश्यदथर्वात्वाप्रथमो निरमन्थदग्न इति [१८] आहय एवैनमन्व-
पश्यत्तेनैवैनꣳ संभरति त्वामग्नेपुष्करादधीत्याह पुष्करपर्णेह्येन मुप-
श्रितमविन्दत्तमुत्वा दद्ध्यङ्ङृषिरित्याह दद्ध्यङ्वा आथर्वणस्तेज-
स्व्यासीत्तेज एवास्मिन्दधाति तमुत्वापाथ्योवृषेत्याह पूर्वमेवोदित-
मुत्तरेणाभिगृणाति [१९] चतसृभिस्संभरतिचत्वारि छन्दाꣳसि

छन्दोभिरेव गायत्रीभिर्ब्राह्मणस्य गायत्रोहि ब्राह्मणस्त्रिष्टुग्भीरा-
जन्यस्य त्रैष्टुभोहि राजन्यो यङ्कामयेत वसीयान्थ्स्यादित्युभयीभि-
स्तस्य संभरेत्तेजश्चैवास्मा इन्द्रियञ्चसमीचीदधात्यष्टाभिस्संभर-
त्यष्टाक्षरा गायत्रीगायत्रोग्निर्यावानेवाग्निस्तꣳ संभरतिसीदहोतरि-
त्याह देवता एवास्मै सꣳसादयति निहोतेति मनुष्यान्थ्सꣳ सीद-
स्वेति वयाꣳसि जनिष्वाहिजेन्यो अग्रे अह्नामित्याह देवमनुष्या-
नेवास्मै सꣳसन्नान्प्रजनयति ॥ [२०] ऐवपशूनिति गृणाति होत-
रिति सप्तविꣳशतिश्च ॥ ४ ॥

இரண்டு மந்திரங்களால் மண்கெல்லுதலை விதிக்கின்றது.

பிராமணம் —1

देवस्यत्वासवितुः प्रसव इति खनतिप्रसूत्या अथोधूममेवैतेन जनयति ज्योति-
ष्मन्तन्त्वाऽग्नेसुप्रतीकमित्याह ज्योतिरेवैतेन जनयति ।

என்பது.

உரை.

பரசிவனுடைய ஆணையில் மண் கெல்லப் படுகின்றது. மற்றும், இதனுல் உகையுண்டாக்கப் படுகின்றது. இரண்டாம் மந்திரத்தின் 'சோதிஷ் மந்தம்' என்பது முதலியதால் ஒளி உண்டாக்கப் படுகின்றது என்பதாம். பிரஸவம் = உண்டாக்குதல். உகை = மண்தொட்டி.

இரண்டாமந்திரத்திலுள்ள, 'சிவ, என்னுஞ் சொல்லின் கருத்தை விளக்குகின்றது.

பிராமணம்—2

सोऽग्निर्जातः प्रजाश्शुचाऽऽर्पयत्तन्देवा अर्द्धेनैनाशमयञ्छिवं प्रजाभ्योऽहिꣳ
सन्तमित्याह प्रजाभ्य एवैनꣳ शमयति ।

என்பது.

உரை.

அக்கினி உண்டான மாத்திரத்தானே எல்லாப் பிரசைகளையுஞ் சுடத் தொடங்கினது. அத்தகைய அக்கினியை, சிவம் என்பது முதலிய பாதி

எடுத்துக் கொள்ளுதலும்)

மந்திரத்தால் தேவர்கள் சாந்தமாக்கினர். ஆதலின், பிற்பாதி மந்திரத்தை ஓதுவதால் பிரசைகட்கு உதவியாய் அக்கினியைச் சாந்தப்படுத்துகின்றான் என்பதாம்.

மந்திரங்கள் இரண்டானமையைப் புகழ்கின்றது.

பிராமணம்—3

द्वाभ्याङ्गनति प्रतिष्ठित्यै ।

என்பது.

உரை.

இரண்டு மந்திரங்களானதால் நிலைத்தவனாகின்றான் என்பதாம்.

'அபாம் பிருஷ்டமஸி' என்னும் மந்திரத்தை விநியோகப் படுத்துகின்றது.

பிராமணம்—4

अपांपृष्ठमसीति पुष्करपर्णमा हरत्यपांवा एतत्पृष्ठंयत्पुष्करपर्णꣳरूपेणैवैनदा-हरति ।

என்பது.

உரை.

தாமரை இலையானது, தண்ணீரின்மேல் இருத்தலின் அதை தண்ணீரின் பின்பக்கம் என்பது முதலிய இம்மந்திரத்தின் பொருளும் ஒத்திருக்கின்றது. ஆதலின், இம்மந்திரத்தால் தாமரையிலை கொள்ளப் படுகின்றது என்பதாம்.

மேல்மந்திரங்களிரண்டாலும், தேடிய தாமரையிலையை அங்கீடித்தலை மேன்மேலும் விதிப்பதன் பொருட்டு, முதலில், தாமரைஇலையின்மீதுமண்ணை வைப்பதை விதிக்கின்றது.

பிராமணம்—5

पुष्करपर्णेनसंभरति योनिर्वा अग्नेःपुष्करपर्णꣳसयोनिमेवाग्निꣳ संभरति ।

என்பது.

உரை.

தாமரைஇலை, அக்கினிக்குக் காரணமென்று ஆருணகேது சயனத்திற் கூறப்பட்டிருக் கின்றது. ஆதலின், தாமரையிலை அக்கினிக்குக் காரணமாதலின், காரணத்தோடு அக்கினி கொள்ளப்பட்டிருக்கின்றது என்பதாம். அக்கினி = உகை.

தாமரையிலையைப் போல், அந்த இரண்டு மந்திரங்களாலேயே மான் தோலை விரிப்பதை விதிப்பதற்கு: முதலில் மான்தோலின்மீது, மண்ணை வைத்தல் வேண்டுமென்னும் விதி.

பிராமணம்—6

कृष्णाजिनेन संभरति यज्ञोवै कृष्णाजिनंयज्ञेनैव यज्ञꣳसंभरति ।

என்பது.

உரை.

மான் தோல் எக்ஞவடிவாம் எனல் தரிசபூரணமாதப் பிரகரணத்தாலுணரப்படுகின்றது. ஆதலின், மான் தோல் வடிவாகிய எக்ஞத்தால், அக்கினியாகிய எக்ஞங் கொள்ளப்படுகின்றது என்பதாம்.

வேறுதோல்களைக் கொள்ளாது, மான்தோலைக் கோள்வதில்
காரணத்தை விளக்குகின்றது.

பிராமணம்—7

**यद्ग्राम्याणां पशूनाञ्चर्मणा संभरेद्ग्राम्यान्पशूञ्छुचाऽर्पयेत्कृष्णाजिनेनसंभर-
त्यारण्यानेव पशूञ्छुचाऽर्पयति तस्मात्समावत्पशूनां प्रजायमानानामा-
रण्याः पशवः कनीयाꣳसश्शुचाहृताः**

என்பது.

உரை.

கிராமத்திலுள்ள கோவின் தோல் முதலிய தோல்களின் மீது மண்ணை வைக்கில், பசு முதலியவை தாபத்தையடையும். மான் தோலின்மீது மண்ணை வைக்கிலோ, காட்டிலுள்ள விலங்குகள் தாபத்தையடையும். தாபத்தை அடைதலின், அவைகள் தாழ்ந்தவைகள் என்பது பெறப்பட்டது, என்னை? காட்டிலுள்ள விலங்குகள் எக்ஞசாலைக்குள் நுழைதலும் அவியாதலும் அருந்தலும் இன்மையின் என்பதாம்.

மயிருள்ள பக்கத்தில் மண் வைத்தலின் விதி.

பிராமணம்—8

लोमतस्संभरत्यतोह्यस्यमेध्यम् ।

என்பது.

உரை.

இது, *மயிருள்ள பக்கம் பரிசுத்த மாதலின் என்பதாம்.*

எடுத்துக் கொள்ளுதலும்)

இனி, கூறிய மண் வைத்தல் முடிதற் பொருட்டு, முற்கூறிய மந்திரங்களிரண்டாலும் மான்தோல் தாமரை இலை இரண்டையும் விரிப்பதை விதிக்கின்றது.

பிராமணம்—9

कृष्णाजिनञ्च पुष्करपर्णञ्च सꣳस्तृणातीयं वै कृष्णाजिन मसौ पुष्करपर्ण-माभ्यामेवैन मुभयतः परिगृह्णाति ।

என்பது.

உரை.

மான்தோல், தாமரையிலை இரண்டையும் விரித்தலினால் இரண்டாலும் மண்ணாகிய தீ கொள்ளப் படுகின்றது. அதாவது, இரண்டும் இரண்டுலக வடிவங்களாதலின் மேல்கீழாய் விரித்துக் கொள்ளுதல் என்பதாம்.

அதர்வணர் முதலில் கடைந்தனர் என்பதற்கு, முதலில் கண்டுபிடித்தனர் என்பது கருத்தென விளக்குகின்றது.

பிராமணம்—10

अग्निर्देवेभ्यो निलायत तमथर्वाऽन्वपश्यदथर्वात्वाप्रथमो निरमन्थदग्न इति आहय एवैनमन्वपश्यत्तेनैवैनꣳ संभरति ।

என்பது.

உரை.

இவ்வக்கினியை அதர்வரிஷி முதலில் தேடிக்கண்டுபிடித்தனர் ஆதலின் இது கொள்ளப்படுகின்றது என்பதாம்.

காயத்திரிச் சந்தமந்திரங்களுள், “ த்வாமக்னே ” என்பதில் ‘புட்கராத் அதீத்ய’ என்பதன் கருத்தை விளக்குகின்றது.

பிராமணம்—11

त्वामग्नेपुष्करादधीत्याह पुष्करपर्णेह्येन मुपश्रितमविन्दत् ।

என்பது.

உரை.

அதர்வரிஷி கண்டுபிடித்தபோது, அவ்வக்கினியை ஒருதாமரையிலையின் மீது இருக்கப் பெற்றனர்; ஆதலின், தாமரையில் என்பதுபொருந்தும் என்பதாம்.

பின்வரும் மந்திரத்தால், ஏனையரிஷிகளை விட்டுவிட்டு ததீச ரிஷியை மாத்திரங் கொண்டதற்குக் காரணத்தை விளக்குகிறது.

பிராமணம்—12

तमुत्वा दद्ध्यङ्ङृषिरित्याह दद्ध्यङ्वा आथर्वणस्तेजस्व्यासीत्तेज एवास्मि-न्दधाति ।

என்பது.

உரை.

இது, ததீசிரிஷியானவர், மற்றோர்களை நோக்க மிகுந்த காந்தியை யுடையவராதலின் என்பதாம்.

மேல்வரும் மந்திரத்தால், 'பாத்திய' என்பதால் 'ததீசி' யே குறிக்கப்பட்டார் என்பதை விளக்குகின்றது.

பிராமணம்—13

तमुत्वापाथ्योवृषेत्याह पूर्वमेवोदितमुत्तरेणाभि गृणाति ।

என்பது.

உரை.

முன்மந்திரத்திற் சொல்லிய தத்தியங், என்னும் இருடியே, இப்போது நன்னெறியிற் செலுத்துகின்றவராதலின் 'பாத்தியர்' எனப்பட்டார் என்பதாம்,

---

இம்மந்திரங்களாற் சாதித்த, அக்கினியை எடுத்து வைப்பதை விதிக்கின்றது.

பிராமணம்—14

चतसृभिस्संभरति चत्वारि छन्दांꣳसि छन्दोभिरेव ।

என்பது.

உரை.

சந்தங்கள் நான் காதலின் நான்கு மந்திரங்களால் எடுக்கில் நான்கு சந்தங்களாலும் எடுத்ததாயிற்று என்பதாம்

எடுத்துக் கொள்ளுதலும்)

அதிகாரி வேறுபட்டால், காயத்திரி, திரிஷ்டுப் என்னுஞ் சந்தங்கட்கு பாகுபாடு விதிக்கப்படுகிறது.

பிராமணம்--15

गायत्रीभि र्ब्राह्मणस्य गायत्रोहि ब्राह्मणस्त्रिष्टुभीरा जन्यस्य त्रैष्टुभोहि राजन्यः।

என்பது.

உரை.

பிரமனுடைய முகத்திலிருந்து உண்டானமையின் காயத்திரிச்சந்தம் பிராமண சாதியாம். தோளிலிருந்து உண்டானதால், திரிஷ்டுப்ச்சந்தம் க்ஷத்திரிய சாதியாம். ஆதலின் இவ்வாறு வகுக்கப்பட்டிருக்கின்றதுஎன்பதாம்.

இரண்டு சந்தங்களையுஞ் சேர்த்துக்கொண்டு காமியத்தை விதிக்கின்றது.

பிராமணம்—16

यं कामयेत वसीयान्थ्स्यादित्युभयीभिस्तस्य संभरेत्तेजश्चैवास्मा इन्द्रियञ्च- समीचीद्‌धाति।

என்பது.

உரை.

தனமுடையவனாக விரும்புகின்றவன், காயத்திரி, திரிஷ்டுப் என்னும் இரண்டு சந்தங்களைக் கொண்ட மந்தரங்களாலும் மண்ணைக் கொள்ளலாம் என்பதாம்

மண்ணை எடுக்கும் மந்திரங்கள் எட்டு என்பதைப் புகழ்கின்றது.

பிராமணம்--17

अष्टाभिस्संभरत्यष्टाक्षरा गायत्रीगायत्रोऽग्निर्यावानेवाग्निस्तꣳ संभरति।

என்பது.

உரை.

காயத்திரி எட்டெழுத்துக்கள் கொண்டதால் அக்கினிவடிவ காயத்திரியால் எல்லாவற்றையுங் கைக்கொண்டவனாகின்றான் என்பதாம்.

திரிஷ்டுப் மந்திரங்கள் நான்கையும் தனித்தனிப் புகழ்கின்றது.

பிராமணம்—18

सीदहोतरित्याह देवता एवास्मै सꣳसादयति निहोतेति मनुष्यान्त्सꣳ सीद-स्वेति वयाꣳसि जनिष्वाहिजेन्यो अग्रे अह्वामित्याह देवमनुष्यानेवास्मै सꣳसन्नान्प्रजनयति ॥

என்பது.

உரை.

'சிதஹோத' என்பது முதலிய முதலாவது திருஷ்டுப் மந்திரத்தில் உள்ள, தேவாவிঃ, என்னுஞ் சொல்லால் தேவதைகளைத் தேடல் குறிப்பிக்கப்பட்டது. அல்லது, "தேவான் ஹவிஷா யஜாஸி" என்பதாற் குறிப்பிக்கப்பட்டது. 'நிஹோதா' என்னும் இரண்டாம் திரிஷ்டுப் மந்திரத்தினுள்ள 'ஹோத்ருஷதன' என்னுஞ் சொல்லால், ஹோதா முதலிய மனிதர்களைத் தேடல் குறிப்பிக்கப்பட்டது. ஸம்வீதஸ்வ, என்னும் மூன்றுவது திருஷ்டுப் மந்திரத்தில் உள்ள, 'தூமம் விஸ்ருஜ' என்னுஞ் சொல்லால், அந்தரிட்சத்தில் வாழும் பறவைகளைத்தேடல் குறிப்பிடப்பட்டது. 'ஜனிஷ்வ' என்பது முதலிய நான்காவது திருஷ்டுப் மந்திரத்திலுள்ள 'ஜனிஷ்வ' என்னுஞ் சொல்லால், முற்கூறியவைகளின் உற்பத்தி குறிப்பிக்கப்பட்டது என்பதாம்.

நான்காம் அநுவாகம்

முற்றிற்று.

ஐந்தாம் அநுவாகம்

விடயச் சுருக்கம்.

पञ्चमेसंभृतामेतां यज्ञभूमौ समाहरेत् ॥

எடுத்த மண்ணை வேள்விசெய்யு மிடத்திற்குக் கொண்டு வருவதைக் கூறுகின்றது.

ஐந்தாங்காண்டம் முதற்பிரபாடகம்

ஐந்தாம் அநுவாகம்.

ஒன்பது பஞ்சாதிக்குமேல் நாற்பத்திரண்டு பதங்களைக் கொண்டது.

क्रूरमिव वा अस्या एतत्करोति यत्खनत्यप उपसृजत्यापोवै शान्ताश्शान्ताभिरेवास्यै शुचꣳशमयतिसन्तेवायुर्मातरिश्वा दधा-

त्वित्याह प्राणो वै वायुः प्राणेनैवास्यै प्राणꣳ संदधाति सं ते वायु-
रित्याह तस्माद्वायुप्रच्युता दिवो वृष्टिरीर्ते तस्मै च देवि वषडस्तु
[२१] तुभ्यमित्याह षड्वा ऋतव ऋतुष्वेव वृष्टिं दधाति तस्मात्सर्वा-
नृतून्वर्षति यद्वषट्कुर्याद्यातयामाऽस्य वषट्कारः स्याद्यन्न वषट्-
कुर्याद्रक्षाꣳसि यज्ञꣳ हन्युर्वडित्याह परोक्षमेव वषट्करोति नास्य
यातयामा वषट्कारो भवति न यज्ञꣳ रक्षाꣳसि घ्नन्ति सुजातो
ज्योतिषा सहेत्यनुष्टुभोप नह्यत्यनुष्टुप् [२२] सर्वाणि छन्दाꣳसि
छन्दाꣳसि खलु वा अग्नेः प्रिया तनूः प्रिययैवैनं तनुवा परि
दधाति वेदुको वासो भवति य एवं वेद वारुणो वा अग्निरुपनद्ध
उदु तिष्ठस्वध्वरोर्ध्व ऊषुण ऊतय इति सावित्रीभ्यामुत्तिष्ठति
सवितृप्रसूत एवास्योर्ध्वां वरुणमेनिमुत्सृजति द्वाभ्यां प्रतिष्ठित्यै स
जातो गर्भो असि [२३] रोदस्योरित्याहेमे वै रोदसी तयोरेष
गर्भो यदग्निस्तस्मादेवमाहाग्ने चारुर्विभृत ओषधीष्वित्याह यदा ह्येतं
विभरन्त्यथ चारुतरो भवति प्रमातृभ्यो अधि कनिक्रदद्गा इत्या-
हौषधयो वा अस्य मातरस्ताभ्य एवैनं प्रच्यावयति स्थिरो भव
वीड्वङ्ग इति गर्दभ आसादयति [२४] सं नह्यत्येवैनमेतया स्थेम्ने-
गर्दभेन संभरति तस्माद्गर्दभः पशूनां भारभारितमो गर्दभेन संभ-
रति तस्माद्गर्दभोऽप्यनालेशेऽत्यन्यान्पशून्मेद्यत्यन्नꣳ ह्येनेनार्कꣳ
संभरन्ति गर्दभेन संभरति तस्माद्गर्दभो द्विरेतास्सन्कनिष्ठं पशूनां
प्रजायतेऽग्निर्ह्यस्य योनिं निर्दहति प्रजासु वा एष एतर्ह्यारूढः [२५]
स ईश्वरः प्रजाश्शुचा प्रदहश्शिवो भव प्रजाभ्य इत्याह प्रजाभ्य

एवैनꣳ शमयति मानुषीभ्यस्त्वमङ्गिर इत्याह मानव्यो हि प्रजा
माद्यावापृथिवी अभि शूशुचो माऽन्तरिक्षं मा वनस्पतीनित्याहैभ्य
एवैनं लोकेभ्यः शमयति प्रैतु वाजी कनिक्रददित्याह वाजी ह्येष
नानदद्रासभः पत्वेति [२६] आह रासभ इति ह्येतमृषयोऽवदन्भर-
न्नग्निं पुरीष्यमित्याहाग्निꣳ ह्येष भरति मापाद्यायुषः पुरेत्याहाऽऽयु-
रेवास्मिन्दधाति तस्माद्गर्दभः सर्वमायुरेति तस्माद्गर्दभे पुराऽऽयुषः
प्रमीते बिभ्यति वृषाऽग्निं वृषणं भरन्नित्याह वृषा ह्येष वृषाऽग्निरपां
गर्भम् [२७] समुद्रियमित्याहापाꣳ ह्येष गर्भो यदग्निरग्न आयाहि
वीतय इति वा इमौ लोकौ व्यैतामग्न आयाहि वीतय इति यदा-
हानयोर्लोकयोर्वीत्यै प्रच्युतो वा एष आयतनादगतः प्रतिष्ठाꣳ स
एतर्ह्यध्वर्युं च यजमानं च ध्यायत्यृतꣳ सत्यमित्याहेयं वा ऋत-
मसौ [२८] सत्यमनयोरेवैनं प्रतिष्ठापयति नार्तिमार्छत्यध्वर्युर्न
यजमानो वरुणो वा एष यजमानमभ्यैति यदग्निरुपनद्ध ओषधयः
प्रति गृह्णीताग्निमेतमित्याह शान्त्यै व्यस्यन्विश्वा अमतीरराती-
रित्याह रक्षसामपहत्यै निषीदन्नो अपदुर्मतिꣳ हनदित्याह प्रति-
ष्ठित्या ओषधयः प्रतिमोदध्वम् [२९] एनमित्याहौषधयो वा अग्ने-
र्भागधेयं ताभिरेवैनꣳ समर्धयति पुष्पावतीस्सुपिप्पला इत्याह
तस्मादोषधयः फलं गृह्णन्त्ययं वो गर्भ ऋत्वियः प्रत्नꣳ सधस्थमाऽ-
सददित्याह याभ्य एवैनं प्रच्यावयति तास्वेवैनं प्रतिष्ठापयति
द्वाभ्यामुपावहरति प्रतिष्ठित्यै ॥ [३०] अस्त्वनुष्टुब्वसि सादयत्या-
रूढः पत्वेतिगर्भमसौ मोदध्वन्द्विचत्वारिꣳशच्च ॥ ५ ॥

மண் கொண்டுவருதல்)

இம்மந்திரத்தாற் செய்யக்கூடிய, புத்தில் நீர்விடுவதை விதிக்கின்றது·

பிராமணம்—1

क्रूरमिव वा अस्या एतत्करोति यत्खनत्यप उपसृजत्यापोवै शान्ताश्शान्ता-
भिरेवास्यै शुचꣳशमयति ।

என்பது.

உரை.

மண்ணைக் கெல்லுவதால், கைகால்களை வெட்டினது போன்று பூமிக்குத் துன்புண்டாகின்றது, அதை நீக்குவதற்கு அதில் நீர்விடல் வேண்டும். நீர் குளிர்ந்ததாகையால் அது அத்தகைய கோரத்தை சமப்படுத்தும் என்பதாம்.

மந்திரத்தில் ஏனைய தேவதைகளைத் தவிர்த்து வாயுவைக் கூறுவதன் பயனைச் சொல்கின்றது.

பிராமணம்—2

सन्तेवायुर्मातरिश्वा दधात्वित्याह प्राणो वै वायुः प्राणेनैवास्यै प्राणꣳ संद-
धाति ।

என்பது.

உரை.

வாயு, பிராணன் ஆனதால் இங்குப் பூமிக்குப் பிராணனைக் கொடுத்ததாகின்றது என்பதாம்.

மீண்டும், வாயுவின் மற்றொருபயனைக் கூறுகின்றது.

பிராமணம்—3

सं ते वायुरित्याह तस्माद्वायुप्रच्युता दिवो वृष्टिरीर्ते ।

என்பது.

உரை.

வாயு, வானிலிருந்து மழை பெய்யும்படியுஞ் செய்கின்றது என்பதாம்.

மந்திரத்தின் நான்காம் பாதத்திலுள்ள, 'வஷட்' என்னுஞ் சொல்லுக்குள்ளிட்ட 'ஷட்' என்பதால், கருதிய இருதுக்களின் எண்ணிக்கையைக் காரணமாக வைத்துக்கொண்டுப் புகழ்கின்றது.

பிராமணம்—4

तस्मै च देवि वषडस्तु तुभ्यमित्याह षड्वा ऋतव ऋतुष्वेव वृष्टिं दधाति
तस्मात्सर्वानृतून्वर्षति ।

என்பது.

உரை.

'வஷட்தேவதையே நினக்கு' என்றது, இருதுக்கள் ஆறுனதால் ஆறு இருதுக்களிலும் மழை பெய்விக்கின்றது என்பதாம்.

ஏனைய வேதசாகைகளைத் தழுவி, 'ஷ' என்னும் எழுத்தை விட்டுவிட்டு, 'வட்' என்று உரை கூறுகின்றது.

பிராமணம்—5

यद्वषट्कुर्याद्यातयामाऽस्य वषट्कारः स्याद्यन्न वषट्कुर्याद्रक्षाꣳसि यज्ञꣳ हन्युर्वडित्याह परोक्षमेव वषट्करोति नास्य यातयामा वषट्कारो भवति न यज्ञꣳरक्षाꣳसि घ्नन्ति ।

என்பது.

உரை.

இங்கு, 'வஷட்' என்று சொல்லில் அச்சொல் பழையதாய் வாயவ்ய பசுவில் வஷட் என்பது இல்லாதொழியும். சொல்லாவிடில் இராக்கதர் வேள்வியைக் கெடுப்பார்கள். ஆதலின், இவ்விருவகையும் நீங்குவதற்கு 'ஷ' என்னும் எழுத்தை விட்டுவிட்டு, 'வட்' என்று கூறல் வேண்டும் என்பதாம்.

முஞ்சம்புற் கயிற்றால் மண்ணை மூட்டையாகக் கட்டுதல் வேண்டுமென்னும் விதி.

பிராமணம்—6

सुजातो ज्योतिषा सहेत्यनुष्टुभोप नह्यत्यनुष्टुप्सर्वाणि छन्दाꣳसि छन्दाꣳसि खलु वा अग्नेः प्रिया तनूः प्रिययैवैनं तनुवा परि दधाति ।

என்பது.

உரை.

அநுஷ்டுப்ச் சந்தமுடைய இம்மந்திரத்தால் மண்ணைக் கட்டில் எல்லாச் சந்தங்களாகிற அக்கினியின் பிரியவுடம்பாற் கட்டியதாகின்றது. என்னை? எல்லாச் சந்தங்களும் அக்கினியின் பிரியவுடம்பெனக் கூறப்பட்டிருத்தலின் என்க என்பதாம்.

இவ்வாறுணர்வதைப் புகழ்கின்றது.

பிராமணம்—7

वेदुको वासो भवति य एवं वेद ।

என்பது.

மண் கொண்டுவருதல்)

உரை.

இவ்வாறுணர்ந்தவன் ஆடையைப் பெறுகின்றான் என்பதாம்.

'உதுதிஷ்ட' என்பது முதலிய இரண்டு மந்திரங்களையும் விநியோகிக்கின்றது.

பிராமணம்—8

वारुणो वा अग्निरुपनद्ध उदु तिष्ठस्वध्वरोर्ध्व ऊषुण ऊतय इति सावित्रीभ्या-मुत्तिष्ठति सवितृप्रसूत एवास्योर्ध्वां वरुणमेनिमुत्सृजति ।

என்பது.

உரை.

மான்தோலால் கட்டப்பட்ட மண்ணாகிய அக்கினி, பீடை செய்வதற்குரியதாய் வருணனுடைய வசமாகின்றது. அது, சூரியனைக் குறிக்கும் பதங்களைக்கொண்ட மந்திரங்களிரண்டாலும் மண்ணை எடுத்துக் கொண்டெழுந்திருக்கில் நீங்கி விடுகின்றது என்பதாம்.

அவை இரண்டு மந்திரங்களானதுபற்றிப் புகழ்கின்றது.

பிராமணம்—9

द्वाभ्यां प्रतिष्ठित्यै ।

என்பது.

உரை.

இரண்டு மந்திரங்களானதால் நிலையுடையவனாகின்றான் என்பதாம்.

இம்மந்திரத்தின் முதலாம் பாதியிலுள்ள வான் மண் என்னும்
இரண்டின் கருப்பத்திலிருந்து என்பதை விரிக்கின்றது.

பிராமணம்—10

स जातो गर्भो असि रोदस्योरित्याहेमे वै रोदसी तयोरेष गर्भो यदग्निस्तस्मा-देवमाह ।

என்பது.

உரை.

'ரோதஸி' எனப்படும் வான் மண் என்னும் இரண்டிற்கிடையில் அக்கினி உண்டானதாமாதலின், கருப்பத்திற்குள்ளிருந்து எடுத்தது போலாகின்றது என்பதாம்.

அம்மந்திரத்தின் இரண்டாம் பாதத்திலுள்ள, சாரு, விப்ருதः, என்னுஞ் சொற்களின் காரணம் பற்றி அங்வயத்தை விளக்குகின்றது.

பிராமணம்—11

अग्ने चारुर्विभृत ओषधीष्वित्याह यदा ह्येतं विभरन्त्यथ चारुतरो भवति ।

என்பது.

உரை.

கொடிசெடிகளின் வயிற்றுக்குட் சென்று சாடராக்கினியைப் பாதுகாக்கும் போது இவ்வக்கினி மிகுந்த திறமையுடைய தாகின்றது என்பதாம்.

அம்மந்திரத்தின் நான்காம் பாதத்தில் உள்ள "ப்ரமாத்ருப்ய:" என்பதன் கருத்தை விளக்குகின்றது.

பிராமணம்—12

प्रमातृभ्यो अधि कनिक्रदद्गा इत्याहौषधयो वा अस्य मातरस्ताभ्य एवैनं प्रच्यावयति ।

என்பது.

உரை.

மேற்கூறியபடி கொடி செடிகள் அக்கினியை உண்டாக்குகின்றவைகளாதலின் மாதாக்களாகின்றன. ஆதலின், மாதாக்களின் பொருட்டு இவ்வக்கினியை நன்கு அடைவிக்கின்றது. இதுபற்றியே, மென்மேலும் கொடி செடிகள் கொள்ளப் படுகின்றன. ஆகையால், மந்திரத்தால், கொடி செடிகளில் நிலைப்படுத்தல் விதிக்கப்படுகின்றது என்பதாம்.

மேல்வரும் மந்திரத்தாற் செய்யவேண்டியதை விதிக்கின்றது.

பிராமணம்—13

स्थिरो भव वीडुङ्ग इति गर्दभ आसादयति सं नह्यत्येवैनमेतया स्थेम्ने ।

என்பது.

உரை.

இம்மண்ணுகிய அக்கினி, கீழே விழாதபடி கழுதையின்மீது வைத்து உறுதியாய்க் கட்டப்படுகின்றது என்பதாம்.

மண் கொண்டுவருதல்)

கழுதையின்மீது மண்வைப்பதைப் புகழ்கின்றது.

பிராமணம்—14

गर्दभेन संभरति तस्माद्गर्दभः पशूनां भारभारितमः ।

என்பது.

உரை.

இங்கு, காளை முதலானவைகளை விட்டுவிட்டு கழுதையின்மீது மண் கொண்டுவந்ததால், இப்போதும் உலகில், கழுதையே, எல்லாவற்றிலும் மிகச்சிறந்த சுமை சுமைப்பதாகின்றது என்பதாம்.

மற்ருேராற்ருல் அதையே புகழ்கின்றது.

பிராமணம்—15

गर्दभेन संभरति तस्माद्गर्दभोऽप्यनालेशेऽस्यन्यान्पशून्मेद्यत्यन्नꣳ ह्येनेनार्कꣳ संभरन्ति ।

என்பது.

உரை.

வேள்விவாயிலாக உணவுப் பொருள்களுக்குக் காரணமாகிய மண்ணென்னும் உணவுப் பொருளைச் சுமப்பதால், எருது முதலானவைகள் போன்று வைக்கோல் பிண்ணுக்கு கொள் முதலானவைகளைத் தின்னுமல் சிறிய புற்களையருந்தினும் மிகுந்த கொழுப்பையுடையதாயிற்று என்பதாம்.

மீண்டும் மற்ருேருவகையால் அதையே புகழ்கின்றது.

பிராமணம்—16

गर्दभेन संभरति तस्माद्गर्दभो द्विरेतास्सन्कनिष्ठं पशूनां प्रजायतेऽग्निर्ह्यस्य योनिं निर्दहति ।

என்பது.

உரை.

மண்ணுகிய அக்கினியை, தனது முதுகின்மீது சுமந்ததால், குட்டியீனும் வன்மை கெட்டதுபற்றி கழுதை, கோவேறுகழுதை, என்னும் இருவகைச் சுக்கிலங்களை யுடையதாமாயினும், குதிரைபோல் விலைபெருத ஒருகழுதைக் குட்டியையே உண்டாக்குகின்றது. அக்கினி, நல்ல குட்டிகளைப்போடுந் தன்மையைக் கெடுத்துவிட்டது என்பதாம். இது, அக்கினியைச் சுமத்தல் பற்றி புகழ்தலாயிற்றென்பதை யுணர்க.

உயிர்களின் பொருட்டு, 'சிவோபவ' (சாந்தமாவாயாக) என்ற சாந்தத்தை விளக்குகின்றது.

பிராமணம்—17

प्रजासु वा एष एतर्ह्यारूढस्स ईश्वरः प्रजाश्शुचा प्रदहश्शिवो भव प्रजाभ्य इत्याह प्रजाभ्य एवनꣳ शमयति ।

என்பது.

உரை.

மண்ணுகிய அக்கினி, கழுதையின்மீது ஏறியபோது, கழுதையும் உயிர்வகைகளுள் ஒன்றுமாதலின் எல்லாவுயிர்களின் மீதும் ஏறியதாயிற்று. ஆகவே, உயிர்களனைத்தையுஞ் சுடுதல் கூடும். ஆதலின் சாந்தமாவாய் என்று இம்மந்திரத்தால் வேண்டப் படுகின்றது என்பதாம்.

அம்மந்திரத்தின், இரண்டாம்பாதத்தில், உள்ள 'மானுஷீப்ய:' என்னும் விசேடணம் மனுவால் உண்டாக்கிய உயிர்களனைத்தையும் பற்றியது என்று விளக்குகின்றது.

பிராமணம்—18

मानुषीभ्यस्त्वमङ्गिर इत्याह मानव्यो हि प्रजाः ।

என்பது.

உரை.

'மானுஷீப்யஸ்த்வம்' எனல், உயிர்களனைத்தும் மநுவால் உண்டாக்கப் பட்டது என்பதாம்.

மந்திரத்தின் முதற்பாதியில் சேதனங்களின் சாந்தி வேண்டப்பட்டது போல், இரண்டாம்பாதியால் அசேதனங்களின் சாந்தியும் வேண்டப்படுகின்றதென்பதை விளக்குகின்றது.

பிராமணம்—19

माद्यावापृथिवी अभि शूशुचो माऽन्तरिक्षं मा वनस्पतीनित्याहैभ्य एवैनं लोकेभ्यश्शमयति ।

ன்எபது.

உரை.

மண்ணுலகம் விண்ணுலகம் முதலான உலகங்களும் சாந்தமாம்படி வேண்டப்படுகின்றதால் அசேதனங்களும் சாந்தப்படுகின்றன என்பதாம்.

மண் கொண்டுவருதல்)

முதல் மந்திரத்தின் முதலாம் பாதத்தி(அடியி)ல் 'வாஜி' என்பதால் குதிரையே குறிப்பிடப்படுகின்றதென்பதை விளக்குகின்றது.

பிராமணம்—20

प्रैतु वाजी कनिक्रददित्याह वाजी ह्येषः ।

என்பது.

உரை.

வாஜி செல்கின்றது, கனைக்கின்றது என்பதால், உலகில் வெளிப்படையாயுள்ள குதிரையே கொள்ளப்படுகின்றது என்பதாம்.

இரண்டாம் பாதத்தில், கர்த்தபம் என்னுது ராஸபம் என்பது இருடிகளின் வழக்கம் என விளக்குகின்றது.

பிராமணம்—21

नानदद्रासभः पत्वेत्याह रासभ इति ह्येतमृषयोऽवदन् ।

என்பது.

உரை.

பண்டைக் காலத்திய இருடிகள் அவ்வாறே கூறிக்கொண்டு வந்திருக்கின்றனர் என்பதாம்.

மூன்றும் பாதத்தின் பொருள் பிரத்தியட்சமாக முடிந்தது என்பதை விளக்குகின்றது.

பிராமணம்—22

भरन्नग्निं पुरीष्यमित्याहाग्निं ह्येष भरति ।

என்பது.

உரை.

'அக்கினி' என்னும் வெளிப்படைச் சொல்லால் அக்கினியைச் சுமக்கின்றது என்பதாயிற்று. ஈண்டு, மண்ணே அக்கினியாம் என்பதாம்.

நான்காம்பாதத்தில், அக்கினியைச் சுமப்பதாலுண்டாகும் அபமிருத்துவை நீக்குவதற்கு ஆயுளை வேண்டுதல் என்பதை விளக்குகின்றது.

பிராமணம்—23

मा पाद्यायुषः पुरेत्याहाऽऽयुरेवास्मिन्दधाति तस्माद्गर्दभस्सर्वमायुरेति तस्माद्गर्दभे पुराऽऽयुषः प्रमीते बिभ्यति ।

என்பது.

உரை.

இம்மந்திரத்தால் கழுதைக்கு நிறைந்த ஆயுள் நிறுவப்பட்டதால், புல் முதலியவைகளைத் தின்றும் நிறைந்த ஆயுளுடன் வாழ்ந்திருக்கின்றது. இதற்கு நிறைந்த ஆயுள் உண்டெனல், ஊரும் பிராணிகளின் வைத்திய நூலில் வெளிப்படையாம். இதுபற்றியே, முன்னொருகால், கழுதை திடீரென இறந்தபோது, இது ஒரு தீயகுறி என்று மனிதர்கள் பயந்ததுமென்பதாம்.

மூன்றுமந்திரத்தின், முதலாம் பாதத்தில், கழுதைக்குட்டியை யுண்டாக்குவதற்கு சுக்கிலத்தை விடுதலின் வர்ஷிப்பதென்றும், அக்கினி, பயன்களை நிறைய வர்ஷிப்பதால் வர்ஷிப்பதென்றுங் கூறியது வெளிப்படை யென்பதை விளக்குகின்றது.

பிராமணம்—24

वृषाऽग्निं वृषणं भरन्नित्याह वृषा ह्येष वृषाऽग्निः ।

என்பது.

உரை.

அக்கினியும், கழுதையும், பயனையும், சுக்கிலத்தையும் முறையே நிறையக் கொடுப்பவைகள் என்பதாம்.

இரண்டாம் பாதத்தில், அக்கினி மின்னல்வடிவாய் நீரின் கர்ப்பத்திலிருப்பதென்பது வெளிப்படையா மெனல்.

பிராமணம்—25

अपां गर्भꣳ समुद्रियमित्याहापाꣳ ह्येष गर्भो यदग्निः ।

என்பது.

உரை.

இவ்வக்கினி, நீரின் கருப்பத்திலிருக்கின்றது என்பதாம்.

மூன்றும் பாதத்தில் 'வீதயே' என்னுஞ்சொல், நேரே உண்டுபண்ணும் பொருளைக் குறிக்கின்றது; வானும் மண்ணும் பிரிந்தலோ, அக்கினிசெய்யும் உற்பத்தியின் பொருட்டாம் என்னுங் கருத்தை விளக்குகின்றது.

பிராமணம்—26

अग्न आयाहि वीतय इति वा इमौ लोकौ व्यैतामग्न आयाहि वीतय इति यदाहानयोर्लोकयोर्वीत्यै ।

என்பது.

உரை.

முன், வானும் மண்ணும் கூடியிருந்தன. அவை பிரிந்தபோது அவ்விரண்டிற்கும் நடுவில் உயிர்களை யுண்டாக்குதற்பொருட்டு அக்கினியே! நீ வருவாயாக என்பதே கருத்தாம். என்னை? உண்டு பண்ணுவதற்கு இடங் கொடுத்தற்பொருட்டே அவ்விரண்டும் பிரிந்தனவாதலி ன்னெனன்க. ஆகையால், இம்மந்திரம், உற்பத்தி முதலியவைகளின் பொருட்டு அக்கினியை அழைப்பதைக் கூறிவிட்டு, வான் மண்களின் பிரிவின் பொருட்டு உபயோகமாகின்றது என்பதாம்.

இம்மந்திரத்தின் முடிவில், போகவேண்டுமெனக் கூறப்பட்ட 'ரிதம் சத்யம்' என்னுமிரண்டின் கருத்தை விளக்குகின்றது.

பிராமணம்—27

प्रच्युतो वा एष आयतनाद्गतः प्रतिष्ठां॰ स एतर्ह्यध्वर्युं च यजमानं च ध्यायत्यृतं॰ सत्यमित्याहेयं वा ऋतमसौ सत्यमनयोरेवैनं प्रतिष्ठापयति नाऽऽर्तिमार्छत्यध्वर्युर्न यजमानः ।

என்பது.

உரை.

மண்ணாகிய இவ்வக்கினி, தனதிடத்திலிருந்து நழுவிவிட்டது. மற்றெங்கும் நிலைக்கவில்லை. ஆதலின் இப்போது முனிவுகொண்டு வேட்போனையும் வேள்வித் தலைவனையுங் கொல்வதற்குக் கருதுகின்றது. ஆதலின், இதை நிலைக்கவைத்தற்பொருட்டு வான், மண் என்னுமிரண்டையும் உள்ளே குறிப்பிட்டு 'ரிதம் சத்யம்' என்னும் இரண்டு சொல்லுங் கூறப்பட்டன. இதனுல் இவ்விரண்டுலகங்களிலும் அக்கினி நிலைத்தவாருயிற்று. ஆகவே, வேட்போனையும் வேள்வித் தலைவனையும் இவ்வக்கினி கொல்லமாட்டா என்பதாம்.

மண்ணை கீழே இறக்கும்போது முதலாம் மந்திரத்தால் கொடிசெடிகளைப் போற்றுவதற்குக் காரணங் கூறுகின்றது.

பிராமணம்—28

वरुणो वा एष यजमानमभ्यैति यदग्निरुपनद्ध ओषधयः प्रति गृह्णीताग्निमेत-मित्याह शान्त्यै ।

என்பது.

உரை.

மான்தோலாற் கட்டிய மண்ணாகிய அக்கினி, வருணபாசத்தாற் கட்டியதாமாதலின் வருணனாற் கோபிக்கப்பட்டு எசமானனை நோக்கிக் கொல்ல

விரும்புகின்றது; அதைச் சாந்தியாக்குவதற்குக் கொடிசெடிகளைக் கொள்ளுதல் என்பதாம்.

மூன்றும் பாதத்தில், 'அராதி' என்பதால் இராக்கதர் குறிப்பிடப்பட்டனர் என்பதை விளக்குகின்றது.

பிராமணம்—29

ꣳयस्यन्विश्वा अमतीररातीरित्याह रक्षसामपहत्यै ।

என்பது.

உரை.

ஈண்டு, அராதி என்பதால் இராக்கதர்கள் கொள்ளப்படுகின்றனர் என்பதாம்.

நான்காம் பாதத்தில், கெட்டபுத்தியைப் போக்கல் அநுட்டானம் நிலைத்தற் பொருட்டென்பதை விளக்குகின்றது.

பிராமணம்—30

निषीदन्नो अपदुर्मतिꣳ हनदित्याह प्रतिष्ठित्यै ।

என்பது.

உரை.

இது தீயமதி ஒழியின், செய்யும் அநுட்டானம் நிறைவேறும் என்று கூறுகின்றது என்பதாம்.

இரண்டாம் மந்திரத்தின் முதலாம் பாதத்தில் கோடிசெடிகள் மிகக் களிப்படைய வேண்டுமென்று வேண்டுதல், சாடராக்கினி உண்டாதற் பொருட்டென்பதை விளக்குகின்றது.

பிராமணம்—31

ओषधयः प्रतिमोदध्वमेनमित्याहौषधयो वा अग्नेर्भागधेयं ताभिरेवैनꣳ समर्धयति ।

என்பது.

உரை.

கொடிகள் உணவுப்பொருள் வடிவாய் சாடராக்கினியின் பாகமாகின்றன. புரோடாச வடிவாய் அக்கினி தேவதையின் பாகமாகின்றன; ஆதலின்

மண் கொண்டுவருதல்)

கொடி செடிகளை நிலைக்கவைப்பதால் இரண்டு அக்கினிகள் உண்டாகின்றன என்பதாம்.

இரண்டாம் பாதத்தில் 'சுபிப்பலா' என்பதன் கருத்தை விளக்குகின்றது.

பிராமணம்—32

पुष्पावतीस्सुपिप्पला इत्याह तस्मादोषधयः फलं गृह्णन्ति ।

என்பது.

உரை.

இனிய பழங்களை யுடையவைகள் என்றதால், கொடிசெடிகள் பருவ காலத்தில் நிறைந்த பலன்களையுடையவைகளாகின்றன என்பதாம்.

மந்திரத்தின் இரன்டாம் பாதியில், 'உரிய இடத்தையடைந்தது' என்பதன் கருத்தை விளக்குகின்றது.

பிராமணம்—33

अयं वो गर्भ ऋत्वियः प्रत्नꣳ सधस्थमाऽसददित्याह याभ्य एवैनं प्रच्यावयति तास्वेवैनं प्रतिष्ठापयति ।

என்பது

உரை.

மண்ணெடுக்கும் பூமியில் முன்னர் முளைத்திருந்த கொடிசெடிகளிலிருந்தும் வேறுபடுத்தி எவ்வக்கினி கொண்டுவரப்பட்டதோ, அவ்வக்கினி அக் கொடிசெடிகளின்மீது வைக்கப் படுகின்றது. அவை கருப்பத்திற்கு இடமாமென்பது குறிப்பு என்பதாம்.

இரண்டு மந்திரங்களால் மண்ணைக் கீழே இறக்கிவைப்பதை விநியோகிக்கின்றது.

பிராமணம்—34

द्वाभ्यामुपावहरति प्रतिष्ठित्यै ।

என்பது.

உரை.

இரண்டு மந்திரங்களால் கீழே இறக்கிவைத்தலால் நிலையையடைகிறுன் என்பதாம்.

ஐந்தாம் அநுவாகம்

முற்றிற்று.

ஆருவது அநுவாகம்

விடயச் சுருக்கம்.

षष्ठेतूखां निर्मिमीत ॥

உகா (மண் தொட்டி) செய்வதைக் கூறும் பிராமணங்கள்.

ஐந்தாங்காண்டம் முதற்பிரபாடகம்

ஆருவது அநுவாகம்.

நான்கு பஞ்சாதிக்கு மேல் இருபத்தொரு பதங்களைக் கொண்டது.

वारुणो वा अग्निरुपनद्धोविपाजसेति विस्रꣳसयति सवितृप्रसूत एवास्यविषूचीं वरुणमेनिं विसृजत्यप उपसृजत्यापोवै शान्ता-श्शान्ताभि रेवास्यशुचꣳ शमयति तिसृभिरुपसृजति त्रिवृद्वा अग्निर्यावानेवाग्निस्तस्य शुचꣳ शमयति मित्रस्सꣳसृज्य पृथिवी-मित्याह मित्रोवै शिवोदेवानान्तेनैव [३१] एनꣳ सꣳसृजति शान्त्यैयद्ग्राम्याणां पात्राणाङ्कपालैस्सꣳसृजेद्ग्राम्याणि पात्राणि शुचाऽर्पयेदर्म कपालैस्सꣳसृजत्येतानिवा अनुपजीवनीयानितान्येव शुचाऽर्पयति शर्कराभिस्सꣳसृजति धृत्या अथोशन्त्वायाजलोमै-स्सꣳसृजत्येषावा अग्नेः प्रियातनूर्यदजाप्रिययै वैनन्तनुवा सꣳसृज-त्यथो तेजसा कृष्णाजिनस्य लोमभिस्सम् [३२] सृजति यज्ञोवै कृष्णाजिनं यज्ञेनैव यज्ञꣳ सꣳसृजति रुद्रास्संभृत्य पृथिवीमित्याहै तावा एतन्देवता अग्रेसमभरन्ताभिरेवैनꣳ संभरति मखस्य शिरोऽ-सीत्याह यज्ञोवै मखस्तस्यै तच्छिरो यदुखा तस्मादेव माहयज्ञस्य पदेस्थ इत्याह यज्ञस्य ह्येते [३३] पदे अथो प्रतिष्ठित्यै प्रान्याभि-

செய்தல்)

यंच्छत्यन्वन्यैर्मन्त्रयतेमिथुनत्वायत्र्युद्धिङ्करोतित्रयं इमेलोका एषां लोकानामाप्त्यै छन्दोभिः करोति वीर्यंवै छन्दा᳟ंसि वीर्येणैवैनां- करोति यजुषा बिलं करोति व्यावृत्त्या इयतीं करोति प्रजापतिना यज्ञमुखेन संमितां द्विस्तनां करोति द्यावापृथिव्योर्दोहाय चतुस्तनां करोति पशूनां दोहायाष्टास्तनां करोति छन्दसां दोहाय नवाश्रिम- भिचरतः कुर्यात्त्रिवृतमेव वज्र᳟ं संभृत्य भ्रातृव्याय प्रहरति स्तृत्यै कृत्वाय सा महीमुखामिति निदधाति देवतास्वेवैनां प्रति- ष्ठापयति ॥ [३४] तेनैव लोमभिः समेते अभिचरत एकविं᳟श- तिश्च ॥ ६ ॥

மண் கட்டை அவிழ்த்தல்

ஈண்டு, மந்திரமின்றி உலக சம்பந்தமாகிய கட்டை அவிழ்த்து விடலுமாகும். ஆயினும் சூரியனுடைய ஏவுதலின்றி வருணனுடைய பாசம் நீங்காதாகையால், சூரியனுடைய ஏவலின் பொருட்டு மந்திரத்தை ஓதல் வேண்டும். இம்மந்திரம் கட்டு நீக்கத்தின் பொருட்டு பரமேசுரனால் இயற்றப்பெற்றதாமாதலின் இதை ஓதலால் சவிதா ஏவுகின்றார் என்பதை யுணர்க என்பதாம்.

இப்போது மேல்மந்திரத்தை விநியோகிக்கின்றது.

பிராமணம்—1

वारुणो वा अग्निरुपनद्धोविपाजसेति विस्र᳟ंसयति सवितृप्रसूत एवास्य- विषूचीं वरुणमेनिं विसृजति ।

என்பது.

உரை

வருணனுடைய பாசத்தாற் கட்டியதால் உண்டாகும் பீடையானது விடேசியாய் எங்கும் பரவி பலவகைக் கயிறுகளால் இழுக்கப்படுவதால், அத்தகைய இவ்வக்கினிக்கு உண்டாகிய பீடையை இம்மந்திரத்தால் விடுவித்தவனாகின்றான் என்பதாம்.

மூன்று மந்திரங்களால் மண்ணில் நீர் விடுதலை விதிக்கின்றது.

பிராமணம்—2

अप उपसृजत्यापोवै शान्ताश्शान्ताभि रेवास्यशुच᳟ं शमयति ।

என்பது.

உரை.

தண்ணீர், சாந்த வடிவாதலின் நீரால் இவ்வக்கினியின் சூடு ஆறிவிடுகின்றது என்பதாம்.

'ஆபோஹிஷ்டா' என்பது முதலிய மூன்று மந்திரங்களையும் இதில் விநியோகப் படுத்துகின்றது.

பிராமணம்—3

तिसृभिरुपसृजति त्रिवृद्वा अग्निर्यावानेवाग्निस्तस्य शुचꣳ शमयति ।

என்பது.

உரை.

அக்கினி, ஆகவனீயம் முதலிய மூவகையாமாதலின் மூன்று மந்திரங்களாலும் மூன்றும் சாந்தியாய் விடுகின்றன என்பதாம்.

ஏனைய தேவதைகளைத் தவிர்த்து, சூரியனை மாத்திரம் ஏற்றுக் கொண்டதற்குக் காரணத்தை விளக்குகின்றது.

பிராமணம்—4

मित्रस्सꣳसृज्य पृथिवीमित्याह मित्रोवै शिवोदेवानान्तेनैवैनꣳ सꣳसृजति शान्त्यै ।

என்பது.

உரை.

தேவர்களுக்குள், சூரியதேவதை சாந்தவடிவமாதலின், அக்கினியைச் சாந்தமாக்குவதாகும் அத்தகைய சூரியதேவதையை மந்திரத்தில் எடுத்துக் கொண்டது என்பதாம்.

உறுதியின் பொருட்டு ஓட்டாஞ்சல்லிகளை மண்ணிற் கலக்க வேண்டுமென்பதை விதிக்கின்றது.

பிராமணம்—5

यद्ग्राम्याणां पात्राणाङ्कपालै स्सꣳसृजेद्ग्राम्याणि पात्राणि शुचाऽर्पयेदर्म कपालैस्सꣳसृजत्येतानिवा अनुपजीवनीयानितान्येव शुचाऽर्पयति ।

என்பது.

செய்தல்)

உரை.

சமைக்கும் பாண்டங்களின் ஒட்டைக் கலக்கில் சமைக்கும் பாண்டங்களனைத்தையும் துன்புறுத்தியதாகும். அதாவது வீடு தீப்பற்றி எரிதலால் உடையும்படி செய்ததாகும். ஆதலின், நெடுநாள் பாழடைந்த வீட்டின் மட்பாண்ட ஒடுகளைக் கலக்கின் அவைகளையே துன்புறுத்தியதாகுமன்றி வீட்டில் உதவக் கூடியவைகளைத் துன்புறுத்தியதாகாது என்பதாம்.

சுக்கான்கற்பொடியைச் செய்து கலக்கில் உடையாதென்கின்றது.

பிராமணம்—6

शर्कराभिस्सꣳसृजति धृत्या अथोशन्त्वाय ।

என்பது.

உரை.

உகாச் செய்யும்போதும், சுடும்போதும் உடையாதிருப்பதற்கு அதைக் கலத்தல் வேண்டும் என்பதாம்.

மற்றொரு பொருளையுங் கலத்தல்வேண்டுமென விதிக்கின்றது.

பிராமணம்—7

अजलोमैस्सꣳसृजत्येषावा अग्नेः प्रियातनूर्यदजाप्रिययैवैनन्तनुवा सꣳसृजत्यथो तेजसा ।

என்பது.

உரை.

அக்கினியும் ஆடும், பிரமாவின் முகத்திலிருந்து உண்டானதால் ஒப்பாயிருத்தலின், ஆடு, இவ்வக்கினிக்கு பிரியமாகிய உடம்பாம். அது மாத்திரமன்று, மற்றோ, அக்கினியின் சம்பந்தமிருத்தலின் ஒளியுடையதுமாம். ஆதலின் ஆட்டுமயிர் கலக்கப்படுகின்றது என்பதாம்.

மற்றொரு பொருளையுங் கலத்தல்வேண்டுமென விதிக்கின்றது.

பிராமணம்—8

कृष्णाजिनस्य लोमभिस्सꣳ सृजति यज्ञोवै कृष्णाजिनं यज्ञेनैव यज्ञꣳ सꣳसृजति ।

என்பது.

உரை.

கரியமான், எக்ஞவடிவா மாதலின் அதனேடுகூட அக்கினியாகிய எக்ஞங் கலக்கப்படுகின்றதாம்; ஆதலின் மான்மயிரைக் கலத்தல் வேண்டும் என்பதாம்.

மேற்கூறிய மந்திரங்கள் நான்கு என்பதன் கருத்தை விளக்குகின்றது.

பிராமணம்—9

रुद्रास्संभृत्य पृथिवीमित्याहैतावा एतन्देवता अग्रेसमभरन्ताभिरेवैनꣳ संभरति

என்பது.

உரை.

'உருத்திரர்கள் தாங்கி' என்றது, முதலில் பாதுகாக்க வேண்டிய தேவதைகள் நான்காலும் ஏற்றுக் கொள்ளல்வேண்டும் என்பதை யுணர்த்த நான்கு மந்திரங்களால் மண்ணைச் செவ்வையாக்கல் கூறப்பட்டது என்பதாம்.

'மகத்தினுடைய சிரம்' என்பதில், மகம், என்னுஞ் சொல்லின் பொருளை விளக்குகின்றது.

பிராமணம்—10

मखस्य शिरोऽसीत्याह यज्ञोवै मखस्तस्यै तच्छिरो यदुखा तस्मादेव माह ।

என்பது.

உரை.

'மகத்தின் சிரம்' என்றது, எக்ஞம் மகமாம்; அதனுடைய தலை போன்றது இவ்வுகா என்பதாம்.

மான் தோலும், தாமரை யிலையும், எக்ஞத்தை யடைவதற்குக் காரண மாதலின் எக்ஞத்தின் பாதங்களாம் எனல் வெளிப்படையாம் என்பதை விளக்குகின்றது.

பிராமணம்—11

यज्ञस्य पदेस्थ इत्याह यज्ञस्य ह्येते पदे अथो प्रतिष्ठित्यै ।

என்பது.

செய்தல்)

உரை.

இவ்விரண்டும் எக்ஞத்திற்குக் கால்களாயிருத்தலின் எக்ஞம் நிலைக்கின்றது. மண்ணுகிற எக்ஞத்துக்கு அடியில் இருத்தலின் கால்கள் எனப்பட்டது என்பதாம்.

மண்ணுருண்டையை, அதைச் செய்கிறவனிடங் கொடுக்கும், 'ஸம்ஸ்ருஷ்டாம்' என்பது முதலிய நான்கு இருக்கு மந்திரங்கட்கும், எசமானன் போற்றும், 'வசவஸ்த்வா' என்பது முதலிய நான்கு மந்திரங்கட்கும் உள்ள ஆண் பெண் உணர்ச்சியை முறையாய் விதிக்கின்றது.

பிராமணம்—12

प्रान्याभिर्यच्छत्यन्वन्यैर्मन्त्रयतेमिथुनत्वाय ।

என்பது.

உரை.

ஒன்றிற்கொன்று மாறுபட்ட மந்திரங்களாற் கொடுப்பதாலும், போற்றுவதாலும், இருக்கு மந்திரங்கட்குப் பெண்குறிகள் இருத்தலாலும், எசுர் மந்திரங்கட்கு அஃதில்லாமையாலும் ஆண் பெண் உணர்ச்சியாம் என்பதாம்.

மூன்று பானைகளை அடுக்கிவைத்ததுபோல் அதைச் செய்தல்வேண்டுமென்னும் விதி.

பிராமணம்—13

त्र्युद्धिङ्करोतित्रय इमेलोका एषांलोकानामाप्त्यै ।

என்பது.

உரை.

மூன்றடுக்குப் போற்செய்தல் மூவுலகங்களையும் அடைதற் பொருட்டென்பதாம்.

முற்கூறிய அநுமந் திரண மந்திரங்களாலேயே உகாவைச்செய்தல் வேண்டுமேன்று விதிக்கின்றது.

பிராமணம்—14

छन्दोभिः करोति वीर्यंवै छन्दाँसि वीर्येणैवैनां करोति ।

என்பது.

உரை.

சந்தங்களைக்கொண்ட மந்திரங்களால் உகாவைச் செய்யில் வீரியத்தாற் செய்யப்பட்டதாகின்றது. என்னை? சந்தங்கள் வீரியமாதலின் என்பதாம்.

'அதிதிஸ்தே' என்பது முதலிய மந்திரத்தை விதிக்கின்றது.

பிராமணம்—15

यजुषा बिलं करोति व्यावृत्त्यै ।

என்பது.

உரை.

மந்திரத்தால் துளைபண்ணில், உலகசம்மந்தமாகிய மந்திரமிலாது செய்த துளையிலும் இது வேறு என்பதாயிற்று என்பதாம்.

உகா, ஒட்டைச்சாண் அளவு உயரம் என்பதை விதிக்கின்றது.

பிராமணம்—16

इयतीं करोति प्रजापतिना यज्ञमुखेन संमिताम् ।

என்பது.

உரை.

எக்ஞ புருடனுடைய முகம்; அதாவது கீழ்வாயிலிருந்து தலைவரை பிரமாவாற் செய்யப்பட்டதால் பிரமாவடிவாம். அதுவரை உள்ள அளவை, கையால் அளந்து காட்டுதல் என்பதாம்.

இரண்டு முலைகள்வைத்துப் பண்ணல் வேண்டுமேன்பதை விதிக்கின்றது.

பிராமணம்—17

द्विस्तनां करोति द्यावापृथिव्योर्दोहाय ।

என்பது.

உரை.

பெண்பால்களுக்குள்ளது இரண்டு முலைகள், அவற்றை வைத்தல் இரண்டுலகங்களின் சாரத்தைக் கறத்தற்பொருட்டு என்பதாம்.

அதில், மற்றொரு பட்சத்தை விதிக்கின்றது.

பிராமணம்—18

चतुस्तनां करोति पशूनां दोहाय ।

என்பது.

செய்தல்)

உரை.

பசுக்களைக் கறத்தற் பொருட்டு நான்கு மூலைகள் வைத்துச் செய்க என்பதாம்.

அதில், மீண்டும், மற்றொரு பட்சத்தை விதிக்கின்றது.

பிராமணம்—19

अष्टास्त्रिं करोति छन्दसां दोहाय ।

என்பது.

உரை.

எட்டுச் சந்தங்களைக் கறத்தற் பொருட்டு எட்டு மூலைகள் வைத்துச் செய்க என்பதாம்.

பகைவனைக் கொல்ல விரும்பியவனுக்கு உகா இத்தனை பட்டைகளாகச் செய்யவேண்டுமென்னும் விதி.

பிராமணம்—20

नवाश्रिमभिचरतः कुर्यात्त्रिवृतमेव वज्रꣳ संभृत्य भ्रातृव्याय प्रहरति स्तृत्यै ।

என்பது.

உரை.

திரிவிருத் என்னும் ஸ்தோமம் (துதிப்பாட்டுகள்) ஒன்பது இருக்குக்களால் ஆனதால் அது வச்சிராயுதத்திற்கு ஒத்ததாம். அதனால் பகைவன் ஒன்பது பட்டைகள் செய்யில் கொல்லப் படுகின்றான் என்பதாம்.

உகாவை, வடக்கில் மணலின்மீது வைப்பதை விதிக்கின்றது.

பிராமணம்—21

कृत्वाय सा महीमुखामितिनिदधाति देवतास्वेवैनां प्रतिष्ठापयति ॥

என்பது.

உரை.

இது, அதிதியின் புத்திரர்களான தேவர்களிடத்தில் வைத்ததாகின்றது என்பதாம்.

ஆறுவது அநுவாகம்

முற்றிற்று.

ஏழாவது அநுவாகம்

விடயச் சுருக்கம்

सप्तमे संस्करोतिताम् ॥

உகாவை(மண் தொட்டியை)ச் சுடுதற்குரிய பிரமணங்கள்.

ஐந்தாங்காண்டம் முதற்பிரபாடகம்

ஏழாவது அநுவாகம்

நான்கு பஞ்சாதிக்குமேல் ஆறுபதங்களைக் கொண்டது.

सप्तभिर्धूपयति सप्त वै शीर्षण्याः प्राणाश्शिर एतद्यज्ञस्य यदुखा शीर्षन्नेव यज्ञस्य प्राणान्दधाति तस्मात्सप्त शीर्षन्प्राणा अश्वशकेन धूपयति प्राजापत्यो वा अश्वस्सयोनित्वायादितिस्त्वेत्याहेयं वा अदितिरदित्यैवादित्यां खनत्यस्या अक्रूरंकाराय न हि स्वस्वꣳ हिनस्ति देवानां त्वा पत्नीरित्याह देवानाम् [३५] वा एतां पत्नयोऽग्रेऽकुर्वन्ताभिरेवैनां दधाति धिषणास्त्वेत्याह विद्या वै धिषणा विद्याभिरेवैनामभीन्धे ग्नास्त्वेत्याह छन्दाꣳसि वै ग्नाश्छन्दोभिरेवैनाꣳ श्रपयति वरूत्रयस्त्वेत्याह होत्रा वै वरूत्रयो होत्राभिरेवैनां पचति जनयस्त्वेत्याह देवानां वै पत्नीः [३६] जनयस्ताभिरेवैनां पचति षड्भिः पचति षड्वा ऋतव ऋतुभिरेवैनां पचति द्विः पचन्त्वित्याह तस्माद्द्विस्संवत्सरस्य सस्यं पच्यते वारुण्युखाभीद्धा मैत्रियोपैति शान्त्यै देवस्त्वा सवितोद्वपत्वित्याह सवितृप्रसूत एवैनां ब्रह्मणा देवताभिरुद्वपत्यपद्यमाना पृथिव्याशा दिश आ पृण [३७] इत्याह तस्मादग्निस्सर्वा दिशोऽनु वि भात्युत्तिष्ठ बृहती भवोर्ध्वातिष्ठ ध्रुवा त्वमित्याह प्रतिष्ठित्या असुर्यं

சம்ஸ்காரம்)

पात्रमनाच्छृण्णमा च्छृणत्ति देवत्राऽकंरजक्षीरेणाऽऽच्छृणत्ति परमं वा एतत्पयो यदजक्षीरं परमेणैवैनां पयसाऽऽ च्छृणत्ति यजुषा व्यावृत्त्यै छन्दोभिरा च्छृणत्ति छन्दोभिर्वा एषा क्रियते छन्दोभिरेव छन्दाꣳस्या च्छृणत्ति [३८] ॥ आह देवानां वै पत्नीः पृणैषा षट्च ॥ ७ ॥

ஏழுமந்திரங்களால் புகை காட்டுவதை விநியோகிக்கின்றது.

பிராமணம்—1

सप्तभिर्धूपयति सप्त वै शीर्षण्याः प्राणाश्शिर एतद्यज्ञस्य यदुखा शीर्षन्नेव यज्ञस्य प्राणान्दधाति तस्मात्सप्त शीर्षन्प्राणाः ।

என்பது.

உரை.

தலையில் ஏழுபிராணன்கள் உள, அதுபோல், உகா எக்ஞத்தின் தலையாதலின் இதிலும் ஏழுபிராணன்கள் நிலைத்தற்பொருட்டு ஏழு மந்திரங்களால் புகையிற் காட்டுதல் என்பதாம்.

புகைக்குச் சாதனம் குதிரையின் சாணம் என விதிக்கின்றது.

பிராமணம்—2

अश्वशकेन धूपयति प्राजापत्यो वा अश्वस्सयोनित्वाय ।

என்பது.

உரை.

குதிரையும் அக்கினியும் பிரமனிடத்திலிருந்து உண்டானதால் இரண்டிற்கும் காரணம் ஒன்றே என்பதன் பொருட்டென்பதாம்.

உகாவைச் சுடுதற்குக் கெல்லும் பள்ளம் அதிதிதேவதையாற்
கெல்லப்படுகின்றதென்பதைக் கூறுகின்றது.

பிராமணம்—3

अदितिस्त्वेत्याहेयं वा अदितिरदित्यैवादित्यां खनत्यस्या अक्रूरंकाराय न हि स्वस्स्वꣳ हिनस्ति ।

என்பது.

உரை.

ஈண்டு அதிதி, பூமிதேவதை யாதலின், தன்னைத்தான் கெடுத்தல் இல்லாமையின் பூமிக்குப் பள்ளங்கெல்லுதலாற் கேடில்லை என்பதாம்.

உகாவை, பள்ளத்தில் வைத்தல் தேவபத்தினிகளின் செயல் என்பது பழமையானது என்பதை விளக்குகின்றது.

பிராமணம்—4

देवानां त्वा पत्नीरित्याह देवानां वा एतां पत्नयोऽग्रेऽकुर्वन्ताभिरेवैनां दधाति ।

என்பது.

உரை.

முற்காலத்தில் தேவபத்தினிகள் உகாவைச் செய்தார்களாதலின், இப்போதும் அவர்களே செய்து வைக்கின்றார்கள்போலாம் என்பதாம்.

தீ மூட்டும் நான்குமந்திரங்களிலுள்ள 'திஷணு' என்பது முதலிய சொற்கள் யாம் சொன்னபொருளையே மேற்கொண்டவைகள் என்பதை விளக்குகின்றது.

பிராமணம்—5

धिषणास्त्वेत्याह विद्या वै धिषणा विद्याभिरेवैनामभीन्धे ग्नास्त्वेत्याह छन्दाꣳसि वै ग्नाश्छन्दोभिरेवैनाꣳ श्रपयति वरूत्रयस्त्वेत्याह होत्रा वै वरूत्रयो होत्राभिरेवैनां पचति जनयस्त्वेत्याह देवानां वै पत्नीर्जनयस्ताभिरेवैनां पचति ।

என்பது.

உரை.

திஷணு, வித்தியாபிமானிதேவி, சாந்தாபிமானி தேவிகள், க்னு தேவிகள், ஹோத்ராபிமானிதேவி, வரூ, ஜனய தேவிகள், தேவபத்தினிகள் என்னும் பொருள்களைக் கொண்டவைகள் இத் தேவபத்தினிகளால் உகா சுடப்படுகின்றது. இப்பொருளே இங்கு கூறப்பட்ட பொருட்கு ஒத்ததாம் என்பதாம்.

சம்ஸ்காரம்)

'அதிதிஸ்த்வா' என்பது முதலிய மந்திரங்கள் ஆறு என்பதைப் புகழ்கின்றது.

பிராமணம்—6

षड्भिः पचति षड्वा ऋतव ऋतुभिरेवैनां पचति ।

என்பது.

உரை.

இருதுக்கள் ஆறு ஆனதால் இருதுக்களால் இது சுடப்படுகின்றது. பள்ளங் கெல்லல் முதலியவைகளும் சுடுவதற்கு அங்கங்களானதால் ஆறு மந்திரங்களால் சுடப்படுகின்றது எனக் கூறப்பட்டது என்பதாம்.

வருக்கள், ஜனயர்கள் என்பவர்களைக்கூறும் மந்திரங்களிரண்டிற்கும், தாம் கருதியவாறு வேறுபாடு உண்டென்பதை விளக்குதற்பொருட்டு, 'பசந்து' என்பதை முடிவிற் சேர்த்துக்கோள்வதாகிய ஆவிருத்தியை (இருமுறை பேறுதலை) விளக்குகின்றது.

பிராமணம்—7

द्विः पचन्त्वित्याह तस्माद्विस्संवत्सरस्य सस्यं पच्यते ।

என்பது.

உரை.

இருமுறை, "பக்குவஞ் செய்வார்களாக" என்று கூறியதால், ஒரு வருடத்திற்கு இருமுறை பயிர்கள் விளைகின்றன என்பதாம். ஈண்டு இருமுறை என்பது, வரூத்ரயः பசந்து, ஜனயः பசந்து என்பதை யுணர்க.

ஏனைய தேவதைகளைக் கோள்ளாது மித்திரதேவதையை மாத்திரம் சாந்தி மந்திரத்தில் ஏற்றுக்கோண்டதற்குக் காரணத்ஸத விளக்குகின்றது.

பிராமணம்—8

वारुण्युखाभीद्धा मैत्रियोपैति शान्त्यै ।

என்பது.

உரை.

தீயிலிட்ட உகை உக்கிரமானதால் வருண சம்பந்தப்பட்டதாம். அது, மித்திர சம்பந்தமாகிய இருக்குமந்திரத்தாலேயே சாந்தமாகின்றது என்பதாம்.

உகாவை எடுக்கும் ‘தேவஸ்த்வா’ என்னு மந்திரத்தில், ‘சவிதா’ என்னுஞ் சொல்லின் கருத்தை விளக்குகின்றது.

பிராமணம்—9

देवस्त्वा सवितोद्वपत्वित्याह सवितृप्रसूत एवैनां ब्रह्मणा देवताभिरुद्वपति ।

என்பது.

உரை.

சவிதா தேவதையால் ஏவப்பெற்று, மந்திரத்தாலும், தேவதைகளாலும் உகா எடுக்கப்பட்டது கருத்து என்பதாம்.

இம்மந்திரத்தில், திசைகளில் நிறைந்தது என்று கூறியது, அக்கினியின் சுவாலையின் நிறைவு என்பது கருத்தேன்பதை விளக்குகின்றது.

பிராமணம்—10

अपद्यमाना पृथिव्याशादिश आपृणेत्याह तस्मादग्निस्सर्वादिशोऽनु विभाति ।

என்பது.

உரை.

‘திசைகளை விளக்குவாயாக’ என்று உகாவை நோக்கிக் கூறியிருத்தலால், உகாவிற்கலந்துள்ள அக்கினி, தனதொளியால் எல்லாதிசைகளையும் பிரகாசிக்கின்றது என்பதாம்.

முன் மந்திரத்தின் இரண்டாம் பாதியால் உறுதியாய் நிலைத்திருக்க வேண்டுமேன்று வேண்டப்படுகின்றது என்பதை விளக்குகின்றது.

பிராமணம்—11

उत्तिष्ठ बृहती भवोर्ध्वातिष्ठ ध्रुवा त्वमित्याह प्रतिष्ठित्यै ।

என்பது.

உரை.

எழுந்திரு, பெரிதாவாயாக என்பது முதலியவற்றைக் கூறுதல், உகை நிலைத்திருத்தற் பொருட்டாம் என்பதாம்.

சம்ஸ்காரம்)

நான்கு மந்திரங்களால் உகாவில் வெள்ளாட்டுப்பாலை நிறைக்க வேண்டுமேன்று விதிக்கின்றது.

பிராமணம்—12

असुर्यं पात्रमनाच्छृणमा च्छृणत्ति देवत्राऽकः ।

என்பது.

உரை.

சுடப்பட்ட வேள்விச்சாதன பாத்திரம் ஒழுகத்தக்க பொருள்களால் நனைக்கப் படாவிட்டால் அசுரர்கட்கு உரித்தாகின்றது. அதை நீக்குவதற்கு ஒழுகும் பொருளைத் தெளித்தல் வேண்டும். அதனால், தேவர்கட்கு உரியதாகின்றது என்பதாம்.

இப்பொருளால் தெளித்தல் வேண்டுமேன்பதை விதிக்கின்றது.

பிராமணம்—13

अजक्षीरेणाऽऽच्छृणत्ति परमं वा एतत्पयो यदजक्षीरं परमेणैवैनां पयसा-च्छृणत्ति ।

என்பது.

உரை.

ஆட்டுப்பால், எல்லாநோய்களையும் போக்குமென்று உலகிற் கூறப்படுவதாலும், ஆடு அக்கினி சம்பந்தமுடைய தென்று வேதத்திற் கூறியிருத்தலானும் எல்லாவற்றிலுஞ் சிறந்த ஆட்டுப்பாலால் உகாவை நனைத்தல் வேண்டும் என்பதாம்.

சுடும் பாத்திரத்தில் மந்திரமின்றியுந் தெளித்தலால் அதை நீக்குவதற்கு இங்கு மந்திரத்தால் நனைக்க வேண்டுமேன்று விதிக்கின்றது.

பிராமணம்—14

यजुषा व्यावृत्त्यै ।

என்பது.

உரை.

எசுர் மந்திரத்தால் நனைத்தல் வேண்டும், இது உலக வழக்கிலிருந்து வேறுபடுத்துவதற்கு என்பதாம்.

போதுவான மந்திரங்களை விதித்துவிட்டு, சந்தங்களைக் குறிகளாகக் கொண்ட விசேட மந்திரங்களை விதிக்கின்றது.

பிராமணம்—15

छन्दोभिराच्छृणत्ति छन्दोभिर्वा एषा क्रियते छन्दोभिरेव छन्दांस्या च्छृणत्ति ॥

என்பது.

உரை.

முன்னர் "காயத்திரிச் சந்தத்தால் உன்னை வசுக்கள் செய்வார்களாக" என்று சந்தக்குறிகளைக் கொண்டு கூறியிருத்தலால், இந்த உகா சந்தவடிவாம்: ஆதலின் சந்தங்களால் நனைத்தல் வேண்டும். இதனால், சந்தங்கள் சந்தங்களால் நனைக்கப் பெற்றவைகளாயின என்பதாம்.

ஏழாம் அநுவாகம்

முற்றிற்று.

எட்டாவது அநுவாகம்

விடயச் சுருக்கம்

अष्टमे पशवोवह्नेः ॥

எட்டாவது அநுவாகத்தில் அக்னியும் பசுவுஞ் சொல்லப்படுகின்றன என்பது.

ஐந்தாங்காண்டம் முதற்பிரபாடகம்

எட்டாவது அநுவாகம்

ஆறு பஞ்சாதிக்குமேல் இருபத்தெட்டுப் பதங்களைக்கொண்டது.

एकविंशत्या माषैः पुरुषशीर्षमच्छैत्यमेध्या वैमाषा अमेध्यं पुरुषशीर्षममेध्यैरेवास्यामेध्यं निरवदाय मेध्यं कृत्वाऽऽहरत्येक-विंशतिर्भवन्त्येकविंशो वै पुरुषः पुरुषस्याऽऽप्त्यै व्यृद्धं वा एतत्प्राणैरमेध्यं यत्पुरुषशीर्षं सप्तधा वितृण्णां वल्मीकवपां प्रति-निदधाति सप्त वै शीर्षण्याः प्राणाः प्राणैरेवैनत्समर्धयति मेध्यत्वाय

சொல்லப்படுகின்றன)

यावन्तः [३९] वै मृत्युबन्धवस्तेषां यम आधिपत्यं परीयाय यमगाथाभिः परिगायति यमादेवैनद्वृङ्क्ते तिसृभिः परि गायति त्रय इमे लोका एभ्य एवैनल्लोकेभ्यो वृङ्क्ते तस्माद्गायते न देयं गाथा हि तद्वृङ्क्तेऽग्निभ्यः पशूना लभते कामा वा अग्नयः कामानेवावरुन्धे यत्पशून्नाऽऽलभेतानवरुद्धा अस्य [४०] पशवस्स्युर्यत्पर्यग्निकृतानुत्सृजेद्यज्ञवेशसं कुर्याद्यत्सꣳस्थापयेद्यातयामानि शीर्षाणि स्युर्यत्पशूनालभते तेनैव पशूनव रुन्धे यत्पर्यग्निकृतानुत्सृजति शीर्ष्णामयातयामत्वाय प्राजापत्येन सꣳ स्थापयति यज्ञो वै प्रजापतिर्यज्ञ एव यज्ञं प्रतिष्ठापयति प्रजापतिः प्रजा असृजत स रिरिचानोऽमन्यत स एता आप्रीरपश्यत्ताभिर्वै स मुखतः [४१] आत्मानमाऽप्रीणीत यदेता आप्रियो भवन्ति यज्ञो वै प्रजापतिर्यज्ञमेवैताभिर्मुखत आप्रीणात्यपरिमितछन्दसो भवन्त्यपरिमितः प्रजापतिः प्रजापतेराप्त्यै ऊनातिरिक्ता मिथुनाः प्राजात्यै लोमशं वैनामैतच्छन्दः प्रजापतेः पशवो लोमशाः पशूनेवावरुन्धे सर्वाणि वा एता रूपाणि सर्वाणि रूपाण्यग्नौ चित्ये क्रियन्ते तस्मादेता अग्नेश्चित्यस्य [४२] भवन्त्येकविꣳशतिꣳ सामिधेनीरन्वाह रुग्वा एकविꣳशो रुचमेव गच्छत्यथो प्रतिष्ठामेव प्रतिष्ठा ह्येकविꣳशश्चतुर्विꣳशतिमन्वाह चतुर्विꣳशतिरर्धमासास्संवत्सरस्संवत्सरोऽग्निर्वैश्वानरस्साक्षादेव वैश्वानरमवरुन्धे पराचीरन्वाह पराङिव हि सुवर्गो लोकस्समास्त्वाऽग्न ऋतवो वर्धयन्त्वित्याह समाभिरेवाग्निं वर्धयति [४३] ऋतुभिस्संवत्सरं विश्वा

आभाहि प्रदिशः पृथिव्या इत्याह तस्मादग्निस्सर्वा दिशोऽनु
विभाति प्रत्यौहतामश्विना मृत्युमस्मादित्याह मृत्युमेवास्मादप
नुदत्युद्वयं तमसस्परीत्याह पाप्मा वै तमः पाप्मानमेवास्मादप
हन्त्यगन्म ज्योतिरुत्तममित्याहासौ वा आदित्यो ज्योतिरुत्तम-
मादित्यस्यैव सायुज्यं गच्छति न संवत्सरस्तिष्ठति नास्य
श्रीस्तिष्ठति यस्यैताः क्रियन्ते ज्योतिष्मतीमुत्तमामन्वाह ज्योति-
रेवास्मा उपरिष्टाद्दधाति सुवर्गस्य लोकस्यानुख्यात्यै ॥ [४४]
यावन्तोऽस्य मुखतश्चित्यस्य वर्धयत्यादित्योऽष्टाविꣳशतिश्च ॥ ८ ॥

ஈண்டு, சங்கிதையின் நான்காங் காண்டத்தின் முதற் பிரபாடகம் ஏழாம் அநுவாகத்தில் சாமிதேனி மந்திரங்களும், எட்டாம் அநுவாகத்தில் 'ஆப்பிரி' என்னும் பிரயாஜை மந்திரங்களும், ஆகார ஹோமமந்திரங்களுங் கூறப்பட்டன. அம்மந்திரங்கள் பசுப்பிரயோகங்கட்கு உள்ளடங்கினவை களாதலின், பசுவிதியின்றி அவைகட்கு உரைகூற முடியாதாகையால் பசு விதியே முதலிற்கூறவேண்டியதாம். அவற்றுள்,

---

பசுக்களனைத்தினும் முதலில் மனிதனுடைய தலை தேடத்தக்கதாம்;
ஆதலால் அதைத்தேடுதல் விதிக்கப்படுகின்றது.

பிராமணம்—1

एकविꣳशत्या माषैः पुरुषशीर्षमच्छैत्यमेध्या वै माषा अमेध्यं पुरुषशीर्ष-
ममेध्यैरेवास्यामेध्यं निरवदाय मेध्यं कृत्वाऽऽहरति ।

என்பது.

உரை.

இருபத்தொரு உழுந்துக்களைக் கையில் எடுத்துக்கொண்டுபோய், பாணம் பட்டேனும், இடிவிழுந்தேனும் மாண்டுகிடக்கும் அரசன், அல்லது வணிகன் பிணத்தைக்கண்டு பிடித்து அதன் தலையில் இருபத்தொரு உழுந்துக்களையும் போட்டு தலையை மாத்திரம் வெட்டி எடுத்துக்கொண்டுவரல் வேண்டும். முண்டத்தில் புத்தின் மண்கட்டியை எடுத்து வைத்துவிடல் வேண்டும். உழுந்தும், மனிதன் தலையும் அசுத்தங்களாதலின் எக்ஞத்திற்கு கூடாத

சொல்லப்படுகின்றன)

வைகள் ஆதலின், அழுக்கை அழுக்காற் போக்குவதுபோல், தலையிலுள்ள அசுத்தத்தை உழுந்துகளாற்போக்கி எக்ஞத்திற்கு உரியதாகச் செய்தல் என்பதாம்.

உழுந்துக்கள் இருபத்தொன்று என்பதைப் புகழ்கின்றது.

பிராமணம்—2

एकविꣳशतिर्भवन्त्येकविꣳशो वै पुरुषः पुरुषस्याऽऽप्त्यै ।

என்பது.

உரை.

கை கால்களின் விரல்கள், ஆன்மா, ஆக இருபத்தொன்றும் மனிதனுடைய அவயவங்களாதலின் இருபத்தொன்று உழுந்துக்கள் மனிதனையடைவதற்கு உரித்தென்பதாம்.

தலையை வெட்டிய முண்ட வுடலில் புத்தின் மண்கட்டியை வைத்தல் வேண்டுமென விதித்தல்.

பிராமணம்—3

व्यृद्धं वा एतत्प्राणैरमेध्यं यत्पुरुषशीर्षꣳ सप्तधा वितृण्णां वल्मीकवपां प्रतिनिदधाति सप्त वै शीर्षण्याः प्राणाः प्राणैरेवैनत्समर्धयति मेध्यत्वाय ।

என்பது.

உரை.

தலையை வெட்டிவிட்டவுடல் பிராணனற்றதாகையால் அசுத்தமானது; அதை நீக்குவதற்கு, தலையுலுள்ள ஏழு துளைகள் போன்றுள்ள புத்தின் மண் கட்டியை அவ்வுடலிற் போட்டுவிட்டால் தலையுடையது போன்றதாய் பிராணனுடையதென ஆகிவிடும் என்பதாம்.

சூத்திரகாரர், "எமனைப்பாடும் மூன்றுமந்திரங்களாற் பாடுகிறான்" என்று கூறியதை விதிக்கின்றது.

பிராமணம்—4

यावन्तो वै मृत्युबन्धवस्तेषां यम आधिपत्यं परीयाय यमगाथाभिः परि-गायति यमादेवैनद्वृङ्क्ते ।

என்பது.

உரை.

காலன் அந்தகன், என்பது முதலிய பெயர்களாற் கூறப்பட்டவனும், மிருத்துக்கட்குத் தலைவனுமானவன் எமனுவன். அவனைப் போற்றும் இருக்கு மந்திரங்களாற் பாடில், தலை, எமனிடத்திலிருந்து கொண்டுவந்ததாகின்றது. அம்மந்திரங்கள், ஆரண்ய காண்டத்தின் பித்ருமேதப் பிரகரணத்தில் "योऽस्य कौष्ठ्य" என்பது முதலியவைகளாக கூறப்பட்டிருக்கின்றன என்பதாம்.

மேற்கூறிய எமனைப்பாடும் பாட்டுக்கள் மூன்று என்பதை விதிக்கின்றது.

பிராமணம்—5

तिसृभिः परि गायति त्रय इमे लोका एभ्य एवैनल्लोकेभ्यो वृङ्क्ते ।

என்பது.

உரை.

இதனால், இந்தத் தலையானது, மூவுலகங்களினின்றும் வேறுபிரித்து தனது வசமாக்கப்படுகின்றது என்பதாம்.

தோடற்புபற்றி மனிதன் பொருட்டு சிலது கூடாதென்பதை விளக்குகின்றது.

பிராமணம்—6

तस्माद्गायते न देयं गाथा हि तद्वृङ्क्ते ।

என்பது.

உரை.

எவ்வந்தணன், வேத மோதி வைத்தல் முதலியவைகளை விட்டுவிட்டு, சங்கீதத்தாலேயே சீவிக்கின்முனே, அவனுக்கு, சாஸ்திரீய மானவைகளுள் ஒன்றுங் கொடுத்தல் கூடாது. ஏனெனின்? தேவ பிதிர்க்களின் காரியங்களில் சங்கீதங் கூடாதென விலக்கப்பட்டிருத்தலின் என்க என்பதாம்.

காமியத்திற்குக் காரணமான அக்கினிகளின் பொருட்டுப் பல்வகைப் பசுக்கள் கொன்று வேட்கப்படுகின்றன, என்று சூத்திரகாரர் கூறியதை விதிக்கின்றது.

பிராமணம்—7

अग्निभ्यः पशूना लभते कामा वा अग्नयः कामानेवावरुन्धे ।

என்பது.

சொல்லப்படுகின்றன)

உரை.

விரும்பிய, புத்திர பசு முதலியவைகட்குக் காரணமாகிய அக்கினியால் விரும்பியவைகள் அடையப்படுகின்றன என்பதாம்.

கூறிய பசுக்களைப்பற்றிய சில விசேடத்தை விதிக்கின்றது.

பிராமணம்—8

यत्पशूनाऽऽलभेतानवरुद्धा अस्य पशवस्स्युर्यत्पर्यग्निकृतानुत्सृजेद्यज्ञवेशसं कुर्याद्यत्सꣳस्थापयेद्यातयामानि शीर्षाणि स्युर्यत्पशूनालभते तेनैव पशूनव रुन्धे यत्पर्यग्निकृतानुत्सृजति शीर्ष्णामयातयामत्वाय प्राजापत्येन सꣳस्थापयति यज्ञो वै प्रजापतिर्यज्ञ एव यज्ञं प्रतिष्ठापयति ।

என்பது.

உரை.

அக்கினி தேவதையின் பசுக்கள் (ஆட்டுக் கடாக்கள்) கொல்லப்பட வில்லை யெனின்? பசுக்கள் அடையப்படாமல் ஒழியும். அல்லது உபா கரணம்பண்ணி, (கல்லாலங்கொம்பாற் குறிப்பிட்டு) கொள்ளியைக் கொண்டு சுற்றுவதற்குமுன் விட்டுவிடில், நடுவில் விட்டு விட்டதால் எக்ஞங் கெட்டு விடும், முடிவுவரை செய்யில், குதிரை, காளை, செம்மெறி ஆடு, வெள்ளாடு என்பவைகளின் தலைகள் நாட்பட்டவைகளாகி மேல்வரும் அக்கினி சயனத் தில் வைக்கமுடியாமற் கெடும். ஆதலின், பிரசாபதிக்குரிய மொட்டையா யுள்ள ஒரு பசுவை மாத்திரம் முடிவுவரை செய்யில் யாகம் முடிந்துவிடும் என்பதாம்.

சாமிதேனிமந்திரங்கள், முன் அநுவாகத்திற் கூறியவைகளும் முதலில் அநுட்டிக்கத் தக்கவைகளாகின்றன; ஆனாலும், பிரியத்திற்குக் காரணமான வைகள் போற்றத் தக்கவையா மாதலாலும், அல்லது, "பெரிய வாணுச்சட்டி செய்வதற்கிடையில் சிறிய ஊசியைச் செய்தல்" என்னும் நியாயத்தாலேனும் சிறிது உரை கூறத்தக்க ஆப்பிரி என்னும் மந்திரங்களை முதலில் விதிக் கின்றது.

பிராமணம்—9

प्रजापतिः प्रजा असृजत स रिरिचानोऽमन्यत स एता आप्रीरपश्यत्ता- भिर्वै स मुखत आत्मानमाऽप्रीणीत यदेता आप्रियो भवन्ति यज्ञो वै प्रजापतिर्यज्ञमेवैताभिर्मुखत आप्रीणाति ।

என்பது.

உரை.

முன், உயிர்களைப்படைப்பதில் பிரமனுக்கு வன்மை குறைந்ததால் யான் வீணன் என்று எண்ணிக்கொண்டிருந்தனன். பிறகு, வன்மையை நிறையக் கொடுக்கும் ஆப்பிரீ மந்திரங்களை மனதால் ஆராய்ந்து உறுதிபண்ணிக் கொண்டனன். பிரமன், அம்மந்திரங்களால் எக்ஞஞ் செய்யத் தொடங்கிய போதே தனதான்மாவை அம்மந்திரங்கள் பிரியமடையச் செய்ததால் அவைகட்கு ஆப்பிரியங்கள் எனபெயர் வந்தன, அவைகள், ऊर्ध्वा अस्य என்பது முதலிய சங்கிதை நான்காம் காண்டம் முதற்பிரபாடகம் எட்டாம் அநுவாகமந்திரங்களேயாம். எக்ஞம், பிரசாபதியால் உண்டானதால் பிரசாபதியேயாம். ஆதலின், பிரசாபதிபோல் இம்மந்திரங்களும் முதலில் பிரியத்தை உண்டாக்குகின்றன என்பதாம்.

மேற்கூறிய ஆப்பிரிய மந்திரங்கள், பாடப்படி பல்வகைச் சந்தங்களை யுடையதெனப் புகழ்கின்றது.

பிராமணம்—10

अपरिमितछन्दसो भवन्त्यपरिमितः प्रजापतिः प्रजापतेराप्त्यै ।

என்பது.

உரை.

ஆப்பிரி மந்திரங்கள் எண்ணில்லாத சந்தங்களை யுடையவைகள் பிரசாபதிகளும் எண்ணிலாதவர்கள், ஆதலின், அவை பிரசாபதியின் அடைவின் பொருட்டாம் என்பதாம்.

இத்தகைய சந்தங்களுக்குள் நடுப்பாதங்களில் உள்ள தாரதம்மியத்தைப் புகழ்கின்றது.

பிராமணம்—11

ऊनातिरिक्ता मिथुनाः प्रजात्यै ।

என்பது.

உரை.

ஐந்தெழுத்துக்கள் முதற்கொண்டு, எட்டெழுத்துக்கள்வரை, பின் பின்னுள்ளதைக் குறித்து முன் முன்னுள்ளது குறைந்ததாம். முன் முன்னுள்ளதை நோக்க பின்னுள்ளது மிகுதியானதாம். இவ்வாறு இரண்டுவகைகளானதாற் புணர்ச்சியாம். இது, உற்பத்தியின் பொருட்டாம் என்பதாம்.

சொல்லப்படுகின்றன)

முதலாவது, முடிவிலுள்ளது என்னும் இரண்டு பாதங்களை நோக்க, இடையி லுள்ளது சிறியதானது என்பதைப் புகழ்கின்றது.

பிராமணம்—12

लोमशं वैनामैतच्छन्दः प्रजापतेः पशवो लोमशाः पशूनेवावरुन्धे ।

என்பது.

உரை.

கை கால் முதலிய அங்கங்களைக் குறித்து மயிர் சிறியதாயிருப்பது போல், இடையிலுள்ள சந்தம் சிறியதானதால் இது பிரசாபதியின் மயிர் போன்றதாம். படைப்பவன் பிரமன், பசுக்கள் அவனுடைய மயிர்கள், ஆதலின், சந்தம் மயிர்க்கு ஒப்பானதால் பசுக்கள் அடையப்படுகின்றன என்பதாம்.

ஆப்பிரி மந்திரங்களின் சந்தங்ள் பலவகையானதைப் புகழ்கின்றது.

பிராமணம்—13

सर्वाणि वा एता रूपाणि सर्वाणि रूपाण्यग्नौ चित्ये क्रियन्ते तस्मादेता अग्ने-श्चित्यस्य भवन्ति ।

என்பது.

உரை.

'ஊர்த்வா அஸ்ய' என்பது முதலிய ஆப்பிரியை என்னும் மந்திரங்களும், கூடுதல் குறைதலாகிய பல்வகை உருவங்களுடன் காணப்படுகின்றன. மேலேகூறுமாற்றால், சயனஞ் செய்யும் அக்கினியும் பறவையின், கால், வால், தலை முதலான பல்வகை வடிவங்களுடன் இருக்கின்றது இவ்வாறு இரண்டும் ஒப்பாயிருத்தலின் இவைகள் சயனஞ் செய்யும் அக்கினிக்குப் பிரியமளிக்கின்றவைகளாகும் என்பதாம்.

ஏழாம் அநுவாகத்திற்கூறிய சாமதேனி மந்திரங்கட்கு உரைகூறும் அவசரங்கிடைத்தமையின், பிரகிருதி சாமதேனி மந்திரங்களுடன் சேர்க்கவேண்டியவைகளையும் உடன்பட்டுக்கொண்டு எண்ணிக்கையுடன் சாமதேனிமந்திரங்களை விதிக்கின்றது.

பிராமணம்—14

एकविꣳशतिꣳ सामिधेनीरन्वाह रुग्वा एकविꣳशो रुचमेव गच्छत्यथो प्रतिष्ठामेव प्रतिष्ठा ह्येकविꣳशः ।

என்பது.

உரை.

சமித்துக்களை வைக்கும் மந்திரங்கள் இருபத்தொன்ருகும். இருபத்தொரு ஸ்தோமங்களும் அழகும், பெருமையுமாகின்றன. ஆதலின், இருபத்தொரு எண்ணிக்கையால் அழகையும் பெருமையையும் அடைகின்ருன் என்பதாம். சாமதேனீ = சமித்தைவைக்கு மந்திரம்.

இதில், மற்ருெரு பட்சத்தை விதிக்கின்றது.

பிராமணம்—15

चतुर्विंशतिमन्वाह चतुर्विंशतिरर्धमासास्संवत्सरस्संवत्सरोऽग्निर्वैश्वानरस्साक्षादेव वैश्वानरमवरुन्धे ।

என்பது.

உரை.

"இருபத்துநான்கு என்கின்றது" மற்ருெரு வேதசாகையில், இருபத்துநான்கு சாமதேனி மந்திரங்கள் என்று கூறப்பட்டிருக்கின்றது. இங்கு, "உபேமச்ருக்ஷிவாஜயுः" என்பது முதலிய மூன்று மந்திரங்களையுஞ் சேர்த்து இருபத்துநான்கெனக் கொள்க. எல்லா வுயிர்கட்கும் இனிமை செய்வது வைசுவாநராக்கினியாம். அவ்வக்கினியானது வருடவடிவாம். ஆதலின், இருபத்துநான்கால், பாதி மாத வருட வாயிலாக முக்கியமாகிய வைசுவானரனை யடைகின்ருன் என்பதாம்.

பிரகிருதியில், மூன்றுமுறை ஓதல்வேண்டும் என்பதை நிடேதஞ்செய்தற்பொருட்டு விதிக்கின்றது.

பிராமணம்—16

पराचीरन्वाह पराङिव हि सुवर्गो लोकः ।

என்பது.

உரை.

'பராசி' என்பதால் சுவர்க்கலோகத்திலிருந்து, ஒருகாலும் மீண்டும் தோன்றி ஒடுங்கமாட்டான் என்பதாம்,

---

அக்கினி சயன அங்கமான பசுவில் சொல்லவேண்டியவைகளில், முதலாம் இருக்கின் முதற்பாதத்தில், வருடமாகிய பொருளைத்தரும் 'சமா', என்னுஞ் சொல், 'ரிது' என்னுஞ் சொல்களின் கருத்தை விளக்குகின்றது.

சொல்லப்படுகின்றன)

பிராமணம்—17

समास्त्वाऽग्न ऋतवोवर्धयन्त्वित्याह समाभिरेवाग्निं वर्धयति ऋतुभिस्संवत्सरम्

என்பது.

உரை.

இருதுக்கள் வருடத்தை நிறைவாக்குகின்றன. வருடமோ, உகாவிலுள்ள தீயைத்தரிக்கும் வாயிலாக அக்கினியை வளர்க்கின்றது என்பதாம்.

இனி, நான்காம் பாதத்திலுள்ள, 'ஆபாஹி' என்னுஞ் சொல்லின் கருத்தை விளக்கின்றது.

பிராமணம்—18

विश्वा आभाहि प्रदिशः पृथिव्या इत्याह तस्मादग्निस्सर्वा दिशोऽनु विभाति ।

என்பது.

உரை.

உலகில் விளங்குகின்றது ஒவ்வொருதிக்கு பூமி என்றது, அக்கினியானது எல்லாத் திசைகளிலுந் தொடர்ந்து ஒளிர்கின்றது என்பதாம்.

நவமருக்கின் மூன்றும் பாதத்திலுள்ள, "ப்ரத்யௌஹதாம்" என்பதன் கருத்தை விளக்குகின்றது.

பிராமணம்—19

प्रत्यौहतामश्विना मृत्युमस्मादित्याह मृत्युमेवास्मादप नुदति ।

என்பது.

உரை.

இம் மிருத்துவைப் பற்றிக் கூறியது என்றதால், இதிலிருந்து மிருத்துவே நீங்குகின்றது என்பதாம்.

தசமி இருக்கின் முதற்பாதத்திலுள்ள, 'தமம்' என்னுஞ் சொல்லின் கருத்தை விளக்குகின்றது.

பிராமணம்—20

उद्वयं तमसस्परीत्याह पाप्मा वै तमः पाप्मानमेवास्मादप हन्ति ।

என்பது.

உரை.

தசஸ்பரி என்றதால், பாவமாகிய இருட்டை இதிலிருந்து நீக்குகின்றான் என்பதாம்.

நான்காம் பாதத்திலுள்ள 'சோதி' என்னுஞ் சொல்லின் பொருளை விளக்குகின்றது.

பிராமணம்—21

अगन्म ज्योतिरुत्तममित्याहासौ वा आदित्यो ज्योतिरुत्तममादित्यस्यैव सायुज्यं गच्छति ।

என்பது.

உரை.

சோதி, என்பதால், ஆதித்தனுடைய சோதியுடன் நிலைத்து விடுகின்றான் என்பதாம்.

'உத்வயம்' 'தமஸஸ்பரீ' என்பது முதலிய இருக்கு மந்திரம் பாட முறையில் முடிவிலிருக்கிறதென்பதைப் போற்றுகின்றது.

பிராமணம்—22

न संवत्सरस्तिष्ठति नास्य श्रीस्तिष्ठति यस्यैताः क्रियन्ते ज्योतिष्मतीमुत्तमामन्वाह ज्योतिरेवास्मा उपरिष्टाद्दधाति सुवर्गस्य लोकस्यानुख्यात्यै ॥

என்பது.

உரை.

'ஸமாஸ்த்வா' என்பது முதலிய சாமதேனி மந்திரங்களும் முக்கியாக்கினியைத் தாங்குவதற்குக் காரணமாகிய வருடமும், இவ்வக்கினியின் சாதன சமூகமாகிய சம்பத்தியும் அவற்றைச்செய்யும் எசமானனை, சுவர்க்கத்திலேற்றிவைக்க முடியாதவைகள். ஆதலின், சுவர்க்கத்திலேறும்படி செய்யும், சோதி என்னுஞ் சொல்லைக்கொண்ட மந்திரங்களை ஓதில், சோதி, மேலேயுள்ளதாமாதலின் அது சுவர்க்கத்திற்கு அநுக்ஞை செய்ததாகின்றது என்பதாம்.

எட்டாம் அநுவாகம்

முற்றிற்று.

ஒன்பதாம் அநுவாகம்

விடயச் சுருக்கம்.

उख्यस्यनवमेजनिः ॥

ஒன்பதாவது அநுவாகத்தில் மண் தொட்டியில் தீ உண்டாக்கல் கூறப்படுகின்ற தென்பதாம்.

ஐந்தாங்காண்டம் முதற்பிரபாடகம்

ஒன்பதாம் அநுவாகம்.

மண் தொட்டியில் தீ யுண்டாக்குவதைக் கூறும் பிராமணங்கள்.

ஐந்து பஞ்சாதிக்கு மேல் முப்பத்து நான்கு பதங்களைக் கொண்டது.

षड्भिर्दीक्षयति षड्वा ऋतव ऋतुभिरेवैनं दीक्षयति सप्तभिर्दीक्षयति सप्त छन्दाꣳसि छन्दोभिरेवैनं दीक्षयति विश्वे देवस्य नेतुरित्यनुष्टुभोत्तमया जुहोति वाग्वा अनुष्टुप्तस्मात्प्राणानां वागुत्तमैकस्मादक्षरादनाप्तं प्रथमं पदं तस्माद्यद्वाचोऽनाप्तं तन्मनुष्या उप जीवन्ति पूर्णया जुहोति पूर्ण इव हि प्रजापतिः [४५] प्रजापतेराप्त्यै न्यूनया जुहोति न्यूनाद्धि प्रजापतिः प्रजा असृजत प्रजानाꣳ सृष्ट्यै यदर्चिषि प्रवृञ्ज्याद्भूतमव रुन्धीत यदङ्गारेषु भविष्यदङ्गारेषु प्र वृणक्ति भविष्यदेवाव रुन्धे भविष्यद्धि भूयो भूताद्द्वाभ्यां प्र वृणक्ति द्विपाद्यजमानः प्रतिष्ठित्यै ब्रह्मणा वा एषा यजुषा संभृता यदुखा सा यद्भिद्येताऽऽर्तिमार्च्छेत् [४६] यजमानो हन्येतास्य यज्ञो मित्रैतामुखां तपेत्याह ब्रह्म वै मित्रो ब्रह्मन्नेवैनां प्रतिष्ठापयति नाऽऽर्तिमार्च्छति यजमानो नास्य यज्ञो हन्यते यदि भिद्येत तैरेव कपालैस्सꣳ सृजेत्सैव ततः प्रायश्चित्तिर्यो गतश्रीस्स्यान्मथित्वा तस्याव दध्याद्भूतो वा एष स स्वाम् [४७]

देवतामुपैति यो भूतिकामस्स्याद्य उखायै संभवेत्स एव तस्य स्यादतो ह्येष संभवत्येष वै स्वयंभूर्नाम भवत्येव यं कामयेत भ्रातृव्यमस्मै जनयेयमित्यन्यतस्तस्याऽऽहृत्याव दध्यात्साक्षादेवास्मै भ्रातृव्यं जनयत्यम्बरीषादन्नकामस्याव दध्यादम्बरीषे वा अन्नं भ्रियते सयोन्येवान्नम् [४८] अव रुन्धे मुञ्जानव दधात्यूर्ग्वै मुञ्जा ऊर्जमेवास्मा अपि दधात्यग्निर्देवेभ्यो निलायत स क्रुमुकं प्राविशत्क्रुमुकमव दधाति यदेवास्य तत्र न्यक्तं तदेवाव रुन्ध आज्येन सं यौत्येतद्वा अग्नेः प्रियं धाम यदाज्यं प्रियेणैवैनं धाम्ना समर्धयत्यथो तेजसा [४९] वैकङ्कतीमा दधाति भा एवाव रुन्धे शमीमयीमा दधाति शान्त्यैसीद त्वं मातुरस्या उपस्थ इति तिसृभिर्जातमुप तिष्ठते त्रय इमे लोका एष्वेव लोकेष्वाविदं गच्छत्यथो प्राणानेवाऽऽत्मन्धत्ते [५०] ॥ प्रजापतिर्ऋच्छेत्स्वामेवान्नं तेजसा चतुस्त्रिंशच्च ॥ ९ ॥

'ஆகூதிம்' என்பதுமுதல், "வைஶ்வாநராயஸ்வாஹா" என்பது ஈறுகிய மந்திரங்களாற் செய்யப்படும் ஹோமத்தை விதிக்கின்றது.

பிராமணம் — 1

षड्भिर्दीक्षयति षड्वा ऋतव ऋतुभिरेवैनं दीक्षयति ।

என்பது.

உரை.

இருதுக்கள் ஆறுனும் தீட்சை செய்யப்படுகின்றுன். அதாவது ஹோமத்தால், தீட்சை என்னும் கருமஞ்செய்தல் வேண்டும் என்பது கருத்து என்பதாம்.

உண்டாக்குதல்)

பூரணாகுதி ஏழாவதென்று கொண்டு அதைப் புகழ்கின்றது.

பிராமணம்—2

सप्तभिर्दीक्षयति सप्त छन्दाꣳसि छन्दोभिरेवैनं दीक्षयति ।

என்பது.

உரை.

சந்தங்கள் ஏழானதால் சந்தங்களால் தீட்சை செய்து கொள்ளப்படுகின்றான். சந்தங்கள் எட்டனுள் ஈற்றிலுள்ள, உஷ்ணிக், ககுப் என்னுமிரண்டு சந்தங்களையும் ஒன்றாக்கியதால் ஏழெனக் கொள்க என்பதாம்.

'விஸ்வே தேவஸ்ய' என்னும் மந்திரத்தில் உள்ள அநுஷ்டுப், சந்தத்தையும், அம்மந்திரம் முடிவிலிருப்பதாகிய உத்தமமுடைய தென்பதையும் புகழ்கன்றது.

பிராமணம்—3

विश्वे देवस्य नेतुरित्यनुष्टभोत्तमया जुहोति वाग्वा अनुष्टप्तस्मात्प्राणानां वागुत्तमा ।

என்பது.

உரை.

ஈண்டு, எல்லா மந்திரங்களினும் அநுஷ்டுப் சந்தமாகிய வாக் வடிவம் ஈற்றிலிருக்கின்றதால், உலகினும், பிராணன் முதலிய எல்லா இந்திரியங்களுக்குள்ளும், அறிஞர் கழகத்தினும், அரசன் சபையினும் போற்றத்தக்க வாக்குச்சிறப்புடைய தாயிருக்கின்றது என்பதாம்.

இரண்டு மந்திரங்களும் எல்லா உலக வழக்கிற்கும் வன்மையுடையவைகளெனப் புகழ்கின்றது.

பிராமணம்—4

एकस्मादक्षरादनाप्तं प्रथमं पदं तस्माद्यद्वाचोऽनाप्तं तन्मनुष्या उप जीवन्ति पूर्णया जुहोति पूर्ण इव हि प्रजापतिः प्रजापतेराप्त्यै न्यूनया जुहोति न्यूनाद्धि प्रजापतिः प्रजा असृजत प्रजानाꣳ सृष्ट्यै ।

என்பது.

உரை.

இவ் விருக்கு மந்திரத்தில் முதலாம் பாத முதற்பாதத்தில் ஒரு எழுத்துக் குறைவுடையதாம். ஆதலின், மனிதர்களின் வாக்கு, குறைவுடையதா

யிருந்து வருகின்றது. என்னே? மூலாதாரத்திலிருந்து பிராணனுடைய அசைவால் எழும் ஒலி, சூக்குமை, பைசந்தி, மத்திமை என்னும் பெயர்களை யுடையதாய் வெளிப்படாமல் ஒடுங்கி யிருக்கின்றன. நான்காவது என்னும் வைகரியோ, சொல்லாய் வெளியில் வருகின்றது. இதனால், வாக்கு, குறை வுடையதாயிருந்தும் பேசும் வன்மையுடையதாயின்மை காண்க. இவ் வாறே, இம்மந்திரம் இரண்டாம் பாதி நிறைந்த எழுத்துக்களை யுடையதாம். ஆதலின், நிறைந்த வன்மையுடைய படைக்கும் பிரமனுக்கு ஒப்பாதலின், பிர சாபதியை யடைதற்கு உரியதாகின்றது. முதற்பாதக் குறைவோ, படைப் பற்ற உலக காரணமாகிய பிரசா உற்பத்தியின்பொருட்டு உரியதாகின்றது. ஒடுங்கிய உபாதானத்திலிருந்தே பிரசைகளும் உண்டாகின்றன என்பதாம்.

உகாவில் நாற்புறமும் ஆகவனீயத் தீயைப் போட்டுக் கொளுத்தல் வேண்டுமென்று விதிக்கின்றது.

பிராமணம் — 5

यदर्चिषि प्रवृञ्ज्याद्भूतमव रुन्धीत यदङ्गारेषु भविष्यदङ्गारेषु प्र वृणक्ति भविष्यदेववा रुन्धे भविष्यद्धि भूयो भूतात् ।

என்பது.

உரை.

சுவாலையில் உகாவைச் சூடுகாட்டில், வீட்டிலுள்ள தனமே தனது வச மாகும். மேல்வரும் தனம் தனது வசப்படாது. நெருப்பிற் சூடுகாட்டில் மேல் வரும் தனம் கிடைக்கும். உலகில் யாவரும் வருங்காலத்திய தனத்தை விரும்பியே முயற்சிக்கின்றனர். விறகுகளால் நெருப்பு வளரில் சுவாலை பின் உண்டாவது எனல் அமையும் என்பதாம்.

அவ்வாறேரிப்பதில், 'மாஸ—, பித்தா' என்னும் இரண்டு மந்திரங்களையும் விநியோகிக்கின்றது.

பிராமணம்—6

द्वाभ्यां प्र वृणक्ति द्विपाद्यजमानः प्रतिष्ठित्यै ।

என்பது.

உரை.

எசமானன், இரண்டு கால்களால் நிலையுடையவனாகின்றான். ஆதலின் இரண்டு மந்திரங்களானதால் இதுவும் உடையாமல் நிற்கும் என்பதாம்.

உண்டாக்குதல்)

ஏனைய தேவதைகளைத் தவிர்த்து மித்திர தேவதையினிடத்தில் இவ்வுகாவைக் கொடுப்பதற்குக் காரணத்தை விளக்குகின்றது.

பிராமணம்—7

ब्रह्मणा वा एषा यजुषा संभृता यदुखा सा यद्भिद्येताऽऽर्तिमार्छेत् यजमानो हन्येतास्य यज्ञो मित्रैतामुखां तपेत्याह ब्रह्म वै मित्रो ब्रह्मन्नेवैनां प्रतिष्ठापयति नाऽऽर्तिमार्छति यजमानो नास्य यज्ञो हन्यते ।

என்பது.

உரை.

இந்த உகை பரப்பிரம வடிவாமாதலால், வசவஸத்வா, என்பது முதலிய எசுர்மந்திரத்தால் தேடப்பெற்றது. ஆதலின், உலகில் குயவன் பண்ணுந் தொட்டிபோல் உடையாது. உடையிலோ, எசமானன் இறந்து விடுவான். எக்ஞமுங் கெட்டுவிடும். ஆதலின், மித்திரன் பரப்பிரமவடிவனாதலின் அவனிடத்திற் கொடுக்கில் பரப்பிரமத்தினிடத்திலேயே வைத்ததாகும் கேடில்லை என்பதாம்.

உடைந்துவிடில் பிராயச்சித்தம் விதிக்கப்படுகின்றது.

பிராமணம்—8

यदि भिद्येत तैरेव कपालैः सꣳ सृजेत्सैव ततः प्रायश्चित्तिः ।

என்பது.

உரை.

சுடும்போது உகா உடையில், உடைந்த ஓடுகளில் வேறு மண்ணைக் கலந்து மீண்டும் உகாவைச்செய்து கொள்ளல் வேண்டும் என்பதாம்.

முன்னர், பொதுவாக உகாவை ஆகவனீயத் தீயில்வைத்து எரித்துவிடல் வேண்டும் என்று கூறப்பட்டது. இனி, தனமுடையவனுக்குச் சிறப்பாக விதிக்கப்படுகின்றது.

பிராமணம்—9

यो गतश्रीः स्यान्मथित्वा तस्याव दध्याद्भूतो वा एष स स्वाम् देवतामुपैति ।

என்பது.

உரை.

மகாக்கினி சயனஞ்செய்யத் தொடங்கியவன், மூன்று வேதங்களை அறிந்த அந்தணன், தனமுடைய, அல்லது, கிராமங்களையுடைய வணி

கன், அல்லது, அரசனுக இருப்பானேல், ஆகவனீயத்திற் காய்ச்சித் தீ யுண்டாக்காமல் கடைந்தெடுத்த தீயை உகாவில் வைத்தல் வேண்டும். அம்மூவர்களுள் தனமுடையவன், எப்போதும் அக்கினியை வளர்ப்பவனும் தன்னுற் கடைந்த அக்கினி தேவதையை அடைவதற் குரியானேயன்றி, ஆகவனீயாக்கினியாகிய மற்றெரு தேவதையை அடைவதற்குரியவனல்லன் என்பதாம்.

தனமுடையவனுயிருந்தும், மீண்டும் ஐசுவரியத்தை விரும்புகின்றவன் கடைந்த அக்கினியையும் போட்டு முன்போல் எரித்தல் வேண்டுமேன்பதையும் விதிக்கின்றது.

பிராமணம்—10

यो भूतिकामः स्याद्य उखायै संभवेत्स एव तस्य स्यादतो ह्येष संभवत्यैष वै स्वयंभूर्नाम भवत्येव ।

என்பது.

உரை.

ஐசுவரியத்தை விரும்பிய தனிகன், சூடு மிருதியால் உகாவிலிருந்துண்டாகும் புதிய அக்கினியாற் காரியஞ் செய்தல் வேண்டும். கடைந்த தீயிற் செய்தல்கூடாது. கடைதலை விரும்பாது உகாவில் தானுகவே உண்டானதால் அவ் வக்கினி சுயம்பு எனப்படுகின்றது. இவ்வண்ணமாதலால் எசமானன் ஐசுவரியத்தை யடைகின்றுன் என்பதாம்.

எசமானனிடத்தில் துவேஷமுடைய அத்துவரியுக்கு மற்றேருவகையை விதிக்கின்றது.

பிராமணம்—11

यं कामयेत भ्रातृव्यमस्मै जनयेयमित्यन्यतस्तस्याऽऽहृत्याव दध्यात्साक्षादेवास्मै भ्रातृव्यं जनयति ।

என்பது.

உரை.

வேட்போன், 'இவனுக்குப் பகைவனை யுண்டாக்குவேன்' என்று எண்ணுகின்றுனே, அவன், வேறு வீட்டிலுள்ள அக்கினியைக் கொண்டு வந்து உகாவிற் போடல் வேண்டும், உடனே பகைவன் தோன்றுகின்றுன் என்பதாம்.

உண்டாக்குதல்)

இச்சை விசேடத்தால் வேறோரு அக்கினியை விதிக்கின்றது.

பிராமணம்—12

अम्बरीषादन्नकामस्याव दध्यादम्बरीषे वा अन्नं भ्रियते सयोन्येवान्नम् अव रुन्धे ।

என்பது.

உரை.

இருப்பு வாணலைக் காயவைத்து அதில் நெய்யை விடும்போது எழும் அக்கினியைக் கொண்டுவந்து உகாவில் வைக்கில், அவ்வாணச் சட்டியில் அன்னங்களைப் பக்குவஞ் செய்வதால் இவனுக்கு அன்னங்கள் (உணவுப் பொருள்கள்) கிடைக்கின்றன என்பதாம்.

இனி, எடுத்துக் கோண்ட உகாவைக் காய்ச்சுவதற்கு இன்னபோருள் கூடும் என்பதை விதிக்கின்றது.

பிராமணம்—13

मुञ्जानव दधात्यूर्ग्वै मुञ्जा ऊर्जमेवास्मा अपि दधाति ।

என்பது.

உரை.

உலர்ந்த முஞ்சிப்புல்லைப்போடல் வேண்டும். முஞ்சம்புல் எருமை முதலியவைகட்கு உணவாமாதலின், இது எசமானனுக்கு உணவுப் பொருளைத் தேடுகின்றது என்பதாம்.

இழைப்புளிப் போடியைப் போடல்வேண்டுமென்னும் விதி.

பிராமணம்—14

अग्निर्देवेभ्यो निलायत स क्रमुकं प्राविशत्क्रमुकमव दधाति यदेवास्य तत्र न्यक्तं तदेवाव रुन्धे ।

என்பது.

உரை.

முன்னொருகால், அக்கினி, இழைப்புளிப் பொடியில் இருந்தது. ஆதலின், அத்தகைய இழைப்புளிப் பொடியை உகாவிற் போட்டுவைக்கில் அதிலிருந்த அக்கினியை அடைகின்றான் என்பதாம்

இழைப்புளித் தூளை நெய்யில் நனைப்பதன் விதி.

பிராமணம் — 15

**आज्येन सं यौत्येतद्वा अग्नेः प्रियं धाम यदाज्यं प्रियेणैवैनं धाम्ना समर्धय-
त्यथो तेजसा ।**

என்பது,

உரை.

நெய்யானது அக்கினிக்கு இடமாதலின், நெருப்பால் சுவாலை உண்டாகின்றது. இதனால் ஒளியை (அழகை) அடைகின்றான் என்பதாம்.

சொத்தைக்களாச் சமித்துவைத்தலை விதிக்கின்றது.

பிராமணம்—16

वैकङ्कतीमा दधाति भा एवाव रुन्धे ।

என்பது.

உரை.

அக்கினியின்ஒளி சொத்தைக்களா விறகில் இருக்கின்றது. அதை வைத்தலின், ஒளி மிகுதியாய் உண்டாகின்றது என்பதாம்.

வன்னிச்சமித்தை வைக்கும் விதி.

பிராமணம்—17

शमीमयीमा दधाति शान्त्यै ।

என்பது.

உரை.

வன்னிவிறகு அக்கினியின் சூட்டைத் தணிப்பதாமாதலின் அதை வைக்கில் சூடு சாந்தமாகும் என்பதாம்.

இவ்வாறு, உகா என்னுந் தொட்டியில் மேற்சொன்னவைகளைப் போட்டு நாற்புறமும் நெருப்புப் போட்டு எரிக்கில் தானகவே அவைகளில் நெருப்புப் பற்றிக்கொள்ளும். அப்போது அவ்வக்கினியை மூன்று மந்திரங்களாற் போற்றல் வேண்டுமென்று விதிக்கின்றது.

உண்டாக்குதல்)

பிராமணம்—18

सीदत्वं मातुरस्या उपस्थ इति तिसृभिर्जातमुप तिष्ठते त्रय इमे लोका एष्वेव लोकेष्वाविदं गच्छत्यथो प्राणानेवाऽऽत्मन्धत्ते ॥

என்பது.

உரை.

மூன்றுலங்களிலும் பெருமையை யடைகின்றான். அஃதல்லாமலும், பிராணன் அபானன் வியானன் என்னும் மூன்று பிராணன்களும் தன தான்மாவில் நிலைக்கின்றன என்பதாம்.

ஒன்பதாம் அநுவாகம்

முற்றிற்று.

பத்தாவது அநுவாகம்

விடயச் சுருக்கும்

उख्यंदधतिदशमे ॥

உகாவைத் தரித்துக் கொள்ளல் என்பது.

ஐந்தாங்காண்டம் முதற்பிரபாடகம்

பத்தாவது அநுவாகம்

ஐந்து பஞ்சாதிக்குமேல் இருபத்துநான்கு பதங்களைக் கொண்டது.

न ह॑ स॒ वै पु॒राऽग्निरप॑रशुवृक्णं दह॒ति तद॑स्मै प्र॒योग॑ ए॒वर्षि॑र्-
स्वद॒यद्यद॑ग्ने॒ यानि॒ कानि॒ चेति॑ स॒मिध॒मा द॑धा॒त्यप॑रशुवृक्णमे॒वास्मै॑
स्वद॒याति सर्व॑मस्मै स्वद॒ते य ए॒वं वेदौ॑दुम्बरी॒मा द॑धा॒त्यूर्ग्वा उ॑दु॒-
म्बर॒ ऊर्ज॑मे॒वास्मा॒ अपि॑ दधाति प्र॒जाप॑तिर॒ग्निम॑सृज॒त तꣳ सृ॒ष्टꣳ
रक्षाꣳ॑सि [५१] अ॒जि॒घा॒ꣳस॒न्त्स ए॒तद्रा॑क्षो॒घ्नम॑पश्य॒त्तेन॒ वै स
रक्षा॒ꣳस्यपा॑ह॒त यद्रा॑क्षो॒घ्नं भव॑त्य॒ग्नेरे॒व तेन॑ जा॒ताद्रक्षा॒ꣳस्यप॑ ह॒न्त्या-

श्वत्थीमा दधात्यश्वत्थो वै वनस्पतीनाꣳ सपत्नसाहो विजित्यै
वैकङ्कतीमा दधाति भा एवाव रुन्धे शमीमयीमा दधाति शान्त्यै
सꣳशितं मे ब्रह्मोदेषां बाहू अतिरमित्युत्तमे औदुम्बरी [५२]
वाचयति ब्रह्मणैव क्षत्त्रꣳ सꣳ श्यति क्षत्त्रेण ब्रह्म तस्माद्ब्राह्मणो
राजन्यवानत्यन्यं ब्राह्मणं तस्माद्राजन्यो ब्राह्मणवानत्यन्यꣳ राजन्यं
मृत्युर्वा एष यदग्निरमृतꣳ हिरण्यꣳ रुक्ममन्तरं प्रति मुञ्चतेऽमृत-
मेव मृत्योरन्तर्धत्त एकविꣳशतिनिर्बाधो भवत्येकविꣳशतिर्वै देव-
लोका द्वादश मासाः पञ्चर्तवस्त्रय इमे लोका असावादित्यः [५३]
एकविꣳश एतावन्तो वै देवलोकास्तेभ्य एव भ्रातृव्यमन्तरेति निर्बा-
धैर्वै देवा असुरान्निर्बाधेऽकुर्वत तन्निर्बाधानां निर्बाधत्वं निर्बाधी
भवति भ्रातृव्यानेवनिर्बाधे कुरुते सावित्रिया प्रति मुञ्चते प्रसूत्यै
नक्तोषासेत्युत्तरयाऽहोरात्राभ्यामेवैनमुद्यच्छते देवा अग्निं धारयन्द्र-
विणोदा इत्याह प्राणा वै देवा द्रविणोदा अहोरात्राभ्यामेवैन-
मुद्यत्य [५४] प्राणैर्दाधाराऽऽसीनः प्रति मुञ्चते तस्मादासीनाः
प्रजाः प्र जायन्ते कृष्णाजिनमुत्तरं तेजो वै हिरण्यं ब्रह्म कृष्णा-
जिनं तेजसा चैवैनं ब्रह्मणा चोभयतः परि गृह्णाति षडुद्यामꣳ
शिक्यं भवति षड्वा ऋतव ऋतुभिरेवैनमुद्यच्छते यद्द्वादशोद्यामꣳ
संवत्सरेणैव मौञ्जं भवत्यूर्ग्वै मुञ्जा ऊर्जैवैनꣳ समर्धयति सुप-
र्णोऽसि गरुत्मानित्यवेक्षते रूपमेवास्यैतन्महिमानं व्याचष्टे दिवं
गच्छ सुवः पतेत्याह सुवर्गमेवैनं लोकं गमयति [५५] ॥ रक्षाꣳ-
स्यौदुम्बरी आदित्य उद्यत्य सं चतुर्विꣳशतिश्च ॥ १० ॥

தரித்துக் கொள்ளல்)

இதில், தீ யுண்டாக்கிய உகாவை, கழுத்தில் தரித்துக் கொள்ளல் வேண்டும் என்பது கூறப்படுகின்றது.

முதலில் ஐந்து மந்திரங்களால் தானுக விழுந்த சமித்துகளை வைத்தல் விநியோகிக்கப் படுகின்றது.

பிராமணம்—1

न ह स्म वै पुराऽग्निरपरशुवृक्णं दहति तदस्मै प्रयोग एवर्षिरस्वदयद्यदग्ने यानि कानि चेति समिधमा दधात्यपरशुवृक्णमेवास्मै स्वदयति ।

என்பது.

உரை.

இம்மந்திரப் பிரயோகத்திற்கு முன், தானுக விழுந்தமரச் சுப்பில்களை வைக்கினும், கருகிவிடுமேயன்றி சாம்பராகாது. ஆதலின், இம்மந்திரங்களே உகாத் தீ, சமித்துக்களை இனிதருந்தும்படி செய்கின்றன என்பதாம்.

இவ்வாறு உணர்வதைப் போற்றுகின்றது.

பிராமணம்—2

सर्वमस्मै स्वदते य एवं वेद ।

என்பது.

உரை.

இத்தன்மை யுணர்ந்தவனுக்கு, எல்லாவற்றையும் இனியவைகளாகும் படி செய்கின்றது என்பதாம்.

தானுகவிழுந்த சமித்தும் இன்னமரவகையாய் யிருத்தல் வேண்டுமென்று விதிக்கின்றது.

பிராமணம்—3

औदुम्बरीमा दधात्यूर्ग्वा उदुम्बर ऊर्जमेवास्मा अपि दधाति ।

என்பது.

உரை.

அத்தி மரத்திலிருந்து விழுந்த சுப்பில்களை வைத்தல் வேண்டும். அது இவனுக்கு உணவுப் பொருளை யளிக்கின்றது என்பதாம்.

'யதக்னே' என்பது முதலான மந்திரத் தொகுதியாகிய சூக்தத்தைப் புகழ்கின்றது.

பிராமணம்—4

प्रजापतिरग्निमसृजत तꣳ सृष्टꣳ रक्षाꣳस्यजिघाꣳसन्त्स एतद्राक्षोघ्नमपश्यत्तेन वै स रक्षाꣳस्यपाहत यद्राक्षोघ्नं भवत्यग्नेरेव तेन जाताद्रक्षाꣳस्यप हन्ति ।

என்பது.

உரை.

'யதக்னே' என்பது முதல், 'ஸ்வாம் அஹம்' என்னும் வரை சூக்தமாம். இதனால், பிரசாபதி, இராக்கதரைக் கொன்றனன்; ஆதலின், இவைகளால் உண்டாகிய அக்கினியும் இராக்கதரைக் கொல்கின்றது என்பதாம்.

அரசஞ்சமித்து வைப்பதை விதிக்கின்றது.

பிராமணம்—5

आश्वत्थीमा दधात्यश्वत्थो वै वनस्पतीनाꣳ सपत्नसाहो विजित्यै ।

என்பது.

உரை.

குதிரை வடிவாய் அக்கினி இதில் இருத்தலின் அரசஞ்சமித்து பகைவரை அடக்குகின்றது. இதனால் வெற்றி யுண்டாகின்றது என்பதாம்.

சோத்தைக்களாச் சமித்துவைத்தலின் விதி.

பிராமணம்—6

वैकङ्कतीमा दधाति भा एवाव रुन्धे ।

என்பது.

உரை.

இதனால், மிகுந்த ஒளி யுண்டாகின்றது என்பதாம்.

வன்னிச் சமித்துவைத்தலின் விதி.

பிராமணம்—7

शमीमयीमा दधाति शान्त्यै ।

என்பது.

தரித்துக்கோள்ளுதல்)

உரை.

இதனல் சூடு தணிகின்றது என்பதாம்.

எசமானனுக்கு ஓதிவைக்க வேண்டிய மந்திரங்களை விதிக்கின்றது.

பிராமணம்—8

सꣳशितं मे ब्रह्मोदेषां बाहू अतिरमित्युत्तमे औदुम्बरी वाचयति ब्रह्मणैव क्षत्त्रꣳ सꣳ श्यति क्षत्त्रेण ब्रह्म तस्माद्ब्राह्मणो राजन्यवानत्यन्यं ब्राह्मणं तस्माद्राजन्यो ब्राह्मणवानत्यन्यꣳ राजन्यं ।

என்பது.

உரை.

இராக்கதர்களைக் கொல்வதற்குரிய ஈற்றிலுள்ள சூக்த மந்திரங்களிரண்டையும் எசமானன் ஓதும்படி செய்தல்வேண்டும். ஈண்டு, அத்திமரச் சுப்பில்களிரண்டையும் மந்திரமின்றி வைத்தல் வேண்டுமென்பது எஞ்சிநின்றது. மற்றும், முதல் மந்திரத்தில், அந்தணன் அரசர்களுக்குப் போதிக்கும் முறை கூறப்பட்டிருத்தலால் ஒருவர்க்கொருவர் உபகாரஞ் செய்து கொள்ளத் தக்கவர்கள் என்பதும் உணரப் படுகின்றது. ஆதலின், அந்தணப் புரோகிதனல் அரசன் போதிக்கப்படில் அரசநீதி ஒழுங்குபடுகின்றது. அரசனல் அந்தணன் நியமிக்கப் படுவானேல், அவனுடைய ஒழுக்கம் ஒழுங்காகின்றது. இவ்வாறில்லாத இருவர்களும் தாழ்ந்துபோய் விடுவார்கள் என்பதாம்.

பொன் தகட்டைக் கட்டிகொள்ளுதலின் விதி.

பிராமணம்—9

मृत्युर्वा एष यदग्निरमृतꣳ हिरण्यꣳ रुक्ममन्तरं प्रति मुञ्चतेऽमृतमेव मृत्यो-रन्तर्धत्ते ।

என்பது.

உரை.

அக்கினி, சுடுவதால் மிருத்துவாயிருக்கின்றது, பொன் அக்கினியிற் காய்ச்சினும் சாம்பராகாமையின் அமுதமுமாம். ஆதலின், பொன்தகட்டை கழுத்தில்கட்டி மார்பில் தொங்கவிட்டுக் கொள்ளில் அமுதமாகிய பொன்னல் நாபிக்கி மேலுள்ள மிருத்துவாகிய உகாத்தீ தடுக்கப்பட்டதாகின்றது. என்பதாம்.

பொன்தகடு வட்டமாய் இருபத்தோருதுளைகளை யுடையதாயிருத்தல் வேண்டு மென்னும் விதி.

பிராமணம்—10

एकविꣳशतिनिर्बाधो भवत्येकविꣳशतिर्वै देवलोका द्वादश मासाः पञ्चर्तवस्त्रय इमे लोका असावादित्य एकविꣳश एतावन्तो वै देवलोकास्तेभ्यएव भ्रातृव्यमन्तरेति ।

என்பது.

உரை.

இது அம்மைகள் போன்றுள்ள இருபத்தொரு புள்ளித்துளைக் குறிகளாகிற அவயவங்களை யுடையதாயிருத்தல் வேண்டும். ஏனெனின்? போகங்கட்குரிய மாதங்கள் முதல், ஆதித்தன் ஈறுயுள்ள இருபத்தொரு வுலகங்களினுமுள்ள பகைவர்களைத் தடுக்கின்றன வாதலின் என்பதாம்.

கூறிய இருபத்தோரு புள்ளிகளைப் புகழ்கின்றது.

பிராமணம்—11

निर्बाधैर्वै देवा असुरान्निर्बाधेऽकुर्वत तन्निर्बाधानां निर्बाधत्वं निर्बाधी भवति भ्रातृव्यानेव निर्बाधे कुरुते सावित्रिया प्रति मुञ्चते प्रसूत्यै ।

என்பது.

உரை.

முன், தோல்கத்தியைக்கொண்டே தேவர்கள் தோலின்மேல் வெண்கலத்தால் வடுக்கள் செய்துவைத்து அதனல் அசுரர்கள் பூமியில் விழும்படி செய்தனர். ஆதலின், இப்போதும் இவ்வண்ணம் பொன்தகட்டில் வடுக்கள் செய்துவைக்கில் அசுரர்கள் ஒழிவார்கள் என்பதாம்.

மான்தோலைக் கட்டிக்கொள்ளலின் விதி.

பிராமணம்—12

नक्तोषासेत्युत्तरयाऽहोरात्राभ्यामेवैनमुद्यच्छते ।

என்பது.

உரை.

மான் தோலைக்கழுத்திற் கட்டிக்கொள்ளில், அம்மந்திரத்திற் கூறப்பட்ட இரவு பகல்களால் மேலே தூக்கிக்கொள்ளப் பட்டதாகின்றது என்பதாம்.

தரித்துக்கொள்ளுதல்)

அம்மந்திரத்தின் நான்காம் பாதத்தில் உள்ள, 'தேவ' என்னுஞ் சொல் பிராணனைக் குறிக்கின்ற தென்பதை விளக்குகின்றது.

பிராமணம்—13

देवा अग्निं धारयन्द्रविणोदा इत्याह प्राणा वै देवा द्रविणोदा अहोरात्राभ्या-मेवैनमुद्यत्य प्राणैर्दाधार ।

என்பது.

உரை.

இதில், 'தேவன்' என்றது பிராணன், பகலிரவுகளாற்றூக்கப்பட்டு பிராணனால் தாங்கப்படுகின்றது மான்தோல் என்பதாம்.

பொன்தகடு, உறி, மான்தோல் என்பவைகளைக் கட்டிக் கொள்ளும்போது உட்காரல் வேண்டுமென்பதை விதிக்கின்றது.

பிராமணம்—14

आसीनः प्रति मुञ्चते तस्मादासीनाः प्रजाः प्रजायन्ते ।

என்பது.

உரை.

இங்கு, உட்காருதலால், உலகில், உயிர்கள் உட்கார்ந்திருந்து பிறக்கின்றன என்பதாம்.

மான்தோல், உறிக்கு வெளியிலிருத்தல் வேண்டுமென்று விதிக்கின்றது.

பிராமணம்—15

कृष्णाजिनमुत्तरं तेजो वै हिरण्यं ब्रह्म कृष्णाजिनं तेजसा चैवैनं ब्रह्मणा-चोभयतः परि गृह्णाति ।

என்பது.

உரை.

ஒளிவடிவாகிய பொன்னும், வேதவடிவாகிய மான்தோலாலும் நடுவிலுள்ள உகாத்தீ ஏற்றுக்கொள்ளப் பட்டதாகின்றது என்பதாம்.

உகாத்தீயுள்ள உறியை தூக்கிக் கட்டிக்கொள்வதற்குரிய கயிறுகள் இத்தனை என்பதை விதிக்கின்றது.

பிராமணம்—16

षड्उद्यामꣳ शिक्यं भवति षड्वा ऋतव ऋतुभिरेवैनमुद्यच्छते ।

என்பது.

உரை.

இருதுக்கள் ஆருனதால் ஆறு கயிறுகளால் தூக்கிக்கட்டில். ஆறு இருதுக்களாலும் எடுத்துத் தூக்கிக் கட்டிக்கொண்டதாகும் என்பதாம்.

இதில், மற்றொரு பட்சத்தை விதிக்கின்றது.

பிராமணம்—17

यद्द्वादशोद्यामः संवत्सरेणैव ।

என்பது.

உரை.

பன்னிரண்டு கயிறுகளானதால், பன்னிரண்டு மாதங்களாலும் தூக்கிக் கட்டிக்கொண்டதாகின்றது என்பதாம்.

உறி எதனுற் செய்யவேண்டும் என்பதை விதிக்கின்றது.

பிராமணம்—18

मौञ्जं भवत्यूर्ग्वै मुञ्जा ऊर्जैवैनः समर्धयति ।

என்பது.

உரை.

முஞ்சம் புல்லாற் செய்தல் வேண்டுமென்பதாம். செய்யில் உணவுப் பொருளை நிறைய அடைகின்றான் என்பதாம்.

உகாத்தீயைப் பார்த்தல் வேண்டுமென்னும் மந்திரத்தை விநியோகிக்கின்றது.

பிராமணம்—19

सुपर्णोऽसि गरुत्मानित्यवेक्षते रूपमेवास्यैतन्महिमानं व्याचष्टे ।

என்பது.

உரை.

பார்க்கும்போது அதனுடைய உருவமே அதன் மகிமையைச் சொல்லுகின்றது, வேறே ஒன்றுங் கூறவேண்டியதில்லை என்பதாம்.

தரித்துக்கொள்ளுதல்)

உகாத்தீயை எடுத்துக்கொண்டு எழுந்திருத்தற்குரிய மந்திரம் சுவர்க்கமாகிய பொருளை மேற்கொண்டதென்று விளக்குகின்றது.

பிராமணம்—20

दिवं गच्छ सुवः पतेत्याह सुवर्गमेवैनं लोकं गमयति ।

என்பது.

மேலே எடுத்துக் கொண்டெழுதலால் மேலுலகமாகிய சுவர்க்கத்தை யடைவிக்கின்றதாகின்றது என்பதாம்.

பத்தாவது அநுவாகம்

முற்றிற்று.

பதினோராம் அநுவாகம்

விடயச் சுருக்கம்

समिद्ध इत्येवमाद्या अश्वस्याऽऽप्रिय ईरिताः ।
आप्रियस्युः प्रयाजानां याज्या एका दशात्रताः ॥
अश्वमेधाख्यकाण्डे ता विनियुक्तास्स्फुटं श्रुतम् ॥

இவ்வநுவாகத்தில், அசுமேதத்திற் சொல்லவேண்டிய, ஆப்ரி. என்னும். பிரயாஜைகளின், யாஜ்யை சொல்லப்படுகிறது என்பது.

ஐந்தாங்காண்டம் முதற்பிரபாடகம்

பதினோராம் அநுவாகம்

அசுவமேதத்தின் பிரயாஜ யாஜ்யங்களைக் கூறுமந்திரங்கள்.

மூன்று பஞ்சாதிக்குமேல் நாற்பத்திரண்டு பதங்களைக் கொண்டது.

**समिद्धो अञ्जन्कृदरं मतीनां घृतमग्ने मधुमत्पिन्वमानः । वाजी
वहन्वाजिनं जातवेदो देवानां वक्षि प्रियमा सधस्थम् । घृतेनाञ्जन्त्सं
पथो देवयानान्प्रजानन्वाज्यप्येतु देवान् । अनु त्वा सप्ते प्रदिश
स्सचन्ताꣳ स्वधामस्मै यजमानाय धेहि । ईड्यश्चासि वन्द्यश्च वाजिन्ना-
शुश्चासि मेध्यश्च सप्ते । अग्निष्ट्वा [५६] देवैर्वसुभिस्सजोषाः प्रीतं
वह्निं वहतु जातवेदाः । स्तीर्णं बर्हिः सुष्टरीमा जुषाणोरु पृथु प्रथ-**

मानं पृथिव्याम् । देवेभिर्युक्तमदितिस्सजोषास्स्योनं कृण्वाना सुविते दधातु । एता उ वस्सुभगा विश्वरूपा वि पक्षोभिश्श्रयमाणा उदातैः । ऋष्वास्सतीः कवषश्शुम्भमाना द्वारो देवीस्सुप्रायणा भवन्तु । अन्तरा मित्रावरुणाचरन्ती मुखं यज्ञानामभि संविदाने । उषासावाम् [५७] सुहिरण्ये सुशिल्पे ऋतस्य योनाविह सादयामि । प्रथमा वां सरथिना सुवर्णा देवौ पश्यन्तौ भुवनानि विश्वा । अपिप्रयं चोदना वां मिमाना होतारा ज्योतिः प्रदिशा दिशन्ता । आदित्यैर्नो भारती वष्टुयज्ञं सरस्वती सह रुद्रैर्न आवीत् । इडोपहूता वसुभिस्सजोषा यज्ञं नो देवीरमृतेषु धत्त । त्वष्टा वीरं देवकामं जजान त्वष्टुरर्वा जायत आशुरश्वः [५८] त्वष्टेदं विश्वं भुवनं जजान बहोः कर्तारमिह यक्षि होतः । अश्वोघृतेन त्मन्या समक्त उप देवां ऋतुशः पाथ एतु । वनस्पतिर्देवलोकं प्रजानन्नग्निना हव्या स्वदितानि वक्षत् । प्रजापतेस्तपसा वावृधानः सद्यो जातो दधिषे यज्ञमग्ने । स्वाहाकृतेन हविषा पुरोगा याहि साध्या हविरदन्तु देवाः [५९] ॥ अग्निष्टा वामश्वो द्विचत्वारिंशच्च ॥ ॥ ११ ॥

அநுவாகத்தலைப்புச் சொற்களைக் கொண்ட தொகை:—

सावित्राणि, व्यृद्धं, उत्क्राम, देवस्यखनति, क्रूरं, वारुणः, सप्तभिः, एकविंशत्या, षड्भिः, नहंस, समिद्धो, अञ्जन्नेकादश ॥ ११ ॥

பஞ்சாதி எண்கள்:—

सावित्राण्युत्क्रामक्रूरं वारुणः पशवः स्युर्नहंस नव पञ्चाशत् ॥ [५९]

யாஜ்யைகள்)

ஈண்டு அசுவமேதப் பிரகரணத்தில், "ஸமித்தோ அஞ்ஜன்" என்பது முதலியன குதிரையின் ஆப்பிரிய மந்திரங்கள் எனக் கூறப்பட்டிருக்கின்றன.

இருக்குமந்திரம்—1

समिद्धो अञ्जन्कृदरं मतीनां घृतमग्ने मधुमत्पिन्वमानः । वाजी वहन्वाजिनं जातवेदो देवानां वक्षि प्रियमा सधस्थम् ।

என்பது.

உரை.

மிகுந்த ஒளியுடையதும், உணவுப் பொருளைத் தேடுவதுமாகிய சாதவேதா என்னும் அக்கினியே! நீ, புத்திகளின் இருப்பிடத்தை விளக்கி, இன்சுவையுடைய நெய்யை அருந்தி, தேவர்கட்கு அவிகளை ஏற்றுச்சென்று, எல்லாப் பசுக்கட்கும் வேறுயுள்ளதும், தேவர்கட்கு மிகப்பிரியமுடையதுமாகிய இக்குதிரை, தேவர்களை அடையும்படி செய்வாயாக என்பதாம்.

இருக்குமந்திரம்—2

घृतेनाञ्जन्त्सं पथो देवयानान्प्रजानन्वाज्यप्येतु देवान् । अनु त्वा सप्ते प्रदिशस्सचन्ताꣳ स्वधामस्मै यजमानाय धेहि ।

என்பது.

உரை.

இக்குதிரை, தன்மேல் பூசிபுள்ள நெய்யை தேவலோக மார்க்கங்களில் தெளித்துக் கொண்டு, அதாவது நெய்க்குறியால் இது தேவலோக வழியென்று உணரும்படி செய்துகொண்டு தேவர்களை அடைக. குதிரையே! உன்னைப்பற்றி எல்லாத்திசைகளும் தேவர்களை யடைவதற்கு உதவிபுரிவனவாகுக. நீயும், இவ்வேள்வித் தலைவன்பொருட்டு சுவதாகாரத்தால் உபலட்சிதமாகிய அன்னத்தை (உணவுப்பொருளை)த் தேடுவாயாக என்பதாம்.

இருக்குமந்திரம்—3

ईड्यश्चासि वन्द्यश्च वाजिन्नाशुश्चासि मेध्यश्च सप्ते । अग्निष्ट्वा देवैर्वसुभिस्सजोषाः प्रीतं वह्निं वहतु जातवेदाः ।

என்பது.

உரை.

குதிரையே! நீ, எம்மால் போற்றத்தக்கதும், வணங்கத்தக்கதுமாக இருக்கின்றாய். மற்றும், குதிரையே! நீ, விரைவிற்செல்வதும், வேள்விக்குரியதுமாக இருக்கின்றாய். அஃதன்றியும், உலகம் வாழ்வதற்குக் காரணர்களாகிய தேவர்களுடன் ஒத்தபிரீதியுள்ள சாதவேதா என்னும் அக்கினி, பிரியமானவற்றைத் தாங்குவதற்குரிய உன்னை ஏற்றுக்கொண்டு செல்க என்பதாம்.

இருக்குமந்திரம்—4

**स्तीर्णं बर्हिस्सुष्टरीमा जुषाणोरु पृथु प्रथमानं पृथिव्याम् । देवेभिर्युक्तमदिति-
स्सजोषास्स्योनं कृण्वाना सुविते दधातु ।**

என்பது.

உரை.

தருப்பைகளனைத்தையும் அநுபவிக்கின்ற அதிதிதேவி, கொல்லும்போது குதிரையைக் கிடத்தி வைப்பதற்குரியதும், விரிக்கத்தக்கதும், பூமியெங்கும் பரந்திருக்கின்றதுமாகிய தருப்பையால் சுகந்தரும் இடத்தைச் செய்து அதில் இக்குதிரையை நிறுத்திவைப்பாளாக என்பதாம்.

இருக்குமந்திரம்—5

**एता उ वस्सुभगा विश्वरूपा वि पक्षोभिश्श्रयमाणा उदातैः । ऋष्वास्सतीः
कवषश्शुम्भमाना द्वारो देवीस्सुप्रायणा भवन्तु ।**

என்பது.

உரை.

வேள்விச் செயலாளர்கள், வேள்வித்தலைவன், வேட்போன் என்னுமிவர்கட்குச் சௌபாக்கியத்தை யளிக்கின்றவர்களும், பல்வகைவடிவங்களையுடையவர்களும், இடையறாது செல்லும் வாகனங்களாகிற சிறகுகளால் மேலே போகத்தக்கவர்களும், போக்குவரத்துகளையுடைய கதவுகளால் அழகுற்றவர்களுமான (துவாரமென்னுந்) வாசலென்னுந் தேவிமார்கள், குதிரைகளை நன்கு அடைகின்றவர்களாகுக என்பதாம்.

இருக்குமந்திரம்—6

**अन्तरा मित्रावरुणाचरन्ती मुखं यज्ञानामभि संविदाने । उषासावाँ सुहिरण्ये
सुशिल्पे ऋतस्य योनाविह सादयामि ।**

என்பது.

யாஜ்யைகள்)

உரை.

உஷாக்காலம் என்பதால் உபலக்ஷிதமான பகலிரவுத் தேவதைகளே! மித்திராவருண வடிவுடையவர்களும், பிரமாண்டத்திற்குள் திரிகின்றவர்களும், வேள்வித் தொடக்கத்தை யுணர்ந்து ஒன்றற்கொன்று ஐக்கியத்தை யடைந்தவர்களும், அழகிய பொன்னொளிபோன்ற இரவிமதி ஒளிகளையுடையவர்களும், எல்லா வியவகாரங்கட்குக் காரணமாதலின் அழகிய இயல்புகளுடன் கூடியவர்களுமான உங்களை, வேள்விக்குக் காரணமாகிய இக்குதிரையின்மீது வைக்கின்றேன் என்பதாம்.

இருக்குமந்திரம்—7

प्रथमा वाꣳ सरथिना सुवर्णा देवौ पश्यन्तौ भुवनानि विश्वा।अपिप्रयं चोदना वां मिमाना होतारा ज्योतिः प्रदिशा दिशन्ता ।

என்பது.

உரை.

வேள்வித் தலைவிகளே! உங்களிருவரின் பொருட்டு, முக்கியமானவர்களும், ஒத்ததோர் இரதத்தை யுடையவர்களும், நல்ல நிறங்களையுடையவர்களும், தேவதைகளும், எல்லாவுலகங்களையும் பார்க்கின்றவர்களும், தமக்கு விதித்த கருமங்களை நன்குணர்ந்தவர்களும், திசைகளில் தமது ஒளிகளைப் பரப்புகின்றவர்களுமான தெய்வ ஹோதாக்களைப் பிரியப் படுத்துகின்றேன் என்பதாம்.

இருக்குமந்திரம்—8

आदित्यैर्नो भारती वष्टुयज्ञꣳ सरस्वती सह रुद्रैर्न आवीत्। इडोपहूता वसुभि स्सजोषा यज्ञं नो देवीरमृतेषु धत्त ।

என்பது.

உரை.

பாரதி என்னுந் தேவி, ஆதித்தர்களுடன்கூட எமது வேள்வியை விரும்புவாளாக. சரசுவதி என்னுந்தேவி உருத்திரர்களுடன்கூட எம்மைப் பாதுகாப்பாளாக. இடை என்னுந்தேவி, வசுக்களுடன்கூட ஒத்தபிரீதியுடையாளாய் அநுக்ஞைதந்து எம்மைப் பரிபாலிப்பாளாக. தேவிகளே! நீங்கள், எமது வேள்வியை, இறப்பிலாத தேவர்களிடத்தில் நிலைநாட்டி வைப்பீர்களாக என்பதாம்.

இருக்குமந்திரம் —9

त्वष्टा वीरं देवकामं जजान त्वष्टुरर्वा जायत आशुरश्वः। त्वष्टेदं विश्वं भुवनं जजान बहोः कर्तारमिह यक्षि होतः।

என்பது.

உரை.

'துவஷ்டா' என்னும் எத்தேவன், தேவர்களும் விரும்பும் கருமங்களில் வீரனாகிய புத்திரனை யுண்டாக்கினனோ, அவனிடத்திலிருந்து விரைவிற் செல்லுங் குதிரை உண்டாகின்றது. விரிப்பதிலென்? இவ்வுலகனைத்தையும் துவஷ்டா என்பவன் உண்டாக்கினன். ஹோதாவே! நீ, விரிந்த வுலகைப் படைக்கின்ற துவஷ்டா என்னுந் தேவனை இக்கருமத்தில் ஆராதிப்பாயாக என்பதாம்.

இருக்குமந்திரம்—10

अश्वो घृतेन त्मन्या समक्त उप देवाꣳ ऋतुशः पाथ एतु। वनस्पतिर्देवलोकं प्रजानन्नग्निना हव्या स्वदितानि वक्षत्।

என்பது.

உரை.

இக்குதிரை இயற்கையிலேயே நெய் தடவியதுபோல் தேவர்கட்கு உணவுப் பொருளாகி, அவ் விருதுகால்ங்களில் தேவர்களையடைக. வனஸ்பதி தேவதை தேவலோகத்தை யடைந்து அக்கினியுடன்கூட இன்சுவையுடைய அவிகளைத் தேவர்கட்கு ஏற்றுக்கொண்டு செல்க என்பதாம்.

இருக்குமந்திரம்—11

प्रजापतेस्तपसा वावृधानस्सद्यो जातो दधिषे यज्ञमग्ने। स्वाहाकृतेन हविषा पुरोगा याहि साध्या हविरदन्तु देवाः॥

என்பது.

உரை.

அக்கினியே! நீ, உலகிற்கிறைவனாகிய பரமேசுரனுடைய பரியாலோசனையால், வளர்கின்றவனாய், தோன்றுதன் மாத்திரத்தானே வேள்வியைப் பரிபாலிப்பாயாக. சுவாகாகாரத்தாற் செய்த அவியுடன்கூட முதலில் தேவர்களை யடைவாயாக. எம்மால் வழிபடுந் தேவர்கள் யாம் அளித்த அவியை அருந்துவார்களாக என்பதாம்.

பதினோராம் அநுவாகம்
முற்றிற்று.

முதலாம் பிரபாடகமும் முடிந்தது.

ஐந்தாங்காண்டம் இரண்டாம்பிரபாடகம்

விடயச் சுருக்கம்.

उख्याग्निः प्रथमेप्रोक्तो द्वितीये चित्युपक्रमः ।
द्वादशात्रानुवाकास्युरासन्धां वह्व्यवस्थितिः ॥ १ ॥
वात्सप्रेणाप्युपस्थानं प्रथमेसमुदीरितम् ।
द्वितीये तूख्यनयनं गार्हपत्यं चिनोतिहि ॥ २ ॥
तृतीयेतु चतुर्थेतु उख्याग्नि तत्र संवपेत् ।
पञ्चमे कृषतिक्षेत्रं षष्ठेऽत्र सिकतादिकम् ॥ ३ ॥
वपेद्रुक्माद्युपादध्यात्सप्तमे चाष्टमेपुनः ।
स्थापयेत्स्वयमातृण्णामुखादीन्नवमे तथा ॥ ४ ॥
अपस्याश्वप्राणभृतस्तथाऽपानभृतश्चितौ ।
प्रथमायामुपादध्याद्दशमे तत्समीरितम् ॥ ५ ॥
एकादशद्वादशौतु विज्ञेया वाश्वमेधिकौ ।
अश्वस्यासिपथाः कल्प्या गायत्रीत्यादिमन्त्रकैः ॥ ६ ॥

முதற் பிரபாடகத்தில். உகா என்னும் மண் தொட்டியில் தீ யுண்டாக்கல் சொல்லப்பட்டது. இவ் விரண்டாம் பிரபாடகத்தில், சிதி (செங்கல் அடுக்கு) சொல்லப்படுகின்றது. அவற்றுள், முதல் அநுவாகத்தில். நாற்காலியில் தீவைத்தலும், 'வாத்ஸப்ரம்' என்னும், மந்திரங்களாற் போற்றுவதையும், இரண்டாவது அநுவாகத்தில். தீத்தொட்டியை யாகசாலைக்கி எடுத்துச் செல்லுதலும். மூன்றுவது அநுவாகத்தில், காருகபத்ய சிதியையும். நான்காவது அநுவாகத்தில், அக்காருகபத்ய சிதியில் உகாவில் உள்ள அக்கினியைக் கொட்டிவிடலும், ஐந்தாவது அநுவாகத்தில் சயனஞ் செய்யுமிடத்தை உழுவதையும், ஆறுவதில், மணல் முதலியவற்றை மகாக்கினி சயனஞ் செய்யுமிடத்திற் கொட்டுவதையும், ஏழாவதில், பொன்தகடு முதலியவற்றை வைத்தலும். எட்டாவதில், இயற்கைத் துளையுள்ள சுக்கான் கல்லைவைத்தலும். ஒன்பதாவதில், உகையை வைத்தலையும். பத்தாவதில், முதல் அடுக்கில் வைக்கவேண்டிய, அபஸ்யம் முதலிய கல்களை வைத்தலையும். பதினொன்றுவதில், அசுவமேதத்தில் குதிரையின் உடம்பில் ஊசிகளாற் கோடுகிழிப்பதையும், பன்னிரண்டாவதில் குதிரையை அறுத்தல் என்பவைகளையுங் கூறுகின்றது என்பது.

—

ஐந்தாங்காண்டம் இரண்டாம்பிரபாடகம்

முதலாம் அநுவாகம்.

நாற்காலியில் உகாவை வைப்பதையும், அதைப் போற்றுவதையுங் கூறும் பிராமணங்கள்.

ஆறுபஞ்சாதிக்குமேல் நாற்பத்திரண்டு பதங்களைக் கொண்டது.

विष्णुमुखा वै देवाश्छन्दोभिरिमाँल्लोकाननपजय्यमभ्यजयन्
यद्विष्णुक्रमान्क्रमते विष्णुरेव भूत्वा यजमानश्छन्दोभिरिमा
ल्लोँकाननपजय्यमभिजयति विष्णोः क्रमोऽस्यभिमातिहेत्याह
गायत्री वै पृथिवी त्रैष्टुभमन्तरिक्षञ्जागती द्यौरानुष्टुभीर्दिशश्छन्दोभि
रेवैमा ल्लोँकान् यथापूर्वमभि जयति प्रजापतिरग्निमसृजत सोऽस्मा-
त्सृष्टः [१] पराङैत्तमेतयाऽन्वै दक्रन्ददिति तया वै सोऽग्नेः
प्रियन्धामावारुन्ध यदेतामन्वाहाग्ने रेवैतया प्रियन्धामावरुन्ध
ईश्वरोवा एष पराङ्प्रदघो योविष्णु क्रमान्क्रमते चतसृभिरावर्तते
चत्वारि छन्दाꣳसि छन्दाꣳसि खलु वा अग्नेः प्रिया तनूः प्रिया-
मेवास्य तनुवमभि [२] पर्यावर्तते दक्षिणा पर्यावर्तते स्वमेव
वीर्यमनु पर्यावर्तते तस्माद्दक्षिणोऽर्ध आत्मनो वीर्यावत्तरोऽथो
आदित्यस्यै वावृतमनु पर्यावर्तते शुनश्शेप माजीगर्तिं वरुणोऽ-
गृह्णात्स एतां वारुणीमपश्यत्तया वै स आत्मानं वरुणपाशा
दमुञ्च द्वरुणो वा एतङ्गृह्णाति य उखां प्रतिमुञ्चत उदुत्तमं वरुण-
पाशमस्मदित्याहात्मानमेवैतया [३] वरुणपाशान्मुञ्चत्यात्वाऽहार्ष
मित्याहाह्येनꣳ हरति ध्रुवस्तिष्ठाविचाचलिरित्याह प्रतिष्ठित्यै
विशस्त्वा सर्वा वाञ्छन्त्वित्याह विशैवैनꣳ समर्धय त्यस्मिन्राष्ट्र

செல்லுதலும் போற்றலும்)

मधिश्रयेत्याह राष्ट्रमेवास्मिन्ध्रुवमकर्यङ्कामयेत राष्ट्रꣳस्यादिति तं मनसाध्यायेद्राष्ट्रमेवभवति [४] अग्ने बृहन्नुषसामूर्ध्वो अस्थादित्याहाग्रमेवैनꣳ समानानाङ्करोति निर्जग्मिवान्तमस इत्याह तम एवास्मादपहन्ति ज्योतिषाऽगादित्याह ज्योतिरेवास्मिन्दधाति चतसृभिस्सादयति चत्वारि छन्दाꣳसि छन्दोभिरेवातिच्छन्दसोत्तमयावर्ष्मवा एषा छन्दसां य दतिच्छन्दावर्ष्मैवैनꣳसमानानाङ्करोति सद्वती [५] भवति सत्त्वमेवैनङ्गमयति वात्सप्रेणोपतिष्ठत एतेन वै वत्सप्रीर्भालन्दनोऽग्नेः प्रियन्धामावारुन्धाग्नेरेवैतेन प्रियन्धामावरुन्ध एकादशं भवत्येकधैवयजमाने वीर्यन्दधाति स्तोमेनवैदेवा अस्मिल्लोँक आर्ध्नुवञ्छन्दोभि रमुष्मिन्त्स्तोमस्येव खलु वा एतद्रूपं यद्वात्सप्रेणोपतिष्ठते [६] इममेव तेनलोकमभिजयति यद्विष्णुक्रमान्क्रमतेऽमुमेव तैर्लोकमभिजयति पूर्वेद्युः प्रक्रामत्युत्तरेद्युरुपतिष्ठते तस्माद्योगेऽन्यासां प्रजानां मनः क्षेमेऽन्यासान्तस्माद्यायावरः क्षेम्यस्येशे तस्माद्यायावरः क्षेम्यमध्यवस्यति मुष्टीकरोति वाचंयच्छति यज्ञस्य धृत्यै ॥ [७] सृष्टो (१)ऽस्येतया भवति सद्वत्युपतिष्ठतेद्विचत्वारिꣳशच ॥ १ ॥

இதில், உகாத்தியை நாற்காலியின்மீது வைத்தல் முதலியவைகள் கூறப்படுகின்றன.

அவற்றுள், முதலில், உகாவை எடுத்துக்கொண்டு நடத்தலாகிய விஷ்ணுக் கிரமத்தை விதிக்கின்றது.

பிராமணம்—1

विष्णुमुखा वै देवाश्छन्दोभिरिमाल्लोँका ननपजय्य मभ्यजयन् यद्विष्णुक्रमान्क्रमते विष्णुरेव भूत्वा यजमानश्छन्दोभिरिमाल्लोँका ननपजय्य मभि-

(உகாவை எடுத்துக்கொண்டு

जयति विष्णोः क्रमोऽस्यभिमातिहेत्याह गायत्री वै पृथिवी त्रैष्टुभमन्तरिक्षञ्जागतीद्यौरानुष्टुभीर्दिशश्छन्दोभि रेवैमा ल्लोँकान् यथापूर्वमभि जयति ।

என்பது.

உரை.

முன்பு, தேவர்கள், தமக்குள் விஷ்ணுவே முதன்மையானவர் என்று வைத்துக்கொண்டு சந்தங்களை அபிமானிக்குந் தேவதைகளுடன்கூடி, பிறரால் வெல்லமுடியாதபடி இவ்வுலகங்களை வென்றனர். இதனால், எசமானனும் விஷ்ணுக்கிரமமென்னுமிதனால் வெல்கின்றான். ஈண்டு, காயத்திரி முதலான சந்தங்களின் தேவதைகள், மண்ணுலக முதலியவைகட்கு இறைகளாதலின் அவைகளுடன் கூடியதும் அமையும் என்பது கருத்து என்பதாம்.

இம்மந்திரத்தைத் தொடர்ந்து செபிக்கவேண்டியதை விதிக்கின்றது.

பிராமணம்—2

प्रजापतिरग्निमसृजत सोऽस्मात्सृष्टः पराङैत्तमेतयाऽऽन्वै दक्रन्ददिति तया वै सोऽग्नेः प्रियन्धामावारुन्ध यदेतामन्वाहाग्ने रेवैतया प्रियन्धामावरुन्धे ।

என்பது.

உரை.

பிரமன் அக்கினியை உண்டாக்கினன், பிறகு, அவ்வக்கினி, பிரமாவினிடத்திலிருந்து திரும்பிப்பாராமல் ஓடிவிட்டது, பிறகு, பிரமன், இந்த இருக்கு மந்திரத்தால் அக்கினியைப் பின்பற்றிக் கொண்டுபோய் இந்த இருக்கு மந்திரத்தாலேயே அக்கினிக்குப் பிரியமாகிய இடத்தை அடைந்தனன். ஆதலின், இம்மந்திரத்தைச் செபிக்கில், அக்கினிக்குப் பிரியமாகிய இடங்கிடைத்தற்குக் காரணமாகும் என்பதாம்.

இம்மந்திரங்களால், திரும்பிவரல் வேண்டுமேன்பதை விதிக்கின்றது.

பிராமணம்—3

ईश्वरोवा एष पराङ्प्रदघो योविष्णु क्रमान्क्रमते चतसृभिरावर्तते चत्वारि छन्दाꣳसि छन्दाꣳसि खलु वा अग्नेः प्रिया तनूः प्रियामेवास्य तनुवमभि पर्यावर्तते ।

என்பது.

செல்லுதலும் போற்றுதலும்)

உரை.

விஷ்ணுக்கிரமமென்னும் இவ்வாறு நடப்பதை ஆசரிக்கின்ற வேள்வித் தலைவன், மீண்டுந்திரும்பாததாகிய ஈசுரத்தன்மையை யடைகின்றான். ஆகையால், ஆவிருத்தி சித்தியாதற்பொருட்டு நான்கு மந்திரங்களால் ஆவிருத்தி (திரும்பல்) செய்தல் வேண்டும். ஈண்டு, நான்கு மந்திரங்களானதால் நான்கு சந்தங்களாகிற அக்கினியின் பிரியவுடம்பால் ஆவிருத்தி செய்ததாயிற்று என்பதையுணர்க. கட்டப்பாறையை எடுத்தற்கு நான்கு சந்தங்களையுங் கொண்டதால் அவை அக்கினியின் தேகமாம் என்பதாம்.

திரும்பிவருதல் வலமாக வரல் வேண்டுமென விதித்தல்.

பிராமணம்—4

दक्षिणा पर्यावर्तते स्वमेव वीर्यमनु पर्यावर्तते तस्माद्दक्षिणाऽर्ध आत्मनो वीर्यावत्तरोऽथो आदित्यस्यैवावृतमनु पर्यावर्तते ।

என்பது.

உரை.

புருடர்களுக்கு வலது பக்கத்தில் வன்மை மிக்க வீரியமிருத்தலால் வலதுபுறமாகத் திரும்புதலாம். இதுபற்றியே உலகிலும் எல்லாவழக்கிற்கும் வலது கையே முன்னிற்கின்றது மற்றும் சூரியன், மேருவை வலமாக வருதல்பற்றியும் என்பதாம்.

இம்மந்திரத்தால் உறிக் கயிற்றை அவிழ்த்தல் வேண்டுமென்பதைக் கருத்தில் வைத்துக்கொண்டு மந்திரத்திலுள்ள வருணபாசப் பிரசங்கத்தை விளக்குகின்றது.

பிராமணம்—5

शुनश्शेपमाजीगर्तिं वरुणोऽगृह्णात्स एतांवारुणीमपश्यत्तया वै स आत्मानं वरुणपाशा दमुञ्च द्वरुणो वा एतङ्गृह्णाति य उखां प्रतिमुञ्चत उदुत्तमं वरुणपाशमस्मदित्याहात्मानमेवैतया वरुणपाशान्मुञ्चति ।

என்பது.

உரை.

அசிகர்த்தரின் புத்திரராகிய சுனச்சேபரிஷி, வருணனுற் கட்டப்பட்டனர். அதாதவது சலோதரம் என்னும் நோய்வாய்ப்பட்டனர் என்பதாம். அவர், "உதுத்தமம்" என்பது முதலிய இருக்கு மந்திரத்தைக் கண்டு

பிடித்து இதனல் வருணபாச வியாதியை நீக்கிக்கொண்டனர். ஆதலின், இம்மந்திரத்தால் உறிக்கயிற்றை அவிழ்க்கின்ற எசமானன் வருண பாசத்தினின்றும் விடுபடுகின்றுன் என்பதாம்.

'आत्वा' என்பது முதலிய மந்திரத்தின் முதற்பாதத்தில் அக்கினியைக் கொண்டு வருதல் வெளிப்படையாகத் தோற்றுகிற தென்பதை விளக்குகின்றது.

பிராமணம்—6

आत्वाऽहार्ष मित्याहाऽऽह्येनं हरति ।

என்பது.

உரை.

அக்கினியே! உன்னைக் கொண்டுவந்தனன் என்றதால், தீயைக்கொண்டு வருதல் வெளிப்படை என்பதாம்.

டை மந்திரத்தின் இரண்டாம் பாதத்தில் அன்வய வியதிரேக யுக்திகளால் நிலைமை சித்திக்கின்றது என்று கூறுகின்றது.

பிராமணம்—7

ध्रुवस्तिष्ठाविचाचलिरित्याह प्रतिष्ठित्यै ।

என்பது.

உரை.

அசைவின்றி நிலைத்திருப்பாயாக என்றதால், நிலைமை சித்தியாகின்றது என்பதாம்.

மூன்றும் பாதத்தில் பிரசையின் சித்தியம், நான்காம் பாதத்தில் இராச்சியத்தின் நிலையும் முறையாய் விளக்கப்படுகின்றன.

பிராமணம்—8

विशस्त्वा सर्वा वाञ्छन्त्वित्याह विशैवैनꣳ समर्धयत्यस्मिन्राष्ट्र मधिश्रये-त्याह राष्ट्रमेवास्मिन्ध्रुवमकः ।

என்பது.

செல்லுதலும் போற்றுதலும்)

உரை.

'எல்லாரும் உன்னை விரும்புவார்களாக' என்றதாலும், 'இவனிடத்தில் இராச்சியத்தை இருக்கச்செய்' என்றதாலும் பிரசையின் சித்தியும், இராச்சியத்தின் நிலையும் அடையப்படுகின்றன என்பதாம்.

நான்காம் பாதத்தை ஓதும்போது எசமானனுடைய விருப்பத்தைச் சிந்தித்தல் வேண்டுமென்று விதிக்கின்றது.

பிராமணம்—9

य ङ्कामयेत राष्ट्रꣳस्यादिति तं मनसाध्यायेद्राष्ट्रमेव भवति ।

என்பது.

உரை.

வேட்போன், நான்காம் பாதத்தை ஓதும்போது எசமானனுக்கு இராச்சியம் உண்டாதல் வேண்டுமென்று உத்தேசமிருக்கில், அதை மனதில் நினைத்தல் வேண்டுமென்பதாம்.

'அக்ரே பிருஹன்' என்பது முதலிய மந்திரத்தின் முற்பாதியின் மூன்று பகுதிகட்கு முறையே உரை கூறப்படுகின்றது.

பிராமணம்—10

अग्रे बृहन्नुषसामूर्ध्वो अस्थादित्याहाग्रमेवैनꣳ समानानाङ्करोति निर्जग्मिवान्तमस इत्याह तम एवास्मादपहन्ति ज्योतिषाऽगादित्याह ज्योतिरेवास्मिन्दधाति ।

என்பது.

உரை.

மேலேவைக்குக, இருட்டைப் போக்குக, ஒளியால் நிரப்புக என்றதால், தன்னைப் போன்றார்களுட் சிறந்தோனும், இருணீங்கப் பெற்றவனும், ஒளியுடையவனுமாகின்றான் என்பதாம்.

அக்கினியை வைப்பதை விதிக்கின்றது.

பிராமணம்—11

चतसृभिस्सादयति चत्वारि छन्दाꣳसि छन्दोभिरेव ।

என்பது.

(உகாவை எடுத்துக்கொண்டு

உரை.

நான்கு மந்திரங்களால் அக்கினியை வைத்தலால் நான்கு சந்தங்களாலும் வைத்ததாகின்றது என்பதாம்.

அவற்றுள், 'ஹம்ஸ:' என்பது முதலிய கடைசீ மந்திரத்திலுள்ள சந்த விசேஷத்தைப் புகழ்கின்றது.

பிராமணம்—12

अतिच्छन्दसोत्तमयावर्ष्मवा एषा छन्दसां य दतिच्छन्दावर्ष्मैवैनं॑ समानानाङ्करोति ।

என்பது.

உரை.

அதிச்சந்தத்தில் எல்லாச் சந்தங்களும் அடங்கி யிருத்தலின், அதிச்சந்தம் இருமந்திரவடிவாம், இத்தகைய சந்தமந்திரங்களால் தீயை வைத்தலால் இவ்வேள்வித் தலைவனை, ஒத்தநண்பர்களுள் உடம்பு போற்செய்கின்றது என்பதாம்.

உத்தமமாகிய கடைசீ மந்திரத்தில் 'சுசிஷத்' என்பது முதலிய அநேகம் 'சத்' என்னும் பொருள்கொண்ட சொற்களிருத்தலின் அவைகளைப் புகழ்கின்றது.

பிராமணம்—13

सद्वती भवति सत्त्वमेवैनङ्गमयति ।

என்பது.

உரை.

இம் மந்திரத்தில் சத் என்னுஞ் சொற்கள் மிகுந்திருத்தலின், இது, வேள்வித்தலைவனை, நெடுநாள் நிலைத்திருக்குந் தன்மையை யடையும்படி செய்கின்றது என்பதாம்.

உகாத் தீயைப் போற்றுதலின் விதி.

பிராமணம்—14

वात्सप्रेणोपतिष्ठत एतेनवै वत्सप्रीर्भालन्दनोऽग्नेः प्रियन्धामावारुन्धाग्नेरेवैतेन प्रियन्धामावरुन्धे ।

என்பது.

செல்லுதலும் போற்றுதலும்)

உரை.

வத்சப்பிரி, என்னும் இருடியானவர், இச்சூக்த மந்திரங்களை ஓதி அக்கினியைத் துதித்து அக்கினியின் பிரியமாகிய பதத்தையடைந்தனர். ஆதலின், வாத்சப்ரியம் என்னும் இச்சூக்த மந்திரங்களால் அக்கினியைத் துதிக்கில் அக்கினியின் பிரியபதத்தை யடைகின்றான் என்பதாம்

மேற்படி துதி மந்திரங்கள் பதினொன்றின் கூட்டம் என விதிக்கின்றது.

பிராமணம்—15

एकादशं भवत्येकधैव यजमाने वीर्यन्दधाति ।

என்பது.

உரை.

ஒருங்கே பதினொரு மந்திரங்களாலும் துதித்தலின் வீரியத்தை ஒருங்கே யடைகின்றான் என்பதாம்.

இச்சூக்தம், விஷ்ணுக்கிரமம் இரண்டும் இரண்டுலோகங்கட்குக் காரணம் என்பதைப் புகழ்கின்றது.

பிராமணம்—16

स्तोमेनवैदेवा अस्मिन्लोक आर्ध्नुवञ्छन्दोभि रमुष्मिन्स्तोमस्यैव खलु वा एतद्रूपं यद्वात्सप्रं यद्वात्सप्रेणोपतिष्ठत इममेव तेनलोकमभिजयति यद्विष्णुक्रमान्क्रमतेऽमुमेव तैर्लोकमभिजयति ।

என்பது.

உரை.

கீதத்துடன் கூடின இருக்கு மந்திரங்களின் ஆவிருத்தியின் சமூகம் ஸ்தோமமாம். இது, இவ்வுலகையடைவதற்கு நிமித்தமாம், கீதமுடைய தனித்தனியாயுள்ள துதிமந்திரம் சுவர்க்கத்தை யடைதற்குக் காரணம். அங்ஙனமே, இந்த வாத்சப்பிரிய சூக்தமும் பல்வகை மந்திரங்களின் சமுதாயமானதால் இவ்வுலகையடைவதற்கு நிமித்தமாம். சந்தங்களையுடைய சொற்களுடன் கூடியவைகளானதால் விஷ்ணுக்கிரம மந்திரம் சுவர்க்கத்தை யடைவதற்குநிமித்தமாம் என்பதாம்.

இரண்டையும் அநுட்டிக்கும் கால விசேடத்தை விதிக்கின்றது.

பிராமணம்—17

पूर्वेद्युः प्रक्रामत्युत्तरेद्युरुपतिष्ठते तस्माद्योगेऽन्यासां प्रजानां मनः क्षेमे-न्यासान्तस्माद्यायावरः क्षेम्यस्येशे तस्माद्यायावरः क्षेम्यमध्यवस्यति ।

என்பது.

உரை.

முதல் நாள் விஷ்ணுக்கிரமமும், இரண்டாம் நாள் அக்கினியின் துதியுஞ் செய்தல் வேண்டும். இங்கு, எசமானன் தேடிய உகாத்தியைப் பாது காப்பதில் நோககமுடையனுதலின் அதையே போற்றுதல் என்பதாம்.

சோம யாகத்தின் விகிருதி என்பதை யுணர்த்துதற் பொருட்டும், அதனுடைய அங்கத்தை அநுட்டிக்குங் காலவிசேடத்தைத் தெரிவித்தற் பொருட்டும் தீட்சையின் அங்கத்தை சிறிது விதிக்கின்றது.

பிராமணம்—18

मुष्टीकरोति वाचंयच्छति यज्ञस्य धृत्यै ॥

என்பது.

உரை.

'ஸ்வாஹாயக்ஞம்' என்பது முதலிய மந்திரங்களால் கைகளின் விரல் களை மடக்கிக்கொண்டிருத்தலும், வாக்கை யடக்கிக்கொண்டிருத்தலும் எக்ஞத்தின் வன்மை கெடாதிருத்தற்பொருட்டு என்பதாம்.

முதல் அநுவாகம்

முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் முதற்பிரபாடகம்

இரண்டாவது அநுவாகம்

உகாக்கினியை எடுத்துக்கொண்டு வேட்குமிடஞ் செல்லுதலைக் கூறும் பிராமணங்கள்.

ஐந்து பஞ்சாதிக்குமேல் நாற்பத்திரண்டு பதங்களைக் கொண்டது.

अन्नपतेऽन्नस्यनोदेहीत्याहाग्निर्वा अन्नपतिस्स एवास्मा अन्नं प्रयच्छत्यनमीवस्यशुष्मिण इत्याहायक्ष्मस्येतिवावै तदाह प्रप्रदा-

கொண்டுபோதல்)

तारन्तारिष ऊर्जन्नोधेहिद्विपदेचतुष्पद इत्याहाऽऽशिषमेवैतामाशास्त उदुत्वा विश्वेदेवा इत्याह प्राणावै विश्वेदेवाः [८] प्राणैरेवैनमुद्यच्छतेऽग्ने भरन्तु चित्तिभिरित्याह यस्मा एवैनंश्चित्तायोद्यच्छते तेनैवैनꣳ समर्धयति चतसृभिरासादयति चत्वारि छन्दाꣳसि छन्दोभिरेवातिच्छन्दसोत्तमयावर्ष्मवा एषा छन्दसां यदतिच्छन्दावर्ष्मैवैनꣳ समानानांकरोति सद्वतीभवति सत्त्वमेवैनंगमयति प्रेदग्ने ज्योतिष्मान् [९] याहीत्याह ज्योतिरेवास्मिन्दधाति तनुवा वा एषहिनस्ति यꣳहिनस्तिमाहिꣳसीस्तनुवा प्रजा इत्याह प्रजाभ्य एवैनꣳ शमयति रक्षाꣳसि वा एतद्यज्ञꣳसचन्ते यदन उत्सर्जत्यक्रन्ददित्यन्वाह रक्षसामपहत्या अनसावहन्त्यपचितिमेवास्मिन्दधाति तस्मादनस्वीचरथीचातिथीनामपचिततमौ [१०] अपचितिमान्भवति य एवं वेदसमिधाऽग्निन्दुवस्यतेति घृतानुषिक्तामवसिते समिधमादधाति यथाऽतिथय आगताय सर्पिष्वदातिथ्यङ्क्रियते तादृगेव तद्गायत्रिया ब्राह्मणस्य गायत्रोहि ब्राह्मणस्त्रिष्टुभाराजन्यस्य त्रैष्टुभोहिराजन्योऽप्सुभस्मप्रवेशयत्यप्सुयोनिर्वा अग्निस्स्वामेवैनं योनिङ्गमयति तिसृभिः प्रवेशयति त्रिवृद्वै [११] अग्निर्यावानेवाग्निस्तं प्रतिष्ठाङ्गमयतिपरा वा एषोऽग्निं वपतियोऽप्सुभस्म प्रवेशयति ज्योतिष्मतीभ्यामवदधाति ज्योतिरेवास्मिन्दधाति द्वाभ्यां प्रतिष्ठित्यै परावा एष प्रजां पशून् वपति योऽप्सुभस्म प्रवेशयति पुनरूर्जासहरय्येति पुनरुदैति प्रजामेव पशूनात्मन्धत्ते पुनस्त्वाऽऽदित्याः [१२] रुद्रावसवस्समिन्धता-

मित्याहैतावा एतन्देवता अग्रेसमैन्धततामिरेवैनꣳ समिन्धेबोधास-
बोधीत्युपतिष्ठते बोधयत्येवैनन्तस्मात्सुप्त्वा प्रजाः प्रबुध्यन्ते यथा-
स्थानमुपतिष्ठते तस्माद्यथास्थानं पशवः पुनरेत्योपतिष्ठन्ते ॥ [१३]
वैविश्वे देवा ज्योतिष्मानपचिततमौ त्रिवृद्वा आदित्या द्विचत्वा-
रिꣳशच्च ॥ २ ॥

இதில், உகாக்கினியை எடுத்துக்கொண்டு வேட்குமிடஞ் செல்லுதல் கூறப்படுகின்றது.

அவற்றுள், அத்திச்சமித்தை வைக்கும் முதலாம் மந்திரத்தின் முதலாவது பாதத்தில் உள்ள 'அன்னபதி' என்னுஞ் சொற் பொருளை விளக்குகின்றது.

பிராமணம்—1

अन्नपतेऽन्नस्यनोदेहीत्याहाग्निर्वा अन्नपतिस्स एवास्मा अन्नं प्रयच्छति ।

என்பது.

உரை.

அன்னபதியே! நீ எனக்கு அன்னத்தைக கொடுப்பாயாக என்றது, அக்கினியே அன்னத்திற்கு இறைவன்; அதுவே இவனுக்கு அன்னத்தைக் கொடுக்கின்றது என்பதாம்.

இரண்டாவது பாதத்தில் உள்ள 'அநமீவ' என்னுஞ் சொற்பொருளை விளக்குகின்றது.

பிராமணம்—2

अनमीवस्यशुष्मिण इत्याहाऽयक्ष्मस्येतिवावै तदाह ।

என்பது.

உரை.

'அநமீவ' என்பதால் நோயில்லாதது என்பதாம்.

கொண்டுபோதுதல்)

பிற்பாதியிலுள்ள, ‘ தாரிஷஃ, தேஹி ’ என்னுமிரண்டு சொற்களின் பொருளை விளக்குகின்றது.

பிராமணம்—3

प्रप्रदातारन्तारिष ऊर्जन्नोधेहिद्विपदेचतुष्पद इत्याहाऽऽशिषमेवैतामा शास्ते ।

என்பது.

உரை.

வேள்வித்தலைவனுடைய பிணியை நீக்குவாயாக. இருகாற்பிராணி நாற்காற்பிராணிகட்கு வன்மையைக் கொடுப்பாயாக என்னும் பொருள்படக் கூறியது ஆசிர்வாதத்தை விரும்புகின்றனன் என்பதாம்.

உகாவை மேலே எடுக்கும் மந்திரத்தின் முதற்பாதத்திலுள்ள ‘ தேவஃ ’ என்னும் பதத்துக்குப் பொருளை விளக்குகின்றது.

பிராமணம்—4

उदुत्वा विश्वेदेवा इत्याह प्राणावै विश्वेदेवाः प्राणैरेवैन मुद्यच्छते ।

என்பது.

உரை.

தேவஃ என்றது பிராணனும் ஆதலின் பிராணன்களால் மேலே தூக்கியதாகின்றது என்பதாம்.

இரண்டாம் பாதத்தில், புத்தி முதலிய சொற்களைவிடுத்து, சித்தி (சித்தம்) என்றதன் கருத்தை விளக்குகின்றது.

பிராமணம்—5

अग्ने भरन्तु चित्तिभिरित्याह यस्मा एवैनश्चित्तायोद्यच्छते तेनैवैनꣳ समर्धयति ।

என்பது.

உரை.

சித்தம் என்றது எண்ணிய காரியத்தில் அக்கினியைச் சம்பத்துடைதாகச் செய்கின்றது என்பதாம்.

நான்கு மந்திரங்களால் உகாத்தீயை வண்டியில் வைப்பதை விதிக்கின்றது.

பிராமணம்—6

चतसृभिरासादयति चत्वारि छन्दाꣳसि छन्दोभिरेवातिच्छन्दसोत्तमयाव- र्ष्मैवा एषा छन्दसां यदतिच्छन्दावर्ष्मैवैनꣳ समानानाङ्करोति सद्वतीभवति सत्त्वमेवैनङ्गमयति ।

என்பது.

உரை.

இதற்குரை முதலநுவாகத்திற் கூறப்பட்டுள்ளது என்பதாம்.

வேள்விச்சாலைக்குச் செல்லுமந்திரத்தின் முதற்பாதத்தில் உள்ள சுவாலையை யுடையது என்பதன் கருத்தை விளக்குகின்றது.

பிராமணம் —7

प्रेदग्ने ज्योतिष्मान् याहीत्याह ज्योतिरेवास्मिन्दधाति ।

என்பது.

உரை.

'சோதி யுடையது' என்றது, இவனிடத்தில் ஒளியை உண்டாக்கி வைக்கின்றது என்பதாம்.

நான்காம் பாதத்தில் இம்சையைப் போக்குதற்குச் சம்பந்தத்தைக் கூறுகின்றது.

பிராமணம்—8

तनुवा वा एषहिनस्ति यꣳहिनस्तिमाहिꣳसीस्तनुवा प्रजा इत्याह प्रजाभ्य एवैनꣳ शमयति ।

என்பது.

உரை.

அக்கினி, ஒருவரைத் துன்புறுத்துதல் மற்றொரு ஆயுதத்தைக் கொண் டன்று, மற்றோ, தனது திருமேனியாகிய சுவாலையாலேயே சுடுகின்றது ஆத லின் துன்புறுத்தாதென்று வேண்டுதல் என்பதாம்.

கொண்டுபோதல்)

போகும்போது வண்டியில் சத்தமுண்டாகில் பிராயச்சித்தத்தை விதிக்கின்றது.

பிராமணம்—9

रक्षाꣳसि वा एतद्यज्ञꣳसचन्ते यदन उत्सर्जत्यक्रन्ददित्यन्वाह रक्षसामपहत्यै ।

என்பது.

உரை.

வண்டியில் சத்தமெழில் இராக்கதர்கள் வண்டியைக் கொண்டுபோய் விடுவார்கள்; ஆதலின், அதை நீக்குதற் பொருட்டு 'அக்ரந்தத்' என்னும் மந்திரத்தை ஓதல்வேண்டும் என்பதாம். இது முன் கூறப்பட்டது.

வண்டியிற் கொண்டுபோக வேண்டுமென்பதை விதிக்கின்றது.

பிராமணம்--10

अनसावहन्त्यपचितिमेवास्मिन्दधाति तस्मादनस्वीचरथीचातिथीनामपचितततमौ ।

என்பது.

உரை.

வண்டியின்மீது வைத்துக்கொண்டு வேள்விச்சாலையை யடையில் இவ் வக்கினிக்குப் போற்றுதற்றன்மை தேடியதாயிற்று. இதுபற்றியே, உலகத்திலும் வண்டியிற் செல்கின்றவர் போற்றப் பெறுகின்றனர் என்பதாம்.

இவ்வாறுணர்ந்தவனைப் போற்றுகின்றது.

பிராமணம்—11

अपचितिमान्भवति य एवं वेद ।

என்பது.

உரை.

இத்தன்மையை உணர்ந்தவன் போற்றப்படுகின்றான் என்பதாம்.

சமித்துவைப்பதை விதிக்கின்றது.

பிராமணம்—12

समिधाऽग्निन्दुवस्यतेति घृतानुषिक्तामवसितेसमिधमादधाति यथाऽतिथय आगताय सर्पिष्वदातिथ्यङ्क्रियते तादृगेव तत् ।

என்பது.

உரை.

வேள்விச்சாலையை யடைந்ததும் ஒரு சமித்தை நெய்யில் நனைத்து அத்தீயில் வைத்தல் வேண்டும். இது, அதிதிக்கு நெய்யுடன் அன்னமிட்டது போலாகின்றது என்பதாம்.

சமித்துவைக்கும் இரண்டு மந்திரங்களையும் பாகுபாடு செய்கின்றது.

பிராமணம்—13

गायत्रिया ब्राह्मणस्य गायत्रोहि ब्राह्मणस्त्रिष्टुभाराजन्यस्य त्रैष्टुभोहिराजन्यः ।

என்பது.

உரை.

காயத்திரி அந்தணனும். திரிஷ்டுப் அரசனும். ஆதலின், அவ்வச்சந்த மந்திரங்களால் அவைகளை வைத்தல்வேண்டு மென்பதாம்.

சாம்பரை நீரிற் கொட்டிவிடல் வேண்டுமேன்பதை விதிக்கின்றது.

பிராமணம்—14

अफ्सुभस्मप्रवेशयत्यफ्सुयोनिर्वा अग्नि स्स्वामेवैनं योनिङ्गमयति ।

என்பது.

உரை.

சாம்பரைத் தண்ணீரிற் சேர்த்துவிடற் வேண்டும். தண்ணீர் அக்கினியின் காரணமானதால் தனது காரணத்திற் சேர்த்ததாகின்றது என்பதாம்.

அதில் மந்திரங்களை விநியோகப் படுத்துகின்றது.

பிராமணம்—15

तिसृभिः प्रवेशयति त्रिवृद्वा अग्निर्यावानेवाग्निस्तं प्रतिष्ठाङ्गमयति ।

என்பது.

உரை.

மூன்று மந்திரங்களால் சாம்பரைத் தண்ணீரிற் போடுதல், மூன்று வகையாகவுள்ள அக்கினிகட்கும் பெருமையை யுண்டாக்கியதாயிற்று என்பதாம்.

கொண்டுபோதல்)

இரண்டு மந்திரங்களை, தண்ணீரிற் கொட்டிய சாம்பருள் ஒருபிடி சாம்பல் எடுத்து உகாவிற் போட்டுக்கொள்ளல் வேண்டுமென்பதில் விநியோகிக்கின்றது.

பிராமணம்—16

परा वा एषोऽग्नि वपतियोऽप्सुभस्म प्रवेशयति ज्योतिष्मतीभ्यामवदधाति ज्योतिरेवास्मिन्दधाति ।

என்பது.

உரை.

வேள்வித்தலைவன், உகாவிலுள்ள சாம்பரை தண்ணீரிற் போட்டுவிட்டதால் உகாத்தீயைக் கெடுத்தவனாகின்றான். ஆதலின், 'சோதி' என்னுஞ் சொற்களையுடைய இரண்டு மந்திரங்களால் தண்ணீரிலுள்ள சாம்பரில் ஒருபிடி சாம்பரைப் பிழிந்தெடுத்து மீண்டும் உகாவிற் போட்டுக்கொள்ளல் வேண்டுமென்கின்றது. ஏனெனின்? மீண்டும் அவ்வக்கினி ஒளியுடையதாகின்றது போலாதலால் என்பதாம்.

அதில் மந்திரங்கள் இரண்டு என்பதைப் புகழ்கின்றது.

பிராமணம்—17

द्वाभ्यां प्रतिष्ठित्यै ।

என்பது.

உரை.

இரண்டு மந்திரங்களானதால் நிலைத்து நிற்குந் தன்மையை யடைகின்றான் என்பதாம்.

இரண்டு மந்திரங்களை, அச்சாம்பருடன் தீயையும் வைத்தல் வேண்டுமென்பதில் விநியோகிக்கின்றது.

பிராமணம்—18

परावा एष प्रजां पशून् वपति योऽप्सुभस्म प्रवेशयति पुनरूर्जासहरय्येति पुनरुदैति प्रजामेव पशूनात्मन्धत्ते ।

என்பது.

உரை.

சாம்பரைத் தண்ணீரிற் போட்டதால் மாண்டுபோன பிரசைகளையும், பசுக்களையும் இம்மந்திரவலியால் தன்பால் வைத்துக்கொள்ளுதற் பொருட்டு மீண்டும் அச்சாம்பருடன் தீயை உகாவில் வைத்தல் வேண்டுமென்பதாம். ஈண்டு, இவ்விரண்டு மந்திரங்களாலும், உகாவை எடுத்துக் கொண்டு சாலைக்கி

த்திரும்பி வரல்வேண்டும் என்பது ஆபஸ்தம்பர் முதலிய சூத்திரகாரர்களுடைய மதம்.

மீண்டும் உகாத்தீயில் சமித்துவைக்கும் மந்திரங்களில் உருத்திரன் முதலியோர்களைக் கூறியதின் கருத்தை விளக்குகின்றது.

பிராமணம்--19

पुनस्त्वाऽऽदित्या रुद्रावसवस्समिन्धतामित्याहैतावा एतन्देवता अग्नेसमैन्धततािभरेवैनꣳ समिन्धे ।

என்பது.

உரை.

இது, உருத்திரன் முதலானோர்களே அக்கினியை முதலில் வளர்க்கின்றவர்களாதலின் அவர்களைக் கூறினது என்பதாம்.

வளர்க்குந்தீயைப் போற்றுவதில் இரண்டு மந்திரங்களை விநியோகிக்கின்றது.

பிராமணம்—20

बोधासबोधीत्युपतिष्ठते बोधयत्येवैनन्तस्मात्सुप्त्वा प्रजाः प्रबुध्यन्ते ।

என்பது.

உரை.

இம்மந்திரங்களால் அவ்வக்கினி மீண்டும் உணர்வுடையதாகின்றது. இது பற்றியே, உலகில் உயிர்கள் கண்ணுறங்கி மீண்டும் விழிக்கின்றன என்பதாம்.

போற்றுமிடத்தை விதிக்கின்றது.

பிராமணம்—21

यथास्थानमुपतिष्ठते तस्माद्यथास्थानं पशवः पुनरेत्योपतिष्ठन्ते ॥

என்பது.

உரை.

எசமானனுடைய இடமாகிய ஆகவனீயத்திற்குத் தென்புறத்தில் நின்றுகொண்டு போற்றல் வேண்டும்; இதுபற்றியே, பசுக்கள் சாலையிலிருந்து வெளியே வனத்திற்குப்போய் மேய்ந்துவிட்டு மீண்டும் மாலையில் தமதிடத்தையடைகின்றன என்பதாம்.

இரண்டாம் அநுவாகம்
முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் இரண்டாம்பிரபாடகம்

மூன்ருவது அநுவாகம்.

காருகபத்யசயனம் என்னுஞ் செங்கலடுக்கைக்கூறும் பிராமணங்கள்.
ஆறுபஞ்சாதிக்குமேல் நாற்பத்தேழு பதங்களைக் கொண்டது.

यावतीवै पृथिवीतस्यै यम आधिपत्यं परीयाय यो वै यमं देवयजनमस्या अनिर्याच्याग्निं चिनुते यमायैनꣳ स चिनुतेऽपेतेत्यध्यवसाययति यममेव देवयजनमस्यै निर्याच्याऽत्मनेऽग्निं चिनुत इष्वग्रेण वा अस्या अनामृतमिच्छन्तो नाविन्दन्ते देवा एतद्यजुरपश्यन्नपेतेति यदेतेनाध्यवसाययति [१४] अनामृत एवाग्निं चिनुत उद्धन्ति यदेवास्या अमेध्यं तदप हन्त्यपोऽवोक्षति शान्त्यै सिकता निवपत्येतद्वा अग्नेर्वैश्वानरस्य रूपꣳ रूपेणैव वैश्वानरमवरुन्ध ऊषान्निवपति पुष्टिर्वा एषा प्रजननं यदूषाः पुष्ट्यामेव प्रजननेऽग्निं चिनुतेऽथो संज्ञान एव संज्ञानꣳ ह्येतत् [१५] पशूनां यदूषाद्यावापृथिवी सहाऽऽस्तां ते वियती अब्रूतामस्त्वेव नौ सह यज्ञियमिति यदमुष्या यज्ञियमासीत्तदस्यामदधात्त ऊषा अभवन्यदस्या यज्ञियमासीत्तदमुष्यामदधात्तददश्चन्द्रमसि कृष्णमूषान्निवपन्नदो ध्यायेद्द्यावापृथिव्योरेव यज्ञियेऽग्निं चिनुतेऽयꣳ सो अग्निरिति विश्वामित्रस्य [१६] सूक्तं भवत्येतेन वै विश्वामित्रोऽग्नेः प्रियं धामावारुन्धाग्नेरेवैतेन प्रियं धामावरुन्धे छन्दोभिर्वै देवास्सुवर्गं लोकमायन्चतस्रः प्राचीरुप दधाति चत्वारि छन्दाꣳसि छन्दोभिरेव तद्यजमानस्सुवर्गं लोकमेति तेषाꣳ सुवर्गं लोकं यतां दिशस्समव्लीयन्त ते द्वे पुरस्तात्समीची उपादधत

द्वे [१७] पश्चात्समीचीताभिर्वै ते दिशोऽदृꣳहन्यद्वे पुरस्तात्स-
मीची उपदधाति द्वे पश्चात्समीची दिशां विधृत्या अथो पशवो
वै छन्दाꣳसि पशूनेवास्मै समीचो दधात्यष्टावुप दधात्यष्टाक्षरा
गायत्री गायत्रोऽग्निर्यावानेवाग्निस्तं चिनुतेऽष्टावुप दधात्यष्टाक्षरा
गायत्री गायत्री सुवर्गं लोकमञ्जसा वेद सुवर्गस्य लोकस्य [१८]
प्रज्ञात्यै त्रयोदश लोकंपृणा उपदधात्येकविꣳशतिस्संपद्यन्ते प्रतिष्ठा
वा एकविꣳशः प्रतिष्ठा गार्हपत्य एकविꣳशस्यैव प्रतिष्ठां गार्हपत्य-
मनु प्रतितिष्ठति प्रत्यग्निं चिक्यानस्तिष्ठति य एवं वेद पञ्चचितीकं
चिन्वीत प्रथमं चिन्वानः पाङ्क्तो यज्ञः पाङ्क्ताः पशवो यज्ञमेव
पशूनवरुन्धे त्रिचितीकं चिन्वीत द्वितीयं चिन्वानस्त्रय इमे लोका
एष्वेव लोकेषु [१९] प्रतितिष्ठत्येकचितीकं चिन्वीत तृतीयं
चिन्वान एकधा वै सुवर्गो लोक एकवृतैव सुवर्गं लोकमेति पुरी-
षेणाभ्यूहति तस्मान्माꣳसेनास्थि छन्नं न दुश्चर्मा भवति य एवं
वेद पञ्च चितयो भवन्ति पञ्चभिः पुरीषैरभ्यूहति दश संपद्यन्ते
दशाक्षरा विराडन्नं विराड्विराज्येवान्नाद्ये प्रतितिष्ठति [२०] ॥
अध्यवसाययति ह्येतद्विश्वामित्रस्यादधत द्वे लोकस्य लोकेषु सप्त-
चत्वारिꣳशच्च ॥ ३ ॥

இதில், காருகபத்திய சயனம் என்னும் செங்கல் அடுக்குக்கள் கூறப் படுகின்றன.

காருகபத்தியசயனஞ் செய்யுமிடத்தைத் தேவேதில், 'ஆபேத' என்பது முதலிய மந்திரத்தை விநியோகப்படுத்துகின்றது.

பிராமணம்—1

यावतीवै पृथिवीतस्यै यम आधिपत्यं परीयाय यो वै यमं देवयजनमस्या अनिर्याच्याग्निं चिनुते यमायैनंः स चिनुतेऽपेत्यध्यवसाययति यममेव देवयजनमस्यै निर्याच्याऽत्मनेऽग्निं चिनुते ।

என்பது.

உரை.

எல்லாப்பூமிக்கும் எமன் தலைவனானதால், மண்ணில் யாண்டேனும் வேள்விப்பூமியை வாங்கிக்கொள்ளாமல் அதில் அக்கினிசயனஞ் செய்யில் அது எமனுடையதேயாகும். தான் அதன் பயனையடையமாட்டான். ஆதலின், 'அபேத' என்பது முதலிய இம்முதலாம் மந்திரத்தால் இது வேள்வி செய்யும் இடமென உறுதிசெய்துகொண்டு கொத்துதல் வேண்டும். இவ்வாறு எமனிடம் இரந்து கொண்டதால் காருகபத்தியசயனம் தன்பொருட்டுச் செய்ததாகும் என்பதாம்.

முற்கூறிய இம்மந்திரத்தைப் புகழ்கின்றது.

பிராமணம்—2

इष्वग्रेण वा अस्या अनामृतमिच्छन्तो नाविन्दन्ते देवा एतद्यजुरपश्यन्नपेतेति यदेतेनाध्यवसाययत्यनामृत एवाग्निं चिनुते ।

என்பது.

உரை.

இறக்கின்ற பிராணிகட்கு அமுதங்கிடைக்காததுபோன்று, பிரேதங்களாற் சூழ்ந்துகொள்ளப்பட்ட இப்பூமியில் தேவர்கள் விரும்பியும் அம்பின் நுனி அளவுகொண்ட இடங்கூடாக்கிடைக்காமற் போயிற்று, பிறகு, தேவர்கள் ஆராய்ந்துபார்த்து, 'அபேத வீத' என்பது முதலிய இம்மந்திரத்தைக் கண்டுபிடித்து, இம்மந்திரத்தால் பிரேதங்களை விலக்கிவிட்டு அவர்களாற் சூழப்படாததோரிடத்தில் அக்கினிசயனஞ் செய்தனர். அத்தகைய பெருமையுடையது இம் மந்திரமாம். இது பாரதத்திலுங் கூறியிருக்கிறது. பிரேதர்கள் ஒருவகை அசுரர்கள் எனப்படுகின்றவர்கள். மண்ணைக் கொத்தலே சயன இடத்தின் உறுதிப்பாடாம் என்பதாம்.

இடத்தைக் கோத்துதல்வேண்டுமென்னும் விதி.

பிராமணம்—3

उद्धन्ति यदेवास्या अमेध्यन्तदपहन्ति ।

என்பது.

உரை.

பூமியின்மீது எச்சில் முதலிய அசுத்தத்தைப் போக்குதற் பொருட்டுக் கொத்திவிடல் வேண்டும் என்பதாம்.

கோத்தியவிடத்தில் நீர் தெளித்தல்வேண்டுமென்னும் விதி.

பிராமணம்—4

अपोऽवोक्षति शान्त्यै ।

என்பது.

உரை.

நீர் தெளித்தல் வேண்டும், இதனுல், கொத்திவிட்ட பூமி நீராற் சாந்த மாகிறது என்பதாம்.

'அக்னேர்டஸ்ம' என்பது முதலிய மந்திரத்தால், கோத்தியவிடத்தில் மணலைப்போடும் விதி.

பிராமணம்—5

सिकता निवपत्येतद्वा अग्नेर्वैश्वानरस्य रूपꣳ रूपेणैव वैश्वानरमवरुन्धे ।

என்பது.

உரை.

வைசுவானரம் என்னும் அக்கினியின் வடிவங்கள் மணல்களானதால் மணலாகிய உருவங்களால் வைசுவானர அக்கினி அடையப் படுகின்றது என்பதாம்.

'சஞ்ஞானம்' என்பது முதலிய மந்திரத்தால் உவர்மண்ணைப்போடும் விதி.

பிராமணம்—6

ऊषान्निवपति पुष्टिर्वा एषा प्रजननं यदूषाः पुष्ट्यामेव प्रजननेऽग्निं चिनुतेऽथो संज्ञान एव संज्ञानꣳ ह्येतत्पशूनां यदूषाः ।

என்பது.

சயனம்)

உரை.

உவர்மண்ணைப் போடுவதால், சயனம் பண்ணிய தேசத்தில் உறுதிப்பாடும் புத்திர வுற்பத்திகாரணமும் உண்டாகின்றன. விலங்குகள் உப்புத் தண்ணீரைக் குடிக்க விரும்பிச் செல்வதால் விலங்குகட்கு அது உறுதிப்பாட்டைக் கொடுக்கின்றது வெளிப்படை என்பதாம்.

அவைகளைப் போடும்போது, 'யததச்சந்த்ரமஸி' என்பது முதலிய மந்திரத்தை மனதில் நினைக்கவேண்டுமேன்னும் விதி.

பிராமணம்—7

द्यावापृथिवी सहाऽऽस्तां ते वियती अब्रूतामस्त्वेव नौ सह यज्ञियमिति यदमुष्या यज्ञियमासीत्तदस्यामदधात्त ऊषा अभवन्यदस्या यज्ञियमासीत्तदमुष्यामदधात्तददश्चन्द्रमसि कृष्णमूषान्निवपन्नदो ध्यायेद्द्यावापृथिव्योरेव यज्ञियेऽग्निं चिनुते ।

என்பது.

உரை.

படைப்புக் காலத்தில், பிசினும் மரமும்போல் ஒன்றுபட்டிருந்த வானும் மண்ணும், பிறகு, பிரமனுணையால் பிரிந்தன. பிரிந்து, மண், தனது சாரமாகிய கருமை வடிவை வானில் வைத்தது; அதுவே சந்திரனுடைய களங்கமாம். வான் தனது சாரமாகிய உவர்மண்ணை மண்ணில்வைத்தது. இவற்றை நினைக்கில் அத்தகைய சாரங்களில் அக்கினி சயனம் பண்ணியதாகின்றது என்பதாம்.

'அயம்ஸ:, அதாங:' என்பதுவரையுள்ள ஆறு இருக்குமந்திரங்களும் ஒரு சூத்தமேனப்படுகிறது. அதைப் புகழ்கின்றது.

பிராமணம்—8

अयꣳसो अग्निरिति विश्वामित्रस्य सूक्तं भवत्येतेन वै विश्वामित्रोऽग्नेः प्रियं धामावारुन्धाग्नेरेवैतेन प्रियं धामावरुन्धे ।

என்பது.

உரை.

இந்தச்சூக்தத்தால், விசுவாமித்திரர், அக்கினிக்குப் பிரியமாகிய பதத்தை அடைந்தனர். ஆதலின் இது விசுவாமித்திர சூக்த மெனப்படுகின்றது என்பதாம்.

மேற்கூறிய சூக்தத்தில் முதல் நான்கு இருக்குக்களால் செங்கல் வைப்பதைத் விதிக்கின்றது.

பிராமணம்—9

छन्दोभिर्वै देवास्सुवर्गं लोकमायन्चतस्रः प्राचीरुप दधाति चत्वारि छन्दाꣳसि छन्दोभिरेव तद्यजमानस्सुवर्गं लोकमेति ।

என்பது.

உரை.

சந்தங்கள் நான்கானதால் இந்த நான்கு இருக்கு மந்திரங்களாலும் தேவர்கள் சுவர்க்கத்தை யடைந்தனர். அதுபோல் இவைகளால் செங்கல் களை வைத்தவனும் சந்தங்களால் சுவர்க்கத்தை அடைவான் என்பதாம்.

சூக்தத்திலுள்ள ஐந்தாவது ஆறுவது இருக்குமந்திரங்களாலும், மேலேயுள்ள எசுர்மந்திரங்களாலும் வைக்குஞ் செங்கல்லை விதிக்கின்றது.

பிராமணம்—10

तेषाꣳ सुवर्गं लोकं यतां दिशस्समव्लीयन्त ते द्वे पुरस्तात्समीची उपादधत पश्चात्समीचीताभिर्वै ते दिशोऽदृꣳहन्यद्द्वे पुरस्तात्समीची उपदधाति द्वे पश्चात्समीची दिशां विधृत्यै ।

என்பது.

உரை.

நான்கு செங்கல்களை வைத்த தேவர்கள் சுவர்க்கத்தை யடைந்தமை யின், அந்தத் திசைகள் பாதுகாப்பாளரின்றிக் கெட்டன. அவ்வாறு கெடா திருத்தற் பொருட்டு, கிழக்கிலும், மேற்கிலும் முறையே, இருக்காலும் எசு ராலும் இரண்டிரண்டு செங்கல்களைவைத்து திசைகளைப் பாதுகாத்தனர்கள். அதுபோற் செய்யில் இவ்வெசமானனும் அத்தன்மையனாகின்றான் என்ப தாம்.

முற்கூறிய நான்கையும், இப்போது சொல்கின்ற நான்கையுஞ் சேர்த்து எட்டு என்பதை மீண்டும் புகழ்கின்றது.

பிராமணம்—11

अथो पशवो वै छन्दाꣳसि पशूनेवास्मै समीचो दधात्यष्टावुप दधात्यष्टाक्षरा गायत्री गायत्रोऽग्निर्यावानेवाग्निस्तं चिनुतेऽष्टावुप दधात्यष्टाक्षरा गायत्री गायत्री सुवर्गं लोकमञ्जसा वेद सुवर्गस्य लोकस्य प्रज्ञात्यै ।

என்பது.

உரை.

திக்கைப் பாதுகாக்குமெனல் முன் கூறப்பட்டது. மற்றும், சந்தங்களால் பசுக்கள் அடையப்படுதலின் சந்தங்களைக்கொண்ட இருக்குமந்திரங்களால் செங்கல்களை வைக்கில் நல்ல பசுக்களை யடைகின்றான். மேல் வரும் இரண்டு இருக்குக்களையுஞ் சேர்த்து எட்டானதால் இது காயத்திரிக்குச் சமமாம். அக்கினியும் காயத்திரியும் முகத்திற்றோன்றியவை களாதலின் அக்கினிமுழுதையுஞ் சயனஞ்செய்தவனுகின்றான். அஃதன்றியும், காயத்திரி, சுவர்க்கத்தை யுணர்ந்ததாமாதலின் சுவர்க்கஞானத்தையு மடைகிறான் என்பதாம்.

'லோகம் ப்ருண' என்பது முதலிய இரண்டு மந்திரங்களாலும் செங்கல்கள் வைக்கவேண்டுமென்னும் விதி.

பிராமணம்—12

त्रयोदश लोकंपृणा उपदधात्येकविꣳशतिस्संपद्यन्ते प्रतिष्ठा वा एकविꣳशः प्रतिष्ठा गार्हपत्य एकविꣳशस्यैव प्रतिष्ठां गार्हपत्यमनु प्रतितिष्ठति ।

என்பது.

உரை.

லோகம் = எஞ்சிய இடங்களை பிருண = நிறைக்கின்ற மந்திரங்கள் லோகம் பிருண எனப்படுகின்றன. வேறு மந்திரமின்றி இம்மந்திரங்களால் வைக்கவேண்டியவைகள் பதின்மூன்று, ஆக இருபத்தொன்றாகும், ஆகவே, இருபத்தொரு ஸ்தோமங்களைப் போன்றதாமாதலின் இருபத்தொன்றானது. திரிவிருத் (ஒன்பதுமுறை திருப்பும்) ஸ்தோமம் என்பது முதலியவைகளைப் பாதுகாப்பது போன்று இச்சயனமும் காருகபத்ய முதலிய அக்கினிகளைப் பாதுகாக்கின்றது. இவ்விரண்டு தன்மைகளையும் எசமானன் அடைகின்றான் என்பதாம்.

இவ்வாறுணர்கின்றவனைப் புகழ்கின்றது.

பிராமணம்—13

प्रत्यग्निं चिक्यानस्तिष्ठति य एवं वेद ।

என்பது.

உரை.

இத்தன்மையை உணர்ந்தவன், அக்கினி சயனத்தைச் செய்தவனுடைய பெருமையை யடைகின்றான் என்பதாம்.

இவ்வாறு கூறிய அக்கினிசயனம் ஒன்றில் மேலுங்கீழுமுள்ள
ஐந்தடுக்குக்களை விதிக்கின்றது

பிராமணம்—14

पञ्चचितीकं चिन्वीत प्रथमं चिन्वानः पाङ्क्तो यज्ञः पाङ्क्ताः पशवो यज्ञमेव पशूनवरुन्धे ।

என்பது.

உரை.

முதலில் அக்கினி சயனஞ்செய்ய வேண்டியவன் ஐந்தடுக்குக்களைக் கொண்ட சயனத்தைச் செய்தல் வேண்டும். இதனால், அரிசிப்பொரி முதலானவைகளால் ஐவகைப் பொருளைக் கொண்ட எக்ஞத்தையும், வால், கால்கள் என்னும் ஐந்தவயங்களையுடைய பசுக்களையு மடைகின்றான் என்பதாம்.

இரண்டாம்முறை அக்கினிசயனஞ் செய்கின்றவனுக்கு இத்தனை அடுக்கு
என்று விதிக்கின்றது.

பிராமணம்—15

त्रिचितीकं चिन्वीत द्वितीयं चिन्वानस्त्रय इमे लोका एष्वेव लोकेषु प्रतितिष्ठति ।

என்பது.

உரை.

இரண்டாம்முறை அக்கினி சயனஞ் செய்கின்றவன் மூன்றடுக்கை அடுக்குவதால் மூன்றுலகங்களிலும் பெருமையை யடைகின்றான் என்பதாம்.

மூன்றும்முறை அக்கினிசயனஞ் செய்கின்றவனுக்கு இத்தனை அடுக்கு
என்பதை விதிக்கின்றது.

பிராமணம்—16

एक चितीकं चिन्वीत तृतीयं चिन्वान एकधा वै सुवर्गो लोक एकवृतैव सुवर्गं लोकमेति ।

என்பது.

உரை.

ஒரு அடுக்கைச் செய்வதால் ஒரே தன்மையாயுள்ள சுவர்க்கத்தை யடைகின்றான் என்பதாம்.

மணல்போடல் வேண்டுமேன்னும் விதி.

பிராமணம்—17

पुरीषेणाभ्यूहति तस्मान्मा꣡सेनास्थि छन्नं ।

என்பது.

உரை.

மணலை இறைத்தல் என்றது, எலும்பு போன்ற செங்கல்களின்மேல் மெதுவாகிய மாமிசத்தால் மூடியது போலாகின்றது என்பதாம்

இவ்வாறுணர்ந்தவனைப் புகழ்கின்றது.

பிராமணம்—18

न दुश्चर्मा भवति य एवं वेद ।

என்பது.

உரை.

இத்தன்மையை அறிந்தவன் கெட்டதோலை அடையமாட்டான். அதாவது உடம்பின்தோலில் கெடுதியுண்டாகாது என்பதாம்.

செங்கலடுக்கும் மணல்போடலுங்கூடி பத்தானதுபற்றிப் புகழ்கின்றது.

பிராமணம்—19

पञ्च चितयो भवन्ति पञ्चभिः पुरीषैरभ्यूहति दश संपद्यन्ते दशाक्षरा विराडन्नं विराड्विराज्येवान्नाद्ये प्रतितिष्ठति ।

என்பது.

உரை.

பத்தெழுத்துக்கள் கொண்டது விராட் என்னுஞ் சந்தமானதால் விராட் சந்தவாயிலாக உணவுப் பொருளில் பெருமையை யடைகின்றான் என்பதாம்.

மூன்றும் அநுவாகம்

முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் முதற்பிரபாடகம்

நான்காவது அநுவாகம்

உகாவிலிள்ள தீயை, காருகபத்திய சயனத்தில் வைக்கும் வகையைக் கூறும் பிராமணங்கள்.

மூன்று பஞ்சாதிக்குமேல் நாற்பத்தெட்டுப் பதங்களைக் கொண்டது.

वि वा एतौ द्विषाते यश्च पुराग्निर्यश्चोखायाꣳ समितमिति चतसृभिस्संनिवंपति चत्वारि छन्दाꣳसि छन्दाꣳसि खलु वा अग्नेः प्रिया तनूः प्रिययैवैनौ तनुवा सꣳ शास्ति समितमित्याह तस्माद्ब्रह्मणा क्षत्रꣳ समेति यत्संन्युप्य विहरति तस्माद्ब्रह्मणा क्षत्रं व्येत्यृतुभिः [२१] वा एतं दीक्षयन्ति स ऋतुभिरेव विमुच्यो मातेव पुत्रं पृथिवी पुरीष्यमित्याहर्तुभिरेवैनं दीक्षयित्वर्तुभिर्विमुञ्चति वैश्वानर्या शिक्यमा दत्ते स्वदयत्येवैनन्नैर्ऋतीः कृष्णास्तिस्रस्तुषपक्का भवन्ति निर्ऋत्यै वा एतद्भागधेयं यत्तुषा निर्ऋत्यै रूपं कृष्णꣳ रूपेणैव निर्ऋतिं निरवंदयत इमां दिशं यन्त्येषा [२२] वै निर्ऋत्यै दिक्स्वायामेव दिशि निर्ऋतिं निरवंदयते स्वकृत इरिण उप दधाति प्रदरे वैतद्वै निर्ऋत्या आयतनꣳ स्व एवाऽऽयतने निर्ऋतिं निरवंदयते शिक्यमभ्युप दधाति नैर्ऋतो वै पाशस्साक्षादेवैनं निर्ऋतिपाशान्मुञ्चति तिस्र उप दधाति त्रेधाविहितो वै पुरुषो यावानेव पुरुषस्तस्मान्निर्ऋतिमवं यजते पराचीरुप [२३] दधाति पराचीमेवास्मान्निर्ऋतिं प्रणुदतेऽप्रतीक्षमा यन्ति निर्ऋत्या अन्तर्हित्यै मार्जयित्वोपतिष्ठन्ते मेध्यत्वाय गार्हपत्यमुपतिष्ठन्ते निर्ऋतिलोक एव चरित्वा पूता देवलोकमुपावर्तन्त एकयोपतिष्ठन्त-

வைக்குதல்)

एकधैव यजमाने वीर्यं दधाति निवेशनस्संगमनोवसूनामित्याह
प्रजा वै पशवो वसु प्रजयैवैनं पशुभिस्समर्धयन्ति [२४] ॥
ऋतुभिरेषा पराचीरुपाष्टाचत्वारिंशच्च ॥ ४ ॥

இதில் உகாவிலுள்ள தீயை, காருகபத்தியசயனத்தில் வைக்கும் வகை கூறப்படுகிறது.

உகாத்தீயை வைக்கும் நான்கு மந்திரங்களையும் விநியோகப்படுத்துகின்றது.

பிராமணம்—1

त्रि वा एतौ द्विषातेयश्च पुराग्निर्यश्चोखायाꣳ समितमिति चतसृभिस्संनिव-
पति चत्वारि छन्दाꣳसि छन्दाꣳसि खलु वा अग्नेः प्रिया तनूः प्रियये-
वैनौ तनुवा सꣳशास्ति ।

என்பது.

உரை.

நான்கு மந்திரங்களால் உகாத்தீயை காருகபத்யத்தில் வைக்கில், முன்னர் ஆதானஞ் செய்து வைத்திருக்குந் தீயும், உகாத்தீயும், "நானே ஆகுதியில் நிலையுடையனுவேன்" என்றிவ்வாறு ஒன்றற்கொன்று பொருமைப் படுகின்றது; அப்பொருமையை நீக்குதற் பொருட்டு அவ்விரண்டையும் ஒன்றுபடுத்தல் வேண்டும். மற்றும், மந்திரங்கள் நான்காதலின் காயத்திரி முதலிய சந்தங்களின் பிரியவுடம்பாகிய மனத்திலுள்ள அக்கினியுடன் ஒன்று படுத்தலுமாகின்றது என்பதாம்.

அவற்றுள், முதல் மந்திரத்திலுள்ள சமிதம் (இரண்டும் ஒன்றுபட்டன) என்னுஞ் சொற்பொருளை விளக்குகின்றது.

பிராமணம்—2

समितमित्याह तस्माद्ब्रह्मणा क्षत्रꣳ समेति ।

என்பது.

உரை.

இம்மந்திரம், ஒன்றுசேர்ந்தன என்பதால், உலகிலும், புரோகிதனுகிய அந்தணனுடன் அரசன் ஒன்று சேர்ந்திருக்கின்றுன். இதை, பிறசுருதியுங் கூறுகின்றது என்பதாம்.

மீண்டும் அவ்வக்கினிகளிரண்டும் ஒன்றுபட்டதைப் புகழ்கின்றது.

பிராமணம்—3

यत्संन्युप्य विहरति तस्माद्ब्रह्मणा क्षत्रं व्येति ।

என்பது.

உரை.

இவ்விரண்டு தீக்களும் ஒன்றுபட்ட பிறகு மேற்செய்யும் பல்வகை அநுட்டானங்கள் நிகழ்கின்றன. இதுபற்றியே, அந்தணனும் அரசனும் ஒன்று சேர்ந்திருக்கில் அரசாளும் வகையும் முறையாய் நடந்து வருகின்றது என்பதாம்.

'மாதேவபுத்ரம்' என்பது முதலிய மந்திரத்தில் உள்ள 'இருதுக்களால்' என்னுஞ் சொல்லின் கருத்தை விளக்குகின்றது.

பிராமணம்—4

ऋतुभिर्वा एतं दीक्षयन्ति स ऋतुभिरेव विमुच्यो मातेव पुत्रं पृथिवी पुरीष्यमित्याहर्तुभिरेवैनं दीक्षयित्वर्तुभिर्विमुञ्चति ।

என்பது.

உரை.

உறியிலிருந்து உகாவை எடுக்க வேண்டிய மந்திரத்தில் இருதுக்களால் என்று கூறப்பட்டிருத்தலின், உறியிலிருந்து நீக்குவதற்குச் சாதனம் இருதுக்கள் எனப்பட்டதாயிற்று. இவ்வாறே, தீட்சையின் தொடக்கத்திலுங் கூறியிருத்தலின், தீட்சையும், உறியிலிருந்து எடுத்தலும், (தொடக்கமும் முடிவும்) ஒரே சாதனத்தால் ஆகின்றது என்பது பெறப்பட்டது. ஈண்டு, தீட்சையோ, எசமானனுடையது, விடுபடுதலோ, உறியினுடையது. ஆயினும், இரண்டையும் ஒன்ருய் உபசரித்துக் கூறப்பட்டதென்பதாம்.

'யதஸ்யபாரே' என்னும், உறியை எடுத்துக்கொள்ளும் மந்திரத்தை விநியோகிக்கின்றது.

பிராமணம்—5

वैश्वानर्या शिक्यमा दत्ते स्वदयत्येवैनम् ।

என்பது.

வைக்குதல்)

உரை.

இன்சுவையை உண்டாக்கும் வைசுவானர அக்கினி என்னுஞ்சொல் இம்மந்திரத்தில் இருத்தலால், இதனுல் எடுத்த உறியையும் இன்சுவையுடையதாகச் செய்ததாயிற்று என்பதாம்.

சூத்திரத்திற்கூறிய நிருதிச் செங்கல்களை விதிக்கின்றது.

பிராமணம்—6

नैर्ऋतीः कृष्णास्तिस्रस्तुषपक्का भवन्ति निर्ऋत्यै वा एतद्भागधेयं यत्तुषा निर्ऋत्यै रूपं कृष्णꣳ रूपेणैव निर्ऋतिं निरवदयते ।

என்பது.

உரை.

உமி, நிருதி தேவதையின் பாகமானதால் அச் செங்கல்களை உமியால் வேகவைத்தலாம். மற்றும், நிருதிதேவதை கருமை வடிவுடையதாதலின் அச்செங்கல்களும் கருமை வடிவாகச் சுடுதலாம். இவ்வாறு, தேவதைக்கு ஒத்தவாறு செய்தலால் அத்தேவதை விலக்கப்பட்டதாயிற்று என்பதாம்.

தென்மேற்கு மூலையை விரலாற் சுட்டிக்காட்டி விதிக்கின்றது.

பிராமணம்—7

इमां दिशं यन्त्येषा वै निर्ऋत्यै दिक्स्वायामेव दिशि निर्ऋतिं निरवदयते ।

என்பது.

உரை.

இந்தத் திக்கில்தான் நிருதி தேவதையை விலக்கல் வேண்டும் என்பதாம்.

மூன்று மந்திரங்களால் செங்கல்களை வைத்தல் வேண்டுமென்று விதிக்கின்றது.

பிராமணம்—8

स्वकृत इरिण उप दधाति प्रदरे वैतद्वै निर्ऋत्या आयतनꣳ स्व एवाऽऽयतने निर्ऋतिं निरवदयते ।

என்பது.

உரை.

மூன்று நிருதிச் செங்கல்களையும், இயற்கை உவர்ப்பூமியில், அல்லது பள்ளத்தில் வைத்தலால், நிருதி தேவதையை, தேவயாகஞ் செய்யுமிடத்தி லிருந்து விலக்கி அதனுடைய இடத்தில் நிறுவியதாயிற்று என்பதாம்.

உறியின் நனிக்கயிற்றில் அச்செங்கலை வைத்தல் வேண்டுமென்பதை விதிக்கின்றது.

பிராமணம்—9

शिक्यमभ्युप दधाति नैर्ऋतो वै पाशस्साक्षादेवैनं निर्ऋति पाशान्मुञ्चति ।

என்பது.

உரை.

பாசமாகின்ற உறியின் நுனிக்கயிற்றில் செங்கலை வைத்தலால் உடனே எசமானன் பாசத்திலிருந்து விடுபடுகின்றான் என்பதாம்.

செங்கலின் எண்ணிக்கையை விதிக்கின்றது.

பிராமணம்—10

तिस्र उप दधाति त्रेधाविहितो वै पुरुषो यावानेव पुरुषस्तस्मान्निर्ऋति मवयजते ।

என்பது.

உரை.

நிருதியின் உடம்பின், மேல்கீழ் நடு என்னும் மூன்றிடங்களையும் பிடித்துக் கெடுக்கின்றது என்பதாம்.

தெற்கில் முடியும்படி செங்கல்களை வைத்தல் வேண்டுமென்பதை விதிக்கின்றது.

பிராமணம்—11

पराची रुप दधाति पराची मेवास्मान्निर्ऋति प्रणुदते ।

என்பது.

உரை.

தெற்கு முகமாய் நின்று கொண்டு, ஒன்றற் கொன்று தெற்கில் வைத்துக்கொண்டுபோய் தெற்கில் முடியும்படி வைத்தலால், யாகஞ் செய்யு மிடத்திலிருந்தேனும், அல்லது, எசமானனிடத்தி லிருந்தேனும் நிருதி தேவதையை வெளியே தள்ளிவிட்டதாகும் என்பதாம்.

வைக்குதல்)

செங்கலை வைத்துவிட்டு திரும்பிப் பாராமல் யாகசாலைக்கு வரல்வேண்டு மென்பதை விதிக்கின்றது.

பிராமணம்—12

अप्रतीक्षमायन्ति निर्ऋत्या अन्तर्हित्यै ।

என்பது.

உரை.

திரும்பிப்பாராமல் வருவதால், நிருதி தேவதை கண்ணுக்குப் புலப் படாமல் இருக்கின்றது என்பதாம்.

தீயைப் போற்றல் வேண்டுமென்று விதிக்கின்றது.

பிராமணம்—13

मार्जयित्वोपतिष्ठन्ते मेध्यत्वाय ।

என்பது.

உரை.

'சம்நோதேவி:' என்பது முதலிய மந்திரத்தால் நீரைத்தெளித்துக் கொண்டு 'நிவேசன:' என்பது முதலிய மந்திரத்தாற் போற்றில் எசமானன் புனிதனாகின்றான் என்பதாம்

எந்தத்தீயை போற்றல் வேண்டும்? என்பதை விதிக்கின்றது.

பிராமணம்—14

गार्हपत्य मुपतिष्ठन्ते निर्ऋतिलोक एव चरित्वा पूता देवलोक मुपावर्तन्ते ।

என்பது,

உரை.

காருகபத்தியத்தீயை அதற்கருகில் நின்றுகொண்டு போற்றல் வேண் டும். இதனால், காருகபத்தியத்திற்கருகிலுள்ள தேவலோகத்தை யடைகின் றான் என்பதாம்.

மந்திரத்திலுள்ள, ஒன்று என்பதைப் புகழ்கின்றது.

பிராமணம்—15

एकयोपतिष्ठन्त एकधैव यजमाने वीर्यं दधाति ।

என்பது.

உரை.

ஒருமந்திரத்தாற் போற்றில் ஒரே சமயத்தில் எசமானனுக்கு வீரியத்தை யுண்டாக்குகின்றது என்பதாம்.

மந்திரத்திலுள்ள 'வசு' என்பதன் கருத்தை விளக்குகின்றது.

பிராமணம்—16

निवेशनस्सङ्गमनो वसूनामित्याह प्रजा वै पशवो वसु प्रजयैवैनं पशुभिस्समर्धयन्ति ।

என்பது.

உரை.

வசுக்களை யடைகின்றான் என்றது 'வசு' என்னும் பிரசைகளையும் பசுக்களையும் அடைகின்றான் என்பதாம்.

நான்காம் அநுவாகம்

முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் இரண்டாம் பிரபாடகம்

ஐந்தாவது அநுவாகம்

வேள்விப் பூமியை அளக்கும் வகையைக் கூறும் பிராமணம்.

ஆறு பஞ்சாதிக்குமேல் இருபத்தைந்து பதங்களைக் கொண்டது.

पुरुषमात्रेण विमिमीते यज्ञेन वै पुरुषस्संमितो यज्ञपरुषैवैनं विमिमीते यावान्पुरुष ऊर्ध्वबाहुस्तावान्भवत्येतावद्वै पुरुषे वीर्यं वीर्येणैवैनं विमिमीते पक्षी भवति न ह्यपक्षः पतितुमर्हत्यरत्निना पक्षौ द्राघीयाꣳसौ भवतस्तस्मात्पक्षप्रवयाꣳसि वयाꣳसि व्याममात्रौ पक्षौ च पुच्छं च भवत्येतावद्वै पुरुषे वीर्यम् [२५] वीर्यसंमितो वेणुना विमिमीत आग्नेयो वै वेणुस्सयोनित्वाय यजुषा युनक्ति यजुषा कृषति व्यावृत्त्यै षड्गवेन कृषति षड्वा ऋतव ऋतुभिरेवैनं कृषति यद्द्वादशगवेन संवत्सरेणैवेयं वा अग्नेरतिदाहादबि-

அளக்குதல்)

भेत्सैतद्द्विगुणमपश्यत्कृष्टं चाकृष्टं च ततो वा इमां नात्यदहद्यत्कृष्टं चाकृष्टं च [२६] भवत्यस्या अनतिदाहाय द्विगुणं त्वा अग्निमुद्यन्तुमर्हतीत्याहुर्यत्कृष्टं चाकृष्टं च भवत्यग्नेरुद्यत्या एतावन्तो वै पशवो द्विपादश्च चतुष्पादश्च तान्यत्प्राच उत्सृजेद्रुद्रायापि दध्यायद्दक्षिणा पितृभ्यो निधुवेद्यत्प्रतीचो रक्षाꣳसि हन्युरुदीच उत्सृजत्येषा वै देवमनुष्याणाꣳ शान्ता दिक् [२७] तामेवैनाननूत्सृजत्यथो खल्विमां दिशमुत्सृजत्यसौ वा आदित्यः प्राणः प्राणमेवैनाननूत्सृजति दक्षिणा पर्यावर्तन्ते स्वमेव वीर्यमनु पर्यावर्तन्ते तस्माद्दक्षिणोऽर्ध आत्मनो वीर्यावत्तरोऽथो आदित्यस्यैवाऽऽवृतमनु पर्यावर्तन्ते तस्मात्पराञ्चः पशवो वितिष्ठन्ते प्रत्यञ्च आवर्तन्ते तिस्रस्तिस्रस्सीताः [२७] कृषति त्रिवृतमेव यज्ञमुखे वियातयत्योषधीर्वपति ब्रह्मणाऽन्नमवरुन्धेऽर्केऽर्कश्चीयते चतुर्दशभिर्वपति सप्त ग्राम्या ओषधयस्सप्ताऽऽरण्या उभयीषामवरुद्ध्या अन्नस्यान्नस्य वपत्यन्नस्यान्नस्यावरुद्ध्यै कृष्टे वपति कृष्टे ह्योषधयः प्रतितिष्ठन्त्यनुसीतं वपति प्रजात्यै द्वादशसु सीतासु वपति द्वादश मासास्संवत्सरस्संवत्सरेणैवास्मा अन्नं पचति यदग्निचित् [२८] अनवरुद्धस्याश्नीयादवरुद्धेन व्यृध्येत ये वनस्पतीनां फलग्रहयस्तानिध्मेऽपि प्रोक्षेदनवरुद्धस्यावरुद्ध्यै दिग्भ्यो लोष्टान्त्समस्यति दिशामेव वीर्यमवरुध्य दिशां वीर्येऽग्निं चिनुते यं द्विष्यायत्र स स्यात्तस्यै दिशो लोष्टमा हरेदिषमूर्जमहमित आ दद इतीषमेवोर्जं तस्यै दिशोऽवरुन्धे क्षोधुको भवति यस्तस्यां दिशि भवत्युत्तर-

वेदिमुप वपत्युत्तरवेद्यां ह्यग्निश्चीयतेऽथो पशवो वा उत्तरवेदिः पशूनेवावरुन्धेऽथो यज्ञपरुषोऽनन्तरित्यै [२९] ॥ च भवत्येतावद्वै पुरुषे वीर्यं यत्कृष्टं चाकृष्टं च दिक्सीता अग्निचिदव पञ्चविंशतिश्च ॥ ५ ॥

இதில், வேள்விப் பூமியை அளக்கும்வகை கூறப்படுகின்றது.

ஒரு புருடனுடைய அளவுகொண்ட கோம்பால் அளத்தல்வேண்டுமேன்று விதிக்கின்றது.

பிராமணம்—1

पुरुषमात्रेण विमिमीते यज्ञेन वै पुरुषस्संमितो यज्ञपरुषैवैनं विमिमीते ।

என்பது.

உரை.

வேள்வியபிமானியாகிய தேவபுருடனுக்கொப்பாக இங்குள்ள மனிதனுடைய அளவைக் கொண்டது. இதனல், எக்ஞபுருடனுடைய அமிசமாகிய அளவையால் அக்கினி அளக்கப் பட்டதாகின்றது என்பதாம்.

கைகளைத் தொங்கவிட்டுக்கொண்டு நிற்கின்றவன், கைகளைத்தூக்கிக் கொண்டு நிற்கின்றவன் என புருஷன் இருவகைப்படுவேன். ஆதலின், அதன் விசேடத்தை விதிக்கின்றது.

பிராமணம்—2

यावान्पुरुष ऊर्ध्वबाहुस्तावान्भवत्येतावद्वै पुरुषे वीर्यं वीर्येणैवैनं विमिमीते ।

என்பது.

உரை.

கைகளைத் தூக்கிக்கொண்டு நிற்கின்றவனும் கைகட்கு மேலுள்ளதைத் தொடமாட்டான். ஆதலின், இவ்வளவே புருடனுடைய வீரியமாம். (வல்லமை) புருடனுடைய வீரியத்தால் அளத்தல் வேண்டுமென்பது கொண்டு கைகளைத் தூக்கி நிற்கின்றவனுடைய அளவு கொள்ளப்படுகின்றது என்பதாம்.

அளக்குதல்)

வலதுபக்கம் இடதுபக்கங்களைச் சிறகுகள் என்று விதிக்கின்றது.

பிராமணம்—3

पक्षी भवति न ह्यपक्षः पतितुमर्हति ।

என்பது.

உரை.

சிறகுகளின்றெனில் மேலேகிளம்பமுடியாது; ஆதலின் பறவை போன்று இரண்டு சிறகுகள் செய்யப்படுகின்றன என்பதாம்.

சூத்திரப்படி அவ்விரண்டு சிறகுகளின் அளவையின் மிகுதியை விதிக்கின்றது.

பிராமணம்—4

अरत्निनापक्षौ द्राघीयाꣳसौ भवतस्तस्मात्पक्षप्रवयाꣳसि वयाꣳसि ।

என்பது.

உரை.

அரத்னி என்னும் இருபத்து நான்கு அங்குலங்கள் அளவுகொண்ட இரண்டு சிறகுகளையும் புருட அளவுக்கு அதிக நீளமாய்ச் செய்தல் வேண்டும். இதுபற்றியே உலகிலும் பறவைகளைவிட அவைகளின் சிறகுகள் நீண்டிருக்கின்றன என்பதாம். கருடாகிருதி என்பது, ஏழரைப்புருட அளவு கொண்டது என்பதையுணர்க.

சிறகுகளின் வடிவு இவ்வளவுடையதாயிருத்தல் வேண்டுமென்று விதிக்கின்றது.

பிராமணம்—5

व्याममात्रौ पक्षौ च पुच्छं च भवत्येतावद्वै पुरुषे वीर्यं वीर्यसंमितः ।

என்பது.

உரை.

ஒருவன் கைகளை நீட்டிநிற்கின்றதற்கு 'வியாமம்' என்றுபெயர். அவ்வளவு நீண்ட சிறகுகளும் வாலும் இருத்தல்வேண்டும். இவ்வளவே புருடனுடைய வீரியமானதால் அக்கினியும் புருடனுடைய வல்லமையால் அளந்ததாகின்றது என்பதாம்.

மூங்கிலால் அளத்தல் வேண்டுமெனல்.

பிராமணம்—6

वेणुना विमिमीत आग्नेयो वै वेणुस्सयोनित्वाय ।

என்பது.

உரை.

மூங்கிலுக்குள் தீயானது ஒளித்திருந்ததால் மூங்கிலால் அளக்கில் தீயின் காரணத்தைக் கொண்டு அளந்ததாகின்றது என்பதாம்.

இனி, கலப்பையையும் உழவையும் விதிக்கின்றது.

பிராமணம்—7

यजुषा युनक्ति यजुषा कृषति व्यावृत्त्यै ।

என்பது.

உரை.

மந்திரத்தால் கலப்பையைப்பூட்டி உழுதலால், மந்திரமின்றிக் கலப்பையைப்பூட்டி உழும் உலகசம்பந்த உழவு தள்ளப்பட்டது என்பதாம்.

காளைகளின் எண்ணைவிதிக்கின்றது.

பிராமணம்—8

षड्गवेन कृषति षड्वा ऋतव ऋतुभिरेवैनं कृषति ।

என்பது.

உரை.

ஆறு எருதுகளைக்கட்டி உழுவதால், இருதுக்கள் ஆறும் உழுததாகின்றது என்பதாம்.

காளைகளின் எண்ணில் மற்றொரு பக்ஷத்தை விதிக்கின்றது.

பிராமணம்—9

यद्द्वादशगवेन संवत्सरेणैव ।

என்பது.

உரை.

பன்னிரண்டு எருதுகளைப்பூட்டி உழுதால் பன்னிரண்டு மாதங்கள் கொண்ட வருடத்தால் உழுததாகின்றது என்பதாம்.

அளக்கதல்)

வேள்விப்பூமி முழுதையும் உழுதல் கூடாதென விதிக்கின்றது.

பிராமணம்—10

इयं वा अग्नेरतिदाहादबिभेत्सैतद्द्विगुणमपश्यत्कृष्टं चाकृष्टं चततो वा इमां नात्यदहद्यत्कृष्टं चाकृष्टं च भवत्यस्या अनतिदाहाय ।

என்பது.

உரை.

வேள்விப் பூமிமுழுதையும் உழுதுவிடில், அதில் சயனம் பண்ணிய அக்கினி, பூமியை நன்றாக எரித்து விடுகின்றது. அவ்வாறு முழுதும் எரிக்காதிருத்தற் பொருட்டு சிறிதிடம் உழுதும், சிறிதிடம் உழாமலும் இருத்தல் வேண்டும் என்பதாம்.

மற்றொருவகையால், உழுதல் உழாமை என்னும் இருவகையையும் புகழ்கின்றது.

பிராமணம்—11

द्विगुणं त्वा अग्निमुद्यन्तुमर्हतीत्याहुर्यत्कृष्टं चाकृष्टं च भवत्यग्नेरुद्यत्यै ।

என்பது.

உரை.

காருகபத்தியத்திலிருந்து ஆகவனீயத்திற்கு அக்கினியை எடுத்துக் கொண்டு போகுங்கால், ஒரு மட்பாத்திரத்தில் மணலை நிறைத்து அதன் மேல் ஒரு மட்பாத்திரத்தில் தீயை வைத்துக்கொண்டுபோதல் காணப்படுதலின். அதாவது இரண்டுவகைப் பாத்திரத்திற்கொண்டு போதல் காணப்படுதலின், இங்கும் உழுதவிடம் உழாதவிடம் என்னும் இருவகையும் இருக்கின்றது என்பதாம்.

உழுத எருதுகளை அவிழ்த்துவிடுவதற்கு இன்னது திக்கென விதிக்கின்றது.

பிராமணம்—12

एतावन्तो वै पशवो द्विपादश्च चतुष्पादश्च तान्यत्प्राच उत्सृजेद्रुद्रायापि दध्याद्यद्दक्षिणा पितृभ्यो निधुवेद्यत्प्रतीचो रक्षाꣳसि हन्युरुदीच उत्सृजत्येषा वै देवमनुष्याणाꣳ शान्ता दिक् तामेवैनाननूत्सृजत्यथो खल्विमां दिशमुत्सृजत्यसौ वा आदित्यः प्राणः प्राणमेवैनाननूत्सृजति ।

என்பது.

உரை.

கிழக்கில் ஒட்டிவிடில் உருத்திரன் தனக்கு அருகாயிருத்தல் பற்றி எருதுக்களைக் கவர்ந்து கொள்வன். தெற்கில், பிதிர்க்கள் கவர்ந்து கொள்வர். மேற்கில் வருணனு லேவப்பட்ட இராக்கதர்கள் கவர்ந்து கொள்வார்கள். ஆதலின், வடக்கிலுள்ள தேவர்முதலானோர்கள் பொறுமையுடையோர் களாதலின் வடக்கில் அவிழ்த்துவிடல் வேண்டும். மற்றும், வடக்கில்விடில் பிராணவடிவ ஆதித்தனுக்கு ஒப்படைத்தவைகளுமாகின்றன என்பதாம்.

வலமாய்த் திருப்பி உழுதலை விதிக்கின்றது.

பிராமணம்—13

दक्षिणा पर्यावर्तन्ते स्वमेव वीर्यमनु पर्यावर्तन्ते तस्माद्दक्षिणोऽर्ध आत्मनो वीर्यावत्तरोऽथो आदित्यस्यैवाऽऽवृतमनु पर्यावर्तन्ते तस्मात्पराञ्चः पशवो वितिष्ठन्ते प्रत्यञ्च आवर्तन्ते ।

என்பது.

உரை.

புருடனுக்கு வலதுபுறத்திலேயே மிகுந்த வன்மையிருக்கிறது. என்னை? எல்லாச் செயல்களிலும் வலக்கை முன்வருதலாலென்க. இது பற்றியும், சூரியன், மேருவை வலமாகச் சுற்றுவதாலும் வலமாய்த் திருப்பி உழுதல் என்பதாம்.

உழும் முறையிலுள்ள விசேடத்தை விதிக்கின்றது.

பிராமணம்—14

तिस्रस्तिस्रस्सीताः कृषति त्रिवृतमेव यज्ञमुखे वियातयति ।

என்பது.

உரை

மும்மூன்று படைச்சால்களாக உழுதலால், திரிவிருத் (மும்முறை திருப்பும்) ஸ்தோமம் வேள்வித் தொடக்கத்தில் விரிக்கப்பெற்றததாகும் என்பதாம். ஈண்டு, உழும்முறையை சம்மிதையின் பாடியத்திற் காண்க.

அளக்குதல்)

வேள்விப்பூமியில் வித்துவகைகளை விதைக்கும் விதி.

பிராமணம்—15

ओषधीर्वपति ब्रह्मणाऽन्नमवरुन्धेऽर्केऽर्कश्चीयते ।

என்பது.

உரை

விதைகளை விதைப்பதன் பொருட்டு ஓதும் மந்திரங்களின் வலியால் உணவுப் பொருளை அடைகின்றான். மற்றும், இவ்வாறு விதைக்கில் அவ்விடம் போற்றத் தக்கதாய் அக்கினி சயனஞ் செய்ததாகின்றது என்பதாம்.

விதைவிதைக்கும் மந்திரங்களின் தொகையை விதிக்கின்றது.

பிராமணம்—16

चतुर्दशभिर्वपति सप्त ग्राम्या ओषधयस्सप्ताऽऽरण्या उभयीषामवरुद्ध्या अन्नस्यान्नस्य वपत्यन्नस्यान्नस्यावरुद्ध्यै ।

என்பது.

உரை

பதினான்கு மந்திரங்களால் பதினான்கு வித்து வகைகளை விதைப்பதால் பல்வகை உணவுப் பொருளை யளிக்கும் என்பதாம்.

உழுதவிடத்தில் விதைக்கவேண்டியதை விதிக்கின்றது.

பிராமணம்—17

कृष्टे वपति कृष्टे ह्योषधयः प्रतितिष्ठन्ति ।

என்பது.

உரை

உழுதவிடத்தில், கிராமத்திற் பயிராகும் எள் முதலான ஏழையும் விதைக்கில் விரைவில் வேரூன்றும் என்பதாம்.

ஒவ்வொரு படைச்சாலிவும் முதலிலிருந்து கடைசிவரை ஒரேவிதமாய் விதைத்தல் வேண்டுமென்னும் விதி.

பிராமணம்—18

अनुसीतं वपति प्रजात्यै ।

என்பது.

உரை

ஒருதன்மையாய் விதைக்கில் பயிர் நன்ருய் முளைத்தெழும் என்பதாம்.

படைச்சால்கள் முழுதிலும் விதைக்கவேண்டுமென்று விதிக்கின்றது.

பிராமணம்—19

द्वादशसु सीतासु वपति द्वादश मासास्संवत्सरस्संवत्सरेणैवास्मा अन्नं पचति ।

என்பது.

உரை.

படைச்சால்களும் பன்னிரண்டு, மாதங்களும் பன்னிரண்டு ஆதலின், ஒரு வருடம் இவனுக்கு உணவுப் பொருளைப் பக்குவப்படுத்துகின்றது என்பதாம்.

சூத்திரப்படி கூறினவற்றுள் சிலவிதைகள் கிடைக்காவிடில் அதற்குப் பிராயச்சித்தத்தை விதிக்கின்றது.

பிராமணம்—20

यदग्निचिदनवरुद्धस्याश्नीयादवरुद्धेन व्यृध्येत ये वनस्पतीनां फलग्रहयस्तानिध्मेऽपि प्रोक्षेदनवरुद्धस्यावरुद्ध्यै ।

என்பது.

உரை.

இங்குக் கிடைக்காத விதைகளாகிய உணவை, அக்கினிசயனம் பண்ணியவன் அருந்துவானாகில், விதைத்த வுணவுப் பொருள்கள் கிடைக்கமாட்டா; ஆதலின், பூவின்றிப் பழுக்கும் ஒருமரத்தின் சமித்தை, இங்குள்ள சமித்துக்களுடன் கூடக்கட்டிவைத்து நீர்தெளி(புரோக்ஷி)த்தல் வேண்டும். இதனால் அக் குற்றமில்லாதவனாகின்றான் என்பதாம்.

இனி, உழும்போது அளந்த பூமிக்குவெளியில் விழுந்த மண்கட்டிகளை எடுத்து உள்ளே போட்டுக்கொள்வதை விதிக்கின்றது.

பிராமணம்—21

दिग्भ्यो लोष्टान्त्समस्यति दिशामेव वीर्यमवरुध्य दिशां वीर्येऽग्निं चिनुते ।

என்பது.

அளக்குதல்)

உரை

இதனால், திக்குக்களின் வன்மைகளை இப்பூமியில் வைத்து அதன்மீது அக்கினி சயனஞ் செய்ததாகின்றது என்பதாம்.

நான்காம் மந்திரத்தில் சில விசேடத்தை விதிக்கின்றது.

பிராமணம் — 22

यं द्विष्याद्यत्र स स्यात्तस्यै दिशो लोष्टमा हरेदिषमूर्जमहमित आ दद इतीष-मेवोर्जं तस्यै दिशोऽवरुन्धे क्षोधुको भवति यस्तस्यां दिशि भवति ।

என்பது.

உரை.

அம் மண்கட்டிகளை, எசமானனுடைய பகைவனிருக்கும் திக்கிலிருந்து உள்ளே எடுத்துப் போட்டால் அப் பகைவன் பசியால் வருந்துகின்றவனாவான். ஆதலின், அந்தத்திக்கில் விழுந்ததை இந்நான்காம் மந்திரத்தால், எடுத்து உள்ளே போடுதல் வேண்டும் என்பதாம்.

உத்தரவேதிகை செய்யும் விதியை விதிக்கின்றது.

பிராமணம்—23

उत्तरवेदिमुप वपत्युत्तरवेद्यां ह्यग्निश्चीयतेऽथो पशवो वा उत्तरवेदिः पशूनेवावरुन्धेऽथो यज्ञपरुषोऽनन्तरित्यै ॥

என்பது.

உரை.

சோமயாகத்திற் செய்தது(பிரகிருதி)போல் உத்தரவேதிகை போடல் வேண்டும். பிறகு அதில் அக்கினிசயனஞ் செய்யப்படுகின்றது. மற்றும், உத்தரவேதிக் கருகிலுள்ள யூபத்தில் பசுவைக் கட்டுதலால் உத்தரவேதியும் பசுவடிவாம். ஆதலின், இதனால் பசுக்கள் அடையப்படுகின்றன. அஃதன்றியும், இவ்வேதி, வேள்வியின் அங்கமாதலின் அதற்கு இடையூறில்லாமற் செய்தல் வேண்டுமென்பதாம்.

ஐந்தாம் அநுவாகம்
முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் இரண்டாம்பிரபாடகம்

ஆறுவது அநுவாகம்.

மணலைப் போடுதலை விதிக்கும் பிராமணங்கள்.

ஐந்து பஞ்சாதிக்குமேல் இருபது பதங்களைக்கொண்டது.

अग्ने तव श्रवो वय इति सिकता निवपत्येतद्वा अग्नेर्वैश्वानरस्य सूक्तꣳ सूक्तेनैव वैश्वानरमवरुन्धे षड्भिर्निवपति षड्वा ऋतवस्संवत्सरस्संवत्सरोऽग्निर्वैश्वानरस्साक्षादेव वैश्वानरमवरुन्धे समुद्रं वै नामैतच्छन्दस्समुद्रमनु प्रजाः प्रजायन्ते यदेतेन सिकता निवपति प्रजानां प्रजननायेन्द्रः [३१] वृत्राय वज्रं प्राहरत्स त्रेधा व्यभवत्स्फ्यस्तृतीयꣳ रथस्तृतीयं यूपस्तृतीयं येऽन्तश्शरा अशीर्यन्त ताश्शर्करा अभवन्तच्छर्कराणाꣳ शर्करत्वं वज्रो वै शर्कराः पशुरग्नि-र्यच्छर्कराभिरग्निं परिमिनोति वज्रेणैवास्मै पशून्परिगृह्णाति तस्माद्वज्रेण पशवः परिगृहीतास्तस्मात्स्थेयानस्थेयसो नोप हरते त्रिसप्ताभिः पशुकामस्य [३२] परिमिनुयात्सप्त वै शीर्षण्याः प्राणाः प्राणाः पशवः प्राणैरेवास्मै पशूनवरुन्धे त्रिणवाभिर्भ्रातृव्यवतस्त्रिवृतमेव वज्रꣳ संभृत्य भ्रातृव्याय प्रहरति स्तृत्या अपरिमिताभिः परिमिनुयादपरिमितस्यावरुद्ध्यै यं कामयेतापशुस्स्यादित्यपरिमित्य तस्य शर्करास्सिकता व्यूहेदपरिगृहीत एवास्य विषूचीनꣳ रेतः परा सिञ्चत्यपशुरेव भवति [३३] यं कामयेत पशुमान्त्स्यादिति परिमित्य तस्य शर्करास्सिकता व्यूहेत्परिगृहीत एवास्मै समीचीनꣳ रेतस्सिञ्चति पशुमानेव भवति सौम्या व्यूहति सोमो वै रेतोधा रेत एव तद्दधाति गायत्रिया ब्राह्मणस्य गायत्रो

போடுதல்)

हि ब्राह्मणस्त्रिष्टुभा राजन्यस्य त्रैष्टुभो हि राजन्यश्शंयुं बार्हस्पत्यं मेधो नोपानमत्सोऽग्निं प्राविशत् [३४] सोऽग्नेः कृष्णो रूपं कृत्वोदायत सोऽश्वं प्राविशत्सोऽश्वस्यावान्तरशफोऽभवद्यदश्वमाक्रमयति य एव मेधोऽश्वं प्राविशत्तमेवावरुन्धे प्रजापतिनाऽग्निश्चेतव्य इत्याहुः प्राजापत्योऽश्वो यदश्वमाक्रमयति प्रजापतिनैवाग्निं चिनुते पुष्करपर्णमुप दधाति योनिर्वा अग्नेः पुष्करपर्णꣳ सयोनिमेवाग्निं चिनुतेऽपां पृष्ठमसीत्युप दधात्यपां वा एतत्पृष्ठं यत्पुष्करपर्णꣳ रूपेणैवैनदुप दधाति [३५] ॥ इन्द्रः पशुकामस्य भवत्यविशत्सयोनिं विꣳशतिश्च ॥ ६ ॥

இதில், அதன்மீது மணலைப் போடல்வேண்டுமென்று விதிக்கப்படுகின்றது.

'அக்னே தவ' என்பது முதலான மந்திரங்களை விநியோகப்படுத்துகின்றது.

பிராமணம்—1

अग्ने तव श्रवो वय इति सिकता निवपत्येतद्वा अग्नेर्वैश्वानरस्य सूक्तꣳ सूक्तेनैव वैश्वानरमवरुन्धे ।

என்பது.

உரை.

இந்த ஆறு இருக்குக்களும், எல்லாமக்கட்கும் பிரியமாகின்ற அக்கினியின் சூக்தமாம். ஆதலின், இதனால் மணலைப் போட்டால் அத்தகைய வைசுவானரன் என்னும் அக்கினியை அடைகின்றான் என்பதாம்.

சூக்தத்திலுள்ள மந்திரங்களின் தொகையை விதிக்கின்றது.

பிராமணம்—2

षड्भिर्निवपति षड्वा ऋतवस्संवत्सरस्संवत्सरोऽग्निर्वैश्वानरस्साक्षादेव वैश्वानरमवरुन्धे ।

என்பது.

உரை.

உகாத்தியைத் தரிக்குமிடத்து ஒருவருடந் தரித்தல் அமைதலின் அவ்வக்கினியும் வருடவடிவாம். ஈண்டு, ஆறு மந்திரங்களால் மணலைப் போடுதலால் இருதுக்களும் ஆறுதலின் வருடமாம். இதனால் இருதுக்களின் இடையீடின்றி எல்லா வகையானும் வைசுவானராக்கினியை யடைகின்றான் என்பதாம்.

சூக்தத்திலுள்ள இருக்குமந்திரங்கள் ஒன்றற்கொன்று வேறுபாடாய்ப் பலவகைச் சந்தமுடையன என்பதைப் புகழ்கின்றது.

பிராமணம்—3

समुद्रं वै नामैतच्छन्दस्समुद्रमनु प्रजाः प्रजायन्ते यदेतेन सिकता निवपति प्रजानां प्रजननाय ।

என்பது.

உரை.

இச்சூக்தத்தால் கடல் பரந்திருப்பது போன்று இம்மந்திரங்களும் பலவகைச் சந்தங்கள் கொண்டு பரந்திருத்தலின் கடலைப்பற்றிப் பலவகை உயிர்கள் உண்டாகின்றது போன்று பலவகைப் பிரசைகள் உண்டாகும் என்பதாம்.

சுக்கான் கற்களை இறைத்து விடுவதற்கு விதி.

பிராமணம்—4

इन्द्रो वृत्राय वज्रं प्राहरत्स त्रेधा व्यभवत्स्फ्यस्तृतीयꣳ रथस्तृतीयं यूपस्तृतीयं येऽन्तश्शरा अशीर्यन्त ताश्शर्करा अभवन्तच्छर्कराणाꣳ शर्करत्वं वज्रो वै शर्कराः पशुरग्निर्यच्छर्कराभिरग्निं परिमिनोति वज्रेणैवास्मै पशून्परिगृह्णाति तस्माद्वज्रेण पशवः परिगृहीतास्तस्मात्स्थेयानस्थेयसो नोप हरते ।

என்பது.

உரை.

இந்திரன், வச்சிராயுதத்தால் விருத்திரனை அடித்தபோது, அவன் உடம்பு மிக உறுதியாயிருந்ததால் வச்சிரந் தூளாகிவிட்டது. அவ்வச்சிராயுதத்தின் கூறுகள் மூன்றும், ஸ்ப்யம், யூபம், இரதம் என்பவைகளாயிற்று. மிகச்சிறிய தூள்களோ, பூமியில் விழுந்து சுக்கான் கல்லுகளாயின. சரம் என்னும் வச்சிராயுதத்தால் இது தோன்றியதால் 'சர்க்கரை' எனப்பட்டது.

போடுதல்)

அக்கினியும் பசுவிற்குச் சாதனமானதால் பசுவாம். அவ்விடத்தில் சுக்கான் கற்களை யிறைக்கில், எசமானனுக்கு, வச்சிராயுதத்தால் பசுக்களைத் தேடியதாயிற்று. இதுபற்றியே வச்சிராயுதம் போன்ற கயிறு முதலியவைகளால் பசுக்கள் கவரப்படுகின்றன. ஈண்டு, அக்கினியை வலுப்படுத்துதற் பொருட்டு சுக்கான் கற்களைப் போடல் வேண்டுமேயன்றி, சுக்கான் கற்களுக்கு அக்கினி வேண்டியதில்லை இதனாற்றான், வலியவன், எளியவனைத் தழுவுவதில்லை என்பதாம்.

பயனை விரும்புகின்றவனுக்கு சுக்கான் கற்களின் எண்ணிக்கையை விதிக்கின்றது,

பிராமணம் — 5

त्रिसप्ताभिः पशुकामस्य परिमिनुयात्सप्त वै शीर्षण्याः प्राणाः प्राणाः पशवः प्राणैरेवास्मै पशूनवरुन्धे ।

என்பது.

உரை.

பசுக்களை விரும்பியவன் இருபத்தொரு சுக்கான் கற்களைப்போடுதல் வேண்டும். இதில், மூன்று ஏழு இருத்தலின், தலையில் ஏழு துளைகளில் பிராணனையுடைய பசுக்களை யடைகின்றான் என்பதாம்.

பகைவனைக் கோல்ல விரும்பியவனுக்கு சுக்கான் கற்களின் எண்ணிக்கையை விதிக்கின்றது.

பிராமணம்—6

त्रिणवाभिर्भ्रातृव्यवतस्त्रिवृतमेव वज्रं संभृत्य भ्रातृव्याय प्रहरति स्तृत्यै ।

என்பது.

உரை.

மூன்று ஒன்பது சுக்கான் கல்லுகளைப் போடுவதால் இருபத்தேழு எண் கொண்ட திரிவிருத்துதியை வச்சிரமாகக் கொண்டு பகைவனைக் கொன்றுவிடுகின்றவனாகின்றான் என்பதாம்.

மற்றொரு பட்சத்தை விதிக்கின்றது.

பிராமணம்—7

अपरिमिताभिः परिमिनुयादपरिमितस्यावरुद्ध्यै ।

என்பது.

உரை.

கணக்கிலாத சுக்கான் கற்களைப் போட்டால் அளவில்லாத பயன்களை யடைகின்றான் என்பதாம்.

மேற்சொல்லிய, மணலையும் சுக்கான் கல்லையும் போவேதை உடன் பாட்டாலும் எதிர்மறையாலும் வலியுறுத்துகின்றது.

பிராமணம்—8

यं कामयेतापशुस्स्यादित्यपरिमित्य तस्य शर्करास्सिकता व्यूहेदपरिगृहीत एवास्य विषूचीनꣳ रेतः परा सिञ्चत्यपशुरेव भवति यं कामयेत पशुमान्त्स्यादिति परिमित्य तस्य शर्करास्सिकता व्यूहेत्परिगृहीत एवास्मै समीचीनꣳ रेतस्सिञ्चति पशुमानेव भवति ।

என்பது.

உரை.

எசமானனுக்கு பசுக்களில்லா தொழிய வேண்டுமென்று விரும்பில் வேட்போன், சுக்கான் கற்களை நாற்புறமும் போடாமல் மணலை இறைத்து விடல் வேண்டும். இதனால், வரம்பின்றியதால் எசமானனுடைய வீரியங் கெட்டு பசுக்களற்றவனாகுவான். சுக்கான்கற்களை நாற்புறமும் வரம்பாகப் போட்டு மணலை இறைத்துவிடில் பசுக்களை யடைவான் என்பதாம்.

'சோமம்' என்னுஞ் சொல்லையுடைய இரண்டு இருக்கை பொது வாக விநியோகப் படுத்துகின்றது.

பிராமணம்—9

सौम्या व्यूहति सोमो वै रेतोधा रेत एव तद्दधाति ।

என்பது.

உரை.

சோமம் தேவதையாகக் காணப்படும் இருக்குமந்திரங்களால் மணலை இறைக்கில், சோமம் அமுதமானதால், எசமானன் வீரியமுடையவனாகின்றான் என்பதாம்.

போடுதல்)

மேற்கூறிய மந்திரங்க ளிரண்டையும் புருட வேறுபட்டால் பகுக்கின்றது.

பிராமணம்—10

गायत्रिया ब्राह्मणस्य गायत्रो हि ब्राह्मणस्त्रिष्टुभा राजन्यस्य त्रैष्टुभो हि राजन्यः ।

என்பது.

உரை.

காயத்திரிச் சந்த முடையதால் அந்தணனும், திரிஷ்டுப் சந்தமுடையதால் அரசனும் மணலை இறைத்தல் வேண்டு மென்பதாம்.

இனி, குதிரை, தருப்பைக் கொம்பைத் தாண்டுவதை விதிக்கின்றது.

பிராமணம்—11

शं युं बार्हस्पत्यं मेधो नोपानमत्सोऽग्निं प्राविशत्सोऽग्नेः कृष्णो रूपं कृत्वोदायत सोऽश्वं प्राविशत्सोऽश्वस्यावान्तरशफोऽभवद्यदश्वमाक्रमयति य एव मेधोऽश्वं प्राविशत्तमेवावरुन्धे ।

என்பது.

உரை.

முன், பிருகற்பதியின் புதல்வனாகிய சம்யு என்பவருக்கு எக்ஞபுருடன் கிடைக்காமல் போய்விட்டனன். பிறகு, சம்யு வானவர் தேடுங்கால் அக்கினியிற் புகுந்து கொண்டனர். அங்குந் தேடிவரும்போது கரியமான் வடிவெடுத்து அவ்வடிவால் அக்கினியிற் புகுந்து அதிலிருந்து கிளம்பி குதிரையிற் புகுந்து குதிரையின் சிறிய கொளும்பில் ஒளித்துக் கொண்டனர். ஆதலின், குதிரை தாண்டுவதால் எக்ஞம் முன் அடைந்த குதிரையையே அடைகின்றது என்பதாம்.

குதிரை தாண்டுவதை மற்றொரு வகையாற் புகழ்கின்றது.

பிராமணம்—12

प्रजापतिनाऽग्निश्चेतव्य इत्याहुः प्राजापत्योऽश्वो यदश्वमाक्रमयति प्रजापतिनैवाग्निं चिनुते ।

என்பது.

உரை.

இவ்வேள்வி, அதாவது மகாக்கினிசயனம் பிரசாபதியினலேயே சயனஞ் செய்வதற்கு உரியது என்று பெரியோர்கள் கூறுகின்றூர்களாதலின் பிரசாபதியின் சம்பந்தியாகிய குதிரை தாண்டுவதால் பிரசாபதியிலேயே சயனஞ் செய்ததாகின்றது என்பதாம்.

தாமரையிலையை வைப்பதை விதிக்கின்றது.

பிராமணம்—13

पुष्करपर्णमुप दधाति योनिर्वा अग्नेः पुष्करपर्णꣳ सयोनिमेवाग्निं चिनुते ।

என்பது.

உரை.

தாமரைஇலை அக்கினிக்குக் காரணமானதால் இதனல் தனது காரணத்திலேயே சயனஞ் செய்ததாகின்றது என்பதாம்.

தாமரையிலையை வைப்பதில் ‘ அபாம் பிருஷ்டமஸி ’ என்பது முதலிய மந்திரத்தை விநியோகப் படுத்துகின்றது.

பிராமணம்—14

अपां पृष्ठमसीत्युप दधात्यपां वा एतत्पृष्ठं यत्पुष्करपर्णꣳ रूपेणैवैनदुप दधाति ॥

என்பது.

உரை.

இம்மந்திரத்தில் தாமரையிலையின் வடிவைக்கூறும் சொற்கள் இருத்தலால் ஒத்தமந்திரத்தால் தாமரையிலையை வைத்தவனுகின்றுன் என்பதாம்.

ஆறுவது அநுவாகம்
முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் இரண்டாம்பிரபாடகம்

ஏழாம் அநுவாகம்

பொன்தகடு முதலியவற்றை வைக்கும் முறையைக் கூறும் பிராமணங்கள்.

ஐந்து பஞ்சாதிக்குமேல் ஐந்து பதங்களைக் கொண்டது.

ब्रह्म जज्ञानमिति रुक्ममुप दधाति ब्रह्ममुखा वै प्रजापतिः प्रजा असृजत ब्रह्ममुखा एव तत्प्रजा यजमानस्सृजते ब्रह्म जज्ञान-

मित्याह तस्माद्ब्राह्मणो मुख्यो मुख्यो भवति य एवं वेद ब्रह्म-
वादिनो वदन्ति न पृथिव्यां नान्तरिक्षे न दिव्यग्निश्चेतव्य इति
यत्पृथिव्यां चिन्वीत पृथिवीꣳ शुचाऽर्पयेन्नौषधयो न वनस्पतयः
[३६] प्रजायेरन्यदन्तरिक्षे चिन्वीतान्तरिक्षꣳ शुचाऽर्पयेन्न वयाꣳसि
प्रजायेरन्यद्दिवि चिन्वीत दिवꣳ शुचाऽर्पयेन्न पर्जन्यो वर्षेद्रुक्ममुप
दधात्यमृतं वै हिरण्यममृत एवाग्निं चिनुते प्रजात्यै हिरण्मयं
पुरुषमुप दधाति यजमानलोकस्य विधृत्यै यदिष्टकाया आतृण्ण-
मनूपदध्यात्पशूनां च यजमानस्य च प्राणमपि दध्याद्दक्षिणतः
[३७] प्राञ्चमुप दधाति दाधार यजमानलोकं न पशूनां च यज-
मानस्य च प्राणमपि दधात्यथो खल्विष्टकाया आतृण्णमनूप
दधाति प्राणानामुत्सृष्ट्यै द्रप्सश्चस्कन्देत्यभिमृशति होत्रास्वेवैनं
प्रतिष्ठापयति स्रुचावुप दधात्याज्यस्य पूर्णां कार्ष्मर्यमयीं दध्नः
पूर्णामौदुम्बरीमियं वै कार्ष्मर्यमय्यसावौदुम्बरीमे एवोप धत्ते
[३८] तूष्णीमुप दधाति न हीमे यजुषाऽऽप्तुमर्हति दक्षिणां
कार्ष्मर्यमयीमुत्तरामौदुम्बरीं तस्मादस्या असावुत्तराऽऽज्यस्य पूर्णां
कार्ष्मर्यमयीं वज्रो वा आज्यं वज्रः कार्ष्मर्यो वज्रेणैव यज्ञस्य
दक्षिणतो रक्षाꣳस्यप हन्ति दध्नः पूर्णामौदुम्बरीं पशवो वै दध्यूर्गु-
दुम्बरः पशुष्वेवोर्जं दधाति पूर्णे उप दधाति पूर्ण एवैनम् [३९]
अमुष्मिँल्लोक उप तिष्ठते विराज्यग्निश्चेतव्य इत्याहुस्स्रुग्वै विरा-
ड्यत्स्रुचावुपदधाति विराज्येवाग्निं चिनुते यज्ञमुखेयज्ञमुखे वै
क्रियमाणे यज्ञꣳ रक्षाꣳसि जिघाꣳसन्ति यज्ञमुखꣳ रुक्मो यद्रुक्मं

व्याघारयति यज्ञमुखादेव रक्षाꣳस्यपहन्ति पञ्चभिर्व्याघारयति पाङ्क्तो यज्ञो यावानेव यज्ञस्तस्माद्रक्षाꣳस्यप हन्त्यक्ष्णया व्याघारयति तस्मादक्ष्णया पशवोऽङ्गानि प्रहरन्ति प्रतिष्ठित्यै [४०] ॥ वनस्पतयो दक्षिणतो धत्त एनं तस्मादक्ष्णया पञ्च च ॥ ७ ॥

இதில், பொன்தகடு முதலியவைகளை வைத்தல் கூறப்படுகின்றது.

'பிரமஜஞ்ஞானம்' என்னும் மந்திரத்தை விநியோகிக்கின்றது.

பிராமணம்—1

ब्रह्म जज्ञानमिति रुक्ममुप दधाति ब्रह्ममुखा वै प्रजापतिः प्रजा असृजत ब्रह्ममुखा एव तत्प्रजा यजमानस्सृजते ।

என்பது.

உரை.

பிரமன், அந்தணன் முதலாகிய பிரசைகளைப் படைப்பது போன்று எசமானனும் அத்தகைய பிரமஜஞ்ஞானம், என்பது முதலிய மந்திரத்தால் பொன்தகட்டை வைத்தலால் அந்தணன் முதலிய பிரசைகளைப் படைக்கின்றான் என்பதாம்.

இம்மந்திரத்தில், பிரமம் (அந்தணன்) என்பதற்கு அந்தணன் முதலிற் றோன்று கின்றவன் என்பது கருத்தென்பதை விளக்குகின்றது.

பிராமணம்—2

ब्रह्म जज्ञानमित्याह तस्माद्ब्राह्मणो मुख्यः ।

என்பது.

உரை.

அரசன் முதலானோர்களின் உற்பத்தியை முதலிற் கூறாமல் பிரமம் (அந்தணன்) என்றுக் கூறியதால் பிரமம் என்னுஞ் சொல் அந்தணன் என்னும் பொருளையே மேற்கொண்டது ஆதலின் அந்தணன் அச்சொற்கு முக்கியப் பொருளாகின்றான் என்பதாம்.

வைக்குதல்)

இவ்வண்ணத்தை அறிந்தவனைப் புகழ்கின்றது.

பிராமணம்—3

मुख्यो भवति य एवं वेद ।

என்பது.

உரை.

இவ்வாறுணர்ந்தவன் முக்கியனுகின்றுன் என்பதாம்.

பொன் தகட்டை வைத்தலைப் புகழ்கின்றது.

பிராமணம்—4

ब्रह्म वादिनो वदन्ति न पृथिव्यां नान्तरिक्षे न दिव्यग्निश्चेतव्य इति यत्पृथि-
व्यां चिन्वीतपृथिवीꣳ शुचाऽर्पयेन्नौषधयो न वनस्पतयः प्रजायेरन्य-
दन्तरिक्षे चिन्वीतान्तरिक्षꣳ शुचाऽर्पयेन्न वयाꣳसि प्रजायेरन्यद्दिवि
चिन्वीत दिवꣳ शुचाऽर्पयेन्न पर्जन्यो वर्षेद्रुक्ममुप दधात्यमृतं वै हिरण्य-
ममृत एवाग्निं चिनुते प्रजात्यै ।

என்பது.

உரை.

மண், வான், சுவர்க்கம் என்னும் மூன்றிடங்களிலும் அக்கினி சயனஞ்செய்யில், சுட்டால், முறையே கொடி செடி முதலியவைகளும், பறவை முதலானவைகளும், மழைபெய்தலும் உண்டாகா ஆதலின், பொன்னை வைத்து அதன்மேல் அக்கினி சயனஞ் செய்தால், தீயாற் கெடாத பொன் அமுதமாதலின் எல்லாம் உற்பத்தியாகும் என்பதாம்.

'ஹிரண்ய கர்ப்பஃ' என்பது முதலிய மந்திரத்தால் பொன் புருடனை வைத்தல் வேண்டுமென்று விதிக்கின்றது.

பிராமணம்—5

हिरण्मयं पुरुषमुप दधाति यजमानलोकस्य विधृत्यै ।

என்பது.

உரை.

பொன்மயமாகிய புருடனை வைத்தலால் எசமானனுடைய இடத்தை அடைந்தவனுகின்றுன் என்பதாம்.

பொன் புருடனை வைப்பதற்கு இடம் இன்னது என்று விதிக்கின்றது.

பிராமணம்—6

यदिष्टकाया आतृण्णमनूपदध्यात्पशूनां च यजमानस्य च प्राणमपि दध्या-द्दक्षिणतः प्राञ्चमुप दधाति दाधार यजमानलोकं न पशूनां च यजमा-नस्य च प्राणमपि दधात्यथो खल्विष्टकाया आतृण्णमनूप दधाति प्राणा-नामुत्सृष्ट्यै ।

என்பது.

உரை.

பொன்தகட்டின் துவாரத்தின்மீது வைக்கில் எசமானன், அவனுடைய பசுக்கள் என்பவைகளின் பிராணனை அடைத்து விட்டதாகும். அதன் பொருட்டு, பொன்தகட்டிலுள்ள துவாரத்திற்குத் தெற்கில் வைத்தல் வேண்டும். இதனால், மேற்கூறிய குற்றங்கள் நீங்குவதுடன் எசமானனுடைய இடமும் எற்றுக்கொண்டதாகும் என்பதாம்.

பொன் புருடனைத் தொடுவதற்குரிய மந்திரத்தை விநியோகப்படுத்துகின்றது.

பிராமணம்—7

द्रप्सश्चस्कन्देत्यभिमृशति होत्रास्वेवैनं प्रतिष्ठापयति ।

என்பது.

உரை.

இம் மந்திரத்தால் பொன் புருடனைத் தேடுவதால், ஹோதா மைத்திராவணன் முதலானோர்களிடத்தில் வைத்ததுபோலாகும். அல்லது, பொன் இரேணுவானது செல்லாத எழுதிக்குகளிலும் வைத்ததாகும் என்பதாம்.

மண்மயமாகாத தாமரைஇலை முதலியவைகள் என்னும் செங்கல்களை வைத்தது போன்று, மண்மயமில்லாத சுருக்குக்களை வைப்பதை விதிக்கின்றது.

பிராமணம்—8

स्रुचावुप दधाति ।

என்பது.

உரை.

குமிழை மரத்தாலும், அத்தி மரத்தாலுஞ் செய்த இரண்டு சுருக்குக்களை வைத்தல்வேண்டு மென்பதாம்.

வைக்குதல்)

சுருக்குக்களின் விசேஷணத்தை விதிக்கின்றது.

பிராமணம்—9

आज्यस्य पूर्णां कार्ष्मर्यमयीं दध्नः पूर्णामौदुम्बरीम् ।

என்பது.

உரை.

குமிளைமரச் சுருக்கை நெய்யாலும், அத்திமரச் சுருக்கைத் தயிராலும், நிறைத்துவைத்தல் வேண்டு மென்பதாம்.

விசிட்டமாய் விதிக்கப்பட்ட சுருக்குளிரண்டும் இரண்டு உலகங்கள் எனப் புகழ்கின்றது.

பிராமணம்—10

इयं वै कार्ष्मर्यमय्यसावौदुम्बरीमे एवोप धत्ते ।

என்பது.

உரை.

குமிளைமரச் சுருக்கு இவ்வுலகமாம். அத்திமரச் சுருக்கு அவ்வுலகமாம் ஆதலின் இரண்டுலகங்களையும் வைத்ததாக ஆகின்றது என்பதாம்.

ஏனைய செங்கல்கள்போன்று மந்திரமோதிவைத்தல் வேண்டுமென்னும் சந்தேகத்தையும், இலௌகிக வாக்கியத்தையும் நீக்குதபொருட்டு விதிக்கின்றது.

பிராமணம்—11

तूष्णीमुप दधाति न हीमे यजुषाऽऽप्तुमर्हति ।

என்பது.

உரை.

இவைகட்கு ஓதத்தக்க மந்திரமின்மையின் மந்திரமோதாமலே வைத்தல் வேண்டுமென்பதாம்.

சுருக்குக்கள் வைக்கும் திக்கை விதிக்கின்றது.

பிராமணம்—12

दक्षिणां कार्ष्मर्यमयीमुत्तरामौदुम्बरीं तस्मादस्या असावुत्तरा ।

என்பது.

உரை.

பொன் புருடனுக்குத் தெற்கில் குமிழைமரச்சுருக்கையும் வடக்கில் அத்திமரச் சுருக்கையும் வைத்தல் வேண்டும். ஈண்டு, சுவர்க்கலோகமாகிய அத்திமரச் சுருக்கை வடக்கில் வைத்தலால் பூமியின் வடக்கில் பூமிக்குமேல் சுவர்க்கம் இருக்கின்றதென்பதைக் குறிக்கின்றது என்பதாம்.

மற்றொரு வகையால் சுருக்குக்களைப் புகழ்கின்றது.

பிராமணம்—13

आज्यस्य पूर्णां कार्ष्मर्यमयीं वज्रो वा आज्यं वज्रः कार्ष्मर्यो वज्रेणैव यज्ञस्य दक्षिणतो रक्षाꣳस्यपहन्ति दध्नः पूर्णामौदुम्बरीं पशवो वै दध्यूर्गुदुम्बरः पशुष्वेवोर्जं दधाति ।

என்பது.

உரை.

நெய் நிறைந்த குமிழை மரச்சுருக்கு வச்சிரமாம். அதைத் தெற்கில் வைத்தலால் அங்குள்ள இராக்கதரைக் கொல்கின்றது. தயிர் நிறைந்த அத்திமரச் சுருக்கு பசுக்களாம்; அது பசுக்களிடத்தில் இரசத்தை உண்டாக்கின்றது என்பதாம்.

நெய் தயிரை நிறைத்து வைப்பதைப் புகழ்கின்றது.

பிராமணம்—14

पूर्णे उप दधाति पूर्णे एवैनममुष्मिँल्लोँक उपतिष्ठते ।

என்பது.

உரை.

இதனால், அவ்வுலகில் நிறைந்த சம்பத்தை யடைகின்றான் என்பதாம்.

சுருக்கு வைப்பதைப் புகழ்கின்றது.

பிராமணம்—15

विराज्यग्निश्चेतव्य इत्याहुस्स्रुग्वै विराड्यत्स्रुचावुपदधाति विराज्येवाग्निं चिनुते ।

என்பது.

வைக்குதல்)

உரை.

பலவகையாய் விளங்குமிடத்தில் அக்கினிசயனஞ் செய்தல் வேண்டு மென்று பெரியோர்கள் கூறுதலின், இவ்விடமும், சுருக்குக்களில் நெய் தயிரை நிறைத்து வைத்திருத்தலால் பலவகையாக விளங்குகின்றதாகும் ஆதலின் சுருக்குக்களை வைத்தல் வேண்டுமென்பதாம்.

பசுவின் உத்தர வேதிகையிற் செய்வது போல் பொன்தகட்டின் மேலும் வியாகார ஹோமஞ்செய்தல் வேண்டுமென்று விதிக்கின்றது.

பிராமணம்—16

यज्ञमुखेयज्ञमुखे वै क्रियमाणे यज्ञꣳ रक्षाꣳसि जिघाꣳसन्ति यज्ञमुखꣳ रुक्मो यद्रुक्मं व्याघारयति यज्ञमुखादेव रक्षाꣳस्यपहन्ति ।

என்பது.

உரை.

வேள்வியைப் பற்றிய ஒவ்வொரு அங்கங்களாகிற எக்ஞமுகத்தைத் தொடங்கும்போதும் அசுரர்கள் வந்து கெடுப்பார்கள். இங்கு, பொன் தகடு வைத்தலாகிய எக்ஞமுகத் தொடக்கத்திலும் இராக்ஷஸர்கள் வருவதால் அவர்களைக் கொல்லுதற் பொருட்டு பொன் தகட்டின்மீது வியாகார ஹோமஞ் செய்தல் வேண்டும் என்பதாம்.

'க்ருணுஷ்வ பாஜ:' என்பது முதலிய ஐந்து மந்திரங்களை, அதில் விநியோகப் படுத்துகின்றது.

பிராமணம்—17

पञ्चभिर्व्याघारयति पाङ्क्तो यज्ञो यावानेव यज्ञस्तस्माद्रक्षाꣳस्यपहन्ति ।

என்பது.

உரை.

வியாகார ஹோமத்தால் இராக்கதர்கள் கொல்லப்படுகின்றனர் என்பதாம்.

கோணலாக மாறிச்செய்தல் வேண்டுமென்னும் அதையே விதிக்கின்றது.

பிராமணம்—18

अक्ष्णया व्याघारयति तस्मादक्ष्णया पशवोऽङ्गानि प्रहरन्ति प्रतिष्ठित्यै ।

என்பது.

உரை.

பலவாறு கோணலாய் மாறி நெய்யை விடுதலின் வியாகாரம் எனப்பட்டது. இதனால் நிலத்து நிற்குந்தன்மை உண்டாகின்றது. இதுபற்றியே, பசுக்கள், கால்களை மாறி மாறி எடுத்துவைத்து நடக்கின்றது என்பதாம்.

ஏழாவது அநுவாகம்.

முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் இரண்டாம்பிரபாடகம்

எட்டாவது அநுவாகம்

இயற்கைத் துளையுடைய சுக்கான்கல்லே வைத்தலைக் கூறும்பிராமணங்கள்.

ஏழ பஞ்சாதிக்குமேல் இருபத்தேழு பதங்களைக் கொண்டது.

स्वयमातृण्णामुप दधातीयं वै स्वयमातृण्णेमामेवोप धत्तेऽश्वमुप घ्रापयति प्राणमेवास्यां दधात्यथो प्राजापत्यो वा अश्वः प्रजापतिनैवाग्निं चिनुते प्रथमेष्टकोपधीयमाना पशूनां च यजमानस्य च प्राणमपि दधाति स्वयमातृण्णा भवति प्राणानामुत्सृष्ट्या अथो सुवर्गस्य लोकस्यानुख्यात्या अग्नावग्निश्चेतव्य इत्याहुरेष वै [४१] अग्निर्वैश्वानरो यद्ब्राह्मणस्तस्मै प्रथमामिष्टकां यजुष्कृतां प्रयच्छेत्तां ब्राह्मणश्चोपदध्यातामग्नावेव तदग्निं चिनुत ईश्वरो वा एष आर्तिमार्तोर्योऽविद्वानिष्टकामुपदधाति त्रीन्वरान्दद्यात्त्रयो वै प्राणाः प्राणानाꣳ स्तृत्यै द्वावेव देयौ द्वौ हि प्राणावेक एव देय एको हि प्राणः पशुः [४२] वा एष यदग्निर्न खलु वै पशव आयवसे रमन्ते दूर्वेष्टकामुप दधाति पशूनां धृत्यै द्वाभ्यां प्रतिष्ठित्यै काण्डात्काण्डात्प्ररोहन्तीत्याह काण्डेनकाण्डेन ह्येषा प्रतितिष्ठत्येवा नो

दूर्वे प्रतनु सहस्रेण शतेन चेत्याह साहस्रः प्रजापतिः प्रजापते राप्त्यै देवलक्ष्मं वै त्र्यालिखिता तामुत्तरलक्ष्माणं देवा उपादधता-धरलक्ष्माणमसुरा यम् [४३] कामयेत वसीयान्त्स्यादित्युत्तर-लक्ष्माणं तस्योप दध्याद्वसीयानेव भवति यं कामयेत पापीया-न्त्स्यादित्यधरलक्ष्माणं तस्योप दध्यादसुरयोनिमेवैनमनुपरा भाव-यति पापीयान्भवति त्र्यालिखिता भवतीमे वै लोकास्त्र्यालिखि-तैभ्य एव लोकेभ्यो भ्रातृव्यमन्तरेत्यङ्गिरसस्सुवर्गं लोकं यतः पुरोडाशः कूर्मो भूत्वाऽनु प्रासर्पत् [४४] यत्कूर्ममुपदधाति यथा क्षेत्रविदञ्जसा नयत्येवमेवैनं कूर्मस्सुवर्गं लोकमञ्जसा नयति मेधो वा एष पशूनां यत्कूर्मो यत्कूर्ममुपदधाति स्वमेव मेधं पश्यन्तः पशव उपतिष्ठन्ते श्मशानं वा एतत्क्रियते यन्मृतानां पशूना॒ꣳ शीर्षाण्युपधीयन्ते यज्जीवन्तं कूर्ममुपदधाति तेनाश्मशानचिद्वास्तव्यो वा एष यत् [४५] कूर्मो मधु वाता ऋतायत इति दध्ना मधुमिश्रे-णाभ्यनक्ति स्वदयत्येवैनं ग्राम्य वा एतदन्नं यद्दध्यारण्यं मधु यद्दध्ना मधुमिश्रेणाभ्यनक्त्युभयस्यावरुद्ध्यै मही द्यौः पृथिवी च न इत्याहाऽऽभ्यामेवैनमुभयतः परिगृह्णाति प्राञ्चमुप दधाति सुवर्गस्य लोकस्य समष्ट्यै पुरस्तात्प्रत्यञ्चमुप दधाति तस्मात् [३६] पुरस्तात्प्रत्यञ्चः पशवो मेधमुपतिष्ठन्ते यो वा अपनाभिमग्निं चिनुते यजमानस्य नाभिमनु प्रविशति स एनमीश्वरो हि॒ꣳसितो-रुलूखलमुप दधात्येषा वा अग्नेर्नाभिस्सनाभिमेवाग्निं चिनुते-ऽहि॒ꣳसाया औदुम्बरं भवत्यूर्ग्वा उदुम्बर ऊर्जमेवावरुन्धे मध्यत

उप दधाति मध्यत एवास्मा ऊर्जं दधाति तस्मान्मध्यत ऊर्जा भुञ्जत इयद्भवति प्रजापतिना यज्ञमुखेन संमितमवं हन्त्यन्न-मेवार्कवैष्णव्यर्चोप दधाति विष्णुर्वै यज्ञो वैष्णवा वनस्पतयो यज्ञ एव यज्ञं प्रतिष्ठापयति [४७] ॥ एष वै पशुर्यमसर्पदेष यत्तस्मा-त्तस्मात्सप्तविंशतिश्च ॥ ८ ॥

இதில் இயற்கைத் துளைகளையுடைய சுக்கான்கல்லை வைத்தல் விதிக்கப் படுகின்றது.

அக்கல்லை வைப்பதன் விதி.

பிராமணம்—1

स्वयमातृण्णामुप दधातीयं वै स्वयमातृण्णेमामेवोप धत्ते ।

என்பது.

உரை.

இயற்கையாய்த் துளைகளையுடைய சுக்கான்கல் 'ஸ்வயமாதிருண்ணு' எனப்படுகின்றது. அது பூமியில் உற்பத்தியாகிறதால் அதை வைப்பது பூமியை வைத்ததுபோலாம் என்பதாம்.

அக்கல்லை குதிரை முகர்ந்து பார்த்தலை விதிக்கின்றது.

பிராமணம்—2

अश्वमुप घ्रापयति प्राणमेवास्यां दधात्यथो प्राजापत्यो वा अश्वः प्रजापति-नैवाग्निं चिनुते ।

என்பது.

உரை.

குதிரை முகர்ந்துபார்த்தால் அதற்குப் பிராணனைக் கொடுத்ததுபோலாகின்றது. மற்றும், பிரசாபதியாற் றோன்றிய குதிரை முகர்ந்து பார்த்தலால் பிரசாபதியாலேயே அக்கினி சயனஞ் செய்ததுபோலான்றது என்பதாம்.

முதலிய வைத்தல்)

அதிலுள்ள இயற்கைத் துளையைப் புகழ்கின்றது.

பிராமணம்—3

प्रथमेष्टकोपधीयमाना पशूनां च यजमानस्य च प्राणमपि दधाति स्वयमा-
तृण्णा भवति प्राणानामुत्सृष्ट्या अथो सुवर्गस्य लोकस्यानुख्यात्यै ।

என்பது.

உரை.

உபசாரமாகச் சொல்லப்படும் பொன் முதலான செங்கல்களுக்குள், ஒருவனுற் செய்யப்படாத சுக்கான்கற்கள் முக்கியமான செங்கல்களாகின்றன. அவற்றை முதலில் வைத்தலால், எசமானனுல் அவனுடைய பசுக்களின் பிராணன் அடைத்ததாகின்றது. அந்தப் பிராணன் செல்லுதற் பொருட்டு இயற்கைத் துளையுடையதை வைத்தலாம். மற்றும், அத்துளைகட்கு மறைப் பின்மையின் சுவர்க்கலோகமும் விளக்கப் பெற்றதாயிற்று என்பதாம்.

வித்வத் தன்மையிலாத ஒரு அந்தணனுடன்கூட விருந்து நடுவில் வைத்தல் வேண்டுமென்பதை விதிக்கின்றது.

பிராமணம்—4

अग्नावग्निश्चेतव्य इत्याहुरेष वा अग्निर्वैश्वानरो यद्ब्राह्मणस्तस्मै प्रथमामिष्टकां
यजुष्कृतां प्रयच्छेत्तां ब्राह्मणश्चोपदध्यातामग्नावेव तदग्निं चिनुते ।

என்பது.

உரை.

அக்கினியின்மேல் அக்கினிசயனஞ் செய்தல் வேண்டு மென்னலின், அந்தணகுலாபிமானி தேவதை அக்கினியாதலின், அக்கினி யெனப்படும் மற்றொரு அந்தணன்கையில், மந்திரத்தாற் புனிதமாக்கிய சுக்கான் கல்லைக் கொடுத்து அவனும் வேட்போனுமாக வைக்கில் அக்கினியின் மீது அக்கினி சயனஞ் செய்ததாகின்றது என்பதாம்.

வித்வத் தன்மையிலாத அவ்வந்தணன் கொடுக்கவேண்டிய தானத்தை விதிக்கின்றது.

பிராமணம்—5

ईश्वरो वा एष आर्तिमार्तोर्योऽविद्वानिष्टकामुपदधाति त्रीन्वरान्दद्यात्त्रयो
वै प्राणाः प्राणानाँ स्तृत्यै द्वावेव देयौ द्वौ हि प्राणावेक एव देय एको
हि प्राणः ।

என்பது.

உரை.

வித்வத்தன்மை யில்லாத அந்தணன், இயற்கைத் துளேயுடைய சுக்கான் கல்லே வைத்தலால் துன்புறுவான் அதைநீக்குதற்குச் சிறந்த தானமாகிய மூன்று பசுமாட்டைத் தானஞ் செய்தல் வேண்டும். பிராணன் அபானன் வியானன் என மூன்றுமாதலின் மூன்றைத் தானஞ்செய்தலாம். வியானனே உள்ளடக்கில் இரண்டாம். இரண்டை உள்ளடக்கில் ஒன்றும் ஆதலின் மூன்று, அல்லது, இரண்டு, அல்லது ஒன்று தானஞ் செய்தல் கூடும் என்பதாம்.

அறுகம்புல் வைப்பதை விதிக்கின்றது.

பிராமணம்—6

पशुर्वा एष यदग्निर्न खलु वै पशव आयवसे रमन्ते दूर्वेष्टकामुप दधाति पशूनां धृत्यै ।

என்பது.

உரை.

பசுவை யடைதற்குக் காரணமானதால் அக்கினி பசுவாம். அத்தகைய பசு சிறிது புல்லிருக்குமிடத்தில் விருப்பம் வையாது. ஆதலின், பசுக்கள் தங்கி நிற்பதன் பொருட்டு புல்லுகள் மிகுதியாமாறு அறுகம்புல்லே வைத்தல் என்பதாம்.

வைப்பது இரண்டு மந்திரங்கள் என்பதைப் புகழ்கின்றது.

பிராமணம்—7

द्वाभ्यां प्रतिष्ठित्यै ।

என்பது.

உரை.

அவ்வாறு வைக்கும் மந்திரங்கள் இரண்டாதலின் நிலேப்படுகின்றது என்பதாம்.

முதல் மந்திரத்தில் இம்முதலாவது பொருள் வெளிப்படையாயிருக்கின்றது என்பதை விளக்குகின்றது.

பிராமணம்—8

काण्डात्काण्डात्प्ररोहन्तीत्याह काण्डेनकाण्डेन ह्येषा प्रतितिष्ठति ।

என்பது.

முதலிய வைத்தல்)

உரை.

ஒவ்வொரு கணுக்களிலும் மூளைக்கின்றது என்பதால், ஒவ்வொரு கணுக்களிலும் நிலையாதற்றன்மை இருக்கின்றது என்பதாம்.

மந்திரத்தின் இரண்டாம் பாதியிலுள்ள ஆயிரம் என்பதன் கருத்தை விளக்குகின்றது.

பிராமணம்—9

एवा नो दूर्वे प्रतनु सहस्रेण शतेन चेत्याह साहस्रः प्रजापतिः प्रजापते राप्त्यै ।

என்பது.

ஆயிரக்கணக்கான பிரசைகளைப் படைப்பதால் பிரசாபதியை யடைகின்றான் ஆதலின் பிரசாபதிக்கு ஆயிரமாந் தன்மைவந்தது என்பதாம்.

ஆழாடம் என்னுஞ் செங்கலை வைக்கும் விதி.

பிராமணம்—10

देवलक्ष्मं वै त्र्यालिखिता तामुत्तरलक्ष्माणं देवा उपादधताऽधरलक्ष्माणमसुरा यङ्कामयेत वसीयान्त्स्यादित्युत्तरलक्ष्माणं तस्योप दध्याद्वसीयानेव भवति यं कामयेत पापीयान्त्स्यादित्यधरलक्ष्माणं तस्योप दध्यादसुरयोनिमेवैनमनुपरा भावयति पापीयान्भवति ।

என்பது.

உரை

இக்கல் ஈரமாயிருக்கும்போது திரிபுண்டரம் போல் மூன்று கோடுகளைக்கிழித்து, அக்கோடுகள் மேலே இருக்கும்படி வைத்தால் தேவர்கள் மிகுந்த சம்பந்தத்தை யடைந்தனர்; அதைப்போல் வைத்தல் வேண்டும். கோடுகள் கீழே இருக்கும்படி வைக்கில் அசுரர்கள்போல் பாவியாய் விடுவான் என்பதாம்.

மூன்று கோடுகள் கிழித்தல் வேண்டுமென்னும் விதி.

பிராமணம்—11

त्र्यालिखिता भवतीमे वै लोकास्त्र्यालिखितैभ्य एव लोकेभ्यो भ्रातृव्यमन्तरेति ।

என்பது.

உரை.

மூன்று கோடுகள் கிழித்தலால் மூன்றுலகங்களிலுமுள்ள பகைவர்கள் விலக்கப் பட்டவர்களாகிறார்கள் என்பதாம்.

ஆமை வைத்தலின் விதி.

பிராமணம்—12

अङ्गिरसस्सुवर्गं लोकं यतः पुरोडाशः कूर्मो भूत्वाऽनु प्रासर्पद्यत्कूर्ममुपदधाति यथा क्षेत्रविदञ्जसा नयत्येवमेवैनं कूर्मस्सुवर्गं लोकमञ्जसा नयति ।

என்பது.

உரை

அங்கிரசரிஷிகள் சுவர்க்கஞ் செல்லும்போது அவர்களுடன் ஆமையுஞ் சென்றதாமாதலின், இங்கு ஆமையை வைக்கில் உலகமறிந்தவன் போன்று சுவர்க்க வழியை யுணர்ந்து எசமானனைச் சுவர்க்கத்திற்கு அது அழைத்துக் கொண்டுபோகும் என்பதாம்.

மற்றொரு வகையால் ஆமைவைப்பதைப் புகழ்கின்றது.

பிராமணம்—13

मेधो वा एष पशूनां यत्कूर्मो यत्कूर्ममुपदधाति स्वमेव मेधं पश्यन्तः पशव उपतिष्ठन्ते ।

என்பது.

உரை.

இந்த ஆமை பசுக்களை யடைவதற்குக் காரணமாதலின் பசுக்களாம். ஆமையை வைத்தலின் பசுக்கள் தமது காரணத்தைப் பார்த்துக்கொண்டு எசமானனுடைய வீட்டையடையும் என்பதாம்.

உயிருடன்கூடிய ஆமையின் குணத்தை விதிக்கின்றது.

பிராமணம்—14

श्मशानं वा एतत्क्रियते यन्मृतानां पशूनाꣳ शीर्षाण्युपधीयन्ते यज्जीवन्तं कूर्ममुपदधाति तेनाश्मशानचिद्वास्तव्यो वा एष यत्कूर्मः ।

என்பது.

முதலிய வைத்தல்

உரை

இறந்துபோன, ஆடு குதிரை முதலியவற்றின் தலைகளை புதைக்கப் போவதால் இவ்விடம் சுடுகாடாகும். ஆமையை உயிருடன் புதைத்தலால் மயானத்தில் அக்கினிசயனஞ்செய்ததாகாது. மற்றும், உண்மையாகிய ஆமையின் முதுகின்மீது இப்பூமி இருத்தலின் ஆமையின் முதுகே நாம் வாழ்வதற்குரிய இடமாம்; ஆதலானும் ஆமையைவைத்தல் என்பதாம்.

வைக்கும் முன் அவ் வாமையைக் குளிப்பாட்டுதலை விதிக்கின்றது.

பிராமணம்—15

मधु वाता ऋतायत इति दध्ना मधुमिश्रेणाभ्यनक्ति स्वदयत्येवैनं ।

என்பது.

உரை.

தேன்கலந்த தயிராற் குளிப்பாட்டுதலால் அவ் வாமை இன்சுவை யுடையதாக ஆகின்றது என்பதாம்.

குளிப்பாட்டும் பொருளைப் புகழ்கின்றது.

பிராமணம்—16

ग्राम्यं वा एतदन्नं यद्दध्यारण्यं मधु यद्दध्ना मधुमिश्रेणाभ्यनक्त्युभयस्याव-रुद्ध्यै ।

என்பது.

உரை.

தேன்கலந்த தயிராற் குளிப்பாட்டில், காட்டிலும் நாட்டிலும் உள்ள இருவகை உணவுப் பொருள்களும் உண்டாகின்றன என்பதாம்.

அம்மந்திரத்திலுள்ள, த்யௌ, பிருதிவி என்னுஞ் சொற்களின் கருத்தை விளக்குகின்றது.

பிராமணம்—17

मही द्यौः पृथिवी च न इत्याहाऽऽभ्यामेवैनमुभयतः परिगृह्णाति ।

என்பது.

உரை

மண், வான் என்னுமிரண்டாலும் இவ்வாமை இருபுறத்தும் கவர்ந்து கொள்ளப்பட்டதாகின்றது என்பதாம்.

சுக்கால் கல்லிற்குக் கிழக்கில் ஆமையை வைத்தல் வேண்டுமெனல்.

பிராமணம்—18

प्राञ्चमुप दधाति सुवर्गस्य लोकस्य समष्ट्यै ।

என்பது.

உரை.

சுவர்க்கமும் கிழக்கில் இருக்கின்றதால் சுக்கான் கல்லுக்குக் கிழக்கில் அதை வைத்தல்வேண்டும் என்பதாம்.

ஆமையை மேற்கு முகமாய் வைத்தல் வேண்டுமென்று விதிக்கின்றது.

பிராமணம்—19

पुरस्तात्प्रत्यञ्चमुप दधाति तस्मात्पुरस्तात्प्रत्यञ्चः पशवो मेधमुपतिष्ठन्ते ।

என்பது.

உரை.

ஆமையை மேற்குமுகமாய் வைத்தலால் யூபத்தில் ஆட்டுக்கடாவும் மேற்கு முகமாய்க் கட்டப்பட்டு வேள்வியை வழிபடுகின்றது என்பதாம்.

உரலே வைக்கும் விதி.

பிராமணம்—20

यो वा अपनाभिमग्निं चिनुते यजमानस्य नाभिमनु प्रविशति स एनमीश्वरो हिꣳसितोरुलूखलमुप दधात्येषा वा अग्नेर्नाभिस्सनाभिमेवाग्निं चिनुतेऽहिꣳसायै ।

என்பது.

உரை.

நாபி இன்றிய அக்கினி சயனஞ் செய்யில் எசமானனுடைய நாபியில் துன்புண்டாகும். உரல் நாபிபோன்றிருத்தலின் அதை வைக்கில் துன்பம் வராது என்பதாம்.

உரல் செய்யவேண்டிய மரத்தை விதிக்கின்றது.

பிராமணம்—21

औदुम्बरं भवत्यूर्ग्वा उदुम्बर ऊर्जमेवावरुन्धे ।

என்பது.

முதலிய வைத்தல்)

உரை.

அத்தி மரத்தால் உரல் செய்யில் இரசத்தை யடைகின்றான் என்பதாம்.

உரல் வைக்குமிடத்தை விதிக்கின்றது.

பிராமணம் — 22

मध्यत उप दधाति मध्यत एवास्मा ऊर्जं दधाति तस्मान्मध्यत ऊर्जा भुञ्जते ।

என்பது.

உரை.

நடுவில் வைக்கில் இரசமுண்டாய் நடுவிலிருந்து இரசத்தை அநுபவிக்கின்றான் என்பதாம்.

உரலின் நீளம் இன்னதென்று விதிக்கின்றது.

பிராமணம்—23

इयन्द्भवति प्रजापतिना यज्ञमुखेन संमितम् ।

என்பது.

உரை.

ஒட்டைச்சாண் நீளமிருக்கில் பிரமன் வேள்விமுகத்தால் அளந்தெடுத்ததாகின்றது என்பதாம்.

வைப்பதற்கு முன், அதில் எல்லாத் தானியவகைகளையும் போட்டுக் குத்தல் வேண்டுமென்று விதிக்கின்றது.

பிராமணம்—24

अत्र हन्त्यन्नमेवाकः ।

என்பது.

உரை.

எல்லா வகைத் தானியங்களையும் போட்டுக் குத்துவதால் உணவுப் பொருள்களனைத்தையும் அடைகின்றான் என்பதாம்.

வேறிடத்திற் கூறியுள்ள, இதம் விஷ்ணுः, என்பது முதலிய மந்திரத்தை இதில் விநியோகப் படுத்துகின்றது.

பிராமணம்—25

वैष्णव्यर्चोप दधाति विष्णुर्वै यज्ञो वैष्णवा वनस्पतयो यज्ञ एव यज्ञं प्रतिष्ठापयति ॥

என்பது.

உரை.

எக்ஞமும் மரமும் விஷ்ணுவடிவமாம்; ஆதலின் எக்ஞத்திலேயே எக்ஞத்தை வைத்ததாக ஆகின்றது என்பதாம்.

எட்டாம் அநுவாகம்

முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் இரண்டாம்பிரபாடகம்

ஒன்பதாவது அநுவாகம்.

உகா, என்னுங் தொட்டி முதலியவைகளை வைத்தலை கூறும் பிராமணங்கள்.

ஐந்து பஞ்சாதிக்குமேல் நாற்பத்துநான்கு பதங்களைக் கொண்டது.

एषां वा एतल्लोकानां ज्योतिस्संभृतं यदुखा यदुखामुपदधा-
त्येभ्य एव लोकेभ्यो ज्योतिरवरुन्धे मध्यत उप दधाति मध्यत
एवास्मै ज्योतिर्दधाति तस्मान्मध्यतो ज्योतिरुपाऽऽस्महे सिकताभिः
पूरयत्येतद्वा अग्नेर्वैश्वानरस्य रूपꣳ रूपेणैव वैश्वानरमवरुन्धे यं
कामयेत क्षोधुकस्स्यादित्यूनां तस्योप [४८] दध्यात्क्षोधुक एव
भवति यं कामयेतानुपदस्यदन्नमद्यादिति पूर्णां तस्योप दध्याद-
नुपदस्यदेवान्नमत्ति सहस्रं वै प्रति पुरुषः पशूनां यच्छति सहस्र-
मन्ये पशवो मध्ये पुरुषशीर्षमुप दधाति सवीर्यत्वायोखायामपि
दधाति प्रतिष्ठामेवैनद्गमयति व्यृद्धं वा एतत्प्राणैरमेध्यं यत्पुरुष-

வைக்குதல்)

शीर्षममृतं खलु वै प्राणाः [४९] अमृतꣳ हिरण्यं प्राणेषु हिरण्यशल्कान्प्रत्यस्यति प्रतिष्ठामेवैनद्गमयित्वा प्राणैस्समर्धयति दध्ना मधुमिश्रेण पूरयति मधव्योऽसानीति शृतातङ्क्येन मेध्यत्वाय ग्राम्यं वा एतदन्नं यद्दध्यारण्यं मधु यद्दध्ना मधुमिश्रेण पूरयत्युभयस्यावरुद्ध्यै पशुशीर्षाण्युप दधाति पशवो वै पशुशीर्षाणि पशूनेवावरुन्धे यं कामयेतापशुस्स्यादिति [५०] विषूचीनानि तस्योप दध्याद्विषूच एवास्मात्पशून्दधात्यपशुरेव भवति यं कामयेत पशुमान्त्स्यादिति समीचीनानि तस्योप दध्यात्समीच एवास्मै पशून्दधाति पशुमानेव भवति पुरस्तात्प्रतीचीनमश्वस्योप दधाति पश्चात्प्राचीनमृषभस्यापशवो वा अन्ये गोअश्वेभ्यः पशवो गोअश्वानेवास्मै समीचो दधात्येतावन्तो वै पशवः [५१] द्विपादश्च चतुष्पादश्च तान्वा एतदग्नौ प्र दधाति यत्पशुशीर्षाण्युपदधात्यमुमारण्यमनु ते दिशामीत्याह ग्राम्येभ्य एव पशुभ्य आरण्यान्पशूञ्छुचमनूत्सृजति तस्मात्समावत्पशूनां प्रजायमानानामारण्याः पशवः कनीयाꣳसश्शुचा ह्यृतास्सर्पशीर्षमुप दधाति यैव सर्पे त्विषिस्तामेवावरुन्धे [५२] यत्समीचीनं पशुशीर्षैरुपदध्याद्ग्राम्यान्पशून्दꣳशुकास्स्युर्यद्विषूचीनमारण्यान्यजुरेव वदेदव तां त्विषिꣳरुन्धे या सर्पे न ग्राम्यान्पशून्हिनस्ति नाऽऽरण्यानथो खलूपधेयमेव यदुपदधाति तेन तां त्विषिमवरुन्धे या सर्पे यद्यजुर्वदति तेन शान्तम् [५३] ॥ ऊनां तस्योप प्राणास्स्यादिति वै पशवोरुन्धे चतुश्चत्वारिꣳशच्च ॥ ९ ॥

இது, உகா என்னுந் தீத்தொட்டியை வைப்பது முதலியவைகளைக் கூறுகின்றது.

உகாவை வைத்தலின் விதி.

பிராமணம்—1

एषां वा एतल्लोकानां ज्योतिस्संभृतं यदुखा यदुखामुपदधात्येभ्य एव लोकेभ्यो ज्योतिरवरुन्धे ।

என்பது.

உரை

'உகை' என்னும் மண் தொட்டி இம்மண்ணுலக முதலிய மூவுலகங்களின் ஒளிவடிவாம். அதை வைத்தலால் மூவுலக ஒளியும் அடையப்படுகின்றது என்பதாம்.

உகாவை வைக்குமிடத்தை விதிக்கின்றது.

பிராமணம்—2

मध्यत उप दधाति मध्यत एवास्मै ज्योतिर्दधाति तस्मान्मध्यतो ज्योतिरुपाऽऽस्महे ।

என்பது.

உரை.

உகாவை, சயனத்தின் நடுவில் வைத்தலால் நமது வயிற்றின் நடுவில் சாடராக்கினியா யிருப்பதை நாடோறு அநுபவிக்கின்றோம் என்பதாம்.

அவ்வுகாவில் மணலை நிரப்பல் வேண்டுமென்று விதிக்கின்றது.

பிராமணம்—3

सिकताभिः पूरयत्येतद्वा अग्नेर्वैश्वानरस्य रूपꣳ रूपेणैव वैश्वानरमवरुन्धे ।

என்பது.

உரை.

மணல் வைசுவானராக்கினி வடிவமாதலின் அவ்வுருவத்தால் அதையடைகின்றான் என்பதாம்.

வைக்குதல்)

உடன்பாட்டாலும் எதிர்மறையாலும் நிறையும்படி போடுதலைப் புகழ்கின்றது.

பிராமணம் — 4

यं कामयेत क्षोधुकस्स्यादित्यूनां तस्योप दध्यात्क्षोधुक एव भवति यं कामयेतानुपदस्यदन्नमद्यादिति पूर्णां तस्योप दध्यादनुपदस्यदेवान्नमत्ति ।

என்பது.

உரை.

மணல் நிறைய இருக்கில் உணவுப் பொருளும் நிறைந்திருக்கும். மணல் குறைந்திருக்கில் உணவுப் பொருளுங் குறையும் என்பதாம்.

'த்ரப்ஸ:' என்பது முதலிய மந்திரங்களால் பொன்துண்டுகளைப் போடல் வேண்டிய மனிதன்தலையை வைப்பதை விதிக்கின்றது.

பிராமணம்—5

सहस्रं वै प्रति पुरुषः पशूनां यच्छति सहस्रमन्ये पशवो मध्ये पुरुषशीर्षमुप दधाति सवीर्यत्वाय ।

என்பது.

உரை.

குதிரை முதலிய நான்கின் தலைகளும் ஒன்று சேர்ந்து எசமானனுக்கு ஆயிரம் பசுக்களைக் கொடுக்கின்றன. மனிதன்தலை ஒன்றே ஆயிரம் பசுக்களைக் கொடுக்கின்றது ஆதலின் அத்தலைகட்கு நடுவில் மனிதன் தலையை வைத்தல் வேண்டும். அதனால் வீரியத்தை அடைகின்றான் என்பதாம்.

அத்தகைய மனிதன்தலையை உகாவில் வைத்தல் வேண்டுமென்று விதிக்கின்றது.

பிராமணம்—6

उखायामपि दधाति प्रतिष्ठामेवैनद्गमयति ।

என்பது.

உரை.

உகையில் மனிதன் தலையை வைத்தலால் நிலைத்த உண்மையை அடைகின்றான் என்பதாம்.

மனிதன் தலையிலுள்ள துவாரங்களில் பொன் துண்டுகளைப் போடல் வேண்டுமென்னும் விதி.

பிராமணம்—7

व्यृद्धं वा एतत्प्राणैरमेध्यं यत्पुरुषशीर्षममृतं खलु वै प्राणा अमृतꣳ हिरण्यं प्राणेषु हिरण्यशल्कान्प्रत्यस्यति प्रतिष्ठामेवैनद्गमयित्वा प्राणैस्समर्धयति ।

என்பது.

உரை.

உயிரற்ற தலை வேள்விக்கு உரியதாகாமையின், அமுதம் என்னும் பொன் துண்டுகளை, பிராணன் ஓடும் மூக்கு முதலிய துளைகளிற் போட்டு விட்டால் மனிதன் தலை உயிருடையதாகின்றது என்பதாம்.

மனிதன் தலையில் தேன்கலந்த தயிரை நிறைத்து வைத்தல் வேண்டுமென்னும் விதி.

பிராமணம்—8

दध्ना मधुमिश्रेण पूरयति मधव्योऽसानीति ।

என்பது.

உரை.

"யான் மது ரசத்தை அநுபவித்தற்குரியவனாகின்றேன்" என்னுங் கருத்தால் இது நிரப்பப்படுகின்றது என்பதாம்.

தயிரின் குணச்சிறப்பை விதிக்கின்றது.

பிராமணம்—9

शृतातङ्क्येन मेध्यत्वाय ।

என்பது.

உரை.

வெள்ளி முதலியவைகளைப் போட்டு உறையவைத்தல், மோர் விட்டு உறைய வைத்தல் என தயிர் இருவகைப்படும்; அவற்றுள், பால்காச்சி அதில் மோர் விட்டு உறைய வைத்த தயிரை நிறைத்தல் வேண்டும். இதுவே வேள்விக்கு உரியது என்பதாம்.

வைக்குதல்)

தயிரையும் தேனையும் புகழ்கின்றது.

பிராமணம்—10

ग्राम्यं वा एतदन्नं यद्दध्यारण्यं मधु यद्दध्ना मधुमिश्रेण पूरयत्युभयस्याव-रुद्ध्यै ।

என்பது.

உரை.

இதனால் காட்டிலும் நாட்டிலுமுள்ள உணவுப் பொருள்களை யடைகின்றான். தேன், காட்டன்னம். தயிர் நாட்டன்னம் ஆனதால் என்பதாம்.

'ஆதித்யம் கர்ப்பகம்' என்பது முதலிய மந்திரங்களால் பசுக்களின் தலைகளைவைக்கும் விதி.

பிராமணம்—11

पशुशीर्षाण्युप दधाति पशवो वै पशुशीर्षाणि पशूनेवावरुन्धे ।

என்பது.

உரை.

பசுக்களின் தலைகளைவைத்தலால் பசுக்களை யடைகின்றான் என்பதாம்.

உடன்பாட்டாலும் எதிர்மறையாலும் பசுக்களின் தலைகளை, மனிதன் தலையைப்பார்த்துக் கொண்டிருக்கும்படி வைத்தல் வேண்டுமென்னும் விதி.

பிராமணம்—12

यङ्कामयेतापशुस्स्यादिति विषूचीनानि तस्योप दध्याद्विषूच एवास्मात्पशून्दधात्यपशुरेव भवति यङ्कामयेत पशुमान्त्स्यादिति समीचीनानि तस्योप दध्यात्समीच एवास्मै पशून्दधाति पशुमानेव भवति ।

என்பது.

உரை.

பசுக்களின் தலைகளைத் திருப்பிவைக்கில் பசுக்களில்லாதொழியும், நேர்முகமாய் வைக்கில் பசுக்கள் உண்டாகும் என்பதாம்.

பொதுவாய் விதித்ததைச் சிறப்பாய் விதிக்கின்றது.

பிராமணம்—13

पुरस्तात्प्रतीचीनमश्वस्योप दधाति पश्चात्प्राचीनमृषभस्यापशवो वा अन्ये गोअश्वेभ्यः पशवो गोअश्वानेवास्मै समीचो दधाति ।

என்பது.

உரை.

குதிரைத்தலையை, மனிதன் தலைக்குக் கிழக்கில் மேற்கு முகமாகவும், எருதின் தலையை, மேற்கில் கிழக்கு முகமாகவும் வைத்தல் வேண்டும். இதனால் முக்கிய பசுக்களல்லாத ஏனையவற்றின் தலைகளையும் மனிதன் தலைக்கு நேர்முகமாய் வைத்தது போலாகின்றது. ஏனெனின்? இவ்விரண்டும் பசுக்களுட் சிறந்தவைகளாதலின் என்பதாம்.

போற்றும் மந்திரங்களில், ஆரண்யங்களை அந்வயித்துக் கூறுவதன் கருத்தை விளக்குகின்றது.

பிராமணம்—14

एतावन्तो वै पशवो द्विपादश्च चतुष्पादश्च तान्वा एतदग्नौ प्रदधाति यत्पशुशीर्षाण्युपदधात्यमुमारण्यमनुते दिशामीत्याह ग्राम्येभ्य एव पशुभ्य आरण्यान्पशूञ्छुचमनूत्सृजति तस्मात्समावत्पशूनां प्रजायमाना- नामारण्याः पशवः कनीयाꣳसश्शुचा ह्यृताः ।

என்பது.

உரை.

இருகாற் பிராணியாகிய மனிதர்களும், நாற்காற் பிராணிகளான விலங்குகளும் பசுவெனப் படுகின்றன. ஆதலின், மனிதன் தலையும் விலங்கின் தலைகளையும் வைத்தலால் அவ்வனைத்தையும் தீயிலிட்டதாகின்றது. ஆதலின், ஆரண்ய விலங்குகளை இழுத்து இத்தீயின் தாபம் அவற்றிற் செல்லும்படி ஏவுகின்றது. இதனால் ஆரண்ய பசுக்கள் தாபத்தை யடையும். இது பற்றியே ஆரண்ய பசுக்கள் தாழ்ந்தவைகளென்றும் நாட்டிலுள்ள பசுக்கள் உயர்ந்தவைகளென்றுங் கொள்ளப்படுகின்றன என்பதாம்.

சூத்திரப்படி, பாம்பின்தலையை வைத்தலின் விதி.

பிராமணம்—15

सर्पशीर्षमुप दधाति यैव सर्पे त्विषिस्तामेवावरुन्धे ।

என்பது.

உரை.

பாம்பின் தலையை வைப்பதால் பாம்பினிடத்திலுள்ள ஒளியை யடைகின்றான் என்பதாம்.

வைக்குதல்)

பாம்பின் தலையைவைக்காமல் அம்மந்திரத்தைமாத்திரம் ஓதல் வேண்டுமென்னும் விதி.

பிராமணம்—16

यत्समीचीनं पशुशीर्षैरुपदध्याद्ग्राम्यान्पशून्दंशुकास्स्युर्यद्विषूचीनमारण्यान्यजुरेव वदेदव तां त्विषिंरुन्धे या सर्पे न ग्राम्यान्पशून्हिनस्ति नाऽऽरण्यान् ।

என்பது.

உரை.

பாம்பின் தலையை, மனிதன் தலைக்கு நேர்முகமாய் வைக்கில் நாட்டிலுள்ள பசுக்களை விஷந்தீண்டிவிடும். மாறுமுகமாய் வைக்கில் வனத்திலுள்ள பசுக்களை விஷந்தீண்டும். இருவகையுங் குற்றமுடையதாமாதலின் அதுவைக்கும் மந்திரத்தை மாத்திரம் ஓதல் வேண்டும். இதனால் அக்குற்றங்களில்லை. அவ்வொளியையும் அடைவான் என்பதாம்.

மந்திரம் ஓதுவதை விலக்கி, அதை வைத்தலே ஒளியைத்தரும் என்று விதிக்கின்றது.

பிராமணம்—17

अथो खल्पधेयमेव यदुपदधाति तेन तां त्विषिमवरुन्धे या सर्पे यद्यजुर्वदति तेन शान्तम् ॥

என்பது.

உரை.

பாம்பின் தலையை வைத்தால்தான் ஒளி அடையப்படும். மந்திரத்தை மாத்திரம் ஓதுதல் சாந்தமாமாதலின் விஷந்தீண்டாமல் இருக்கும் என்பதாம்.

ஒன்பதாம் அநுவாகம்

முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் இரண்டாம்பிரபாடகம்

பத்தாவது அநுவாகம்

முதலாவது அடுக்கில் வைக்கவேண்டிய அபஸ்யம் என்னுஞ் செங்கல் முதலியவைகளைக் கூறும் பிராமணங்கள்.

ஆறு பஞ்சாதிக்குமேல் முப்பத்தைந்து பதங்களைக் கொண்டது.

पशुर्वा एष यदग्निर्योनिः खलु वा एषा पशोर्वि क्रियते यत्प्राचीनमैष्टकाद्यजुः क्रियते रेतोऽपस्या अपस्या उप दधाति

योनावेव रेतो दधाति पञ्चोप दधाति पाङ्क्ताः पशवः पशूनेवास्मै प्रजनयति पञ्च दक्षिणतो वज्रो वा अपस्या वज्रेणैव यज्ञस्य दक्षिणतो रक्षाꣳस्यप हन्ति पञ्च पश्चात् [५४] प्राचीरुप दधाति पश्चाद्वै प्राचीनꣳ रेतो धीयते पश्चादेवास्मै प्राचीनꣳ रेतो दधाति पञ्च पुरस्तात्प्रतीचीरुप दधाति पञ्च पश्चात्प्राचीस्तस्मात्प्राचीनꣳ रेतो धीयते प्रतीचीः प्रजा जायन्ते पञ्चोत्तरतश्छन्दस्याः पशवो वै छन्दस्याः पशूनेव प्रजातान्त्स्वमायतनमभिपर्यूहत इयं वा अग्नेरतिदाहादबिभेत्सैताः [५५] अपस्या अपश्यत्ता उपाधत्त ततो वा इमां नात्यदहद्यदपस्या उपदधात्यस्या अनतिदाहायोवाच हेयमददित्स ब्रह्मणाऽन्नं यस्यैता उपधीयान्तै य उ चैना एवं वेददिति प्राणभृत उप दधाति रेतस्येव प्राणान्दधाति तस्माद्वद-न्प्राणन्पश्यञ्छृण्वन्पशुर्जायतेऽयं पुरः [५६] भुव इति पुरस्तादुप दधाति प्राणमेवैताभिर्दाधारायं दक्षिणा विश्वकर्मेति दक्षिणतो मन एवैताभिर्दाधारायं पश्चाद्विश्वव्यचा इति पश्चाच्चक्षुरेवैताभि-र्दाधारेदमुत्तरात्सुवरित्युत्तरतश्श्रोत्रमेवैताभिर्दाधारेयमुपरि मति-रित्युपरिष्टाद्वाचमेवैताभिर्दाधार दशदशोप दधाति सवीर्यत्वायाक्ष्णया [५७] उप दधाति तस्मादक्ष्णया पशवोऽङ्गानि प्रहरन्ति प्रतिष्ठित्यै याः प्राचीस्ताभिर्वसिष्ठ आर्ध्नोद्या दक्षिणा ताभिर्भरद्वाजो याः प्रतीचीस्ताभिर्विश्वामित्रो या उदीचीस्ताभिर्जमदग्निर्या ऊर्ध्वा-स्ताभिर्विश्वकर्मा य एवमेतासामृद्धिं वेदर्ध्नोत्येव य आसामेवं बन्धुतां वेद बन्धुमान्भवति य आसामेवं क्लृप्तिं वेद कल्पते [४८]

செங்கலை வைத்தல்)

अस्मै य आसामेवमायतनं वेदाऽऽयतनवान्भवति य आसामेवं प्रतिष्ठां वेद प्रत्येव तिष्ठति प्राणभृत उपधाय संयत उप दधाति प्राणानेवास्मिन्धित्वा संयद्भिस्संयच्छति तत्संयतार्ं संयत्त्वमथो प्राण एवापानं दधाति तस्मात्प्राणापानौ संचरतो विषूचीरुप दधाति तस्माद्विष्वञ्चौ प्राणापानौ यद्वा अग्नेरसंयतम् [५९] असुवर्ग्यमस्य तत्सुवर्ग्योऽग्निर्यत्संयत उपदधाति समेवैनं यच्छति सुवर्ग्यमेवाकस्त्र्यविर्वयः कृतमयानामित्याह वयोभिरेवायानव-रुन्धेऽयैर्वयार्ंसि सर्वतो वायुमतीर्भवन्ति तस्मादयर्ं सर्वतः पवते [६०] ॥ पश्चादेताः पुरोऽक्षणया कल्पतेऽसंयतं पञ्चत्रिर्ंशच्च ॥ १० ॥

இதில், முதலாவது அடுக்கில் வைக்கும் அபஸ்யங்கள் என்னுஞ் செங்கல்கள் கூறப்படுகின்றன.

அபஸ்யங்கள் என்னுஞ் செங்கல்களை வைக்கும் விதி.

பிராமணம்—1

पशुर्वा एष यदग्निर्योनिः खलु वा एषा पशोर्वि क्रियते यत्प्राचीनमैष्टका-यजुः क्रियते रेतोऽपस्या अपस्या उप दधाति योनावेव रेतो दधाति ।

என்பது.

உரை.

பசுவை யடைதற்குக் காரணமாதலின் பசு எனப்படும் அக்கினிக்கு, வேள்வியின் அங்கங்களை அநுட்டிப்பதால் யோனி பெரிதாயுண்டாயிற்று. அதில், பெண்களுக்கு இருதுகாலத்தில் சோணிதமிருத்தல் போன்று சோணிதமிருத்தல் வேண்டுமென்பதுபற்றி, சோணிதமாகிய இந்த அபஸ்யம் என்னுஞ் செங்கல்கள் வைக்கப்படுகின்றன என்பதாம்.

பொதுவாய் விதித்ததைச் சிறப்பாய் விதிக்கின்றது.

பிராமணம்—2

पञ्चोप दधाति पाङ्क्ताः पशवः पशूनेवास्मै प्रजनयति ।

என்பது.

உரை.

அக்கல்லுகளுள், ஐந்து கல்களை கிழக்கில் வைத்தலால், கால் நான்கும் வால் ஒன்றுமான ஐந்து அவயவங்களையுடைய பசுக்களை, இவன் பொருட்டு உண்டாக்குவதாயிற்றென்பதாம்.

அவற்றுள் இரண்டாவது ஐந்தை வைக்குமிடம் விதிக்கப்படுகின்றது.

பிராமணம்—3

पञ्च दक्षिणतो वज्रो वा अपस्या वज्रेणैव यज्ञस्य दक्षिणतो रक्षाꣳस्यप- हन्ति ।

என்பது.

உரை.

அதில், தெற்கில் வைக்கும் ஐந்தும், பகைவனைப் போக்குதற்கு வச்சிராயுதமாகின்றன என்பதாம்.

அவற்றுள், மூன்றாவது ஐந்தை வைக்குமிடத்தை விதிக்கின்றது.

பிராமணம்—4

पञ्च पश्चात्प्राचीरुप दधाति पश्चाद्वै प्राचीनꣳ रेतो धीयते पश्चादेवास्मै प्राचीनꣳ रेतो दधाति ।

என்பது.

உரை.

அவற்றுள், மேற்கில் கிழக்கு முகமாக ஐந்து கல்லுகளை வைக்கில் கருப்பைப் பையில் சோணிதத்தை விட்டது போலாகின்றது என்பதாம்.

மேற்கிலும் கிழக்கிலும் வைப்பவைகளை ஒன்றுசேர்த்துப் புகழ்கின்றது.

பிராமணம் —5

पञ्च पुरस्तात्प्रतीचीरुप दधाति पञ्च पश्चात्प्राचीस्तस्मात्प्राचीनꣳ रेतो धीयते प्रतीचीः प्रजा जायन्ते ।

என்பது.

செங்கலை வைத்தல்)

உரை.

மேற்கில் வைப்பதைக் கிழக்கு முகமாகவும், கிழக்கில் வைப்பதை மேற்கு முகமாகவும் மாறி வைத்தலால், கருப்பாதானம் யோனிக்கு நேராகவும், குழந்தை பிறத்தல் அதற்கு மாறாகவும் இருக்கின்றது என்பதாம்.

அவற்றுள், நான்காவது ஐந்தை வைக்குமிடம் விதிக்கப்படுகின்றது.

பிராமணம்—6

पश्चोत्तरतश्छन्दस्याः पशवो वै छन्दस्याः पशूनेव प्रजातान्त्स्वमायतन-मभिपर्यूहते ।

என்பது.

உரை.

வடக்கில் ஐந்து வைத்தலால் உண்டாகிய குழந்தைகள் தனது இடங்களை அடைவிக்கின்றன என்பதாம்.

வைக்குமிடங்களை விதித்துவிட்டு பொதுவாகப் புகழ்கின்றது.

பிராமணம்—7

इयं वा अग्नेरतिदाहादबिभेत्सैता अपस्या अपश्यत्ता उपाधत्त ततो वा इमां नात्यदहद्यदपस्या उपदधात्यस्या अनतिदाहाय ।

என்பது.

உரை.

இப்பூமி, அக்கினி மிகச் சுட்டுவிடுமென்று பயந்து அபஸ்யமென்னுஞ் செங்கல்களைக் கண்டுபிடித்துவைத்துச் சுடாமற் செய்துகொண்டது. அது போல், இங்கு அபஸ்யச் செங்கல்களை வைத்தலால் பூமிக்கு மிகுந்த சூடுண்டாகா தென்பதாம்.

மீண்டும் மற்றொரு வகையால் புகழ்கின்றது.

பிராமணம்—8

उवाच हैयमददित्स ब्रह्मणाऽन्नं यस्यैता उपधीयान्तै य उचैना एवं वेद ।

என்பது.

உரை.

அபஸ்யச் செங்கல்களை வைத்தவனும் அவற்றை உணர்ந்தவனும் முக்கிய விருத்தியால் அன்னத்தை யருந்துகின்றார்கள் என்று பிருதிவி கூறுகின்றது. ஆதலின் அபஸ்யங்களென்னுஞ் செங்கல்கள் பெருமை யுடையவைகள் என்பதாம்.

இனி, 'அயம்புரஃ' என்பது முதலிய மத்திரங்களால் பிராணபிருத் என்னுஞ் செங்கல்களை வைக்கும்விதி.

பிராமணம்—9

प्राणभृत उप दधाति रेतस्येव प्राणान्दधाति तस्माद्वदन्प्राणन्पश्यञ्छृण्व-न्पशुर्जायते ।

என்பது.

உரை.

சுக்கிலமென்னும் அபஸ்யங்களை வைத்துவிட்டு அதற்குமேல் பிராணபிருத் என்னுஞ் செங்கல்களை வைத்தலால் சுக்கிலத்தாலுண்டாகும் பசு, முக முதலியவைகளாற் பேசுதல் முதலான செய்கைகளை யுடையதாகின்றது என்பதாம்.

போதுவாய் விதித்ததைச் சிறப்பாய் விதிக்கின்றது.

பிராமணம்—10

अयं पुरो भुव इति पुरस्तादुप दधाति प्राणमेवैताभिर्दाधारायं दक्षिणा विश्वकर्मेति दक्षिणतो मन एवैताभिर्दाधारायं पश्चाद्विश्वव्यचा इति पश्चाच्चक्षुरेवैताभिर्दाधारेदमुत्तरात्सुवरित्युत्तरतश्श्रोत्रमेवैताभिर्दाधारेय-मुपरि मतिरित्युपरिष्टाद्वाचमेवैताभिर्दाधार ।

என்பது.

உரை.

அவ்வத் திக்குமந்திரங்களால் அவ்வத் திக்குக்களில் பிராணபிருத் செங்கல்களை வைத்தலால் சயனஞ் செய்யும் அக்கினிக்கு, அல்லது வேள்வித் தலைவனுக்கு, பிராணன், மனம், கண், காது, வாய் என்பவைகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட தாகின்றன என்பதாம்.

ஒவ்வொரு திக்கிலும் வைக்கவேண்டிய செங்கல்களின்
எண்ணை விதிக்கின்றது.

பிராமணம்—11

दशदशोप दधाति सवीर्यत्वाय ।

என்பது.

உரை.

ஒவ்வொரு திசையிலும் பத்துப்பத்தாக வைத்தலால் வீரியத்துடன் உறுதிப்பாடு உண்டாகின்றது என்பதாம்.

மூலையாக வைத்தல் வேண்டுமென்று விதிக்கின்றது.

பிராமணம்—12

अक्ष्णयोप दधाति तस्मादक्ष्णया पशवोऽङ्गानि प्रहरन्ति प्रतिष्ठित्यै ।

என்பது.

உரை.

மூலையாகமாறி வைத்தலால் பசுக்கள் கால்களை மாறிவைத்து நடக்கின்றன என்பதாம்.

ஒவ்வொரு திக்கிலும் வைக்குஞ் செங்கல்களையும், அம்மந்திரத்திற்
கூறியுள்ள இருடிகளையும் புகழ்கின்றது.

பிராமணம்—13

याः प्राचीस्ताभिर्वसिष्ठ आर्ध्नोद्या दक्षिणा ताभिर्भरद्वाजो याः प्रतीचीस्ता-भिर्विश्वामित्रो या उदीचीस्ताभिर्जमदग्निर्या ऊर्ध्वास्ताभिर्विश्वकर्मा ।

என்பது.

உரை.

கிழக்கு முதலிய திக்குக்களில் வைக்குங் கல்லுகளால், முறையே, வசிட்டர், பரத்துவாசர், விசுவாமித்திரர், சமதக்கினி, விசுவகர்மா என்பவர்கள் சம்பத்தை யடைகின்றார்கள் என்பதாம்.

இத்தன்மையை உணர்ந்தவனைப் புகழ்கின்றது.

பிராமணம்—14

य एवमेतासामृद्धिं वेदर्ध्नोत्येव य आसामेवं बन्धुतां वेद बन्धुमान्भवति य आसामेवं क्लृप्तिं वेद कल्पतेऽस्मै य आसामेवमायतनं वेदाऽऽयतनवान्भवति य आसामेवं प्रतिष्ठां वेद प्रत्येव तिष्ठति ।

என்பது.

உரை.

இவைகள் சம்பத்திற்குக் காரணமென்றுணர்ந்தவன் சம்பத்தையும், இவைகளின் கூட்டமாகிய பந்துத்தன்மையை யுணர்ந்தவன் பந்துக்களையும், இவைகளின் கோணலாந் தன்மையை யுணர்ந்தவன் கோணற்றன்மையையும், இவைகளின் இடங்களான திக்குக்களையுணர்ந்தவன் இடங்களையும், இவைகளின் தாபனத்தையுணர்ந்தவன் பெருமைகளையும் அடைகின்றார்கள் என்பதாம்.

இனி, அபானபிருத் என்னுஞ் செங்கல்களை விதிக்கின்றது.

பிராமணம்—15

प्राणभृत उपधाय संयत उप दधाति प्राणानेवास्मिन्धित्वा संयद्भिस्संयच्छति तत्संयताꣳ संयत्त्वमथो प्राण एवापानं दधाति तस्मात्प्राणाऽपानौ सञ्चरतः ।

என்பது.

உரை.

பிராணபிருத்ச் செங்கல்களை, உள்ளிற்றொடங்கி வெளியில் முடித்துவிட்டு, அபானபிருத்ச் செங்கல்களை வெளியிற்றொடங்கி உள்ளில் முடியும்படி வைக்கில் பிராணனிடத்தில் அபானனை வைத்ததாகின்றது; ஆதலின் பிராணனும் அபானனும் ஒன்றாய் ஓடுகின்றது என்பதாம்.

பிராணபிருத்துக்கு அபானபிருத்தை மாறாகவைத்தல் வேண்டும் என்பதை விதிக்கின்றது.

பிராமணம்—16

विषूचीरुप दधाति तस्माद्विष्वञ्चौ प्राणाऽपानौ ।

என்பது.

சேங்கலை வைத்தல்)

உரை.

இவைகள் தம்முள் மாறுபட்ட நிலைமையிலிருப்பதால் உலகிலும் பிராண அபானன்கள் ஒன்றற்கொன்று மாறுபட்டவைகளாயிருக்கின்றன என்பதாம். வெளியிலோடுவது பிராணன், உள்ளில் ஓடுவது அபானன் என்பதை யுணர்க.

சம்யதம் என்னும் அபானபிருத் செங்கல்களைப் புகழ்கின்றது.

பிராமணம்—17

**यद्वा अग्नेरसंयतमसुवर्ग्यमस्य तत्सुवर्ग्योऽग्निर्यत्संयत उपदधाति समे-
वैनं यच्छति सुवर्ग्यमेवाकः ।**

என்பது.

உரை.

அக்கினியின் அங்கங்களை நல்லவைகளாக வைக்காவிடில் சுவர்க்கத்திற்கு இனியது ஆகாது. அக்கினியை, சுவர்க்கத்திற்கு இனியதாகச் செய்தல் வேண்டுமென்பது விருப்பமாதலின் அவ்வண்ணஞ் செய்தற்பொருட்டு, 'சம்யதம்' என்னும் அபானபிருத் செங்கல்களை வைத்தல் வேண்டுமென்பதாம்.

முதல் மந்திரத்திலுள்ள ஒரு பகுதியின் கருத்தை விளக்குகின்றது.

பிராமணம்—18

ऽयत्निर्वयः कृतमयानामित्याह वयोभिरेवायानवरुन्धेऽयैर्वयांसि ।

என்பது.

உரை.

"ஒன்றரைவருட ஆயுளால் கிருதயுக முதலிய யுகத்தை யடைகின்முன்" என்றது, ஆயுள் விசேடத்தால் தான் கிருதம் முதலிய யுகங்கள் அடையப்படுகின்றன. பிறப்பிலாதவனுக்கு வயதின் விசேடமின்றி யுகங்களுடன் சம்பந்தம் பொருந்தாது. மாப்பிரளயத்தில், பிறப்பில்லாதவர்கட்கு வயது முதலிய விசேடங்கள் காணப்படாமையின், ஒன்றற்கொன்று வேண்டப்படும் வயதும், யுகமும் ஒன்றாகவே இங்கு வைக்கப்படுகின்றது என்பதாம்.

ஐந்து மந்திரங்களிலுமுள்ள, கீழ்காற்று, தென்காற்று என்பது முதலிய வாயு விசேடங்களைப் புகழ்கின்றது.

பிராமணம்—19

सर्वतो वायुमतीर्भवन्ति तस्मादयँ सर्वतः पवते ॥

என்பது.

உரை.

இச்செங்கல்களனைத்தும், 'வாயு' என்னுஞ் சொல்லுடன்கூடிய மந்திரங்களால் வைக்கப்படுவதால் உலகில், வாயுவும் எல்லாத்திக்குக்களிலும் ஓடுகின்றது என்பதாம்.

பத்தாம் அநுவாகம்.

முற்றிற்று.

பதினோராவது அநுவாகம்

விடயச் சுருக்கம்

गायद्वाभ्यां तु महिषी वावातातु महाद्वयात् ।
परिवृक्तीतु नाद्वाभ्यां कल्पयेयुरसेः पथान् ॥ १ ॥

அசுவமேதத்தில், முதல் மனைவி, இரண்டாவது மனைவி, மூன்றாவது மனைவி என்பவர்கள், முறையே இரண்டிரண்டு மந்திரங்களால், ஊசிகளால் குதிரையின் உடம்பிற் கோடு கிழித்தல்வேண்டும் என்பது.

ஐந்தாங்காண்டம் இரண்டாம்பிரபாடகம்

பதினோராவது அநுவாகம்

குதிரையிற் கோடு கிழிப்பவைகளைக் கூறும் மந்திரங்கள்.

ஒரு பஞ்சாதிக்குமேல் முப்பது பதங்களைக்கொண்டது.

गायत्री त्रिष्टुब्जगत्यनुष्टुक्पङ्क्त्या सह । बृहत्युष्णिहा ककुत्सूचीभिश्शिम्यन्तु त्वा । द्विपदा या चतुष्पदा त्रिपदा या च षट्पदा । सछन्दा या च विच्छन्दास्सूचीभिश्शिम्यन्तु त्वा । महानाम्नी रेवतयो विश्वा आशाः प्रसूवरीः । मेघ्या विद्युतो

கோடு கீறுதல்)

वाचस्सूचीभिश्शिम्यन्तु त्वा । रजता हरिणीस्सीसा युजो युज्यन्ते कर्मभिः । अश्वस्य वाजिनस्त्वचि सूचीभिश्शिम्यन्तु त्वा । नारीः [६१] ते पत्नयो लोम विचिन्वन्तु मनीषया । देवानां पत्नीर्दिशस्सूचीभिश्शिम्यन्तु त्वा । कुविदङ्ग यवमन्तो यवं चिद्यथा दान्त्यनुपूर्वं वियूय । इहेहैषां कृणुत भोजनानि ये बर्हिषो नमोवृक्तिं न जग्मुः [६२] ॥ नारीस्त्रिꣳशच्च ॥ ११ ॥

இதில், அசுவமேத யாகத்திற் கொன்ற குதிரையை அறுப்பதற்கு அரசனுடைய பத்தினிகள், அறுக்குமிடத்தைக் குறிப்பிட்டுக் கோடுகிழித்தல் வேண்டுமென்பதை விதிக்கின்றது.

கொல்லப்பட்டுக் கிடக்கும் குதிரையின் மார்பில் முகத்துப்பக்கம் நாபிக்குக் கிழக்கில், அரசனுடைய உத்தமமனைவியாகிய மகிழி என்பவள் பொன்னூசியைக்கொண்டு கோடு கிழிப்பதில் இது முதலாவது மந்திரம்:—

முதலாவது விநியோகம்.

गायत्री त्रिष्टुब्जगत्यनुष्टुक्पङ्क्त्या सह । बृहत्युष्णिहा ककुत्सूचीभिश्शिम्यन्तु त्वा ।

என்பது.

உரை.

குதிரையே! உன்னை, காயத்திரி தொடங்கி ககுத் வரையுள்ள சந்தங்களின் தேவதைகள் பொன்னூசிகளால் கோடு கிழிக்கின்றவைகளாகுக என்பதாம்.

இரண்டாம் மந்திரம்

द्विपदा या चतुष्पदा त्रिपदा या च षट्पदा । सछन्दा या च विच्छन्दास्सूचीभिश्शिम्यन्तु त्वा ।

என்பது.

உரை.

குதிரையே! உன்னை, துவிபதம் என்பது முதலிய மந்திரங்களை அபிமானிக்கும் அவ்வப் பெயர்கொண்ட தேவதைகள் பொன்னூசிகளால் கோடு கிழிக்கின்றவைகளாகுக என்பதாம்.

சாயணபாடியக் கருத்து.

இம்மந்திரங்களிரண்டாலும் மகிழி என்பவள் குதிரையின் உடம்பில் கோடு கிழித்தல்வேண்டும் என்பதாம்.

'வாவாதா' என்னும் மத்திமமனைவி, வெள்ளி ஊசியாற் கோடுகிழித்தலில் இது முதல் மந்திரம்:—

இரண்டாவது விநியோகம்

महानाम्नी रे वतयो विश्वा आशाः प्रसूवरीः। मेघ्या विद्युतो वाचस्सूची-भिश्शिम्यन्तु त्वा।

என்பது.

உரை.

குதிரையே! உன்னை (உன்மீது) தேவர்களுக்குள் மிகப் பிரசித்திபெற்ற மகாநாமிகள் என்னுந் தேவர்களும், தனமுடைய ரேவதிகள் என்னுந் தேவதைகளும், திக்தேவதைகளும், மின்னல்த் தேவதைகளும், முழக்காபிமானி தேவதைகளும், வெள்ளி ஊசிகளால் கோடு கிழிப்பார்களாக என்பதாம்.

இரண்டாம் மந்திரம்

रजता हरिणीस्सीसा युजो युज्यन्ते कर्मभिः। अश्वस्य वाजिनस्त्वचि सूची-भिश्शिम्यन्तु त्वा।

என்பது.

உரை.

குதிரையே! உன்னுடம்பில் தோலின்மீது கோடு கிழிப்பதற்கு உரியவைகளும், வெள்ளி, பொன், இரும்பு, ஈயம் முதலியவைகளின் மயங்களுமான ஊசிகளால் கோடு கிழிப்பதில் வன்மைமிக்க தேவர்கள் கோடு கிழிப்பார்களாக என்பதாம்.

சாயணபாடியக் கருத்து

இம்மந்திரங்களால் மார்பிற்கும் நாபிக்கும் நடுவில் பத்திமமனையாள் குதிரையிற் கோடு கிழித்தல்வேண்டும் என்பதாம்.

கோடு கீறுதல்)

அதமி (பரிவிருக்தி) என்னும் மூன்றாவது மனைவி, இரும்பு, அல்லது ஈயஊசிகளால் கோடு கிழித்தலில் இது முதலாம் மந்திரம் :—

மூன்றாவது விநியோகம்.

नारीस्ते पत्नयो लोम विचिन्वन्तु मनीषया। देवानां पत्नीर्दिशस्सूचीभिश्शिम्यन्तु त्वा।

என்பது

உரை.

குதிரையே ! உனது மயிர்களை, அரசனுடைய மனைவிகள் தமது புத்தியால் அறுப்பதற்கு வழி தெரிதற்பொருட்டுக் களைவார்களாக. அங்ஙனமே, 'சேநேந்திரஸ்ய' என்பது முதலிய அநுவாகத்திற்கூறிய தேவபத்தினிகளும், திக்கையபிமானிக்கும் தேவதைகளும், இருப்பூசிகளால் உன்மீது கோடு கிழிப்பார்களாக என்பதாம்.

இரண்டாம் மந்திரம்

कुविदङ्ग यवमन्तो यवञ्चिद्यथा दान्त्यनुपूर्वं वियूय। इहेहैषां कृणुत भोजनानि ये बर्हिषो नमोवृक्तिं न जग्मुः॥

என்பது.

உரை.

அசுவமேத அவியையருந்தும் அன்புடைய தேவர்காள்? நீவிர் யாகத்தின் எனது வணக்கங்களைக் கெடுக்காதீர்கள். மற்றோ, மிக அன்புடையவனாற் செய்யப்படும் யாக அவியை அருந்துவீர்களாக. எப்படியெனின்? உலகில், விதைகளுள், இது முளைக்கத்தக்கது, இது முளைக்கத்தகாதது என்றுணர்ந்து பிரித்து அவ்வண்ணம் விதையை ஊன்றுவதுபோல், இது வணக்க முதலிய இன்றிய அன்பிலான் அவி, இது வணக்கமுதலியவைகளையுடைய அன்புடையவனின் அவி என்று பகுத்துப் பார்த்து அன்புடைய எனது அவியை அருந்துவீர்களாக என்பதாம்.

பதினோராவது அநுவாகம்.

முற்றிற்று.

பன்னிரண்டாம் அநுவாகம்

விடயச்சுருக்கம்.

कस्त्वेति मन्त्र षट्केन ह्यश्वस्य त्वचमाच्छयति ॥१ ॥

ஆறு மந்திரங்களால் குதிரையின் தோலை அறுத்தல் என்பது.

ஐந்தாங்காண்டம் இரண்டாம்பிரபாடகம்

பன்னிரண்டாவது அநுவாகம்.

அறுப்பதற்குரிய மந்திரங்கள்.

ஒரு பஞ்சாதிக்குமேல் முப்பது பதங்களைக்கொண்டது.

कस्त्वा छ्यति कस्त्वा विशास्ति कस्ते गात्राणि शिम्यति । क उ ते शमिता कविः । ऋतवस्त ऋतुधा परुश्शमितारो विशासतु । संवत्सरस्य धायसा शिमीभिश्शिम्यन्तु त्वा । दैव्या अध्वर्यवस्त्वा छ्यन्तु विचशासतु । गात्राणि पर्वशस्ते शिमाः कृण्वन्तु शिम्यन्तः । अर्धमासाः परूꣳषि ते मासाश्छ्यन्तु शिम्यन्तः । अहोरात्राणि मरुतो विलिष्टम् [६३] सूदयन्तु ते । पृथिवी तेऽन्तरिक्षेण वायुश्छिद्रं भिषज्यतु । द्यौस्ते नक्षत्रैस्सह रूपं कृणोतु साधुया । शन्ते परेभ्यो गात्रेभ्यश्शमस्त्ववरेभ्यः । शमस्थभ्यो मज्जभ्यश्शमु ते तनुवे भुवत् ॥ [६४] विलिष्टं त्रिꣳशच्च ॥ १२ ॥

தலைப்புச் சொற்களைக்கொண்ட அநுவாகத்தொகை :—

विष्णुमुखा अन्नपते यावती वै वि वै पुरुषमात्रेणाऽग्ने तव श्रवो वयो ब्रह्म जज्ञानꣳ स्वयमातृण्णामेषां वै पशुर्गायत्री कस्त्वा द्वादश ॥ १२ ॥

தலைப்புச் சொற்களைக்கொண்ட பஞ்சாதிகளின் தொகை :—

विष्णुमुखा अपचितिमान्वि वा एतावश्रे तव श्रवस्स्वयमातृण्णां विषूचीनानि गायत्री चतुष्षष्टिः ॥ ६४ ॥

இதில், கோடுகிழித்து அறுப்பதற்குக் குறிவைத்த குதிரையின் மார்பு முதலிய இடங்களை அறுத்தல் கூறப்படுகின்றது. அவற்றுள்,

---

முதலாம் மந்திரம்.

कस्त्वा छ्यति कस्त्वा विशास्ति कस्ते गात्राणि शिम्यति । क उ ते शमिता कविः ।

என்பது.

உரை.

குதிரையே! உன்னை, பிரசாபதி அறுக்கின்றார். பிரசாபதியே அறுத்த அவயவங்களை தனித்தனி எடுத்துவைக்கின்றார். பிரசாபதியே அந்த அவயவங்களைப் பாதுகாக்கின்றார். அறுக்கும் வகையை நன்கு உணர்ந்த பிரசாபதியே உன்னை அறுக்கின்றார். ஆட்டுக்கடாவை அறுப்பவன்போன்ற மனிதனலன் என்பதாம்.

இரண்டாம் மந்திரம்.

ऋतवस्त ऋतुधा परुश्शमितारो विशासतु । संवत्सरस्य धायसा शिमीभिश्शिम्यन्तु त्वा ।

என்பது.

உரை.

குதிரையே! உன்னை, வசந்த இருது முதலிய தேவர்கள் சொல்லுகின்றவர்களாய் உன்னுடைய மணிக்கட்டுகளை நன்கு வைப்பார்களாக. வருட தேவதை, உன்னை ஏற்றுக்கொள்ளுந்தன்மையால் தணிக்கத்தக்க செயல்களால் தணிவிப்பார்கள்ளாக. அதாவது இருது தேவர்களே வருடத்தைத் துவங்குவோர்களாய் அவ்வக்காலங்கட்குரிய செயல்களால், உன்னை, தேவர்கட்கு உரியதாக்குவார்களாக என்பதாம்.

மூன்றும் மந்திரம்.

दैव्या अध्वर्यवस्त्वा छ्यन्तु विचशासतु । गात्राणि पर्वशस्ते शिमाः कृण्वन्तु शिम्यन्तः ।

என்பது.

உரை.

தெய்வீக அத்வர்யுக்களான விண் முதலியவர்களும், அசுவினிகளும், மற்றுமுள்ளவர்களும் உன்னை கத்தியால் அறுப்பார்களாக. மற்றும், அறுத்தவைகளை பலவகையாக வைப்பார்களாக. உனது அவயவங்களை, அவ்வக் கூறுகளைத் தழுவிப் பாதுகாப்பவர்களாய் அங்கங்குள்ள செயல்களைச் செய்வார்களாக என்பதாம்.

நான்காம் மந்திரம்.

अर्धमासाः परूꣳषि ते मासाश्छ्यन्तु शिम्यन्तः । अहोरात्राणि मरुतो-विलिष्टꣳ सूदयन्तु ते ।

என்பது.

உரை.

பட்சங்களின், மாதங்களின் அபிமானி தேவதைகள் உனது கூறுகளைப் பாதுகாத்து அறுப்பார்களாக. பகலிரவுகளை அபிமானிக்குந் தேவதைகளும் மருத்துக்களும் அறுத்த அவயவங்களை இன்சுவையுடையவைகளாகச் செய்வார்களாக என்பதாம்.

ஐந்தாம் மந்திரம்.

पृथिवी तेऽन्तरिक्षेण वायुश्छिद्रं भिषज्यतु । द्यौस्ते नक्षत्रैस्सह रूपं कृणोतु साधुया ।

என்பது.

உரை.

குதிரையே! அறுக்கப்பட்ட உனது அங்கங்கட்கு, அந்தரிக்கத்துடன் கூட பூமியும் வைத்தியஞ் செய்கின்றவைகளாக. வாயுவும் வைத்தியஞ் செய்க. உடுக்களுடன் கூடிய வானும், உனது வடிவாகிய அவி எவ்வாறு நல்லதாமோ, அவ்வாறு செய்க என்பதாம்.

ஆறும் மந்திரம்.

शन्ते परेभ्यो गात्रेभ्यश्शमस्त्ववरेभ्यः । शमस्थभ्यो मज्जभ्यश्शमु ते तनुवे भुवत् ॥

என்பது.

உரை.

குதிரையே! உனது சிறந்த அங்கங்களிலிருந்து இன்பம் உண்டாகுக. தாழ்ந்த அவயவங்களிலிருந்தும் இன்பம் உண்டாகுக. எலும்பு மூளைகளிலிருந்தும் இன்பம் உண்டாகுக. விரிப்பதிலென்? உனது உடம்பு முழுவதிலிருந்தும் சுகமே உண்டாகுக என்பதாம்.

சாயணபாடியக் கருத்து.

இந்த ஆறு மந்திரங்களாலும் அத்வரியு குதிரையின் தோலை, முன் கோடுகள் கிழித்துள்ள விடங்களில் அறுத்தல்வேண்டும் என்பதாம்.

பன்னிரண்டாம் அநுவாகம்

முற்றிற்று.

ஐந்தாங்காண்டத்தின் இரண்டாம் பிரபாடகமும்

முடிந்தது.

மூன்றும் பிரபாடகம்

விடயச் சுருக்கம்

चितिराद्या द्वितीयेस्यात्तृतीये तु चतुष्टयम् ।
द्वादशाऽत्रानुवाकास्स्युः प्रथमेत्विष्टका इमाः ॥ १ ॥
आश्विन्यश्च तथर्तव्याः प्राणभृत्संज्ञकास्तथा ।
अपस्याश्च वयस्याश्च द्वितीयस्यां चितौ श्रुताः ॥ २ ॥
द्वितीये स्वयमातृण्णा दिश्याः प्राणभृतस्तथा ।
बृहत्यो वालखिल्याश्च तृतीयस्यां चिता विमाः ॥ ३ ॥
तृतीय तुर्ययो रक्षणयास्तोमीयाश्च सृष्टयः ।
व्युष्टयश्चेष्टकाः प्रोक्ताश्चतुर्थ्यां च चिताविमाः ॥ ४ ॥
पञ्चमेत्वसपत्नाख्या विराडाख्याश्च वर्णिताः ।
षष्ठे तु स्तोमभागाख्या नाकसत्संज्ञकास्तुयाः ॥ ५ ॥
चोडाख्यास्स्वयमातृण्णा विकर्णीताश्च सप्तमे ।
छन्दोभिधा अष्टमेस्युः पञ्चम्यान्तु चिता विमाः ॥ ६ ॥
अथाऽवशिष्टाः कथ्यन्ते ताविज्ञेया यथाचिति ।
सयुजो मण्डलाख्याश्च विश्वज्योतिष इत्यमूः ॥ ७ ॥
नवमे दशमे वृष्टिसनि संयानिकाभिधाः ।
आदित्याख्या घृताख्याश्च यशोदाश्चेतिवर्णिताः ॥ ८ ॥
एकादशे तु भूयस्कृदग्नि रूपाभिधा अपि ।
द्रविणोदास्तथाऽऽयुष्यास्स्यादग्निहृदयाभिधा ॥ ९ ॥
ऋतव्याश्चेत्येवमेताः क्रमादिह समीरिताः ।
द्वादशेत्वश्वमेधस्य विधिरित्यत्र निर्णयः ॥ १० ॥

இரண்டாம் பிரபாடகம், முதல் அடுக்குச் (சிதி) சொல்லப்பட்டது. இம்மூன்றும் பிரபாடகத்தில், எஞ்சிய நான்கு அடுக்குக்களுங் கூறப்படுகின்றன. அதிலும் பன்னிரண்டு அநுவாகங்கள் இருக்கின்றன. அவற்றுள், முதலாவது அநுவாகத்தில், இரண்டாவது அடுக்கில் வைக்கவேண்டிய ஆசுவினி முதலிய இஷ்டகைகளையும், இரண்டாவதில், மூன்றுவது அடுக்கில் வைக்கவேண்டிய இயற்கைத் துவாரமுள்ள சுக்கான் கல் முதலியவைகளையும், மூன்றுவது நான்காவதுகளில் நான்காவது அடுக்கில் வைக்கவேண்டிய அட்சண்யாஸ்தோமம் முதலிய செங்கல்களையும், ஐந்தாவதில் ஐந்தாவது அடுக்கில் வைக்கவேண்டிய, அசுபத்னம், விராஜம் என்னுஞ் செங்கல்களையும்,

செங்கல்கள்)

ஆறுவதில் ஸ்தோமபாகம், என்னுஞ் செங்கல்களேயும், ஏழாவதில் நாக சத்து முதலிய செங்கல்களேயும், எட்டாவதில் சந்தம் என்னுஞ் செங்கல் களேயும், ஒன்பதாவதில் சாயுக் முதலிய செங்கல்களேயும், பத்தாவதில் விருஷ்டிசனி முதலிய செங்கல்களேயும், பதினோராவதில் பூயஸ்க்ருத் என் பது முதலிய இஷ்டகைகளேயும், பன்னிரண்டாவதில் அசுவமேதத்தின் விதியையுங் கூறுகின்றது என்பது.

ஐந்தாங்காண்டம் மூன்றும் பிரபாடகம்

முதலநுவாகம்

ஆசுவினி முதலிய நான்குவகைச் செங்கல்களேக் கூறும் பிராமணங்கள்.

ஐந்து பஞ்சாதிக்குமேல் ஐந்து பதங்களேக்கொண்டது.

उत्सन्नयज्ञो वा एष यदग्निः किं वाऽहैतस्य क्रियते किं वा न यद्वै यज्ञस्य क्रियमाणस्यान्तर्यन्ति पूयति वा अस्य तदाश्विनी-रुप दधात्यश्विनौ वै देवानां भिषजौ ताभ्यामेवास्मै भेषजं करोति पञ्चोप दधाति पाङ्क्तो यज्ञो यावानेव यज्ञस्तस्मै भेषजं करोत्यृतव्या उप दधात्यृतूनां क्लृप्त्यै [१] पञ्चोप दधाति पञ्च वा ऋतवो यावन्त एवर्तवस्तान्कल्पयति समानप्रभृतयो भवन्ति समानोदर्कास्तस्मात्समाना ऋतव एकेन पदेन व्यावर्तन्ते तस्मा-दृतवो व्यावर्तन्ते प्राणभृत उप दधात्यृतुष्वेव प्राणान्दधाति तस्मात्समानास्सन्त ऋतवो न जीर्यन्त्यथो प्रजनयत्येवैनानेष वै वायुर्यत्प्राणो यद्दतव्या उपधाय प्राणभृतः [२] उपदधाति तस्मात्सर्वानृतूननु वायुरा वरीवर्ति वृष्टिसनीरुप दधाति वृष्टिमेवाव-रुन्धे यदेकधोपदध्यादेकमृतुं वर्षेदनुपरिहारꣳ सादयति तस्मा-त्सर्वानृतून्वर्षति यत्प्राणभृत उपधाय वृष्टिसनीरुपदधाति तस्मा-द्वायुप्रच्युता दिवो वृष्टिरीर्ते पशवो वै वयस्या नानामनसः खलु

वै पशवो नानाव्रतास्तेऽप एवाभि समनसः [३] यं कामयेताऽपशुस्स्यादिति वयस्यांस्तस्योपधायाऽपस्या उप दध्यादसंज्ञानमेवास्मै पशुभिः करोत्यपशुरेव भवति यं कामयेत पशुमान्त्स्यादित्यपस्यास्तस्योपधाय वयस्या उप दध्यात्संज्ञानमेवास्मै पशुभिः करोति पशुमानेव भवति चतस्रः पुरस्तादुप दधाति तस्माच्चत्वारि चक्षुषो रूपाणि द्वे शुक्ले द्वे कृष्णे [४] मूर्धन्वतीर्भवन्ति तस्मात्पुरस्तान्मूर्धा पञ्च दक्षिणायाꣳ श्रोण्यामुप दधाति पञ्चोत्तरस्यां तस्मात्पश्चाद्वर्षीयान्पुरस्तात्प्रवणः पशुर्बस्तो वय इति दक्षिणेऽꣳस उप दधाति वृष्णिर्वय इत्युत्तरेऽꣳसावेव प्रति दधाति व्याघ्रो वय इति दक्षिणे पक्ष उप दधाति सिꣳहो वय इत्युत्तरे पक्षयोरेव वीर्यं दधाति पुरुषो वय इति मध्ये तस्मात्पुरुषः पशूनामधिपतिः [५]॥
क्लृप्त्या उपधाय प्राणभृतस्समनसः कृष्णे पुरुषो वय इति पञ्च च ॥ १ ॥

இதில், இரண்டாம் அடுக்கிலுள்ள 'ஆசுவினி' என்பது முதலிய நான்கு வகைச் செங்கல்கள் கூறப்படுகின்றன.

ஆசுவனிகள் என்னுஞ் செங்கல்கள் வைப்பதை விதிக்கின்றது.

பிராமணம்—1

उत्सन्नयज्ञो वा एष यदग्निः किं वाऽहैतस्य क्रियते किं वा न यद्वै यज्ञस्य क्रियमाणस्यान्तर्यन्ति पूयति वा अस्य तदाश्विनीरुप दधात्यश्विनौ वै देवानां भिषजौ ताभ्यामेवाऽस्मै भेषजं करोति ।

எபன்து.

உரை.

இம்மகாக்கினி சயனமானது, பல் வேறுவகைப்பட்ட கர்மச்செயல்களையுடையதாமாதலின், மறதியால் சிலது செய்யா தொழிந்துவிடும் முழுதை

யும் உணர்ந்து செய்தல் முடியாது; இது இவ்வாற்ருல் குறைந்த அங்கமுடையதாய் விடுகின்றது. அக்குற்றம் நீங்குதற்பொருட்டு ஆசுவினிச் செங்கல்களை வைக்கில், தேவவைத்தியர்களான அசுவினிகள் வேள்விக்கு வைத்தியஞ்செய்வார்கள் என்பதாம். அசுவினிதேவர்களைக் கூறுமந்திரத்தால் வைப்பது ஆசுவினியாம்.

அச்செங்கல்களின் தொகையை விதிக்கின்றது.

பிராமணம்—2

पञ्चोप दधाति पाङ्क्तो यज्ञो यावानेव यज्ञस्तस्मै भेषजं करोति ।

என்பது.

உரை.

ஐந்து செங்கல்களை வைத்தலால், ஐவகை அவிகளைக்கொண்ட எக்ஞமுழுதிற்கும் வைத்தியஞ் செய்ததாகின்றது என்பதாம்.

ரிதவ்யங்கள் என்னுஞ் செங்கல்களின் விதி.

பிராமணம்—3

ऋतव्या उप दधात्यृतूनां क्लृप्त्यै ।

என்பது.

உரை.

இதனல், வசந்தமுதலிய இருதுக்கள் தத்தமது செயலைச்செய்வதற்கு வன்மையுடையவைகளாகின்றன என்பதாம்.

'இருதவ்யம்' என்னும் செங்கல்களின் தொகையை விதிக்கின்றது.

பிராமணம்—4

पञ्चोप दधाति पञ्च वा ऋतवो यावन्त एवर्तवस्तान्कल्पयति ।

என்பது.

உரை.

இது ஐந்து இருதுக்களையும் வன்மையுடையவைகளாகச் செய்கின்றது. பனிக்காலம், ஈண்டு குளிர்காலங்களையும் ஒன்ருக்கி இருதுக்கள் ஐந்தெனப்பட்டன என்பதாம்.

மந்திரங்களின் முதலுங் கடையுஞ் சேர்த்துக்கொள்வதை விதிக்கின்றது.

பிராமணம்—5

समानप्रभृतयो भवन्ति समानोदर्कास्तस्मात्समाना ऋतवः ।

என்பது.

உரை.

எல்லா மந்திரங்களின் தொடக்க முடிவுகள் ஒப்பாயிருத்தலின் எல்லா இருதுக்களும் இரண்டிரண்டு மாதங்கள் கொண்டவைகளா யிருக்கின்றன என்பதாம்.

மந்திரங்களிலுள்ள சமானக் கூறுகளைக்கூறிவிட்டு வேறுபடுத்தும் அம்சங்களைக் கூறுகின்றது.

பிராமணம்—6

एकेन पदेन व्यावर्तन्ते तस्मादृतवो व्यावर्तन्ते ।

என்பது.

உரை.

வசுக்களால், என்பது ஒரு சொல்லாம்; இது ஏனைய மந்திரங்களில் வேறுபடுகின்றன. இவ்வாறே மற்றவையும் வேறுபடுகின்றன. இதனால், இருதுக்கள் சமமாய் இரண்டிரண்டு மாதங்களை யுடையவைகளாயிருப்பினும், வசந்தம் என்பது முதலான வேறுபாடுடையவைகளாயிற்று என்பதாம்.

பிராணபிருத் என்னுஞ் செங்கல்களை வைக்கும் விதி.

பிராமணம்—7

प्राणभृत उप दधात्यृतुष्वेव प्राणान्दधाति तस्मात्समानास्सन्त ऋतवो न जीर्यन्त्यथो प्रजनयत्येवैनान् ।

என்பது.

உரை.

இருதுச்செங்களை வைத்து அதன்மேல் பிராணபிருத் என்னுஞ் செங்கல்களை வைக்கில் இருதுக்கள் மீண்டும் மீண்டும் உண்டாகும்போது சமானமாய்க் காணப்படுகின்றன. கேடுமில்லை. மற்றும், பிராணனை வைத்ததால் தான் மீண்டும் மீண்டும் உண்டாகின்றன என்பதாம்.

பிராண பிருத் என்பவைகளையே மற்ருெருவகையாகப் புகழ்கின்றது.

பிராமணம்—8

**एष वै वायुर्यत्प्राणो यद्वतव्या उपधाय प्राणभृत उपदधाति तस्मात्सर्वा-
नृतूनन्नु वायुरा वरीवर्ति ।**

என்பது.

உரை

இருதுக் செங்கல்களுக்குப் பிறகு, பிராணபிருத் என்னும் வாயுச்செங்கல்களை வைத்தலால், வாயுவானது இருதுக்களைத் தழுவி மீண்டும் மீண்டுஞ் சலிக்கின்றது என்பதாம்.

விருஷ்டி சனி (மழை பெய்விக்கும்) என்னுஞ் செங்கல்களை வைக்கும் விதி.

பிராமணம்—9

वृष्टिसनीरुप दधाति वृष्टिमेवाऽवरुन्धे ।

என்பது.

உரை.

இக்கற்களை வைத்தலால் மழை பெய்கின்றது என்பதாம்.

அக்கல்லுகளை வைக்கும் முறையின் சிறப்பை விதிக்கின்றது.

பிராமணம்—10

यदेकधोपदध्यादेकमृतुं वर्षेदनुपरिहारं सादयति तस्मात्सर्वानृतून्वर्षति ।

என்பது.

உரை.

ஐந்து கல்லுகளையும் ஒரே முயல்வால் வைக்கில் ஒரே இருதுகாலத்தில்தான் மழை பெய்யும், ஆதலின், கிழக்கிலிருந்து ஒவ்வொரு கல்லுக்கும் வலம் வந்து எல்லாத் திக்குக்களிலும் தனித்தனியே வைத்தல் வேண்டும் என்பதாம்.

பிராணபிருத் செங்கலையும், விருஷ்டி சனிச் செங்கலையும் முன்பின்னுய் வைத்தலைப் புகழ்கின்றது.

பிராமணம்—11

यत्प्राणभृत उपधाय वृष्टिसनीरुपदधाति तस्माद्वायुप्रच्युता दिवो वृष्टिरीर्ते ।

என்பது.

உரை.

வானிலிருந்து வாயுவாற் செலுத்தப்பட்டு, பிறகு மண்ணில் மழை பெய்கின்றது என்பதாம்.

வயஸ்யங்கள் என்னுஞ் செங்கல்களுக்கும், விருஷ்டிசனி என்னுஞ் செங்கல்களுக்கும் முன்பின்னாகிய தொடர்ச்சியை உறுதிப்படுத்துவதற்குத் துதிக்கின்றது.

பிராமணம்—12

पशवो वै वयस्या नानामनसः खलु वै पशवो नानाव्रतास्तेऽप एवाभि समनसः ।

என்பது.

உரை.

வயஸ்யங்கள் என்னுஞ் செங்கல்கள் பசுக்களையடைவதற்குக் காரணங்களாதலின் பசுக்தளாம். பசுக்களோ, பல் வேறுவகைப்பட்ட இச்சை செயல்களை யுடையவைகளாதலின் வேறுவகைப்பட்ட மனங்களையுடையவைகள். அங்ஙனமாயினும், நடுப்பகலில் நீரருந்தச் செல்லும்போது ஒன்றாய்ச்சென்று நீரருந்துகின்றன. அதைப்போல் இங்கும், அபஸ்யம்-விருஷ்டிசனி என்பவைகள் தொடர்பானவைகள் என்பதாம்.

உடன்பாட்டாலும் எதிர்மறையாலும் வயஸ்யச் செங்கல்கள் பின்னால் வைக்கவேண்டு மேன்பதை விதிக்கின்றது.

பிராமணம்—13

यं कामयेताऽपशुस्स्यादिति वयस्यास्तस्योपधायाऽपस्या उप दध्यादसंज्ञानमेवास्मै पशुभिः करोत्यपशुरेव भवति यं कामयेत पशुमान्त्स्यादित्यपस्यास्तस्योपधाय वयस्या उप दध्यात्संज्ञानमेवास्मै पशुभिः करोति पशुमानेव भवति ।

என்பது.

உரை.

வயஸ்யங்கள் என்னுஞ் செங்கல் முன்னர் வைக்கில் ஏனைய பசுக்கள் அடக்கப்பட்டவைகளானதால் எசமானன் பசுக்களை யடையமாட்டான். வயஸ்யச் செங்கல்களைப் பின்னர் வைக்கில் ஏனைய பசுக்கள் அடங்காமையின் எசமானன் பசுக்களையடைகின்றான் என்பதாம்.

'விஷ்டம்பஃ' என்பது முதலிய மந்திரங்களால் கிழக்கில் நான்கை வைத்தல் வேண்டுமேன்று விதிக்கின்றது.

பிராமணம்—14

चतस्रः पुरस्तादुप दधाति तस्माच्चत्वारि चक्षुषो रूपाणि द्वे शुक्ले द्वे कृष्णे।

என்பது.

உரை.

கிழக்கில் நான்கு செங்கல்களை வைத்தல், கண்களில் வெண்மை வட்ட வடிவுகளும், இரண்டு கருமை வட்டவடிவுகளும் இருத்தலால் அவைபோன்றன என்பதாம்.

அந் நான்கு மந்திரங்களுள் ஈற்றிலுள்ள மந்திரத்திலிருக்கின்ற 'மூர்த்த' என்னுஞ் சொல்லைப் புகழ்கின்றது.

பிராமணம்—15

मूर्धन्वतीर्भवन्ति तस्मात्पुरस्तान्मूर्धा ।

என்பது.

உரை.

சிரசு (மூர்த்தா) என்பதையுடைய மந்திரத்தால் கிழக்கில் வைத்தலால் பறவை வடிவாகி மகாக்கினி சயனத்திற்குத் தலை கிழக்கிலிருக்கின்றது என்பதாம்.

'த்ரயவித்வயஃ' என்பது முதலிய ஐந்து செங்கல்களுக்கும், பஷ்டவாத்வயஃ, என்பது முதலிய ஐந்து செங்கல்களுக்கும் இடத்தை விதிக்கின்றது.

பிராமணம்—16

पञ्च दक्षिणायाᳪ श्रोण्यामुप दधाति पञ्चोत्तरस्यां तस्मात्पश्चाद्वर्षीयान्पुर-स्तात्प्रवणः पशुः ।

என்பது.

உரை.

கருடனுடைய சுரோணிகளில் இச்செங்கல்களை வைத்தலால், மிருதி பற்றி, பசுக்கட்கும் பின் பக்கம் பருத்திருக்கின்றது என்பதாம்.

இரண்டு மந்திரங்களால் வைக்கும் இடங்களை விதிக்கின்றது.

பிராமணம்—17

बस्तो वय इति दक्षिणेऽंस उप दधाति वृष्णिर्वय इत्युत्तरेऽंसावेव प्रति दधाति ।

என்பது.

உரை.

இவ்விரண்டு மந்திரங்களாலும், வலது தோள் இடது தோள்களில் வைத்தல்வேண்டும். இதனால் அக்கினிக்குத் தோள்களிரண்டுஞ் செய்யப் பெற்றதாகின்றன என்பதாம்.

வேறுமந்திர மிரண்டாலும் விதிக்குஞ் செங்கல்கட்கு இடங்களை விளக்கு கின்றது.

பிராமணம்—18

व्याघ्रो वय इति दक्षिणे पक्ष उप दधाति सिंहो वय इत्युत्तरे पक्षयोरेव वीर्यं दधाति ।

என்பது

உரை.

சிம்மம், புலி இரண்டும் மிகுந்த வீரியங்களையுடையவைகளாதலின், அச்சொற்களைக்கொண்ட மந்திரங்களால் செங்கல்களை வைத்தலால் இரண்டு சிறகுகளுக்கும் வீரியத்தை யுண்டாக்கினதாகின்றது என்பதாம்.

ஏனைய மந்திரத்தால் வைக்கப்படும் செங்கலின் இடத்தை விதிக்கின்றது.

பிராமணம்—19

पुरुषो वय इति मध्ये तस्मात्पुरुषः पशूनामधिपतिः ॥

என்பது.

உரை.

புருடன் என்னுஞ் சொல்லையுடைய மந்திரத்தால், நடுவில் செங்கல்களை வைத்ததால் பசுக்களுக்கு இவன் தலைவனாகின்றான் என்பதாம். பசுக்களோ, வயஸ்யங்கள் என்பது முன் கூறப்பட்டது.

முதலநுவாகம்
முற்றிற்று.

சுக்கான்கல்)

ஐந்தாங்காண்டம் மூன்றாம் பிரபாடகம்

இரண்டாவது அநுவாகம்

இயற்கைத் துளையுடைய சுக்கான்கல் முதலியவற்றைக் கூறும் பிராமணங்கள்.

ஆறு பஞ்சாதிக்குமேல் முப்பத்துநான்கு பதங்களைக் கொண்டது.

इन्द्राग्नी अव्यथमानामिति स्वयमातृण्णामुप दधातीन्द्राग्निभ्यां
वा इमौ लोकौ विधृतावनयोर्लोकयोर्विधृत्या अधृतेव वा एषा
यन्मध्यमा चितिरन्तरिक्षमिव वा एषेन्द्राग्नी इत्याहेन्द्राग्नी वै
देवानामोजोभृतावोजसैवैनामन्तरिक्षे चिनुते धृत्यै स्वयमातृण्णा-
मुप दधात्यन्तरिक्षं वै स्वयमातृण्णाऽन्तरिक्षमेवोप धत्तेऽश्वमुप
[६] घ्रापयति प्राणमेवास्यां दधात्यथो प्राजापत्यो वा अश्वः
प्रजापतिनैवाग्निं चिनुते स्वयमातृण्णा भवति प्राणानामुत्सृष्ट्या-
अथो सुवर्गस्य लोकस्याऽनुख्यात्यै देवानां वै सुवर्गं लोकं यतां
दिशस्समव्लीयन्त त एता दिश्या अपश्यन्ता उपादधत ताभिर्वै
ते दिशोऽदृꣳहन्यद्दिश्या उपदधाति दिशां विधृत्यै दश प्राणभृतः
पुरस्तादुप [७] दधाति नव वै पुरुषे प्राणा नाभिर्दशमी प्राणानेव
पुरस्ताद्धत्ते तस्मात्पुरस्तात्प्राणा ज्योतिष्मतीमुत्तमामुप दधाति
तस्मात्प्राणानां वाग्ज्योतिरुत्तमा दशोप दधाति दशाक्षरा विरा-
ड्विराट्छन्दसां ज्योतिर्ज्योतिरेव पुरस्ताद्धत्ते तस्मात्पुरस्ताज्ज्योति-
रुपाऽऽस्महे छन्दाꣳसि पशुष्वाजिमयुस्तान्बृहत्युदजयत्तस्माद्बार्हताः
[८] पशव उच्यन्ते मा छन्द इति दक्षिणत उप दधाति तस्मा-
द्दक्षिणावृतो मासाः पृथिवी छन्द इति पश्चात्प्रतिष्ठित्या अग्निर्देव-

तेत्युत्तरत ओजो वा अग्निरोज एवोत्तरतो धत्ते तस्मादुत्तरतोऽभि प्रयायी जयति षट्त्रिꣳशत्संपद्यन्ते षट्त्रिꣳशदक्षरा बृहती बार्हताः पशवो बृहत्यैवास्मै पशूनवरुन्धे बृहती छन्दसाꣳ स्वाराज्यं परीयाय यस्यैताः [९] उपधीयन्ते गच्छति स्वाराज्यꣳ सप्त वालखिल्याः पुरस्तादुप दधाति सप्त पश्चात्सप्त वै शीर्षण्याः प्राणा द्वाववाञ्चौ प्राणानाꣳ सवीर्यत्वाय मूर्धाऽसि राडिति पुरस्तादुप दधाति यन्त्री राडिति पश्चात्प्राणानेवाऽस्मै समीचो दधाति [१०] ॥ अश्वमुप पुरस्तादुप बार्हता एताश्चतुस्त्रिꣳशच्च ॥ २ ॥

இது, மூன்றும் அடுக்கில் வைக்கும் இயற்கைத் துவாரங்களையுடைய சுக்கான்கல் முதலானவைகளைக் கூறுகின்றது.

இயற்கைத் துளைகளையுடைய சுக்கான் கல்லைத் தொட்டுவைப்பதை விதிக்கின்றது.

பிராமணம்—1

इन्द्राग्नी अव्यथमानामिति स्वयमातृण्णामुप दधातीन्द्राग्निभ्यां वा इमौ लोकौ विधृतावनयोर्लोकयोर्विधृत्यै ।

என்பது.

உரை.

இந்திரன் அக்கினி என்னும் இருவராலும் இரண்டுலகமும் நிலைபெற்றிருக்கின்றன. இங்கும் அவ்வாறிருத்தற் பொருட்டு 'இந்திராக்கினி' என்பது முதலிய மந்திரத்தால் அக் கல் தொட்டுவைக்கப்படுகின்றது என்பதாம்.

மந்திரத்திலுள்ள இந்திராக்கினிகளை மற்றொருவகையாகப் புகழ்கின்றது.

பிராமணம்—2

अधृतेव वा एषा यन्मध्यमा चितिरन्तरिक्षमिव वा एषेन्द्राग्नी इत्याहेन्द्राग्नी वै देवानामोजोभृतावोजसैवैनामन्तरिक्षे चिनुते धृत्यै ।

என்பது.

முதலானவைகள்)

உரை.

மூன்றுவது செங்கல் அடுக்கு பூமியின்மீது படாதிருத்தலால் அது நிலைத்திருத்தற்பொருட்டு, தேவர்களுள் வன்மைமிகுந்த இந்திரனையும் அக்கினியையுங் கொண்டதால் அவர்களையுடைய மந்திரத்தால் இங்கு வைப்பதால் அவர்களால் இது நிலைநிறுத்தப்படுகின்றது என்பதாம்.

முன்விதித்த இயற்கைச் சுக்கான் கல்லை எடுத்துக் கூறிப்புகழ்கின்றது.

பிராமணம்—3

स्वयमातृण्णामुप दधात्यन्तरिक्षं वै स्वयमातृण्णाऽन्तरिक्षमेवोप धत्ते ।

என்பது.

உரை.

இங்கு வைக்கும் சுக்கான் கல் பூமியிற் படாததால் அந்தரிக்கத்தை வைத்ததுபோலாகின்றது என்பதாம்.

வைக்குமுன் குதிரை முகந்து பார்த்தலை விதிக்கின்றது.

பிராமணம்—4

अश्वमुप घ्रापयति प्राणमेवाऽस्यां दधात्यथो प्राजापत्यो वा अश्वः प्रजापतिनैवाग्निं चिनुते ।

என்பது.

உரை.

குதிரை முகந்துபார்ப்பதால் அதில் பிராணனை வைத்ததாகிறது. மற்றும், பிரசாபதியின் சம்பந்தியாகிய குதிரை முகந்துபார்த்தலால் பிரசாபதியாலேயே அக்கினிசயனஞ் செய்ததுமாகின்றது என்பதாம்.

சுக்கான் கல்லிலுள்ள துளையைப் புகழ்கின்றது.

பிராமணம்—5

स्वयमातृण्णा भवति प्राणानामुत्सृष्ट्या अथो सुवर्गस्य लोकस्याऽनुख्यात्यै ।

என்பது.

உரை

துளையிருத்தலால் பிராணன் தடையின்றிச்செல்லும். மற்றும், மறைப்பில்லாததால் சுவர்க்கமும் பார்ப்பதற்கு நேரிடும் என்பதாம்.

திசைகள் என்னுஞ் செங்கல்களை வைப்பதை விதிக்கின்றது.

பிராமணம்—6

देवानां वै सुवर्गं लोकं यतां दिशस्समव्लीयन्त त एता दिश्या अपश्यन्ता उपादधत ताभिर्वै ते दिशोऽदृꣳहन्यद्दिश्या उपदधाति दिशां विधृत्यै ।

என்பது.

உரை.

முன், பூமியிலிருந்த தேவர்கள் சுவர்க்கலோகத்தை யடைந்தபோது அத்தேவர்களின் திக்குக்கள் பாதுகாப்பவர்களில்லாமற் கேடடைந்தன. அதைக்கண்ட தேவர்கள், ஆராய்ந்து 'திசியங்கள்' என்னுஞ் செங்கல்களை வைத்ததால் அத்திசைகள் பாதுகாக்கப்பட்டன. அதுபோல், இங்கும், திசியங்கள் என்னுஞ் செங்கல்களை வைத்தலால் எசமானனுடைய திக்குக்கள் பாதுகாக்கப்பட்டவைகளாகின்றன என்பதாம்.

பிராணபிருத் என்னுஞ் செங்கல்களை வைத்தலின் விதி.

பிராமணம்—7

दश प्राणभृतः पुरस्तादुप दधाति नव वै पुरुषेप्राणा नाभिर्दशमी प्राणानेव पुरस्ताद्धत्ते तस्मात्पुरस्तात्प्राणाः ।

என்பது.

உரை.

தலையில் ஏழு, கீழ் இரண்டு, நாபியில் ஒன்று ஆகப் பத்துத்துளைகளிலுஞ் சலிக்கின்ற பிரர்ணன்கள் பத்தானதால் பத்துச்செங்கல்களைக் கிழக்கில் வைக்கில் கிழக்குமுகமாய் நிற்கின்றவனுடைய மூச்சுபார்வை முதலானவைகள் கிழக்குத்திக்கிலேயே உண்டாகின்றன என்பதாம். கல்லுகளை வைப்பதற்குரிய காலத்தில் பிராணன் என்னுஞ் சொல்லைக்கொண்ட மந்திரங்களை வேண்டுவதால் பிராண பிருத் என்க.

அம்மந்திரங்களால் ஈற்று மந்திரத்திலுள்ள 'சோதி' என்னுஞ் சொல்லைப் புகழ்கின்றது.

பிராமணம்—8

ज्योतिष्मतीमुत्तमामुप दधाति तस्मात्प्राणानां वाग्ज्योतिरुत्तमा ।

என்பது.

முதலானவைகள்)

உரை.

சோதி, என்னுஞ் சொல்லேக்கொண்ட மந்திரத்தால் வைக்கும் செங் கல்லே முடிவில் வைத்தலால் தன்பொருளே விளக்குவதால் சோதிவடிவாகிய வாக்கும் எல்லா இந்திரியங்களினுஞ் சிறந்ததாக இருக்கின்றது என்பதாம்.

செங்கல்களின் எண்ணிக்கையைப் புகழ்கின்றது.

பிராமணம்—9

दशोप दधाति दशाक्षरा विराड्विराट्छन्दसां ज्योतिर्ज्योतिरेव पुरस्ताद्धत्ते तस्मात्पुरस्ताज्ज्योतिरुपाऽऽस्महे ।

என்பது.

உரை.

செங்கல்கள் பத்தானதால் விராட்சந்தமாகிறது. அவ்விராட்சந்தத்தை சோதி என்பதாகக் கிழக்கில் வைத்தலால் யாமும் காலேயில் கிழக்குத் திக்கில் சூரியனே வழிபடுகின்றோம் என்பதாம்.

'பிருகத்' என்னுஞ் செங்கல்களே வைத்தற்பொருட்டு புகழ்கின்றது.

பிராமணம்—10

छन्दाꣳसि पशुष्वाजिमयुस्तान्बृहत्युदजयत्तस्माद्बार्हताः पशव उच्यन्ते ।

என்பது.

உரை.

முன்னர், சந்த தேவதைகள், நான் பசுக்களே வசப்படுத்திக்கொள் கிறேன், நான் வசப்படுத்திக்கொள்கிறேன்'' என்று தம்முள் பொருமைப் பட்டு ஆணே செய்ததில் 'பிருகத்' என்னுஞ் சந்ததேவதை வெற்றிபெற்றது. ஆதலின், பசுக்கள், பிருகத் சந்ததேவதையை யுடையவைகள். இவ்வாற்ருல் எல்லாச் செங்கல்களுக்குள்ளும் இப்பிருகத் என்னுஞ் செங்கல்களே சிறந்தன என்பதாம்.

அச்செங்கல்கள் வைப்பதற்கு திக்குக்களே விதிக்கின்றது.

பிராமணம்—11

मा छन्द इति दक्षिणत उप दधाति तस्माद्दक्षिणावृतो मासाः पृथिवी छन्द इति पश्चात्प्रतिष्ठित्या अग्निर्देवतेत्युत्तरत ओजो वा अग्निरोज एवोत्तरतो धत्ते तस्मादुत्तरतोऽभिप्रयायी जयति ।

என்பது.

உரை.

மா, என்பதால் மாதங்கள் கொள்ளப்படுகின்றன. அது, தெற்கில் விதித்திருத்தலால் சித்திரை முதலிய மாதங்கள் தெற்குத்திசையில் சூரியன் வலஞ்செய்வதால் உண்டாகின்றன. மேற்குத் திக்கில் வைக்கும் மந்திரத்தில் பிருதிவி (பூமி) என்னுஞ் சொல்லிருத்தலால் பூமி எல்லாவற்றிற்கும் ஆதாரமாயிருப்பதுபோல் இச்செங்கல்களும் ஆதாரங்களாகின்றன. வடக்கில் வைப்பதில் அக்கினி என்னுஞ் சொல்லிருத்தலால் வடக்கில் தேவதைகளின் சாரமாகிற ஒளி வைத்ததாகின்றது. ஆதலால், வடக்கிற் சென்று செய்யும் புண்ணிய நதிநீராடல் முதலியவைகளால் புண்ணியலோகத்தை யடைகின்றான் என்பதாம்.

இச்செங்கல்களின் எண்ணை விதிக்கின்றது.

பிராமணம்—12

षट्त्रिँशत्संपद्यन्ते षट्त्रिँशदक्षरा बृहती बार्हताः पशवो बृहत्यैवास्मै पशूनवरुन्धे बृहती छन्दसाँ स्वाराज्यं परीयाय यस्यैता उपधीयन्ते गच्छति स्वाराज्यम् ।

என்பது.

உரை.

முப்பத்தாறு செங்கல்களானதால், முப்பத்தாறு எழுத்துக்களுள்ள பிருகத் என்னுஞ் சந்தத்தால் அதற்குரிய பசுக்களை யடைகின்றான். மற்றும், பிருகத்ச் சந்தம் வெற்றி யடைந்தமையால் சுவாராச்சியத்தையு மடைகின்றான் என்பதாம்.

இருவகைப்பட்ட ஏழு மந்திரங்களால் வைக்கும் வாலகில்யங்கள் என்னுஞ் செங்கல்களை விதிக்கின்றது.

பிராமணம்--13

सप्त वालखिल्याः पुरस्तादुप दधाति सप्त पश्चात्सप्त वै शीर्षण्याः प्राणा द्वाववाञ्चौ प्राणानाँ सवीर्यत्वाय ।

என்பது.

உரை.

வாலகில்ய முனியால் கண்டுபிடிக்கப்பெற்ற இச்செங்கல்களை, கிழக்கிலும் மேற்கிலும் எவ்வேழாக வைத்தலால், கிழக்கேவைக்கும் ஏழால்

முதலானவைகள்)

மேலேழுக்கும், கிழக்கிலும் மேற்கிலும் எவ்வேழாக இரண்டு ஏழுகல்களை வைத்தலால். கீழ் இருக்கும் இரண்டு பிராணன்களுக்கும் வீரியத்தை யுண்டாக்குகின்றது என்பதாம்.

மேற்கூறிய இரண்டு ஏழுக்கும் மந்திரத்தைப் பிரித்து விதிக்கின்றது.

பிராமணம்—14

मूर्धाऽसि राडिति पुरस्तादुप दधाति यन्त्री राडिति पश्चात्प्राणानेवास्मै समीचो दधाति ॥

என்பது.

உரை.

'மூர்த்தாஸி' என்பது முதலிய மந்திரத்தால் கிழக்கிலும், 'யந்த்ரீ ராட்' என்பது முதலியதால் மேற்கிலும், ஒன்றுக்கொன்று எதிர்முகமாக இருவகையாக வைத்தலால் பிரணன்கள் தத்தமது செயல்களில் வன்மை யுடையவைகளாகின்றன என்பதாம்.

இரண்டாம் அநுவாகம்

முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் மூன்றும்பிரபாடகம்

மூன்றுவது அநுவாகம்

அக்ஷ்ண்யாஸ்தோமம். என்னுஞ் செங்கல்களைக் கூறும் பிராமணங்கள்.

ஐந்து பஞ்சாதிக்குமேல் ஐந்து பதங்களைக்கொண்டது.

**देवा वै यद्यज्ञेऽकुर्वत तदसुरा अकुर्वत ते देवा एता अक्ष्णया-
स्तोमीया अपश्यन्ता अन्यथाऽनूच्यान्यथोपादधत तदसुरा नान्व-
वायन्ततो देवा अभवन्पराऽसुरा यदक्ष्णयास्तोमीया अन्यथा-
ऽनूच्यान्यथोपदधाति भ्रातृव्याभिभूत्यै भवत्याऽऽत्मना पराऽस्य
भ्रातृव्यो भवत्याशुस्त्रिवृदिति पुरस्तादुप दधाति यज्ञमुखं वै त्रिवृत्
[११] यज्ञमुखमेव पुरस्ताद्वि यातयति व्योम सप्तदश इति दक्षिण-**

तोऽन्नं वै व्योमान्नꣳ सप्तदशोऽन्नमेव दक्षिणतो धत्ते तस्माद्दक्षि-
णेनाऽन्नमद्यते धरुणं एकविꣳश इति पश्चात्प्रतिष्ठा वा एकविꣳशः
प्रतिष्ठित्यै भान्तः पञ्चदश इत्युत्तरत ओजो वै भान्त ओजः
पञ्चदश ओज एवोत्तरतो धत्ते तस्मादुत्तरतोऽभिप्रयायी जयति
प्रतूर्तिरष्टादश इति पुरस्तात् [१२] उप दधाति द्वौ त्रिवृतावभिपूर्वं
यज्ञमुखे वियातयत्यभिवर्तस्सविꣳश इति दक्षिणतोऽन्नं वा अभि-
वर्तोऽन्नꣳ सविꣳशोऽन्नमेव दक्षिणतो धत्ते तस्माद्दक्षिणेनान्नमद्यते
वर्चो द्वाविꣳश इति पश्चाद्यद्विꣳशतिर्द्वे तेन विराजौ तद्द्वे प्रतिष्ठा
तेन विराजोरेवाभिपूर्वमन्नाद्ये प्रतितिष्ठति तपो नवदश इत्युत्तर-
तस्तस्मात्सव्यः [१३] हस्तयोस्तपस्वितरो योनिश्चतुर्विꣳश इति
पुरस्तादुप दधाति चतुर्विꣳशत्यक्षरा गायत्री गायत्री यज्ञमुखं
यज्ञमुखमेव पुरस्ताद्वियातयति गर्भाः पञ्चविꣳश इति दक्षिणतोऽन्नं
वै गर्भा अन्नं पञ्चविꣳशोऽन्नमेव दक्षिणतो धत्ते तस्माद्दक्षिणे
नान्नमद्यत ओजस्त्रिणव इति पश्चादिमे वै लोकास्त्रिणव एष्वेव
लोकेषु प्रतितिष्ठति संभरणस्त्रयोविꣳश इति [१४] उत्तरतस्तस्मा-
त्सव्यो हस्तयोस्संभार्यतरः क्रतुरेकत्रिꣳश इति पुरस्तादुप दधाति
वाग्वै क्रतुर्यज्ञमुखं वाग्यज्ञमुखमेव पुरस्ताद्वियातयति ब्रध्नस्य
विष्टपं चतुस्त्रिꣳश इति दक्षिणतोऽसौ वा आदित्यो ब्रध्नस्य विष्टपं
ब्रह्मवर्चसमेव दक्षिणतो धत्ते तस्माद्दक्षिणोऽर्धो ब्रह्मवर्चसितरः
प्रतिष्ठा त्रयस्त्रिꣳश इति पश्चात्प्रतिष्ठित्यै नाकष्षट्त्रिꣳश इत्युत्त-
रतस्सुवर्गो वै लोको नाकस्सुवर्गस्य लोकस्य समष्ट्यै [१५] ॥

செங்கல்கள்)

वै त्रिवृदिति पुरस्तात्सव्यस्त्रयोविंश इति सुवर्गो वै पञ्च च

॥ ३ ॥

இதில், நான்காம் அடுக்கில் வைக்கும் அக்ஷண்யா ஸ்தோமீயம் என்னுஞ் செங்கல்களுட் சிலது கூறப்படுகின்றது. அக்ஷிண்யாஸ்தோமம் என்பது, ஸ்தோமம் என்னுஞ் சொல்லுடைய மந்திரங்களால் மாறுதலாக வைப்பதாம்.

அதை விதிக்கின்றது.

பிராமணம்—1

देवा वै यज्ञेऽकुर्वत तदसुरा अकुर्वत ते देवा एता अक्षणयास्तोमीया अपश्यन्ता अन्यथाऽनूच्यान्यथोपादधत तदसुरा नान्ववायन्ततो देवा अभवन्पराऽसुरा यदक्षणयास्तोमीया अन्यथाऽनूच्यान्यथोपदधाति भ्रातृव्याभिभूत्यै भवत्याऽऽत्मना पराऽस्य भ्रातृव्यो भवति ।

என்பது.

உரை.

ஒருபோது தேவர்கட்கொப்பாக அசுரர்கள் தேவர்கட்கருகில் இரகசியமாய் ஒருவனை இருத்தி அவன் வாயிலாக வுணர்ந்துகொண்டு வேள்வியில் தேவர்கள் எவ்வங்கத்தைச் செய்கின்றார்களோ, அஃதனைத்தையும் அவ்வாறே அசுரர்களுஞ் செய்துகொண்டு வந்தனர். அவர்களை வஞ்சிப்பதற்கு இச்செங்கல்களைக் கண்டுபிடித்தனர். அதாவது, மந்திரமுறையாய் வைக்காமல், மந்திரம் இரண்டாவது, கல் வைத்தல் மூன்றாவது; என்றிவ்வாறாக மாறிவைத்தார்கள். அதைக்கண்டு மறைந்திருந்தவன் மயக்கங் கொண்டனன். கொள்ளவே அவனால் வேள்விமுறை தெரிந்துகொள்ளாதவர்களாய அசுரர்கள் தோல்வி யடைந்தனர். தேவர்கள் வெற்றிகொண்டனர். இங்கு, இக்கல்லுகளை வைத்தலால், எசமானனுக்கு வெற்றியும், பகைவனுக்குத் தோல்வியுமுண்டாகு மென்பதாம்.

இவ்வாறு பொதுவாக விதித்துவிட்டு சிறப்பாகமுதல் மந்திரத்தை விநியோகப் படுத்துகின்றது.

பிராமணம்—2

आशुस्त्रिवृदिति पुरस्तादुप दधाति यज्ञमुखं वै त्रिवृद्यज्ञमुखमेव पुरस्ताद्वि यातयति ।

என்பது.

உரை.

ஸ்தோமங்(துதிமஞ்சரி)களுக்குள் திரிவிருஸ்தோமம் முதலில் உண்டானதால் எக்ஞமுகமாம். அம்மந்திரத்தால் கிழக்கில் எக்ஞமுகத்தை விரிக்கின்றான் என்பதாம்.

மூன்றாவது மந்திரத்தை விநியோகப் படுத்துகின்றது.

பிராமணம்—3

व्योम सप्तदश इति दक्षिणतोऽन्नं वै व्योमान्नँ सप्तदशोऽन्नमेव दक्षिणतो धत्ते तस्माद्दक्षिणेनाऽन्नमद्यते ।

என்பது

உரை.

வான்போல் விரிந்தமையின், வானும், பதினேழுவகை ஸ்தோமமும் உணவுப் பொருளாயின. இத்தகைய மந்திரத்தால் தெற்கில் வைத்தலால் இப்போதும் உலகில் வலது கையால் அன்னத்தை யருந்துகின்றனர் என்பதாம்.

ஏழாவது மந்திரத்தை விநியோகிக்கின்றது.

பிராமணம்—4

धरुण एकविँश इति पश्चात्प्रतिष्ठा वा एकविँशः प्रतिष्ठित्यै ।

என்பது.

உரை.

சாமதேனிப் பிரகரணத்தில் இருபத்தொரு ஸ்தோமம் பெருமையுடையது என்று கூறியிருத்தலின், இருபத்தொன்று பெருமையுடையது என்பதாம்.

இரண்டாம் மந்திரத்தை விநியோகிக்கின்றது.

பிராமணம்—5

भान्तः पञ्चदश इत्युत्तरत ओजो वै भान्त ओजः पञ्चदश ओज एवोत्तरतो धत्ते तस्मादुत्तरतोऽभिप्रयायी जयति ।

என்பது.

சேங்கல்கள்)

உரை.

வேறிடத்தில், பதினைந்து என்பது வச்சிரம் என்று கூறியிருத்தலின், இது, வன்மைக்குக் காரணமாதலின் வன்மையது என்பதாம்.

நான்காம் மந்திரத்தை விநியோகிக்கின்றது.

பிராமணம்—6

प्रतूर्तिरष्टादश इति पुरस्तादुप दधाति द्वौ त्रिवृतावभिपूर्वं यज्ञमुखे वियातयति ।

என்பது.

உரை.

பதினெட்டு ஸ்தோமம், முன்பின் ஒன்பது எண்ணைக் கொண்டதாமாதலின் இரண்டு திரிவிருத் ஸ்தோமங்களாகின்றன. இவை எக்ஞமுகங்களை விரிக்கின்றன என்பதாம்.

ஆறும் மந்திரத்தை விநியோகிக்கின்றது.

பிராமணம்—7

अभिवर्तस्सविꣳश इति दक्षिणतोऽन्नं वा अभिवर्तोऽन्नꣳ सविꣳशोऽन्नमेव दक्षिणतो धत्ते तस्माद्दक्षिणेनाऽन्नमद्यते ।

என்பது.

உரை

அபிவர்த்தசாமம் அன்னத்திற்குச் சாதனமானதால் அன்னமாம். இருபது ஸ்தோமமும் இரண்டு பத்துக்களுடன் கூடியதால் விராட்சந்தவாயிலாக அன்னமாந்தன்மை யடைந்தது என்பதாம்.

எட்டாம் மந்திரத்தை விநியோகிக்கின்றது.

பிராமணம்—8

वर्चो द्वाविꣳश इति पश्चाद्यद्विꣳशतिर्द्वे तेन विराजौ यद्द्वे प्रतिष्ठातेन विराजोरेवाऽभिपूर्वमन्नाद्ये प्रतितिष्ठति ।

என்பது.

உரை.

இருபத்திரண்டில், இருபதில் இரண்டு பத்துக்களிருத்தலால் இரண்டு விராஜங்கள் பெறப்படுகின்றன. விராஜம் அன்னமா (உணவுப் பொருளா)ம். மற்றும் இரண்டால் நிலையாம். எனவே, உணவுப் பொருளில் நிலைத்து நிற்குந்தன்மை இதனல் உண்டாகின்றது என்பதாம்.

ஐந்தாம் மந்திரத்தை விநியோகிக்கின்றது.

பிராமணம்—9

तपो नवदश इत्युत्तरतस्तस्मात्सव्यो हस्तयोस्तपस्वितरः ।

என்பது.

உரை.

பத்து ஒன்பது வடக்கு என்றது. வடக்கில் தவம் என்னும் மந்திர மெழுந்ததால், இடதுகை, உணவு அருந்தல் முதலிய செயல்களுக்கு உதவாமையின் அதுவே தவம் என்பதாம்.

பத்தாவது மந்திரத்தை விநியோகிக்கின்றது.

பிராமணம்—10

योनिश्चतुर्विꣳश इति पुरस्तादुप दधाति चतुर्विꣳशत्यक्षरा गायत्री गायत्री यज्ञमुखं यज्ञमुखमेव पुरस्ताद्वियातयति ।

என்பது.

உரை

இருபத்துநான்கு எழுத்துக்களைக் கொண்டது காயத்திரியாம்; ஆதலின், காலையிற் சோமரசம் பிழிதலில் எழுந்ததாமாதலின் காயத்திரி எக்ஞத்திற்கு முகமாயிற்று, இதனல் எக்ஞம் விரிக்கப் படுகின்றது என்பதாம்.

பதினோராம் மந்திரத்தை விநியோகிக்கின்றது.

பிராமணம்—11

गर्भाः पञ्चविꣳश इति दक्षिणतोऽन्नं वै गर्भा अन्नं पञ्चविꣳशोऽन्नमेव दक्षिणतो धत्ते तस्माद्दक्षिणेनाऽन्नमद्यते ।

என்பது.

சேங்கல்கள்)

உரை

இருபத்தைந்து அன்னத்திற்குக் காரணமாதலின் அன்னமாம். அன்னத்தின் காரியமாதலின் கர்ப்பமும் அன்னமாம். இதனால் உணவு நன்கு அருந்தப் பெறுகின்றான் என்பதாம்.

பன்னிரண்டாவது மந்திரத்தை விநியோகிக்கின்றது.

பிராமணம்—12

ओजस्त्रिणव इति पश्चादिमे वै लोकास्त्रिणव एष्वेव लोकेषु प्रतितिष्ठति ।

என்பது.

உரை.

மூன்று என்பது இருப்பதால் மூன்றுலகத்தும் பெருமையை யடைகின்றான் என்பதாம்.

ஒன்பதாம் மந்திரத்தை விநியோகிக்கின்றது.

பிராமணம்—13

संभरणस्त्रयोविꣳश इत्युत्तरतस्तस्मात्सव्यो हस्तयोस्संभार्यतरः ।

என்பது.

உரை.

இருபத்துமூன்று வடக்காமாதலின், இடதுகை பிச்சைப் பாத்திர முதலியவைகளைத் தாங்குவதில் மிகுந்துள்ள தன்மையடைந்துளது என்பதாம்.

பதின்மூன்றும் மந்திரத்தை விநியோகிக்கின்றது.

பிராமணம்—14

क्रतुरेकत्रिꣳश इति पुरस्तादुप दधाति वाग्वै क्रतुर्यज्ञमुखं वाग्यज्ञमुखमेव पुरस्ताद्वियातयति ।

என்பது.

உரை.

மந்திரத்தால் எக்ஞம் உண்டாக்கப் படுவதால் வாக்காம். அந்த வாக்கு எக்ஞத்திற்கு முகமாம். ஏனெனின்? முதலில் மந்திரம் ஓதப்படுதலின் என்க. இதனால், கிழக்கில் எக்ஞமுகத்தை வைத்ததாக ஆகிறது என்பதாம்.

பதினைந்தாம் மந்திரத்தை விநியோகிக்கின்றது.

பிராமணம்—15

ब्रध्नस्य विष्टपञ्चतुस्त्रिꣳश इति दक्षिणतोऽसौ वा आदित्यो ब्रध्नस्य विष्टपं ब्रह्मवर्चसमेव दक्षिणतो धत्ते तस्माद्दक्षिणोऽर्धो ब्रह्मवर्चसितरः ।

என்பது

உரை.

தெற்கில் ஆதித்தனுடைய மந்திரத்தால் வைத்தலால் வலதுகை வைதிக கர்ம முதலியவைகளைச் செய்தற்குரிய வன்மையையுடையதாயிற்று. இதுபற்றியே, ஆசீர்வாதஞ் செய்யும்போது வலதுகையைத் தூக்குதல் என்பதாம்.

பதினான்காம் மந்திரத்தை விநியோகிக்கின்றது.

பிராமணம்—16

प्रतिष्ठा त्रयस्त्रिꣳश इति पश्चात्प्रतिष्ठित्यै ।

என்பது.

உரை.

மந்திரத்திலுள்ள பிரதிட்டை என்னுஞ் சொல்லாலேயே பெருமை குறிப்பிடப்பட்டது என்பதாம்.

பதினாறும் மந்திரத்தை விநியோகிக்கின்றது.

பிராமணம்—17

नाकꣳषट्त्रिꣳश इत्युत्तरतस्सुवर्गो वै लोको नाकस्सुवर्गस्य लोकस्य समष्ट्यै ॥

என்பது.

உரை.

'நாகம்' என்னுஞ் சொல்லைக்கொண்ட மந்திரத்தால் வடக்கில் வைத்தலால் சுவர்க்கத்தை யடைகின்றான் என்பதாம்.

மூன்றும் அநுவாகம்
முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் மூன்றும்பிரபாடகம்

நான்காவது அநுவாகம்.

எஞ்சிய அக்ஷ்ண்யா ஸ்தோமங்களைக் கூறும் பிராமணங்கள்.

ஏழு பஞ்சாதிக்குமேல் பதினைந்து பதங்களைக் கொண்டது.

अग्नेर्भागोऽसीति पुरस्तादुप दधाति यज्ञमुखं वा अग्निर्यज्ञमुखं दीक्षा यज्ञमुखं ब्रह्म यज्ञमुखं त्रिवृद्यज्ञमुखमेव पुरस्ताद्वि यातयति नृचक्षसां भागोऽसीति दक्षिणतश्शुश्रुवाꣳसो वै नृचक्षसोऽन्नं धाता जातायैवाऽस्मा अन्नमपि दधाति तस्माज्जातोऽन्नमत्ति जनित्रꣳ स्पृतꣳ सप्तदशस्स्तोम इत्याहाऽन्नं वै जनित्रम् [१६] अन्नꣳ सप्तदशोऽन्नमेव दक्षिणतो धत्ते तस्माद्दक्षिणेनाऽन्नमद्यते मित्रस्य भागोऽसीति पश्चात्प्राणो वै मित्रोऽपानो वरुणः प्राणापानावेवास्मिन्दधाति दिवो वृष्टिर्वातास्स्पृता एकविꣳशस्स्तोम इत्याह प्रतिष्ठा वा एकविꣳशः प्रतिष्ठित्या इन्द्रस्य भागोऽसीत्युत्तरत ओजो वा इन्द्र ओजो विष्णुरोजः क्षत्त्रमोजः पञ्चदशः [१७] ओज एवोत्तरतो धत्ते तस्मादुत्तरतोऽभिप्रयायी जयति वसूनां भागोऽसीति पुरस्तादुप दधाति यज्ञमुखं वै वसवो यज्ञमुखꣳ रुद्रा यज्ञमुखं चतुर्विꣳशो यज्ञमुखमेव पुरस्ताद्वि यातयत्यादित्यानां भागोऽसीति दक्षिणतोऽन्नं वा आदित्या अन्नं मरुतोऽन्नं गर्भा अन्नंपञ्चविꣳशोऽन्नमेव दक्षिणतो धत्ते तस्माद्दक्षिणेनाऽन्नमद्यतेऽदित्यै भागः [१८] असीति पश्चात्प्रतिष्ठा वा अदितिः प्रतिष्ठा पूषा प्रतिष्ठा त्रिणवः प्रतिष्ठित्यै देवस्य सवितुर्भागोऽसीत्युत्तरतो ब्रह्म वै देवस्सविता ब्रह्म बृहस्पतिर्ब्रह्म चतुष्टोमो ब्रह्मवर्चसमेवोत्तरतो धत्ते तस्मादुत्त-

रोऽर्धो ब्रह्मवर्चसितरस्सावित्रवती भवति प्रसूत्यै तस्माद्ब्राह्मणाना-
मुदीची सनिः प्रसूता धर्त्रश्चतुष्टोम इति पुरस्तादुप दधाति यज्ञमुखं
वै धर्त्रः [१९] यज्ञमुखं चतुष्टोमो यज्ञमुखमेव पुरस्ताद्वियातयति
यावानां भागोऽसीति दक्षिणतो मासा वै यावा अर्धमासा अया-
वास्तस्माद्दक्षिणावृतो मासा अन्नं वै यावा अन्नं प्रजा अन्नमेव
दक्षिणतो धत्ते तस्माद्दक्षिणेनाऽन्नमद्यत ऋभूणां भागोऽसीति पश्चा-
त्प्रतिष्ठित्यै विवर्तोऽष्टाचत्वारिंश इत्युत्तरतोऽनयोर्लोकयोस्सवीर्य-
त्वाय तस्मादिमौ लोकौ समावद्वीर्यौ [२०] यस्य मुख्यवतीः
पुरस्तादुपधीयन्ते मुख्य एव भवत्याऽस्य मुख्यो जायते यस्या-
न्नवतीर्दक्षिणतोऽत्त्यन्नमाऽस्यान्नादो जायते यस्य प्रतिष्ठावतीः
पश्चात्प्रत्येवतिष्ठति यस्यौजस्वतीरुत्तरत ओजस्व्येव भवत्याऽस्यौ-
जस्वी जायतेऽर्को वा एष यदग्निस्तस्यैतदेव स्तोत्रमेतच्छस्त्रं
यदेषा विधा [२१] विधीयतेऽर्क एव तदर्क्यमनु विधीयतेऽत्त्यन्न-
माऽस्यान्नादो जायते यस्यैषा विधा विधीयते य उ चैनामेवं वेद
सृष्टीरुप दधाति यथासृष्टमेवाऽवरुन्धे न वा इदं दिवा न नक्तमा-
सीदव्यावृत्तं ते देवा एता व्युष्टीरपश्यन्ता उपादधत ततो वा इदं
व्यौच्छद्यस्यैता उपधीयन्ते व्येवास्मा उच्छत्यथो तम एवाप हते
[२२] ॥ वै जनित्रं पञ्चदशोऽदित्यै भागो वै धर्त्रस्समावद्वीर्यौ
विधा ततो वा इदं चतुर्दश च ॥ ४ ॥

இதில், எஞ்சிய அக்ஷிண்யா ஸ்தோமச்செங்கல் முதலியவைகளை வைக்கும் முறை கூறப்படுகின்றது.

சேங்கல்கள்)

அக்ஷிண்யா ஸ்தோமங்களை வைக்கும் பத்துமந்திரங்களுள், முதலாம் மந்திரத்தை விநியோகிக்கின்றது.

பிராமணம்—1

अग्नेर्भागोऽसीति पुरस्तादुप दधाति यज्ञमुखं वा अग्निर्यज्ञमुखं दीक्षा यज्ञमुखं ब्रह्म यज्ञमुखं त्रिवृद्यज्ञमुखमेव पुरस्ताद्वि यातयति ।

என்பது.

உரை.

அக்கினியை உண்டாக்கியபிறகு அவ் வக்கினியில் எக்ஞந் தொடங்கப் படுதலின் அக்கினி எக்ஞத்திற்கு முகமாம். சோமயாகத்திற்கோ, முதலில் தீட்சை தொடங்கப் படுதலின் தீட்சையே எக்ஞமுகமாம். அந்தணர்களே வேள்விச் செயலாளர்களானதாலும் அவ் வந்தணர்களை அழைத்தல் (ரித்விக் வரணம்) முதலிற் செய்யப்படுதலின் அத்தன்மை அந்தண குலத்திற்கு உரியதாதலின் அந்தண குலமும் எக்ஞமுகமாம். துதிகளுக்குள் பகிஷ்பவ மானத்துதி என்பதும் திரிவிருத்து ஸ்தோமத்தாற் செய்யப்படுவதாமாத லின் எக்ஞமுகமாம். இவ்வனைத்தும் இம்மந்திரத்தால் கிழக்கில் வைத்தவை களாகின்றன என்பதாம்.

மூன்றும் மந்திரத்தை விநியோகிக்கின்றது.

பிராமணம்—2

नृचक्षसां भागोऽसीति दक्षिणतश्शुश्रुवाꣳसो वै नृचक्षसोऽन्नधाता जातायैवास्मा अन्नमपि दधाति तस्माज्जातोऽन्नमत्ति जनित्रꣳ स्पृतꣳ सप्तदशस्स्तोम इत्याहान्नं वै जनित्रमन्नꣳ सप्तदशोऽन्नमेव दक्षिणतो धत्ते तस्माद्दक्षिणेनाऽन्नमद्यते ।

என்பது.

உரை.

"வேதசாத்திரங்களை யுணர்ந்தவர்களின் பாகமாக இருக்கின்றாய்" என்றது, பிரமன் அன்னத்தை யுண்டாக்குவதால் அன்னமாம். இதனால் தாதுஃ, என்னுஞ் சொல்லால் உண்டாக்கிய எசமானன் பொருட்டு உணவுப் பொருளைத் தேடுகின்றான். இம்மந்திரத்தின் இரண்டாம் பகுதியையும் ஓதல் வேண்டும்; ஏனெனின்? 'ஜனித்ரம்' என்னுஞ் சொல் அன்னமாகிய பொரு ளைத் தருவதாம் ஆதலின் என்க. பதினேழு ஸ்தோமமும் அன்ன காரண மாதலின் அன்னமாம். இவ்வனைத்தையுந் தெற்கில் தேடுகின்றான் இதுபற் றியே வலது (தெற்குக்) கையால் அன்னத்தை யருந்துகின்றான் என்பதாம்.

நான்காம் மந்திரத்தை விநியோகிக்கின்றது.

பிராமணம்—3

मित्रस्य भागोऽसीति पश्चात्प्राणो वै मित्रोऽपानो वरुणः प्राणाऽपानावेवास्मिन्दधाति दिवो वृष्टिर्वातास्स्पृता एकवि॰शस्स्तोम इत्याह प्रतिष्ठा वा एकवि॰शः प्रतिष्ठित्यै ।

என்பது.

உரை.

மித்திரனும் வருணனும் பிராண அபானன்களை அபிமானித்தலால் அவ்வுருவங்களாகின்றனர். அத்தகைய மந்திரத்தில் எல்லா ஸ்தோமங்களின் நிலைக்களமாகிய இருபத்தொரு ஸ்தோமம் இருக்குந்தன்மையால் பிரதிட்டையுண்டாக்குகின்றன என்பதாம்.

இரண்டாம் மந்திரத்தை விநியோகிக்கின்றது.

பிராமணம்—4

इन्द्रस्य भागोऽसीत्युत्तरत ओजो वा इन्द्र ओजो विष्णुरोजः क्षत्त्रमोजः पञ्चदश ओज एवोत्तरतो धत्ते तस्मादुत्तरतोऽभिप्रयायी जयति ।

என்பது.

உரை.

இந்திரன் முதலானோர்கள் வன்மைமிக்கார்களாதலின் வன்மை வடிவினராவர். இதனால், எல்லாவல்லமைகளும் வடக்கில் வைத்ததாகின்றன. இது பற்றியே, வடக்காய்ச் செல்லுந் தீர்த்தம் முதலான புண்யவிசேடங்கள் சுவர்க்கத்தை அடைவிப்பதாகின்றன என்பதாம்.

ஆறும் மந்திரத்தை விநியோகிக்கின்றது.

பிராமணம்—5

वसूनां भागोऽसीति पुरस्तादुप दधाति यज्ञमुखं वै वसवो यज्ञमुख॰ रुद्रा यज्ञमुखं चतुर्वि॰शो यज्ञमुखमेव पुरस्ताद्वि यातयति ।

என்பது.

உரை.

பிராத சவனத்தை யபிமானித்தலால் வசுக்களும், உருத்திரனாற் செலுத்தப்பெற்ற மந்திரபூர்வகமாதலின் எங்கும் உபசாரமாக உருத்திரர்களும், இருபத்துநான்கு, நாற்பத்துநான்கு, நாற்பத்தெட்டு என்னும், சந்தோம

ஸ்தோமங்கட்கு முதலாயிருத்தலால் இருபத்துநான்கு ஸ்தோமமும் எக்ஞ முகங்களாகின்றன. இதனால் இவ்வெக்ஞ முகங்கள் அனைத்தும் கிழக்கில் வைக்கப்பட்டவைகளாகின்றன என்பதாம்.

ஏழாம் மந்திரத்தை விநியோகிக்கின்றது.

பிராமணம்—6

आदित्यानां भागोऽसीति दक्षिणतोऽन्नं वा आदित्या अन्नं मरुतोऽन्नं गर्भा अन्नं पञ्चविंशोऽन्नमेव दक्षिणतो धत्ते तस्माद्दक्षिणेनाऽन्नमद्यते ।

என்பது.

உரை.

ஆதித்தன் மழைவாயிலாக அன்னங்கட்கு காரணன் ஆதலின், அன்னமாவன். மருத்துக்கள் வணிகர்களாதலின் அன்னத்தைத் தேடுவதால் அன்னமாவார்கள். கருப்பம் அன்னத்தால் உண்டாதலின் அன்னமாம். இருபத்தைந்து ஸ்தோமம் சாத்திரங் கூறுதலால் அன்னமாம். இவைகள் தெற்கில் வைத்தலால் தெற்கில் அன்னங்கள் வைக்கப்பட்டவைகளாகின்றன. இதுபற்றியே தென்கை(வலக்கை)யால் அன்னத்தை யருந்தலுமாம் என்பதாம்

ஐந்தாம் மந்திரத்தை விநியோகிக்கின்றது.

பிராமணம்—7

अदित्यै भागोऽसीति पश्चात्प्रतिष्ठा वा अदितिः प्रतिष्ठा पूषा प्रतिष्ठा त्रिणवः प्रतिष्ठित्यै ।

என்பது.

உரை.

பூமியாகிய அதிதி வாழ்வதற்கு இடமாதலினனும், பூஷாதேவதை, பாதுகாத்தலானும், திரிணவ(இருபத்தேழு) ஸ்தோமம் சாத்திரத்தாலும் பிரதிஷ்டை யுடையவைகளாகின்றன. இதனால், மூவகையான பிரதிஷ்டைகளும் அடையப்படுகின்றன என்பதாம்.

எட்டாம் மந்திரத்தை விநியோகிக்கின்றது.

பிராமணம்—8

देवस्य सवितुर्भागोऽसीत्युत्तरतो ब्रह्म वै देवस्सविता ब्रह्म बृहस्पतिर्ब्रह्म चतुष्टोमो ब्रह्मवर्चसमेवोत्तरतो धत्ते तस्मादुत्तरोऽर्धो ब्रह्मवर्चसितरस्सावित्रवती भवति प्रसूत्यै तस्माद्ब्राह्मणानामुदीची सनिः प्रसूता ।

என்பது.

உரை.

காலை சந்தியா அநுட்டான முதலானவைகளில் அந்தணர்களால் வழி படுதற்குரியதா மாதலின் சவிதா (இரவி) பிரமமாம். பிராமண குலாபிமானி யாதலின் பிருகற்பதி பிரமமாம். நான்கு ஸ்தோமம் சாஸ்திரத்திற் கூறிய பிரமமாம். இத்தகைய சவிதா தேவதையின் மந்திரத்தால் வைத்த செங்கல் சாவித்திரியையுடையதாம். இத்தகைய மந்திரத்ததால் வடக்கில் வைத்தால் அந்தணர்களுக்கு வடக்கில் யாசித்தல் சாஸ்திரம் விதிக்கின்றது, விந்திய மலையின் வடபாகத்தில் நல்ல பிராமணர்களிருக்கின்றார்களாதலின் அங்கு யாசகஞ் செய்தல் பெருமையுடையதாம் என்பதாம்.

முதலாவது அநுவாகத்தின் பதினெட்டாம் மந்திரத்தை இப்போது விநியோகிக்கின்றது.

பிராமணம்—9

धर्त्रश्चतुष्टोम इति पुरस्तादुप दधाति यज्ञमुखं वै धर्त्रो यज्ञमुखं चतुष्टोमो यज्ञमुखमेव पुरस्ताद्वियातयति ।

என்பது.

உரை.

அக்கினிட்டோம் சோமயாகங்கட்கு முதன்மையதாமாதலின் எக்ஞ முகமாம். சதுஸ்தோமம் எக்ஞமுகவடிவாகிய திரிவிருத்தையுடையதா மாதலின் எக்ஞமுகமாம். இதனால் இவைகளைக் கிழக்கில் வைத்ததாகின்றது என்பதாம். இதில், திரிவிருத் என்பது மூன்று என்பதாம்.

இவ்வநுவாகத்தின் ஒன்பதாம் மந்திரத்தை விநியோகிக்கின்றது.

பிராமணம்—10

यावानां भागोऽसीति दक्षिणतो मासा वै यावा अर्धमासा अयावास्तस्मादक्षिणावृतो मासा अन्नं वै यावा अन्नं प्रजा अन्नमेव दक्षिणतो धत्ते तस्माद्दक्षिणेनाऽन्नमद्यते ।

என்பது.

சேங்கல்கள்)

உரை.

தென்திசையாய்ச் சுற்றுகின்ற மாசங்களனைத்தும் காலவடிவங்களாதலின், காலம் அன்னங்கள் பக்குவமாகுதற்குக் காரணமாம். ஆதலின் அன்னங்கள். பிரசைகள் அன்னங்களை யருந்துகின்றவைகளாதலின் அன்னங்களாகின்றன. இவைகள் தெற்கில் வைத்தலால் வைத்தவைகளாகின்றன. இது பற்றியே தெற்குக் (வலது) கையால் அன்னத்தை யருந்துகின்றான் என்பதாம்.

பத்தாவது மந்திரத்தை விநியோகிக்கின்றது.

பிராமணம்—11

ऋभूणां भागोऽसीति पश्चात्प्रतिष्ठित्यै।

என்பது.

உரை

மேற்கில் அருள்புரிவதற்கு தேவர்கள் காரணர்களாதல்பற்றி பிரதிட்டைக்குக் காரணமாதலால் பிரதிட்டையை யடைகின்றான் என்பதாம்.

இப்போது, முதலாவது அநுவாகத்திலுள்ள பதினேழாவது மந்திரத்தை விநியோகிக்கின்றது.

பிராமணம்—12

विवर्तोऽष्टाचत्वारिंश इत्युत्तरतोऽनयोर्लोकयोस्सवीर्यत्वाय तस्मादिमौ लोकौ समावद्वीर्यौ।

என்பது.

உரை.

நாற்பத்தெட்டு ஸ்தோமம் மிகச்சிறந்ததென்றது, ஸ்தோமங்களுக்குள் நாற்பத்தெட்டு மிகச்சிறந்ததாமெனல் அதற்குமேல் ஸ்தோமம் இல்லாததாலென்க. இவ்வுலகில் விந்தியமலைக்கு வடதிசை மிகச்சிறந்தது. சிறந்தவைகளிரண்டுங் கூடியதால் மனிதவுலகம் மிகச்சிறந்தது. சுவர்க்கலோகம் புண்ணியபயனைத் தருதலால் சிறந்தது. மண்ணுலகம் புண்ணியகருமாநுட்டானங்களைத் தருதலாற் சிறந்தது. இவ்வாற்றால் இரண்டுலகங்களும் ஒத்த வீரியங்களை யுடையவைகளாகச் செய்யப்பட்டன என்பதாம்.

இரண்டு அநுவாகங்களால் மாறுதலாக வைக்கப்பட்ட செங்கல்களுள், ஒவ்வொரு திசையிலும் வைக்கப்பட்டவைகளை தனித்தனி சுருக்கிப் புகழ்கின்றது.

பிராமணம்—13

यस्य मुख्यवतीः पुरस्तादुपधीयन्ते मुख्य एव भवत्याऽस्य मुख्यो जायते यस्याऽन्नवतीर्दक्षिणतोऽत्त्यन्नमाऽस्यान्नादो जायते यस्य प्रतिष्ठावतीः पश्चात्प्रत्येवतिष्ठति यस्यौजस्वतीरुत्तरत ओजस्व्येव भवत्याऽस्यौजस्वी जायते ।

என்பது.

உரை.

முகங்களாகத் துதிக்கப்பெற்று கீழ்த்திசையில் வைக்கப்பட்டவைகளால், தானும், புதல்வனும் முக்கியர்களாந்தன்மையை யடைகின்றார்கள். உணவுப்பொருளாகப் போற்றப்பெற்று தென்திசையில் வைக்கப்பட்டவைகளால், தானும் புதல்வனும் உணவுப்பொருளை யுடையவர்களாகின்றார்கள். பெருமைகளாகத் துதிக்கப்பெற்று மேல்திசையில் வைக்கப்பட்டவைகளால் தானும் புதல்வனும் பெருமையை யடைகின்றார்கள். வல்லமைகளாகத் துதிக்கப்பெற்று வடதிசையில் வைக்கப்பட்டவைகளால் தானும் புதல்வனும் வன்மையை யடைகின்றார்கள் என்பதாம்.

राप्त्या इमा मे अग्न इष्टका धेनवस्सन्त्वित्याह धेनूरेवैनाः कुरुते
ता एनं कामदुघा अमुत्रामुष्मिँल्लोक उपतिष्ठन्ते [८] ॥ सयोनि-
मेता वै करोत्येकान्नचत्वारिꣳशच्च ॥ २ ॥

இதில், ரிதவ்யம் முதலான மூவகைச் செங்கல்களும் புரோக்ஷணமுங் கூறப்படுகின்றன.

ரிதவ்யங்கள் என்னுஞ் செங்கல்களை விதிக்கின்றது.

பிராமணம்—1

ऋतव्या उप दधात्यृतूनां क्लृप्त्यै द्वंद्वमुप दधाति तस्माद्द्वंद्वमृतवः ।

என்பது.

உரை.

இவற்றை இரண்டிரண்டாக வைத்தலால் இரண்டிரண்டு மாதங்கள் கொண்டது ஒரு இருதுவாயிற்று என்பதாம்.

நடு அடுக்கில் நான்கு செங்கல்கள் வைத்தல்வேண்டுமென்று விதிக்கின்றது.

பிராமணம்—2

अधृतेव वा एषा यन्मध्यमा चितिरन्तरिक्षमिव वा एषा द्वंद्वमन्यासु चितीषूप दधाति चतस्रो मध्ये धृत्यै ।

என்பது.

உரை.

மூன்றாவது அடுக்கு பண்ணிலும் வானிலும் படாமலிருத்தலின் அந்தரிக்கமாம். அதைத் தாங்குவதன் பொருட்டு நான்கு செங்கல்களை வைத்தல் வேண்டு மென்பதாம்.

எல்லாச் செங்கல்களையும் பொதுவாய்ப் புகழ்கின்றது.

பிராமணம்—3

अन्तश्श्लेषणं वा एताश्चितीनां यद्दतव्या यद्दतव्या उपदधाति चितीनां विधृत्यै ।

என்பது.

உரை.

குதிர் முதலியவைகள் உறுதியாயிருத்தற் பொருட்டுச் செங்கல்களை வைப்பதுபோல் செங்கலடுக்குக்கள் உறுதியாயிருத்தற் பொருட்டு இந்த ரிதவ்யச் செங்கல்களை வைத்தல் என்பதாம்.

இச்செங்கல்களின்மேல் வேலம்பாசியை வைத்தல்வேண்டு
மென்று விதிக்கின்றது.

பிராமணம்—4

अवकामनूप दधात्येषा वा अग्नेर्योनिस्सयोनिमेवाग्निं चिनुते ।

என்பது.

உரை.

தண்ணீர் அக்கினிக்கு இடமாம், பாசியும் நீரின் காரியமானதால் நீரையே காரணமாகவுடையதாம். இவ்வாற்றால் பாசியை மேலேவைத்தலால் காரணத்துடன் அக்கினிசயனஞ் செய்யப்படுகின்றது என்பதாம்.

முதலான செங்கல்கள்)

மற்றொருவகையால் வேலம்பாசியுடன் கூடிய ரிதவ்யங்களையும் அதை யுணர்ந்தவனையும் புகழ்கின்றது.

பிராமணம்—5

उवाच ह विश्वामित्रोऽददित्स ब्रह्मणाऽन्नं यस्यैता उपधीयान्तै य उ चैना एवं वेददिति ।

என்பது.

உரை.

'வேலம் பாசியுடன் கூடிய ரிதவ்யச் செங்கலை வைத்தவனும் உணர்ந்தவனும் அந்தண விருத் (உயர்ந்த விருத்)தியால் உணவுப்பொருள்களை இனிதருந்துகின்றான்' என்று விசுவாமித்திரர். கூறியுள்ளார் ஆதலின் இதுபோற்றத் தக்கது என்பதாம்.

பற்பல மந்திரங்களால் வைக்கப்படுஞ் செங்கல்களை ஆறும் அடுக்கில் விதிப்பதற்கு முதலில் ஆறும் அடுக்கை விதிக்கின்றது

பிராமணம்—6

संवत्सरो वा एतं प्रतिष्ठायै नुदते योऽग्निं चित्वा न प्रतितिष्ठति पञ्च पूर्वाश्चितयो भवन्त्यथ षष्ठीश्चितिं चिनुते षड्वा ऋतवस्संवत्सर ऋतुष्वेव संवत्सरे प्रतितिष्ठति ।

என்பது.

உரை.

முற்கூறிய முறைப்படி ஐந்தடுக்குக்களையுஞ் (மகாக்கினிசயனத்தை) செய்தவன், மேல் உத்தரவேள்வி செய்வதற்குத் தனலாப மில்லாதபோது வருடாபிமானி தேவதை தடைசெய்திருத்தலின் ஆறுவது அடுக்கைச் செய்தல் வேண்டும். இதனால் ஆறு இருதுக்களைக்கொண்ட வருடத்தில் நலமடைகின்றான் என்பதாம்.

ஆறுவது அடுக்கில் வைக்கவேண்டியதை விதிக்கின்றது.

பிராமணம்—7

एता वा अधिपत्नीर्नामेष्टका यस्यैता उपधीयन्तेऽधिपतिरेव समानानां भवति ।

என்பது.

உரை.

'அதிபதி' என்னுஞ் சொல்லைக்கொண்ட மந்திரங்களால் வைக்குஞ் செங்கல்கள் அதிபத்நியங்கள். இவைகளை வைத்தலால் எசமானன் தன்னைப் போன்றவர்களுக்குள் தலைவனாகின்றான் என்பதாம்.

வைக்கும்போது செய்யும் தியானவிசேடத்தை விதிக்கின்றது.

பிராமணம்—8

**यं द्विष्यात्तमुपदधद्ध्यायेदेताभ्य एवैनं देवताभ्य आवृश्चति ताजगार्ति-
मार्छति ।**

என்பது

உரை.

வைக்கும்போது தன்னுடைய பகைவனை நினைத்துக்கொள்ளல் வேண்டும். நினைக்கில் அவன் தேவதைகளால் துன்புறுத்தப்படுவன் என்பதாம்.

பொன் துண்டுகளை இறைத்தலின் விதி.

பிராமணம்—9

**अङ्गिरसस्सुवर्गं लोकं यन्तो या यज्ञस्य निष्कृतिरासीत्तामृषिभ्यः प्रत्यौ-
हन्तद्धिरण्यमभवद्यद्धिरण्यशल्कैः प्रोक्षति यज्ञस्य निष्कृत्या अथो भेषज-
मेवास्मै करोत्यथो रूपेणैवैनꣳ समर्धयत्यथो हिरण्यज्योतिषैव सुवर्गं
लोकमेति ।**

என்பது.

உரை.

கருமத்தைச்செய்த அங்கிரச ரிஷிகள் சுவர்க்கஞ் சென்றபோது எக்ஞத்தை வாங்கிக்கொள்வதற்குப் போதிய பொருளை கருமாநுட்டானஞ் செய்கின்ற ரிஷிகளுக்குக் கொடுத்தனர் அது பொன்னாயிற்று, ஆதலின் பொன் துண்டுகளை இறைத்தலால் விலைக்கு வாங்கியதுபோல் எக்ஞ முண்டாகின்றது. குறைவையும் நிறைவாக்கும் மந்திரமுமாகின்றது. மற்றும், அக்கினியைச் சம்பத்துடையதாகச் செய்கின்றது. பொன்னொளி சுவர்க்கத்தின் வழியையுங் காட்டுகின்றது என்பதாம்.

முதலான செங்கல்கள்)

பொன் துண்டுகளை இறைத்தலில் "ஸஹஸ்ரஸ்ய பிரமா" என்பது முதலிய மந்திரத்தை விநியோகிக்கின்றது.

பிராமணம்—10

साहस्रवता प्रोक्षति साहस्रः प्रजापतिः प्रजापतेराप्त्यै ।

என்பது.

உரை.

மந்திரங்களில் ஆயிரம், என்னுஞ்சொல் இருத்தலால் ஆயிரக்கணக்கானவைகளாகின்றன, பிரமனும் ஆயிரக்கணக்கான உலக வகைகளைப் படைக்கின்றவனாதலின் இது பிரமனை யடைவதற்கு நிமித்தம் என்பதாம்.

செங்கல்களை காமதேனுக்களாக பாவித்துப் போற்றும் மந்திரத்தின் கருத்தை விளக்குகின்றது.

பிராமணம்—11

इमा मे अग्न इष्टका धेनवस्सन्त्वित्याह धेनूरेवैनाः कुरुते ता एनं कामदुघा अमुत्राऽमुष्मिँल्लोक उपतिष्ठन्ते ॥

என்பது.

உரை.

இச்செங்கல் காமதேனுக்களாகுக என்றதால், இவைகளைக் காமதேனுக்களாகச் செய்கின்றான். இவைகள் சுவர்க்கத்தில் காமதேனுக்களாய் எசமானனுக்கருகில் இருக்கும் என்பதாம்.

இரண்டாம் அநுவாகம்

முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் நான்காம் பிரபாடகம்

மூன்றுவது அநுவாகம்

உருத்திரத்தியாயத்தை விநியோகிக்கும் பிராமணங்கள்.

நான்கு பஞ்சாதிக்குமேல் முப்பது பதங்களைக்கொண்டது.

रुद्रो वा एष यदग्निस्स एतर्हि जातो यर्हि सर्वश्चितस्स यथा वत्सो जातस्स्तनं प्रेप्सत्येवं वा एष एतर्हि भागधेयं प्रेप्सति तस्मै यदाहुतिं न जुहुयादध्वर्युं च यजमानं च ध्यायेच्छतरुद्रीयं

जुहोति भागधेयेनैवैन१ँ शमयति नाऽऽर्तिमार्छत्यध्वर्युर्न यजमानो यद्ग्राम्याणां पशूनाम् [९] पयसा जुहुयाद्ग्राम्यान्पशूञ्छुचाऽर्पयेद्यदारण्यानामारण्याञ्जर्तिलयवाग्वा वा जुहुयाद्गवीधुकयवाग्वा वा न ग्राम्यान्पशून्हिनस्ति नाऽऽरण्यानथो खल्वाहुरनाहुतिर्वै जर्तिलाश्च गवीधुकाश्चेत्यजक्षीरेण जुहोत्याग्नेयी वा एषा यदजाऽऽहुत्यैव जुहोति न ग्राम्यान्पशून्हिनस्ति नाऽऽरण्यानङ्गिरसस्सुवर्गं लोकं यन्तः [१०] अजायां घर्मं प्रासिञ्चन्त्सा शोचन्ती पर्णं पराऽजिहीत सोऽर्कोऽभवत्तदर्कस्यार्कत्वमर्कपर्णेन जुहोति सयोनित्वायोदङ्तिष्ठञ्जुहोत्येषा वै रुद्रस्य दिक्स्वायामेव दिशि रुद्रं निरवदयते चरमायामिष्टकायां जुहोत्यन्तत एव रुद्रं निरवदयते त्रेधाविभक्तं जुहोति त्रय इमे लोका इमानेव लोकान्त्समावद्वीर्यान्करोतीयत्यग्रे जुहोति [११] अथेयत्यथेयति त्रय इमे लोका एभ्य एवैनं लोकेभ्यश्शमयति तिस्र उत्तरा आहुतीर्जुहोति षट्सं पद्यन्ते षड्वा ऋतव ऋतुभिरेवैन१ँ शमयति यदनुपरिक्रामं जुहुयादन्तरवचारिण१ँ रुद्रं कुर्यादथो खल्वाहुः कस्यां वाऽह दिशि रुद्रः कस्यां वेत्यनुपरिक्राममेव होतव्यमपरिवर्गमेवैन१ँ शमयति [१२] एता वै देवतास्सुवर्ग्या या उत्तमास्ता यजमानं वाचयति ताभिरेवैन१ँ सुवर्गं लोकं गमयति यं द्विष्यात्तस्य संचरे पशूनां न्यस्येद्यः प्रथमः पशुरभितिष्ठति स आर्तिमार्छति [१३]॥ पशूनां यन्तोऽग्रे जुहोत्यपरिवर्गमेवैन१ँ शमयति त्रि१ँशच्च ॥ ३ ॥

இது, பதினொரு அநுவாகங்களைக்கொண்ட உருத்திராத்தியத்தை விநியோகிக்கின்றது.

விநியோகம்)

ஹோமத்தை விதிக்கின்றது.

பிராமணம்—1

रुद्रो वा एष यदग्निस्स एतर्हि जातो यर्हि सर्वश्चितस्स यथा वत्सो जातस्स्तनं प्रेप्सत्येवं वा एष एतर्हि भागधेयं प्रेप्सति तस्मै यदाहुतिं न जुहुयादध्वर्युं च यजमानं च ध्यायेच्छतरुद्रीयं जुहोति भागधेयेनैवैनꣳ शमयति नाऽऽर्तिमार्च्छत्यध्वर्युर्न यजमानः ।

என்பது.

உரை.

எல்லா அடுக்குக்களும் முடிந்ததும் சயன அக்கினி உண்டாகின்றது. உண்டானதும், குழந்தை பிறந்தவுடன் பசியால் தனத்தை இச்சிப்பது போல் கோரரூபமாய் எழுந்ததால் இதுவே உருத்திரபரமேசுர னெனப்படுகின்றது. இதை, சதருத்திரீய ஹோமத்தால் சாந்திசெய்தல் வேண்டும்; இன்றெனின், எசமானனும் வேட்போனும் இறப்பார்கள். ஹோமத்தால் களிப்புறில் அவர்களை உருத்திராக்கினி கொல்லாது என்பதாம்.

ஹோமத்திற்குரிய பொருளை விதிக்கின்றது.

பிராமணம்—2

यद्ग्राम्याणां पशूनां पयसा जुहुयाद्ग्राम्यान्पशूञ्छुचाऽर्पयेद्यदारण्याना- मारण्याञ्जर्तिलयवाग्वा वा जुहुयाद्गवीधुकयवाग्वा वा न ग्राम्यान्पशू- न्हिनस्ति नाऽऽरण्यान् ।

என்பது.

உரை.

நாட்டுபசுக்களின் பால், காட்டுப்பசுக்களின் பால் இரண்டும் இருவகைப்பசுக்களையுந் துன்புறுத்துமாதலின், காட்டுஎள் காட்டுக்கோதுமையின் கஞ்சியால் ஹோமஞ் செய்தல்வேண்டு மென்பதாம்.

மற்ரொரு பட்சத்தை விதிக்கின்றது.

பிராமணம்—3

अथो खल्वाहुरनाहुतिर्वै जर्तिलाश्च गवीधुकाश्चेत्यजक्षीरेण जुहोत्याग्नेयी वा एषा यदजाऽऽहुत्यैव जुहोति न ग्राम्यान्पशून्हिनस्ति नाऽऽरण्यान् ।

என்பது.

உரை.

'அருந்தத்தக்கதே ஆகுதிக்குரியது' என்னும் நியாயம்பற்றி, காட்டு எள் கவீதுகம் என்னும் இரண்டும் அருந்தற்குரியனவன்று என்று ஆன்றோர் கூறுகின்றனர் ஆதலின், அவைகளை விட்டுவிட்டு, ஆட்டின்பாலால் ஹோமஞ் செய்யில், ஆடும் அக்கினியும் பிரமனுடைய முகத்திலிருந்து பிறந்தவை ளாதலின் ஒத்ததோர் பொருளாம். இவ்வாறு, நாட்டுப்பொருளும், காட்டுப் பொருளுங் கொள்ளாமையால் பசுக்கள் நாசமாகா என்பதாம்.

ஹோமத்திற்குரிய சுருவை விலக்குவதன்பொருட்டு வேறோர் சாதனத்தை விதிக்கின்றது.

பிராமணம்—4

अङ्गिरसस्सुवर्गं लोकं यन्तोऽजायां घर्मं प्रासिञ्चन्त्सा शोचन्ती पर्णं परा-ऽजिहीत सोऽर्कोऽभवत्तदर्कस्यार्कत्वमर्कपर्णेन जुहोति सयोनित्वाय ।

என்பது.

உரை.

அங்கிரசர்கள் சுவர்க்கஞ் செல்லும்போது, கர்மம், என்னும் காய்ச்சிய நெய் கலந்த தயிரை ஆட்டின்மீது தெளித்ததால் ஆட்டின் மயிர்களுள் சூடு பட்டு அவைகள் ஒரு இலையைப்போல் மண்ணில் விழுந்தது. அதுவே எருக் கஞ்செடியாக முளைத்ததாம். ஆதலின், எருக்கலையால் ஹோமஞ் செய்யில் இலையும், பாலும் ஒன்றன் காரியமானதால் ஒரேகாரணத்தை யடைந்த தாயிற்று என்பதாம்.

ஹோமஞ்செய்யும்போது ஒரு விசேடத்தை விதிக்கின்றது.

பிராமணம்—5

उदङ्तिष्ठञ्जुहोत्येषा वै रुद्रस्य दिक्स्वायामेव दिशि रुद्रं निरवदयते चरमा-यामिष्टकायां जुहोत्यन्तत एव रुद्रं निरवदयते ।

என்பது.

உரை.

உருத்திர திக்காகிய வடக்குத்திக்குமுகமாய் இருந்துகொண்டு வடக்குச் சிறகின் கடைசியிலுள்ள செங்கல்மீது பாலை ஹோமஞ் செய்தல்வேண்டும். அதனால் உருத்திரனுடைய குரூரம் (கோபம்) முழுதும் நீங்கிவிடுகின்றது என்பதாம்.

விநியோகம்)

ஹோமத்திற்குரியதாக உருத்திராத்தியாயத்தை மூன்ருய்ப் பகுக்கின்றது.

பிராமணம்—6

त्रेधाविभक्तं जुहोति त्रय इमे लोका इमानेव लोकान्त्समावद्वीर्यान्करोति ।

என்பது.

உரை.

நமஸ்தே ருத்ரமஸ்யவே என்பதுமுதல், "சபாபதிப்யஸ்ச" என்பது வரை முதலாகுதிக்குரிய பாகமாம். 'நமோ அஸ்வேப்ய:' என்பது முதல், 'ஆவார்யாய' என்பதுவரை இரண்டாம் ஹோமபாகமாம். 'நம: பிரதரண' என்பது முதல், 'ய ஏதாவந்தஸ்ச' என்பது முதலிய இருக்குவரை மூன்ருவது ஹோமபாகமாம். இவ்வாறு பிரித்ததால் மூன்றுலகங்களும் வலியுறுத்தப்பெற்றன என்பதாம்.

மூன்று ஹோமங்களுக்கும் முறையே முழந்தாள். 'நாபி, முகம்' என்பது வரை முறையே கையில் சுருக்கை உயரத்தூக்கிக்கொண்டு மூன்று ஹோமங்களைச் செய்யவேண்டுமென்று விதிக்கின்றது.

பிராமணம்—7

इयत्यग्रे जुहोत्यथेयत्यथेयति त्रय इमे लोका एभ्य एवैनं लोकेभ्यश्शमयति ।

என்பது.

உரை.

இவ்வாறு ஹோமஞ்செய்ததால் மூன்றுலகங்களினின்றும் உருத்திரனைச் சாந்தஞ் செய்கின்ருன் என்பதாம.

மூன்று எசுர்களாற் செய்யும் ஹோமத்தை விதிக்கின்றது.

பிராமணம்—8

तिस्र उत्तरा आहुतीर्जुहोति षट्सं पद्यन्ते षड्वा ऋतव ऋतुभिरेवैनꣳ शमयति ।

என்பது

உரை.

ஈண்டு ஆகுதிகள் ஆறும் ஆதலின், ஆறு இருதுக்களாலும் உருத்திரன் சாந்தஞ்செய்யப்பெற்றவனுகின்ருன் என்பதாம்.

விஞவிடைகள் கூறுவதுபோலக்கூறி முறையின்றிச் சுற்றிவந்து ஹோமஞ் செய்தலே விதிக்கின்றது.

பிராமணம்—9

यदनुपरिक्रामं जुहुयादन्तरवचारिणꣳ रुद्रं कुर्यादथो खल्वाहुः कस्यां वाऽह दिशि रुद्रः कस्यां वेत्यनुपरिक्राममेव होतव्यमपरिवर्गमेवैनꣳ शमयति।

என்பது.

உரை.

உருத்திரன் இன்னவிடத்திற்ருன் இருக்கின்ருன் என்பதை யுணர முடியுமா? முடியா, ஆதலின், நாற்புறமுஞ் சுற்றிவந்து ஹோமஞ் செய்யின் உருத்திரன் யாதேனுமோரிடத்திலிருந்து ஹோமத்தாற் களித்துக் கோபந் தணிவன் என்பதாம்.

எசமானனுக்கு ஓதிவைக்கவேண்டிய மந்திரங்களை விதிக்கின்றது.

பிராமணம்—10

एता वै देवतास्सुवर्ग्या या उत्तमास्ता यजमानं वाचयति ताभिरेवैनꣳ सुवर्गं लोकं गमयति।

'நமோ ருத்ரேப்யஃ' என்பது முதலிய ஈற்றுமந்திரங்களை எசமானன் ஓதுவதால், இம்மந்திரங்களிற் கூறிய தேவர்களே சுவர்க்கமடைதற்குக் காரணர்களான உத்தமர்கள் ஆவார்கள்; ஆதலின் இவர்கள் ஓதுகின்றவனை சுவர்க்கத்தை யடையச்செய்வார்கள் என்பதாம்.

எருக்கம் இலையை எறியவேண்டிய இடத்தை விதிக்கின்றது.

பிராமணம்—11

यं द्विष्यात्तस्य संचरे पशूनां न्यस्येद्यः प्रथमः पशुरभितिष्ठति स आर्तिमार्छति॥

என்பது.

உரை.

எசமானனுடைய பகைவனது பசுமாடுகள் செல்லுமிடத்திற் போட்டுவிடில், முதலில் அதைத்தாண்டிச் செல்லும் பசு இறந்துபோம் என்பதாம்.

மூன்றும் அநுவாகம்
முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் நான்காம்பிரபாடகம்

நான்காவது அநுவாகம்

தண்ணீர் வார்த்தல் முதலிய புநிதமாக்குங் கருமங்களைக் கூறும் பிராமணங்கள்.

நான்கு பஞ்சாதிக்குமேல் நாற்பத்தொன்பது பதங்களைக் கொண்டது.

अश्मन्नूर्जमिति परिषिञ्चति मार्जयत्येवैनमथो तर्पयत्येव स
एनं तृप्तोऽक्षुध्यन्नशोचन्नमुष्मिँल्लोक उपतिष्ठते तृप्यति प्रजया
पशुभिर्य एवं वेद तां न इषमूर्जं धत्त मरुतस्सꣳरराणा इत्याहाऽन्नं
वा ऊर्गन्नं मरुतोऽन्नमेवावरुन्धेऽश्मꣳस्ते क्षुदमुं ते शुक् [१४]
ऋच्छतु यं द्विष्म इत्याह यमेव द्वेष्टि तमस्य क्षुधा च शुचा
चार्पयति त्रिः परिषिञ्चन्पर्येति त्रिवृद्वा अग्निर्यावानेवाग्निस्तस्य
शुचꣳ शमयति त्रिः पुनः पर्येति षट्सं पद्यन्ते षड्वा ऋतव ऋतुभि-
रेवास्य शुचꣳ शमयत्यपां वा एतत्पुष्पं यद्वेतसोऽपाम् [१५]
शरोऽवका वेतसशाखया चावकाभिश्च विकर्षत्यापो वै शान्ता-
श्शान्ताभिरेवास्य शुचꣳ शमयति यो वा अग्निं चितं प्रथमः पशु-
रधिक्रामतीश्वरो वै तꣳ शुचा प्रदहो मण्डूकेन विकर्षत्येष वै
पशूनामनुपजीवनीयो न वा एष ग्राम्येषु पशुषु हितो नाऽऽरण्येषु
तमेव शुचाऽर्पयत्यष्टाभिर्विकर्षति [१६] अष्टाक्षरा गायत्री गाय-
त्रोऽग्निर्यावानेवाग्निस्तस्य शुचꣳ शमयति पावकवतीभिरन्नं वै
पावकोऽन्नेनैवास्य शुचꣳ शमयति मृत्युर्वा एष यदग्निर्ब्रह्मण एत-
द्रूपं यत्कृष्णाजिनं कार्ष्णी उपानहावुप मुञ्चते ब्रह्मणैव मृत्योरन्त-
र्धत्तेऽन्तर्मृत्योर्धत्तेऽन्तरन्नाद्या दित्याहुरन्यामुपमुञ्चतेऽन्यान्नान्तः

[१७] एव मृत्योर्वर्त्तेऽवान्नाद्यꣳरुन्धे नमस्ते हरसे शोचिष इत्याह नमस्कृत्य हि वसीयाꣳसमुपचरन्त्यन्यं ते अस्मत्तपन्तु हेतय इत्याह यमेव द्वेष्टि तमस्य शुचाऽर्पयति पावको अस्मभ्यꣳ शिवो भवेत्याहान्नं वै पावकोऽन्नमेवावरुन्धे द्वाभ्यामधि क्रामति प्रतिष्ठित्या अपस्यवतीभ्याꣳ शान्त्यै [१८] ॥ शुग्वै तसोऽपामष्टाभिर्वि कर्षति नान्तरेकान्नपञ्चाशच्च ॥ ४ ॥

இதில், தண்ணீர்க்குடத்தை எடுத்துக்கொண்டு மகாக்கினி சயனத்தை வலம்வந்துகொண்டே அந்நீரை வார்த்தலும், தவளையால் தேய்த்தலுமாகிய ஒருவகைப் புநிதமாக்கல் கூறப்படுகின்றது.

“அஶ்மந்நூர்ஜம்” என்பது முதலிய மந்திரத்தை நீர் வார்த்தலில் விநியோகிக்கின்றது.

பிராமணம்—1

अश्मन्नूर्जमिति परिषिञ्चति मार्जयत्येवैनमथो तर्पयत्येव स एनं तृप्तोऽक्षुध्यन्नशोचन्नमुष्मिँल्लोक उपतिष्ठते ।

என்பது.

உரை.

வலம்வந்து தண்ணீர்க்குடங்கொண்டு நீர் வார்த்தலால், அக்கினி புநிதமாகின்றது. களிப்புமடைகின்றது. களிப்புற்ற அவ்வக்கினி, பசிதாகமின்றி சுவர்க்கத்தில் தகிப்பதற்று இவ்வெசமானனை வழிபடுகின்றது என்பதாம்.

இவ்வாறுணர்கின்றவனைப் புகழ்கின்றது.

பிராமணம்—2

तृप्यति प्रजया पशुभिर्य एवं वेद ।

என்பது.

உரை.

இதை யுணர்ந்தவன், பிரசைகளுடனும், பசுக்களுடனுங் கூடிக்களிப்புறுகின்றான் என்பதாம்.

புநிதமாக்கல்)

மந்திரத்தின் நான்காம் பாதத்திலுள்ள ஊர்ஜம், 'மருத்துக்கள்' என்னுஞ் சொற்களின் கருத்தை விளக்குகின்றது.

பிராமணம்—3

तान्न इषमूर्जं धत्त मरुतस्सꣳरराणा इत्याहान्नं वा ऊर्गन्नं मरुतोऽन्नमेवाव-रुन्धे ।

என்பது.

உரை.

ஊர்ஜமாகிய வன்மைக்குக் காரணம் அன்னமாம். மருத்துக்களும் அன்னத்தைத் தேடுகின்றவர்களாதலின் அன்னமாம். இவ்விருவகைச் சொற்களும் இருத்தலால் அன்னத்தை அடைகின்றான் என்பதாம்.

'அஶ்மம்ஸ்தே' என்பது முதலிய மந்திரத்தின் கருத்தை விளக்குகின்றது.

பிராமணம்—4

अश्मꣳस्ते क्षुदमुं ते शुगृच्छतु यं द्विष्म इत्याह यमेव द्वेष्टि तमस्य क्षुधा च शुचा चार्पयति ।

என்பது.

உரை.

பொருமைப் படுகின்றவனுக்கு பசி காய்ச்சலை யளிப்பாயாக என்றதால், எசமானனிடத்தில் பகையுடையவனை, பசியாலும், நோயாலும் துன்புறுத்து கின்றது என்பதாம்.

நீர் வார்க்கும்போது வலமாய்ச் சுற்றல் வேண்டுமென விதிக்கின்றது.

பிராமணம்—5

त्रिः परिषिञ्चन्पर्येति त्रिवृद्वा अग्निर्यावानेवाग्निस्तस्य शुचꣳ शमयति ।

என்பது.

உரை.

மூன்றுமுறை நீர் வார்த்தலால் மூவகை அக்கினிகளின் துன்பங்களை யுந் தணிக்கின்றான் என்பதாம்.

நீர் வார்த்தலின்றிய இடஞ்சுற்றலை விதிக்கின்றது.

பிராமணம்—6

त्रिः पुनः पर्येति षड्रसं पद्यन्ते षड्वा ऋतव ऋतुभिरेवास्य शुचँ शमयति ।

என்பது.

உரை.

மற்றும், மும்முறை இடஞ்செய்தல் வேண்டும். இவைகளுடன் ஆறு முறை வலஞ்செய்ததால் இருதுக்களாலும் இவ்வக்கினியின் துன்பம் நீக்கப் பட்டது என்பதாம்.

எட்டு மந்திரங்களால், நீர் நொச்சியாலும் பாசியாலும் தேய்த்தல் வேண்டுமென விதிக்கின்றது.

பிராமணம்—7

अपां वा एतत्पुष्पं यद्वेतसोऽपाँ शरोऽवका वेतसशाखया चावकाभिश्च विकर्षत्यापो वै शान्ताश्शान्ताभिरेवास्य शुचँ शमयति ।

என்பது.

உரை.

தண்ணீரிலுண்டானதால் நீர் நொச்சி தண்ணீருடைய பூவாம். பாசியும் தண்ணீரின் சாரமாம். இவ்விருவகையாலும் சயனத்தின்மேல் நாற்புறமுந் தேய்த்தலால் அக்கினிசயனத்திற்குண்டாகிய துன்பந் தணியும் என்பதாம்.

முற்கூறிய தேய்க்கும் பொருள்களுடன் தவளையையுஞ் சேர்த்துத் தேய்த்தல் வேண்டுமெனல்.

பிராமணம்—8

यो वा अग्निं चितं प्रथमः पशुरधिक्रामतीश्वरो वै तँ शुचा प्रदहो मण्डूकेन विकर्षत्येष वै पशूनामनुपजीवनीयो न वा एष ग्राम्येषु पशुषु हितो नाऽऽरण्येषु तमेव शुचाऽर्पयति ।

என்பது.

புநிதமாக்கல்)

உரை.

பசு, எருமை, ஆடு முதலியவைகள், செங்கல்களால் அடுக்கப்பட்ட இம்மகாக்கினியின்மேல் ஏறி காலால் மிதிக்கில் இவ்வக்கினி அவைகளை எரிக்க வன்மையுடையதாகின்றது. ஆதலின், தவளை, வேள்விக்குரிய இருவகைப் பசுக்களுள் அடங்காமையாலும், உபயோகமின்மையாலும் எதற்குங் காரணமாகாது. ஆதலின், அதனால் தேய்க்கின் தவளைமாத்திரம் எரிக்கப்படும். இதுபற்றியே தவளையால் தேய்த்தல் என்பதாம்.

தேய்ப்பதில் 'சமுத்ரஸ்யத்வா' என்பது முதலிய மந்திரங்களை விநியோகிக்கின்றது.

பிராமணம்—9

अष्टाभिर्विकर्षत्यष्टाक्षरा गायत्री गायत्रोऽग्निर्यावानेवाग्निस्तस्य शुचꣳ शमयति ।

என்பது.

உரை.

எட்டுமந்திரங்களால் தேய்த்தலால் எட்டெழுத்துக்களைக் கொண்ட காயத்திரி வடிவாகிய எல்லா அக்கினிகளையுஞ் சாந்தப்படுத்துகின்றான் என்பதாம்.

பொதுவாய் விதித்த மந்திரங்களைச் சிறப்பாக விதிக்கின்றது.

பிராமணம்—10

पावकवतीभिरन्नं वै पावकोऽन्नेनैवास्य शुचꣳ शमयति ।

என்பது.

உரை.

'பாவகம்' என்னுஞ் சொல்லைக்கொண்ட மந்திரங்களால் தேய்த்தலின், பாவகம் என்னும் அக்கினிவாசகம் அன்னத்திற்குக் காரணமாம் ஆதலின் அன்னத்தால் இதனுடைய துன்பத்தைத் தணிக்கின்றான் என்பதாம்.

மான் தோலாற்செய்த பாதரக்ஷையைப் போட்டுக்கொள்ளல் வேண்டுமெனல்.

பிராமணம்—11

मृत्युर्वा एष यदग्निर्ब्रह्मण एतद्रूपं यत्कृष्णाजिनं कार्ष्णी उपानहावुप मुञ्चते ब्रह्मणैव मृत्योरन्तर्धत्ते ।

என்பது

உரை.

அக்கினி சுடுதலின் அது மிருத்துவென்பது வெளிப்படையாம். மான் தோல் வேதவடிவாம். தீக்ஷாப்பிரகரணத்தில் விதித்திருத்தலின் என்க. மான்தோலாற்செய்த பாதரக்ஷையை அணிந்துகொள்வதால் வேதத்தால் மிருத்து நீக்கப்பட்டதாயிற்று என்பதாம்.

இரண்டு செருப்புக்களையும் போட்டுக்கொள்ளில் குற்றம் வருமாதலின் ஒரு செருப்பைமாத்திரம் போட்டுக்கொள்ளல் வேண்டுமெனல்.

பிராமணம்—12

अन्तर्मृत्योर्धत्ते ऽन्तरन्नाद्यादित्याहुरन्यामुपमुञ्चते ऽन्यान्नान्तरेव मृत्योर्धत्ते ऽवान्नाद्यꣳरुन्धे ।

என்பது.

உரை

இரண்டையும் போடாவிட்டால் அக்கினியாகிற மிருத்துத் துன்புறுத்தும். இரண்டையும் போட்டுக்கொள்ளில், அத்தகையமிருத்துக் கெடும். மற்றும், அன்னம் முதலியவைகளுங் கெடுமென்று ஆன்றோர் கூறுகின்றனர். ஆதலின், அக்குற்றம் நீங்குதற்பொருட்டு ஒருசெருப்பைமாத்திர மணிந்துகொள்ளில் மிருத்துவின் சாந்தமும், போட்டுக்கொள்ளாததால் அன்ன முதலியவைகளின் இலாபமும் உண்டாகும் என்பதாம்.

செருப்பணிந்து கொண்டபின், அக்கினி சயனத்தின்மீது ஏறுவதற்கு அங்கமாகிய இரண்டாம் மந்திரத்தின் முதற்பாதியின் கருத்தை விளக்குகிறன்றது.

பிராமணம்—13

नमस्ते हरसे शोचिष इत्याह नमस्कृत्य हि वसीयाꣳसमुपचरन्ति ।

என்பது.

உரை.

'வணக்கம் அக்கினிக்கு' என்றது, ஏவலாளர் தனமுடைய தமது தலைவனை வணங்குவதுபோல் வணங்கல் பொருத்தமுடையதே என்பதாம்.

புநிதமாக்கல்)

மூன்ரும் பாதத்தின் கருத்தை விளக்குகின்றது.

பிராமணம்—14

अन्यन्ते अस्मत्तपन्तु हेतय इत्याह यमेव द्वेष्टि तमस्य शुचाऽर्पयति ।

என்பது.

உரை.

"என்னிலும் வேருெருவனே அக்கினி எரிக்குக" என்றது, பொருமையுடைய பகைவனைத் துன்புறுத்துக என்பதாம்.

மந்திரத்தின் நான்காம் பாதக்கருத்தை விளக்குகின்றது.

பிராமணம்—15

पावको अस्मभ्यं शिवो भवेत्याहान्नं वै पावकोऽन्नमेवावरुन्धे ।

என்பது.

உரை.

'பாவக அக்கினி எமக்கு மங்களமாகுக' என்றது, பாவகம் என்பதால் அன்னத்தை யுண்டாக்குக என்பதாம்.

"அபாமிதம்" என்பது முதலிய மந்திரங்களின் எண்ணுடன் கூட, அக்கினி சயனத்தின்மீது ஏறுவதை விதிக்கின்றது.

பிராமணம்—16

द्वाभ्यामधि क्रामति प्रतिष्ठित्यै ।

என்பது.

உரை.

இரண்டு மந்திரங்களால் பெறுவதால் நிலையை அடைகின்ருன் என்பதாம்.

பொதுவாக விதித்த இரண்டு மந்திரங்களையும் சிறப்பாக விநியோகிக்கின்றது.

பிராமணம்—17

अपस्यवतीभ्यां शान्त्यै ॥

என்பது.

உரை.

தண்ணீர் என்னும் பொருளை (அப்பு என்னுஞ் சொற்களை)க் கொண்ட இரண்டு மந்திரங்களால், சயனத்தின்மீது ஏறுவதால் அக்கினியின் சூடு தணிகின்றது என்பதாம்.

நான்காம் அநுவாகம்
முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் நான்காம் பிரபாடகம்

ஐந்தாவது அநுவாகம்

வியாகார ஹோமத்தைக் கூறும் பிராமணங்கள்.

நான்கு பஞ்சாதிக்குமேல் நாற்பது பதங்களைக் கொண்டது.

नृषदेवडिति व्याघारयति पङ्क्त्याऽऽहुत्या यज्ञमुखमा रंभते-ऽक्षणया व्याघारयति तस्मादक्षणया पशवोऽङ्गानि प्रहरन्ति प्रतिष्ठित्यै यद्वषट्कुर्याद्यातयामाऽस्य वषट्कारस्स्याद्यन्न वषट्कुर्याद्रक्षाꣳसि यज्ञꣳ हन्युर्वडित्याह परोक्षमेव वषट्करोति नाऽस्य यातयामा वषट्कारो भवति न यज्ञꣳ रक्षाꣳसि घ्नन्ति हुतादो वा अन्ये देवाः [१९] अहुतादोऽन्ये तानग्निचिदेवोभयान्प्रीणाति ये देवा देवानामिति दध्ना मधुमिश्रेणावोक्षति हुतादश्चैव देवानहुतादश्च यजमानः प्रीणाति ते यजमानं प्रीणन्ति दध्नैव हुतादः प्रीणाति मधुषाऽहुतादो ग्राम्यं वा एतदन्नं यद्दध्यारण्यं मधुयद्दध्ना मधुमिश्रेणावोक्षत्युभयस्यावरुद्ध्यै ग्रमुष्टिनाऽवोक्षति प्राजापत्यः [२०] वै ग्रमुष्टिस्सयोनित्वाय द्वाभ्यां प्रतिष्ठित्या अनुपरिचारमवोक्षत्यपरिवर्गमेवैनान्प्रीणाति वि वा एष प्राणैः प्रजया पशुभिर्ऋध्यते योऽग्निं चिन्वन्नधिक्रामति प्राणदा अपानदा इत्याह

प्राणानेवाऽऽत्मन्धत्ते वर्चोदा वरिवोदा इत्याह प्रजा वै वर्चः पशवो वरिवः प्रजामेव पशूनात्मन्धत्त इन्द्रो वृत्रमहन्तं वृत्रः [२१] हतष्षोडशभिर्भोगैरसिनात्स एतामग्नयेऽनीकवत आहुतिमपश्यत्तामजुहोत्तस्याग्निरनीकवान्त्स्वेन भागधेयेन प्रीतष्षोडशधा वृत्रस्य भोगानप्यदहद्वैश्वकर्मणेन पाप्मनो निरमुच्यत यदग्नयेऽनीकवत आहुतिं जुहोत्यग्निरेवास्यानीकवान्त्स्वेन भागधेयेन प्रीतः पाप्मानमपि दहति वैश्वकर्मणेन पाप्मनो निर्मुच्यते यं कामयेत चिरं पाप्मनः [२२] निर्मुच्येतेत्येकैकं तस्य जुहुयाच्चिरमेव पाप्मनो निर्मुच्यते यं कामयेत ताजक्पाप्मनो निर्मुच्येतेति सर्वाणि तस्यानुद्रुत्य जुहुयात्ताजगेव पाप्मनो निर्मुच्यतेऽथो खलु नानैव सूक्ताभ्यां जुहोति नानैव सूक्तयोर्वीर्यं दधात्यथो प्रतिष्ठित्यै [२३]॥
देवाः प्राजापत्यो वृत्रश्चिरं पाप्मनश्चत्वारिंशच्च ॥ ५ ॥

இதில், மூலைமாறி நெய்யைத் தாரையாய்விடும் வியாகார ஹோமத்தைக் கூறுகின்றது.

வியாகார ஹோமத்தை விதிக்கின்றது.

பிராமணம்—1

नृषदेवडिति व्याघारयति पङ्क्त्याऽऽहुत्या यज्ञमुखमारभते ।

என்பது.

உரை.

ஆகுதிகள் ஐந்தாமாதலின் வேள்வியின் முக்கியமாகிய அங்கந்தொடங்கப்பெற்றது என்பதாம்.

இனி, தெற்குத் தோளிலிருந்து வடக்குத்தோள் என்பது முதலியதால் கோணலாய்ச் செய்வதை விதிக்கின்றது.

பிராமணம்—2

अक्ष्णया व्याघारयति तस्मादक्ष्णया पशवोऽङ्गानि प्रहरन्ति प्रतिष्ठित्यै ।

என்பது.

உரை.

மாறிமாறி ஓமஞ்செய்யப்படுவதால் பசுக்களும் கால்களை மாறியெடுத்து வைத்து நடக்கின்றன என்பதாம்.

மந்திரத்திலுள்ள 'வட்' என்னுஞ் சொல்லைப் புகழ்கின்றது.

பிராமணம்—3

यद्वषट्कुर्याद्यातयामाऽस्य वषट्कारस्स्याद्यन्न वषट्कुर्याद्रक्षाꣳसि यज्ञꣳ हन्युर्वडित्याह परोक्षमेव वषट्करोति नास्य यातयामा वषट्कारो भवति न यज्ञꣳ रक्षाꣳसि घ्नन्ति ।

என்பது.

உரை.

இதற்கு உரை, 'சந்தே வாயு' என்பது முதலிய மந்திரத்தின் உரையில் விரிவாய்க் கூறப்பட்டிருக்கின்றது ஆண்டுக்காண்க என்பதாம்.

உள்ளங்கைகீழாக, தேன்கலந்த தயிரைத் தெளித்தலை விதிக்கப்படுகின்றது.

பிராமணம்—4

हुतादो वा अन्ये देवा अहुतादोऽन्ये तानग्निचिदेवोभयान्प्रीणाति ये देवा देवानामिति दध्ना मधुमिश्रेणावोक्षति हुतादश्चैव देवानहुतादश्च यजमानः प्रीणाति ते यजमानं प्रीणन्ति दध्नैव हुतादः प्रीणाति मधुषाऽहुतादो ग्राम्यं वा एतदन्नं यद्दध्यारण्यं मधुयद्दध्ना मधुमिश्रेणाऽवोक्षत्युभयस्याव-रुद्ध्यै ।

என்பது.

உரை.

அக்கினிசயனஞ் செய்தவன், இந்திரன் முதலிய தேவர்களையும், பிராணன்களையும் தயிர்கலந்த தேனுல் சயனத்தின்மீது இடைவிடாமல் தெளித்துப் பிரியமடையச் செய்கின்றான். நாட்டுப் பொருளாலும், காட்டுப் பொருளாலுந் தெளித்ததால் இருவகையுந் தேடப்பெற்றதாகின்றன என்பதாம்.

தெளிப்பதற்குச் சாதனத்தை விதிக்கின்றது.

பிராமணம்—5

ग्रमुष्टिनाऽवोक्षति प्राजापत्यो वै ग्रमुष्टिस्सयोनित्वाय ।

என்பது.

உரை.

பருத்த (தடித்த) தருப்பைமுடிச்சால் தெளிக்கில், தருப்பைமுடி பருத்து உறுதியாயிருத்தலால் பிரசாபதியின் காரியமாம், அக்கினியும் பிரசாபதியின் காரியமாம். ஆதலின் இரண்டிற்கும் காரணம் ஒன்றுயிற்று என்பதாம்.

மந்திரம் இரண்டானதைப் புகழ்கின்றது.

பிராமணம்—6

द्वाभ्यां प्रतिष्ठित्यै ।

என்பது.

உரை.

இரண்டு மந்திரங்களானதால் நிலைபெறுகின்றுன் என்பதாம்.

அதைத் தெளிக்கும்போது நாற்புறமுஞ்சுற்றித் தெளித்தல் வேண்டுமென்னும் விதி.

பிராமணம்—7

अनुपरिचारमवोक्षत्यपरिवर्गमेवैनान्प्रीणाति ।

என்பது.

உரை.

எங்குஞ் சுற்றிவந்து அக்கினியின் அவயவங்களனைத்தையும் பிரியப்படுத்துதற் பொருட்டு இடைவிடாமல் தேன்கலந்த தயிரைத் தெளித்தல் வேண்டு மென்பதாம்.

பிராணன் முதலியவைகளை அளிப்பதைக் கூறுவதுடன் மந்திரத்திற்கு உரையுங் கூறுகின்றது.

பிராமணம்—8

वि वा एष प्राणैः प्रजया पशुभिर्ऋध्यते योऽग्निं चिन्वन्नधिक्रामति प्राणदा अपानदा इत्याह प्राणानेवाऽऽत्मन्धत्ते वर्चोदा वरिवोदा इत्याह प्रजा वै वर्चः पशवो वरिवः प्रजामेव पशूनात्मन्धत्ते ।

என்பது.

உரை.

எசமானன், அக்கினிசயனஞ் செய்யும்போது அதன்மேல் ஏறுவதால் பிராணன் முதலானவைகள் இவனைவிட்டு விலகிவிடுகின்றன. அவற்றை அளித்தல்வேண்டுமென வேண்டுதற் பொருட்டெழுந்தது இம்மந்திரம். அதில், மந்திரத்தின் முற்பாதியால் பிராணன்களை தனதான்மாவிடத்தில் நிறுவுகின்றான். இரண்டாம் பாதியிலுள்ள வன்மைப் பொருள்தரும் வர்ச்சஸ் என்னுஞ் சொல்லால், புதல்வன் முதலான பிரசைகளும், பூசை என்பதால் பசுக்களும் உபலட்சிதங்களாக அடையப்படுகின்றன என்பதாம்.

வைசுவகரும ஹோமத்தைத் தொடங்குகின்றது.

பிராமணம்—9

इन्द्रो वृत्रमहन्तं वृत्रो हतष्षोडशभिर्भोगैरसिनात्स एतामग्नयेऽनीकवत आहुतिमपश्यत्तामजुहोत्तस्याग्निरनीकवान्त्स्वेन भागधेयेन प्रीतष्षोडशधा वृत्रस्य भोगानप्यदहद्वैश्वकर्मणेन पाप्मनो निरमुच्यत ।

என்பது.

உரை

இந்திரனாற் கொல்லப்பட்ட விருத்திரன் பதினாறுபிரிவுகளாய் பாம்பின் உடம்புகளை யெடுத்து இந்திரனுடைய கைகால் முதலானவைகளைக் கடித்தனன் அதை நீக்குவதற்கு அநீக(சைன்ய)முடைய அக்கினிக்கு, 'அக்கினிஸ்திக்மேன' என்பது முதலிய இரண்டு மந்திரங்களால் ஆகுதிசெய்து பாம்புடம்பை எரித்துவிட்டனன். பிறகு, 'ய இமா' என்பது முதலிய மந்திரங்களால் வைசுவகர்ம ஹோமங்களைச்செய்து விருத்திரனைக்கொன்ற பாவத்தைப்போக்கிக்கொண்டனன் என்பதாம்.

இப்போது அவ்விருவகை ஹோமங்களையும் விதிக்கின்றது.

பிராமணம்—10

यदग्नयेऽनीकवत आहुतिं जुहोत्यग्निरेवास्यानीकवान्त्स्वेन भागधेयेन प्रीतः पाप्मानमपि दहति वैश्वकर्मणेन पाप्मनो निर्मुच्यते ।

என்பது.

உரை.

அக்கினியே அநீகவான் எனப்படுதலின் அநீகவத ஆகுதியாற்களிப்புற்று நோய் முதலானவைகட்குக் காரணங்களான பாவங்களை எரித்துவிடுகின்றது வைசுவகர்ம ஹோமம். அதாவது நரகத்திற்குக் காரணங்களான பாவங்களை எரித்துவிடுகின்றது என்பதாம்.

ஹோமங்கள்)

பதினாறு மந்திரங்களைகொண்டு ஓமஞ்செய்யு முறையில் விகற்பங்களைக் கூறுகின்றது.

பிராமணம்--11

यं कामयेत चिरं पाप्मनो निर्मुच्येतेत्येकैकं तस्य जुहुयाच्चिरमेव पाप्मनो निर्मुच्यते यं कामयेत ताजक्पाप्मनो निर्मुच्येतेति सर्वाणि तस्याऽनुद्रुत्य जुहुयात्ताजगेव पाप्मनो निर्मुच्यतेऽथो खलु नानैव सूक्ताभ्यां जुहोति नानैव सूक्तयोर्वीर्यं दधात्यथो प्रतिष्ठित्यै ॥

என்பது.

உரை.

மெல்லமெல்லப் பாவங்கள் போதல்வேண்டுமென விரும்பில், ஒவ்வொரு மந்திரத்திற்கு ஒவ்வொரு ஹோமஞ் செய்தல்வேண்டும். விரைவில் அப்போதே எல்லாப் பாவங்களும் ஒழியவேண்டுமென விரும்பில் பதினாறு மந்திரங்களையும் ஓதி ஒரு ஹோமஞ் செய்தல்வேண்டும். எசமானனுக்குப் பிரதிட்டைவேண்டுமென விரும்பில் இரண்டாகப் பிரித்து இரண்டு ஹோமங்கள் செய்தல்வேண்டும். ஈண்டு, இரண்டு ஹோமங்கள் செய்தல்வேண்டுமென்பதே சிறந்ததாம். ஏனையவைகளும், வேறு சாகைகளிற் கூறப்பட்டுள்ளவைகளாதலின் கொள்ளத் தக்கவைகளேயாம் என்பதை யுணர்க.

ஐந்தாவது அநுவாகம்
முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் நான்காம் பிரபாடகம்

ஆறும் அநுவாகம்

சமித்துக்களை வைத்தல் முதலிய விதிகளைக் கூறும் பிராமணங்கள்.

ஆறு பஞ்சாதிக்குமேல் பத்து பதங்களைக்கொண்டது.

उदे॑नमुत्त॒रां न॒येति॑ स॒मिध॒ आ द॑धाति॒ यथा॒ जनं॑ य॒ते॑ऽव॒सं-
क॒रोति॑ ता॒दृगे॒व त॒त्तिस्र आ द॑धाति त्रि॒वृद्वा अ॒ग्निर्यावा॑ने॒वाग्नि-
स्तस्मै॑ भाग॒धेयं॑ क॒रोत्यौदु॑म्बरीर्भवन्त्यू॒र्ग्वा उदु॑म्ब॒र ऊर्ज॑मे॒वास्मा॒
अपि॑ दधा॒त्युदु॑ त्वा॒ विश्वे॑ दे॒वा इत्या॑ह प्रा॒णा वै विश्वे॑ दे॒वाः
प्रा॒णैः [२४] ए॒वैन॒मुद्य॑च्छ॒तेऽग्ने॒ भर॑न्तु चि॒त्तिभि॒रित्या॑ह॒ यस्मा॑

एवैनं चित्तायोद्यच्छते तेनैवैनꣳ समर्धयति पञ्च दिशो दैवीर्यज्ञ-
मवन्तु देवीरित्याह दिशो ह्येषोऽनु प्रच्यवतेऽपामतिं दुर्मतिं बाध-
माना इत्याह रक्षसामपहत्यै रायस्पोषे यज्ञपतिमाभजन्तीरित्याह
पशवो वै रायस्पोषः [२५] पशूनेवाऽवरुन्धे षड्भिर्हरति षड्वा
ऋतव ऋतुभिरेवैनꣳ हरति द्वे परिगृह्यवती भवतो रक्षसामपहत्यै
सूर्यरश्मिर्हरिकेशः पुरस्तादित्याह प्रसूत्यै ततः पावका आशिषो
नो जुषन्तामित्याहाऽन्नं वै पावकोऽन्नमेवावरुन्धे देवासुरास्संयत्ता
आसन्ते देवा एतदप्रतिरथमपश्यन्तेन वै तेऽप्रति [२६] असुरान-
जयन्तदप्रतिरथस्याऽप्रतिरथत्वं यदप्रतिरथं द्वितीयो होताऽन्वाहा-
प्रत्येव तेन यजमानो भ्रातृव्याञ्जयत्यथो अनभिजितमेवाभि
जयति दशर्चं भवति दशाक्षरा विराड्विराजेमौ लोकौ विधृताव-
नयोर्लोकयोर्विधृत्या अथो दशाक्षरा विराडन्नं विराड्विराज्येवान्नाद्ये
प्रतितिष्ठत्यसदिव वा अन्तरिक्षमन्तरिक्षमिवाऽऽग्नीध्रमाग्नीध्रे [२६]
अश्मानं निदधाति सत्त्वाय द्वाभ्यां प्रतिष्ठित्यै विमान एष दिवो
मध्य आस्त इत्याह व्येवैतया मिमीते मध्ये दिवो निहितः पृश्नि-
रश्मेत्याहाऽन्नं वै पृश्न्यन्नमेवावरुन्धे चतसृभिरा पुच्छादेति
चत्वारि छन्दाꣳसि छन्दोभिरेवेन्द्रं विश्वा अवीवृधन्नित्याह वृद्धि-
मेवोपावर्तते वाजानाꣳ सत्पतिं पतिम् [२७] इत्याहान्नं वै
वाजोऽन्नमेवावरुन्धे सुम्नहूर्यज्ञो देवाꣳ आच वक्षदित्याह प्रजा वै
पशवस्सुम्नं प्रजामेव पशूनात्मन्धत्ते यक्षदग्निर्देवो देवाꣳ आच
वक्षदित्याह स्वगाकृत्यै वाजस्य मा प्रसवेनोद्ग्राभेणोदग्रभीदित्या-

முதலான விதிகள்)

हासौ वा आदित्य उद्यन्नुद्ग्राभ एष निम्रोचन्निग्राभो ब्रह्मणैवा-
ऽऽत्मानमुद्गृह्णाति ब्रह्मणा भ्रातृव्यं निगृह्णाति [२८] ॥ प्राणैः
पोषोऽप्रत्याग्नीध्रे पतिमेष दर्श च ॥ ६ ॥

இதில், சமித்துகளை வைத்தல் முதலியவைகள் சொல்லப்படுகின்றன.

நெய்யில் தோயவைத்திருந்த சமித்துக்களைத் தீயில் வைத்தலை விதிக்கின்றது.

பிராமணம்—1

उदेनमुत्तरां नयेति समिध आ दधाति यथा जनं यतेऽवसङ्करोति तादृगेव तत् ।

என்பது.

உரை.

உலகில் தூரஞ் சென்றவனுக்கு வழியில் பாதுகாப்பாக கட்டமுது இருப்பதுபோல் எடுத்துக்கொண்டு செல்லும் அக்கினிக்கு இச்சமித்துக்கள் கட்டமுதுபோன்றன என்பதாம்.

சமித்துக்களின் எண்ணை விதிக்கின்றது.

பிராமணம் —2

तिस्र आ दधाति त्रिवृद्वा अग्निर्यावानेवाग्निस्तस्मै भागधेयङ्करोति ।

என்பது.

உரை.

மூன்று சமித்துக்கள் வைத்தல், மூவகை யக்கினிக்குங் கட்டமுது என்பதாம்.

சமித்துக்கள் எம்மரத்திலானவைகள் என்பதை விதிக்கின்றது.

பிராமணம்—3

औदुम्बरीर्भवन्त्यूर्ग्वा उदुम्बर ऊर्जमेवास्मा अपि दधाति ।

என்பது.

உரை.

அத்திமரச் சமித்துக்கள் வன்மையை அளிக்கின்றன என்பதாம்.

அக்கினியை எடுத்துக்கொள்ளுதற்குரிய மந்திரத்தின் முதற்பாதத்தி லுள்ள 'விஸ்வதேவ' என்னுஞ் சொல்லின் கருத்தை விளக்குகின்றது.

பிராமணம்—4

उदु त्वा विश्वे देवा इत्याह प्राणा वै विश्वे देवाः प्राणै रेवैनमुद्यच्छते ।

என்பது.

உரை.

விசுவதேவ: என்றது, பிராணன் ஆனதால் பிராணனுல் மேலே தூக்கப் பெற்றதாகின்றது என்பதாம்.

இரண்டாம் பாதத்தில், அக்கினி என்பது முதலியவைகளைக் கூறுது 'சிதி' என்றதற்குக் கருத்தைக் கூறுகின்றது.

பிராமணம்—5

अग्ने भरन्तु चित्तिभिरित्याह यस्मा एवैनं चित्तायोद्यच्छते तेनैवैनꣳ समर्ध-यति ।

என்பது.

உரை.

இதனுல், மேலே செய்யப்போகும் மனத்திலுள்ள அக்கினி சயனமாகிய காரியத்தைக் குறித்து அக்கினி எடுக்கப்படுவதால் அக்கினி சயனமாகிய காரியத்துடன் சம்பத்தையுமுடையதாகச் செய்கின்றுன் என்பதாம்.

ஐந்து மந்திரங்களால் ஆக்னீந்திர மண்டபத்திற்குக் கொண்டுபோகும் மந்தி ரங்களுள் முதல் மந்திரத்தின் முதல் பாதத்திற்கு உரையைக் கூறுகின்றது.

பிராமணம்—6

पञ्च दिशो दैवीर्यज्ञमवन्तु देवीरित्याह दिशो ह्येषोऽनु प्रच्यवते ।

என்பது.

உரை.

இவ்வேள்வித் தலைவன் ஐந்து திசைகளையும், வேள்வியைப் பாதுகாப்ப தற்கு ஏவுகின்றுன் என்பதாம்.

முதலான விதிகள்)

இம்மந்திரத்தின் இரண்டாம் பாதத்தின் கருத்தை விளக்குகின்றது.

பிராமணம்—7

अपामर्तिं दुर्मर्तिं बाधमाना इत्याह रक्षसामपहत्यै ।

என்பது.

உரை.

மதியின்மையையும், தீயமதியையுங் கெடுத்தலால் அவைகளைத் தேடும் அசுரர்களைக் கெடுத்ததாயிற்று என்பதாம்.

மூன்றும் பாதத்திலுள்ள 'ராயஸ் போஷம்' என்னுஞ் சொல்லாற் குறிப்பித்த பொருளை விளக்குகின்றது.

பிராமணம்—8

रायस्पोषे यज्ञपतिमाभजन्तीरित्याह पशवो वै रायस्पोषः पशूनेवाऽवरुन्धे ।

என்பது.

உரை.

இதனல், பசுக்களை அடைகின்றுன் என்பதாம்.

எடுப்பதற்குரிய மந்திரத்துடன் மேலுள்ள ஐந்து மந்திரங்களையுஞ் சேர்த்து விநியோகிக்கின்றது.

பிராமணம்—9

षड्भिर्हरति षड्वा ऋतव ऋतुभिरेवैनꣳ हरति ।

என்பது.

உரை.

இதனல், இருதுக்கள் ஆறுனதால் அவைகளால் அக்கினி எடுக்கப் பெற்றதாயிற்று என்பதாம்.

அம்மந்திரங்களுள், ராயஸ் போ ஷே, ஊர்ஜா, என்பவற்றை முதலாகக் கொண்ட இரண்டு மந்திரங்களையுஞ் சிறப்பாகப் புகழ்கின்றது.

பிராமணம்—10

द्वे परिगृह्यवती भवतो रक्षसामपहत्यै ।

என்பது.

உரை

இரண்டு மந்திரங்களிலும், 'பரிக்ரஹ்ய' (பிடித்து) என்னுஞ் சொற்கள் கொள்ளப்பட்டிருத்தலின் வேள்வியைக் கெடுக்க முடியாதவர்களாய் அசுரர்கள் தாமே கொல்லப்படுகின்றார்கள் என்பதாம்.

ஆறு மந்திரங்களுக்குள் ஈற்றிலுள்ள மந்திரத்தின் கருத்தை விளக்குகின்றது.

பிராமணம்—11

सूर्यरश्मिर्हरिकेशः पुरस्तादित्याह प्रसूत्यै ।

என்பது.

உரை.

'சூரியன் (பூஷா) பிரசவத்தைச் செய்கின்றான்' என்று அம்மந்திரத்திற் கூறியிருத்தலால் இம்மந்திரத்தால் உற்பத்தியாகின்றது என்பதாம்.

ஆறும் மந்திரத்தின் நான்காம் பாதத்திலுள்ள 'பாவகம்' என்னுஞ் சொல்லின் கருத்தை விளக்குகின்றது.

பிராமணம்—12

ततः पावका आशिषो नो जुषन्तामित्याहाऽन्नं वै पावकोऽन्नमेवावरुन्धे ।

என்பது.

உரை

பாவகம் என்னுஞ் சொல்லால் அன்னம் உபலட்சிதமாய்க் கொள்ளப்படுகிறதால் அன்னத்தை அடைகின்றான் என்பதாம்.

'ஆசுச்சிசானஃ' என்னுஞ் சூக்தத்தை விநியோகிக்கின்றது.

பிராமணம்—13

देवासुरास्संयत्ता आसन्ते देवा एतदप्रतिरथमपश्यन्तेन वै तेऽप्रत्यसुरानजयन्तदप्रतिरथस्याऽप्रतिरथत्वं यदप्रतिरथं द्वितीयो होताऽन्वाहाऽप्रत्येव तेन यजमानो भ्रातृव्याञ्जयत्यथो अनभिजितमेवाभि जयति ।

என்பது.

முதலான விதிகள்)

உரை.

இந்த ‘ அப்பிரதிரதம் ’ என்னுஞ் சூக்தத்தைக் கண்டு பிடித்து தேவர்கள் பகைவர்களை வென்றனர். ஆதலின், எசமானனும் இதனால், தனம் இட முதலியவைகளை வெற்றிபெற்றுக் கொள்கின்றான் என்பதாம்.

இச்சூக்தத்தின் மந்திர எண்ணை விதிக்கின்றது.

பிராமணம்—14

दशर्चं भवति दशाक्षरा विराड्विराजेमौ लोकौ विधृतावनयोर्लोकयोर्विधृत्या अथो दशाक्षरा विराडन्नं विराड्विराज्येवान्नाद्ये प्रतितिष्ठति ।

என்பது.

உரை.

இதில், பத்து இருக்குக்கள் இருத்தலின், பத்து எழுத்துக்களையுடைய ‘ விராட் ’ என்னுஞ் சந்தத்தின் வலியால் இரண்டுலகங்களுந் தாங்கப்படுகின்றன. விராட் அன்னமாதலின் அன்னத்திலும் பெருமையடைகின்றான் என்பதாம்.

இனி, முன் அநுவாகத்திற்க்கூறிய ‘விமான’ என்பது முதலிய இரண்டு மந்திரங்களால் கல்வைப்பதை விதிக்கின்றது.

பிராமணம்—15

असदिव वा अन्तरिक्षमन्तरिक्षमिवाऽऽग्नीध्रमाग्नीध्रेऽश्मानं निदधाति सत्त्वाय ।

என்பது.

உரை.

ஆக்னீத்ரமண்டபத்தில் அவிவண்டி முதலியவைகளில்லாமையின் சூனியமாய் இருத்தலின் அந்தரிட்சம் போன்றதாம். அத்தகைய சூனியத் தன்மையைப் போக்குதற் பொருட்டு வெள்ளைக் கல் ஒன்றை அதில் வைத்தல் வேண்டும் என்பதாம்.

அம்மந்திரம் இரண்டென்பதைப் புகழ்கின்றது.

பிராமணம்—16

द्वाभ्यां प्रतिष्ठित्यै ।

என்பது.

உரை.

மந்திரம் இரண்டானதால் பிரதிட்டை (நிலே)யின் பொருட்டாகின்றது என்பதாம்.

முதல் மந்திரத்திலுள்ள 'விமான' என்னுஞ் சொல்லின் கருத்தை விளக்குகின்றது.

பிராமணம்—17

विमान एष दिवो मध्य आस्त इत्याह व्येवैतया मिमीते ।

என்பது.

உரை.

சூனியமாயிருந்த ஆக்னீத்ர மண்டபம் ஒரு பொருளுடன் கூடியதாக இவ்விரண்டும் அளந்தறிகின்றன என்பதாம்.

இரண்டாம் மந்திரத்திலுள்ள, "ப்ருச்நி" என்னுஞ் சொல்லின் கருத்தை விளக்குகின்றது.

பிராமணம்—18

मध्ये दिवो निहितः पृश्निरश्मेत्याहाऽन्नं वै पृश्न्यन्नमेवावरुन्धे ।

என்பது.

உரை.

நடுவில் சுவர்க்கம் வெள்ளைக்கல் என்றது, முற்றிய சம்பா நெல்லரிசி வெண்மையாதலின் வெண்மையாகிய அன்னத்தையடைகின்றான் என்பதாம்.

நான்கு மந்திரங்களால் அக்கினியை எடுத்துக்கொண்டு செல்வதை விதிக்கின்றது.

பிராமணம்—19

चतसृभिरा पुच्छादेति चत्वारि छन्दाꣳसि छन्दोभिरेव ।

என்பது.

உரை.

அக்கினியை எடுத்துக்கொண்டு ஆக்கினீத்ர மண்டபத்திலிருந்து கெருடனுடைய வால் வரை நான்கு மந்திரங்களாற் செல்வதால் காயத்திரி முதலியநான்கு சந்தங்களாலும் எடுத்துக்கொண்டு சென்றதாகின்றது என்பதாம்.

முதலான விதிகள்)

அம்மந்திரங்களுள் முதல் மந்திரத்தின் முதல் பாதத்திலுள்ள "அவீவிருதன்" என்பதன் கருத்தை விளக்குகின்றது.

பிராமணம்—20

इन्द्रं विश्वा अवीवृधन्नित्याह वृद्धिमेवोपावर्तते ।

என்பது.

உரை.

'இந்திரம் விசுவா அவீவிருதன்' என்றது, வளர்ச்சியுண்டாகின்றது என்பதாம்.

அதன் நான்காம்பாதத்திலுள்ள 'வாஜ' என்னுஞ் சொல்லின் கருத்தை விளக்குகின்றது.

பிராமணம்—21

वाजानाꣳ सत्पतिं पतिमित्याहाऽन्नं व वाजोऽन्नमेवावरुन्धे ।

என்பது.

உரை.

வாசம் என்றது, அன்னமாதலின் அன்னத்தையடைகின்றான் என்பதாம்.

இரண்டாம் மந்திரத்திலுள்ள 'சும்ந' என்னுஞ் சொல்லின் கருத்தை விளக்குகின்றது.

பிராமணம்—22

सुम्नहूर्यज्ञो देवाꣳ आचवक्षदित्याह प्रजा वै पशवस्सुम्नं प्रजामेव पशूनात्मन्धत्ते ।

என்பது.

உரை.

'சும்ந' என்றது, பிரசையும் பசுக்களுமாம்; ஆகவே இதனல் பசுக்களையும், பிரஜைகளையும் அடைகின்றுன் என்பதாம்.

இதில், இரண்டாம் பாதத்தின் கருத்தை விளக்குகின்றது.

பிராமணம்—23

यक्षदग्निर्देवो देवाꣳ आच वक्षदित्याह स्वगाकृत्यै ।

என்பது.

உரை.

தேவர்கட்குக் கூறுகின்றான் என்றது, தேவர்களைத் தன் வசமாக்குகின்றான் என்பதாம்.

மூன்றும் மந்திரத்திலுள்ள, மேலே தூக்கல், கீழே தாழ்த்தல் என்னுஞ் சொற்களின் கருத்தை விளக்குகிறது.

பிராமணம்—24

वाजस्य मा प्रसवेनोद्ग्राभेणोदग्रभीदित्याहासौ वा आदित्य उद्यन्नुद्ग्राभ एष निम्रोचन्निग्राभो ब्रह्मणैवाऽऽत्मानमुद्गृह्णाति ब्रह्मणा भ्रातृव्यं निगृह्णाति ॥

என்பது.

உரை.

மேலெழல், தாழ்தல், என்ற இதனால், தன்னை உயர்த்திக் கொள்கின்றான், தனது பகைவனைத் தாழ்த்திவிடுகின்றான் என்பதாம்.

ஆறும் அநுவாகம்
முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் நான்காம் பிரபாடகம்

ஏழாவது அநுவாகம்.

சயனத்தின்மேல் அக்கினிவைத்தலைக் கூறும் பிராமணங்கள்.

ஏழ பஞ்சாதிக்குமேல் இருபத்தொரு பதங்களைக் கொண்டது.

प्राचीमनु प्रदिशं प्रेहि विद्वानित्याह देवलोकमेवैतयोपावर्तते क्रमध्वमग्निना नाकमित्याहेमानेवैतया लोकान्क्रमते पृथिव्या अहमुदन्तरिक्षमाऽरुहमित्याहेमानेवैतया लोकान्त्समारोहति सुवर्यन्तो नापेक्षन्त इत्याह सुवर्गमेवैतया लोकमेत्यग्ने प्रेहि [२९] प्रथमो देवयतामित्याहोभयेष्वेवैतया देवमनुष्येषु चक्षुर्दधाति पञ्चभिरधि क्रामति पाङ्क्तो यज्ञो यावानेव यज्ञस्तेन सह सुवर्गं लोकमेति नक्तोषासेति पुरोनुवाक्यामन्वाह प्रत्या अग्ने सहस्राक्षे-

त्याह साहस्रः प्रजापतिः प्रजापतेराप्त्यै तस्मै ते विधेम वाजाय स्वाहेत्याहाऽन्नं वै वाजोऽन्नमेवाव [३०] रुन्धे दध्नः पूर्णामौदुम्बरीꣳ स्वयमातृण्णायां जुहोत्यूर्ग्वै दध्यूर्गुदुम्बरोऽसौ स्वयमातृण्णाऽमुष्यामेवोर्जं दधाति तस्मादमुतोऽर्वाचीमूर्जमुप जीवामस्तिसृभिस्सादयति त्रिवृद्धा अग्निर्यावानेवाग्निस्तं प्रतिष्ठां गमयति प्रेद्धो अग्ने दीदिहि पुरो न इत्यौदुम्बरीमा दधात्येषा वै सूर्मी कर्णकावत्येतया ह स्म [३१] वै देवा असुराणाꣳ शततर्हाꣳस्तृꣳहन्ति यदेतया समिधमादधाति वज्रमेवैतच्छतघ्नीं यजमानो भ्रातृव्याय प्र हरति स्तृत्या अछम्बट्कारं विधेम ते परमे जन्मन्नग्न इति वैकङ्कतीमा दधाति भा एवाव रुन्धे ताꣳ सवितुर्वरेण्यस्य चित्रामिति शमीमयीꣳ शान्त्या अग्निर्वा ह वा अग्निचितं दुहेऽग्निचिद्वाऽग्निं दुहे ताम् [३२] सवितुर्वरेण्यस्य चित्रामित्याहैष वा अग्नेर्दोहस्तमस्य कण्व एव श्रायसोऽवेत्तेन ह स्मैनꣳ स दुहे यदेतया समिधमादधात्यग्निचिदेव तदग्निं दुहे सप्त ते अग्ने समिधस्सप्त जिह्वा इत्याह सप्तैवास्य साप्तानि प्रीणाति पूर्णया जुहोति पूर्ण इव हि प्रजापतिः प्रजापतेः [३३] आप्त्यै न्यूनया जुहोति न्यूनाद्धि प्रजापतिः प्रजा असृजत प्रजानाꣳ सृष्ट्या अग्निर्देवेभ्यो निलायत स दिशोऽनु प्राविशज्जुह्वन्मनसा दिशो ध्यायेद्दिग्भ्य एवैनमव रुन्धे दध्ना पुरस्ताज्जुहोत्याज्येनोपरिष्टात्तेजश्चैवास्मा इन्द्रियं च समीची दधाति द्वादशकपालो वैश्वानरो भवति द्वादश मासास्संवत्सरस्संवत्सरोऽग्निर्वैश्वानरस्साक्षात् [३४] एव वैश्वा-

नरमव रुन्धे यत्प्रयाजानूयाजान्कुर्याद्विकस्तिस्सा यज्ञस्य दर्वि-
होमं करोति यज्ञस्य प्रतिष्ठित्यै राष्ट्रं वै वैश्वानरो विण्मरुतो वैश्वा-
नरꣳ हुत्वा मारुताञ्जुहोति राष्ट्र एव विशमनु बध्नात्युच्चैर्वैश्वान-
रस्याऽऽश्रावयत्युपाꣳशु मारुताञ्जुहोति तस्माद्राष्ट्रं विशमति
वदति मारुता भवन्ति मरुतो वै देवानां विशो देवविशेनैवास्मै
मनुष्यविशमव रुन्धे सप्त भवन्ति सप्तगणा वै मरुतो गणश एव
विशमव रुन्धे गणेन गणमनुद्रुत्य जुहोति विशमेवास्मा अनुव-
र्त्मानं करोति [३५] अग्ने प्रेह्यव स दुहे तां प्रजापतेस्साक्षान्मनु-
ष्यविशमेकविꣳशतिश्च ॥ ७ ॥

இதில், எடுத்துக்கொண்டு வந்த அக்கினியை சயனத்தின்மீது வைத்தல் கூறப்படுகின்றது.

சயனத்தின்மீது ஏறவேண்டிய மந்திரங்கள் ஐந்தனுள் முதலாவது மந்திரத்தின் கருத்தை விளக்குகின்றது.

பிராமணம்—1

प्राचीमनु प्रदिशं प्रेहि विद्वानित्याह देवलोकमेवैतयोपावर्तते ।

என்பது.

உரை.

கிழக்கே செல்வாயாக என்றது, இம்மந்திரத்தால் தேவலோகத்தைக் குறித்துச் செல்லுவதற்குத் தொடங்குகின்றான் என்பதாம்.

இரண்டாம் மந்திரத்தின் கருத்தை விளக்குகின்றது.

பிராமணம்—2

क्रमध्वमग्निना नाकमित्याहेमानेवैतया लोकान्क्रमते ।

என்பது.

உரை.

அக்கினியுடன் நாகத்திற்குச் செல்வாயாக என்றது, மூன்றுலகங்களை யுங் குறித்து இம்மந்திரத்தால் அடியெடுத்து வைக்கின்றான் என்பதாம்.

மூன்றாமந்திரத்தின் கருத்தை விளக்குகின்றது.

பிராமணம்—3

पृथिव्या अहमुदन्तरिक्षमाऽरुहमित्याहेमानेवैतया लोकान्त्समारोहति ।

என்பது.

உரை.

மண்ணிலிருந்து அந்தரிட்சத்திற்கு ஏறுகின்றேன் என்றது, இதனால் மூவுலகங்ளிலும் நன்றாய் ஏறுகின்றான் என்பதாம்.

நான்காம் மந்திரத்தின் கருத்தை விளக்குகின்றது.

பிராமணம்—4

सुवर्यन्तो नापेक्षन्त इत्याह सुवर्गमेवैतया लोकमेति ।

என்பது.

உரை.

சுவர்க்கத்தை விரும்புகின்றான் வேறொன்றையும் விரும்பிலன், என்றது, சுவர்க்கத்தை யடைகின்றான் என்னும் பொருள்கொண்ட சொல் இம்மந்திரத்திலிருத்தலால் இதனால் சுவர்க்கத்தையடைகின்றான் என்பதாம்.

ஐந்தாம் மந்திரத்தின் கருத்தை விளக்குகின்றது.

பிராமணம்—5

अग्ने प्रेहि प्रथमो देवयतामित्याहोभयेष्वेवैतया देवमनुष्येषु चक्षुर्दधाति ।

என்பது.

உரை.

எசமானனுக்கு உபகாரஞ் செய்தற்பொருட்டு முன்னர்ச் செல்வாயாக, என்றது இரண்டு கண்கள் என்னும் பொருள்கொண்ட சொல் இம்மந்திரத்திலிருத்தலால் இரண்டுலகங்கட்கும் கண்களை நிறுவுகின்றான் என்பதாம்.

அம் மந்திரங்களை விநியோகிக்கின்றது.

பிராமணம்—6

पञ्चभिरधि क्रामति पाङ्क्तो यज्ञो यावानेव यज्ञस्तेन सह सुवर्गं लोकमेति ।

என்பது.

உரை.

ஐந்து மந்திரங்களால் ஏறுவதால் ஐந்து அங்கங்களைக்கொண்ட எல்லா வேள்விகளுடன் சுவர்க்கத்தை யடைகின்றான் என்பதாம்.

இயற்கைச் சுக்கான்கல்லின்மீது தயிரை ஓமஞ் செய்யவேண்டிய இரண்டு மந்திரங்களுள் முதல் மந்திரத்தை விநியோகிக்கின்றது

பிராமணம்—7

नक्तोषासेति पुरोऽनुवाक्यामन्वाह प्रत्यै ।

என்பது.

உரை.

இம்முதல் மந்திரத்தை இரண்டாவது மந்திரத்தாற் செய்யப்படும் ஆகுதிக்குப் புரோநுவாக்கியமாக ஓதிக்கொள்க என்பதாம்.

இரண்டாவது மந்திரத்தால் பேரொளிவடிவை யடைகின்றான் என்பதை விளக்குகின்றது.

பிராமணம்—8

अग्ने सहस्राक्षेत्याह साहस्रः प्रजापतिः प्रजापतेराप्त्यै ।

என்பது.

உரை.

ஆயிரங் கண்களையுடைய தன்மை விராட் சொரூபத்திற்கன்றி வேறொன்றிற்கும் அமையாது; ஆதலின், இம்மந்திரத்தால் பிரசாபதியை யடைகின்றான் என்பதாம்.

இம்மந்திரத்தின் நான்காம் பாதத்திலுள்ள 'வாஜ' என்னுஞ் சொல்லின் கருத்தை விளக்குகின்றது.

பிராமணம்—9

तस्मै ते विधेम वाजाय स्वाहेत्याहान्नं वै वाजोऽन्नमेवावरुन्धे ।

என்பது.

உரை.

வாஜத்தின் பொருட்டு சுவாஹா என்றதால், 'வாஜம்' என்பது அன்னமாம். இதனால் அன்னத்தை யடைகின்றான் என்பதாம்.

இம்மந்திரத்தாற் செய்யப்படும் ஓமத்தை விதிக்கின்றது.

பிராமணம்—10

दध्नः पूर्णामौदुम्बरीꣳ स्वयमातृण्णायां जुहोत्यूर्ग्वै दध्यूर्गुदुम्बरोऽसौ स्वयमातृण्णाऽमुष्यामेवोर्जं दधाति तस्मादमुतोऽर्वाचीमूर्जमुप जीवामः ।

என்பது.

உரை.

அத்திமரத்தாற் செய்த சுருக்கால் இயற்கைத் துவாரச் சுக்கான் கல்லின்மீது தயிரை ஓமஞ் செய்வதால், அத்தியும் தயிரும் அன்னவடிவங்களாதலின், சுவர்க்க வடிவாகிய இயற்கைத் துவாரச் சுக்கான் கல்லில் அன்னத்தை வைத்ததாகின்றது இதனால் வானிலுள்ள அமுதம் மழையாகப் பெய்து யாம் வாழ்கின்றேம் என்பதாம்.

அக்கினிவைத்தலை விதிக்கின்றது.

பிராமணம்—11

तिसृभिस्सादयति त्रिवृद्वा अग्निर्यावानेवाग्निस्तं प्रतिष्ठां गमयति ।

என்பது.

உரை.

மூன்று மந்திரங்களால் வைத்தலால் மூன்று அக்கினிகளுக்கும் நிலையையுண்டாக்குகின்றான் என்பதாம்.

அத்திச்சமித்தை வைக்கும் விதி.

பிராமணம்—12

प्रेद्धो अग्ने दीदिहि पुरो न इत्यौदुम्बरीमा दधात्येषा वै सूर्मी कर्णकावत्येतया हस्म वै देवा असुराणाꣳ शततर्हाꣳ स्तृꣳहन्ति यदेतया समिधमादधाति वज्रमेवैतच्छतघ्नीं यजमानो भ्रातृव्याय प्रहरति स्तृत्या अछम्बट्कारं ।

என்பது.

உரை.

உள்ளில் துளைகளையுடையதும், எரிந்துகொண்டிருப்பதுமாகிய இருப்புத் தூண்போன்ற இந்த ஒருமந்திரத்தால், நூற்றுக்கணக்கான அசுரர்களைத் தேவர்கள் கொன்றனர். ஆதலின், இம்மந்திரத்தை வச்சிராயுதமாகக் கொண்டு எசமானன் பகைவர்களை முழுதும் ஒழித்து விடுகின்றான் என்பதாம்.

சோத்தைக்களாச் சமித்தை வைத்தலில் மந்திரத்தை விநியோகிக்கின்றது.

பிராமணம்—13

विधेम ते परमे जन्मन्नग्न इति वैकङ्कतीमा दधाति भा एवावरुन्धे ।

என்பது.

உரை.

இச்சமித்தை வைத்தலால் ஒளியையடைகின்றான் என்பதாம்.

வன்னிச்சமித்தை வைத்தலில் மந்திரத்தை விநியோகிக்கின்றது.

பிராமணம்—14

ताꣳ सवितुर्वरेण्यस्य चित्रामिति शमीमयीꣳ शान्त्यै ।

என்பது.

உரை.

இச்சமித்து 'சமி' எனப்படுவதால் சாந்தப்படுத்துகின்றான் என்பதாம்.

இம்மந்திரத்தின் முதற்பாதியிலுள்ள, 'சவிதுః' என்பது முதலியதின் கருத்தை விளக்குகின்றது.

பிராமணம்—15

अग्निर्वा ह वा अग्निचितं दुहेऽग्निचिद्वाऽग्निं दुहे ताꣳ सवितुर्वरेण्यस्य चित्रामित्याहैष वा अग्नेर्दोहः ।

என்பது.

உரை.

அக்கினி எசமானனைக் கறத்தல், எசமானன் அக்கினியைக் கறத்தல் என்னுமிருவகைக்குள், இங்கு இம்மந்திரத்தால் எசமானன் அக்கினியைக் கறக்கின்றான் என்பதாம். ஈண்டுக் கறத்தல் என்பது தனக்கு வேண்டிய பயன்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பது.

அக்கினியை வைத்தல்)

இரண்டாம் பாதியில் கண்வமுனியை உதாகரித்ததின் கருத்தை விளக்குகின்றது.

பிராமணம்—16

तमस्य कण्व एव श्रायसोऽवेत्तेन हस्तैनं स दुहे।

என்பது.

உரை.

அக்கினியால் பயனைப் பெறுதலாகிய கறத்தலை, முதலில் கண்வ மகரிஷியே கண்டனர்; ஆதலின், இங்கும், கண்ணுவரிஷியைப்போலவே அக்கினியை இவ்வெசமானனுங் கறந்தவனாகின்றான் என்பதாம்.

இம்மந்திரத்துடன் சமித்துவைத்தலைப் புகழ்கின்றது.

பிராமணம்—17

यदेतया समिधमादधात्यग्निचिदेव तदग्निं दुहे।

என்பது.

உரை.

இம்மந்திரத்தால் சமித்தை வைக்கின்றவன் அவ்வக்கினியைக் கறக்கின்றான். அதாவது அக்கினியால், வேண்டிய பயன்களை யடைகின்றான் என்பதாம்.

'சப்ததே' என்பது முதலிய மந்திரத்தின் கருத்தை விளக்குகின்றது.

பிராமணம்—18

सप्त ते अग्ने समिधस्सप्त जिह्वा इत्याह सप्तैवास्य साप्तानि प्रीणाति।

என்பது.

உரை.

அக்கினியே! உனக்கு ஏழு நாக்குக்கள் என்றது, திரவியங்கள் (வேள்விப் பொருள்கள்) சமித்துக்கள், நாக்குக்கள், இருடிகள், இடங்கள், ஹோதாக்கள், வேள்வி செய்யும் முறைகள், உற்பத்திகள் என்னும் எவ்வேழு வகைகளையும் பிரியப்படுத்துகின்றான் என்பதாம்.

பூரணாகுதியை விதிக்கின்றது.

பிராமணம்—19

पूर्णया जुहोति पूर्ण इव हि प्रजापतिः प्रजापतेराप्त्यै न्यूनया जुहोति न्यूनाद्धि प्रजापतिः प्रजा असृजत प्रजानाꣳ सृष्ट्यै।

என்பது.

உரை.

பன்னிருமுறை நெய்யெடுத்துப் பூரணமாகிய சுருவால் ஆகுதி செய்யில் பிரசாபதியின் படைப்பிற்கு இது காரணமாகின்றது. உயிர்களைப் படைத்தல் குறைந்த பீஜங்களாலுங் கூடும், நிறைந்ததால் படைத்தல் கூடுமென்பது பற்றி என் சொல்லவேண்டும்? என்பதாம்.

ஹோமகாலத்திற் செய்யவேண்டிய தியானத்தை விதிக்கின்றது.

பிராமணம்—20

अग्निर्देवेभ्यो निलायत स दिशोऽनु प्राविशज्जुह्वन्मनसा दिशो ध्यायेद्दिग्भ्य एवैनमवरुन्धे ।

என்பது.

உரை.

முன் அக்கினி, தேவர்களிலிருந்துபோய்த் திக்குக்களில் ஒளித்துக் கொண்டிருந்தமையின், திக்குக்களிலுள்ள அக்கினியை நினைக்கில் திக்குக்களிலிருந்து அக்கினியை யடைகின்றான் என்பதாம்.

முன்னர்ச்செய்த தயிர் ஆகுதியையும், இப்போது செய்கின்ற நெய் ஆகுதியைஞ் சேர்த்துப் புகழ்கின்றது.

பிராமணம் – 21

दध्ना पुरस्ताज्जुहोत्याज्येनोपरिष्टात्तेजश्चैवास्मा इन्द्रियं च समीची दधाति ।

என்பது.

உரை.

நெய் ஒளி (அழகு) வடிவம், தயிர் இந்திரிய வடிவம் ஆதலின் இவ்விரு வகையும் எசமானனுக்குத் தேடியதாயிற்று என்பதாம்.

'ஈதிருங்ச' என்பது முதலிய மந்திரங்களால், மாருதபுரோடா சங்கட்கு முன்னர்ச் செய்யப்படும் வைசுவாநர இஷ்டியை விதிக்கின்றது.

பிராமணம்—22

द्वादशकपालो वैश्वानरो भवति द्वादश मासास्संवत्सरस्संवत्सरोऽग्निर्वैश्वानरस्साक्षादेव वैश्वानरमवरुन्धे ।

என்பது.

அக்கினியை வைத்தல்)

உரை.

பன்னிரு கபாலங்களில் புரோடாசஞ் செய்வதால் பன்னிரு மாதங்கள் கொண்ட வருடமாகிய அக்கினியை அடைகின்றான். ஈண்டு, ஒரு வருட காலம் உகாக்கினியை வைத்துக்கொண்டிருக்க வேண்டுமாதலின் அக்கினி வருடமெனப்படுகின்றது என்பதாம்.

விதியால் வந்த பிரயாஜ, அநுயாஜங்களை விலக்குகின்றது.

பிராமணம்—23

यत्प्रयाजानूयाजान्कुर्याद्विक्रस्तिरस्सा यज्ञस्य दर्विहोमङ्करोति यज्ञस्य प्रतिष्ठित्यै ।

என்பது.

உரை.

ஏனைய இடங்களிற் செய்வதுபோல் வேள்வி கெடாதிருத்தற் பொருட்டு பிரயாஜ, அநுயாஜயாகங்களின்றி தர்வி ஹோமமாத்திரஞ் செய்தல் வேண்டும். இதனால் வேள்வி நிலைக்கின்றது என்பதாம்.

வைசுவாநர புரோடாசத்திற்குப் பிறகு மாருத புரோடாச ஹோமத்தை விதிக்கின்றது.

பிராமணம்—24

राष्ट्रं वै वैश्वानरो विण्मरुतो वैश्वानरꣳ हुत्वा मारुताञ्जुहोति राष्ट्र एव विशमनुबध्नाति ।

என்பது.

உரை.

வைசுவாநரஹோமம் இராச்சியமாம், மாருதஹோமம் பிரசைகளாம். இதனால், இராச்சியத்தில் பிரசைகளைச் சேர்த்து வைத்ததாகின்றது என்பதாம்.

மாருத ஹோமத்திற்கு மெதுவாய் ஓதல் வேண்டுமென்று விதிக்கின்றது.

பிராமணம்—25

उच्चैर्वैश्वानरस्याऽऽश्रावयत्युपांꣳशु मारुताञ्जुहोति तस्माद्राष्ट्रं विशमतिवदति ।

என்பது.

உரை.

விதியால் வந்த இரைந்து ஓதுதல் வைசுவாநர ஹோமத்திற்காம். இராச்சியமாதலின் இது பொருத்தமாம். மாருத ஹோமமாகிய பிரசைகளி

டத்து மெல்லவோதுதலே பொருத்தமாம். இது பற்றியே, பிரசையை நோக்க அரசனிடத்தில் மிகுந்த இரைச்சல் இருக்கின்றது. இதுவே பிரசைகளைத் தேடுவது என்பதாம்.

இனி, மாருத புரோடாசங்களைப் புகழ்கின்றது.

பிராமணம்—26

मारुता भवन्ति मरुतो वै देवानां विशो देवविशेनैवास्मै मनुष्यविशमवरुन्धे ।

என்பது.

உரை.

மாருதக் கூட்டங்கள் தேவர்களின் பிரசைகளானதால் எசமானனுக்கு மனிதப் பிரசைகளைத் தேடுகின்றான் என்பதாம்.

புரோடாசங்களின் எண்ணை விதிக்கின்றது.

பிராமணம்—27

सप्त भवन्ति सप्तगणा वै मरुतो गणश एव विशमवरुन्धे ।

என்பது.

உரை.

இதற் கூறியுள்ளன ஐந்து கணங்கள், ஆரண்யத்திற் கூறியது ஒன்று, சூத்திரத்திற் கூறியது ஒன்று, இவ்வாறு ஏழு கணங்களானதால் பல்விதமான கணங்களையுடைய பிரசைகளையடைகின்றான் என்பதாம்.

ஹோமகாலத்தில் ஓதும் மந்திரத்தில் சில விசேடத்தை விதிக்கின்றது.

பிராமணம்—28

गणेन गणमनुद्रुत्य जुहोति विशमेवास्मा अनुवर्त्मानङ्करोति ॥

என்பது.

உரை.

முதற்கண மந்திரங்களால் ஹோமஞ் செய்துவிட்டு, இரண்டாங் கணத்தால் ஹோமஞ் செய்யும்போது முதற்கணத்தை ஓதல் வேண்டும். இவ்வாறே மேலுமாம். இவ்வாறு ஓதில் பிரசைகளனைத்தும் இவனுக்கு உதவியாகத் தொடர்ந்து கொண்டிருக்கும் என்பதாம்.

ஏழாம் அநுவாகம்.

முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் நான்காம்பிரபாடகம்

எட்டாவது அநுவாகம்

வசோர்த்தாரையைக் கூறும் பிராமணங்கள்.

ஐந்து பஞ்சாதிக்குமேல் நாற்பத்தொன்பது பதங்களைக் கொண்டது.

वसोर्धारां जुहोति वसोर्मे धाराऽसदिति वा एषा हूयते घृतस्य वा एनमेषा धाराऽमुष्मिँल्लोके पिन्वमानोपतिष्ठत आज्येन जुहोति तेजो वा आज्यं तेजो वसोर्धारा तेजसैवास्मै तेजोऽव रुन्धेऽथो कामा वै वसोर्धारा कामानेवाव रुन्धे यं कामयेत प्राणानस्यान्नाद्यं वि [३७] छिन्द्यामिति विग्राहं तस्य जुहुया-त्प्राणानेवास्यान्नाद्यं वि च्छिनत्ति यं कामयेत प्राणानस्यान्नाद्यꣳ सं तनुयामिति सन्ततां तस्य जुहुयात्प्राणानेवास्यान्नाद्यꣳ सं तनोति द्वादश द्वादशानि जुहोति द्वादश मासास्संवत्सरस्संवत्सरे-णैवास्मा अन्नमव रुन्धेऽन्नं च मेऽक्षुच्च म इत्याहैतद्वै [३८] अन्नस्य रूपꣳ रूपेणैवान्नमव रुन्धेऽग्निश्च म आपश्च म इत्याहैषा वा अन्नस्य योनिस्सयोन्येवान्नमव रुन्धेऽर्धेन्द्राणि जुहोति देवता एवाव रुन्धे यत्सर्वेषामर्धमिन्द्रः प्रति तस्मादिन्द्रो देवतानां भूयि-ष्ठभाक्तम इन्द्रमुत्तरमाहेन्द्रियमेवास्मिन्नुपरिष्टाद्दधाति यज्ञायुधानि जुहोति यज्ञः [३९] वै यज्ञायुधानि यज्ञमेवाव रुन्धेऽथो एतद्वै यज्ञस्य रूपꣳ रूपेणैव यज्ञमव रुन्धेऽवभृथश्च मे स्वगाकारश्च म इत्याह स्वगाकृत्या अग्निश्च मे घर्मश्च म इत्याहैतद्वै ब्रह्मवर्चसस्य रूपꣳ रूपेणैव ब्रह्मवर्चसमव रुन्ध ऋक्च मे साम च म इत्याह

[४०] एतद्वै छन्दसाꣳ रूपꣳ रूपेणैव छन्दाꣳस्यव रुन्धे गर्भाश्च मे वत्साश्च म इत्याहैतद्वै पशूनाꣳ रूपꣳ रूपेणैव पशूनव रुन्धे कल्पाञ्जुहोत्यक्लृप्तस्य क्लृप्त्यै युग्मदयुजे जुहोति मिथुनत्वायोत्तरावती भवतोऽभिक्रान्त्या एका च मे तिस्रश्च म इत्याह देवछन्दसं वा एका च तिस्रश्च [४१] मनुष्यछन्दसं चतस्रश्चाष्टौ च देवछन्दसं चैव मनुष्यछन्दसं चाव रुन्ध आ त्रयस्त्रिꣳ शतो जुहोति त्रयस्त्रिꣳशद्वै देवता देवता एवाव रुन्ध आऽष्टाचत्वारिꣳशतो जुहोत्यष्टाचत्वारिꣳशदक्षरा जगती जागताः पशवो जगत्यैवास्मै पशूनव रुन्धे वाजश्च प्रसवश्चेति द्वादशं जुहोति द्वादश मासास्संवत्सरस्संवत्सर एव प्रति तिष्ठति [४२] ॥

वि वै यज्ञस्साम च म इत्याह च तिस्रश्चैकान्नपञ्चाशच्च ॥ ८ ॥

இதில், வசோர்த்தாரை (தாரையாக நெய் விடுதல்) கூறப்படுகின்றது.

பதினெரு அநுவாக மந்திரங்களாற் செய்யும் ஹோமத்தை விதிக்கின்றது.

பிராமணம்—1

वसोर्धारां जुहोति वसोर्मे धाराऽसदिति वा एषा हूयते घृतस्य वा एनमेषा धाराऽमुष्मिँल्लोके पिन्वमानोपतिष्ठते ।

என்பது.

உரை.

இவ்வாகுதியால் இடைவிடாமல் தனங் கிடைத்தலால் இது வசோர்த்தாரை எனப்படுகின்றது. அதாவது, இதைச் செய்யும் எசமானன் எனக்கு எப்போதும் தனம் இருத்தல் வேண்டும் என்னும் விருப்பினனாய் இத்தகைய ஹோமத்தைச் செய்கின்றானாதலின், இந்த நெய்த்தாரை சுவர்க்கத்தில் எசமானனுக்கு வேண்டியவற்றைச் செய்து களிப்படைவிக்கின்றது என்பதாம்

இவ்வோமத்திற்கு பொருள் இதுவென விதிக்கின்றது.

பிராமணம்—2

आज्येन जुहोति तेजो वा आज्यं तेजो वसोर्धारा तेजसैवास्मै तेजोऽवरुन्धे ।

என்பது.

உரை.

நெய் ஒளியாமாதலின், இதனல், பொன்னுகிய தன சம்பத்தை அடைகின்ருன் என்பதாம்.

விரும்பியவற்றை அடைவதற்குக் காரண மாதல்பற்றியும் இவ்வோமத்தைப் புகழ்கின்றது.

பிராமணம்—3

अथो कामा वै वसोर्धारा कामानेवावरुन्धे ।

என்பது.

உரை

இந்த ஹோமம் இச்சையாலாமாதலின் விரும்பியவைகளே அடைகின்ருன் என்பதாம்.

உடன்பாட்டாலும் எதிர்மறையாலும் இடையருத்தன்மையை விதிக்கின்றது.

பிராமணம்—4

यं कामयेत प्राणानस्यान्नाद्यं वि छिन्द्यामिति विग्राहं तस्य जुहुयात्प्राणानेवास्यान्नाद्यं विच्छिनत्ति यं कामयेत प्राणानस्यान्नाद्यꣳ संतनुयामिति सन्ततां तस्य जुहुयात्प्राणानेवास्यान्नाद्यꣳ संतनोति ।

என்பது.

உரை.

இவ்வெசமானனுடைய பிராணனேயும் அன்னங்களேயும் விடுபட்டுப் போம்படி செய்வேன், என்று வேட்போன் நினைக்கில், இம்மந்திரத்தை இடையில் நிறுத்திவிட்டு ஹோமஞ் செய்வானுக. எசமானனுடைய பிராணன் முதலானவைகள் இடையருது கெடாதிருக்கும்படி விரும்பில் இடையீடின்றி இவ்வோமத்தைச் செய்வானுக என்பதாம்.

இனி, 'வாஜஸ்சமே' என்பது முதல், 'அன்னஞ்சமே' என்பது வரையுள்ள நூற்று நாற்பத்து நான்கு பதங்களையும் பன்னிரண்டு பன்னிரண்டாக பன்னிருவகைகளாகப் பிரித்துக்கொண்டு புகழ்கின்றது.

பிராமணம்—5

द्वादश द्वादशानि जुहोति द्वादश मासास्संवत्सरस्संवत्सरेणैवास्मा अन्नमवरुन्धे ।

என்பது.

உரை.

நூற்று நாற்பத்து நான்கை பன்னிரண்டு பன்னிரண்டாகப் பிரிக்கில் பன்னிருவகைப்படுகின்றது; ஆதலின், பன்னிரு மாதங்கள் கொண்ட வருடத்தால் விளையும் அன்னங்களை யடைகின்றான் என்பதாம்.

இனி, நான்காம் அநுவாகத்திலுள்ள பதங்களைப் புகழ்கின்றது.

பிராமணம்—6

अन्नं च मेऽक्षुच्च म इत्याहैतद्वा अन्नस्य रूपꣳ रूपेणैवान्नमवरुन्धे ।

என்பது.

உரை.

பசி நீங்குதல் அன்னத்தாலாவதாமாதலானும், மேலுள்ள நெல் முதலானவைகளும் உணவிற்குச் சாதனங்களானதாலும், 'அன்னம்' என்பது முதலான வாக்கியங்களாற் கூறப்படுகின்றவைகளனைத்தும் அன்னங்களே யாதலின் அன்னத்தை யடைகின்றான் என்பதாம்.

இனி, ஐந்தாம் அநுவாகத்திலுள்ள வாக்கியங்களைப் புகழ்கின்றது

பிராமணம்—7

अग्निश्च म आपश्च म इत्याहैषा वा अन्नस्य योनिस्सयोन्येवान्नमवरुन्धे ।

என்பது.

உரை.

பக்குவஞ் செய்வதற்குக் காரணமாதலின் அக்கினி அன்னங்கட்குக் காரணமாம். தண்ணீர், கொடி செடிகட்குக் காரணமாதலின் அன்னத்திற்குக் காரணமாம். இம்மந்திரங்களை ஓதுவதால் பல்வகைக் காரணங்களாலும் உணவுப் பொருள்களை யடைகின்றான் என்பதாம்.

நெய்ஹோமம்)

ஆறும் அநுவாகத்திலுள்ள வாக்கியங்களைப் புகழ்கின்றது.

பிராமணம்—8

अर्धैन्द्राणि जुहोति देवता एवावरुन्धे यत्सर्वैषामर्धमिन्द्रः प्रति तस्मादिन्द्रो देवतानां भूयिष्ठभाक्तम इन्द्रमुत्तरमाहेन्द्रिय मेवाऽस्मिन्नुपरिष्टाद्दधाति ।

என்பது.

உரை.

இந்திரன் என்னுஞ் சொல்லை பாதியிற்கொண்ட மந்திரங்களால் அக்கினி சோம முதலான தேவதைகளை யடைகின்றான். எல்லா மந்திரங்களின் பாதிகளிலும் இந்திரன் என்னுஞ் சொல்லிருத்தலால் மிகுந்த அவிகளை யருந்துகின்றவன் இந்திரன் எனப்படுகின்றான். இரண்டாம் பாதியில் இந்திரன் என்னுஞ் சொல்லிருத்தலால் உடம்பின் மேலுள்ள தலைப்பக்கத்தில் கண் முதலிய இந்திரியங்களை நிறுவுகின்றான் என்பதாம்.

ஏழாவது எட்டாவது அநுவாகங்களிலுள்ள வாக்கியங்களைப் புகழ்கின்றது.

பிராமணம்—9

यज्ञायुधानि जुहोति यज्ञो वै यज्ञायुधानि यज्ञमेवावरुन्धेऽथो एतद्वै यज्ञस्य रूपꣳ रूपेणैव यज्ञमवरुन्धे ।

என்பது.

உரை.

அம்சு அதாப்யம் முதலான சோமரச பாத்திரங்கள் நேரே எக்ஞத்தை யுண்டாக்கலின் அந்தரங்க ஆயுதங்களாம். சமித்து, தருப்பை முதலானவைகள் பரம்பரையாக எக்ஞத்தைத் தேடலின் பகிரங்க ஆயுதங்களாம். இவ்விரு வகை எக்ஞாயுதங்களாலும் எக்ஞத்தை யடைகின்றான் என்பதாம்.

இவ்வநுவாகங்களின் ஈற்றிலுள்ள சுவகாகாரவாக்கியங்களின் கருத்தை விளக்குகின்றது.

பிராமணம்—10

अवभृथश्च मे स्वगाकारश्च म इत्याह स्वगाकृत्यै ।

என்பது.

உரை.

இவைகளை, தனக்கு வசம் பண்ணிக் கொள்கிறான் என்பதாம்.

ஒன்பதாம் அனுவாகததின் முற்பாதியிலுள்ள வாக்கியங்களைப் புகழ்கின்றது.

பிராமணம்—11

अग्निश्च मे घर्मश्च म इत्याहैतद्वै ब्रह्मवर्चसस्य रूपꣳ रूपेणैव ब्रह्मवर्चसमव रुन्धे ।

என்பது.

உரை.

அக்கினி எனக்குண்டாகுக கர்மம் எனக்குண்டாகுக என்றது, அந்தணர்களுடைய கருமத்தை இவைகள் உண்டாக்குவதால் பிரமவொளிவடிவாம். இதனல் பிரமவொளி அடையப்படுகின்றது என்பதாம்

ஒன்பதா மநுவாகத்தின் பிற்பாதியிலுள்ள வாக்கியங்களைப் புகழ்கின்றது.

பிராமணம்—12

ऋक्च मे साम च म इत्याहैतद्वै छन्दसाꣳ रूपꣳ रूपेणैव छन्दाꣳस्यव रुन्धे ।

என்பது.

உரை

'இருக்கு முதலியவைகள் எனக்குண்டாகுக என்றது, இவைகள் சந்தத் தேவதைகளின் வடிவங்களாதலின் இவைகளால் சந்தங்களை யடைகின்ருன் என்பதாம்.

பத்தாம் அநுவாகத்தின் முற்பாதியிலுள்ள வாக்கியங்களைப் புகழ்கின்றது

பிராமணம்—13

गर्भाश्च मे वत्साश्च म इत्याहैतद्वै पशूनाꣳ रूपꣳ रूपेणैव पशूनव रुन्धे ।

என்பது.

உரை.

கர்ப்பம், கன்று முதலானவைகள் எனக்குண்டாகுக என்றது, இவை வெளிப்படையாக பசுக்களின் உருவங்களாதலால் பசுக்களை யடைகின்ருன் என்பதாம்.

நெய்ஹோமம்)

பத்தாம் அனுவாகத்தின் பிற்பாதியிலுள்ள வாக்கியங்களைப் புகழ்கின்றது.

பிராமணம்—14

कल्पाञ्जुहोत्यक्लृप्तस्य क्लृप्त्यै।

என்பது.

உரை

'ஆயுர் எக்ஞேன கல்ப்யதாம்' என்பது முதலான மந்திரங்களால், முன் எவ்வெப்பொருள் தத்தமது காரியங்களை யுண்டாக்கமாட்டாதனவோ, அவ்வக்காரியங்களை யுண்டாக்குவதன் பொருட்டு இந்த ஹோமம் என்பதாம்.

பதிஞேராம் அனுவாகத்தின் முற்பாதியிலுள்ள வாக்கியங்களைப் புகழ்கின்றது.

பிராமணம்—15

युग्मदयुजे जुहोति मिथुनत्वाय।

என்பது.

உரை.

நான்கு எட்டு என்பது முதலாகவரும் இரட்டைப் பட்ட எண்கள் யுக்மங்கள், ஒன்று மூன்று என்பது முதலாகவரும் ஒத்தைப் படும் எண்கள் அயுக்மங்கள், இவைகளிரண்டும் சமம் விஷமம் எனப்படும். இவ்விருவகை எண்களும் ஒன்றற் கொன்று மாறுபட்ட தன்மை யுடையவைகளாதலின் புணர்ச்சியின் பொருட்டு என்பதாம்.

இவ்விருவகை எண்களிலும் மேலும் மேலும் மிகுதியாய் வருவதைப் புகழ்கின்றது.

பிராமணம்—16

उत्तरावती भवतोऽभिक्रान्त्यै।

என்பது.

உரை.

ஒன்றுக்குமேல் மூன்று, மூன்றிற்கு மேல் ஐந்து, மேலும் இவ்வாறும். அங்ஙனமே, நான்கிற்கு மேல் எட்டு, எட்டுக்கு மேல் பன்னிரண்டு, மேலும் இவ்வாறும். இவ்வாறு மென்மேலும் பெருகிக் கொண்டு வருதலின் நாற்புறமும் பெருகுகின்றது என்பதாம்.

யுக்மம், அயுக்மம் என்னும் எண்ணுப் பொருள்களைக் கொண்ட சொல்லுக்க ளின் கருத்தை விளக்கு கின்றது.

பிராமணம்—17

एका च मे तिस्रश्च म इत्याह देवछन्दसं वा एका च तिस्रश्च मनुष्यछन्दसं चतस्रश्चाष्टौ च देवछन्दसं चैव मनुष्यछन्दसं चाव रुन्धे ।

என்பது.

உரை.

ஒத்தைப் படும் எண்களால் தேவர்கட்குப் பிரியமான சந்தங்களையும், இரட்டைப்படும் எண்களால் மனிதர்கட்குப் பிரியமான சந்தங்களையும் அடைகின்றான் என்பதாம்.

இரு வகை எண்களும் மேன் மேலும் போய் முடிவதைப் புகழ்கின்றது.

பிராமணம்—18

आत्रयस्त्रिंशतोजुहोति त्रयस्त्रिंशद्वै देवता देवता एवाऽवरुन्ध आऽष्टा-चत्वारिंशतो जुहोत्यष्टाचत्वारिंशदक्षरा जगती जागताः पशवो जगत्यैवास्मै पशूनवरुन्धे ।

என்பது.

உரை.

ஒற்றைப்பட்ட எண் முப்பத்து மூன்றில் முடிவதால் முப்பத்து மூவகைத் தேவர்களையும், இரட்டைப் பட்ட எண் நாற்பத்து நான்கில் முடிவதால் சகதிச் சந்தங்களாகிற பசுக்களையு மடைகின்றான் என்பதாம்.

பதினோராம் அநுவாகத்தின் பிற்பாதியிலுள்ள வாக்கியங்களைப்புகழ்கின்றது ஏழு இருக்குக்களாற் செய்யும் ஓமத்தை விதிக்கின்றது.

பிராமணம்—19

वाजश्च प्रसवश्चेति द्वादशं जुहोति द्वादश मासास्संवत्सरस्संवत्सर एव प्रतितिष्ठति ॥

என்பது.

உரை.

இவை பன்னிரண்டு ஆகுதிகளானதால், பன்னிரண்டு மாதங்கள் கொண்ட வருடத்தில் நிலைக்கின்றான் என்பதாம்.

எட்டாம் அநுவாகம்

முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் நான்காம் பிரபாடகம்

ஒன்பதாவது அநுவாகம்

பல்வகைத் தானியக்கஞ்சிகளாற் செய்யப்படும் ஹோமங்களைக் கூறும் பிராமணங்கள்.

நான்கு பஞ்சாதிக்குமேல் இரண்டு பதங்களைக்கொண்டது.

अग्निर्देवेभ्योऽपाक्रामद्भागधेयमिच्छमानस्तं देवा अब्रुवन्नुप न
आवर्तस्व हव्यं नो वहेति सोऽब्रवीद्वरं वृणै मह्यमेव वाजप्रसवीयं
जुहवन्निति तस्मादग्नये वाजप्रसवीयं जुह्वति यद्वाजप्रसवीयं जुहो-
त्यग्निमेव तद्भागधेयेन समर्धयत्यथो अभिषेक एवाऽस्य स चतु-
र्दशभिर्जुहोति सप्त ग्राम्या ओषधयस्सप्त [४३] आरण्या उभयीषा-
मवरुद्ध्या अन्नस्यान्नस्य जुहोत्यन्नस्यान्नस्यावरुद्ध्या औदुम्बरेण
स्रुवेण जुहोत्यूर्ग्वा उदुम्बर ऊर्गन्नमूर्जैवास्मा ऊर्जमन्नमवरुन्धेऽग्निर्वै
देवानामभिषिक्तोऽग्निचिन्मनुष्याणां तस्मादग्निचिद्वर्षति न धावेद-
वरुद्धꣳ ह्यस्यान्नमन्नमिव खलु वै वर्षं यद्धावेदन्नाद्याद्धावेदुपावर्ते-
तान्नाद्यमेवाभि [४४] उपावर्तते नक्तोषासेति कृष्णायै श्वेत-
वत्सायै पयसा जुहोत्यह्नैवास्मै रात्रिं प्रदापयति रात्रियाऽहरहो-
रात्रे एवास्मै प्रत्ते काममन्नाद्यं दुहाते राष्ट्रभृतो जुहोति राष्ट्रमेवाव-
रुन्धे षड्भिर्जुहोति षड्वा ऋतव ऋतुष्वेव प्रतितिष्ठति भुवनस्य
पत इति रथमुखे पञ्चाऽऽहुतीर्जुहोति वज्रो वै रथो वज्रेणैव दिशः
[४५] अभिजयत्यग्निचितꣳ ह वा अमुष्मिँल्लोके वातोऽभि पवते
वातनामानि जुहोत्यभ्येवैनममुष्मिँल्लोके वातः पवते त्रीणि जुहोति
त्रय इमे लोका एभ्य एव लोकेभ्यो वातमवरुन्धे समुद्रोऽसि

नभंस्वानित्याहैतद्वै वातंस्य रूपꣳ रूपेणैव वातमवंरुन्धेऽञ्जलिना जुहोति न ह्येतेषांमन्यथाऽऽहुंतिरवकल्पंते [४६] ॥ ओषंधय-स्सप्ताभि दिशोऽन्यथा द्वे चं ॥ ९ ॥

இதில் பல்வகைத் தானியக் கஞ்சிகளாற் செய்யப்படும் ஓமங் கூறப்படுகின்றது.

ஏழு இருக்குக்களாற் செய்யும் ஓமத்தை விதிக்கின்றது.

பிராமணம்—1

अग्निर्देवेभ्योऽपाक्रामद्भागधेयमिच्छमानस्तं देवा अब्रुवन्नुप न आवर्तस्व हव्यं नो वहेति सोऽब्रवीद्वरं वृणै मह्यमेव वाजप्रसवीयं जुहवन्निति तस्मादग्नये वाजप्रसवीयं जुह्वति यद्वाजप्रसवीयं जुहोत्यग्निमेव तद्भागधेयेन समर्धयत्यथो अभिषेक एवास्य सः ।

என்பது.

உரை.

முன் ஒருகாலத்தில் தனக்கு அவிர்ப்பாகம் பெறுததாய் அக்கினி எங்கேயே? போய் விட்டது; பிறகு, தேவர்கள் அவியைக் கொண்டு போதற் பொருட்டு அழைத்தனர். அவ்வண்ணமானல், எனது அவிர்ப்பாகமாக வாசப் பிரசவீய (கஞ்சி) ஹோமத்தைச் செய்தல் வேண்டுமென வரங் கேட்டுக் கொண்டது. ஆதலின், அனைவரும் வாசப் பிரசவீய ஹோமத்தை அக்கினியின் பொருட்டுச் செய்கின்றனர். இதனல், அக்கினி சம்பத்தை யடைகின்றது. மற்றும், இவ்வோமம் அக்கினிக்கு அபிடேகஞ் செய்தல் என்பதாம்.

சங்கிதையின் முதற்காண்டத்திலும், இங்குங் கூறப்பட்டுள்ள ஹோம மந்திரங்களின் எண்ணை விதிக்கின்றது.

பிராமணம்—2

चतुर्दशभिर्जुहोति सप्त ग्राम्या ओषधयस्सप्तारण्या उभयीषामवरुद्ध्यै ।

என்பது.

ஹோமம்)

உரை.

எள் முதலிய ஏழு வகை நாட்டுத்தானியங்கள், மூங்கில் அரிசி, சேமை முதலியன ஏழுவகைக் காட்டுத்தானியங்கள் என்னும் பதினான்கு வகைத் தானியக் கஞ்சிகளால் ஹோமஞ் செய்யில் இருவகைத் தானியங் களேயு மடைகின்றான் என்பதாம்.

ஒவ்வோரு மந்திரத்தாலும் ஒவ்வோரு தானியக்கஞ்சியின் ஹோமத்தைச் செய்தல் வேண்டு மென விதிக்கின்றது.

பிராமணம்—3

अन्नस्याऽन्नस्य जुहोत्यन्नस्यान्नस्यावरुद्ध्यै ।

என்பது.

உரை.

ஒவ்வொன்றானும் தனித்தனியே செய்யில், கலக்காமல் ஒவ்வொரு அன்னமுந் தனித்தனி கிடைக்கின்றது என்பதாம்.

விதியால் வந்த சுருவை விலக்குவதற்கு வேறொரு சாதனத்தை விதிக்கின்றது.

பிராமணம்—4

औदुम्बरेण स्रुवेण जुहोत्यूर्ग्वा उदुम्बर ऊर्गन्नमूर्जैवास्मा ऊर्जमन्नमवरुन्धे ।

என்பது.

உரை.

அத்திமரச் சுருவத்தால் ஹோமஞ் செய்யில், அத்தியும், அன்னமும் இரசத்துடன் கூடியதாமாதலின் இன்சுவையுடைய அன்னத்தை யடைகின்றான் என்பதாம்.

இங்கு, வேள்விக்கு அங்கமாக, அக்கினி சயனஞ் செய்தவன் மழையில் ஓடுவதை விலக்குகின்றது.

பிராமணம்—5

अग्निर्वै देवानामभिषिक्तोऽग्निचिन्मनुष्याणां तस्मादग्निचिद्वर्षति नधावेत् ।

என்பது.

உரை.

தேவர்களுக்குள் அக்கினி அபிடேகத்தையுடையது ஆவது போல், வேள்வித் தலைவர்களுள் அக்கினி சயனஞ் செய்கின்றவனும் அபிடேகஞ் செய்து கொள்ளப்பெற்றவனாதலின், அபிடேகஞ் செய்துகொள்ளல் போன்று மழையில் ஓடுதல்கூடாது என்பதாம்.

மறந்து ஓடில், மீண்டும் மழையிலேயே ஓடி வரல்வேண்டு மென்று விதிக்கின்றது.

பிராமணம்—6

अवरुद्धꣳ ह्यस्यान्नमन्नमिव खलु वै वर्षं यद्धावेदन्नाद्याद्धावेदुपावर्तेतान्नाद्य-मेवाभ्युपावर्तते ।

என்பது.

உரை.

அக்கினி சயனம் பண்ணியவன் எல்லா அன்னங்களையுந் தேடிக் கொண்டவனவன், மழையும் அன்னத்திற்குக் காரணமாதலின் அன்னமாம், ஆதலின், மழையில் நனையாதிருத்தற் பொருட்டு ஓடினால் அன்னம் இவனை விட்டு நீங்கி விடும். ஆகையால், அன்னத்தை யடைதற் பொருட்டு அம்மழையிலேயே மீண்டும் ஓடிவரல் வேண்டும் என்பதாம்.

வெள்ளைக் கன்றையுடைய கறுப்பு நிறப் பசுமாட்டின் பாலின் ஓமத்தை விதிக்கின்றது.

பிராமணம்—7

नक्तोषासेति कृष्णायैश्वेतवत्सायै पयसा जुहोत्यहैवास्मै रात्रिं प्रदापयति रात्रियाऽहरहोरात्रे एवास्मै प्रत्ते काममन्नाद्यं दुहाते ।

என்பது.

உரை.

கன்றும் பசுவும் பகலிரவுகளாய் ஒன்றற்கொன்று பயன்களைக் கொடுத்துக்கொள்ளுகின்றன வாதலின், பகலிரவுகளாக இவ் வெசமானனுக்கு அன்னம் முதலியவைகளைக் கொடுக்கின்றன என்பதாம்.

ஹோமம்)

சூத்திரப்படி ராஷ்டிரபிருத் ஹோமத்தை விதிக்கின்றது.

பிராமணம்—8

राष्ट्रभृतो जुहोति राष्ट्रमेवावरुन्धे ।

என்பது.

உரை.

மூன்றுங் காண்டத்தின் நான்காம் பிரபாடகத்தில் ஏழாமநுவாக மந்திரங்களாகிற, ரிதாஷாட், என்பது முதலிய மந்திரங்களாற் செய்யப்படும் ராஷ்டிர பிருத் ஹோமத்தால் இராச்சியத்தை அடைகின்றான் என்பதாம்.

பரியாய மெனப்படும் இரண்டிரண்டாகச் செய்வதன் எண்ணை விதிக்கின்றது.

பிராமணம்—9

षड्भिर्जुहोति षड्वा ऋतव ऋतुष्वेव प्रतितिष्ठति ।

என்பது.

உரை.

ஆறு பரியாயங்களாகச் செய்வதால் ஆறு இருதுக்களிலும் நிலையை அடைகின்றான் என்பதாம்.

இராஷ்டிர பிருத் ஹோமங்களுக்குள், மேலே செய்யப்படும் ஆகுதிகளில் ஐந்தென்னும் பட்சத்தை விதிக்கின்றது.

பிராமணம்—10

भुवनस्य पत इति रथमुखे पञ्चाऽऽहुतीर्जुहोति वज्रो वै रथो वज्रेणैव दिशोऽभिजयति ।

என்பது.

உரை.

இரதம் வச்சிரமாதலின், இரதத்தின் முடியின் (ஏர்க்காலின் நுனியின்) மீது ஐந்தாகுதிகளைச் செய்யில் வச்சிராயுதத்தால் திசைகளை வெல்கின்றான் என்பதாம்.

வாதஹோமவிதி

பிராமணம்—11

अग्निचितꣳ ह वा अमुष्मिँल्लोके वातोऽभि पवते वातनामानि जुहोत्यभ्येवैन ममुष्मिँल्लोके वातः पवते ।

என்பது.

உரை.

அக்கினி சயனம் பண்ணியவன் சுவர்க்கத்தில் இருக்கும் போது நறுமண முடைய குளிர் காற்று வீசவேண்டியதன் பொருட்டு இவ்வோமஞ் செய்யப்படுகின்றது இதனால் அவ்வாறே யடைகின்றான் என்பதாம்.

பாட முறையில் வந்த மூன்றென்பதைப் புகழ்கின்றது

பிராமணம்—12

त्रीणि जुहोति त्रय इमे लोका एभ्य एव लोकेभ्यो वातमवरुन्धे ।

என்பது.

உரை.

மூன்றானதால் மூன்றுலகங்களினு மிருந்து காற்று வீசுகின்றது என்பதாம்.

மந்திரத்திலுள்ள கடல் என்னுஞ் சொல்லால் மிகுதியாய் வீசுங் காற்று உபலட் சிதமாகின்றது என்பதை விளக்குகின்றது.

பிராமணம்—13

समुद्रोऽसि नभस्वानित्याहैतद्वै वातस्य रूपꣳ रूपेणैव वातमवरुन्धे ।

என்பது.

உரை.

கடலாயிருக்கின்றாய் வானிலுலாவுகின்றாய் என்றது, இது காற்றின் வடிவமாம் இதனால் காற்றை அடைகின்றான் என்பதாம்.

காற்று, சலனப் பொருளாமாதலின் அதை ஆகுதி செய்யத்தக்க கருவியை விதிக்கின்றது.

பிராமணம்—14

अञ्जलिना जुहोति नह्येतेषामन्यथाऽऽहुतिरवकल्पते ॥

என்பது.

சயனத்தை இரதமெனல்)

உரை

கைகளைக் குவித்தலால் ஓமஞ் செய்தல் ஈண்டுக்கை குவித்து அக்கினியில் காற்றை யுண்டாக்குவதே என்பதாம்

ஒன்பதாம் அநுவாகம்

முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் நான்காம் பிரபாடகம்

பத்தாவது அநுவாகம்.

அக்கினி சயனத்தை சுவர்க்கலோகஞ் செல்லும் இரதமாகக் கூறும் பிரயணங்கள்.

ஐந்து பஞ்சாதிக்குமேல் பதினேழு பதங்களைக் கொண்டது.

सुवर्गाय वै लोकाय देवरथो युज्यते यत्राकूताय मनुष्यरथ एष खलु वै देवरथो यदग्निरग्निं युनज्मि शवसा घृतेनेत्याह युनक्त्येवैनꣳ स एनं युक्तस्सुवर्गं लोकमभि वहति यत्सर्वाभिः पञ्चभिर्युञ्ज्याद्युक्तोऽस्याग्निः प्रच्युतस्स्यादप्रतिष्ठिता आहुतय- स्स्युरप्रतिष्ठितास्स्तोमा अप्रतिष्ठितान्युक्थानि तिसृभिः प्रातस्स- वनेऽभि मृशति त्रिवृत् [४७] वा अग्निर्यावानेवाग्निस्तं युनक्ति यथाऽनसि युक्त आधीयत एवमेव तत्रत्याहुतयस्तिष्ठन्ति प्रति स्तोमाः प्रत्युक्थानि यज्ञायज्ञियस्य स्तोत्रे द्वाभ्यामभि मृशत्येता- वान्वै यज्ञो यावानग्निष्टोमो भूमा त्वा अस्यात ऊर्ध्वः क्रियते यावानेव यज्ञस्तमन्ततोऽन्वारोहति द्वाभ्यां प्रतिष्ठित्या एकया- ऽप्रस्तुतं भवत्यथ [४८] अभि मृशत्युपैनमुत्तरो यज्ञो नमत्यथो संतत्यै प्रवा एषोऽस्माल्लोकाच्च्यवते योऽग्निं चिनुते न वा एतस्या- निष्टक आहुतिरव कल्पते यां वा एषोऽनिष्टक आहुतिं जुहोति

स्रवति वै सा ताꣳ स्रवन्तीं यज्ञोऽनु परा भवति यज्ञं यजमानो यत्पुनश्चितिं चिनुत आहुतीनां प्रतिष्ठित्यै प्रत्याहुतयस्तिष्ठन्ति [४९] न यज्ञः पराभवति न यजमानोऽष्टावुप दधात्यष्टाक्षरा गायत्री गायत्रेणैवैनं छन्दसा चिनुते यदेकादश त्रैष्टुभेन यद्द्वादश जागतेन छन्दोभिरेवैनं चिनुते नपात्को वै नामैषोऽग्निर्यत्पुनश्चितिर्य एवं विद्वान्पुनश्चितिं चिनुत आ तृतीयात्पुरुषादन्नमत्ति यथा वै पुनराधेयं एवं पुनश्चितिर्योऽग्न्याधेयेन न [५०] ऋध्नोति स पुनराधेयमा धत्ते योऽग्निं चित्वा नर्ध्नोति स पुनश्चितिं चिनुते यत्पुनश्चितिं चिनुत ऋद्ध्या अथो खल्वाहुर्न चेतव्येति रुद्रो वा एष यदग्निर्यथा व्याघ्रꣳ सुप्तं बोधयति तादृगेव तदथो खल्वाहुश्चेतव्येति यथा वसीयाꣳसं भागधेयेन बोधयति तादृगेव तन्मनुरग्निमचिनुत तेन नाऽऽर्ध्नोत्स एतां पुनश्चितिमपश्यत्तामचिनुत तया वै स आर्ध्नोद्यत्पुनश्चितिं चिनुत ऋद्ध्यै [५१]॥ त्रिवृदथ तिष्ठन्त्यग्न्याधेयेन नाचिनुत सप्तदश च ॥ १० ॥

இதில் சயன அக்கினியை, சுவர்க்கலோகஞ் செல்லும் இரதமாகச் சேர்க்கப்படல் சொல்லப்படுகின்றது. சேர்த்தல்=கையாற் றொடுதல்.

சயனக்கினியை தோக்கும் மந்திரங்களுக்கு உரைகூறத் தொடங்குகின்றது.

பிராமணம் —1

सुवर्गाय वै लोकाय देवरथो युज्यते यत्राकूताय मनुष्यरथ एष खलु वै देवरथो यदग्निः ।

என்பது.

(இரதமாகக்கூறல்)

உரை.

சுவர்க்கத்திற்குத் தேவ ரதம் தயாரிக்கப்படுகின்றது. ஒருவன் ஒரு கிராமத்திற்குச் செல்வதன் பொருட்டு மனிதரதம் தயாரிக்கப்படுகின்றது. இங்கு, சயனம் பண்ணிய அக்கினியை, சுவர்க்கமேறுவதற்கு ஒரு தேவரதமாகக் கற்பிக்கின்றது என்பதாம்.

இவ்வாறு தொடங்கிய மந்திரத்தின் கருத்தை விளக்குகின்றது.

பிராமணம்—2

अग्निं युनज्मि शवसा घृतेनेत्याह युनक्त्येवैनꣳ स एनं युक्तस्सुवर्गं लोक-मभि वहति ।

என்பது.

உரை.

அக்கினியை, வன்மை என்னும் நெய்யாற் சேர்க்கின்றேன். அக்கினியை இரதமாகச் சேர்த்தல் என்றது, இச்சயனுக்கினியை இரதமாகச் சேர்க்கில் இது சுவர்க்கத் லோகத்திற்கு இவ்வெசமானனைக் கொண்டு போகும் என்பதாம்.

இதன் பொருட்டுள்ள ஐந்து மந்திரங்களுள் மூன்று மந்திரங்களைத் தனியே பிரித்து விநியோகிக்கின்றது.

பிராமணம்—3

यत्सर्वाभिः पञ्चभिर्युञ्ज्याद्युक्तोऽस्याग्निः प्रच्युतस्स्यादप्रतिष्ठिता आहुतय स्स्युरप्रतिष्ठितास्स्तोमा अप्रतिष्ठितान्युक्थानि तिसृभिः प्रातस्सवनेऽभि मृशति त्रिवृद्वा अग्निर्यावानेवाग्निस्तं युनक्ति यथाऽनसि युक्त आधीयत एवमेव तत्प्रत्याहुतयस्तिष्ठन्ति प्रति स्तोमाः प्रत्युक्थानि ।

என்பது.

உரை.

ஐந்து மந்திரங்களாலும் அக்கினியைச் சேர்த்துவிடில், மற்றொரு காலத்தில் சேர்ப்பதற்கு வேறு மந்திரமின்மையின் சேர்த்த அக்கினி விலகிவிடும். அவ்வாறு விலகிய அக்கினி, ஆகுதிகளின் தோத்திர சஸ்திரங்களைத் தாங்கமாட்டாது. ஆதலின், பிறகு சேர்ப்பதன் பொருட்டு இரண்டு மந்திரங்களை மீதி பண்ணி வைத்து விட்டு மூன்று மந்திரங்களால் காலைச் சவனத்தில் அக்கினியைத் தொட்டுச் சேர்க்கில் மூவகை அக்கினியுந் தொடப் பெற்றவைகளாகின்றன. இதனால், வன்மை வாய்ந்த அக்

கினி யானது, எல்லாத் தோத்திரங்களையும் நல்ல எருதுகள் பூட்டிய வண்டி போல் தாங்கிக் கொள்ளுகின்றது என்பதாம்.

மீந்த இரண்டு மந்திரங்களையும் விநியோகிக்கின்றது.

பிராமணம்—4

यज्ञायज्ञियस्य स्तोत्रे द्वाभ्यामभिमृशत्येतावान्वै यज्ञो यावानग्निष्टोमो भूमा त्वा अस्यात ऊर्ध्वः क्रियते यावानेव यज्ञस्तमन्ततोऽन्वारोहति ।

என்பது.

உரை.

"எக்ஞாஎக்ஞாஃ" என்பது முதலிய இருக்கில் உண்டாகிய தோத்திரம் எக்ஞா எக்ஞீயமாம். அதை மூன்றுஞ் சவனத்தில் (சோம ரசம்பிழியுங் காலத்தில்) ஓதத்தொடங்கும் போது, இவ்விரண்டு மந்திரங்களாலும் அக்கினியைத் தொடல் வேண்டும். இதனால், ஏனைய எக்ஞுங்களனைத்தும் அடையப்படுகின்றன என்பதாம்.

மந்திரங்கள் இரண்டு என்பதைப் புகழ்கின்றது.

பிராமணம்—5

द्वाभ्यां प्रतिष्ठित्यै ।

என்பது.

உரை.

மந்திரங்கள் இரண்டானதால் நிலையை அடைகின்றான் என்பதாம்.

துதிக்கும் போதே, இடையில், ஒரு கால விசேடத்தை விதிக்கின்றது.

பிராமணம்—6

एकयाऽप्रस्तुतं भवत्यथाभिमृशत्युपैनमुत्तरो यज्ञो नमत्यथो संतत्यै ।

என்பது.

உரை.

மூன்று இருக்குக்களை மீண்டும் மீண்டும் ஓதலால் இருபத்தொரு துதி மஞ்சரியைக் கொண்டதாம் எக்ஞா எக்ஞீய மென்னுந் துதி. அவற்றுள், இருபத்தோராவது துதியைப் பாடத்தொடங்கு முன் மேற்கூறிய இரண்டு மந்திரங்களாலும் சயன அக்கினியைத் தொடல் வேண்டும். இதனால்,

இரதமாகக்கூறல்)

மேலே செய்யப் போகும் எக்ஞங்களனைத்தும் இவ்வெசமானனைப் போற்றுகின்றன. மற்றும், எக்ஞமும் இடையீடின்றி நிறைவேறுகின்றது என்பதாம்.

இனி எட்டு மந்திரங்களாற் செய்யப்படும் புனச்சிதியை (உத்தர சயனத்தை) விதிக்கின்றது.

பிராமணம்—7

प्रवा एषोऽस्माल्लोकाच्च्यवते योऽग्निं चिनुते न वा एतस्यानिष्टक आहुति-रव कल्पते यां वा एषोऽनिष्टक आहुतिं जुहोति स्रवति वै सा ताꣳ स्रवन्तीं यज्ञोऽनु परा भवति यज्ञं यजमानो यत्पुनश्चितिं चिनुत आहु-तीनां प्रतिष्ठित्यै प्रत्याहुतयस्तिष्ठन्ति न यज्ञः पराभवति न यजमानः ।

என்பது.

உரை.

அக்கினி சயனஞ் செய்தவன் சுவர்க்க நோக்குடையானாதலின், இப்பூமியிலிருந்து விடுபட்டவனாகின்றான். இவனுக்கு மண்சம்பந்தமின்மையின் செங்கல் வைக்காத விடத்திற் செய்யும் ஆகுதி இல்லிக்குடம் போல வழிந் தோடி விடும். அதனால், எக்ஞங் கெடும், அதனால் எசமானனுங் கேடடைவன். ஆதலின், அவ்வாகுதி வழிந்தோடாதிருத்தற் பொருட்டு மீண்டுஞ் செங்கல்களை யடுக்கி அதன் மேல் ஆகுதிகள் செய்யில் நலமடைகின்றான் என்பதாம்.

இச் செங்கல்களின் எண்ணை விதிக்கின்றது.

பிராமணம்—8

अष्टावुप दधात्यष्टाक्षरा गायत्री गायत्रेणैवैनं छन्दसा चिनुते ।

என்பது.

உரை.

எட்டுச் செங்கல்கள் அடுக்கினால் காயத்திரிச் சந்தத்தாலேயே அடுக்கியதாகின்றது என்பதாம்.

இச்சாகையிற் கூறியபடி எண் சொல்லிவிட்டு வேறு சாகையிற் கூறி இருப்பதைத்தழுவி இரண்டு பட்சங் கூறப்படுகின்றது.

பிராமணம்—9

यदेकादश त्रैष्टुभेन यद्द्वादश जागतेन छन्दोभिरेवैनं चिनुते ।

என்பது.

உரை.

பதினொரு செங்கல்களை அடுக்கில் திரிஷ்டுப் சந்தத்தாலும், பன்னிரண்டு செங்கல்களை அடுக்கில் சகதிச் சந்தத்தாலும் இச்செங்கலடுக்கு அடுக்கப்படுகின்றது என்பதாம்.

மற்றொருவாற்றால் செங்கலடுக்கைப் புகழ்கின்றது.

பிராமணம்—10

नपात्को वै नामैषोऽग्नेर्यत्पुनश्चितिर्य एवं विद्वान्पुनश्चितिं चिनुत आ तृतीयात्पुरुषादन्नमत्ति ।

என்பது.

உரை.

ஆகுதியைக் கெடாது செய்விக்கும் செங்கலடுக்காகிய அக்கினிக்கு நபாத் என்றுபெயர். இவ்வாறுணர்ந்து செங்கலடுக்கியவன், பிள்ளை பேரன்மார்கள் வரை அன்னங்களை நிறைய அடைந்தவனாகின்றான் என்பதாம்.

புநச்சிதி (மீண்டுஞ் செய்யுஞ் செங்கலடுக்கு) என்பதிலுள்ள 'புநః, என்பதன் கருத்தை உவமையால் விளக்குகின்றது.

பிராமணம்—11

यथा वै पुनराधेय एवं पुनश्चितिर्योऽग्न्याधेयेन न र्ध्नोति स पुनराधेयमाधत्ते योऽग्निं चित्वा नर्ध्नोति स पुनश्चितिं चिनुते यत्पुनश्चितिं चिनुत ऋद्ध्यै ।

என்பது.

உரை.

அக்கினியை யுண்டாக்கியவன் சம்பத்தை அடையாவிட்டால் மீண்டும் அக்கினியை வளர்ப்பது போல், செங்கலடுக்கியவனும் சம்பத்தை அடையாவிட்டால் மீண்டுஞ் செங்கலடுக்கல்வேண்டும். இவ்விரண்டும், முதலில் சம்பத்தில்லாமல் பிறகு சம்பத்தையுடையதால் உவமையாயிற்று என்பதாம்.

(இரதமாகக் கூறுதல்)

இங்கு, பூர்வபக்கமாக வேறொரு சாகையிற் கூறி யுள்ளதைக் கூறுகின்றது.

பிராமணம்—12

अथो खल्वाहुर्न चेतव्येति रुद्रो वा एष यदग्निर्यथा व्याघ्रꣳ सुप्तं बोधयति तादृगेव तत् ।

என்பது.

உரை.

தூங்கிக்கிடக்கும் புலியை எழுப்பி விட்டவன் அதனுற் கொல்லப்படுவது போல், ஒரு புண்ணியவசத்தால் தூங்குவது போல் சாந்தமாகிய அக்கினியை மீண்டும் எழுப்பி விடில் எழுப்பியவனைக் கொன்றுவிடு மாதலின் எழுப்பல் (மீண்டுஞ் செங்கலடுக்கல்) கூடாது என்பதாம்.

இப்பக்ஷத்தை ஏற்றுக் கோள்ளாமல் தனது பட்சத்தையே நிறவுகின்றது.

பிராமணம்—13

अथो खल्वाहुश्चेतव्येति यथा वसीयाꣳसं भागधेयेन बोधयति तादृगेव तत् ।

என்பது.

உரை.

உலகில், தனமுடைய தனது தலைவனை நெடுநாள் விட்டுப் பிரிந்து மறந்து போன ஒரு ஏவலாளன், மீண்டும் ஓர்கால் ஏதாவது உபசாரப் பொருள்களை அத்தலைவன் முன்பு கொண்டு போய் வைத்து அறிவித்துக் கொள்ளில் வேண்டியவற்றை அடைவதுபோல், தனிகனுகிய இவ்வக்கினியை மீண்டும் எழுப்பில் வேண்டியவற்றை அளிக்கு மாதலால் புநச்சிதி செய்தல் வேண்டும் என்பதாம்.

புனச்சிதி, சம்பத்துக்குக் காரணமா மேன்பதை உவமை முகத்தால் வெளிப்படை யாக்குகின்றது.

பிராமணம்—14

मनुरग्निमचिनुत तेन नाऽऽर्ध्नोत्स एतां पुनश्चितिमपश्यत्तामचिनुत तया वै स आर्ध्नोद्यत्पुनश्चितिं चिनुत ऋद्ध्यै ॥

என்பது.

உரை.

மநு, இத்தகைய புநச்சிதியை (மீண்டுஞ் செங்கலடுக்குவதை) க்கண்டு பிடித்துச் செய்து அதனால் சம்பத்தை படைந்தனர். ஆதலின் இதைச் செய்கின்றவன் சம்பத்தை யடைகின்றான் என்பதாம்.

பத்தாம் அநுவாகம்
முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் நான்காம் பிரபாடகம்

பதினோராவது அநுவாகம்

காமியச் செங்கல் அடுக்கு முதலியவைகளைக் கூறும் பிராமணங்கள்.

மூன்று பஞ்சாதிக்குமேல் நாற்பத்தெட்டு பதங்களைக் கொண்டது.

छन्दश्चितं चिन्वीत पशुकामः पशवो वै छन्दांसि पशुमानेव
भवति श्येनचितं चिन्वीत सुवर्गकामश्श्येनो वै वयसां पतिष्ठश्श्येन
एव भूत्वा सुवर्गं लोकं पतति कङ्कचितं चिन्वीत यः कामयेत
शीर्षण्वानमुष्मिँल्लोके स्यामिति शीर्षण्वानेवामुष्मिँल्लोके भवत्य-
लजचितं चिन्वीत चतुस्सीतं प्रतिष्ठाकामश्चतस्रो दिशो दिक्ष्वेव
प्रतितिष्ठति प्रउगचितं चिन्वीत भ्रातृव्यवान्प्र [५२] एव भ्रातृ-
व्यान्नुदत उभयतः प्रउगं चिन्वीत यः कामयेत प्रजातान्भ्रातृ
व्यान्नुदेय प्रतिजनिष्यमाणानिति प्रैव जातान्भ्रातृव्यान्नुदते प्रति-
जनिष्यमाणान्रथचक्रचितं चिन्वीत भ्रातृव्यवान्वज्रो वै रथो वज्र-
मेव भ्रातृव्येभ्यः प्रहरति द्रोणचितं चिन्वीतान्नकामो द्रोणे वा
अन्नं भ्रियते सयोन्येवान्नमवरुन्धे समूह्यं चिन्वीत पशुकामः पशु-
मानेव भवति [५३] परिचाय्यं चिन्वीत ग्रामकामो ग्राम्येव
भवति श्मशानचितं चिन्वीत यः कामयेत पितृलोक ऋध्नुया-

मिति पितृलोक एवर्ध्नोति विश्वामित्रजमदग्नी वसिष्ठेनास्पर्धेतां स एता जमदग्निर्विहव्या अपश्यत्ता उपाधत्त ताभिर्वै स वसिष्ठस्येन्द्रियं वीर्यमवृङ्क्त यद्विहव्या उपदधातीन्द्रियमेव ताभिर्वीर्यं यजमानो भ्रातृव्यस्य वृङ्क्ते होतुर्धिष्णिय उप दधाति यजमानायतनं वै [५४] होता स्व एवास्मा आयतन इन्द्रियं वीर्यमवरुन्धे द्वादशोप दधाति द्वादशाक्षरा जगती जागताः पशवो जगत्यैवास्मै पशूनवरुन्धेऽष्टावष्टावन्येषु धिष्णियेषूप दधात्यष्टाशफाः पशवः पशूनेवावरुन्धे षण्मार्जालीये षड्वा ऋतव ऋतवः खलु वै देवाः पितर ऋतूनेव देवान्पितृन्प्रीणाति [५५] प्रभवति यजमानायतनं वा अष्टाचत्वारिंशच्च ॥ ११ ॥

இதில் விகவ்யாஃ என்னுஞ் செங்கல்களை வைக்கு முறையைக் கூற விருப்புற்றதாய் முதலில் சிற்சில காமியச் செங்கல் அடுக்குக்களைக் காட்டுகின்றது.

பசுக்களை விரும்பியவனுக்கு செங்கலடுக்கை விதிக்கின்றது.

பிராமணம்—1

छन्दश्चितं चिन्वीत पशुकामः पशवो वै छन्दांसि पशुमानेव भवति ।

என்பது.

உரை.

பசுக்களை விரும்பியவன், அக்கினிர் மூர்த்தா, என்பது முதலிய அநுவாகத்திலுள்ள பல்வேறு வகைச் சந்தங்களையுடைய மந்திரங்களாலேயே நாற்கோணங்களாகச் செங்கல்களை யடுக்கில், சந்தங்கள் பசுக்களாமாதலின் பசுக்களை யடைகின்றான் என்பதாம்.

சுவர்க்கத்தை விரும்பியவனுக்குச் செங்கலடுக்கை விதிக்கின்றது.

பிராமணம்—2

श्येनचितं चिन्वीत सुवर्गकामश्श्येनो वै वयसां पतिष्ठश्श्येन एव भूत्वा सुवर्गं लोकं पतति ।

என்பது.

உரை.

சுவர்க்கத்தை விரும்பியவன், கருடப் பறவை போன்று செங்கல்களை யடுக்கில், பறவைகளுக்குள் கருடன் விரைவாய் ஓடுவதாமாதலின் அதைப் போல் இவனும் விரைவில் சுவர்க்கத்தை யடைகின்றான் என்பதாம்.

சுவர்க்கத்தில் தலைவனாகவும், பெருமையுடையவனாகவும் விரும்பியவனுக்குச் செங்கலடுக்குக்களைக் கூறுகின்வது.

பிராமணம்—3

कङ्कचितं चिन्वीत यः कामयेत शीर्षण्वानमुष्मिँल्लोके स्यामिति शीर्षण्वानेवामुष्मिँल्लोके भवत्यलजचितं चिन्वीत चतुस्सीतं प्रतिष्ठाकामश्चतस्रो दिशो दिक्ष्वेव प्रतितिष्ठति ।

என்பது.

உரை.

முறையே, சுவர்க்கத்திற்குத் தலைவனாகவும், அங்குப் பெருமையுடையனாகவும் விரும்பியவன், தலை சக்கரம் போலவும், நான்கு படைச்சால்களையுடைய கருடன் போலவுஞ் செங்கல்களை அடுக்கல் வேண்டும். இவை, கருடனில் ஒரு வகை வேறுபாடுடையன. இவை, கங்கு, அலசம் என்னும் பெயர்களைக் கொண்டவைகளுமாகின்றன என்பதாம்.

பகைவரை ஒழிக்க விரும்பிய வனுக்குச் செங்கலடுக்கை விதிக்கின்றது.

பிராமணம்—4

प्र उगचितं चिन्वीत भ्रातृव्यवान्प्रैव भ्रातृव्यान्नुदते ।

என்பது.

உரை.

பகையைவிலக்க விரும்பியவன், வண்டியின் பின்புறத்தைப் போல் முக்கோணமாகச் செங்கல்களை அடுக்கவேண்டுமென்பதாம். இது பிரவுக மெனப்படும்

தோன்றாத பகைவர்களையும், தோன்றின பகைவர்களையுந் தொலைக்க விரும்பியவனுக்குச் செங்கலடுக்கை விதிக்கின்றது.

பிராமணம்—5

उभयतः प्रउगं चिन्वीत यः कामयेत प्रजातान्भ्रातृव्यान्नुदेय प्रतिजनिष्यमाणानिति प्रैव जातान्भ्रातृव्यान्नुदते प्रतिजनिष्यमाणान् ।

என்பது.

உரை.

பகைவர்களாய்த் தோன்றப் போகின்றவர்களையும், தோன்றி இருக்கின்றவர்களையும் ஒழிக்க விரும்பியவன், வண்டியைப் போல் இரண்டு முக்கோணங்களைச் சேர்த்து வைத்தது போல் செங்கல்களை அடுக்கல் வேண்டுமென்பதாம்.

பொதுவாய்ப் பகையைப் போக்க விரும்பியவனுக்குச் செங்கலடுக்கை விதிக்கின்றது.

பிராமணம்—6

रथचक्रचितं चिन्वीत भ्रातृव्यवान्वज्रो वै रथो वज्रमेव भ्रातृव्येभ्यः प्रहरति ।

என்பது.

உரை.

பகையைப் போக்க விரும்பியவன் வட்ட வடிவாய்ச் செங்கல்களை அடுக்க வேண்டுமென்பதாம்.

அன்னத்தை விரும்பியவனுக்குச் செங்கலடுக்கை விதிக்கின்றது.

பிராமணம்—7

द्रोणचितं चिन्वीताऽन्नकामो द्रोणे वा अन्नं भ्रियते सयोन्येवान्नमवरुन्धे ।

என்பது.

உரை.

உணவுப் பொருள்களை அடைய விரும்பியவன் தொண்ணை போன்று செங்கல்களை அடுக்கவேண்டுமென்பதாம்.

பசுக்களை விரும்பியவனுக்கு மீண்டும் ஒருவகைச் செங்கலடுக்கை விதிக்கின்றது.

பிராமணம்—8

समूह्यं चिन्वीत पशुकामः पशुमानेव भवति ।

என்பது.

உரை.

பசுக்களை விரும்பியவன் நாற்கோணமாகச் செங்கல்களை அடுக்கல் வேண்டு டுமென்பதாம்.

கிராமத்தை விரும்பியவனுக்குச் செங்கலடுக்கை விதிக்கின்றது.

பிராமணம்—9

परिचाय्यं चिन्वीत ग्रामकामो ग्राम्येव भवति ।

என்பது.

உரை.

கிராமத்தை விரும்பியவன் பரிசாய்யம் என்னும் நாற்கோணமாகச் செங்கல்களை அடுக்கல்வேண்டும். இது, வட்டம், நாற்கோணமென இரு வகைப்படும் என்பதாம்.

பிதிர்லோக சம்பத்தை விரும்பியவனுக்குச் செங்கலடுக்கை விதிக்கின்றது.

பிராமணம்—10

श्मशानचितं चिन्वीत यः कामयेत पितृलोक ऋध्नुयामिति पितृलोक एव-र्ध्नोति ।

என்பது.

உரை.

பிதிர்லோக சம்பத்தை விரும்பியவன், நாற்கோணமாகிய மசான மென்னுஞ் செங்கலடுக்கைச் செய்தல் வேண்டும் என்பதாம். இத்துடன் இடையில் எடுத்துக் கொண்ட காமியச் சிதிகள் முடிந்தன.

இனி, எடுத்துக்கொண்ட விகவ்யச் செங்கல்களைக் கூறுகின்றது.

பிராமணம்—11

विश्वामित्रजमदग्नी वसिष्ठेनास्पर्धेतां स एता जमदग्निर्विहव्या अपश्यत्ता उपाधत्त ताभिर्वै स वसिष्ठस्येन्द्रियं वीर्यमवृङ्क्त यद्विहव्या उपदधातीन्द्रियमेव ताभिर्वीर्यं यजमानो भ्रातृव्यस्य वृङ्क्ते ।

என்பது.

உரை.

வசிட்டரிடத்தில் விரோதப்பட்ட விசுவாமித்திர சமதக்கினி ரிஷிகள் இத்தகைய விகவ்யம் என்னுஞ் செங்கலைக் கண்டு பிடித்து வைத்ததால் வசிட்டரின் இந்திரிய வீரியங்கள் கேடடைந்தன. இங்கு, எசமானன் இச் செங்கல்களை வைக்கில், பகைவரின் வீரியங் கெடும் என்பதாம். ஈண்டு, விஹவ்யம் என்னுஞ் சொல்லைக்கொண்ட மந்திரங்களால் வைக்குஞ் செங்கல்கள் விஹவ்யங்கள் என்பதை யுணர்க.

செங்கல்கள் வைக்குமிடத்தை விதிக்கின்றது.

பிராமணம்—12

होतुर्धिष्णिय उप दधाति यजमानायतनं वै होता स्व एवास्मा आयतन इन्द्रियं वीर्यमवरुन्धे ।

என்பது.

உரை.

ஹோதா, எசமானனுடைய காரியங்கள் (தேவர்களை யழைத்தல் முதலியன) அனைத்தையுஞ் செய்தலின் எசமானனுடைய இடமாவன். ஆதலின் ஹோதாவின் மேடைமீது வைத்தல் வேண்டு மென்பதாம்.

வைக்குஞ் செங்கல்களின் தொகையை விதிக்கின்றது.

பிராமணம்—13

द्वादशोप दधाति द्वादशाक्षरा जगती जागताः पशवो जगत्यैवास्मै पशूनवरुन्धे ।

என்பது.

உரை.

சகதிச்சந்தம் பன்னிரண்டு எழுத்துக்களானதால் பன்னிரண்டு செங்கல்களை வைத்தல் வேண்டும். ' வைத்தலால், சகதிச்சந்தம் பசுவானதால்

பசுக்களை அடைகின்றான் என்பதாம். ஈண்டு மந்திரங்கள் பத்தாமாதலின், ஐந்தாமந்திரத்தையும், பத்தாமந்திரத்தையும் இரு முறை ஓதச் சொல்லல் வேண்டும் என்பதை யுணர்க.

மற்றமேடைகளின் மீதுவைக்க வேண்டிய செங்கல்களின் எண்
விதிக்கப்படுகின்றது.

பிராமணம்—14

अष्टावष्टावन्येषु धिष्णियेषूप दधात्यष्टाशफाः पशवः पशूनेवावरुन्धे ।

என்பது.

உரை.

பிரசாஸ்தா முதலானோர்களின் மேடைகளில், ஒன்பதாவது பத்தாவது மந்திரங்கள் இல்லாமையால் எவ்வெட்டுக்கள் வைத்தல் வேண்டுமென்பதாம்.

மற்றோரிடத்தில் வைப்பதற்கு எண் விதிக்கப்படுகின்றது.

பிராமணம்—15

**षण्मार्जालीये षड्वा ऋतव ऋतवः खलु वै देवाः पितर ऋतूनेव देवान्पितॄ-
न्प्रीणाति ॥**

என்பது.

உரை.

மார்ச்சாலீயத்தில் (கையலம்புமிடத்தில்) ஆறு செங்கல்கள் வைத்தலால், ஆறு இருதுக்களும் தேவபிதிர்க்கள் வடிவங்களாதலின் அவைகளால் அவர்கள் களிப்புறுகின்றார்கள். இதில், ஏழாம்மந்திர முதல் நான்கு மந்திரங்களில்லை என்பதாம்.

பதினோராம் அநுவாகம்

முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் நான்காம் பிரபாடகம்

பன்னிரண்டாவது அநுவாகம்

அசுவமேதயாகத் துதியின் இருக்கு முதலானவைகளைக் கூறும் பிராமணங்கள்.

மூன்று பஞ்சாதிக்குமேல் பத்து ப்பதங்களைக்கொண்டது.

पवस्व वाजसातय इत्यनुष्टुक्प्रतिपद्भवति तिस्रोऽनुष्टुभश्चतस्रो गायत्रियो यत्तिस्रोऽनुष्टुभस्तस्मादश्वस्त्रिभिस्तिष्ठꣳस्तिष्ठति यच्च-तस्रो गायत्रियस्तस्मात्सर्वाꣳश्चतुरः पदः प्रतिदधत्पलायते परमा वा एषा छन्दसां यदनुष्टुक्परमश्चतुष्टोमस्स्तोमानां परम-स्त्रिरात्रो यज्ञानां परमोऽश्वः पशूनां परमेणैवैनं परमतां गमयत्ये-कविꣳशमहर्भवति [५६] यस्मिन्नश्व आलभ्यते द्वादश मासाः पञ्चर्तवस्त्रय इमे लोका असावादित्य एकविꣳश एष प्रजापतिः प्राजापत्योऽश्वस्तमेव साक्षादृध्नोति शक्वरयः पृष्ठं भवन्त्यन्यद-न्यच्छन्दोऽन्येन्ये वा एते पशव आ लभ्यन्त उतेव ग्राम्या उतेवाऽऽरण्या यच्छक्वरयः पृष्ठं भवन्त्यश्वस्य सर्वत्वाय पार्थुरश्मं ब्रह्मसामं भवति रश्मिना वा अश्वः [५७] यत ईश्वरो वा अश्वो-ऽयतोऽप्रतिष्ठितः परां परावतं गन्तोर्यत्पार्थुरश्मं ब्रह्मसामं भवत्य-श्वस्य यत्यै धृत्यै संकृत्यच्छावाकसामं भवत्युत्सन्नयज्ञो वा एष यदश्वमेधः कस्तद्वेदेत्याहुर्यदि सर्वो वा क्रियते न वा सर्व इति यत्संकृत्यच्छावाकसामं भवत्यश्वस्य सर्वत्वाय पर्याप्त्या अनन्त-रायाय सर्वस्तोमोऽतिरात्र उत्तममहर्भवति सर्वस्याऽऽप्त्यै सर्वस्य जित्यै सर्वमेव तेनाऽऽप्नोति सर्वं जयति [५८] ॥ अहर्भवति वा अश्वोऽहर्भवति दश च ॥ १२ ॥

देवासुरास्तेनर्तव्यां रुद्रोऽश्मन्त्वृषदे वडुदेनं प्राचीमिति वसो-
र्धारामग्निर्देवेभ्यस्सुवर्गाय यत्राकूताय छन्दश्चितं पवस्व द्वादश
॥ १२ ॥

देवासुरा अजायां वै ग्रुमुष्टिः पथमो देवयतामेतद्वै छन्दसां
रूपमृध्नोत्यष्टौ पञ्चाशत् ॥ ५८ ॥

முதலில், பவமானத்துதியில், விதியால் வந்த காயத்திரிச் சந்தங்களை விலக்குவதற்கு, வேறு இருக்குக்களை விதிக்கின்றது.

பிராமணம்—1

पवस्व वाजसातय इत्यनुष्टुक्प्रतिपद्भवति तिस्रोऽनुष्टुभश्चतस्रो गायत्रियो यत्तिस्रोऽनुष्टुभस्तस्मादश्वस्त्रिभिस्तिष्ठंस्तिष्ठति यच्चतस्रो गायत्रियस्त-स्मात्सर्वांश्चतुरः पदः प्रतिदधत्पलायते ।

என்பது.

உரை.

இங்கு, பிரகிருதியிலிருந்து விதியால் வந்த காயத்திரிச்சந்த திருச்சங்களை விட்டு, 'பவஸ்வ' என்பது முதலிய அநுஷ்டுப்ச் சந்த இருக்கைக் கொண்டு தொடங்கல் வேண்டும். இதில், அநுஷ்டுப்சந்தங்களாகப் பிரிக்கில் மூன்றிருக்கின்றன. அதனால், குதிரை நிற்கும்போது மூன்று கால்களால் நிற்கிறது, காயத்ரிச் சந்தங்களாகப் பிரிக்கில் நான்கு இருக்குக்கள் இருக்கின்றன; ஆதலால் ஓடும்போது நான்கு கால்களால் ஓடுகிறது, என்பது.

மற்றோராற்றல் அநுஷ்டுப்ச் சந்தத்தைப் புகழ்கின்றது.

பிராமணம் —2

परमा वा एषा छन्दसां यदनुष्टुक्परमश्चतुष्टोमस्स्तोमानां परमस्त्रिरात्रो यज्ञानां परमोऽश्वः पशूनां परमेणैवैनं परमतां गमयति ।

என்பது.

யாகத்தின் துதி)

உரை.

எல்லா வாக்குவடிவமாதலின் அநுஷ்டுப் என்பது சந்தங்களுக்குட் சிறந்ததாம். திரிவ்ருத் அக்கினிஷ்டோம முதலிய ஸ்தோமங்களுக்குட் சிறந்தது காரணமாதலின் கௌதம சதுஸ்தோமமாட். மூன்றிரவு கொண்ட அசுவமேதம் மாபாதகப் பிராயச்சித்தமாதலின் எக்ஞங்களுக்குட் சிறந்ததாம். அத்தகைய அசுவமேதயாக அங்கமாதலானும், வெற்றிக்கு நிமித்தமாதலானும் பசுக்களுக்குட் சிறந்தது குதிரையாம். அத்தகைய சதுஸ்தோமத்திலும், குதிரையிலும் சம்பந்தமுடையதாமாதலின் அநுஷ்டுப்ச் சந்தஞ் சிறப்புடையது என்பதாம்.

பிரகிருதியிலிருந்து வந்த திரிவிருத் முதலான ஸ்தோமங்களை விலக்குவதன் பொருட்டு வேறு ஸ்தோமத்தை விதிக்கின்றது.

பிராமணம்—3

एकविꣳशमहर्भवति यस्मिन्नश्व आलभ्यते द्वादश मासाः पञ्चर्तवस्त्रय इमे लोका असावादित्य एकविꣳश एष प्रजापतिः प्राजापत्योऽश्वस्तमेव साक्षादृध्नोति ।

என்பது.

உரை

இருபத்தொரு முறை ஆவிருத்தி வடிவாதலால் இருபத்தொரு ஸ்தோமங் கொண்ட நாள் எனப்பட்டது. வேறு ஸ்தோமங்களால் வந்ததல்ல. முதல்நாள், மூன்றுநாள் என்னுமிரண்டையும் விடுத்து உத்தியம் என்னும் இரண்டாம்நாள் குதிரை கொல்லப்படுகின்றது அன்று. மற்றே, இருபத்தொரு ஆவிருத்திஸ்தோமம் பாடப்படுகின்றது. அது, மாதங்கள் பன்னிரண்டு, இருதுக்கள் ஐந்து, உலகங்கள் மூன்று ஆதித்தன் ஒருவன் என இருபத்தொன்றாகும் பிரசாபதியின் விராட்வடிவாமாதலானும், குதிரையும் பிரசாபதியிலிருந்து தோன்றியதாமாதலானும் குதிரையின் சம்பத்தின் பொருட்டு இருபத்தொரு ஸ்தோமம் பொருத்தமுடையது என்பதாம்.

பிருஷ்டஸ் தோத்திரத்லுள்ள இருக்குக்கள் வேறு சந்தக்களையுடையன என்பதை நீக்குவதற்கு, சக்வரி, என்னுஞ் சந்தத்தை விதிக்கின்றது.

பிராமணம்—4

शक्वर्यः पृष्ठं भवन्त्यन्यदन्यच्छन्दोऽन्येऽन्ये वा एते पशव आलभ्यन्त उतेव ग्राम्या उतेवाऽऽरण्या यच्छक्वर्यः पृष्ठं भवन्त्यश्वस्य सर्वत्वाय ।

என்பது.

உரை.

சக்குவரிச் சந்தங்களைக் கொண்ட இருக்கு மந்திரங்களால் பிருஷ்டத் துதி செய்தல் வேண்டும். ஏழு பாதங்களைக் கொண்ட சாக்வரிச்சந்தத்தில், மூன்று பாதங்களையுடைய காயத்திரிச் சந்தமும், நான்கு பாதங்களைக் கொண்ட திரிஷ்டுபும், ஐந்து பாதங்களுள்ள பந்திச் சந்தமும் உள்ளீடாய் இருக்கின்றன. அசுவமேதத்திலும், குதிரையை முதன்மையாகக்கொண்ட பல்வகைப் பசுக்கள் உள்ளீடாக் கொல்லப்படுவதா யிருக்கின்றன. இத் தகைய சாகவரிச்சந்தத்தைக் கொள்வதால் முக்கியமாகியகுதிரை, எல்லாப் பசுக்களின் வடிவமுடையது எனல் தேடப்பட்டது என்பதாம்.

விதியால் வந்த சாமப்பாடலை விலக்குதற்பொருட்டு ஒரு சாம விசேடத்தை விதிக்கின்றது.

பிராமணம்—5

पार्थुरश्मं ब्रह्मसामं भवति रश्मिना वा अश्वो यत ईश्वरो वा अश्वोऽयतो-ऽप्रतिष्ठितः परां परावतं गन्तोर्यत्पार्थुरश्मं ब्रह्मसामं भवत्यश्वस्य यत्यै धृत्यै ।

என்பது.

உரை.

பிருதுரஸ்மி, என்னும் மகரிஷியாற் காணப்பெற்ற சாமபாடல் பார்த்து ரஸ்மியாம். பிராமணச்சம்சி இருத்து விக்கைக் குறித்து பாடுஞ்சாமம் பிரம சாமமாம்; அதில், பிரகிருதியில் பாடியதை இங்குப் பாடவேண்டியதில்லை. மற்றோ, பார்த்தரஸ்மி என்னுஞ் சாமப்பாடலையே பாடல் வேண்டும். ஒரு கயிற்றாற் கட்டப்பட்ட குதிரை தூரமாகிய இடத்திற்குக் கொண்டு போகும் வன்மை யுடையதாகின்றது. நிறுத்தாத குதிரையும் நீண்ட தூரங் கொண்டு போகின்றது; ஆதலின், தூரஞ் செல்லும்படி நியமிக்கவும், மேலேயுள்ளவனைத் தாங்கவும் 'பார்த்துரஸ்மி' என்னுஞ் சாமம் பாடப்படு கின்றது என்பதாம்.

அங்ஙனமே, அச்சாவாகன் பாடவேண்டிய சாமவிசேடத்தை விதிக்கின்றது.

பிராமணம்—6

संकृत्यच्छावाकसामं भवत्युत्सन्नयज्ञो वा एष यदश्वमेधः कस्तद्वेदेत्याहुर्यदि सर्वो वा क्रियते न वा सर्व इति यत्संकृत्यच्छावाकसामं भवत्यश्वस्य सर्वत्वाय पर्याप्त्या अनन्तरायाय ।

என்பது.

யாகத்தின் துதி)

உரை.

குறைந்த அங்கத்தை நிறையப்பண்ணும் வன்மையுடைய நல்ல ஆகுதியாகிய சாமப்பாடல் சம்குருதியாம். அசுவமேதம் பல்வேறு வகைகளான அங்கங்களை யுடையதாமாதலின் யாண்டேனும் எப்போதேனும் ஒரு சிறிது அங்கம் விடுபட்டிருக்கில் அதைக்காணல் அரிது. ஆதலின், அதை நிறையச் செய்வதன் பொருட்டு இச்சாமப்பாடலைப் பாடல் வேண்டும். இது, தேவர்களின் நிறைவைச் செய்து, எசமானன் சுவர்கத்திற்குச் செல்வதற் குள்ள தடையையும் போக்கும் என்பதாம்.

விசேட குணங்களையுடைய இரண்டாம் நாள் கூறப்பட்டது. இனி மூன்று நாளை விதிக்கின்றது.

பிராமணம்—7

सर्वस्तोमोऽतिरात्र उत्तममहर्भवति सर्वस्याप्त्यै सर्वस्य जित्यै सर्वमेव तेनाऽऽप्नोति सर्वं जयति ॥

என்பது.

உரை

திரிவிருத் முதல் முப்பத்து மூன்றுவரையுள்ள ஸ்தோமங்களனைத்தும் உள்ள அதிராத்திரம் மூன்று நாளிற் செய்யத்தக்கதாம். இதனால், முன் அடையப் படாதவைகளனைத்தும் அடையப்படுகின்றன. அதாவது இவ்வெசமானன், இதனால் முன் வெல்லாத பகைவர்களனைவரையும் வெல்கின்றான் எல்லாத்தனங்களையும் அடைகின்றான் என்பதாம்.

பன்னிரண்டாவது அநுவாகம்

முற்றிற்று.

ஐந்தாங்காண்டத்தின் நான்காம் பிரபாடகமும்

முடிந்தது.

ஐந்தாம் பிரபாடகம் முதல் மூன்றுபிரபாடக

விடயக் குறிப்பு.

मन्त्राणां ब्राह्मणं प्रोक्तं प्रपाठकचतुष्टये ।
अथ प्रश्नत्रये तत्र शिष्टमङ्गं विविच्यते ॥ १ ॥

மகாக்கினி சயனத்தின் மந்திரங்களுக்கு, முதல் நான்கு பிரபாடகங்களில் பிராமணஞ் சொல்லப்பட்டது. இனி மேலேயுள்ள மூன்றுபிரபாடகங்களிலும், அதில் மீந்த சில அங்கங்கள் சொல்லப்படுகின்றன என்பது.

औपानु वाक्ये ये मन्त्रा आम्नाता स्तान थब्रुवे ।
आग्नेयो त्रिष्टुभौ हौत्रे विद्याद्वायुमती द्वयम् ॥ १ ॥
पीवोन्नामि (नि) ति विज्ञेयं हिरण्येति चतुर्थकम् ।
प्रजापति स्त्वा भूस्पर्शे ह्यग्ने युक्ष्वा द्वयाहुतिः ॥ २ ॥
चित्रं देवेति सौरी स्याद्यास्ते यावो यजुर्द्वयम् ।
चित्तिञ्जुहोमीति होम स्स्पृशे च्चित्ति मचित्तितः ॥ ३ ॥
मन्त्राहिरण्येष्टकानां विश्वकर्मेतिपञ्चहि ।
प्राजापत्यादिपदतो मन्त्रभेदोऽव गम्यताम् ॥ ४ ॥
इष्टका स्स्वय मातृण्णा निदध्या द्व्याहृति द्वयात् ।
पुनर्दिक्षु चतस्रस्ताः प्राणायेति चतुष्टयात् ॥ ५ ॥
पद भेदान्मन्त्र भेदा स्त्वा चक्ष्वित्यनुषज्यतो ।
अह्नां रूपाणीष्टका स्स्युरग्न आयाहि पञ्चकात् ॥ ६ ॥
लोकं पृणेति मन्त्रस्य नान्तरोऽनुचरो भवेत् ।
इन्द्रं विश्वा ऋगैन्द्री स्याद्यत्ते पञ्चो पतिष्ठते ॥ ७ ॥
येऽग्नयो बहुभिर्मन्त्रैः प्रयास्यन्नुपतिष्ठते ।
साम नामानि गायत्रं बृहत्तद्रद्रथन्तरम् ॥ ८ ॥
ऋतुस्थायज्ञायज्ञियं वारवन्तीयकं तथा ।
इयैतं प्रजापते र्हृच पृष्ठं स्तोत्राऽर्थसामहि ॥ ९ ॥
पक्ष्याऽऽकारं चितं वह्निं तैरुक्तै रुपतिष्ठते ।
आत्मेष्टका उपादध्यात्प्राच्या त्वेत्यादि पञ्चभिः ॥ १० ॥
अग्ने होमः पञ्चभि स्स्या दुध्नाऽऽद्यै मन्त्र भेदनम् ।
चित्यारोहे जपेद्वाङ्मे योरुद्रो निक्षिपेच्चरुम् ११ ॥

இஷ்டி முதலியன)

वसवस्त्वा पञ्चमन्त्रैः प्रोक्षे दाज्येन संचितम् ।
समीची सर्पहोमस्स्या द्दक्षिते त्यनुषज्यते ॥ १२ ॥
हेतयस्तु महाहोमो वातनामानुषज्यते ।
इमं स्तनं पूर्णहोम इति मन्त्रा इहेरिताः ॥ १३ ॥
इन्द्राय राज्ञ इत्युक्ता एकादशिनीनामकाः ।
दशिन्याः स्त्याश्च पशव स्तेसर्वेऽप्यश्वमेधकाः ॥ १४ ॥

இவ் வைந்தாம் பிரபாடகத்தில், 24, அனுவாகங்கள் இருக்கின்றன. அவற்றுள், முதலாவதில் தீக்ஷிணீயெஷ்டியையும், இரண்டாவதில், மகாக்கினி சயனவிதியையும் அதனுடைய பலனையும், மூன்றுவதில் உகாவில் செய்யும் ஹோமத்தையும், நான்காவதில், ரேதஸ்ஸிக், முதலிய சில செங்கல்களின் விதியையும், ஐந்தாவதில் பொன் இஷ்டகை முதலியவைகளையும், ஆறுவதில், அன்ஹரூபம், என்னுஞ் செங்கல்களையும், ஏழாவதில், ஒரு யூபஞ் செய்வது, முதலானவற்றின் விதியையும், எட்டாவதில், உபஸ்தானம் முதலானவைகளையும், ஒன்பதாவதில், சில ஆகுதிகளையும், பத்தாவதில், ஸர்பாஹுதி மஹாஹுதிகளையும், பதினொன்றுவது முதல், பிரபாடகங் கடைசிவரையுள்ள பதினன்கு அநுவாகங்களில், அசுவமேதத்தைப்பற்றிய பசுக்களின் விதியையுஞ் சொல்லுகின்றது என்பது.

ஐந்தாங்காண்டம் ஐந்தாம்பிரபாடகம்

முதல் அநுவாகம்

தீக்ஷிணீயேஷ்டி முதலானவைகளின் விதியைக்கூறும் பிராமணங்கள்.

ஆறு பஞ்சாதிக்குமேல் முப்பத்தெட்டுப் பதங்களைக் கொண்டது.

यदेकेन सꣳस्थापयति यज्ञस्य सन्तत्या अविच्छेदायैन्द्राः पशवो येमुष्करायदैन्द्रास्सन्तोऽग्निभ्य आलभ्यन्ते देवताभ्यस्समदन्दधात्याग्नेयीस्त्रिष्टुभोयाज्यानुवाक्याः कुर्याद्यदाग्नेयीस्तेनाग्नेया यत्त्रिष्टुभस्तेनैन्द्रास्समृद्ध्यै न देवताभ्यस्समदन्दधाति वायवे- नियुत्वतेतूपरमालभते तेजोऽग्नेर्वायुस्तेजस एष आलभ्यते तस्माद्य- द्रियङ्वायुः [१] वातितद्रियङ्ङग्निर्दहति स्वमेव तत्तेजोऽन्वेति

यन्ननियुत्वते स्यादुन्माद्येद्यजमानो नियुत्वते भवति यजमान-
स्यानुन्मादाय वायुमतीश्वेतवती याज्यानुवाक्ये भवतस्सतेज-
स्त्वाय हिरण्यगर्भस्समवर्तताग्र इत्याघारमाघारयति प्रजापतिर्वै
हिरण्यगर्भः प्रजापतेरनुरूपत्वाय सर्वाणि वा एषरूपाणि पशूनां
प्रत्यालभ्यते यच्छ्मश्रुणस्तत् [२] पुरुषाणाꣳ रूपं यत्तूपरस्तदश्वानां
यदन्यतोदन्तद्गवां यदव्या इव शफास्तदवीनां यदजस्तदजानां
वायुर्वै पशूनां प्रियन्धामयद्वायव्यो भवत्येतमेवैनमभिसञ्जा-
नानाः पशव उपतिष्ठन्तेवायव्यः कार्याः (३) प्राजापत्या (३)
इत्याहुर्यद्वायव्यङ्कुर्यात्प्रजापतेरियाद्यत्प्राजापत्यङ्कुर्याद्वायोः [३]
इयाद्यद्वायव्यः पशुर्भवति तेन वायोर्नैति यत्प्राजापत्यः पुरोडाशो-
भवति तेन प्रजापतेर्नैति यद्द्वादशकपालस्तेन वैश्वानरा न्नैत्याग्ना-
वैष्णवमेकादशकपालन्निर्वपति दीक्षिष्यमाणोऽग्निस्सर्वादेवताविष्णु-
र्यज्ञोदेवताश्चैव यज्ञश्चारभतेऽग्निरवमोदेवतानां विष्णुः परमो यदाग्ना
वैष्णव मेकादशकपालन्निर्वपति देवताः [४] एवोभयतः परिगृह्य
यजमानोऽवरुन्धे पुरोडाशेन वै देवा अमुष्मिँल्लोक आर्ध्नुवश्चरुणा-
ऽस्मिन्यःकामयेतामुष्मिँल्लोक ऋध्नुयामिति सपुरोडाशङ्कुर्वीता-
मुष्मिन्नेवलोक ऋध्नोति यदष्टाकपालस्तेनाग्नेयो यत्त्रिकपालस्तेन
वैष्णवस्समृद्ध्यै यःकामयेतास्मिँल्लोक ऋध्नुयामिति सचरुङ्कुर्वी-
ताग्नेर्घृतं विष्णोस्तण्डुलास्तस्मात् [५] चरुःकार्योऽस्मिन्नेव लोक
ऋध्नोत्यादित्यो भवतीयं वा अदितिरस्यामेव प्रतितिष्ठत्यथो
अस्यामेवाधियज्ञन्तनुते यो वै संवत्सरमुख्य मभृत्वाऽग्निञ्चिनुते

यथासामिगर्भोऽवपद्यते तादृगेव तदार्तिमार्छेद्वैश्वानरन्द्वादशकपालं
पुरस्तान्निर्वपेत्संवत्सरोवा अग्निर्वैश्वानरो यथा संवत्सरमाप्त्वा
[६] काल आगतेविजायत एवमेव संवत्सरमाप्त्वा काल आग-
तेऽग्निश्चिनुते नार्तिमार्छत्येषावा अग्नेः प्रियातनूर्यद्वैश्वानरः प्रिया-
मेवास्यतनुवमवरुन्धे त्रीण्येतानिहवीꣳषि भवन्ति त्रय इमे लोका
एषाँल्लोकानाꣳ रोहाय ॥ [७] यद्रियङ्वायुर्यच्छ्मश्रुणस्तद्वायो-
र्निर्वपति देवतास्तस्मादाप्त्वाऽष्टात्रिꣳशच्च ॥ १ ॥

இதில், வாயவ்ய பசுவின் விதியும், தீக்ஷிணீயேஷ்டி விதியுஞ் சொல்லப் படுகிறன.

“இருபத்தோரு உழுந்துக்களால்” என்னும் அனுவாகத்தில், “அக்கினிகளின் பொருட்டுப் பசுக்களைக் கொல்லுக” என்று விதித்துவிட்டு, ஆட்டுக்கடா வொழிந்த ஏனைய பசுக்களை, கொள்ளியால் சுற்றும்வரை செய்து அவிழ்த்து விட்டுவிட்டு, பிராசபத்தியத்தா (பிரசாபதிக்குரிய பசுவா)ல் முடித்தல் வேண்டும் என்று கூறியதை மறித்துங் கூறுகின்றது.

பிராமணம் —1

यदेकेन सꣳस्थापयति यज्ञस्य सन्तत्या अविच्छेदाय ।

என்பது.

உரை.

ஏனையபசுக்களை அவிழ்த்து விட்டுவிட்டு, பிரசாபதிக்குரிய பசு ஒன்றுலேயே முடிக்கில், எடுத்துக் கொண்ட பசுவின் கருமம் இடையீடின்றி முடிவதாகும். அவ்வண்ணம் முடிக்காவிடில் இடையில் விடுபட்டுப் போம் என்பதாம்.

மேற்கூறிய இக்கருமத்திற்கு மந்திர விசேடத்தை விதிக்கின்றது.

பிராமணம்—2

**ऐन्द्राः पशवो येमुष्करायदैन्द्रास्सन्तोऽग्निभ्य आलभ्यन्ते देवताभ्यस्सम-
दन्दधात्याग्नेयीस्त्रिष्टुभोयाज्यानुवाक्याः कुर्याद्यदाग्नेयीस्तेनाग्नेया यत्त्रिष्टु-
भस्तेनैन्द्रास्समृद्ध्यै न देवताभ्यस्समदन्दधाति ।**

என்பது.

உரை.

முட்டைகளுடன் கூடிய பசுக்(பிராணி)களனைத்தும் ஆண் தன்மையாகிய இந்திரிய வளர்ச்சியுடன் கூடியவைகளாமாதலின் இந்திரதேவதைக்கு உரித்தானவைகளேயாகின்றன. அத்தகைய பசுக்களை, வேறுவகையால் கொன்றால் தேவதைகளுக்குட் கலகமுண்டாக்கியதாகும். ஆதலின், அக்கினி தேவதையைக்கூறும் திருஷடுப் சந்தமுடைய இருக்கு மந்திரங்களால் யாஜ்யாநு வாக்கியங்களைச் சொல்லுதல் வேண்டும்; சொல்லும்போது, இருக்கு மந்திரம் அக்கினியைத் தேவதையாக வுடையதாமாதலின் பசுக்களும் அக்கினி தேவதையை வுடையவைகளாகின்றன. இவ் விருவகையும் ஒன்றுபட்டு கலகத்தை நீக்கிச் சம்பத்தை யளிக்கின்றது என்பதாம்.

சூத்திரப்படி, எல்லாப்பசுகட்கும் பதிலாக, வாயவீய பசு ஒன்றையே
செய்யலாம் என்னும் பட்சத்தை விதிக்கின்றது.

பிராமணம்—3

**वायवेनियुत्वतेतूपरमालभते तेजोऽग्नेर्वायुस्तेजस एष आलभ्यते तस्माद्य-
द्रियङ्वायु र्वातितद्रियङ्ङग्निर्दहति स्वमेव तत्तेजोऽन्वेति ।**

என்பது.

உரை.

“நியுத், என்னும் குதிரையையுடைய வாயுவின் பொருட்டு, கொம்பில்லாத ஆட்டுக்கடாவைக் கொல்லுக” இது, வாயு, எத்திக்கிற் செல்கின்றதோ, அத்திக்கில் அக்கினியின் ஒளி மிகுதலின் அக்கினியின் ஒளி மிகுதிக்குக் காரணமாகிய வாயுவின்பொருட்டுக் கொன்றதாய் முடிவில் ஒளியின் பொருட்டே கொல்லப்பட்டது என்பதாம்.

'நியுத்தை யுடைய வாயுவிற்கு' என்பதில் உடன்பாட்டாலும் எதிர்மறையாலும் 'நியுத்' என்னும் வாயுவின் விசேடத்தைப் புகழ்கின்றது.

பிராமணம்—4

यन्नियुत्वते स्यादुन्माद्येद्यजमानो नियुत्वते भवति यजमानस्यानुन्मादाय ।

என்பது.

உரை.

வாயுவிற்கு நியமனஞ் செய்தற் பொருட்டு அத்தகைய குதிரை இன்றெனின், எசமானனும், நியாமகபுத்தியில்லாத பித்தனைப் யாண்டேனுந் திரிவான், யாதாகினும் பேசுவான் ஆதலின், 'நியுத்' என்னும் விசேடணம் வாயுவிற்கு வேண்டும் என்பதாம்.

மந்திர விசேடத்தை விதிக்கின்றது.

பிராமணம்—5

वायुमतीश्वेतवती याज्यानुवाक्ये भवतस्सतेजस्त्वाय ।

என்பது.

உரை.

"பீவோரந்நாம்" என்பது முதலான முதமந்திரத்தில் வாயு என்னுஞ் சொல்லும், வெண்மை நிறப்பொருளுடைய "சிஷக்தீ" என்னுஞ் சொல்லுமிருத்தலின், வாயு, அக்கினியின் ஒளியாம். பசுவின் வெண்மை நிறமும் ஒளியாம். இவ் விரண்டும் ஒளியுடைமை (அழகுடைமை)க்குக் காரணமாகின்றன என்பதாம்.

இரண்டாவது ஆகார ஹோமத்தில், பிரகிருதி மந்திரத்தை விலக்குதற் பொருட்டு விதிக்கின்றது.

பிராமணம்—6

हिरण्यगर्भस्समवर्तताग्र इत्याघारमाघारयति प्रजापतिर्वै हिरण्यगर्भः प्रजापतेरनुरूपत्वाय ।

என்பது.

உரை.

"இரணியகருப்பன் முன் இருந்தனன்" என்பது, பிரமாண்ட வடிவாகிய இரணியத்தை கருப்பத்தில் உடையவன், அல்லது, பிரமாண்டத்தின்

நடுவிலுள்ள சத்திய லோகத்தில் கருப்பமாய் வசிக்கின்ற நான்முகன் இரணிய கருப்பனெனப்படுகின்ருன். இம்மந்திரம் பிரசாபதிக்கு ஒத்ததாமாதலின் இதனுல் ஆகாரஹோமஞ் செய்தல்வேண்டுமென்பதாம்.

வாயவீய பசுவைப் புகழ்கின்றது.

பிராமணம்—7

सर्वाणि वा एषरूपाणि पशूनां प्रत्यालभ्यते यच्छ्मश्रुणस्तत्पुरुषाणाँ रूपं यत्तूपरस्तदश्वानां यदन्यतोदन्तद्गवां यदव्या इव शफास्तदवीनां यदजस्तदजानां ।

என்பது.

உரை.

வீசை இருத்தலின் இருகாற் பசுவாகிய புருடனுக்கும், கொம்பின்மையின் குதிரைக்கும், கீழ் ஈற்றில் மாத்திரம் பற்களிருத்தலின் கோவிற்கும், இரண்டு குளம்புகளுடைமையின் செம்மறி ஆட்டிற்கும், ஆடானதால் வெள்ளாட்டிற்கும் ஒப்புடையது வாயுதேவதைக்குரிய ஆட்டுக்கடா ஒன்றேயாம். ஆதலின் அவைகட்குப்பதிலாக இஃதொன்றே கொன்று வேள்வி செய்யத்தக்கது என்பதாம்.

வாயு தேவதையைப் புகழ்கின்றது.

பிராமணம்—8

वायुर्वै पशूनां प्रियन्धामयद्वायव्यो भवत्येतमेवैनमभिसञ्जानानाः पशव उपतिष्ठन्ते ।

என்பது.

உரை.

பசுக்க(விலங்குக)ள் மறைப்பற்றவைகளாய்த் திரிகின்றவைகளாதலின் அவைகட்கு வாயுவே தங்குமிடமாம். இதுபற்றியே, பசுக்கள் வாயுவைக் குறியாகவைத்து தமது இடத்தைத் தாமே அடைந்துகொன்றன என்பதாம்.

இதில், ஆராய்ச்சியால் உறுதிப்படுத்துதற் பொருட்டு அநுட்டிக்கத்தக்க ஒரு விசேடத்தை விதிக்கின்றது.

பிராமணம்—9

वायव्यः कार्याः (३) प्राजापत्या (३) इत्याहुर्यद्वायव्यङ्कुर्यात्प्रजापतेरिया-द्यत्प्राजापत्यङ्कुर्याद्वायोरियाद्यद्वायव्यः पशुर्भवति तेन वायोर्नैति यत्प्रा-

(இஷ்டி முதலியன)

जापत्यः पुरोडाशोभवति तेन प्रजापतेर्नैति यद्द्वादशकपालस्तेन वैश्वानरा न्नैति ।

என்பது.

உரை.

பசு, வாயவீயமாயிருக்கில் பிரசாபதிக்குரியதை விடும்படி நேரிடும், பிரசாபத்திய பசுவாயிருக்கில் வாயுவிற்குரியதை விடும்படி நேரிடும். இதனால் இவ்விரண்டு பக்ஷங்களினும் வைசுவாநர தேவதையிலிருந்து விடுபட்டதாகும். அல்லது வைசுவானரமெனினே, அவ்விரண்டினும் விடுபட்டதாம். மற்றும், முதல் பட்சத்தைக் கூறும்போது, வைசுவானரத்திலிருந்தும் என்னும் பட்சமுஞ் சேர்க்கும்படி நேரிடும். இவ்வாறு குற்றங்கள் வருதலின் பசு வாயுவீயமாம். புரோடாசம் பிராசாபத்தியமாம். அது பன்னிரண்டு கபாலங்களை யுடையதாமாதலின் வைசுவாநர சம்பந்தமுடையதாம். இவ்வாற்ருல் மூன்று தேவதைகளும் பொருந்துதலால் ஒன்றும் விடுபடல் இல்லை என்பதாம்.

தீட்க்ஷணீய இஷ்டியிற் செய்யப்படும், ஆக்னவைஷ்ணவம் ஏகாதச கபாலம், ஆதித்யம் சரும், வைசுவாநரம் துவாதச கபாலம் என்னும் மூன்று அவிகளுள் முதலாம் அவியை விதிக்கின்றது.

பிராமணம்—10

आग्नावैष्णवमेकादशकपालन्निर्वपति दीक्षिष्यमाणोऽग्निस्सर्वादेवताविष्णुर्यज्ञोदेवताश्चैव यज्ञश्चारभते ।

என்பது.

உரை.

தீட்சணீய இஷ்டி செய்கின்றவன், அக்கினி விஷ்ணுவிற்குரிய பதினெரு கபாலப் புரோடாசஞ் செய்வானுக. இதனுல், அக்கினி எல்லாத் தேவதைகளின் வடிவமாதலானும், எக்ஞம் விஷ்ணுவானதா (சர்வாங்க வியாபியானதா) லும், தேவதைகளைத்துங்கூடும் எக்ஞத்தைத் தொடங்கப் பெற்றவனுகின்ருன் என்பதாம்.

மற்ருேராற்ருல் இரு தேவதைகளைப் புகழ்கின்றது.

பிராமணம்—11

अग्निरवमोदेवतानां विष्णुः परमो यदाग्ना वैष्णव मेकादशकपालन्निर्वपति देवता एवोभयतः परिगृह्य यजमानोऽवरुन्धे ।

என்பது.

உரை.

சஸ்திரங்களுள் முதலாஞ் சஸ்திரத்தில், (துதிவிசேடத்தில்) 'பூரக்னிஜ்யோதிஃ' என்று கூறி யிருத்தலின் அக்கினி முதலாவதாம். ஈற்றிலுள்ள சஸ்திரத்தில் விஷ்ணோர்நுகம், என்று கூறியிருத்தலின் விஷ்ணுஃ கடைசியாவர். இவ் வாற்றல் இவ் விரண்டு தேவதைகளின் பொருட்டு நெல்லெடுத்துப் புரோடாசஞ் செய்யில் நடுவிலுள்ள எல்லாத் தேவதைகளுங் கொள்ளப்பட்டவைகளாகின்றன என்பதாம்.

இச்சை விசேடத்திற்குப் புரோடாசத்தை விதிக்கின்றது.

பிராமணம்—12

पुरोडाशेन वै देवा अमुष्मिँल्लोक आर्ध्नुवञ्चरुणाऽस्मिन्यः कामयेता-मुष्मिँल्लोक ऋध्नुयामिति स पुरोडाशङ्कुर्वीतामुष्मिन्नेवलोक ऋध्नोति ।

என்பது.

உரை.

அவ்வுலகில் சம்பத்தை அடையவிரும்பில் இப் புரோடாசத்தைச் செய்தல் வேண்டும் என்பதாம்.

இனி, கபாலங்களிலுள்ள பதிஞெரு எண்ணைப் பிரித்துப் புகழ்கின்றது.

பிராமணம்—13

यदष्टाकपालस्तेनाग्नेयो यत्त्रिकपालस्तेन वैष्णवस्समृद्ध्यै ।

என்பது.

உரை.

வேறிடங்களில், "அக்கினிக்கு எட்டுக் கபாலப் புரோடாசஞ் செய்க" என்றும், "விஷ்ணுவிற்கு மூன்று கபாலப்புரோடாசஞ் செய்க" என்றுங் கூறி யிருத்தலின், அக்கினிக்கு எட்டுக்கபாலங்களும் விஷ்ணுவிற்கு மூன்று கபாலங்களும் பிரியமாகின்றன என்பதாம்.

பயன் விசேடத்திற்குப் பொங்கலை விதிக்கின்றது.

பிராமணம்—14

यःकामयेतास्मिँल्लोक ऋध्नुयामिति सचरुङ्कुर्वीताग्नेर्घृतं विष्णोस्तण्डुला-स्तस्माच्चरुःकार्योऽस्मिन्नेवलोक ऋध्नोति ।

என்பது

உரை.

அக்கினிக்கு நெய்யும், விஷ்ணுவிற்கு அரிசியும் காரணம் என்று கூறியிருத்தலின் இவ்வுலகில் சம்பத்தையடைய விரும்பியவன் நெய்ப் பொங்கல் செய்யில் அதை அடைகின்றான் என்பதாம்.

இனி, மற்றொரு அவியை விதிக்கின்றது.

பிராமணம்—15

आदित्यो भवतीयं वा अदितिरस्यामेव प्रतितिष्ठत्यथो अस्यामेवाधियज्ञन्त-नुते ।

என்பது.

உரை.

ஆக்கினி வைஷ்ணவ அவியை முதலில் செய்துவிட்டு, அதிதி என்னும் பூமிதேவிக்கு, இரண்டாம் அவியாகிய பொங்கலைச் செய்தல் வேண்டும். இதனால், மண்ணின் மீது எக்ஞஞ் செய்தவனாகின்றான் எக்ஞமும் நிலைக்கின்றது என்பதாம்.

மூன்றும் அவியை விதிக்கின்றது.

பிராமணம்—16

यो वै संवत्सरमुख्य मभृत्वाऽग्निश्चिनुते यथासामिगर्भोऽवपद्यते तादृगेव तदार्तिमार्छेद्वैश्वानरन्द्वादशकपालं पुरस्तान्निर्वपेत्संवत्सरोवा अग्निर्वैश्वानरो यथा संवत्सरमाप्त्वा काल आगतेविजायत एवमेव संवत्सरमाप्त्वा काल आगतेऽग्निश्चिनुते नार्तिमार्छति ।

என்பது.

உரை.

மேலே, உகாக்கினியை ஒருவருடம் கழுத்திற் கட்டிக் கொள்ளல் வேண்டும் என்று விதிக்கப்படுவதனால், அக்கினிசயனம் பரிபக்குவமின்றிய கர்ப்பம் போல் நழுகாது. நழுகிவிடிலோ, எசமானன் இறப்பன். அவ்வாறு செய்யமுடியாதவன், ஒரு வருடத்திற்கு முன், மூன்று, அல்லது, ஆறு, அல்லது, பத்து இரவுகள் தீட்சைபண்ணிக்கொள்ள விரும்பியவன் வைசுவாநரனுக்குரிய பன்னிரு கபாலப்புரோடாசஞ் செய்தல் வேண்டும்

ஏனெனின்? வைசுவாநரம் என்னும் அக்கினி வருடரூபமாதலினென்க. பத்துமாதம் நிறைந்து குழந்தை பிறப்பதுபோல் இந்த இஷ்டியால் வருடத்தை யடைந்து, பக்குவகாலத்தில் அக்கினி சயனஞ் செய்தவனுகின்றுன் ஆதலின் இறக்கமாட்டான் என்பதாம்.

மற்ருேராற்ருற் புகழ்கின்றது.

பிராமணம்—17

एषा वा अग्नेः प्रियातनूर्यद्वैश्वानरः प्रियामेवास्यतनुवमवरुन्धे ।

என்பது.

உரை.

எல்லாமக்கட்கும் இனிமை செய்யும் ஒருவகை அக்கினி வைசுவாநரம் எனப்படும். இது அக்கினிக்கு பிரியவுடம்பாம். ஆதலின், இவ் விஷ்டியால் அக்கினி சம்பந்தமாகிய பிரியவுடம்பை அடைகின்ருன் என்பதாம்.

கூறிய மூன்று அவிகளைப் புகழ்கின்றது.

பிராமணம்—18

त्रीण्येतानिहवीꣳषि भवन्ति त्रय इमे लोका एषाँल्लोकानाꣳ रोहाय ॥

என்பது.

உரை.

அவிகள் மூன்ருதலின் மூன்றுலகங்களையும் அடைகின்ருன் என்பதாம். ஈண்டு, ஆக்ன வைஷ்ணவ அவி, பிரகிருதியிலும் உண்டு ஆதலின் விதியாலும் வரும். வரினும், மேலுள்ள அவிகளை விதித்தற் பொருட்டு அதையும் விதித்ததாம். இந்த தீக்ஷணீய இஷ்டியை, ஷட்பிர் தீக்ஷயதி, என்னும் அநுவாகத்திற்கு முன் உணர்ந்து கொள்க. பொன் தகட்டை விடுக என்பதோ, மேல்வரும், 'நஹஸ்ம' என்னும் அநுவாகத்திற் கூறப்பட்டது.

முதலநுவாகம்

முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் ஐந்தாம் பிரபாடகம்

இரண்டாவது அநுவாகம்

மகாக்கினி சயனத்தையும், அதனுடைய பயனையுங் கூறும் பிராமணங்கள்.

ஆறு பஞ்சாதிக்குமேல் நாற்பது பதங்களைக் கொண்டது.

प्रजापतिः प्रजास्सृष्ट्वा प्रेणाऽनुप्राविशत्ताभ्यः पुनस्संभवितु-
न्नाशक्नोत्सोऽब्रवीदृध्नवदित्सयो मेतः पुनस्संचिनवदिति तं देवा-
स्समचिन्वन्ततो वै त आर्ध्नुवन्यत्समचिन्वन्तच्चित्यस्य चित्यत्वं
य एवं विद्वानग्निं चिनुत ऋध्नोत्येव कस्मै कमग्निश्चीयत इत्या-
हुरग्निवान् [८] असानीति वा अग्निश्चीयतेऽग्निवानेव भवति
कस्मै कमग्निश्चीयत इत्याहुर्देवा मा वेदन्निति वा अग्निश्चीयते
विदुरेनं देवाः कस्मै कमग्निश्चीयत इत्याहुर्गृह्यसानीति वा अग्नि-
श्चीयते गृह्येव भवति कस्मै कमग्निश्चीयत इत्याहुः पशुमान-
सानीति वा अग्निः [९] चीयते पशुमानेव भवति कस्मै कमग्नि-
श्चीयत इत्याहुस्सप्त मा पुरुषा उप जीवानिति वा अग्निश्चीयते
त्रयः प्राञ्चस्त्रयः प्रत्यञ्च आत्मा सप्तम एतावन्त एवैनममुष्मिँल्लोक
उप जीवन्ति प्रजापतिरग्निमचिकीषत तं पृथिव्यब्रवीन्न मय्यग्निं
चेष्यसेऽति मा धक्ष्यति सा त्वाऽतिदह्यमाना वि धविष्ये [१०]
स पापीयान्भविष्यसीति सोऽब्रवीत्तथा वा अहं करिष्यामि यथा
त्वा नातिधक्ष्यतीति स इमामभ्यमृशत्प्रजापतिस्त्वा सादयतु
तया देवतयाऽङ्गिरस्वद्ध्रुवा सीदेतीमामेवेष्टकां कृत्वोपाधत्ता-

तिदाहाय यत्प्रत्यग्निं चिन्वीत तदभि मृशेत्प्रजापतिस्त्वा साद-
यतु तया देवतयाऽङ्गिरस्वद्ध्रुवा सीद [११] इतीमामेवेष्टकां
कृत्वोप धत्तेऽनतिदाहाय प्रजापतिरकामयत प्र जायेयेति स एत-
मुख्यमपश्यत्तꣳ संवत्सरमबिभस्ततो वै स प्राजायत तस्मात्संवत्सरं
भार्यः प्रैव जायते तं वसवोऽब्रुवन्प्र त्वमजनिष्ठा वयं प्र जाया-
महा इति तं वसुभ्यः प्रायच्छत्तं त्रीण्यहान्यबिभरुस्तेन [१२]
त्रीणि च शतान्यसृजन्त त्रयस्त्रिꣳशतं च तस्मात्त्र्यहं भार्यः प्रैव
जायते तान्रुद्रा अब्रुवन्प्र यूयमजनिढ्वं वयं प्रजायामहा इति तꣳ
रुद्रेभ्यः प्रायच्छन्तꣳ षडहान्यबिभरुस्तेन त्रीणि च शतान्यसृजन्त
त्रयस्त्रिꣳशतं च तस्मात्षडहं भार्यः प्रैव जायते तानादित्या
अब्रुवन्प्र यूयमजनिढ्वं वयम् [१३] प्रजायामहा इति तमादि
त्येभ्यः प्रायच्छन्तं द्वादशाहान्यबिभरुस्तेन त्रीणि च शतान्यसृ-
जन्त त्रयस्त्रिꣳशतं च तस्माद् द्वादशाहं भार्यः प्रैवजायते तेन वै
ते सहस्रमसृजन्तोखाꣳ सहस्रतमीं य एवमुख्यꣳ साहस्रं वेद
प्र सहस्रं पशूनाप्नोति [१४]॥ अग्निवान्पशुमानसानीति वा
अग्निर्धाविष्ये मृशेत्प्रजापतिस्त्वा सादयतु तया देवतयाऽङ्गि-
रस्वद्ध्रुवा सीद तेन तानादित्या अब्रुवन्प्र यूयमजनिढ्वं वयं
चत्वारिꣳशच्च ॥ २ ॥

அதன் பயனும்)

முதலில் அக்கினிசயனத்தை விதித்தற் பொருட்டுப் போற்றுகின்றது.

பிராமணம்—1

प्रजापतिः प्रजास्सृष्ट्वा प्रेणाऽनुप्राविशत्ताभ्यः पुनस्संभवितुन्नाशक्नोत्सोऽब्रवीदृध्नवदित्सयो मेतः पुनस्संचिनवदिति तं देवास्समचिन्वन्ततो वै त आर्ध्नुवन्यत्समचिन्वन्तच्चित्यस्य चित्यत्वं ।

என்பது.

உரை.

ஒருகால் பிரசாபதி, உயிர்களைப் படைத்து அன்பு மிகுதியால் அவ் வுயிர்களுக்குள் நுழைந்து விட்டனர். நுழைந்தபின், அவ் வுயிர்களிடத்தி லிருந்து மீண்டும் எவ்வித வடிவாலும் எழும்பமுடியாதவராய் அங்கிருந்து கொண்டே, "உயிர்களிடத்திலிருந்து யாதானுமொரு வடிவாக என்னைச் சேர்க்கின்றவன் சம்பத்தையடைவான்" என்றனர், அதைக்கேட்ட தேவர் கள், பிரசாபதியை அக்கினி வடிவாகச் செங்கலடுக்கி வழிபட்டுச் சம்பத்தை யடைந்தனர். இவ்வாறு அடுக்கியதால் சயனவிஷயமாகிய அக்கினி சித்யம் என வழங்கப் பெற்றது என்பதாம்.

இப்போது அதை விதிக்கின்றது.

பிராமணம்—2

य एवं विद्वानग्निं चिनुत ऋध्नोत्येव ।

என்பது.

உரை.

இவ்வாறுணர்ந்தவன், அக்கினி சயனஞ் செய்து சம்பத்தையடைகின் றுன் என்பதாம்.

வினுவிடைகளால் முறையாய் விசேடமான பயன்களைத் தெரிவிக்க விருப்புற்று முதலில் ஒரு பயனைக் காட்டுகின்றது.

பிராமணம்—3

कस्मै कमग्निश्चीयत इत्याहुरग्निवानसानीति वा अग्निश्चीयतेऽग्निवानेव भवति ।

என்பது.

உரை.

பிரமவாதிகளுள் ஒருவர் எவ்விருப்பத்தின் பொருட்டு அக்கினி சயனஞ் செய்யப்படுகின்றது? என்று வினவியதற்கு, பின் செய்யப்படும் எக்ஞத்திற்குரிய சாத்திரீய அக்கினியை யுடையவனுவேன்'' என்னும் விருப்பால் அக்கினி சயனஞ் செய்தவன் அத்தகைய அக்கினியை யடைகின்றான் விடை என்பதாம்.

இரண்டாவது பயனை விளக்குகின்றது.

பிராமணம்—4

कस्मै कमग्निश्चीयत इत्याहुर्देवा मा वेदन्निति वा अग्निश्चीयते विदुरेनं देवाः ।

என்பது.

உரை.

சுவர்க்கத்திலுள்ள தேவர்களனைவரும், 'இவ்வெசமானன் நன்கு அநுட்டானமுடையவன்' என்று உணரல் வேண்டும்மென்று விரும்பி அக்கினி சயனஞ் செய்யில் அவ்வாறே தேவர்கள் உணர்கின்றார்கள் என்பதாம்.

மூன்றாவது பயனை விளக்குகின்றது.

பிராமணம்—5

कस्मै कमग्निश्चीयत इत्याहुर्गृह्यसानीति वा अग्निश्चीयते गृह्येव भवति ।

என்பது.

உரை.

"சாத்திரங்களிற் கூறிய கருமங்களை யநுட்டிக்கும் வன்மையுடைய இல்லறத்தனுவேன்'' என்று விரும்பி அக்கினி சயனஞ் செய்யில் அத்தகைய இல்லறத்தானுகின்றான் என்பதாம்.

நான்காவது பயனை விளக்குகின்றது.

பிராமணம்—6

कस्मै कमग्निश्चीयत इत्याहुः पशुमानसानीति वा अग्निश्चीयते पशुमानेव भवति ।

என்பது.

அதன் பயனும்)

உரை.

பசுக்களையுடையவனுவேன் என்று விரும்பி, அக்கினி சயனஞ் செய்யில் பசுக்களையடைகின்றுன் என்பதாம்.

ஐந்தாவது பயனை விளக்குகின்றது.

பிராமணம்—7

कस्मै कमग्निश्चीयत इत्याहुस्सप्त मा पुरुषा उप जीवानिति वा अग्निश्चीयते त्रयः प्राञ्चस्त्रयः प्रत्यञ्च आत्मा सप्तम एतावन्त एवैनममुष्मिँल्लोक उप जीवन्ति ।

என்பது.

உரை.

முன்னுண்டான, தந்தை, பாட்டன், முப்பாட்டன், பிறகு உண்டான மைந்தன், பேரன், மூன்றும் பேரன் என்னும் அறுவர், இடையிலுள்ள தான் ஒருவன் ஆக எழுவரும் என்னல் பாதுகாப்புடையவர்களாதல் வேண்டுமென்று விரும்பி அக்கினி சயனஞ் செய்யில் அவ்வாறே ஆகின் ருன் என்பதாம்.

சூத்திரப்படி, உத்தரவேதியைத் தொடுவதை விதித்தற் பொருட்டுப் போற்றுகின்றது.

பிராமணம்—8

प्रजापतिरग्निमचिकीषत तं पृथिव्यब्रवीन्न मय्यग्निं चेष्यसेऽति मा धक्ष्यति सा त्वाऽतिदह्यमाना विधविष्ये स पापीयान्भविष्यसीति सोऽब्रवी-त्तथा वा अहं करिष्यामि यथा त्वा नातिधक्ष्यतीति स इमामभ्यमृश-त्प्रजापतिस्त्वा सादयतु तया देवतयाऽङ्गिरस्वद्ध्रुवा सीदेतीमामेवेष्टकां कृत्वोपाधत्तानतिदाहाय ।

என்பது.

உரை.

ஒருகால், பிரசாபதி அக்கினி சயனஞ் செய்யவிரும்பியபோது, பூமி, என்மீது அக்கினி சயனஞ் செய்யாதே; ஏனெனின்? அக்கினியின் சூடு மிகுமாதலால் அதனுற் சூடுண்டயான் இங்கு மங்கும் புரளில் என்மீதுள்ள உன்னையும் வீழ்த்தி விடுவேனுதலின் என்றது. மற்றும் விழுந்தநீயும், மிகுந்த

பூமியும் வறியோனு மாகிவிடுவாய் என்றது. அதைக்கேட்ட பிரசாபதி, அற்றேல், அவ்வண்ணஞ் சுடாதிருத்தற் பொருட்டு மேல்வரும் பிரசாபதிஃ, என்பது முதலான மந்திரத்தை ஓதி பூமியை நாற்புறமுந் தொட்டு இப் பூமியையே ஒரு செங்கலாக அக்கினி சயனஞ் செய்தனன். அக்கினியுடம்பு அதற்குள்ளிருத்தலின் தன்னையேதான் சுடுதலின்மையின் இனிது முடிந்தது என்பதாம். மந்திர உரை:—முதற்காரணமாகிய பூமியே! உன்னை, முதற் காரணமாகிய பிரசாபதிவைப்பாராக அத்தகைய பிரசாபதி உருவமாகிற உன்னைக்காப்பாற்றுந் தேவதையால் அங்கிரச ரிஷிகள் வைத்தபோது நிலைத்திருந்ததுபோல் நிலைத்திருப்பாயாக என்பது".

இனி, விதிக்கின்றது.

பிராமணம்—9

यत्प्रत्यग्निं चिन्वीत तदभि मृशेत्प्रजापतिस्त्वा सादयतु तया देवतयाऽङ्गिरस्वद्ध्रुवा सीदेतीमामेवेष्टकां कृत्वोप धत्तेऽनतिदाहाय ।

என்பது.

உரை.

அக்கினி சயனத்திற்குச் செங்கல்கள் அடுக்கவேண்டிய இடத்தை, 'பிரசாபதி, என்பது முதலிய மந்திரத்தை ஓதித்தொடல் வேண்டும், தொட்டதால், பூமி முழுதையுஞ் செங்கலாகக் கொண்டு அடுக்கியதாயிற்று. அதனல் பூமிக்கு மிகுந்த சூடுண்டாகாது என்பதாம்.

உகாத்தீயைக் கட்டிக்கொள்ளல் விதிக்கப்படுகின்றது.

பிராமணம்—10

प्रजापतिरकामयत प्रजायेयेति स एतमुख्यमपश्यत्तꣳ संवत्सरमबिभस्ततो वै स प्राजायत तस्मात्संवत्सरं भार्यः प्रैव जायते ।

என்பது.

உரை.

பிரசாபதி, எல்லாவுயிர்களுமாவோமென்று விரும்பி, அதற்கு உபாய மாக உகாத்தீயை ஒரு வருடகாலம் தரித்துக் கொண்டு அவ்வாறு செய் வாராயினர். ஆதலின், ஒரு வருடம்வரை உகாத்தீயை, நாடோறும் போற்றும்போது கழுத்திற் கட்டிக்கொள்ளில் அவன் பிரசையை உண்டாக் குகின்றான் என்பதாம்.

மூன்று நாள் கட்டிக்கொள்ளும் பக்ஷத்தைக் கூறுகின்றது.

பிராமணம்--11

तं वसवोऽब्रुवन्प्र त्वमजनिष्ठा वयं प्र जायामहा इति तं वसुभ्यः प्रायच्छत्तं त्रीण्यहान्यबिभरुस्तेन त्रीणि च शतान्यसृजन्त त्रयस्त्रिꣳशतं च तस्मात्त्र्यहं भार्यः प्रैव जायते ।

என்பது.

உரை

பிரசாபதியே! நீ, உயிர்களைப்படைத்துக் கொண்டிருக்கின்றாய் அது போல் யாமும் உண்டாக்குகின்றோம் என்று, வசுக்கள் பிரசாபதியிடங் கூறினர். பிரசாபதி, உகாத்தியை வசுக்களிடங் கொடுத்தனர்; அவர்கள் அதை மூன்று நாள் கழுத்திற் கட்டிக்கொண்டிருந்து முன்னூற்று முப்பத்து மூன்று உயிர்களைப்படைத்தனர். ஆதலின், மூன்று நாள் கட்டிக்கொள்கின்றவன் உயிர்களைப் படைக்கும் வன்மையுடையவனாகின்றான் என்பதாம்.

ஆறுநாள் கட்டிக்கொள்ளும் பக்ஷத்தை விதிக்கின்றது.

பிராமணம்—12

तान्रुद्रा अब्रुवन्प्र यूयमजनिढ्वं वयं प्रजायामहा इति तꣳ रुद्रेभ्यः प्रायच्छन्तꣳ षडहान्यबिभरुस्तेन त्रीणि च शतान्यसृजन्त त्रयस्त्रिꣳशतं च तस्मात्षडहं भार्यः प्रैव जायते ।

என்பது.

உரை.

வசுக்களே நீவிர் உயிர்களைப் படைக்கின்றீர்கள்; அதுபோல் யாமும் படைக்கின்றோம் என்று, உருத்திரர்கள் வசுக்களிடங் கூறினர். வசுக்கள் உகாத்தியை அவர்களிடங் கொடுக்க, அதை அவர்கள் ஆறுநாட் கட்டிக் கொண்டிருந்து மூந்நூற்று முப்பத்து மூன்று உயிர்களைப் படைத்தனர். ஆதலின் உகாத்தியை ஆறு நாள் கட்டிக் கொள்கின்றவன் உயிர்களைப் படைக்கும் வன்மையுடையவனாகின்றான் என்பதாம்.

பன்னிரண்டு நாள் கட்டிக்கொள்ளும் பக்ஷத்தை விதிக்கின்றது.

பிராமணம்—13

तानादित्या अब्रुवन्प्र यूयमजनिढ्वं वयं प्रजायामहा इति तमादित्येभ्यः प्रायच्छन्तं द्वादशाहान्यबिभरुस्तेन त्रीणि च शतान्यसृजन्त त्रयस्त्रिꣳशतं च तस्माद् द्वादशाहं भार्यः प्रैव जायते ।

என்பது.

உரை.

உருத்திரர்களே! நீவிர், உயிர்களைப் படைப்பதுபோல்யாமும் படைக்கின்றோம் என்று, ஆதித்தர்கள் உருத்திரர்களிடங் கூறினர். உருத்திரர்கள், அவர்களிடம் உகாத்தீயைக் கொடுக்க, அதை அவர்கள் பன்னிரண்டு நாட்கட்டிக்கொண்டிருந்து முன்னூற்று முப்பத்து மூன்று உயிர்களைப் படைத்தனர். ஆதலின், பன்னிரண்டு நாள் உகாத்தீயைக் கட்டிக்கொள்கின்றவன் உயிர்களைப் படைக்கும் வன்மையுடையவனாகின்றான் என்பதாம்.

மேல், மூன்று பக்ஷங்களிலுங் கூறிய பொருள்களைக் கூட்டி ஒழுங்குப் படுத்துகின்றது.

பிராமணம்—14

तेन वै ते सहस्रमसृजन्तोखाꣳ सहस्रतमीं ।

என்பது.

உரை.

வசு, உருத்திர, ஆதித்தர்கள் ஆயிரம் உகைகள் உண்டாகும்படி தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது உயிர்களைப் படைத்தார்கள் என்பதாம்.

இவ்வாறுணர்ந்தவனைப் புகழ்கின்றது.

பிராமணம்—15

य एवमुख्यꣳ साहस्रं वेद प्र सहस्रं पशूनाप्नोति ॥

என்பது.

உரை.

இவ்வாறு உகாக்கினியானது ஆயிரக்கணக்கான உயிர்களைப் படைக்கச் செய்கிறதென்றுணர்ந்தவன் ஆயிரக்கணக்கான பசுக்களை அடைகின்றான் என்பதாம்.

இரண்டாம் அநுவாகம்

முற்றிற்று

ஐந்தாங்காண்டம் ஐந்தாம்பிரபாடகம்

மூன்றும் அநுவாகம்.

உகாவின் ஹோமமுதலானவைகளைக் கூறும் பிராமணங்கள்.

மூன்று பஞ்சாதிக்குமேல் இருபத்து நான்கு பதங்களைக் கொண்டது.

यजुषा वा एषा क्रियते यजुषा पच्यते यजुषा वि मुच्यते यदुखा सा वा एषैतर्हि यातयाम्नी सा न पुनः प्रयुज्येत्याहुरग्ने युक्ष्वा हि ये तव युक्ष्वा हि देवहूतमाꣳ इत्युखायां जुहोति तेनैवैनां पुनः प्र युङ्क्ते तेनायातयाम्नी यो वा अग्निं योग आगते युनक्ति युङ्क्ते युञ्जानेष्वग्ने [१५] युक्ष्वा हि ये तव युक्ष्वा हि देवहूतमाꣳ इत्याहैष वा अग्नेर्योगस्तेनैवैनं युनक्ति युङ्क्ते युञ्जानेषु ब्रह्मवादिनो वदन्ति न्यङ्ङग्निश्चेतव्या ३ उत्ताना ३ इति वयसां वा एष प्रतिमया चीयते यदग्निर्यन्न्यञ्चं चिनुयात्पृष्टित एनमाहुतय ऋच्छेयुर्यदुत्तानं न पतितुꣳ शक्नुयादसुवर्ग्योऽस्य स्यात्प्राचीनमुत्तानम् [१६] पुरुषशीर्षमुप दधाति मुखत एवैनमाहुतय ऋच्छन्ति नोत्तानं चिनुते सुवर्ग्योऽस्य भवति सौर्या जुहोति चक्षुरेवास्मिन्प्रति दधाति द्विर्जुहोति द्वे हि चक्षुषी समान्या जुहोति समानꣳ हि चक्षुस्समृद्ध्यै देवासुरास्संयत्ता आसन्ते वामं वसु सं न्यदधत तद्देवा वामभृताऽवृञ्जत तद्वामभृतो वामभृत्त्वं यद्वामभृतमुपदधाति वाममेव तया वसु यजमानो भ्रातृव्यस्य वृङ्क्ते हिरण्यमूर्ध्नी भवति ज्योतिर्वै हिरण्यं ज्योतिर्वामं ज्योतिषैवास्य ज्योतिर्वामं वृङ्क्ते द्वियजुर्भवति

प्रतिष्ठित्यै [१७] ॥ युञ्जानेष्वग्ने प्राचीनमुत्तानं वामभृतं चतुर्विंशतिश्च ॥ ३ ॥

இதில் உகாவின் ஹோமமுதலியவைகள் கூறப்படுகிறது.

ஓமத்தை விதிக்கின்றது.

பிராமணம்—1

यजुषा वा एषा क्रियते यजुषा पच्यते यजुषा विमुच्यते यदुखा सा वा एषैतर्हि यातयाम्नी सा न पुनः प्रयुज्येत्याहुरग्ने युक्ष्वा हि ये तव युक्ष्वा हि देवहूतमाँ इत्युखायां जुहोति तेनैवैनां पुनः प्र युङ्क्ते तेनाऽयातयाम्नी।

என்பது.

உரை.

இவ்வுகாவை, (மண்தொட்டியை) செய்தல், சுடுதல், உறியிலிருந்து எடுத்தல் முதலான அனைத்தும் எசுர்மந்திரத்தாற் செய்தபடியால் பல பிரயோகங்களாகி விட்டமையின் இப்போது சாரமற்றதாய் மீண்டும் பிரயோகம் பண்ணுவதற்கு எசுர் உரியதாகாது என்று பெரியார் கூறுகின்றனர். ஆதலின், மீண்டும் சாரமுடையதாகச் செய்வதன் பொருட்டு, 'துருவாவீ' என்னுமநுவாகத்திற் கூறியுள்ள, "அக்னேயுக்க்ஷ்வ" என்பது முதலான இரண்டு இருக்கு மந்திரங்களால் உகாவில் ஹோமஞ் செய்யில் மீண்டுஞ் சாரமுடையதாய்ப் பிரயோகத்திற்கு உரியதாகின்றது என்பதாம்.

அம்மந்திரத்திலுள்ள, 'யுக்க்ஷ்வ' (கூடுவோயாக) என்னுஞ் சொல்லின் கருத்தை விளக்குகின்றது.

பிராமணம்—2

यो वा अग्निं योग आगते युनक्ति युङ्क्ते युञ्जानेष्वग्ने युक्ष्वा हि ये तव युक्ष्वा हि देवहूतमाँ इत्याहैष वा अग्नेर्योगस्तेनैवैनं युनक्ति युङ्क्ते युञ्जानेषु।

என்பது.

உரை

எவ்வெசமானன், பிரயோக சமயம் வந்தவிடத்து மறப்பில்லாதவனாய் அக்கினியைக் கூட்டி வைக்கின்றானோ, அவன், அக்கினி யோகத்தை யநுட்டிக்கின்ற எசமானர்களுக்குள், இவனும் அனுட்டிக்கின்றவன் ஒருவனாயினன் எனப்படுகின்றான். எனெனின்? அச்சொல், "அக்கினியே!

நீ கூடுவாயாக" என்னும் பொருளைத் தருதலின் அம்மந்திரத்தை ஓதில் அத்தகைய அக்கினியின் யோகங்கிடைக்கின்றமையின் என்க. இவ்வாறு அம்மந்திரத்தை ஓதலால் அக்கினி யோகஞ் செய்கின்றவன் எசமானர்களுக்குள் ஒருவனுகவும் எண்ணப்படுகின்றுன் என்பதாம்.

மனிதன் தலையை வைப்பதை விதிக்கின்றது.

பிராமணம்—3

ब्रह्मवादिनो वदन्ति न्यङ्ङग्निश्चेतव्या ३ उत्ताना ३ इति वयसां वा एष प्रतिमया चीयते यदग्निर्यन्न्यञ्चं चिनुयात्पृष्टित एनमाहुतय ऋच्छेयुर्यदुत्तानं न पतितुꣳ शक्नुयादसुवर्ग्योऽस्य स्यात्प्राचीनमुत्तानं पुरुषशीर्षमुप दधाति मुखत एवैनमाहुतय ऋच्छन्ति नोत्तानं चिनुते सुवर्योऽस्य भवति ।

என்பது.

உரை.

மேல்முகமாகிய அக்கினிசயனம் கீழ்முகமாய்ப் பறவை வடிவாகச் செய்யப்படுகின்றதென்று பிரமவாதிகள் சொல்கின்றனர். அவ்வாறு செய்யில், சயனக்கினி பின்புறத்தில் எல்லா ஆகுதிகளையும் ஏற்றுக்கொள்ளுகின்றது. சிறகுகளால் மேலே செல்ல முடியாமையின் மேல்முகமாய் சுவர்க்கத்திற்கு நலமாதல் இல்லை. இவ்விரு குற்றங்களையும் போக்குவதற்கு, மனிதன் தலையை மயிருள்ள பக்கம் கிழக்கும் வெட்டிய கழுத்துள்ள பக்கம் மேற்குமாக வைத்து ஆகுதிகள் செய்யில் முகவாயிலாகவே செய்யும் ஆகுதிகள் அக்கினியைச் சேர்கின்றன. பறவைவடிவம் மேல்முகமாக இல்லாததால் வானிற் செல்லமுடியுமாதலின் சுவர்க்க நலமுமுண்டு என்பதாம். மற்றவைகளை இதன் பிரயோகத்திற் காண்க. இங்கு, கிழக்கில் தலையை மேல்முகமாய் வைத்தல் வேண்டுமென்பது மாத்திரம் விதிக்கப்படுகின்றது என்பதை யுணர்க.

மனிதன் தலையிலுள்ள கண்களிற் செய்யும் ஓமத்தை விதிக்கின்றது.

பிராமணம்—4

सौर्या जुहोति चक्षुरेवाऽस्मिन्प्रति दधाति ।

என்பது.

உரை.

"சௌரீ, சித்திரம்'' என்பது முதலான சூரியமந்திரத்தால் கண்களின் துவாரங்களில் ஓமஞ் செய்யில், சூரியன் கண்ணின் அபிமானி தேவதையாதலின் அத் தலையில் கண்களை உண்டாக்கியதாயிற்று என்பதாம்.

மேற்கூறிய மந்திரத்தை இருபாதியாக்கி ஹோமஞ் செய்தல் வேண்டுமென விதிக்கின்றது.

பிராமணம்—5

द्विर्जुहोति द्वे हि चक्षुषी ।

என்பது.

உரை.

கண்ணிந்திரியம் ஒன்றேயாயினும் கோளகவேறுபாட்டால் இரண்டாமாதலின் இரண்டு ஹோமங்கள் என்பதாம்.

இருக்கு மந்திரத்தைப் பிரிக்கில் வேறுபடுமோ? என்னும் ஆசங்கையை நீக்குதற்பொருட்டு மந்திரம் ஒன்றே என்கின்றது.

பிராமணம்—6

समान्या जुहोति समानꣳ हि चक्षुस्समृद्ध्यै ।

என்பது.

உரை.

கோளகங்கள் இரண்டாமாயினும் கண்ணிந்திரியம் ஒன்றேயாதலின் இருக்கு மந்திரமும் ஒன்றே என்பதாம்.

'வாமபிருத்' என்னுஞ் செங்கல் வைப்பதை விதிக்கின்றது.

பிராமணம்—7

देवासुरास्संयत्ता आसन्ते वामं वसु सं न्यदधत तद्देवा वामभृताऽवृञ्जत तद्वामभृतो वामभृत्त्वं यद्वामभृतमुपदधाति वाममेव तया वसु यजमानो भ्रातृव्यस्य वृङ्क्ते ।

என்பது.

உரை

தேவர்கட்கும் அசுரர்கட்கும் போர் மூண்டபோது இருதிறத்தார்களும் தத்தமது தனங்களை மறைத்துவைத்துக் கொண்டனர். அப்போது, தேவர்கள், அசுரர்களின் தனத்தைக் கெடுப்பதற்குரிய செங்கலை வைத்து நாசப்படுத்தியதால் அச்செங்கல் வாமபிருத் எனப்பட்டது. அதாவது வாமம் = தனத்தைக் கொடுப்பது என்பதாம். இதனால், பகைவரின் தனங்களைக் கெடுக்கின்றான் என்பதாம்.

அச்செங்கலின்மீது இரண்டு பொன் துண்டுகளைப் போடுவதை விதிக்கின்றது.

பிராமணம்—8

हिरण्यमूर्ध्नी भवति ज्योतिर्वै हिरण्यं ज्योतिर्वामं ज्योतिषैवास्य ज्योतिर्वामं वृङ्क्ते ।

என்பது.

உரை.

தனங்கள், அதாவது இரத்தினம் முதலானவைகள் ஒளியுடையவைகளாதலின், செங்கலின்மீது பொன் துண்டுகளும் ஒளியுடையவைகள் என்பதாம்.

வாமபிருத் செங்கலை, இரண்டு மந்திரங்களால் வைத்தல் வேண்டுமென்று விதிக்கின்றது.

பிராமணம்—9

द्वियजुर्भवति प्रतिष्ठित्यै ॥

என்பது.

உரை.

இரண்டு மந்திரங்களால் வைத்தலால் நிலையையடைகின்றான் என்பதாம்.

மூன்றும் அநுவாகம்

முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் ஐந்தாம்பிரபாடகம்

நான்காவது அநுவாகம்.

ரேதசிக், என்பது முதலானவைகளை வைக்கும் முறையைக் கூறும் பிராமணங்கள்.

நான்கு பஞ்சாதிக்குமேல் பதினெட்டுப் பதங்களைக் கொண்டது.

आपो वरुणस्य पत्नय आसन्ता अग्निरभ्यध्यायत्तास्समभव-
त्तस्य रेतः पराऽपतत्तदियमभवद्यद्द्वितीयं पराऽपतत्तदसावभवदियं
वै विराडसौ स्वराड्यद्विरजावुपदधातीमे एवोप धत्ते यद्वा असौ
रेतस्सिञ्चति तदस्यां प्रति तिष्ठति तत्प्र जायते ता ओषधयः
[१८] वीरुधो भवन्ति ता अग्निरत्ति य एवं वेद प्रैव जायतेऽ-
न्नादो भवति यो रेतस्वी स्यात्प्रथमायां तस्य चित्यामुभे उप
दध्यादिमे एवास्मै समीची रेतस्सिञ्चतो यस्सिक्तरेतास्स्यात्प्रथ-
मायां तस्य चित्यामन्यामुप दध्यादुत्तमायामन्याꣳ रेत एवास्य
सिक्तमाभ्यामुभयतः परि गृह्णाति संवत्सरं न कम् [१९] चन
प्रत्यवरोहेन्न हीमे कं चन प्रत्यवरोहतस्तदेनयोर्व्रतं यो वा अप-
शीर्षाणमग्निं चिनुतेऽपशीर्षाऽमुष्मिँल्लोके भवति यस्सशीर्षाणं
चिनुते सशीर्षाऽमुष्मिँल्लोके भवति चित्तिं जुहोमि मनसा घृतेन
यथा देवा इहाऽऽगमन्वीतिहोत्रा ऋतावृधस्समुद्रस्य वयुनस्य
पत्मञ्जुहोमि विश्वकर्मणे विश्वाऽहाऽमर्त्यꣳ हविरिति स्वयमातृ-
ण्णामुपधाय जुहोति [२०] एतद्वा अग्नेश्शिरस्सशीर्षाणमेवाग्निं
चिनुते सशीर्षाऽमुष्मिँल्लोके भवति य एवं वेद सुवर्गाय वा एष
लोकाय चीयते यदग्निस्तस्य यदयथापूर्वं क्रियतेऽसुवर्ग्यमस्य

சேங்கல்)

तत्सुवर्ग्योऽग्निश्चितिमुपधायामि मृशेच्चित्तिमचित्तिं चिनवद्वि विद्वान्पृष्ठेव वीता वृजिना च मर्तान्राये च नस्स्वपत्याय देव दितिं च रास्वादितिमुरुष्येति यथापूर्वमेवैनामुप धत्ते प्राश्वमेनं चिनुते सुवर्ग्योऽस्य भवति [२१] ॥ ओषधयः कं जुहोति स्वपत्यायाष्टादश च ॥ ४ ॥

இதில், ரேதசிக் என்பது முதலானவைகளை வைக்கும் முறை கூறப்படுகின்றது.

'ரேதசிக், என்னும் மூன்று செங்கல்களுள், முதலாவது இரண்டாவதாகிய இரண்டு செங்கல்களை விதிக்கின்றது.

பிராமணம்—1

आपो वरुणस्य पत्नय आसन्ता अग्निरभ्यध्यायत्तास्समभवत्तस्य रेतः पराऽपतत्त दियमभवद्यद्द्वितीयं पराऽपतत्तदसावभवदियं वै विराडसौ स्वराड्यद्विराजावुपदधातीमे एवोपधत्ते ।

என்பது.

உரை.

வருணனுடைய மனைவியாகிய நீர்த்தேவதையை, அக்கினி காமவேட்கையுடன் நினைக்கும்போது அக்கினியின் சுக்கிலம் கலித்து விழுந்ததாம்; அதுவே இப்பூமியாயிற்று. இரண்டாம் முறை கலித்து விழுந்தசுக்கிலம் சுவர்க்கலோகமாயிற்று. அவற்றுள், பல்வகை உயிர்கட்கு ஆதாரமாய் விளங்குதலின் பூமி விராட் எனப்பட்டது. சுவர்க்கம் தானேவிளங்குதலின் சுவராட் எனப்பட்டது. விராட், சுவராட் என்னுஞ் சொற்களைக் கொண்ட மந்திரங்களிரண்டாலும் இவ்விரண்டு செங்கல்களையும் வைத்தலால் பூமியையும் சுவர்க்கத்தையும் வைத்ததாகின்றது என்பதாம்.

மேற்கூறிய விராட் செங்கல்களை வைப்பதை மற்றோருவகையாற் புகழ்கின்றது.

பிராமணம்—2

यद्वा असौ रेतस्सिञ्चति तदस्यां प्रतितिष्ठति तत्प्रजायते ता ओषधयो वीरुधो भवन्ति ता अग्निरत्ति ।

என்பது.

உரை.

வான், மழையென்னுஞ் சுக்கிலத்தைப் பூமியிற் பெய்வதால் கொடி செடிகளுண்டாகின்றன. அவற்றைச் சாடராக்கினி அருந்துகின்றது. இத் தகையது பூமியும் வானும் என அவற்றைப் புகழ்கின்றதாயிற்று என்பதாம்.

இவ்வாறுணர்ந்தவனைப் புகழ்கின்றது.

பிராமணம்—3

य एवं वेद प्रैव जायतेऽन्नादो भवति ।

என்பது.

உரை.

இவ்வாறுணர்ந்தவன் உயிர்களை உண்டாக்குகின்றான். அன்னத்தை யருந்துகின்றவனுமாகின்றான் என்பதாம்.

முற்கூறிய இரண்டு செங்கல்களையும், அதிகாரி வேறுபாட்டால் வைக்கும் முறையைக் கூறுகின்றது.

பிராமணம்—4

**यो रेतस्वी स्यात्प्रथमायां तस्य चित्यामुभे उपदध्यादिमे एवास्मै समीची रेत-
स्सिञ्चतो यस्सिक्तरेतास्स्यात्प्रथमायां तस्य चित्यामन्यामुप दध्यादुत्त-
मायामन्याꣳ रेत एवास्य सिक्तमाभ्यामुभयतः परिगृह्णाति ।**

என்பது.

உரை.

முப்பத்து மூன்று வயதுக்குட்பட்டு சுக்கிலக்கட்டுடைய காளைப்பருவத்தன் முதலாம் அடுக்கில் அவ்விரண்டு செங்கல்களையும் வைக்கில், வானும் மண்ணும் எசமானனுக்கு உதவிகளாயிருந்து சுக்கிலத்தை வார்க்கின்றன. சுக்கிலம் நழுகியவனாகிய அறுபத்தாறு வயதுடைய கிழப்பருவத்தன் முதல் அடுக்கிலும் ஐந்தாம் அடுக்கிலும் அவ்விரண்டு செங்கல்களையும் வைக்கில், செலவழிந்த தனது சுக்கிலம் இவ்விரண்டு செங்கல்களின் வாயிலாகக் கொள்ளப் பெற்றதாகின்றது என்பதாம்.

செங்கல்)

அக்கினி சயனம் பண்ணியவனுக்குச் சிறிது நியமத்தை விதிக்கின்றது.

பிராமணம்—5

संवत्सरं न कञ्चनप्रत्यवरोहेन्न हीमे कं चन प्रत्यवरोहतस्तदेनयोर्व्रतं ।

என்பது.

உரை.

அக்கினி சயனம் பண்ணிய பிறகு ஒரு வருடம்வரையும், பெரியார்கள் வித்வான்கள் வந்தபோதிலும் எழுந்திருத்தல் கூடாது. ஏனெனின்? மேற்கூறிய இரண்டு செங்கல்களான விராட்என்பவைகள் யாருக்கும் எழுந்திருக்காதன ஆதலின், அவைகட்கு எழுந்திருந்து வரவேற்காததே விரதமாம். ஆதலின், அச்செங்கல்களை வைத்தவனும் எழுந்து வரவேற்றல்கூடாது என்பதாம்.

இயற்கைச் சுக்கான் கற்களின்மேல் செய்யப்படும் ஹோமத்தை விதித்தற் பொருட்டு எடுத்துக் கூறுகின்றது.

பிராமணம்—6

यो वा अपशीर्षाणमग्निं चिनुतेऽपशीर्षाऽमुष्मिँल्लोके भवति यस्सशीर्षाणं चिनुते सशीर्षाऽमुष्मिँल्लोके भवति ।

என்பது.

உரை.

தலையுடன் அக்கினியைச் சயனஞ்செய்தால், சுவர்க்கத்தில் எசமானன் தலைவனாகின்றான். தலையில்லாது அக்கினியைச் சயனஞ் செய்யில், சுவர்க்கத்திலும் எசமானன் தலைவனாகமாட்டான் என்பதாம்.

விதிக்க விரும்பிய ஹோமத்திற்கு மந்திரத்தைத் தோற்றுவிக்கின்றது.

பிராமணம்—7

चित्तिं जुहोमि मनसा घृतेन यथा देवा इहाऽऽगमन्वीतिहोत्रा ऋतावृधस्स-
मुद्रस्य वयुनस्य पत्मञ्जुहोमि विश्वकर्मणे विश्वाऽहाऽमर्त्यꣳ हविः ।

என்பது.

உரை.

இனிய அவிகளையுடையவர்களும், எக்ஞத்தை வளர்க்கின்றவர்களுமான தேவர்கள் எவ்வாறு இவ்வேள்விக்கு வந்தார்களோ, அவ்வாறே

மனதாலும் நெய்யாலும் அவர்களுடைய மனதைக் களிக்கச் செய்கின்றேன். இனி, பிரசாபதியின் பொருட்டு, எப்போதும் கேடிலாத அவியை, கடல் போன்ற இயற்கைச் சுக்கான்கற்களின் மீது ஹோமஞ் செய்கின்றேன் என்பதாம். இம்மந்திரம்; கா. 4. பி. 2. அ. 9. வதில் விநியோகிக்கப் பட்டது.

தோற்றுவித்த மந்திரத்தை விநியோகிக்கின்றது.

பிராமணம்—8

इतिस्वयमातृण्णामुपधायजुहोत्येतद्वा अग्नेश्शिरस्सशीर्षाणमेवाग्निं चिनुते ।

என்பது.

உரை.

'சித்திம்சுஹோமி' என்னும் மந்திரத்தால் இயற்கைச் சுக்கான் கற்களை வைத்தபிறகு அதன்மேல் ஹோமஞ் செய்தல் வேண்டும். இது அக்கினியின் சிரசாம். இதனால், தலையுடன் அக்கினி சயனம் பண்ணப் பட்டதாகின்றது என்பதாம்.

இவ்வாறுணர்ந்தவனைப் புகழ்கின்றது.

பிராமணம்—9

सशीर्षाऽमुष्मिँल्लोके भवति य एवं वेद ।

என்பது.

உரை.

இவ்வாறுணர்ந்தவன் அவ்வுலகில் தலைவனாகின்றான் என்பதாம்.

சயனத்தில், ஒவ்வொரு அடுக்கின் முடிவிலும் அதைத்தொடல் வேண்டுமென்பதை விதிப்பதின்பொருட்டுப் புகழ்கின்றது.

பிராமணம்—10

सुवर्गाय वा एष लोकाय चीयते यदग्निस्तस्य यदयथापूर्वं क्रियतेऽसुवर्ग्यमस्य तत्सुवर्ग्योऽग्निः ।

என்பது

சேங்கல்)

உரை.

இவ்வக்கினிசயனம் சுவர்க்கலோகத்தின் பொருட்டுச் செய்யப்படுகின்றது. ஆதலின், இதனுடைய அங்கத்தை மாறுபாடாகச் செய்யில் சுவர்க்கத்திற்கு அநுகூலமாகாது. அக்கினியோ, சுவர்க்கத்திற்கு அநுகூலமானது. ஆதலின், முறைதவறுமல் அங்கங்களை அநுட்டித்தல் வேண்டுமென்பதாம்.

எடுத்துக்கூறியது எதன்பொருட்டோ, அதை (தோவேதை) விதிக்கின்றது.

பிராமணம்--11

चितिमुपधायाऽभि मृशेत् ।

என்பது.

உரை.

அடுக்கியவுடன் அச்செங்கலடுக்கைத் தொடல்வேண்டுமென்பதாம்.

தோவேதற்கு மந்திரத்தை விதிக்கின்றது.

பிராமணம்—12

चित्तिमचित्तिं चिनवद्वि विद्वान्पृष्ठेव वीता वृजिना च मर्तान्राये च नस्स्वपत्याय देव दितिं च रास्वादितिमुरुष्येति ।

என்பது.

உரை.

வித்வாநாகிய இவ்வக்கினி, எனது மனோபக்தியையும் பக்தியின்மையையும் பிரித்துணர்கின்றது. அங்கங்களின் நிறைவையும் குறைவையும் அறிகின்றது. மறதியுடைய எம்மையும் உணர்கின்றது .தேவ! நீ, தனத்தின் பொருட்டும், அழகிய புத்திரன் பொருட்டும் கொடுக்க வேண்டியதைக் கொடுப்பாயாக. கொடுத்ததை வளர்க்க விரும்புவாயாக என்பதாம். .

இம்மந்திரத்தால் தோவேதைப் புகழ்கின்றது.

பிராமணம்—13

यथापूर्वमेवैनामुपधत्ते प्राश्चमेनं चिनुते सुवर्ग्योऽस्य भवति ॥

என்பது.

உரை.

பக்தி பக்தியின்மை, மறதி மறதியின்மைகளை உணரும் அக்கினியால் குறைவு நிறைவாக்கப் பெறுதலின், எவ்வாறு செய்யினும் அக்கினி சயனம் முறைப்படியே செய்யப்படுகின்றது. அக்கினி கிழக்கு முகமாக சயனஞ் செய்யப்படுகின்றது. அது எசமானனுக்கு சுவர்க்கத்தைக் கொடுக்கின்றது என்பதாம்.

நான்காம் அநுவாகம்.

முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் ஐந்தாம்பிரபாடகம்

ஐந்தாவது அநுவாகம்.

பொன்கல், முதலான கல்லுகளைக் கூறும்பிராமணங்கள்.

நான்கு பஞ்சாதிக்குமேல் மூன்று பதங்களைக் கொண்டது.

विश्वकर्मा दिशां पतिस्स नः पशून्पातु सोऽस्मान्पातु तस्मै नमः
प्रजापती रुद्रो वरुणोऽग्निर्दिशां पतिस्स नः पशून्पातु सोऽस्मा-
न्पातु तस्मै नम एता वै देवता एतेषां पशूनामधिपतयस्ताभ्यो
वा एष आ वृश्च्यते यः पशुशीर्षाण्युपदधाति हिरण्येष्टका उप
दधात्येताभ्य एव देवताभ्यो नमस्करोति ब्रह्मवादिनः [२२]
वदन्त्यग्नौ ग्राम्यान्पशून्प्र दधाति शुचाऽऽरण्यानर्पयति किं तत
उच्छिꣳषतीति यद्धिरण्येष्टका उपदधात्यमृतं वै हिरण्यममृतेनैव
ग्राम्येभ्यः पशुभ्यो भेषजं करोति नैनान्हिनस्ति प्राणो वै प्रथमा
स्वयमातृण्णा व्यानो द्वितीयाऽपानस्तृतीयाऽनु प्राण्यात्प्रथमाꣳ
स्वयमातृण्णामुपधाय प्राणेनैव प्राणꣳ समर्धयति व्यन्यात् [२३]
द्वितीयामुपधाय व्यानेनैव व्यानꣳ समर्धयत्यपान्यात्तृतीयामुप-
धायापानेनैवापानꣳ समर्धयत्यथो प्राणैरेवैनꣳ समिन्धे भूर्भुव-

செங்கல்)

स्सुवरिति स्वयमातृण्णा उप दधातीमे वै लोकास्स्वयमातृण्णा एताभिः खलु वै व्याहृतीभिः प्रजापतिः प्राजायत यदेताभिर्व्याहृतीभिस्स्वयमातृण्णा उपदधातीमानेव लोकानुपधायैषु [२४] लोकेष्वधि प्र जायते प्राणाय व्यानायापानाय वाचे त्वा चक्षुषे त्वा तया देवतयाऽङ्गिरस्वद्ध्रुवा सीदाग्निना वै देवास्सुवर्गं लोकमजिगाꣳसन्तेन पतितुं नाशक्नुवन्त एताश्चतस्रस्स्वयमातृण्णा अपश्यन्ता दिक्षूपादधत तेन सर्वतश्चक्षुषा सुवर्गं लोकमायन्यच्चतस्रस्स्वयमातृण्णा दिक्षूपदधाति सर्वतश्चक्षुषैव तदग्निना यजमानस्सुवर्गं लोकमेति [२५] ॥ ब्रह्मवादिनो व्यन्यादेषु यजमानस्त्रीणि च ॥ ५ ॥

இதில், பொன் கல்லுகளை வைத்தல் விதிக்கப்படுகின்றது. இங்குப் பொன் துண்டே பொன் கல்லாம்.

ஐந்து திக்குக்களிலும் ஐந்து பொன் துண்டுகளை வைப்பதற்கு மந்திரங்களை ஏற்படுத்துகின்றது.

பிராமணம் —1

विश्वकर्मा दिशां पतिस्स नः पशून्पातु सोऽस्मान्पातु तस्मै नमः प्रजापती-रुद्रो वरुणोऽग्निर्दिशां पतिस्स नः पशून्पातु सोऽस्मान्पातु तस्मै नमः ।

என்பது.

உரை.

திசைகளைப் பாதுகாக்கும் விசுவகருமன் எமது பசுக்களையும், எம்மையும் பாதுகாப்பானாக. அவ்விசுவகருமனுக்கு வணக்கம். மற்றும், பிரசாபதி, உருத்திரன், வருணன், அக்கினி என்னுஞ் சொற்களுடன், 'திசைகட்குப் பதி என்பது முதல், 'நமః என்பதுவரை சேர்த்துக் கொண்டு நான்கு மந்திரங்களாகச் செய்து கொள்க என்பதாம். இவைகள், கா. 4. அநு. 7ல் விநியோகிக்கப்பட்டவைகள்.

இம்மந்திரங்களால், வைக்கப்படும், பொன் கல்லுகளை விதிக்கின்றது.

பிராமணம்—2

एता वै देवता एतेषां पशूनामधिपतयस्ताभ्यो वा एष आवृश्च्यते यः पशुशीर्षाण्युपदधाति हिरण्येष्टका उप दधात्येताभ्य एव देवताभ्यो नमस्करोति ।

என்பது.

உரை.

மனிதன், குதிரை, காளை, ஆடு, செம்மறி ஆடு முதலானவைகட்கு, விசுவகருமன், பிரசாபதி, உருத்திரன், வருணன், அக்கினி என்பவர்கள் பாதுகாப்பாளர்கள். ஆதலின், இவ்வைந்தின் தலைகளை வைக்கில் அத்தே வர்கட்குத் துரோகஞ் செய்தவனாகின்றான். அக்குற்றத்தை நீக்குதற்கு, ஐந்து பொன் துண்டுகளை வைக்கில் அவைகளால் அவர்கள் வணங்கப் பெறுகின்றார்கள். 'அதற்கு வணக்கம்' என்னுஞ் சொற்களிருத்தலின் என்பதாம்.

மற்றோராற்றால் பொன் துண்டுகளைப் புகழ்கின்றது.

பிராமணம்—3

ब्रह्मवादिनो वदन्त्यग्नौ ग्राम्यान्पशून्प्र दधाति शुचाऽऽरण्यानर्पयति किं तत उच्छिꣳषतीति यद्धिरण्येष्टका उपदधात्यमृतं वै हिरण्यममृतेनैव ग्राम्येभ्यः पशुभ्यो भेषजं करोति नैनान्हिनस्ति ।

என்பது.

உரை.

அக்கினி சயனஞ் செய்கின்றவன், மனிதன் முதலான கிராமப் பசுக் களை அக்கினி சயனத்திற் சுடுகின்றான், "மயுமாரண்யம்" என்பது முதலான மந்திரங்களால் வனத்திலுள்ள பசுக்களைச் சோகப்படுத்துகின்றான். இவ் விருவகைப் பசுக்களிலும் வேறு எப்பசுவை விரும்புவன்? ஆதலின், எசமா னுடைய செய்கை மிகத்துன்பத்துடன் கூடியது என்று பிரமவாதிகள் சொல்லுகின்றார்கள் எனின்? அப்படியன்று, என்னை? பொன் அமுதமாத லின் ஐந்து பொன் செங்கல்களை வைக்கில் எல்லாப்பசுக்களின் பீடைகட் கும் மருந்து கொடுத்ததாய் நலம் பெறலின் குற்றமில்லை என்பதாம்.

சேங்கல்)

மூன்று இயற்கைத் துளைகளையுடைய சுக்கான் கல்லுகளை வைத்த பிறகு மூச்சைவிடல் வேண்டுமென்று விதிக்கின்றது.

பிராமணம்—4

प्राणो वै प्रथमा स्वयमातृण्णा व्यानो द्वितीयाऽपानस्तृतीयाऽनु प्राण्यात्प्रथमां स्वयमातृण्णामुपधाय प्राणेनैव प्राणं समर्धयति व्यन्याद्द्वितीयामुपधाय व्यानेनैव व्यानं समर्धयत्यपान्यात्तृतीयामुपधायापानेनैवापानं समर्धयत्यथो प्राणैरेवैनं समिन्धे ।

என்பது.

உரை.

முதலாவது மூன்றுவது ஐந்தாவது என்னும் மூன்று செங்கலடுக்குகளிலும் ஒவ்வொன்றுக வைக்கப்படும் மூன்று இயற்கைத் துளைகளையுடைய சுக்கான்கல்களும் மூன்று வாயுக்களின் வடிவங்கள். ஆதலின், முதலாவதை வைக்கும்போது பிராணனை உள்ளுக்கிழுத்தல் வேண்டும். இரண்டாவதை வைக்கும்போது அடக்கிக்கொள்ளல் வேண்டும். மூன்றுவதை வைக்கும்போது வெளியில் விடல்வேண்டும். இதனல், பிராண அபான வியானன் என்னும் மூன்று வாயுக்களாலும் இவ்வக்கினி வளர்க்கப்பட்டதாகின்றது என்பதாம்.

மூன்று இயற்கைச்சுக்கான் கற்களுக்கும் மூன்று வியாகிருதி (பூர்புவசுவః) களை விநியோகிக்கின்றது.

பிராமணம்—5

भूर्भुवस्सुवरिति स्वयमातृण्णा उपदधातीमे वै लोकास्स्वयमातृण्णा एताभिः खलु वै व्याहृतीभिः प्रजापतिः प्राजायत यदेताभिर्व्याहृतीभिस्स्वयमातृण्णा उपदधातीमानेव लोकानुपधायैषु लोकेष्वधि प्रजायते ।

என்பது.

உரை.

பூர்புவசுவః என்னும் இந்த மூன்று சொற்களால் மூன்று இயற்கைச் சுக்கான் கற்களைவைக்கில், இவைகளால் பிரசாபதி மூன்றுலகையும் படைக்கின்றுன். இம்மூன்றுலகங்களிலும் பெருமையுடையவனுய்ப் பிறக்கின்றுன் என்பதாம்.

நான்கு இயற்கைத் துளைச்சுக்கான் கற்களை வைப்பதற்கு
மந்திரங்களைத் தோற்றுவிக்கின்றது.

பிராமணம்—6

प्राणाय व्यानायाऽपानाय वाचे त्वा चक्षुषे त्वा तया देवतयाऽङ्गिरस्वद्ध्रुवा सीद ।

என்பது.

உரை.

பிராணன், அபானன், வியானன், வாக்கு என்பவைகளின் சித்தியின் பொருட்டு உங்களை வைக்கின்றேன். உங்களுடைய தேவதைகளால் அநுக்கிரகம் பெற்றுக்கொண்டு அங்கிரசரிஷிகளிடத்திருந்தது போல் நீங்கள் நிலையாய் இங்கு இருப்பீர்களாக என்னும் இவை நான்கு மந்திரங்கள். இவைகளே, கா. 4. பிர. 4. அநு-7ல் விநியோகிக்கப்பட்டுள்ளன என்பதாம்.

இம்மந்திரங்களால் சுக்கான் கல்லுகளை வைப்பதை விதிக்கின்றது.

பிராமணம்—7

अग्निना वै देवास्सुवर्गं लोकमजिगाꣳसन्तेन पतितुं नाशक्नुवन्त एताश्चतस्रस्स्वयमातृण्णा अपश्यन्ता दिक्षूपादधत तेन सर्वतश्चक्षुषा सुवर्गं लोकमायन्यच्चतस्रस्स्वयमातृण्णा दिक्षूपदधाति सर्वतश्चक्षुषैव तदग्निना यजमानस्सुवर्गं लोकमेति ॥

என்பது.

உரை.

முன்னொருகால் சயனஞ் செய்த அக்கினியைச் சாதனமாக வைத்துக்கொண்டு தேவர்கள் சுவர்க்கத்தை அடையவிரும்பினர். அதனால் அது முடியவில்லை. பிறகு, நான்கு திக்குக்களிலும் நான்கு இயற்கைத் துளைச்சுக்கான் கற்களை நேத்திரங்களாகவைத்து திசைகளைக் காணும் அந்நேத்திரங்களால் அக்கினி வழிகாட்டியபின் சுவர்க்கத்தையடைந்தனர். ஆதலின், நான்கு திசைகளிலும் நான்கு இயற்கைத் துளைச்சுக்கான் கல்லுகளை நேத்திரங்களைப்போல் வைத்து அத்தகைய கண்களுடன்கூடிய சயன அக்கினியால் எசமானனுஞ் சுவர்க்கத்தை யடைகின்றான் என்பதாம்.

ஐந்தாம் அநுவாகம்.
முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் ஐந்தாம் பிரபாடகம்

ஆறுவது அனுவாகம்.

பகல் வடிவங்களென்னும் ஐந்து செங்கல் முதலானவைகளைக் கூறும் பிராமணங்கள்.

மூன்று பஞ்சாதிக்குமேல் பதினறு பதங்களைக்கொண்டது.

अग्न आ याहि वीतय इत्याहाह्वतैवैनमग्निं दूतं वृणीमह इत्याह हुत्वैवैनं वृणीतेऽग्निनाऽग्निस्समिध्यत इत्याह समिन्ध एवैनमग्निर्वृत्राणि जङ्घनदित्याह समिद्ध एवास्मिन्निन्द्रियं दधात्यग्नेस्स्तोमं मनामह इत्याह मनुत एवैनमेतानि वा अह्नाꣳ रूपाणि [२६] अन्वहमेवैनं चिनुतेऽवाह्नाꣳ रूपाणि रुन्धे ब्रह्मवादिनो वदन्ति कस्मात्सत्याद्यातयाम्नीरन्या इष्टका अयातयाम्नी लोकंपृणेत्यैन्द्राग्नी हि बार्हस्पत्येति ब्रूयादिन्द्राग्नी च हि देवानां बृहस्पतिश्चायातयामानोऽनुचरवती भवत्यजामित्वायानुष्टुभाऽनु चरत्यात्मा वै लोकंपृणा प्राणोऽनुष्टुप्तस्मात्प्राणस्सर्वाण्यङ्गान्यनु चरति ता अस्य सूददोहसः [२७] इत्याह तस्मात्परुषिपरुषि रसस्सोमꣳ श्रीणन्ति पृश्नय इत्याहान्नं वै पृश्न्यन्नमेवाव रुन्धेऽर्को वा अग्निरर्कोऽन्नमन्नमेवाव रुन्धे जन्मन्देवानां विशस्त्रिष्वा रोचने दिव इत्याहेमानेवास्मै लोकाञ्ज्योतिष्मतः करोति यो वा इष्टकानां प्रतिष्ठां वेद प्रत्येव तिष्ठति तया देवतयाऽङ्गिरस्वद्ध्रुवा सीदेत्याहैषा वा इष्टकानां प्रतिष्ठाय एवं वेद प्रत्येव तिष्ठति [२८] ॥ रूपाणि सूददोहसस्तया षोडश च ॥ ६ ॥

இதில், பகல்வடிவங்கள் என்னும் ஐந்து செங்கல் முதலியவைகளை வைக்கும் முறைகூறப்படுகின்றது.

அச்செங்கல்களை வைத்தலை விதிப்பதற்கு முன் அவைகளை வைப்பதற்குரிய மந்திரங்களின் கருத்துக்களை முறையாக விளக்குகின்றது.

பிராமணம்—1

अग्न आयाहि वीतय इत्याहाह्वतैवैनमग्निं दूतं वृणीमह इत्याह हुत्वैवैनं वृणीते ऽग्निनाऽग्निस्समिध्यत इत्याह समिन्ध एवैनमग्निर्वृत्राणि जङ्घनदित्याह समिद्ध एवाऽस्मिन्निन्द्रियं दधात्यग्नेस्स्तोमं मनामह इत्याह मनुत एवैनम्।

என்பது.

உரை.

முதல் மந்திரத்தில் "அக்ன ஆயாஹி" என்பது ஆவாஹனம். (கூப்பிடுதல்.) இரண்டாமந்திரத்தில், "வ்ருணீமஹே" என்பது வேண்டி அழைத்தல். மூன்றுமந்திரத்தில், "சமித்யதே" என்பது வளர்த்தல். நான்காம் மந்திரத்தில், "வ்ருத்ராணி ஜங்கனத்:" என்பது பகைவனை வதைத்தலால் வன்மை. ஐந்தாம்மந்திரத்தில், 'மநாமஹே' என்பது மனமாம். இவைகட்கு ஆங்காங்கு உரைகள் கூறப்பட்டுள்ளன. இம்மந்திரங்களால் வைக்குஞ் செங்கல்கள் அஹசுகளி (நாட்களி) ன் வடிவங்கள் எனவழங்கப் படுகின்றன என்பதாம்.

அவைகளை வைப்பதை அர்த்தவாதவாயிலாக அறிவுறுத்துகின்றது.

பிராம்மணம்—2

एतानि वा अह्नां रूपाण्यन्वहमेवैनं चिनुतेऽवाह्नां रूपाणि रुन्धे ।

என்பது.

உரை.

ஐந்து தினங்களில் அவ்வவ்வடுக்குக்களில் இச்செங்கல்கள் வைக்கப்படுதலின், பகல்களின் வடிவங்களெனப்படுகின்றன. அவைகளை வைத்தல் வேண்டும் என்பதை விதியாயுணர்ந்து கொள்க. அவற்றை வைத்தலால் நாடோறும் அக்கினி சயனஞ் செய்தவனாகின்றான். காலவிசேடமாகிய பகல்களின் வடிவையுமடைகின்றான் என்பதாம்.

"லோகம்ப்ருண" என்பவைகட்கு, அர்த்தவாதவாயிலாக விதியை யுணர்த்துகின்றது.

பிராமணம்—3

ब्रह्मवादिनो वदन्ति कस्मात्सत्यायातयाम्नीरन्या इष्टका अयातयाम्नी लोकं पृणेत्यैन्द्राग्नी हि बार्हस्पत्येति ब्रूयादिन्द्राग्नी च हि देवानां बृहस्पतिश्चायातयामानः ।

என்பது.

உரை.

'லோகம்பிருண' என்பது முதலிய மந்திரங்களால் வைக்கப்படுஞ் செங்கல்கள் லோகம் பிருணக்கள் எனப்படுகின்றன. இம்மந்திரம் ஒழிந்த ஏனைய மந்திரங்கள் ஒரு அடுக்கில் ஒருமுறை செங்கல் வைக்கில் அத்துடன் சாரமில்லாதவைகளாய் விடுகின்றன. லோகம்பிருண, என்னும் இம்மந்திரங்களோ, எத்தனை முறை வைக்கினும் சாரங்கெடாதவைகளாயிருக்கின்றன. அது எதனாலெனின்? "இந்திராக்னீ பிருகஸ்பதி" என்று மந்திரத்திற் கூறிய தேவதைகளின் வன்மையாலென்க. அத்தகைய செங்கல்களை வைத்தல் வேண்டுமெனல் விதியென்றுணர்க என்பதாம்.

'லோகம்பிருண' என்னும் மந்திரம் மற்றொரு மந்திரத்துடன் கூடியிருக்கின்றதென்பதை விதிக்கின்றது.

பிராமணம்—4

अनुचरवती भवत्यजामित्वाय ।

என்பது.

உரை.

"லோகம் பிருண" என்னும்மந்திரம் 'தாஅஸ்ய' என்பதுமுதலிய இரண்டாவது மந்திரத்துடன் சேர்த்து ஓதப்படுகின்றது. ஏனெனின்? ஒரேமந்திரத்தால் மீண்டும் மீண்டும் செங்கல்களை வைக்கில் சோம்பலுண்டாகும். வேறொரு மந்திரங் கூடியிருக்கில் சோம்பல் உண்டாகாது என்பதாம்.

பின்றொடர்ந்து வரும்மந்திரத்தை பொதுவாக விதித்துவிட்டு மீண்டும் சிறப்பாக விதிக்கின்றது.

பிராமணம்—5

अनुष्टुभाऽनु चरत्यात्मा वै लोकंपृणा प्राणोऽनुष्टुप्तस्मात्प्राणस्सर्वाण्यङ्गान्यनु चरति ।

என்பது.

உரை.

"லோகம் பிருண" என்னும் மந்திரம் உடம்பாம். அதைத் தொடர்ந்துவரும் அநுஷ்டுப் சந்தமுடைய மந்திரம் பிராணனும். இது பற்றியே, உலகிலும் பிராணவாயுவும் உடம்பின் அவயவங்களைப்பற்றிக் கொண்டு சலிக்கின்றது என்பதாம்.

தொடர்ந்து வரும் மந்திரத்தின் முதற்பதத்தின் கருத்தை விளக்குகின்றது. இரண்டாவது பாதத்தின் கருத்தை விளக்குகின்றது.

பிராமணம்—6

ता अस्य सूददोहस इत्याह तस्मात्परुषिपरुषि रसः ।

என்பது.

உரை.

'தாஅஸ்யசூத' என்பதில் 'சூத' என்னுஞ் சொல், பாலின் ரசமுதலியவைகளைக் குறிக்கின்றது. அத்தகைய இரசத்தைக்கறக்குஞ் செங்கல் என்க. இதுபற்றியே சோமக்கொடியின் ஒவ்வொரு கணுவிலும் இரசமிருக்கின்றது என்பதாம்.

இரண்டாம் பாதத்திலுள்ள, த்ரிஷ்வா ரோசனே, என்பதன் கருத்தை விளக்குகின்றது.

பிராமணம்—7

सोमं श्रीणन्ति पृश्नय इत्याहान्नं वै पृश्न्यन्नमेवाव रुन्धेऽर्को वा अग्निरर्को-ऽन्नमन्नमेवावरुन्धे ।

என்பது.

உரை.

பிருசினிகள் என்பது வெண்மை நிறமுடைய செங்கல்கள். அன்னமும் வெண்மை நிறமாம். மற்றும், போற்றத்தக்கது அக்கினியும் அன்னமுமாம் ஆதலின் இதனால் அன்னத்தை யடைகின்றான் என்பது.

இரண்டாம் பாதத்திலுள்ள, த்ரிஷ்வாரோசனே, என்பதன் கருத்தை விளக்குகின்றது.

பிராமணம்—8

जन्मन्देवानां विशस्त्रिष्वा रोचने दिव इत्याहेमानेवास्मै लोकाञ्ज्योतिष्मतः करोति ।

என்பது.

உரை.

'ஜந்மந் தேவாநாம்' என்றது முதலியது, இவ்வெசமானன் பொருட்டு இம்மூன்றுலகங்களையும் ஒளியுடையவைகளாகச் செய்கின்றான் என்பதாம்.

எல்லாச் செங்கல்கட்கும் பரிசேடமாக 'தயாதேவதயா' என்னும் மந்திரத்தை விதிக்கின்றது.

பிராமணம்—9

यो वा इष्टकानां प्रतिष्ठां वेद प्रत्येवतिष्ठति तया देवतयाऽङ्गिरस्वद्ध्रुवा सीदेत्याहैषा वा इष्टकानां प्रतिष्ठा य एवं वेद प्रत्येवतिष्ठति ॥

என்பது.

உரை.

'தயா தேவதயா' என்பது முதலியமந்திரத்தில், 'துருவா' (நிலையுடைமை) என்றிருத்தலால் இம்மந்திரம் செங்கல்கட்கு நிலையைத் தேடுகின்றது. இவ்வாறுணர்ந்தவன் பெருநிலையை யடைகின்றான் என்பதாம்.

ஆறுவது அநுவாகம்.
முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் ஐந்தாம்பிரபாடகம்

ஏழாவது அநுவாகம்

யூபம் ஒன்றே என்று விதிக்கும் பிராமணங்கள்.

ஐந்து பஞ்சாதிகட்குமேல் எட்டுப் பதங்களைக் கொண்டது.

सुवर्गाय वा एष लोकाय चीयते यदग्निर्वैज एकादशिनी यदग्नावेकादशिनीं मिनुयाद्वज्रेणैनꣳ सुवर्गाल्लोकादन्तर्दध्याद्यन्न मिनुयात्स्वरुभिः पशून्व्यर्धयेदेकयूपं मिनोति नैनं वज्रेण सुवर्गा-

ल्लोकादन्तर्दधाति न स्वरुभिः पशून्व्यर्धयति वि वा एष इन्द्रियेण वीर्येणर्ध्यते योऽग्निं चिन्वन्नधिक्रामत्यैन्द्रिया [२९] ऋचाऽऽक्रमणं प्रतीष्टकामुपदध्यान्नेन्द्रियेण वीर्येण व्यृध्यते रुद्रो वा एष यदग्नि- स्तस्य तिस्रश्शरव्याः प्रतीची तिरश्च्यनूची ताभ्यो वा एष आ वृश्च्यते योऽग्निं चिनुतेऽग्निं चित्वा तिसृधन्वमयाचितं ब्राह्मणाय दद्यात्ताभ्य एव नमस्करोत्यथो ताभ्य एवाऽऽत्मानं निष्क्रीणीते यत्ते रुद्र पुरः [३०] धनुस्तद्वातो अनु वातु ते तस्मै ते रुद्र संवत्सरेण नमस्करोमि यत्ते रुद्र दक्षिणा धनुस्तद्वातो अनु वातु ते तस्मै ते रुद्र परिवत्सरेण नमस्करोमि यत्ते रुद्र पश्चाद्धनुस्त- द्वातो अनु वातु ते तस्मै ते रुद्रेदावत्सरेण नमस्करोमि यत्ते रुद्रोत्तराद्धनुस्तद् [३१] वातो अनु वातु ते तस्मै ते रुद्रेदुवत्सरेण नमस्करोमि यत्ते रुद्रोपरि धनुस्तद्वातो अनु वातु ते तस्मै ते रुद्र वत्सरेण नमस्करोमि रुद्रो वा एष यदग्निस्स यथा व्याघ्रः क्रुद्ध- स्तिष्ठत्येवं वा एष एतर्हि संचितमेतैरुपतिष्ठते नमस्कारैरेवैनꣳ शमयति येऽग्नयः [३२] पुरीष्याः प्रविष्टाः पृथिवीमनु । तेषां त्वमस्युत्तमः प्रणो जीवातवे सुव । आपं त्वाऽग्ने मनसाऽऽपं त्वाऽग्ने तपसाऽऽपं त्वाऽग्ने दीक्षयाऽऽपं त्वाऽग्न उपसद्भिरापं त्वाऽग्ने सुत्ययाऽऽपं त्वाऽग्ने दक्षिणाभिरापं त्वाऽग्नेऽवभृथे- नाऽऽपं त्वाऽग्ने वशयाऽऽपं त्वाऽग्ने स्वगाकारेणेत्याहैषा वा अग्नेराप्तिस्तयैवैनमाप्नोति [३३] ॥ ऐन्द्रिया पुर उत्तराद्धनुस्तद- ग्नय आहाष्टौ च ॥ ७ ॥

விதி)

இதில், ஆட்டுக்கடாவை கட்டுந்தறி (யூபம்) ஒன்றேஎன விதிக்கப் படுகின்றது.

மகாக்கினி சயன வேள்வியிலும், விகல்பமாய், பதினேரு யூபங்கள் என்று வந்ததை விலக்கி ஒரேயூபம் என்று விதிக்கின்றது

பிராமணம்—1

सुवर्गाय वा एष लोकाय चीयते यदग्निर्वज्र एकादशिनी यदग्नावेकादशिनीं मिनुयाद्वज्रेणैनं सुवर्गाल्लोकादन्तर्दध्याद्यन्न मिनुयात्स्वरुभिः पशून्व्यर्धयेदेकयूपं मिनोति नैनं वज्रेण सुवर्गाल्लोकादन्तर्दधाति न स्वरुभिः पशून्व्यर्धयति ।

என்பது.

உரை.

இம்மகாக்கினி சயனம் சுவர்க்கமடைதற் பொருட்டாமாதலின், இதில், பதினொரு யூபங்களைவைக்கில் யூபங்கள் வச்சிரம்போன்று மிகுதியாயிருத்தலின் சுவர்க்கம் மறைந்துபோம். செய்யாவிடினே, யூபம் வெட்டும்போது விழுந்த (சுவருவால்) சிராப்பொடியால் ஆட்டுக்கடாவைத் தேய்த்தல் இல்லாதொழியும், ஆகையால் ஒருயூபஞ் செய்தல் வேண்டும். இதனால், சுவர்க்கமும் மறைபடாது. பசுவை, சிராப்பொடியால் தேய்த்தலும் பொருந்துகின்றது என்பதாம். ஈண்டு, இப்பிராமணம் விதியால் வந்ததை விலக்குவதாயிருத்தலின் யாதானுமொரு அநுவாகத்தில் உள்ளடக்கி விதியாய்க் கொள்ளல் வேண்டும் என்பதை யுணர்க.

ஆக்கிரமணச் (கால்வைத்தேறும்) செங்கல் வைப்பதை விதிக்கின்றது.

பிராமணம்—2

वि वा एष इन्द्रियेण वीर्येणर्ध्यते योऽग्निं चिन्वन्नधिक्रामत्यैन्द्रियर्चाऽऽक्रमणं प्रतीष्टकामुपदध्यान्नेन्द्रियेण वीर्येण व्यृध्यते ।

என்பது.

உரை

அக்கினி சயனகாலத்தில் அக்கினியின்மீது அடி வைத்துஏறில் இவனுடைய இந்திரியங்கள் கெட்டுவிடுகின்றன. ஆதலின், காலடிவைப்பதற்கு ஒரு செங்கலே, சிறகு பிரியுமிடத்தில் இந்திரதேவதையின் மந்திரத்தால் வைத்தல் வேண்டும். இதனால் இந்திரியங்கள் கெடாதிருக்கின்றன என்பதாம்.

ஈண்டு, அக்கினிப்பிரணயனஞ் செய்யும்போது இம்மந்திரங் கூறப்பட்டுள்ளது. ஆனல், இங்கு, மீண்டுஞ் சொல்வது இது வேறுவிநியோகமென்று தெரிவிப்பதற்காம். மற்றும், இந்திரியங்கள் கெடமாட்டா என்பது மாத்திரம் இங்கு விதிக்கப்படுகின்றது என்பதை யுணர்க.

வில்லைக் கொடுப்பதை விதிக்கின்றது.

பிராமணம்—3

रुद्रो वा एष यदग्निस्तस्य तिस्रश्शरव्याः प्रतीची तिरश्च्यनूची ताभ्यो वा एष आवृश्च्यते योऽग्निं चिनुतेऽग्निं चित्वा तिसृधन्वमयाचितं ब्राह्मणाय दद्यात्ताभ्य एव नमस्करोत्यथो ताभ्य एवाऽऽत्मानं निष्क्रीणीते ।

என்பது.

உரை.

சயனக்கினி உருத்திர வடிவமாதலின், உருத்திரனுக்கு எதிரில் வருவது ஒன்று, இருபக்கத்துஞ் செல்வது ஒன்று, பின்பக்கம் வருவது ஒன்று ஆக மூன்று அம்புகள் உள்ளன. அக்கினி சயனஞ் செய்கின்றவன் அவ்வம்புகளாலடிக்கப்பட்டவனுகின்முன். ஆதலின், மூன்று அம்புகளுடன் கூடிய ஒரு வில்லை அந்தணன் ஒருவனுக்களித்துப் போற்றி அவ்வம்புகளிடத்திலிருந்து தன்னை வாங்கிக்கொண்டவனுதல் வேண்டும் என்பதாம்.

ஐந்து திக்குக்களிலும் போற்ற வேண்டிய ஐந்து மந்திரங்களைத் தோற்றுவிக்கின்றது.

பிராமணம்—4

यत्ते रुद्र पुरो धनुस्तद्वातो अनु वातु ते तस्मै ते रुद्र संवत्सरेण नमस्करोमि यत्ते रुद्र दक्षिणा धनुस्तद्वातो अनु वातु ते तस्मै ते रुद्र परिवत्सरेण नमस्करोमि यत्ते रुद्र पश्चाद्धनुस्तद्वातो अनु वातु ते तस्मै ते रुद्रेदावत्सरेण नमस्करोमि यत्ते रुद्रोत्तराद्धनुस्तद्वातो अनु वातु ते तस्मै ते रुद्रेदुवत्सरेण नमस्करोमि यत्त रुद्रोपरि धनुस्तद्वातो अनु वातु ते तस्मै ते रुद्र वत्सरेण नमस्करोमि ।

என்பது.

உரை.

உருத்திர ! கிழக்கிலுள்ள உனது வில்லைத்தழுவி வாயுவீசுக. உனது வில்லுக்கு வருடம்வரை வணக்கஞ் செய்கின்றேன். இவ்வாறே எல்லாத்

விதி)

திக்குக்கட்கும் உரை உரைத்துக் கொள்க. இம்மந்திரங்கள் ஐந்தாலும் திக்கிற்கு ஒவ்வொரு மந்திரத்தால் ஐந்து திக்குக்களிலும் எசமானன் போற்றல் வேண்டும். இது, கா-4 பிர-5. அநு-11, வதன் முடிவில் விநியோகிக்கப் பட்டிருக்கின்றது ஆண்டுக்காண்க என்பதாம்.

மேற்கூறிய மந்திரங்களாற் செய்யப்படும் போற்றுதலை விதிக்கின்றது.

பிராமணம்—5

रुद्रो वा एष यदग्निस्स यथा व्याघ्रः क्रुद्धस्तिष्ठत्येवं वा एष एतर्हि संचित-मेतैरुपतिष्ठते नमस्कारैरेवैनꣳ शमयति ।

என்பது.

உரை.

உலகில், கோபங்கொண்ட புலி கர்ச்சித்துக் கொண்டு உணவருந்துதற் பொருட்டுப் பயங்கரமாய் நிற்கின்றதுபோல், இவ்வக்கினி சயனமுடிந்ததும் கோரமாய் ருத்திராகாரமாய் எழுகின்றது, அவ்வக்கினி இவ்வாறு போற்றப் பெறில் சாந்தமடைகின்றது. இதன்விரிவை சதருத்திரீயப் பிரயோகத்திற் காண்க என்பதாம்.

மகாக்கினி சயனம் முடிந்து வீட்டிற்குப் போகும்போது எசமானன் போற்றுதற்குரிய மந்திரங்களைக் கூறுகின்றது.

பிராமணம்—6

येऽग्नयः पुरीष्याः प्रविष्टाः पृथिवीमनु । तेषां त्वमस्युत्तमः प्रणो जीवातवे सुव । आपं त्वाऽग्ने मनसाऽऽपं त्वाऽग्ने तपसाऽऽपं त्वाऽग्ने दीक्षयाऽऽपं त्वाऽग्न उपसद्भिरापं त्वाऽग्ने सुत्ययाऽऽपं त्वाऽग्ने दक्षिणाभिरापं त्वाऽग्ने-ऽवभृथेनाऽऽपं त्वाऽग्ने वशयाऽऽपं त्वाऽग्ने स्वगाकारेण ।

என்பது.

உரை.

அக்கினியே! என்னால் சயனஞ் செய்யப்பெற்று பூமியிலுள்ள அக்கினிகளுக்குள் நீ சிறந்தோனாயிருக்கின்றாய். அத்தகைய நீ, எமது வாழ்வின் மருந்தை நீண்டநாளிருக்கும்படி ஏவுவாயாக. யான் உன்னையடைந்துள்ளேன். இனி அடைந்ததையே சிறப்பித்துக் கூறல்:—சங்கற்ப முதற்கொண்டு ஆட்டைக கொல்லும் சுவகாகாரம்வரையுள்ள சோமமாகிய அவயவங்களால் உன்னை யடைந்தனன். மனம் சங்கற்பஞ் செய்தல், வாக்கு மந்திர

மோதல், தவம், உண்ணுமை, தானம், தீட்சை மௌன முதலிய நியமம். உபசத், மூன்று நாட்செய்யப்படும் ஹோமங்கள். சுத்தியா, சோமரசத்தைப் பிடித்து ஹோமஞ் செய்தல், தட்சிணை நூற்றிப்பன்னிரண்டு பசுக்கள். அவபிருதம் நீரில் ஹோமஞ் செய்தல், ஆடு அநுபந்தியாபசு, சுவகாகாரம் எஞ்சிய அவயங்கள்களை நிறைப்பதால் சுவாதீனஞ் செய்து கொள்ளல். இதிலும், "ஆபம்த்வா" என்பதுஞ் சேர்த்துக் கொள்ளல் வேண்டும் என்பதாம்.

வீட்டுக்குப் புறப்பட்டுப் போகும் போது செய்யப்படும் துதியை, மந்திர வுரையாகிய அர்த்தவாதத்தால் அறிவுறுத்துகின்றது.

பிராமணம்—7

इत्याहैषा वा अग्नेराप्तिस्तयैवैनमाप्नोति ॥

என்பது.

உரை

மேற்கூறிய இம்மந்திரத்தை, புறப்படும் போது முறைப்படி ஓதல் வேண்டும். இது, அக்கினியை யடைவதற்குக் காரணமாகின்றது என்பதாம்.

ஏழாம் அநுவாகம்.
முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் ஐந்தாம்பிரபாடகம்

எட்டாம் அநுவாகம்.

மகாக்கினிசயன உபஸ்தானத்தைக் கூறும் பிராமணங்கள்.

மூன்று பஞ்சாதிக்குமேல் இருபத்திரண்டு பதங்களைக் கொண்டது.

गायत्रेण पुरस्तादुपतिष्ठते प्राणमेवास्मिन्दधाति बृहद्रथंतराभ्यां प्रक्षावोज एवाऽस्मिन्दधात्यृतुस्थायज्ञायज्ञियेन पुच्छमृतुष्वेव प्रति तिष्ठति पृष्ठैरुपतिष्ठते तेजो वै पृष्ठानि तेज एवास्मिन्दधाति प्रजा

पतिरग्निमसृजत सोऽस्मात्सृष्टः पराङैत्तं वारवन्तीयेनावारयत तद्वारवन्तीयस्य वारवन्तीयत्वꣳ श्यैतेन श्येती अकुरुत तच्छ्यैतस्य श्यैतत्वम् [३४] यद्वारवन्तीयेनोपतिष्ठते वारयत एवैनꣳ श्यैतेन श्येती कुरुते प्रजापतेर्हृदयेनापिपक्षं प्रत्युप तिष्ठते प्रेमाणमेवास्य गच्छति प्राच्या त्वा दिशा सादयामि गायत्रेण छन्दसाऽग्निना देवतयाऽग्नेश्शीर्ष्णाऽग्नेश्शिर उप दधामि दक्षिणया त्वा दिशा सादयामि त्रैष्टुभेन छन्दसेन्द्रेण देवतयाऽग्नेः पक्षेणाग्नेः पक्षमुप दधामि प्रतीच्या त्वा दिशा सादयामि [३५] जागतेन छन्दसा सवित्रा देवतयाऽग्नेः पुच्छेनाग्नेः पुच्छमुप दधाम्युदीच्या त्वा दिशा सादयाम्यानुष्टुभेन छन्दसा मित्रावरुणाभ्यां देवतयाऽग्नेः पक्षेणाग्नेः पक्षमुप दधाम्यूर्ध्वया त्वा दिशा सादयामि पाङ्क्तेन छन्दसा बृहस्पतिना देवतयाऽग्नेः पृष्ठेनाग्नेः पृष्ठमुप दधामि यो वा अपात्मानमग्निं चिनुतेऽपात्माऽमुष्मिँल्लोके भवति यस्सात्मानं चिनुते सात्माऽमुष्मिँल्लोके भवत्यात्मेष्टका उप दधात्येष वा अग्नेरात्मा सात्मानमेवाग्निं चिनुते सात्माऽमुष्मिँल्लोके भवति य एवं वेद [३६] ॥ श्यैतत्वं प्रतीच्यात्वादिशासादयामि यस्सात्मानं चिनुते द्वाविꣳशतिश्च ॥ ८ ॥

இதில், மகாக்கினி சயனத்தின் துதிகள் கூறப்படுகின்றன.

சூத்திரப்படி, கருடசயனத்தின் அவயவங்களுள் சிலவற்றைப் போற்றுதல் கூறப்படுகின்றது.

பிராமணம்—1

गायत्रेण पुरस्तादुपतिष्ठते प्राणमेवाऽस्मिन्दधाति बृहद्रथंतराभ्यां पक्षावोज एवास्मिन्दधात्यृतुस्थायज्ञायज्ञियेन पुच्छमृतुष्वेव प्रतितिष्ठति पृष्ठैरुपतिष्ठते तेजो वै पृष्ठानि तेज एवास्मिन्दधाति ।

என்பது.

உரை.

'தத்சவிதுர்வரேண்யம்' என்பது முதலிய காயத்திரி இருக்கு மந்திரத்திலுண்டானது காயத்திரியாம். அதனால் தலையைத் துதிக்கில் அக்கினிக்கு பிராணன் நிறுவப்பட்டதாகும். "த்வாமித்திஹவாமஹே" என்னுமந்திரத்திலுண்டானது பிருகத், 'அபித்வா' என்பது முதலிய மந்திரத்திலுண்டானது ரதந்தரம், இவ்விரண்டாலும் இரண்டு சிறகுகளைத் துதிக்கில் வன்மையைத் தேடியதாகும். 'வசந்தம்' என்பது முதலிய மந்திரத்தில் உண்டானது இருதுக்களிலுள்ள யக்ஞாயக்ஞீயம். அதனால் வாலைத் துதிக்கில் இருதுக்களில் நிலைமை கிடைக்கின்றது. பிருஷ்டஸ்தோத்திர சாமங்களால் முழுமையுந் துதிக்கில் உடம்பு அழகுடையதாகும் என்பதாம்.

இரண்டு விலாப்புறங்களைப் போற்றுதலை விதிக்கின்றது.

பிராமணம்—2

प्रजापतिरग्निमसृजत सोऽस्मात्सृष्टः पराङैत्तं वारवन्तीयेनावारयत तद्वारवन्तीयस्य वारवन्तीयत्वꣳ श्यैतेन श्येती अकुरुत तच्छ्यैतस्य श्यैतत्वं यद्वारवन्तीयेनोपतिष्ठते वारयत एवैनꣳ श्यैतेन श्येती कुरुते ।

என்பது

உரை.

பிரசாபதி, அக்கினியைப் படைத்தும் அக்கினி திரும்பிக் கொண்டு வேறிடம் போகும்போது, 'அஶ்வம்ந' என்பது முதலிய மந்திரத்தாலுண்டாகிய 'வாரவந்தீயம்' என்னுஞ் சாமப்பாடலால் அவ்வக்கினியை தன்முகமாகத் திருப்பிக் கொண்டனர். 'அபிப்ரவः' என்பது முதலியமந்திரத்திலுண்டாகிய 'ஶ்யைதம்' என்னுஞ் சாமப்பாடலால் அவ்வக்கினியைத் தன்வசப்படுத்திக் கொண்டனர். ஆதலின், எசமானன் இவ்விரண்டு சாமப்பாடல்களால் கருடசயனத்தின் விலாப்புறங்களைப் போற்றில் அக்கினி வேறிடஞ் செல்வதைத் தடுத்து, தனது வசமாக்கிக்கொண்டவனாகின்றான்

துதிகள்)

என்பதாம். ஈண்டு, ச்சூத்திரத்தில் 'ஶ்யைதம்' என்னுஞ் சாமப்பாடலுக்குப் பதிலாக வாமதேவ்யம் என்னுஞ் சாமப்பாடல் கூறப்பட்டிருக்கின்றது என்பதையுணர்க.

சிறகின் சந்துக்களைப் போற்றுதற்கு சாமப்பாடலை விதிக்கின்றது.

பிராமணம்—3

प्रजापतेर्हृदयेनापिपक्षं प्रत्युपतिष्ठते प्रेमाणमेवास्य गच्छति ।

என்பது

உரை.

இருக்குமந்திரங்களின்றி ஸ்தோமங்களில் உண்டாகிய "பிரசாபதி ஹிருதயம்" என்னுஞ் சாமப்பாடலைப் பாடில் அக்கினியின் பிரியத்தை யடைகின்றான் என்பதாம்.

ஆன்மச் செங்கல்களை வைப்பதற்கு மந்திரங்களை உண்டாக்குகின்றது.

பிராமணம்—4

प्राच्या त्वा दिशा सादयामि गायत्रेण छन्दसाऽग्निना देवतयाऽग्नेश्शीर्णाऽग्नेश्शिर उपदधामि दक्षिणया त्वा दिशा सादयामि त्रैष्टुभेन छन्दसेन्द्रेण देवतयाऽग्नेः पक्षेणाग्नेः पक्षमुप दधामि प्रतीच्या त्वा दिशा सादयामि जागतेन छन्दसा सवित्रा देवतयाऽग्नेः पुच्छेनाग्नेः पुच्छमुप दधाम्युदीच्या त्वा दिशा सादयाम्यानुष्टुभेन छन्दसा मित्रावरुणाभ्यां देवतयाऽग्नेः पक्षेणाग्नेः पक्षमुप दधाम्यूर्ध्वया त्वा दिशा सादयामि पाङ्क्तेन छन्दसा बृहस्पतिना देवतयाऽग्नेः पृष्ठेनाग्नेः पृष्ठमुप दधामि ।

என்பது.

உரை.

கிழக்கு, காயத்திரிச்சந்தம், அக்கினி தேவதை என்பவைகளுடன் கூடியயான், செங்கலே! உன்னை, சயனக்கினியின் தலையில் வைக்கின்றேன். இவ்வாறே பொருளைக் கொண்ட மந்திரங்கட்கும், தெற்கு முதலிய திசைகளையும், த்ரிஷ்டுப் முதலிய சந்தங்களையும், இந்திரன் முதலிய தேவதைகளையும், சிறகு முதலிய இடங்களையுஞ் சேர்த்துப் பொருளுரைத்துக் கொள்க. இத்தகைய பொருள்களையுடைய ஐந்து மந்திரங்களாலும் நான்கு திக்குக்களிலும் நடுவிலும் ஐந்து ஆன்மச் செங்கல்களை வைத்தல் வேண்டும் என்பதாம்.

ஆன்மச் செங்கல்களை விதிக்கின்றது.

பிராமணம்—5

यो वा अपात्मानमग्निं चिनुतेऽपात्माऽमुष्मिँल्लोके भवति यस्सात्मानं चिनुते सात्माऽमुष्मिँल्लोके भवत्यात्मेष्टका उप दधात्येष वा अग्नेरात्मा सात्मानमेवाग्निं चिनुते ।

என்பது.

உரை.

ஆன்மாவென்னும் உடம்புடன் அக்கினியை சயனஞ் செய்யில் பரலோகத்தில் நல்ல தேகத்தை அடைகின்றான். உடம்பிலாத அக்கினியைச் சயனஞ் செய்யில் அங்கும் உடம்பில்லாதவனாகின்றான். ஆதலின், இவ்வாறு அவயங்களின் சேர்க்கையாகிய அக்கினியின் திருமேனியுடன் சயனஞ் செய்வதால் அக்கினி ஆன்மாவோடு சயனஞ் செய்ததாக ஆகின்றது என்பதாம்.

இவ்வாறுணர்ந்தவனைப் புகழ்கின்றது.

பிராமணம்—8

सात्माऽमुष्मिँल्लोके भवति य एवं वेद ॥

என்பது.

உரை.

இவ்வாறுணர்ந்தவன், பரலோகத்தில் ஆன்மாவுடையவனாகின்றான் என்பதாம்.

எட்டாம் அநுவாகம்.

முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் ஐந்தாம் பிரபாடகம்

ஒன்பதாவது அநுவாகம்.

நெய்யாகுதிகளைக் கூறும் பிராமணங்கள்.

நான்கு பஞ்சாதிக்குமேல் முப்பத்திரண்டு பதங்களைக்கொண்டது.

अग्ने उदधे या त इषुर्युवा नाम तया नो मृड तस्यास्ते नमस्तस्यास्त उप जीवन्तो भूयास्माग्ने दुध्र गह्य किंशिल वन्य या त इषुर्युवा नाम तया नो मृड तस्यास्ते नमस्तस्यास्त उपजीवन्तो

भूयास पञ्च वा एतेऽग्नयो यच्चितय उदधिरेव नाम प्रथमो दुध्रः [३७] द्वितीयो गह्वस्तृतीयः किꣳशिलश्चतुर्थो वन्यः पञ्चमस्तेभ्यो यदाहुतीर्न जुहुयादध्वर्युं च यजमानं च प्र दहेयुर्यदेता आहुतीर्जुहोति भागधेयेनैवैनाञ्छमयति नाऽऽर्तिमार्छत्यध्वर्युर्न यजमानो वाङ्म आसन्नसोः प्राणोऽक्ष्योश्चक्षुः कर्णयोश्श्रोत्रं बाहुवोर्बलमूरुवोरोजोऽरिष्टा विश्वान्यङ्गानि तनूः [३८] तनुवा मे सह नमस्ते अस्तु मा मा हिꣳसीरप वा एतस्मात्प्राणाः क्रामन्ति योऽग्निं चिन्वन्नधिक्रामति वाङ्म आसन्नसोः प्राण इत्याह प्राणानेवाऽऽत्मन्धत्ते यो रुद्रो अग्नौ यो अप्सु य ओषधीषु यो रुद्रो विश्वा भुवनाऽऽविवेश तस्मै रुद्राय नमो अस्त्वाहुतिभागा वा अन्ये रुद्रा हविर्भागाः [३९] अन्ये शतरुद्रीयꣳ हुत्वा गावीधुकं चरुमेतेन यजुषा चरमायामिष्टकायां नि दध्याद्भागधेयेनैवैनꣳ शमयति तस्य त्वै शतरुद्रीयꣳ हुतमित्याहुर्यस्यैतदग्नौ क्रियत इति वसवस्त्वा रुद्रैः पुरस्तात्पान्तु पितरस्त्वा यमराजानः पितृभिर्दक्षिणतः पान्त्वादित्यास्त्वा विश्वैर्देवैः पश्चात्पान्तु द्युतानस्त्वा मारुतो मरुद्भिरुत्तरतः पातु [४०] देवास्त्वेन्द्रज्येष्ठा वरुणराजानोऽधस्ताच्चोपरिष्टाच्च पान्तु न वा एतेन पूतो न मेध्यो न प्रोक्षितो यदेनमतः प्राचीनं प्रोक्षति यत्संचितमाज्येन प्रोक्षति तेन पूतस्तेन मेध्यस्तेन प्रोक्षितः [४१] ॥ दुध्रस्तनूर्हविर्भागाः पातु द्वात्रिꣳशच्च ॥ ९ ॥

இதில், ஐந்து நெய்யாகுதிகளைச் செய்தல் வேண்டுமென்று விதிக்கின்றது.

நெய்யாகுதிகட்கு மந்திரங்களை உண்டாக்குகின்றது.

பிராமணம்—1

अग्न उदधे यात इषुर्युवा नाम तया नो मृड तस्यास्ते नमस्तस्यास्त उप जीवन्तो भूयास्माग्ने दुध्र गह्य किꣳशिल वन्य यात इषुर्युवा नाम तया नो मृड तस्यास्ते नमस्तस्यास्त उपजीवन्तो भूयास्म।

என்பது.

உரை.

'உததி' என்னும் அக்கினியே! 'யுவா' என்னும் உனது பாணத்திற்கு வணக்கம். அப்பாணத்தால் எம்மைச் சுகப்படுத்துவாயாக. உனது வில்லிற்கு வணக்கம். அவ்வில்லால் நல்ல வாழ்க்கையுடையவர்களாவோமாக. இவ்வாறே, "துத்ர, கஹ்ய, கிம்சில, வன்ய' என்னும் நான்கு அக்கினிகட்கும் சேர்த்துப் பொருளுரைத்துக் கொள்க என்பதாம்.

மேற்கூறிய மந்திரங்களாற் செய்யும் ஆகுதிகளை விதிக்கின்றது.

பிராமணம் —2

पञ्च वा एतेऽग्नयो यच्चितय उदधिरेव नाम प्रथमो दुध्रो द्वितीयो गह्यस्तृतीयः किꣳशिलश्चतुर्थो वन्यः पञ्चमस्तेभ्यो यदाहुतीर्न जुहुयादध्वर्युं च यजमानं च प्र दहेयुर्यदेता अहुतीर्जुहोति भागधेये नैवैनाञ्छमयति नाऽऽर्तिमार्छत्यध्वर्युर्न यजमानः।

என்பது.

உரை.

உததி, துத்கர, கஹ்ய, கிம்சில, வன்யः என்னும் பெயர்கள் கொண்ட ஐந்தக்கினி வடிவங்களே இவ்வைந்து செங்கல் அடுக்குக்கள். இதில் ஆகுதிகளைச் செய்யாவிடில், எசமானனையும், வேட்போனையும் எரித்துவிடும். ஆதலின் இவ்வைந்து ஆகுதிகளையுஞ் செய்தல் வேண்டுமென்பதாம்.

சயனத்தின்மீது ஏறும்போதும் இறங்கும்போதும் செபிக்கவேண்டிய மந்திரங்களை உண்டாக்குகின்றது.

பிராமணம்—3

वाङ्म आसन्नसोः प्राणोऽक्ष्योश्चक्षुः कर्णयोश्श्रोत्रं बाहुवोर्बलमूरुवोरोजोऽरिष्टा विश्वान्यङ्गानि तनूस्तनुवा मे सह नमस्ते अस्तु मा मा हिꣳसीः

ஆகுதிகள்)

உரை.

வாக்கு, எனது வாயில் இனிது இருக்குக. மூக்கில் பிராணன் இருக்குக. கண்துளையில் கண் இருக்குக. செவித்துளையில் காது இருக்குக. தோள்களில் வன்மை இருக்குக. தொடைகளில் நடக்கும் வன்மை இருக்குக. மற்றும் எல்லா அவயவங்களும் துன்புறுதவைகளாகுக. எனது உடம்புடன் சாட்டாங்கமாக வணக்கஞ் செய்கின்றேன். ஆதலின் என்னைத் துன்புறுத்தாதே என்பதாம்.

சேபிக்கும் விதியை அறிவுறுத்துகின்றது.

பிராமணம்—4

अप वा एतस्मात्प्राणाः क्रामन्ति योऽग्निं चिन्वन्नधिक्रामति वाङ्म आसन्नसोः प्राण इत्याह प्राणानेवाऽऽत्मन्धत्ते ।

என்பது.

உரை.

எசமானன், அல்லது வேட்போன், மகாக்கினி சயனத்தின் மீது அடியெடுத்து வைக்கும்போதே இவனுடைய பிராணன் போய்விடுகின்றது. ஆதலின், வாக்கு முதலியவைகளைத் தத்தமது கோளகங்களில் இருக்கும்படி கூறுகின்ற இம்மந்திரத்தைச் செபித்தல் வேண்டும் என்பதை விதியாகக் கொள்க என்பதாம்.

சதருத்திரி ஹோமஞ்செய்த செங்கலின்மீது காட்டுக் கோதுமைப் போங்கலை வைப்பதற்கு மந்திரத்தை உண்டார்க்குகின்றது.

பிராமணம்—5

यो रुद्रो अग्नौ यो अप्सु य ओषधीषु यो रुद्रो विश्वा भुवनाऽऽविवेश तस्मै रुद्राय नमो अस्तु ।

என்பது.

உரை.

உருத்திரன் வடிவாகிய அக்கினி, உலகிலுள்ள அக்கினியிலும், நீர் முதலியவைகளிலும் புகுந்து மறைவாயிருக்கின்றது. அதற்கு வணக்கம் என்பதாம்.

மேற்கூறிய மந்திரத்தாற் செய்யும் பொங்கல் வைப்பதை விதிக்கின்றது.

பிராமணம்—6

आहुतिभागा वा अन्ये रुद्रा हविर्भागा अन्ये शतरुद्रीयँ हुत्वा गावीधुकं चरुमेतेन यजुषा चरमायामिष्टकायां निदध्याद्भागधेयेनैवैनँ शमयति तस्य त्वै शतरुद्रीयँ हुतमित्याहुर्यस्यैतदग्नौ क्रियत इति ।

என்பது.

உரை.

ஆகுதியை யருந்துகின்றவர்கள், அவியை யருந்துகின்றவர்கள் என்று உருத்திரர்கள் இருவகையாவார்கள். அவர்களுள் ஆகுதியை யருந்துகின்றவர்கள் சதருத்திரீய ஹோமத்தால் களிப்புறுவார்கள். அவியை அருந்துகின்ற ஏனையோர்களுக்குக் காட்டுக்கோதுமைப் பொங்கல் வைத்தல் வேண்டும். இன்றெனில், எல்லா உருத்திரர்களும் களிப்புறுமையின் சதருத்திரி ஹோமம் பயனற்றதாய்விடும் என்பதாம். இது, கா-4-பி-5 அநு-11 ல் விநியோகிக்கப்பட்டது.

ஐந்து திக்குக்களிலும், கைகளால் நெய்யை எடுத்து இறைப்பதை விதிப்பதற்கு மந்திரங்களை யுண்டாக்குகின்றது.

பிராமணம்—7

वसवस्त्वा रुद्रैः पुरस्तात्पान्तु पितरस्त्वा यमराजानः पितृभिर्दक्षिणतः पान्त्वादित्यास्त्वा विश्वैर्देवैः पश्चात्पान्तु द्युतानस्त्वा मारुतो मरुद्भिरुत्तरतः पातु देवास्त्वेन्द्रज्येष्ठा वरुणराजानोऽधस्ताच्चोपरिष्टाच्च पान्तु ।

என்பது.

உரை.

எட்டு வசுக்களும் பதினொரு உருத்திரர்களும், அக்கினியே! உன்னைக் கிழக்கில் பாதுகாப்பார்களாக. எமனைத் தலைவனாகக்கொண்ட பிதிர்க்கள் ஏனயதேவர்களுடன் தெற்கில் பாதுகாப்பார்களாக. பன்னிரு சூரியர்கள் விசுவதேவர்களுடன் மேற்கில் பாதுகாப்பார்களாக. மருத்துக்களின் தலைவன் மருத்துக்களுடன் வடக்கில் பாதுகாப்பானாக. வருணனும், இந்திரனும் கீழ்த்திசையையும் மேல்திசையையும் பாதுகாப்பார்களாக என்னும் மந்திரங்களால் ஐந்து திக்குக்களிலும் நெய்யை வாரித்தெளித்தல் வேண்டுமென்பதாம். இது-கா-4. பிர-4 அநு-11. ல் விநியோகிக்கப்பட்டுள்ளது

இனி, அவ்வோமங்களை விதிக்கின்றது.

பிராமணம்—8

न वा एतेन पूतो न मेध्यो न प्रोक्षितो यदेनमतः प्राचीनं प्रोक्षति यत्संचित-
माज्येन प्रोक्षति तेन पूतस्तेन मेध्यस्तेन प्रोक्षितः ॥

என்பது.

உரை.

மேற்கூறியபடி நெய்யைத் தெளிப்பதற்குமுன் பொன் துண்டுகளை வாரி இறைக்கில் இவ்வக்கினி புனிதமாகாது. மற்றும், எக்ஞத்திற்கும் உரியதன்றும். ஆதலின் மேற்கூறிய இந்நெய்யாகுதிகளால் அக்கினி புனிதமடைந்து எக்ஞத்திற்கு உரியதாகின்றது என்பதாம்.

ஒன்பதாம் அநுவாகம்.
முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் ஐந்தாம்பிரபாடகம்

பத்தாவது அநுவாகம்.

சர்ப்பாகுதி முதலானவைகளைக் கூறும் பிராமணங்கள்.

ஏழு பஞ்சாதிகளைக் கொண்டது.

समीची नामासि प्राची दिक्तस्यास्तेऽग्निरधिपतिरसितो रक्षिता यश्चाधिपतिर्यश्च गोप्ता ताभ्यां नमस्तौ नो मृडयतां ते यं द्विष्मो यश्च नो द्वेष्टि तं वां जम्भे दधाम्योजस्विनी नामासि दक्षिणा दिक्तस्यास्त इन्द्रोऽधिपतिः पृदाकुः प्राची नामासि प्रतीची दिक्तस्यास्ते [४२] सोमोऽधिपतिस्स्वजोऽवस्थावा नामास्युदीची दिक्तस्यास्ते वरुणोऽधिपतिस्तिरश्चराजिरधिपत्नी नामासि बृहती दिक्तस्यास्ते बृहस्पतिरधिपतिश्श्वित्रो वशिनी नामासीयं दिक्त-स्यास्ते यमोऽधिपतिः कल्माषग्रीवो रक्षिता यश्चाधिपतिर्यश्च गोप्ता ताभ्यां नमस्तौ नो मृडयतां ते यं द्विष्मो यश्च [४३] नो द्वेष्टि

तं वो जम्भे दधाम्येता वै देवता अग्निं चितꣳ रक्षन्ति ताभ्यो यदाहुतीर्न जुहुयादध्वर्युं च यजमानं च ध्यायेयुर्यदेता आहुतीर्जुहोति भागधेयेनैवैनाञ्छमयति नाऽऽर्तिमार्छत्यध्वर्युर्न यजमानो हेतयो नाम स्थ तेषां वः पुरो गृहा अग्निर्व इषवस्सलिलो निलिम्पा नाम [४४] स्थ तेषां वो दक्षिणा गृहाः पितरो व इषवस्सगरो वज्रिणो नाम स्थ तेषां वः पश्चाद्गृहास्स्वप्नो व इषवो गह्वरोऽवस्थावानो नाम स्थ तेषां व उत्तराद्गृहा आपो व इषवस्समुद्रोऽधिपतयो नाम स्थ तेषां व उपरि गृहा वर्षं व इषवोऽवस्वान्क्रव्या नाम स्थ पार्थिवास्तेषां व इह गृहाः [४५] अन्नं व इषवो निमिषो वातनाम तेभ्यो वो नमस्ते नो मृडयत ते यं द्विष्मो यश्च नो द्वेष्टि तं वो जम्भे दधामि हुतादो वा अन्ये देवा अहुतादोऽन्ये तानग्निचिदेवोभयान्प्रीणाति दध्ना मधुमिश्रेणैता आहुतीर्जुहोति भागधेयेनैवैनान्प्रीणात्यथो खल्वाहुरिष्टका वै देवा अहुताद इति [४६] अनुपरिक्रामं जुहोत्यपरिवर्गमेवैनान्प्रीणातीमꣳ स्तनमूर्जस्वन्तं धयापां प्रप्यातमग्ने सरिरस्य मध्ये । उत्सं जुषस्व मधुमन्तमूर्व समुद्रियꣳ सदनमा विशस्व । यो वा अग्निं प्रयुज्य न विमुञ्चति यथाऽश्वो युक्तोऽविमुच्यमानः क्षुध्यन्पराभवत्येवमस्याग्निः परा भवति तं पराभवन्तं यजमानोऽनु परा भवति सोऽग्निं चित्वा लूक्षः [४७] भवतीमꣳ स्तनमूर्जस्वन्तं धयापामित्याज्यस्य पूर्णाꣳ स्रुचं जुहोत्येष वा अग्नेर्विमोको विमुच्यैवास्मा अन्नमपि दधाति तस्मादाहुर्यश्चैवं वेद यश्च न सुधायꣳ ह वै वाजी सुहितो दधाती-

முதலானவைகள்)

त्यग्निर्वाव वाजीतमेव तत्प्रीणाति स एनं प्रीतः प्रीणाति वसीया-न्भवति [४८] ॥ प्रतीचीदिक्तस्यास्ते द्विष्मो यश्च निलिंपाना-मेहगृहा इति लूक्षो वसीयान्भवति ॥ १० ॥

இதில், சர்ப்பங்கட்குச் செய்யும் ஆகுதி முதலானவைகள் கூறப்படுகின்றன.

சர்ப்பாகுதிகளை விதிப்பதற்கு அம்மந்திரங்களைத் தோற்றுவிக்கின்றது.

பிராமணம் —1

समीची नमासि प्राची दिक्तस्यास्तेऽग्निरधिपतिरसितो रक्षिता यश्चाधि-पतिर्यश्च गोप्ताताभ्यां नमस्तौ नो मृडयतां ते यं द्विष्मो यश्च नो द्वेष्टि तं वां जम्भे दधाम्योजस्विनी नामासि दक्षिणा दिक्तस्यास्त इन्द्रोऽधिपतिः पृदाकुः प्राची नामासि प्रतीची दिक्तस्यास्ते सोमोऽधिपतिस्स्वजोऽव-स्थावा नामास्युदीची दिक्तस्यास्ते वरुणोऽधिपतिस्तिरश्चराजिरधिपत्नी नामासि बृहती दिक्तस्यास्ते बृहस्पतिरधिपतिश्श्वित्रो वशिनी नामासीयं दिक्तस्यास्ते यमोऽधिपतिः कल्माषग्रीवो रक्षिता यश्चाधिपतिर्यश्च गोप्ता ताभ्यां नमस्तौ नो मृडयतां ते यं द्विष्मो यश्च नो द्वेष्टि तं वां जम्भे दधामि ।

என்பது.

உரை.

கிழக்குத்திக்கே ! நீ 'சமீசி' என்னும் பெயருடையதா யிருக்கின்றாய். அத்தகைய உனக்கு, அக்கினி யாகிய தலைவன், கரும்பாம்பு பாதுகாப்பு. அவ்விரண்டும் எம்மைச் சுகப்படுத்துக. எம்மைத் துன்புறுத்துகின்றவரும், எம்மிடத்துப் பொறாமையுடையவருமாகிய பகைவர்களை உங்களுடைய பெரியவாய்களில் வைக்கின்றேன். இவ்வாறே, தெற்கு, பலமுடைமை, அசகரபாம்பு, மேற்கு சுவாதீனபலபாம்பு, வடக்கு திரச்சராசி பாம்பு, மேல்திக்கு, கடிக்கில் வீக்கங் கொடுக்கும் பாம்பு, கீழ்த்திக்கு, கழுத்தில் கறுப்புப் புள்ளிகளையுடைய பாம்பு என்பதுடன் மற்றவைகளை முன்போற் சேர்த்துக் கொள்க. என்பதாம். இது-கா-4-பிர-7-அநு-13, ல் விநியோகிக்கப்பட்டது.

சர்ப்பாகுதிகளை விதித்தல்.

பிராமணம்—2

एता वै देवता अग्निं चितꣳ रक्षन्ति ताभ्यो यदाहुतीर्न जुहुयादध्वर्युं च यजमानं च ध्यायेयुर्यदेता आहुतीर्जुहोति भागधेयेनैवैनाञ्छमयति नाऽऽर्तिमार्च्छत्यध्वर्युर्न यजमानः ।

என்பது.

உரை.

அக்கினி, இந்திரன், சோமன், வருணன், பிருகற்பதி என்னும் ஐந்து தலைவர்களும், அசிதம் முதலிய ஐந்து சர்ப்பங்களும் இச் சயனக்கினியைப் பாதுகாக்கின்றார்கள். இவர்களுடைய சாந்தியின் பொருட்டு தேன் கலந்த தயிரால் இவ்வோமங்களைச் செய்தல் வேண்டும். இதனால், எசமானனும் அத்வரியுவும் துன்புறார்கள் என்பதாம்.

மகாகுதிகள் என்பவைகட்கு ஆறு மந்திரங்களைத் தோற்றுவிக்கின்றது.

பிராமணம்—3

हेतयो नामस्थ तेषां वः पुरो गृहा अग्निर्व इषवस्सलिलो निलिम्पा नाम स्थ तेषां वो दक्षिणा गृहाः पितरो व इषवस्सगरो वज्रिणो नाम स्थ तेषां वः पश्चाद्गृहास्स्वप्नो व इषवो गह्वरोऽवस्थावानो नाम स्थ तेषां व उत्तराद्गृहा आपो व इषवस्समुद्रोऽधिपतयो नाम स्थ तेषां व उपरि गृहा वर्षं व इषवोऽवस्वान्क्रव्या नाम स्थ पार्थिवास्तेषां व इह गृहा अन्नं व इषवो निमिषो वातनामं तेभ्यो वो नमस्ते नो मृडयत ते यं द्विष्मो यश्च नो द्वेष्टि तं वो जम्भे दधामि ।

என்பது

உரை.

ஹேதிகள் என்னும் பெயர் பூண்ட கந்தருவர்களே ! உங்கட்குக் கிழக்கில் வீடுகளிருக்கின்றன. உங்களுடைய பாணங்கள் தீயைப்போன்றன. சலிலம் என்னும் வாயுவிற்கும், நிலிம்பா என்னும் சந்தனம் பூசும் கந்தருவர்களுக்கும் தெற்கில் வீடுகள். சகரங்கள் என்பது அம்புகள் வச்சிரமுடையவர்களுக்கு மேற்கில் வீடுகள். சுவப்பனங்கள் பாணங்கள், கஹ்வரம் என்னும் வாயுவிற்கும், அவஸ்தாவானர்கள் என்னுங் கந்தருவர்கட்கும் வடக்கில் வீடுகள். தண்ணீர் பாணங்கள், சமுத்திரம் வாயுவிற்கும், அதிபதிகட்கும் மேல்திக்கில் வீடுகள். அவஸ்வான்கள் என்னும் வாயுக்கள் பாணங்கள், க்ரவ்யர்கள் மாமிச விருப்புடைய கந்தருவர்கட்கும், பூமியில் உள்ளவர்கட்

முதலானவைகள்)

கும் பூமியில் வீடுகள். அன்னங்கள் பாணங்கள், நிமிஷம் என்னும் வாயுவிற்கும் மேற்கூறியவைகட்கும் வணக்கம். அவைகள் எம்மைச் சுகப்படுத்துக. எமது பகைவரை இவர்களுடைய வாயில்வைக்கின்றேன். மற்றவை முன்போல் என்பதாம்.

மேற்கூறிய மந்திரங்களாற் செய்யப்படும் மகாகுதிகள் என்னும் ஓமங்களை விதிக்கின்றது.

பிராமணம்—4

हुतादो वा अन्ये देवा अहुतादोऽन्येतानग्निचिदेवोभयान्प्रीणाति दध्ना मधुमिश्रेणैता आहुतीर्जुहोति भागधेयेनैवैनान्प्रीणात्यथो खल्वाहुरिष्टका वै देवा अहुताद इत्यनुपरिक्रामं जुहोत्यपरिवर्गमेवैनान्प्रीणाति ।

என்பது.

உரை.

ஆகுதி செய்ததை யருந்துகின்றவர்கள், ஆகுதி செய்யாததை யருந்துகின்றவர்கள் என தேவர்கள், இருவகைப்படுவார்கள். முன்னர், ஆகுதி செய்யாததை யருந்துந் தேவர்களின் பிரீதியின் பொருட்டு 'ந்ருஷதேவட்' என்னும் அநுவாகத்தில் தெளித்தல் கூறப்பட்டிருக்கின்றது. இப்போது, அதேபொருளால் ஆகுதி செய்ததை யருந்துந் தேவர்களின் பிரீதியின் பொருட்டு ஹோமங்கள் கூறப்படுகின்றன. இங்கு, செங்கல்களே தேவர்கள் ஆகின்றார்கள். அதில் ஹோமஞ் செய்வதால் ஆகுதி செய்ததை யருந்துந் தேவதைகள் பிரியப்படினும், ஆகுதி செய்யாததை யருந்துந் தேவர்களின் பிரீதியின் பொருட்டுச் சயனத்தை வலஞ் செய்தல் வேண்டும். அதனால் எல்லாத் தேவர்களும் பிரீதியடைகின்றார்கள். இவ்வாறு ஹோமங்களாலும், வலஞ் செய்தலாலும் எல்லாத் தேவர்களும் பிரீதியடைதல் பொருந்துமாறுணர்க. இதுபற்றியே தேன்கலந்த தயிரைக்கொண்டே ஐந்து திக்குக்களிலும் ஐந்து ஹோமங்கள் செய்தல் வேண்டும். இவைகள் மகா ஆகுதிகள் எனப்படுகின்றன என்பதாம்.

அக்கினிவிமோகம் என்னும் ஹோமங்கட்கு மந்திரங்களைத் தோற்றுவிக்கின்றது.

பிராமணம்—5

इमꣳ स्तनमूर्जस्वन्तं धयापां प्रप्यातमग्ने सरिरस्य मध्ये । उत्सं जुषस्व मधुमन्तमूर्व समुद्रियꣳ सदनमा विशस्व ।

என்பது.

உரை.

அக்கினியே! அத்திமரச் சுருக்கிலிருக்கும் நெய், முலை போன்றதும், (இது உபசாரம்) இரசமுடையதும், நிறைந்ததும், இனிமையுடையதுமாம்; இதை அருந்துவாயாக. வளர்ந்த அக்கினியே! கடலைப்பற்றிய இடத்தில் நுழைந்து கொள்வாயாக என்பதாம்.

மேற்கூறிய மந்திரத்தாற் செய்யப்படும் ஆகுதியை விதிக்கின்றது.

பிராமணம்—6

यो वा अग्निं प्रयुज्य न विमुञ्चति यथाऽश्वो युक्तोऽविमुच्यमानः क्षुध्यन्परा-भवत्येवमस्याग्निः पराभवति तं पराभवन्तं यजमानोऽनु पराभवति सोऽग्निं चित्वा लूक्षो भवतीमꣳ स्तनमूर्जस्वन्तं धयापामित्याज्यस्य पूर्णाꣳ स्रुचं जुहोत्येष वा अग्नेर्विमोको विमुच्यैवास्मा अन्नमपि दधाति ।

என்பது.

உரை.

எவ்வெசமானன், 'அக்னிம்யுனஜ்மி' என்பது முதலிய மந்திரங்களால் அக்கினியை வேள்விக் கருமத்தில் கட்டுப்படுத்திவிட்டு மீண்டும் விடுவிக்கவில்லையோ, அவன், உலகில் குதிரையைப் பூட்டிவிட்டு அவிழ்க்காமல் வைக்கில் அது பசியால் வருந்துவதுபோல் அக்கினியைத் துன்பப்படுத்தியவனாகின்றான். அதனால், எசமானனும் துன்புறுவன். எப்போதும் அதனால் எரிக்கப்படுகின்றான். ஆதலின், அக்கினியை விடுவித்தல் என்னும் இவ்வோமத்தைச் செய்தல் வேண்டும். இதனால் அக்கினிக்கு அன்னமளித்தவனாகின்றான் என்பதாம்.

மீண்டும் மற்றோராற்றால் அதைப்புகழ்கின்றது.

பிராமணம்—7

तस्मादाहुर्यश्चैवं वेद यश्च न सुधायꣳ ह वै वाजी सुहितो दधातीत्यग्निर्वाव वाजीतमेव तत्प्रीणाति स एनं प्रीतः प्रीणाति वसीयान्भवति ॥

என்பது.

உரை.

இத்தகைய அக்கினியின் விருத்தாந்தத்தை அறிந்தவர்களும், நன்கு தீனியருத்திய குதிரை, தன்மேல் ஏறியிருக்கும் மனிதனை நினைத்த இடத்

முதலானவைகள்)

திற்குக் கொண்டு போய்ச் சேர்க்கின்றது என்பது வெளிப்படை. இவ்வாறு குதிரையைப் போன்ற இவ்வக்கினியும் இந்த ஹோமத்தால் அன்னத்தை யருந்தில் எசமானனைக் களிப்படையச் செய்கின்றது. அவனும் தனத்தை யடைகின்றான் என்று கூறுகின்றார்கள் என்பதாம்.

பத்தாம் அநுவாகம்.

முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் ஐந்தாம்பிரபாடகம்

பதினோராவது அநுவாகம்

அசுவமேத பசுக்களைக் கூறும் பிராமணங்கள்.

இது, இருபத்தெட்டுப் பதங்களைக் கொண்டது.

इन्द्रायराज्ञे सूकरोवरुणाय राज्ञे कृष्णो यमायराज्ञ ऋश्य ऋष-भायराज्ञेगवयश्शार्दूलायराज्ञे गौरःपुरुषराजाय मर्कटः क्षिप्रश्येन स्यवर्तिकानीलङ्गोःक्रिमिस्सोमस्य राज्ञः कुलुङ्ग स्सिन्धोश्शिंशुमारोहिमवतोहस्ती ॥ [४९] इन्द्रायराज्ञेऽष्टाविंशतिः ॥ ११ ॥

இனி, அக்கினி சேடங்கூறுவதை நிறுத்திவிட்டு, அசுவமேதத்தின் சேடமாகிய பதினொருவகைக் கூட்டமாகிய பசுக்களை விதிக்கின்றது. அதாவது நூற்றிருபத்தொரு பசுக்களை விதிக்கின்றது. அவைகளுள் ஒவ்வொரு அநுவாகத்தில் ஒவ்வொரு பதினொரு வகைக்கூட்டங் கூறப்படுகின்றது. அதனுள்ளும் இம்முதலநுவாகத்தின் (பதினோராம் அநுவாகத்தி)ல், முதலாவது பதினொரு வகைப் பசுகள் கூறப்படுகின்றன.

इन्द्रायराज्ञे सूकरोवरुणाय राज्ञे कृष्णो यमायराज्ञ ऋश्य ऋषभायराज्ञेगव-यश्शार्दूलायराज्ञे गौरःपुरुषराजाय मर्कटः क्षिप्रश्येनस्य वर्तिकानीलङ्गोः क्रिमिस्सोमस्य राज्ञः कुलुङ्ग स्सिन्धोश्शिंशुमारोहिमवतोहस्ती ॥

என்பது.

உரை

தேவர்கட்கரசனாகிய இந்திரனுக்குப் பன்றியும், வருணன் பொருட்டு, கரிய நிறமானும், தர்மராசனாகிய எமன் பொருட்டு எருமையைப்போன்ற மான் விசேடத்தில் ஒன்றும், கோக்கட்கு அரசனாகிய ரிஷபதேவன் பொருட்டுப்

பசுவைப்போலிருக்கும் மானும், விலங்குகட்கு அரசனாகிய பெரும் புலியின் பொருட்டு வெண்மானும், இதைச் சிவந்ததென்பர் சிலர். வெண்மைஎன்பர் பிறர். மக்களின் மன்னன் பொருட்டு வானரமும், பறவைகட்கு அரசனாகிய வேகமுடைய பருந்தின் பொருட்டு, (ராசாளிப் பறவையின் பொருட்டு) ஊர்க் குருவிபோன்ற பறவையும், (விச்சுளிப் பட்சியையும்) நீலங்கு, என்னும் பாம்பின் தலைவனுக்குச் சாணிவண்டும் கொடிகளின் அரசனாகிய சோமத்திற்குக் குலுங்கம், என்னும் ஒருவகை மிருகமும், சமுத்திரராசனுக்கு முதலையும், மலைகட்கு அரசனாகிய இமயமலைக்கு யானையும் கொன்று வேட்கத் தக்கவைகள் என்பதாம்.

பதினோராம் அநுவாகம்.

முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் ஐந்தாம்பிரபாடகம்

பன்னிரண்டாவது அநுவாகம்.

இதில் இரண்டாவது பத்துப்பசுக்கள் கூறப்படுகின்றன.

இருபத்து மூன்று பதங்களைக் கொண்டது.

मयुः प्राजापत्य ऊलोहलीक्ष्णोवृषदꣳशस्ते धातुस्सरस्वत्यै शारिश्श्येता पुरुषवाक्सरस्वतेशुकश्श्येतः पुरुषवा गारण्योऽजोन-कुलश्शका ते पौष्णा वाचे क्रौञ्चः ॥ [५०] मयुस्त्रयोविꣳशतिः ॥ १२ ॥

मयुः प्राजापत्य ऊलोहलीक्ष्णोवृषदꣳशस्ते धातुस्सरस्वत्यै शारिश्श्येता पुरुषवाक्सरस्वतेशुकश्श्येतः पुरुषवा गारण्योऽजोनकुलश्शका ते पौष्णा वाचे क्रौञ्चः ॥

என்பது.

உரை.

பிரசாபதியின் பொருட்டு தாழ்ந்த மனிதனும், இதைக் காட்டுமயில் என்பர் சிலர். பிரமனுக்கு காக்மமும், (காக்கை), இதைக் கோட்டான் என்பர் சிலர். திவ்யகர்ண என்பர் பிறர். திருணஹிம்ஸகஃ (ஒருவகைப் பறவை) மஞ்சள் ஊர்க்குருவி யென்பர் சிலர். பூனை, பூனையைப் போன்றதென்பர் சிலர்.

இம்மூன்றுமாம். சரசுவதிக்கு, மனிதன் போற்பேசுஞ் சிவப்புப் பெண்கிளியும், சரசுவானுக்கு மனிதன்போற் பேசும் ஆண்கிளியும், பூஷா தேவதைக்குக் காட்டிலுள்ள சாபம், கீரி, ஈ என்னும் மூன்றும், வாக்தேவிக்கு கிரௌஞ்சப்பறவையும் கொன்று வேட்கத்தக்கவைகள் என்பதாம். பதினோராம் அநுவாகம், பன்னிரண்டாம் அநுவாகங்களில், பதினொரு வகைக் கூட்டமும், பத்துவகைப் பசுக்கூட்டங்களுங் கூறப்பட்டன. மேல் வரும் அநுவாகங்களிலும், இவ்வாறே கிடைத்தவரை சேர்த்துக்கொள்ளல் வேண்டும் என்பதை யுணர்க.

பன்னிரண்டாம் அநுவாகம்.
முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் ஐந்தாம்பிரபாடகம்

பதின்மூன்றுவது அநுவாகம்

இதில், மூன்றுவது பசுக்கூட்டங் கூறப்படுகின்றது.

பத்தொன்பது பதங்களைக் கொண்டது.

**अपान्नप्त्रेजषोनाक्रोमकरः कुलीकयस्तेऽकूपारस्य वाचे पैङ्ग-
राजोभगाय कुपीतक आतीवाह सो दर्विदा ते वायव्या दिग्भ्य-
श्चक्रवाकः ॥ [५१] अपामेकान्नविंशतिः ॥ १३ ॥**

अपान्नप्त्रेजषोनाक्रोमकरः कुलीकयस्तेऽकूपारस्य वाचे पैङ्गराजोभगाय कुपीतक आतीवाहसो दर्विदा ते वायव्या दिग्भ्यश्चक्रवाकः ॥

என்பது.

உரை.

தண்ணீரை நாசப்படுத்தாத ஒரு தேவதை விசேடத்திற்கு மகரமீனும், சமுத்திர தேவதைக்கு நீண்ட மூக்குடைய பிராணியை ஹிம்சிக்கும் மீன், குட்டையான வாலுடைய மீன் விசேடம், பலகால்களையுடைய மற்றொருவகை மீன் என்னும் மூன்றும், வாக்கிற்கு சிவந்த கண்களையுடைய கிளியும், இதைக் கடலின் அலைகளில் திரியும் மகாபறவை யென்பர் சிலர். சகோரமென்பர் பிறர். பகதேவதையின் பொருட்டு கடல்க்காக்கையும், வாயுதேவதைக்குப் பெண்மானும், இதைக் காடைஎன்பர் சிலர். பின்புறத்

தில் சங்கையுடைய பிராணி, நீர்ப்பறவை என்னும் மூன்றும். நீர்ப்பறவை என்பதற்கு மரக்கோழி என்பர்சிலர். திக்குத்தேவதைகளுக்கு சக்கரவாளப்புள்ளும் கொன்று வேட்கத்தக்கவைகள் என்பதாம்.

பதின்மூன்றுவது அனுவாகம்.

முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் ஐந்தாம்பிரபாடகம்

பதினுன்காவது அநுவாகம்.

இதில், பசுக்களின் நான்காவது கூட்டஞ் சொல்லப்படுகின்றது.

பதினெட்டுப்பதங்களைக் கொண்டது.

बलायाजगर आखुस्सृंजयाश्चयण्डकस्ते मैत्रामृत्यवेऽसितोमन्य-
वेस्वजः कुंभीनसः पुष्करसादोलोहिताहिस्ते त्वाष्ट्राः प्रतिश्रुत्कायै
वाहसः ॥ [५२] ॥ १४ ॥

बलायाजगर आखुस्सृजया शयण्डकस्ते मैत्रामृत्यवेऽसितोमन्यवेस्वजः
कुंभीनसः पुष्करसादोलोहिताहिस्ते त्वाष्ट्राः प्रतिश्रुत्कायै वाहसः ॥

என்பது.

உரை.

பலத்தி (வன்மை என்னுந் தேவதையி) ன் பொருட்டுப் பெரும்பாம்பும், மித்திர தேவதைக்கு, எலி, நீலநிற ஈ, இதை, வெண்பாம்பென்பர் சிலர். நீல எருமை என்பர் பிறர். ஒணுன், என்னும் இம் மூன்றும். மிருத்துவின் பொருட்டுக் கரும்பாம்பும். மன்யுதேவதையின் பொருட்டு வளைக்குள் தானுகவே உண்டாகும் பாம்பும். துவஷ்டா என்னுந் தேவதைக்குத் தூங்குந் தன்மையுடைய பாம்பும். தாமரைப் பாம்பும். இதை, வண்டென்பர் சிலர். வெண்மையுங் கருமையுடைய பாம்பு என்னும் இம் மூன்றும், பிரதிசுருதி என்னுந் தேவதையின் பொருட்டுச் சிறுபாம்பும் கொன்று வேட்கத்தக்கவைகள் என்பதாம்.

பதினுன்காவது அநுவாகம்.

முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் ஐந்தாம்பிரபாடகம்

பதினைந்தாவது அநுவாகம்.

இதில், ஐந்தாவது பசுக்கூட்டஞ் சொல்லப்படுகின்றது.

பதினெட்டுப் பதங்களைக் கொண்டது.

पुरुषमृगश्चन्द्रमसेगोधाकालका दार्वाघाटस्तेवनस्पतीनामेण्यह्ने कृष्णोरात्रियैपिकः क्ष्विङ्कानीलशीर्ष्णीतेऽर्यम्णे धातुः कत्कटः ॥ [५३] ॥ १५ ॥

पुरुषमृगश्चन्द्रमसेगोधाकालका दार्वाघाटस्तेवनस्पतीनामेण्यह्ने कृष्णोरात्रि-यैपिकः क्ष्विङ्कानीलशीर्ष्णीतेऽर्यम्णे धातुः कत्कटः ॥

என்பது.

உரை.

சந்திரன் பொருட்டு மனிதனுடைய முகம்போன்ற முகமுடைய மிருகமும். வநஸ்பதிகளின் பொருட்டு, உடும்பு, இது பெரிய உடும்பென்பர் சிலர். நஞ்சக்குருவி, மரங்கொத்திக் குருவி என்னும் மூன்றும். பகலின் பொருட்டு பெண்மானும். இரவின் பொருட்டு ஆண் கருமானும் அரியமா என்னுந் தேவதையின் பொருட்டு, குயில், சிவந்தமுகக் குரங்கு, கருந்தலைக் குரங்கு என்னும் மூன்றும். பிரமனுக்கு வளையிலுள்ள நண்டுங் கொன்று வேட்கத் தக்கவைகள் என்பதாம்.

பதினைந்தாம் அநுவாகம்.
முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் ஐந்தாம்பிரபாடகம்

பதினாறுவது அநுவாகம்

இதில், ஆறுவது பசுக்கூட்டவகை சொல்லப்படுகின்றது.

பதினெட்டுப் பதங்களைக் கொண்டது.

सौरीबलाकर्श्योमयूरश्श्येनस्ते गन्धर्वाणां वसूनाङ्कपिञ्जलो रुद्राणान्तित्तिरी रोहित्कुण्डृणाचीगोलत्तिकाता अप्सरसामरण्याय-सृमरः [५४] ॥ ॥ १६ ॥

सौरीबलाकश्शार्गो मयूरश्श्येनस्ते गन्धर्वाणां वसूनाङ्कपिञ्जलो रुद्राणान्तित्तिरी रोहित्कुण्डृणाचीगोलत्तिकाता अप्सरसामरण्यायसृमरः ॥

என்பது.

உரை.

சூரியனுக்கு நாரையும். கந்தருவர்களுக்கு எருமையைப் போன்றமான், மயில், பருந்து என்னும் மூன்றும். வசுக்கட்குச் சாதகப்பறவையும். உருத்திரர்கட்குத் தித்திரிப்பறவையும் (மீன்குத்தி) இது மனிதன் போன்று கத்துவது. அப்சரசர்களுக்கு எருமையைப்போன்ற பெண்மான். வீட்டு உடும்பு, வலியன் என்னும் மூன்றும். அரணியங்களுக்கு 'சமரம்' என்னும் மானுங் கொன்று வேட்கத்தக்கவைகள் என்பதாம்.

பதினாறாம் அனுவாகம்
முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் ஐந்தாம்பிரபாடகம்

பதினேழாவது அநுவாகம்

இதில், ஏழாவது பசுக்கூட்டவகை கூறப்படுகின்றது.

பதினெட்டுப் பதங்களைக் கொண்டது.

पृषतो वैश्वदेवः पित्वोन्यङ्कुः कशस्तेऽनुमत्या अन्यवापोऽर्धमासानां मासाङ्कश्यपः क्वयिः कुटरुर्दात्यौहस्ते सिनीवाल्यै बृहस्पतयेशित्पुटः ॥ [५५] ॥ १७ ॥

पृषतो वैश्वदेवः पित्वोन्यङ्कुः कशस्तेऽनुमत्या अन्यवापोऽर्धमासानां मासाङ्कश्यपः क्वयिः कुटरुर्दात्यौहस्ते सिनीवाल्यै बृहस्पतयेशित्पुटः ॥

என்பது.

உரை.

வைசுவதேவர்கட்குக் கலைமானும், அநுமதி என்னுந் தேவதைக்குப் புலி, மான், கரடி யென்பர் சிலர். கசஃ என்னும், மிருகவிசேடம்; என்னும் மூன்றும். அர்தமாசதேவதைகளுக்கு 'அன்யவாபம்' என்னும் மிருகவிசேடமும். மாசங்கட்கு 'கச்யபம்' என்னும் மிருகவிசேடமும். ஸினீவாலி,

பசுக்கூட்டம் [8])

என்னுந் தேவதைக்கு 'க்வயி' 'குடரு' என்னும் மிருகவிசேடங்கள் நஞ்சுக்குரிவி என்னும் மூன்றும். மிருகற்பதிக்குப் பூனைப்போன்ற ஒரு மிருகமுங் கொன்று வேட்கத்தக்கவைகள் என்பதாம்.

பதினேழாம் அநுவாகம்
முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் ஐந்தாம்பிரபாடகம்

பதினெட்டாவது அநுவாகம்

இதில், எட்டாவது பசுக்கூட்டவகை கூறப்படுகின்றது.

பதினெட்டுப் பதங்களைக் கொண்டது.

शकाभौमीपान्त्रः कशोमान्थीलवस्ते पितृणामृतूनाञ्जहका
संवत्सराय लोपाकपोत उलूकश्शशस्ते नैर्ऋताः कृकवाकुस्सावित्रः ॥
[५६] बलाय पुरुषमृगस्सौरीपृषतश्शकाऽष्टादशाष्टादश ॥ १८ ॥

शकाभौमीपान्त्रः कशोमान्थीलवस्ते पितृणामृतूनाञ्जहका संवत्सराय लोपा-
कपोत उलूकश्शशस्तेनैर्ऋताः कृकवाकुस्सावित्रः ॥

என்பது.

உரை.

பூமிக்குத் தேன்கொசுவும், பாந்திரம், கசம், என்னும் பறவை விசேடங்கள் நீர்க்கோழி என்னும் மூன்றும். இருதுக்கட்கு வளையிலுள்ள குள்ளநரியும். வருடத்தின் பொருட்டு சுடுகாட்டில் வாழும் பட்சியும். நிருதி தேவதைக்கு, புரு, ஆந்தை, முயல் என்னும் மூன்றும். சவிதாதேவதைக்கு காட்டுக் கோழியுங் கொன்று வேட்கத்தக்கவைகள் என்பதாம்.

பதினெட்டாம் அநுவாகம்
முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் ஐந்தாம்பிரபாடகம்

பத்தோன்பதாவது அநுவாகம்

இதில், ஒன்பதாவது பசுக்களின் கூட்டவகை கூறப்படுகின்றது.

இருபது பதங்களைக் கோண்டது.

रुरूरौद्रः कृकलासश्शकुनिः पिप्पकाते शरव्यायै हरिणोमारुतो ब्रह्मणे शार्गस्तरक्षुः कृष्णश्श्वाचतुरक्षोगर्दभस्त इतरजनानामग्नये धूङ्क्ष्णा ॥ [५७] रुरुर्विꣳशतिः ॥ १९ ॥

रुरूरौद्रः कृकलासश्शकुनिः पिप्पकाते शरव्यायै हरिणोमारुतो ब्रह्मणे शार्गस्तरक्षुः कृष्णश्श्वाचतुरक्षोगर्दभस्त इतरजनानामग्नये धूङ्क्ष्णा ॥

என்பது.

உரை.

உருத்திரனுக்கு கறுப்புக்கலை மானும். பாணத்தைத் தாங்கிய (சரவ்ய) தேவதைக்கு, ஓணன், காக்கை, பிப்பகா என்னும் பறவை விசேடம் என்னும் மூன்றும். மருத்தேவதைக்கு, மானும். பிரமன் பொருட்டு காட்டு ஊர்க்குருவியும். ஏனைய சனங்களின் பொருட்டுக் கழுதைப்புலி, மான், கண்ணிற்குமேல் புள்ளியையுடைய நாய் என்னும் இம்மூன்றும். அக்கினிக்கு வெள்ளைக் காக்கையுங் கொன்று வேட்கத்தக்கவைகள் என்பதாம்.

பத்தோன்பதாம் அநுவாகம்

முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் ஐந்தாம்பிரபாடகம்

இருபதாவது அநுவாகம்

இதில், பத்தாவது பசுக்கூட்டவகை கூறப்படுகின்றது.

பதினெட்டுப் பதங்களைக் கொண்டது.

अलज आन्तरिक्ष उद्रोमद्गुः प्लवस्तेऽपामदित्यै हꣳससाचि-रिन्द्राण्यैकीर्शागृध्रश्शितिकक्षीवार्ध्राणस स्तेदिव्याद्यावा पृथिव्या-श्वावित् ॥ [५८] ॥ २० ॥

अलज आन्तरिक्ष उद्रोमद्गुः प्लवस्तेऽपामदित्यै हꣳससाचिरिन्द्राण्यैकीर्शा-
गृध्रशितिकक्षीवार्ध्राणस स्तेदिव्यायावापृथिव्याश्वावित् ॥

என்பது.

உரை.

அந்தரிட்சதேவதைக்கு ‘ அலசம் ’ என்னும் பறவை விசேடமும், தண்ணீர்த் தேவதைக்கு நீர்ப்பூனை, நீர்க்காக்கை, ப்லவம் என்னும் ஒருவகை நீர்க்காக்கை என்னும் இம்மூன்றும். அதிதிதேவதைக்கு வெண்மைநிற அன்னப்பட்சியும். இந்திராணியின் பொருட்டு பெண்சகுனிப் புள்ளும். சுவர்க்கதேவதைக்கு, கழுகு, வயிற்றில் வெண்மையுடைய கழுகு, காண்டா மிருகம் என்னும் இம்மூன்றும். வான்மண் தேவதைக்கு ஊசிபோன்ற மயிருடைய நாயும் கொன்று வேட்கத்தக்கவைகள் என்பதாம்.

இருபதாம் அநுவாகம்
முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் ஐந்தாம் பிரபாடகம்

இருபத்தோராவது அநுவாகம்

இதில், பதினோராவது பசுக்கூட்டவகை கூறப்படுகின்றது.

பதினெட்டுப் பதங்களைக் கொண்டது.

सुपर्णः पार्जन्यो हꣳसोवृकोवृषदꣳशस्त ऐन्द्रा अपामुद्रोऽर्यम्णे
लोपाशस्सिꣳहो नकुलोव्याघ्रस्ते महेन्द्राय कामायपरस्वान् [५९]
अलजस्सुपर्णोऽष्टादशाष्टादश ॥ २१ ॥

सुपर्णः पार्जन्यो हꣳसोवृकोवृषदꣳशास्त ऐन्द्रा अपामुद्रोऽर्यम्णेलोपाश-
स्सिꣳहो नकुलोव्याघ्रस्ते महेन्द्राय कामायपरस्वान् ॥

என்பது.

உரை.

மேகத்துக்குக் கருடனும். இந்திரனுக்கு அன்னப்புள், செந்நாய், பூனை போன்ற ஒருவகை மிருகம் என்னும் இம்மூன்றும். நீருக்கு நீர்ப்பூனையும். அரியமன் என்னுந் தேவதையின் பொருட்டு நரியும். மகேந்திர தேவதையின்

பொருட்டு சிம்மம், கிரி, புலி என்னும் மூன்றும். காமன் பொருட்டு எருமையும் கொன்று வேட்கத்தக்கவைகள் என்பதாம்.

இருபத்தோராம் அநுவாகம்

முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் ஐந்தாம்பிரபாடகம்

இருபத்திரண்டாம் அநுவாகம்

மேற்கூறிய அநுவாகங்களில் காட்டிவுள்ள பசுவகைகள் கூறப்பட்டன. இதில், மேற்கூறப்படும் நாட்டுப் பசுக்கூட்டங்கள் மூன்றனுள் முதலாவது பசுக்கூட்டங் கூறப்படுகின்றது.

இருபத்திரண்டு பதங்களைக் கொண்டது.

आग्नेयः कृष्णग्रीवस्सारस्वतीमेषी बभ्रुस्सौम्यः पौष्णश्श्याम-
श्शितिपृष्ठो बार्हस्पत्यश्शिल्पो वैश्वदेव ऐन्द्रोऽरुणोमारुतः कल्माष
ऐन्द्राग्नस्सꣳहितोऽधोरामस्सावित्रोवारुणः पेत्वः ॥ [६०] आग्नेयो
द्वाविꣳशतिः ॥ २२ ॥

आग्नेयः कृष्णग्रीवस्सारस्वतीमेषी बभ्रुस्सौम्यः पौष्णश्श्यामश्शितिपृष्ठो
बार्हस्पत्यश्शिल्पो वैश्वदेव ऐन्द्रोऽरुणोमारुतः कल्माष ऐन्द्राग्नस्सꣳ-
हितोऽधोरामस्सावित्रोवारुणः पेत्वः ॥

என்பது.

உரை.

அக்கினிக்குக் கழுத்தில் கறுப்புடைய ஆடும். சரசுவதிக்குப் பெண் ஆடும் மங்கல் நிறமுடைய பெண் ஆடும். சோமதேவதைக்கும், பூஷாதேவதைக்குங் கறுப்பு நிறமுடையதும். பிருகற்பதிக்குப்பின்புறம் வெண்மையுடையதும். வைசுதேவருக்குப் பல்வகை நிறங்களையுடையதும். இந்திரனுக்குச் சிவப்பு நிறமுடையதும். மாருதத்திற்குக் கரும்புள்ளிகளை யுடையதும். இந்திராக்கினிக்குக் கறுப்புடன் கலந்ததும். சவிதாதேவதைக்கு வயிற்றில் வெள்ளையுங் கறுப்புமுடையதும். வருணனுக்கு வயது முதிர்ந்த ஆட்டுக் கடாவும் கொன்று வேட்கத்தக்கவைகள் என்பதாம்.

இருபத்திரண்டாவது அநுவாகம்

முற்றிற்று,

ஐந்தாங்காண்டம் ஐந்தாம்பிரபாடகம்

இருபத்துமூன்றாவது அநுவாகம்

இதில், இரண்டாவது நாட்டுப் பசுக்களின் கூட்டங் கூறப்படுகின்றது.

பதினாறு பதங்களைக் கொண்டது.

अश्वस्तूपरोगोमृगस्ते प्राजापत्या आग्नेयौ कृष्णग्रीवौ त्वाष्ट्रौ लोमशसक्थौ शितिपृष्ठौ बार्हस्पत्यौ धात्रे पृषोदरस्सौर्यो बलक्षः पेत्वः [६१] अश्वष्षोडश ॥ २३ ॥

अश्वस्तूपरोगोमृगस्ते प्राजापत्या आग्नेयौ कृष्णग्रीवौ त्वाष्ट्रौ लोमशसक्थौ शितिपृष्ठौ बार्हस्पत्यौ धात्रे पृषोदरस्सौर्यो बलक्षः पेत्वः ॥

என்பது.

உரை.

பிரசாபதிக்குக் குதிரை, மொட்டையாகிய ஆடு, கோஎருமையில் பிறந்த மிருகவிசேடம் என்னும் மூன்றும். அக்கினிக்குக் கழுத்தில் கறுப்புடைய இரண்டும். துவஷ்டா தேவதைக்கு துடைகளில் நிறைய மயிருள்ள இரண்டும். பிருகற்பதிக்குப் பின்புறத்தில் வெண்மை நிறமுடைய இரண்டும். தாதாவிற்கு வெள்ளைப் புள்ளிகள் வயிற்றிலுடைய இரண்டும். சூரியனுக்கு வெள்ளை நிறமுடையதும் வயது முதிர்ந்ததுமான ஆட்டுக்கடாவையுங் கொன்று வேட்கத்தக்கவைகள் என்பதாம்.

இருபத்து மூன்றாவது அநுவாகம்
முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் ஐந்தாம்பிரபாடகம்

இருபத்து நான்காவது அநுவாகம்

இதில், மூன்றாவது நாட்டுப்பசுக்களின் கூட்டங் கூறப்படுகின்றது.

இருபத்திரண்டு பதங்களைக் கொண்டது.

अग्नयेऽनीकवते रोहिताञ्जिरनड्वानधोरामौ सावित्रौ पौष्णौ रजतनाभी वैश्वदेवौ पिशङ्गौ तूपरौमारुतः कल्माष आग्नेयः

कृष्णोऽजस्सारस्वती मेषीवारुणः कृष्ण एकशितिपात्पेत्वः ॥

[६२] अग्नयेऽनीकवते द्वाविंशतिः ॥ २४ ॥

அநுவாகத்தின் தலைப்புச் சொற்களைக் கொண்ட முடிவுத்தொகை :—

यदेकेन प्रजापतिः श्रेणाऽनु यजुषाऽऽपो विश्वकर्माऽग्न आयाहि सुवर्गाय वज्रो गायत्रेणाग्न उदधे समीचीन्द्राय मयुरपां बलाय पुरुषमृगस्सौरी पृषतश्शका रुरुरलजः सुपर्ण आग्नेयोऽश्वोऽग्नयेऽनीकवते चतुर्विंशतिः ॥ २४ ॥

பஞ்சாதிகளின் தலைப்புச் சொற்களைக் கொண்ட முடிவுத் தொகை : —

यदेकेन स पापीयानेतद्वा अग्नेर्धनुस्तद्देवास्त्वेन्द्र ज्येष्ठा अपां नप्त्रेऽश्वस्तूपरोद्विषष्टिः ॥ ६२ ॥ यदेकेनैकं शितिपात्पेत्वः ॥

अग्नयेऽनीकवते रोहिताञ्जिरनड्वानधोरामौ सावित्रौ पौष्णौ रजतनाभी वैश्वदेवौ पिशङ्गौ तूपरोमारुतः कल्माष आग्नेयः कृष्णोऽजस्सारस्वती मेषीवारुणः कृष्ण एकशितिपात्पेत्वः ॥

என்பது.

உரை.

அநீகவத் (சைன்யமுடைய) அக்கினிக்குச் சிவப்புப் புள்ளியுடைய எருதும். சவிதாதேவதைக்கு வெளுப்புங் கறுப்புமுள்ள வயிறுடைய இரண்டும். பூஷா தேவதைக்கு வெள்ளை நாபியையுடைய இரண்டும். விசுவ தேவர்கட்கு மங்கல் நிறமுடைய இரண்டும். மருத்தேவதைக்குக் கொம்பில்லாத இரண்டும். அக்கினிக்குக் கழுத்தில் கறுப்புடைய ஆண் ஆட்டுக்கடாவும். சரசுவதிக்கு கறுப்பு நிறபெண் ஆடும். வருணனுக்கு ஒரு கால் கறுப்பு வெள்ளையுடைய கிழஆட்டுக் கடாவும் கொன்று வேட்கத் தக்கவைகள் என்பதாம்.

இருபத்து நான்காம் அநுவாகம்
முற்றிற்று.

ஐந்தாங்காண்டத்தில் ஐந்தாம்பிரபாடகமும்
முடிந்தது.

தும்பச்செங்கல்)

ஆறும்பிரபாடக விடயச்சுருக்கம்

कुम्भेष्टका मन्त्रणार्था हिरण्येति त्रयोदश ।
दिवीति चरुमादध्याद्देवस्येत्यभिषेचनम् ॥ १ ॥

सजूराहुतयः पञ्च घृतेनेत्यनुषज्यते ।
पृष्टो वैश्वानरीयाऽत्र पुरीषं स्थापयेत्तथा ॥ २ ॥

अन्वारोहेच्चितिं स्वामो पृथिवीमाक्रमीत्यतः ।
इष्टो यज्ञस्तस्यतेद्वे समिष्टयजुषीमते ॥ ३ ॥

पितामातेति मन्त्रेण चित्यग्नि मनुशंसति ।
अश्वमेधस्य पशवो रोहिताद्या उदीरिताः ॥ ४ ॥

இவ்வாறும் பிரபாடகத்தில், இருபத்து மூன்று அநுவாகங்கள் உள்ளன. அவற்றுள் முதலாவதில் கும்பேஷ்ட கைகளைப் போற்றுதற்குரிய மந்திரங்களும், இரண்டாவதில் மேற்கூறிய கும்பேஷ்டகைகளை வைப்பதின் விதியும், மூன்றுவதில் பூதேஷ்டகா என்னுஞ் செங்கல்களின் விதியும், நான்காவதில் தருப்பைஸ்தம்பத்தில் ஹோமமுதலியதும், ஐந்தாவதில் சில அவிகளும், ஆறுவதில் மேற்கூறிய அவிகளின் பிரசம்சையும், ஏழாவதில் தீக்ஷைகளின் விகல்பவிதியும், எட்டாவதில் 'அன்வாரோஹமும்' (சிதியின்மேல் ஏறுதல் முதலியதும்) ஒன்பதாவதில் உகாவை நாற்காலியில் வைத்தல் வேண்டும் என்பது முதலியதும், பத்தாவதில் மகாக்கினி சயனத்தை அனேகவிதமாக பிரசம்சிப்பதும், பதினொன்றுவது முதல் இருபத்து மூன்றுவதுவரையுள்ள பதின்மூன்று அநுவாகங்களில் அசுவமேதசம்பந்தமான பசுக்களுஞ் சொல்லப்படுகிறன என்பது.

ஐந்தாங்காண்டம் ஆறும்பிரபாடகம்

முதலாவது அநுவாகம்

கும்பேஷ்டகைகளைப் போற்றுதற்குரிய மந்திரங்கள்.

நான்கு பஞ்சாதிக்குமேல் இருபத்திரண்டு பதங்களைக் கொண்டது.

हिरण्यवर्णाश्शुचयः पावकायासु जातः कश्यपोयास्विन्द्रः ।
अग्निं यागर्भन्दधिरे विरूपास्तान आपश्शंस्योना भवन्तु ।
या साः राजावरुणो याति मध्येसत्यानृते अवपश्यञ्जनानाम् ।

मधुश्चुतश्शुचयो याः पावकास्तान आपश्शꣳस्योना भवन्तु ।
यासान्देवादिवि कृण्वन्ति भक्षंया अन्तरिक्षे बहुधा भवन्ति । याः
पृथिवीं पयसोन्दन्ति [१] शुक्रास्तान आपश्शꣳस्योना भवन्तु ;
शिवेनमाचक्षुषा पश्यतापश्शिवया तनुवोपस्पृशतत्वचम्मे । सर्वाꣳ
अग्नीꣳ रप्सुषदे हुवेवो मयिवर्चो बलमोजो निधत्त । यददस्सं-
प्रयतीरहावनदताहते । तस्मादानद्योनामस्थतावो नामानि सिन्धवः ।
यत्प्रेषिता वरुणेनताश्शीभꣳ समवल्गत । [२] तदाप्नोदिन्द्रो
वोयतीस्तस्मादापो अनुस्थन । अपकामꣳस्यन्दमाना अवीवरतवो-
हिकम् । इन्द्रोवश्शक्तिभिर्देवीस्तस्माद्वार्णामवोहितम् । एकोदेवो
अप्यतिष्ठत्स्यन्दमाना यथावशम् । उदानिषुर्महीरिति तस्मादुदक-
मुच्यते । आपो भद्रा घृतमिदाप आसुरग्नीषोमौ बिभ्रत्याप इत्ताः ।
तीव्रो रसो मधुपृचाम् [३] अरंगम आ मा प्राणेन सह वर्चसा
गन् । आदित्पश्याम्युत वा शृणोम्या मा घोषो गच्छति वाङ्न
आसाम् । मन्ये भेजानो अमृतस्य तर्हि हिरण्यवर्णा अतृपं यदा
वः । आपो हि ष्ठा मयोभुवस्ता न ऊर्जे दधातन । महे रणाय
चक्षसे । यो वश्शिवतमो रसस्तस्य भाजयतेह नः । उशतीरिव
मातरः । तस्मा अरं गमाम वो यस्य क्षयाय जिन्वथ । आपो
जनयथा च नः । दिवि श्रयस्वान्तरिक्षे यतस्व पृथिव्या सं भव

ब्रह्मवर्चसमसि ब्रह्मवर्चसाय त्वा [४] ॥ उन्दन्ति समवल्गत मधुपृचां मातरो द्वाविꣳशतिश्च ॥ १ ॥

இதில் கும்பேஷ்டகைகளை (கலசங்களாகிற செங்கல்களை) ப் போற்றுதற்குரிய மந்திரங்கள் கூறப்படுகின்றன.

முதலாவது இருக்கு மந்திரம்.

हिरण्यवर्णाश्शुचयः पावकायासु जातः कश्यपोयास्विन्द्रः । अग्निं यागर्भन्दधिरे विरूपास्तान आपश्शꣳस्योना भवन्तु ।

என்பது.

உரை.

ஒளியுடைமையானும் அழுக்கிலாமையானும் பொன்போன்ற நிறமுடையதும், இயற்கைப் புநிதமுடையதும், புநிதப்படுத்துவதும், 'கசியபன்' என்னும் பிரசாபதியின் பிறப்பிடமும், இந்திரனுடைய பிறப்பிடமும், அக்கினியைக் கருப்பத்திலுடையதுமாகிய தண்ணீர் எம்மைச் சுகப்படுத்துக என்பதாம்.

இரண்டாவது இருக்கு மந்திரம்.

यासाꣳराजावरुणो याति मध्येसत्यानृते अवपश्यञ्जनानाम् । मधुश्चुतश्शुचयो याः पावकास्तान आपश्शꣳस्योना भवन्तु ।

என்பது

உரை.

இதில் நீராடுகின்றவர்களின், குடிக்கின்றவர்களின் பொய் மெய்களை உணர்ந்து கொண்டுள்ள வருணன் இரகசியமாக தன்னுள் சஞ்சரிக்கப் பெற்றதும், மதுரமாகிய இரசத்தை ஒழுகுவதும், என்பது விசேடம் மற்றவை முன்போன்றன என்பதாம்.

மூன்றாவது இருக்கு மந்திரம்.

यासान्देवा दिवि कृण्वन्ति भक्षया अन्तरिक्षे बहुधा भवन्ति । याः पृथिवीं पयसोन्दन्ति शुक्रास्तान आपश्शꣳस्योना भवन्तु ।

என்பது.

உரை.

இதில் வானுலகிலுள்ள தேவர்கட்குத் தனது சாரத்தை அருத்துவிப்பதும், தேவர்கள் அருந்துவது நீரின்சாரம் என்பதாம். அந்தரிட்சத்தில் மழையின் தாரைகளாகப் பல்வகையாயிருப்பதும், பூமியை தனது ஈரத்தால் நனையச் செய்வதும், என்பது விசேடம் மற்றவை முன்போன்றன என்பதாம்.

நான்காவது இருக்கு மந்திரம்.

शिवेनमाचक्षुषा पश्यतापश्शिवया तनुवोपस्पृशतत्वचम्मे । सर्वाँ॑ अग्नीँ॑-रफ्सुषदो हुवेवो मयिवर्चो बलमोजो निधत्त ।

என்பது.

உரை.

தண்ணீரே! நீ, குளிர்ந்தகண்ணால் எம்மைப் பார்ப்பாயாக. சாந்தமான உனது திருமேனியால் எம்மைத் தொடுவாயாக. யானும், நீரிலுள்ள அக்கினிகள் எல்லாவற்றிற்கும் ஹோமஞ் செய்கின்றேன். உன்னிடத்திலுள்ள, காந்தியையும், வன்மையையும், தாதுவையும் எம்பால் வைப்பாயாக என்பதாம்.

ஐந்தாவது இருக்கு மந்திரம்.

यददस्संप्रयतीरहावनदताहते । तस्मादानद्योनामस्थतावो नामानि सिन्धवः ।

என்பது.

உரை.

வானுலகிலிருந்து செல்கின்ற தண்ணீரே! நீ, மேகத்தில் அடிபடுவதால் நதி என்றும், ஒழுகுந் தன்மையால் சிந்து என்றும் பல்வகை காரணப் பெயர்களை யுடைத்தாயிருக்கின்றாய் என்பதாம்.

ஆருவது இருக்கு மந்திரம்.

यत्प्रेषिता वरुणेन ताश्शीभँ॑ समवल्गत । तदाप्नोदिन्द्रोवोवयीस्तस्मादापो अनुस्थन ।

என்பது.

சேங்கல்)

உரை.

தண்ணீரே ! நீ, வருணனாலேவப்பட்டு ஆனந்தக் கூத்தாடும் போது, இந்திரன், உன்னைப் பார்ப்பதற்கு வந்தடைந்ததால் ஆபः என்னும் பெயர் பெற்று அனைவருக்கும் அநுகூலமா யிருக்கின்றாய் என்பதாம்.

ஏழாவது இருக்கு மந்திரம்.

अपकामँस्यन्दमाना अवीवरतवोहिकम् । इन्द्रोवश्शक्तिभिर्देवीस्तस्माद्वार्णा-मवोहितम् ।

என்பது.

உரை.

தண்ணீரே ! நீ, இயற்கையாய் ஒழுகியோடுந் தன்மையுடையாய். அவ்வண்ணம் ஒழுகிப் போம்போது இந்திரன் வரித் (அழைத்) தலால் 'வாः' என்னும் பெயர்வந்தது என்பதாம்.

எட்டாவது இருக்கு மந்திரம்.

एकोदेवो अप्यतिष्ठत्स्यन्दमाना यथावशम् । उदानिषुर्महीरिति तस्मादुदक-मुच्यते ।

என்பது.

உரை.

இயற்கையாய் ஒழுகுந்தன்மையுடைய நீரை, இந்திரனாகிய ஒரு தேவன் தன்வசப்படுத்தியதால் உத்கர்ஷமாகி (மிகவுயர்வாகி) ய செய்கையை யடைந்து 'உதகம்' என்னும் பெயர் பெற்றது என்பதாம்.

ஒன்பதாவது இருக்கு மந்திரம்.

आपो भद्रा घृतमिदाप आसुरग्नीषोमौ बिभ्रत्याप इत्ताः । तीव्रो रसो मधु-पृचामरंगम आ मा प्राणेन सह वर्चसा गन् ।

என்பது.

உரை.

மங்களமாகிய தண்ணீர் பசுவின் உடம்பிற் புகுந்து நெய்யாய் அதன்வாயிலாக அக்கினி சோமன் என்னுந் தேவர்களைப் பாதுகாக்கின்றது. மதுரத்தன்மையுடைய நீரின் சாரமாகிய இரசம் எல்லா உயிர்கட்கு

உறுதியைக் கொடுக்கின்றது. அத்தகைய இரசம், பிராணவாயுவுடனும், வன்மையோடும் எம்மை வந்தடைக. நீரின்ரசம் உடம்பில் இருக்கும்வரை பிராணனும் போகாது வன்மையுங் கெடாது என்பதாம்.

பத்தாவது இருக்கு மந்திரம்.

आदित्पश्याम्युत वा शृणोम्या मा घोषो गच्छति वाङ्न आसाम् । मन्ये भेजानो अमृतस्य तर्हि हिरण्यवर्णा अतृपं यदावः ।

என்பது.

உரை.

தண்ணீரின் இரசம் எனது உடம்பில் வந்தவுடனேயே பார்க்குமாற்ற லுடையவனு யிருக்கின்றேன். கேட்கவும் வன்மையுடையவனு யிருக்கின் றேன். தண்ணீரின் ஒலியே என்னிடத்தில் வாக்காக இருக்கின்றது. ஒளி யுடைய தண்ணீரே! உனையருந்திக் களிப்புறும்போது அமுதத்தை யருந் தியதாகக் கருதுகின்றேன் என்பதாம்.

பதினோராவது இருக்கு மந்திரம்.

आपो हि ष्ठा मयोभुवस्ता न ऊर्जे दधातन । महे रणाय चक्षसे ।

என்பது.

உரை.

தண்ணீரே! நீயே! சுகந்தருவதாயிருக்கின்றாய். நீராடல் அருந்தல் முதலியவைகளால் சுகமுண்டாக்குதல் யாண்டும் வெளிப்படை. அத்தகைய தண்ணீரே! நீ, உனது இரசத்தை அநுபவிக்கும்படி நிறுவுவாயாக. மற் றும், பரதத்துவத்தை உள்ளவாறு காணுவதற்கு எம்மை-உரியவர்களாகச் செய்வாயாக என்பதாம்.

பன்னிரண்டாவது இருக்கு மந்திரம்.

यो व शिवतमो रसस्तस्य भाजयतेह नः । उशतीरिव मातरः ।

என்பது.

உரை.

தண்ணீரே! உன்னுடைய இரசத்தை, தனது குழந்தைக்கு அன்போடு அன்னை முலைப்பாலருத்துவது போல் எமக்கு அருத்துவாயாக என்ப தாம்.

பதின்மூன்றுவது இருக்கு மந்திரம்.

तस्मा अरं गमाम वो यस्य क्षयाय जिन्वथ । आपो जनयथा च नः ।

என்பது.

உரை.

எந்த இரசமிருத்தலால், தண்ணீரே! நீ பிரியமடைகின்றனையோ! அந்த இரசத்தின் பொருட்டு நிறைய உன்னையடைகின்றோம். மற்றும், எமக்குப் பிரசைகளை யுண்டாக்குவாயாக என்பதாம்.

மேற்கூறிய பதின்மூன்று மந்திரங்களாலுமாம், கலசமாகிற செங்கல்களைப் போற்றல் வேண்டும் என்பதாம். இது, கா-4—பிர-3-அநு-1-ல் விநியோகிக்கப்பட்டிருக்கின்றது.

செந்நெல் அரிசிப் பொங்கலை வைத்தற்குரிய மந்திரம்.

பதினான்காவது எசுர்மந்திரம்.

दिवि श्रयस्वान्तरिक्षे यतस्व पृथिव्या सं भव ब्रह्मवर्चसमसि ब्रह्मवर्चसाय त्वा ॥

என்பது.

உரை.

செந்நெல் அரிசிப் பொங்கலே! நீ, வானுலகில் நிலைத்திருப்பாயாக. அந்தரிக்ஷத்திலும் முயல்வாயாக. பூமியிலுஞ் சேர்ந்திருப்பாயாக. பிரமவொளிக்குச் சாதனமாதலின் அவ்வடிவாயிருக்கின்றாய் பிரமவொளியின் பொருட்டு உன்னை வைக்கின்றேன் என்பதாம். இம்மந்திரத்தால், செந்நெல் அரிசிப்பொங்கலை, நடுவில்வைக்கும் நான்கு கலசச்செங்கல்களின் நடுவிற் போட்டுவிடல் வேண்டும். இது, கா-4-பிர-3-அநு-1ல் விநியோகிக்கப்பட்டிருக்கின்றது.

முதலநுவாகம்
முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் ஆறும்பிரபாடகம்

இரண்டாவது அநுவாகம்

கலசச்செங்கல்களை வைப்பதைக் கூறும் பிராமணங்கள்.

ஐந்து பஞ்சாதிக்குமேல் நாற்பத்தேழு பதங்களைக் கொண்டது.

अपां ग्रहान्गृह्णात्येतद्वाव राजसूयं यदेते ग्रहास्सवोऽग्निर्वरुणसवो राजसूयमग्निसवश्चित्यस्ताभ्यामेव सूयतेऽथो उभावेव लोकावभिजयति यश्च राजसूयेनेजानस्य यश्चाग्निचित आपो भवन्त्यापो वा अग्नेर्भ्रातृव्या यदपोऽग्नेरधस्तादुपदधाति भ्रातृव्याभिभूत्यै भवत्यात्मना पराऽस्य भ्रातृव्यो भवत्यमृतम् [५] वा आपस्तस्मादद्भिरवतान्तमभिषिञ्चन्ति नाऽऽर्तिमार्छति सर्वमायुरेति यस्यैता उपधीयन्ते य उ चैना एवं वेदान्नं वा आपः पशव आपोऽन्नं पशवोऽन्नादः पशुमान्भवति यस्यैता उपधीयन्ते य उ चैना एवं वेद द्वादश भवन्ति द्वादश मासास्संवत्सरस्संवत्सरेणैवास्मै [६] अन्नमव रुन्धे पात्राणि भवन्ति पात्रे वा अन्नमद्यते सयोन्येवान्नमव रुन्ध आ द्वादशात्पुरुषादन्नमत्त्यथो पात्रान्न च्छिद्यते यस्यैता उपधीयन्ते य उ चैना एवं वेद कुम्भाश्च कुम्भीश्च मिथुनानि भवन्ति मिथुनस्य प्रजात्यै प्र प्रजया पशुभिर्मिथुनैर्जायते यस्यैता उपधीयन्ते य उ [७] चैना एवं वेद शुग्वा अग्निस्सोऽध्वर्युं यजमानं प्रजाश्शुचाऽर्पयति यदप उपदधाति

शुचमेवास्य शमयति नाऽऽर्तिमार्छत्यध्वर्युर्न यजमानश्शाम्यन्ति प्रजा यत्रैता उपधीयन्तेऽपां वा एतानि हृदयानि यदेता आपो यदेता अप उपदधाति दिव्याभिरेवैनास्सꣳ सृजति वर्षुकः पर्जन्यः [८] भवति यो वा एतासामायतनं क्लृप्तिं वेदाऽऽयतनवान्भवति कल्पतेऽस्मा अनुसीतमुप दधात्येतद्वा आसामायतनमेषा क्लृप्तिर्य एवं वेदाऽऽयतनवान्भवति कल्पतेऽस्मै द्वंद्वमन्या उप दधाति चतस्रो मध्ये धृत्या अन्नं वा इष्टका एतत्खलु वै साक्षादन्नं यदेष चरुर्यदेतं चरुमुपदधाति साक्षात् [९] एवास्मा अन्नमव रुन्धे मध्यत उप दधाति मध्यत एवास्मा अन्नं दधाति तस्मान्मध्यतोऽन्नमद्यते बार्हस्पत्यो भवति ब्रह्म वै देवानां बृहस्पतिर्ब्रह्मणैवास्मा अन्नमव रुन्धे ब्रह्मवर्चसमसि ब्रह्मवर्चसाय त्वेत्याह तेजस्वी ब्रह्मवर्चसी भवति यस्यैष उपधीयते य उ चैनमेवं वेद [१०] ॥ अमृतमस्मै जायते यस्यैता उपधीयन्ते य उ पर्जन्य उपदधाति साक्षात्सप्तचत्वारिꣳशच्च ॥ २ ॥

இதில், மேலே போற்றப்பெற்ற கும்பச் செங்கல்களை வைக்கும் முறை கூறப்படுகின்றது.

அத்தகைய கலச்செங்கல்களை வைப்பதை விதிக்கின்றது.

பிராமணம் —1

अपां ग्रहान्गृह्णात्येतद्वाव राजसूयं यदेते ग्रहास्सवोऽग्निर्वरुणसवो राजसूयमग्निसवश्चित्यस्ताभ्यामेव सूयतेऽथो उभावेव लोकावभिजयति यश्च राजसूयेनेजानस्य यश्चाग्निचितः ।

என்பது.

உரை.

கும்பம்=பெரியகலசம், கும்பீ=சிறியகலசம். இவ்விரண்டும் ஆண் பெண் எனப்படுகின்றன. இவ்விருவகையான மட்கலசங்களில் நீர்நிறைத்து கிழக்கு முதலிய திக்குக்களில் ஏருழுத படைச்சால்களைத் தழுவிவைத்தல் வேண்டும். இராசசூயயாகத்திலும் நீரை நிறைத்தல் இருத்தலின் இவ்விரண்டும் ஒப்பாமென்க. மற்றும், அபிடேகமுடைய வேள்விக்கு, 'சவம்' என்று பெயர். இவ்வக்கினி சயனத்திலும் அபிடேகஞ் செய்தலிருத்தலின் அக்கினி சயனமும் சவமாம். ஒருகால், வருணன் இராசசூயஞ் செய்து அபிடேகஞ் செய்துகொண்டதால் இராசசூயத்திற்கு 'வருணசவம்' என்பதும் பெயராம். அக்கினி சயனமுடையது அக்கினிசவம். இம்மகாக்கினி சயனத்தில் கலசச் செங்கல்களை வைத்தலால் வருணசவஞ் செய்தவனடையுமுலகையும், அக்கினி சவஞ் செய்தவனடையுமுலகையும் அடைந்தவனாகின்றான் என்பதாம்.

கும்பம், கும்பீ என்னும் இருவகைக் கலசங்களிலும் தண்ணீர் வைப்பதை விதிக்கின்றது.

பிராமணம்—2

आपो भवन्त्यापो वा अग्नेर्भ्रातृव्या यदपोऽग्नेरधस्तादुपदधाति भ्रातृव्याभिभूत्यै भवत्यात्मना पराऽस्य भ्रातृव्यो भवत्यमृतं वा आपस्तस्मादद्भिरवतान्तमभिषिञ्चन्ति ।

என்பது.

உரை.

தண்ணீரால், தீ அணைதலின் தண்ணீர் அக்கினியின் பகையாம். ஆதலின் சயனஞ் செய்த அக்கினிக்குக் கீழ் பூமியில் கலசங்களில் தண்ணீரை வைத்தலால் அக்கினியின் பகைவனைத் தாழ்த்தியதாகும். இதனால், வைக்கின்றவன் சம்பத்துடையவனாகின்றான். மற்றும், வைக்கும் தண்ணீர் அமுதமுமாகும். ஏனெனின்? தண்ணீரே அமுதமாம். இதுபற்றியே, களைப்பால் மயங்கிக்கிடப்பவன் முகத்தில் தண்ணீரை இறைத்தால் அவன் களைதெளிகின்றான் என்பதாம்.

சேங்கல்)

இவற்றை வைத்தலையும், உணர்வதையும் புகழ்கின்றது.

பிராமணம்—3

नाऽऽर्तिमार्छति सर्वमायुरेति यस्यैता उपधीयन्ते य उ चैना एवं वेद ।

என்பது.

உரை.

கலசச் செங்கல்களை வைத்தவனும், அவற்றை யுணர்ந்தவனும் துன்ப மடையான். நிறைந்த ஆயுளையுமடைவான் என்பதாம்.

மற்றோராற்றால் தண்ணீரைப் புகழ்கின்றது.

பிராமணம்—4

अन्नं वा आपः पशव आपोऽन्नं पशवोऽन्नादः पशुमान्भवति यस्यैता उपधीयन्ते य उ चैना एवं वेद ।

என்பது.

உரை.

உணவுப் பொருள்கள் தண்ணீரால் உண்டாகின்றவைகள். பசுக்கள் தண்ணீரால் பாதுகாப்பாற்றப்படுகின்றன. பால் முதலிய அன்னங்கட்கு பசுக்கள் காரணங்களானதால் பசுக்கள் அன்னமாம். இவ்வாற்றால் தண்ணீரை யுணர்ந்தவனும் வைத்தவனும் பசுக்களையும் உணவுப் பொருள்களையு மடைகின்றான் என்பதாம்.

நீர் வைக்கும் பாத்திரங்களின் எண்ணிக்கையை விதிக்கின்றது.

பிராமணம்—5

द्वादश भवन्ति द्वादश मासास्संवत्सरस्संवत्सरेणैवास्मा अन्नमवरुन्धे ।

என்பது.

உரை

பன்னிரண்டு தண்ணீர்ப்பாத்திரங்களை வைத்தலால் பன்னிரண்டு மாதங் கொண்ட ஒருவருடத்தில் உணவுப் பொருள்களை யடைகின்றான் என்பதாம்.

வைக்கவேண்டிய தண்ணீரின் ஆதாரங்களை விதிக்கின்றது.

பிராமணம்—6

पात्राणि भवन्ति पात्रे वा अन्नमद्यते सयोन्येवान्नमवरुन्ध आ द्वादशा-त्पुरुषादन्नमत्त्यथो पात्रान्नछिद्यते यस्यैता उपधीयन्ते य उ चैना एवं वेद ।

என்பது.

உரை.

கும்பம் கும்பீ என்னும் இருவகை மட்கலசங்களும் தண்ணீருக்கு ஆதாரங்களாக இருத்தலின், உலகிலும் ஏதாகிலுமொரு பாத்திரத்தில் அன்னத்தை யுண்கின்றனராதலின், அன்னத்திற்குக் காரணமாகிய பாத்திரத்துடன்கூட உணவுப் பொருளையு மடைகின்றான். மற்றும், பன்னிருதலைமுறைகள் பாத்திரம் வீடு முதலிய உபகரணங்களுடன் கூடியே யிருக்கின்றான் அவைகள் இவனை விட்டு நீங்குவதில்லை என்பதாம்.

பாத்திரங்களின் உருவவிசேஷத்தை விதிக்கின்றது.

பிராமணம்—7

कुम्भाश्च कुम्भीश्च मिथुनानि भवन्ति मिथुनस्य प्रजात्यै प्र प्रजया पशुभि-र्मिथुनैर्जायते यस्यैता उपधीयन्ते य उ चैना एवं वेद ।

என்பது.

உரை.

ஆணைப்போன்ற பெரிய கலசங்களும் பெண்ணைப்போன்ற சிறிய கலசங்களுமாக இருத்தலால் இவற்றை வைக்கின்றவனும் உணர்கின்றவனும் புணர்ச்சியுடையர்களாய்க் குழந்தை முதலிய பிரசைகளை யுண்டாக்குகின்றார்கள் என்பதாம்.

வேறோராற்றால் கலசச் செங்கல் வைத்தலைப் புகழ்கின்றது

பிராமணம்—8

शुग्वा अग्निस्सोऽध्वर्युं यजमानं प्रजाश्शुचाऽर्पयति यदप उपदधाति शुच-मेवास्य शमयति नाऽऽर्तिमार्छत्यध्वर्युर्न यजमानश्शाम्यन्ति प्रजा यत्रैता उपधीयन्ते ।

என்பது.

உரை.

அக்கினி, சுடுந்தன்மையுடையதால் வேட்போன் முதலானோர்களைச் சுடுகின்றது. ஆதலின், தண்ணீரை வைத்தலால் அத்தகையசூடு தணிகின்

செங்கல்)

றது தணிதலால், கலசச் செங்கற்களை வைக்கும் வேள்விகளில் வேட்போன் வேள்வித் தலைவன் முதலானோர்கள் கெடமாட்டார்கள். குழந்தை முதலான பிரசைகளும் துன்பின்றி யுண்டாகும் என்பதாம்.

மற்றுமோரு வகையாற் புகழ்கின்றது.

பிராமணம்—9

अपां वा एतानि हृदयानि यदेता आपो यदेता अप उपदधाति दिव्याभि-रेवैनास्सं सृजति वर्षुकः पर्जन्यो भवति ।

என்பது.

உரை.

கலசங்களிலுள்ள தண்ணீர்கள் அப்புத்தேவதையின் இதயங்கள் ஆதலின், இத்தகைய தண்ணீருடன் பாத்திரங்களை வைக்கின்றவனுக்கு இது தண்ணீருடன் சேர்க்கையை உண்டாக்குகின்றது. உண்டாக்கவே, மழை பெய்யும் ஆதலின் மழையை யுண்டாக்குவோனாகின்றான் என்பதாம்.

அவற்றை வைக்குமிடத்தை விதிக்கின்றது.

பிராமணம்—10

यो वा एतासामायतनं क्लृप्तिं वेदाऽऽयतनवान्भवति कल्पतेऽस्मा अनु-सीतमुप दधात्येतद्वा आसामायतनमेषा क्लृप्तिः ।

என்பது.

உரை.

கலசச் செங்கல்களின் இடங்களையும், வன்மையையும் உணர்ந்தவன் பெரிய வீடு முதலானவைகளை யடைகின்றான். இவன் எல்லாச் சம்பத்தையு மடைகின்றான். ஆதலின், பெரியார்கள், ஒவ்வொரு திக்கிலும் ஏரின் படைச்சால்களைத் தழுவிவைத்தல் வேண்டும் மென்கின்றனர். அவைகளிடத்தில் வன்மைகளிருக்கின்றன என்பதாம்.

இதை உணர்ந்தவனுடைய பயனை முடிக்கின்றது.

பிராமணம்—11

य एवं वेदाऽऽयतनवान्भवति कल्पतेऽस्मै ।

என்பது.

உரை.

இவ்வாறுணர்ந்தவன் அவனுக்குரிய வீட்டையும், வன்மையையும் அடைகின்றான் என்பதாம்.

கும்பச் செங்கல்களை வைப்பதில் மற்றொரு விசேடத்தை விதிக்கின்றது.

பிராமணம்—12

द्वंद्वमन्या उप दधाति चतस्रो मध्ये धृत्यै ।

என்பது.

உரை.

கிழக்கு முதலிய நான்கு திக்குக்களிலுமுள்ள மூன்று ஏர்ப்படைச் சால்களில் திக்குஒன்றுக்கு இரண்டிரண்டையு மீந்த நான்கையும் நடுவிலும் வைத்தல் உறுதிப்பாட்டின் பொருட்டு என்பதாம்.

முற்கூறிய செந்நெல்லரிசிப் பொங்கல் வைப்பதை விதிக்கின்றது.

பிராமணம்—13

अन्नं वा इष्टका एतत्खलु वै साक्षादन्नं यदेष चरुर्यदेतं चरुमुपदधाति साक्षादेवास्मा अन्नमवरुन्धे ।

என்பது.

உரை.

செங்கல்கள் அன்னங்கட்குக் காரணங்களாதலின் அன்னங்களா (உணவுப்பொருளா)ம், பொங்கல் நேரே உணவுப் பொருளாம், ஆதலின், தடையின்றி இவற்றை வைப்பதால் அன்னத்தை யடைகின்றான் என்பதாம்.

பொங்கல் வைக்கும் இடத்தை விதிக்கின்றது.

பிராமணம்—14

मध्यत उप दधाति मध्यत एवास्मा अन्नं दधाति तस्मान्मध्यतोऽन्नमद्यते ।

என்பது.

உரை.

கலசச் செங்கல்களின் நடுவில் பொங்கலை வைத்தல் எசமானனுடைய உடம்பின் நடுவிலுள்ள வயிற்றில் அன்னத்தை வைத்ததாகும். இதனால், நடுவிலுள்ள வயத்தில் மிகுந்த உணவுப் பொருளையுண்கின்றான் என்பதாம்.

போங்கலுக்குத் தேவதை இதுவேன்கின்றது.

பிராமணம்—15

बार्हस्पत्यो भवति ब्रह्म वै देवानां बृहस्पतिर्ब्रह्मणैवास्मा अन्नमवरुन्धे ।

என்பது.

உரை.

பிருகற்பதி (குரு) தேவதையாம். தேவர்களுக்குப் பிரமன் குருவாதலின் பிராமண விருத்தியாலேயே உணவுப் பொருள்களை யடைகின்றான் இதர தொழிகளாலன்று என்பதாம்.

மந்திரத்திலுள்ள, பிரமவர்ச்சஸ் (பிரமவொளி) என்னும் இரண்டு சொற்களின் கருத்தை விளக்குகின்றது.

பிராமணம்—16

ब्रह्मवर्चसमसि ब्रह्मवर्चसाय त्वेत्याह तेजस्वी ब्रह्मवर्चसी भवति यस्यैष उपधीयते य उ चैनमेवं वेद ॥

என்பது.

உரை

பிரமவர்சஸாக இருக்கின்றாய். பிரமவர்ச்சஸின் பொருட்டு உன்னை வைக்கின்றேன் என்றது. இவற்றை யுணர்கின்றவனும் வைக்கின்றவனும் அழகையும், வேதமோதல் முதலிய சம்பத்தையு மடைகின்றான் என்பதாம்.

இரண்டாமநுவாகம்
முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் ஆறும்பிரபாடகம்

மூன்றுவது அநுவாகம்

பூதச்செங்கல் முதலியதைக் கூறும் பிராமணங்கள்.

மூன்று பஞ்சாதிக்குமேல் நாற்பத்தெட்டுப் பதங்களைக்கொண்டது.

भूतेष्टका उप दधात्यत्रात्र वै मृत्युर्जायते यत्रयत्रैव मृत्युर्जायते

तत एवैनमव यजते तस्मादग्निचित्सर्वमायुरेति सर्वे ह्यस्य मृत्य-

वोऽवेष्टास्तस्मादग्निचिन्नाभिचरितवै प्रत्यगेनमभिचारस्स्तृणुते सू-
यते वा एष योऽग्निं चिनुते देवसुवामेतानि हवीꣳषि भवन्त्येता-
वन्तो वै देवानाꣳ सवास्त एव [११] अस्मै सवान्प्र यच्छन्ति त
एनꣳ सुवन्ते सवोऽग्निर्वरुणसवो राजसूयं ब्रह्मसवश्चित्यो देवस्य
त्वा सवितुः प्रसव इत्याह सवितृप्रसूत एवैनं ब्रह्मणा देवताभिरभि
षिञ्चत्यन्नस्यान्नस्याभिषिञ्चत्यन्नस्यान्नस्यावरुद्ध्यै पुरस्तात्प्रत्यञ्च-
मभिषिञ्चति पुरस्ताद्धि प्रतीचीनमन्नमद्यते शीर्षतोऽभि षिञ्चति
शीर्षतो ह्यन्नमद्यत आ मुखादन्ववस्रावयति [१२] मुखत एवास्मा
अन्नाद्यं दधात्यग्नेस्त्वा साम्राज्येनाभि षिञ्चामीत्याहैष वा अग्ने
स्सवस्तेनैवैनमभि षिञ्चति बृहस्पतेस्त्वा साम्राज्येनाभि षिञ्चा-
मीत्याह ब्रह्म वै देवानां बृहस्पतिर्ब्रह्मणैवैनमभि षिञ्चतीन्द्रस्य
त्वा साम्राज्येनाभि षिञ्चामीत्याहेन्द्रियमेवास्मिन्नुपरिष्टाद्दधा-
त्येतत् [१३] वै राजसूयस्य रूपं य एवं विद्वानग्निं चिनुत उभा-
वेव लोकावभि जयति यश्च राजसूयेनेजानस्य यश्चाग्निचित
इन्द्रस्य सुषुवाणस्य दशधेन्द्रियं वीर्यं पराऽपतत्तद्देवास्सौत्रामण्या
समभरन्त्सूयते वा एष योऽग्निं चिनुतेऽग्निं चित्वा सौत्रामण्या
यजेतेन्द्रियमेव वीर्यꣳ संभृत्याऽऽत्मन्धत्ते [१४] ॥ त एवान्ववं-
स्रावयत्येतदष्टाचत्वारिꣳशच्च ॥ ३ ॥

இதில், பூதச்செங்கல் முதலியவை கூறப்படுகின்றன.

சேங்கல்)

பூதச்சேங்கலின் விதி.

பிராமணம்—1

भूतेष्टका उप दधात्यत्रात्र वै मृत्युर्जायते यत्रयत्रैव मृत्युर्जायते तत एवैन-
मव यजते तस्मादग्निचित्सर्वमायुरेति सर्वं ह्यस्य मृत्यवोऽवेष्टास्तस्मादग्नि-
चिन्नाभिचरितवै प्रत्यगेनमभिचारस्स्तृणुते ।

என்பது.

உரை.

எங்கெங்கு எப்போதெப்போது, அதாவது, பாம்பு முதலியவைகள் வசிக்குமிடங்களிலும் மாலை உச்சியாகிய இராக்கதர் நடமாடுஞ் சமயங்களிலும் தீயவுணவு முதலியவைகளால் உண்டாகும் அவமிருத்து இப்பூதச் செங்கல் வைத்தலால் நீங்குகின்றது. ஆதலின், எசமானன் நிறைந்த வாழ்நாளை யடைகின்றான். மற்றும், இவன், எல்லா அவமிருத்துக்களையும் போக்கி நிறைந்த ஆயுளையடைந்தோனாதலின் பில்லி சூனியமுதலிய வைப்புச் செய்கைகளும் இவனிடத்திற் செல்லாது. மற்றோ, அது செய்தவனையே கெடுக்கும் என்பதாம்.

தேவசுவ இஷ்டிவிதி.

பிராமணம்—2

सूयते वा एष योऽग्निं चिनुते देवसुवामेतानि हवींषि भवन्त्येतावन्तो वै
देवानाꣳ सवास्त एवास्मै सवान्प्र यच्छन्तित एनꣳ सुवन्ते ।

என்பது.

உரை.

அக்கினி சயனஞ் செய்கின்றவன் தேவர்களால் ஏவப்பெறுகின்றான். ஆதலின், கிருகபதியாகிய அக்கினி முதலிய தேவர்களின் பொருட்டு நெல்லெடுத்து அவிசெய்தல் வேண்டும். தேவர்களுக்குள் கிருகபதியாகிய அக்கினி முதலிய இத்தேவர்களே எசமானனை ஏவுகின்றவர்கள். இவர்களே எசமானனுக்கு வேண்டிய அநுக்ஞைகளைக் கொடுக்கின்றார்கள் என்பதாம்.

அபிடேகத்தை எடுத்துப்பேசுகின்றது.

பிராமணம்—3

सवोऽग्निर्वरुणसवो राजसूयं ब्रह्मसवश्चित्यः ।

என்பது.

உரை.

அபிடேகத்துடன் கூடியயாகம் 'சவம்' எனப்படுமென்பது முன்னர்க் கூறப்பட்டது. அந்தயாகம், வருணசவம் என்றும், பிராமணசவம் என்றும் இருவகைப்படும். இராசசூயம் அரசனுடைய தாமாதலின் வருணசவமாம். வருணன் அரசாபிமானி தேவனுவன். அக்கினி சயனம் பிராமணர்களால் அநுட்டிக்கப்படுவதால் பிராமண சவமாம். அக்கினி தேவன் பிராமண அபிமானி தேவனுவன். இவ்வாற்ருல் இதுவும் சவமாமாதலின் அபிடேகஞ் செய்தலமையும் என்பதாம்.

அபிடேகத்தை விதிக்கின்றது.

பிராமணம்—4

देवस्य त्वा सवितुः प्रसव इत्याह सवितृप्रसूत एवैनं ब्रह्मणा देवताभिरभिषिञ्चति ।

என்பது.

உரை.

"தேவஸ்யத்வாஸவிதுஃ ப்ரஸவே" என்றது, பரமான்மாவால் ஏவப்பெற்று மந்திரங்களிற் கூறிய தேவதைகளால் அபிடேகஞ் செய்துகொள்ளப் பெற்றவனுகின்ருன் என்பதாம்.

எல்லாத்தானியங்களின் இரசங்களும் அபிடேகத்திற்குரியவைகள் என விதிக்கின்றது.

பிராமணம்—5

अन्नस्यान्नस्याभिषिञ्चत्यन्नस्यान्नस्यावरुद्ध्यै ।

என்பது.

உரை.

அன்னங்களாகிற பதினன்கு வகைத்தானியங்களின் கஞ்சியால் அபிடேகஞ் செய்வதால் உணவுப் பொருள்களனைத்தையு மடைகின்ருன் என்பதாம்.

மற்றொரு விசேடத்தை விதிக்கின்றது.

பிராமணம்—6

पुरस्तात्प्रत्यञ्चमभिषिञ्चति पुरस्ताद्धि प्रतीचीनमन्नमद्यते शीर्षतोऽभि षिञ्चति शीर्षतो ह्यन्नमद्यते ।

என்பது.

உரை.

கிழக்கில் மேற்கு முகமாக நேரேநின்றுகொண்டு வேட்போன் வேள்வித் தலைவனுடைய தலையின்மீது அபிடேகஞ் செய்தல் வேண்டும். இதுபற்றியே, உலகில், எதிரில் ஒருபாத்திரத்தில் வைத்த வுணவை நேரே அருந்துகின்றனர். தலையில் அபிடேகஞ் செய்தலால் தலையிலுள்ள வாயால் அன்னம் அருந்தப்படுகின்றது என்பதாம்.

மற்றொரு குணத்தை விதிக்கின்றது.

பிராமணம்—7

आमुखादन्ववस्रावयति मुखत एवास्मा अन्नाद्यं दधाति ।

என்பது.

உரை.

தலையிலிருந்து முகம்வரை வழியும்படி அபிடேகஞ் செய்தல் வேண்டும், அதற்குக் கீழே வழிதல் கூடாது. இதுபற்றியே வாயிலிருந்து உணவுப் பொருள்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன என்பதாம்.

மந்திரங்களிலுள்ள, அக்கினி பிருகஸ்பதி இந்திரன் என்னுஞ் சொற்களின் கருத்தை உரைக்கின்றது.

பிராமணம்—8

अग्नेस्त्वा साम्राज्येनाभि षिञ्चामीत्याहैष वा अग्नेस्सवस्तेनैवैनमभि षिञ्चति बृहस्पतेस्त्वा साम्राज्येनाभि षिञ्चामीत्याह ब्रह्म वै देवानां बृहस्पतिर्ब्रह्मणैवैनमभि षिञ्चतीन्द्रस्य त्वा साम्राज्येनाभि षिञ्चामीत्याहेन्द्रियमेवास्मिन्नुपरिष्टाद्दधाति ।

என்பது.

உரை.

தான்யங்களின் இந்த இரசம் அக்கினியால் ஏவப்பெற்று அபிடேகஞ் செய்யப்படுகின்றது. அங்ஙனமே, பிருகற்பதிக்கும், இந்திரனுக்கும் என்பதற்கும் உரை கூறிக்கொள்க என்பதாம்.

இராசசூயத்திற்கு ஒப்பிட்டு அபிடேகத்தைப் புகழ்கின்றது.

பிராமணம்—9

एत ह्वै राजसूयस्य रूपं य एवं विद्वानग्निं चिनुत उभावेव लोकावभि जयति
यश्च राजसूयेनेजानस्य यश्चाग्निचितः ।

என்பது.

உரை.

இவ்வபிடேகமே, இராசசூயத்திற்கும் அக்கினி சயனத்திற்கும் சொரூபமாம். இவ்வாறுணர்ந்து மகாக்கினி சயனஞ் செய்கின்றவன் இருவகை யாகங்களின் பயன்களையு மடைகின்றான் என்பதாம்.

மகாக்கினி சயனத்திற்கு அங்கமாகிய சௌத்ராமணி யாகத்தை விதிக்கின்றது.

பிராமணம்—10

इन्द्रस्य सुषुवाणस्य दशधेन्द्रियं वीर्यंपराऽपतत्तद्देवास्सौत्रामण्या समभरन्त्सूयते वा एष योऽग्निं चिनुतेऽग्निं चित्वा सौत्रामण्या यजेतेन्द्रियमेव वीर्यꣳ संभृत्याऽऽत्मन्धत्ते ॥

என்பது.

உரை.

முன்னொருகால் இந்திரன் சோமத்தை இடித்துப் பிழிந்த பாவத்தால் அவனுடைய இந்திரியங்கள் பத்துவகையாய்ப் பூமியில் விழுந்தன. விழுந்த அவ்விந்திரியங்களை, தேவர்கள், 'ஸ்வாத்வீம்' என்பது முதலிய கிரந்தத்தாற் கூறியுள்ள சௌத்திராமணியாகத்தால் தேடிக்கொண்டனர். அது போல், அக்கினி சயனஞ் செய்கின்றவனும் சோமத்தைப் பிழிதலால் இந்திரியங்களை இழக்கின்றான். ஆதலின் அவைகளைத் தேடிக்கொள்வதன் பொருட்டு, அங்கமாக சௌத்திராமணி யாகத்தைச் செய்தல் வேண்டும். இது, கா-1-பிர-8 அநு-21-ல் சொல்லப்பட்டது. இங்குச்செய்யும் சௌத்திராமணி யாகம் அங்கமன்று. ஆனால் இது காலவிதியாம் என்பதை யுணர்க.

மூன்றும் அநுவாகம்

முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் ஆறும்பிரபாடகம்

நான்காவது அநுவாகம்.

தருப்பைக் கொம்பிற் செய்யும் ஆகுதிகளைக் கூறும் பிராமணங்கள்.

நான்கு பஞ்சாதிக்குமேல் முப்பத்திரண்டு பதங்களைக்கொண்டது.

सजूरब्दोऽयावभिस्सजूरुषा अरुणीभिस्सजूस्सूर्य एतशेन सजोषावश्विना दꣳसोभिस्सजूरग्निर्वैश्वानर इडाभिर्घृतेन स्वाहा संवत्सरो वा अब्दो मासा अयावा एषा अरुणीस्सूर्य एतश इमे अश्विना संवत्सरोऽग्निर्वैश्वानरः पशव इडा पशवो घृतꣳ संवत्सरं पशवोऽनु प्र जायन्ते संवत्सरेणैवास्मै पशून्प्र जनयति दर्भस्तम्बे जुहोति यत् [१५] वा अस्या अमृतं यद्वीर्यं तद्दर्भास्तस्मिन्जुहोति प्रैव जायतेऽन्नादो भवति यस्यैवं जुह्वत्येता वै देवता अग्नेः पुरस्ताद्भागास्ता एव प्रीणात्यथो चक्षुरेवाग्नेः पुरस्तात्प्रति दधात्यनन्धो भवति य एवं वेदाऽऽपो वा इदमग्रे सलिलमासीत्स प्रजापतिः पुष्करपर्णे वातो भूतोऽलेलायत्सः [१६] प्रतिष्ठां नाविन्दत स एतदपां कुलायमपश्यत्तस्मिन्नग्निमचिनुत तदियमभवत्ततो वै स प्रत्यतिष्ठद्यां पुरस्तादुपादधात्तच्छिरोऽभवत्सा प्राची दिग्यां दक्षिणत उपादधात्स दक्षिणः पक्षोऽभवत्सा दक्षिणा दिग्यां पश्चादुपादधात्तत्पुच्छमभवत्सा प्रतीची दिग्यामुत्तरत उपादधात् [१७] स उत्तरः पक्षोऽभवत्सोदीची दिग्यामुपरिष्टादुपादधात्तत्पृष्ठमभवत्सोर्ध्वा दिगियं वा अग्निः पञ्चेष्टकस्तस्माद्यदस्यां खनन्त्यभीष्टकां तृन्दन्त्यभि शर्कराꣳ सर्वा वा इयं वयोभ्यो नक्तं

दृशे दीप्यते तस्मादिमां वयाꣳसि नक्तं नाध्यासते य एवं विद्वा-
नग्निं चिनुते प्रत्येव [१८] तिष्ठत्यभि दिशो जयत्याग्नेयो वै
ब्राह्मणस्तस्माद्ब्राह्मणाय सर्वासु दिक्ष्वर्धुकꣳ स्वामेव तद्दिशमन्वे-
त्यपां वा अग्निः कुलायं तस्मादापोऽग्निꣳ हारुकास्स्वामेव तद्योनिं
प्रविशन्ति [१९]॥ यदलेलायत्स उत्तरत उपादधादेव द्वात्रिꣳशच्च
॥ ४ ॥

இதில் தருப்பைக் கொம்பிற் செய்யப்படும் ஆகுதிகள் கூறப்படுகின்றன.

அதற்கு மந்திரங்களைத் தோற்றுவிக்கின்றது.

பிராமணம்—1

सजूरब्दोऽयावभिस्सजूरुषा अरुणीभिस्सजूस्सूर्य एतशेन सजोषावश्विना दꣳसोभिस्सजूरग्निर्वैश्वानर इडाभिर्घृतेन स्वाहा ।

என்பது.

உரை.

ஒத்தபிரீதியையுடைய மாதத்தோடு கூடிய வருடத்தின் பொருட்டு நெய்யாகுதி செய்கின்றேன். சிவந்தநிற வெயிலுடன் ஒத்தபிரியமுடைய உஷாக்கால தேவதையின் பொருட்டு நெய்யாகுதிகள் செய்கின்றேன். தனது குதிரையுடன் ஒத்தபிரியமுடைய சூரியன் பொருட்டு நெய்யாகுதி செய்கின்றேன். பிணியைப்போக்குஞ் செய்கையுடன் ஒத்தபிரீதியுடைய அசுவினிகட்கு நெய்யாகுதி செய்கின்றேன். இடாவென்னும் பசுக்களுடன் ஒத்தபிரியமுடைய வைசுவாநர அக்கினிக்கு நெய்யாகுதி செய்கின்றேன் என்பதாம். ஈண்டு மந்திரங்கள் பிரித்துச் சேர்த்து எழுதப்பட்டிருக்கின்றன.

மேற்கூறிய மந்திரங்கட்கு உரை கூறுகின்றது.

பிராமணம் —2

संवत्सरो वा अब्दो मासा अयावा उषा अरुणीस्सूर्य एतश इमे अश्विना संवत्सरोऽग्निर्वैश्वानरः पशव इडा पशवो घृतꣳ संवत्सरं पशवोऽनु प्र जायन्ते संवत्सरेणैवास्मै पशून्प्रजनयति ।

என்பது

செய்யப்படும் ஆகுதிகள்)

உரை.

அப்தம் என்பது வருடமேயாம். அயாவ என்பது மாதம், உஷா அருணன் சூரியன் எதசம் என்பவைகள் வெளிப்படைகள். அசுவினிகள் என்பதால் வானும் மண்ணுங் குறிக்கப்படுகின்றன. அக்கினி வைசுவா னரன் என்பதால் வருடங் குறிப்பிடப்படுகின்றது. இடா என்பது பசுக் கள். நெய் என்பதாலும் அதன் காரணமான பசுக்களே குறிப்பிடப்படுகின் றன. இதனல், கருப்பங்கொண்ட பசுக்கள் வருடத்தைத் தழுவியே உண் டாகின்றன. ஆதலின் இம்மந்திரத்தை ஓதும் எசமானனுக்கு வருடத்தில் பசுக்கள் உண்டாகின்றன என்பது கருத்தென்பதாம்.

அவ்வோமங்களை விதிக்கின்றது.

பிராமணம்—3

दर्भस्तम्बे जुहोति यद्वा अस्या अमृतं यद्वीर्यं तद्दर्भास्तस्मिञ्जुहोति प्रैव जायतेऽन्नादो भवति यस्यैवं जुह्वत्येता वै देवता अग्नेः पुरस्ताद्भागास्ता एव प्रीणात्यथो चक्षुरेवाग्नेः पुरस्तात्प्रति दधाति ।

என்பது.

உரை.

பூமியின் சாரமாகிய அமுதமும், வீரியமுமே தருப்பைக் கொம்பாம். அதில் ஹோமஞ் செய்தலால் அமுதத்திலும் வீரியத்திலும் ஹோமஞ் செய்ததாகிறது. பிரசைகளையும் உண்டாக்குகின்ருன். எவ்வெசுமானன் வேள்விக்கருமத்தில் இத்தகைய ஆகுதிகளைச் செய்கின்ருனே, அவ்வெசமா னன் பிரசைகளை மாத்திரம் உண்டாக்குகின்றவனல்லன், மற்ருே, இனிய உணவுகளையு மருந்துகின்றவனுகின்ருன். மந்திரத்திற் கூறிய வருடம் முத லான தேவதைகளும் இதனல் பிரியமடைகின்ருர்கள். மற்றும், முந்திய ஹோமத்தால் அக்கினிக்குக் கண்ணைத் தேடுகின்ருன் என்பதாம்.

இத்தன்மையை யுணர்ந்தவனைப் புகழ்கின்றது.

பிராமணம்—4

अनन्धो भवति य एवं वेद ।

என்பது

உரை.

இவ்வோமங்களின் பெருமையை யுணர்ந்தவன் குருடனுகமாட்டான் என்பதாம்.

இனி, பூமி, பல்வகையாகப் புகழப்படுகின்றது. அதில், முதலில் பூமி உண்டாகிய வகையை விளக்குகின்றது.

பிராமணம்—5

आऽऽपो वा इदमग्रे सलिलमासीत्स प्रजापतिः पुष्करपर्णे वातो भूतोऽलेलायत्स प्रतिष्ठां नाविन्दत स एतदपां कुलायमपश्यत्तस्मिन्नग्निमचिनुत तादियमभवत्ततो वै स प्रत्यतिष्ठत् ।

என்பது.

உரை.

காணப்படும் இவ்வுலகம் முன்னர் நீர்மயமாகவே யிருந்தது. தேவர் மனிதர் முதலானோரிலர். மண் முதலிய பூதங்களும் இல அப்போது பிரசாபதி தனது உடம்பை வைப்பதற்கு ஒரு ஆதாரமுங் காணுமல் தான் வாயு வடிவமெடுத்துக் கொண்டு நீருக்குள் ஒரு தாமரையிலையின்மீதிருந்தனன். வாயு சலிப்பதாலும், தாமரையிலை அசைவதாலும் ஆட்டமுற்றனன். யாண்டும் நிலையில்லை. பிறகு ஆராய்ந்து, தண்ணீருக்குள்ளிருக்கும் வேலம் பாசியைக் கண்டு அதன்மீது அக்கினியைச் செங்கலாக அடுக்கினன். அச் செங்கல்கள் காணப்படும் இப்பூமி வடிவமாயிற்று. பிறகு, பிரசாபதி பூமியின்மீது இருந்தனன் என்பதாம்.

அக்கினி சயனத்தா (செங்கலடுக்கா) ல் பூமி யுண்டாகிய முறையைக் கூறுகின்றது.

பிராமணம்—6

यां पुरस्तादुपादधात्तच्छिरोऽभवत्सा प्राची दिग्यां दक्षिणत उपादधात्स दक्षिणः पक्षोऽभवत्सा दक्षिणा दिग्यां पश्चादुपादधात्तत्पुच्छमभवत्सा प्रतीची दिग्यामुत्तरत उपादधात्स उत्तरः पक्षोऽभवत्सोदीची दिग्यामुपरिष्टादुपादधात्तत्पृष्ठमभवत्सोर्ध्वा दिक् ।

என்பது.

உரை.

முற்கூறிய பிரசாபதியானவர், கிழக்கில் வைத்த பெருஞ்செங்கல் சயனத்திற்குத் தலையாயிற்று. தெற்கிலும் வடக்கிலும் வைத்தவைகள் சயனத்

செய்யப்படும் ஆகுதிகள்)

திற்கு இரண்டு சிறகுகளாயின. மேற்கில் வைத்தது வாலாயிற்று, பிறகு மேலே வைத்தது பின்புறமாயிற்று. இவ்வாறு பூமியின் கூறுகளே கிழக்கு முதலிய திக்குக்களாகவும் தலைமுதலிய அவயங்களாகவுந் தோன்றினமை காண்க என்பதாம்.

பூமி, அக்கினி சயனவடிவம் என்பதை, சாத்திர நோக்காலும் உலக நோக்காலும் உறுதிப்படுத்துகின்றது.

பிராமணம்—7

इयं वा अग्निः पञ्चेष्टकस्तस्माद्यदस्यां खनन्त्यभीष्टकां तृन्दन्त्यभि शर्कराꣳ सर्वा वा इयं वयोभ्यो नक्तं दृशे दीप्यते तस्मादिमां वयाꣳसि नक्तं नाध्यासते ।

என்பது.

உரை.

இப்பூமி, ஐந்து செங்கல்களாலடுக்கப்பட்ட சயனாக்கினியாம். அறியாதோர் பூமியைக் கெல்லுகின்றனர். அப்பொழுது, பிரசாபதியால் வைக்கப்பட்ட அச்செங்கல்கள் தூள்படுகின்றன. மற்றும் அவரால் வைத்த சுக்கான் கற்களும் துன்புறுகின்றன என்று வேதநூலுணர்ந்தோர் கூறுகின்றனர். அங்ஙனமே உலகிலும் பறவைகட்கு இரவில் இப்பூமி அக்கினி மயமாய்த் தோன்றுகின்றது அதுபற்றியே பறவைகள் இரவில் மரங்களின்மீது வசிக்கின்றன. இவ்விருவகையாலும், பூமி, அக்கினியே யென்பது துணியப்பட்டதென்பதாம்.

இவ்வாறுணர்ந்தவனைப் புகழ்கின்றது.

பிராமணம்—8

य एवं विद्वानग्निं चिनुते प्रत्येव तिष्ठत्यभि दिशो जयति ।

என்பது.

உரை.

இவவாறுணர்ந்து அக்கினி சயனஞ் செய்கின்றவன் பெருமையடைகின்றான். எல்லாத்திக்குக்களையும் வெல்கின்றான் என்பதாம்.

பிராமணன் வாயிலாக எல்லாத்திக்குக்களுடன் கூடிய பூமி அக்கினி யேன்பதை வலியுறுத்துகின்றது.

பிராமணம்—9

आग्नेयो वै ब्राह्मणस्तस्माद्ब्राह्मणाय सर्वासु दिक्ष्वर्धुकꣳ स्वामेव तद्दिशमन्वेति ।

என்பது

உரை.

பிரமனுடைய முகத்திலிருந்து அக்கினியும் பிராமணனும் உண்டான தால் பிராமணனும் அக்கினி சம்மந்தமுடையவன். இதுபற்றியே, அக்கினி யாகிய பூமியின் அவயவங்களென்னும் எல்லாத் திக்குக்களிலும் சாத்திர முணர்ந்த பிராமணன் பூசிக்கப் பெறுகின்முன். என்னே? இவன் தன்னு டைய திசையையே பின்பற்றுகின்முன் இது பொருத்தமேயாம் என்பதாம்.

இப்போது, உலகிலுள்ள தண்ணீர் வாயிலாக மீண்டும் பூமி அக்கினி யேன்பதையே வலியுறுத்துகின்றது.

பிராமணம்—10

अपां वा अग्निः कुलायं तस्मादापोऽग्निꣳ हारुकास्स्वामेव तद्योनिं प्रविशन्ति ॥

என்பது.

உரை.

அக்கினியாகிற இப்பூமி, ஆறு, கிணறு முதலியவைகளிலுள்ள நீர்கட் குக் காரணமாகின்றது. தண்ணீர் அக்கினியின் காரியமானதால், வீடெரி யும்போது தண்ணீர் விடில் அதை இழுத்துக் கொள்ளுகின்றது. அதாவது தனது காரணத்துட் சேர்ந்து விடுகின்றது. இதனுலும், பூமி, அக்கினியே யென்பது துணியப்படுகின்றது என்பதாம்.

நான்காம் அநுவாகம்

முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் ஆறும்பிரபாடகம்

ஐந்தாவது அநுவாகம்

சில அவிகளைக் கூறும் பிராமணங்கள்.

மூன்று பஞ்சாதிகட்குமேல் நான்கு பதங்களைக் கொண்டது.

संवत्सरमुख्यं भृत्वा द्वितीये संवत्सर आग्नेयमष्टाकपालं निर्वपेदैन्द्रमेकादशकपालं वैश्वदेवं द्वादशकपालं बार्हस्पत्यं चरुं वैष्णवं त्रिकपालं तृतीये संवत्सरेऽभिजिता यजेत यदष्टाकपालो भवत्यष्टाक्षरा गायत्र्याग्नेयं गायत्रं प्रातस्सवनं प्रातस्सवनमेव तेन दाधार गायत्रीं छन्दो यदेकादशकपालो भवत्येकादशाक्षरा त्रिष्टुगैन्द्रं त्रैष्टुभं माध्यं दिनꣳ सवनं माध्यंदिनमेव सवनं तेन दाधार त्रिष्टुभम् [२०] छन्दो यद्द्वादशकपालो भवति द्वादशाक्षरा जगती वैश्वदेवं जागतं तृतीयसवनं तृतीयसवनमेव तेन दाधार जगतीं छन्दो यद्बार्हस्पत्यश्चरुर्भवति ब्रह्म वै देवानां बृहस्पतिर्ब्रह्मैव तेन दाधार यद्वैष्णवस्त्रिकपालो भवति यज्ञो वै विष्णुर्यज्ञमेव तेन दाधार यत्तृतीये संवत्सरेऽभिजिता यजतेऽभिजित्यै यत्संवत्सरमुख्यं बिभर्तीममेव [२१] तेन लोकꣳ स्पृणोति यद्द्वितीये संवत्सरेऽग्निं चिनुतेऽन्तरिक्षमेव तेन स्पृणोति यत्तृतीये संवत्सरे यजतेऽमुमेव तेन लोकꣳ स्पृणोत्येतं वै परं आट्णारः कक्षीवाꣳ औशिजो वीतहव्यश्श्रायसस्त्रसदस्युः पौरुकुत्स्यः प्रजाकामा अचिन्वत ततो वै ते सहस्रꣳ सहस्रं पुत्रानविन्दन्त प्रथते प्रजया पशुभिस्तां मात्रामाप्नोति यां तेऽगच्छन्य एवं विद्वानेतमग्निं चिनुते [२२] दाधार त्रिष्टुभमिममेवैवं चत्वारि च ॥ ५ ॥

முன் பிரபாடகத்தில், வருடம், மூன்றுநாள், ஆறு நாள், பன்னிரண்டு நாள் உகாத்தீயைக் கழுத்திற்கட்டிக் கொள்ளல் வேண்டுமென்று நான்கு பட்சங்கள் கூறப்பட்டன. அவற்றுள் இதிற்கூறப்படும் 'தாபச்சிதாமயனம்' என்னும் ஒருவருடங் கொண்ட சத்தரயாகத்திற்கு அங்கமாகிய சயனத்தில் நியமமாக ஒருவருடம் உகாத்தீயைக் கழுத்திற் கட்டிக்கொள்ளுதல் வேண்டும். இவ்வாறு ஒருவருட தீட்சை முடிந்த பிறகு செய்யவேண்டிய அவிகளை இவ்வநுவாகம் விதிக்கின்றது. இது, ஆப-சூத்—சத்தரப்பிரசினத்தின் பதினோராவது கண்டத்திற் கூறப்பட்டது.

ஐந்து அவிகளை விதிக்கின்றது.

பிராமணம்—1

संवत्सरमुख्यं भृत्वा द्वितीये संवत्सर आग्नेयमष्टाकपालं निर्वपेदैन्द्रमेकादश-कपालं वैश्वदेवं द्वादशकपालं बार्हस्पत्यं चरुं वैष्णवं त्रिकपालम् ।

என்பது.

உரை.

ஒருவருடம் உகாத்தீயைத் தரித்துவிட்டு, இரண்டாம் வருடத்தில் அக்கினி தேவதைக்கு எட்டுக்கபாலபுரோடாசம், இந்திரனுக்கு பதினொரு கபாலப்புரோடாசம், வைசுவதேவர்கட்கு பன்னிரண்டு கபாலப்புரோடாசம், பிருகஸ்பதிக்குப் பொங்கல், விஷ்ணுவிற்கு மூன்று கபாலப்புரோடாசம் என்னும் ஐந்து அவிகளையுஞ் செய்தல் வேண்டு மென்பதாம்.

மூன்றுவது வருடத்தில், அபிசித் யாகத்தால், அல்லது விஸ்வசித் யாகத்தால் வேட்டல் வேண்டு மேன்னும் இரண்டு பட்சங்களுள் முதலாவது பட்சத்தை விதிக்கின்றது.

பிராமணம்—2

तृतीये संवत्सरेऽभिजिता यजेत ।

என்பது

உரை.

மூன்றும் வருடத்தில், 'அபிசித்' என்னும் ஒருவகைச் சோமயாக விசேடத்தால் வேட்பானுகை என்பதாம்.

சில அவிகள்)

அவ்வைந்து அவிகளுள் முதலாவது அவியைப் புகழ்கின்றது.

பிராமணம்—3

यदष्टाकपालो भवत्यष्टाक्षरा गायत्र्याग्नेयं गायत्रं प्रातस्सवनं प्रातस्सवनमेव तेन दाधार गायत्रीं छन्दः ।

என்பது.

உரை.

எட்டுக் கபாலப்புரோடாசஞ் செய்வதால், காயத்திரி எட்டெழுத்துக்களைக் கொண்டது. காலைச்சவனம் (காலையில் சோமரசம் பிழிதல்) காயத்திரிச் சந்தத்தாலாவதால் காயத்திரியின் சம்பந்தமுடையதாம். காயத்திரியுடன் அக்கினி உண்டானதால் அக்கினியின் சம்பந்தமுடையது காயத்திரி. ஆதலின், பிராதசவனத்தின் பயனையும், காயத்திரிச் சந்தத்தையும் அடைகின்றான் என்பதாம்.

எஞ்சிய நான்கு அவிகளையும், அபிசித் என்னுஞ் சோமயாகத்தையும் புகழ்கின்றது.

பிராமணம்—4

यदेकादशकपालो भवत्येकादशाक्षरा त्रिष्टुगैन्द्रं त्रैष्टुभं माध्यन्दिनꣳ सवनं माध्यंदिनमेव सवनं तेन दाधार त्रिष्टुभं छन्दो यद्द्वादशकपालो भवति द्वादशाक्षरा जगती वैश्वदेवं जागतं तृतीयसवनमेव तेन दाधार जगतीं छन्दो यद्बार्हस्पत्यश्चरुर्भवति ब्रह्म वै देवानां बृहस्पतिर्ब्रह्मैव तेन दाधार यद्वैष्णवस्त्रिकपालो भवति यज्ञो वै विष्णुर्यज्ञमेव तेन दाधार यत्तृतीये संवत्सरेऽभिजिता यजतेऽभिजित्यै ।

என்பது.

உரை.

பதினொரு கபாலங்கள் வைத்தலின் பதினொரு எழுத்துக்களையுடைய இந்திரனுக்குரிய திரிஷ்டுப்சந்தத்தையும், மாலைப்போது செய்யுஞ் சவனத்தையுமடைகின்றான். பன்னிரண்டு கபாலங்கள் வைத்தலின் வைசுவ தேவர்கட்குரிய பன்னிரண்டு எழுத்துக்களைக் கொண்ட சகதிச்சந்தத்தையும் மூன்றாவது சவனத்தையும் அடைகின்றான். பிருகஸ்பதிக்குப் பொங்கலைச் செய்வதால் பிருகற்பதி தேவகுருவானதால் பிராமணத் தன்மையை யடைகின்றான். விஷ்ணுவிற்கு மூன்று கபாலஞ் செய்வதால் விஷ்ணு வடிவாகும்

யாகத்தை யடைகின்றான். மூன்றாம் வருடத்தில் அபிசித் யாகஞ் செய்வதால் உலகங்களையும் வெல்கின்றான் என்பதாம்.

உகாத்தீயைத் தரித்தல், ஐந்தவிகளுடன் கூடிய சயனம், அபிசித் என்னும் ஒரு சுத்தியாகசையுடைய யாகம் என்னும் மூன்றையும் முறையே புகழ்கின்றது.

பிராமணம் — 5

यत्संवत्सरमुख्यंबिभर्तीममेव तेन लोकꣳ स्पृणोति यद्द्वितीये संवत्सरेऽग्निं चिनुतेऽन्तरिक्षमेव तेन स्पृणोति यत्तृतीये संवत्सरे यजतेऽमुमेव तेन लोकꣳ स्पृणोति ।

என்பது.

உரை.

ஒருவருடம் உகாத்தீயைக் கழுத்திற் கட்டிக்கொண்டிருத்தலால் இவ்வுலகத்தையும், இரண்டாம் வருடத்தில் அக்கினி சயனஞ் செய்வதால் அந்தரிக்க லோகத்தையும், மூன்றாம் வருடம் அபிசித் யாகஞ்செய்வதால் சுவர்க்க லோகத்தையு மடைகின்றான். ஈண்டு, அபிசித்யாகம் என்பது ஒரு சுத்தியாகசைக் கொண்டதாம். ஒருவருடம் செய்வதன்று. அங்ஙனமாயினும், 'தாபச்சிதாமயனம்' என்னுஞ் சத்தரயாகத்திற்கு அங்கமாகிய அக்கினியின் தர்மம் என்னும் வருடம்வரை உபசத்யாகஞ் செய்தல் என்பவைகளை, அபிசித்யாக அங்கத்திலுஞ் சேர்த்துக் கூறப்படுகின்றது. ஆதலின், அங்கமாகிய அக்கினி தர்மத்தை மாற்றிக் கூறுதற் பொருட்டே 'தாபச்சிதம்' எனப்படுகின்றது. இதனால், தாபச்சிதம் என்னும் யாகத்திற்கும், ஒருவருட தீட்சையும் ஒருவருட உபசத்யாகமும் உண்டு என்பதாம்.

ஐந்து அவிகளுடன் கூடிய அக்கினி சயனத்தை மற்றொரு வகையாய்ப் புகழ்கின்றது.

பிராமணம் — 6

एतं वै पर आट्णारः कक्षीवाꣳ औशिजो वीतहव्यश्श्रायसस्त्रसदस्युः पौरुकुत्स्यः प्रजाकामा अचिन्वत ततो वै ते सहस्रꣳ सहस्रं पुत्रानविन्दन्त ।

என்பது

முற்கூறியதைப் புகழ்தல்)

உரை.

அட்ணருடைய புத்திரர் பரர், உசிசரின் புத்திரர் கக்ஷீவர், சிரியசருடைய புத்திரர் திரிசதஸ்யு என்னும் இம்மூன்று இருடிகளும் புத்திர விருப்புடையர்களாய் உகாத்தீயை ஒரு வருடந் தரித்துக்கோன்டு ஐந்து அவிகளுடன் அக்கினி சயனஞ் செய்ததால் ஒவ்வொருவரும் ஆயிரம் புதல்வர்களைப்பெற்றனர் என்பதாம்.

இவ்வக்கினி சயனத்தின் பயனை விளக்குகின்றது.

பிராமணம்—7

प्रथते प्रजया पशुभिस्तां मात्रामाप्नोति यां तेऽगच्छन्य एवं विद्वानेतमग्निं चिनुते ॥

என்பது.

உரை.

மேற்கூறிய இருடிகள் அடைந்த பயனை அதாவது ஆயிரக்கணக்கான புத்திர சம்பத்தை இவ்வக்கினி சயனஞ் செய்கின்றவன் அடைகின்றான் என்பதாம்.

ஐந்தாவது அநுவாகம்
முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் ஆறும்பிரபாடகம்

ஆறுவது அநுவாகம்

முற்கூறியதை அநுவதித்துப் புகழும் பிராமணங்கள்.

நான்கு பஞ்சாதிக்குமேல் பத்துப் பதங்களைக் கொண்டது.

प्रजापतिरग्निमचिनुत स क्षुरपविर्भूत्वाऽतिष्ठत्तं देवा बिभ्यतो नोपाऽऽयन्ते छन्दोभिरात्मानं छादयित्वोपाऽऽयन्तच्छन्दसां छन्दस्त्वं ब्रह्म वै छन्दाꣳसि ब्रह्मण एतद्रूपं यत्कृष्णाजिनं कार्ष्णी उपानहावुपमुञ्चते छन्दोभिरेवाऽऽत्मानं छादयित्वाऽग्निमुप चरत्यात्मनोऽहिꣳसायै देवनिधिर्वा एष नि धीयते यदग्निः [२३]

अन्ये वा वै निधिमगुप्तं विन्दन्ति न वा प्रति प्रजानात्युखामा क्रामत्यात्मानमेवाधिपां कुरुते गुप्त्या अथो खल्वाहुर्नाऽऽक्रम्येति नैर्ऋत्युखा यदाक्रामेन्निर्ऋत्या आत्मानमपि दध्यात्तस्मान्नाऽऽक्रम्या पुरुषशीर्षमुपदधाति गुप्त्या अथो यथा ब्रूयादेतन्मे गोपायेति तादृगेव तत् [२४] प्रजापतिर्वा अथर्वाऽग्निरेव दध्यङ्ङाथर्वणस्तस्येष्टका अस्थान्येतँ ह वाव तदृषिरभ्यनूवाचेन्द्रो दधीचो अस्थभिरिति यदिष्टकाभिरग्निं चिनोति सात्मानमेवाग्निं चिनुते सात्माऽमुष्मिँल्लोके भवति य एवं वेद शरीरं वा एतदग्नेर्यच्चित्य आत्मा वैश्वानरो यच्चिते वैश्वानरं जुहोति शरीरमेव सँस्कृत्य [२५] अभ्यारोहति शरीरं वा एतद्यजमानस्सँ स्कुरुते यदग्निं चिनुते यच्चिते वैश्वानरं जुहोति शरीरमेव सँस्कृत्याऽऽत्मनाऽभ्यारोहति तस्मात्तस्य नाव द्यन्ति जीवन्नेव देवानप्येति वैश्वानर्यर्चा पुरीषमुप दधातीयं वा अग्निर्वैश्वानरस्तस्यैषा चितिर्यत्पुरीषमग्निमेव वैश्वानरं चिनुत एषा वा अग्नेः प्रिया तनूर्यद्वैश्वानरः प्रियामेवास्य तनुवमव रुन्धे [२६] अग्निस्तत्सँस्कृत्याग्नेर्दश च ॥ ६ ॥

இதில் முற்கூறிய பிரகரண விதிகளுள் சிலது அநுவதித்துப் புகழப் படுகின்றது.

புகழ்தல்)

இதில், முன்னர் 'அஸ்மன்னூர்ச்சம்' என்னுமநுவாகத்தில், "மான் தோலாற் செய்த செருப்பை அணிந்து கொள்கின்றான்' என்று விதிக்கப் பட்டது. இப்போது அதையே புகழ்கின்றது.

பிராமணம்—1

प्रजापतिरग्निमचिनुत स क्षुरपविर्भूत्वाऽतिष्ठत्तं देवा बिभ्यतो नोपाऽऽयन्ते . छन्दोभिरात्मानं छादयित्वोपाऽऽयन्तच्छन्दसां छन्दस्त्वं ब्रह्म वै छन्दाꣳसि ब्रह्मण एतद्रूपं यत्कृष्णाजिनं कार्ष्णी उपानहावुपमुञ्चते छन्दोभिरेवाऽऽत्मानं छादयित्वाऽग्निमुप चरत्यात्मनोऽहिꣳसायै ।

என்பது.

உரை.

பிரசாபதியாற் செய்யப்பட்ட அக்கினி சயனம் மிகுந்த உக்கிரமுடைய தாகவே தேவர்கள் ஒருவரேனும் அதற்கருகிற் செல்ல முடியாதவர்களாய் அதைத் தணிப்பதற்குபாயத்தை ஆராய்ந்து சந்தங்களுடன் கூடியமந்திரங் களால் தமது உடம்புகளை மறைத்துக் கொண்டும், வேதமந்திரங்களை ஓதிக் கொண்டும் சயனக்கினியை யடைந்தார்கள். இங்கு, அத்தகைய சந்தங்கள் வேதத்தில் அடங்கியிருத்தலானும், வேதமே மான்வடிவமானதாலும் அத் தகையமான் தோலாற் செய்த செருப்பை அணிந்து கொள்ளில் இவனது தேகஞ் சுடுபடமாட்டாது என்பதாம். ஈண்டு, முன்னர், 'மிருத்யுர்வா' என்பது முதலியவைகளால் இது புகழப்பெற்றிருப்பினும் அதுவே இங்கும் விரித்துரைக்கப்படுவதால் விரோதமின்மை காண்க.

முன், நடுவில் மனிதன் தலையை வைத்தல் வேண்டுமென்று விதிக்கப் பட்டிருக்கின்றது. இப்போது அதையே, பூர்வபட்ச சித்தாந்தங்களாற் புகழ்தற் பொருட்டு முதலில் பூர்வபட்சத்தை விளக்குகின்றது.

பிராமணம்—2

देवनिधिर्वा एष निधीयते यदग्निरन्ये वा वै निधिमगुप्तं विन्दन्ति न वा प्रति प्रजानात्युखामा क्रामत्यात्मानमेवाधिपां कुरुते गुप्त्यै ।

என்பது.

உரை.

சயனஞ் செய்த இவ்வக்கினி தேவர்களுடைய நிதியா (புதையலா) ம், அதை, பிறரோ, அல்லது, பகைவரோ எடுத்துக்கொள்வார்கள். மற்றும், தனக்கும் அஃதிருக்குமிடம் ஒருகால் மறந்து போய்விடினும் போய்விடும்.

(முற்கூறியதைப்

ஆகையால், முதலில் வைத்த உகாவை தனது காலால் தாண்டிவிடில் அந்நிதியை, தானே பாதுகாப்பவனுகின்முன். தாண்டியதால் தனது புத்தியில் உறுதிப் பாடிருத்தலின் ஒரு போதும் மறக்கவுமாட்டான். தன்னுல் பாதுகாக்கப்படுதலின் பிறராலுங் கொண்டு போகமுடியாது என்பதாம்.

சித்தாந்தத்தை விளக்குகின்றது.

பிராமணம்—3

अथो खल्वाहुर्नाऽऽक्रम्येति नैर्ऋत्युखा यदाक्रामेन्निर्ऋत्या आत्मानमपि दध्या त्तस्मान्नाऽऽक्रम्या पुरुषशीर्षमुपदधाति गुप्त्या अथो यथा ब्रूयादेतन्मे गोपायेति तादृगेव तत् ।

என்பது.

உரை.

இவ்வுகா, நைருதி என்னும் இராக்கதனுடையதாம். அதைத் தாண்டில் அவனுக்குத் தனதுடம்பை அர்ப்பித்ததாகும். ஆதலின் உகாவைத் தாண்டுதல் கூடாதென்பர் பெரியோர். புதையலைப் பாதுகாக்க வேண்டுமெனின்? அதன்மேல் மனிதன் தலையை வைத்துவிட்டால், உலகில் புதையலுக்குப் பாதுகாப்பாக ஒருவனை வைப்பதுபோல் பாதுகாப்பாகும் என்பதாம். ஈண்டு, இவ்வாறு கூறியதால் முன்விதித்த மனிதன் தலையை வைத்தலே புகழப்பட்டதென்பதைக் காண்க.

ஐந்தாம்பிரபாடகத்திற் கூறிய சயனவிதியையே மீண்டும் புகழ்கின்றது.

பிராமணம்—4

प्रजापतिर्वा अथर्वाऽग्निरेव दध्यङ्ङाथर्वणस्तस्येष्टका अस्थान्येतꣳ ह वाव तदृषिरभ्यनूवाचेन्द्रो दधीचो अस्थभिरिति यदिष्टकाभिरग्निं चिनोति सात्मानमेवाग्निं चिनुते ।

என்பது.

உரை.

அதர்வர் என்று ஒரு இருடிஇருந்தனர், அவருடைய புத்திரர் தத்தியங் என்பவர். ததீசியின் எலும்பு ஒரு பகைவனைக் கொல்வதற்கு ஆயுதமாயிற்று. இவ்வனைத்தும் இங்கு உருவஅணியாகக் காட்டப்படுகின்றன. அக்கினி சயனஞ்செய்த பிரசாபதியே அதர்வரிஷி, சயனஞ் செய்யப்பட்ட அக்கினியே அவருடைய புத்திரராகிய தத்தியங் என்னும் இருடி. செங்கல்களே

புகழ்தல்ல்)

எலும்புகள் என்னும் பொருளைக் கொண்டே ஒரு இருடி அவ்வனைத்தையும் எடுத்துக் கூறுகின்றார். இதைக்கூறும், மந்திரமோ, 'இந்திரோததீசஃ' என்பது முதலியதாம். அது வேறிடத்துள்ளது. இங்கு அதனுடைய தலைப்புச் சொலிக்கின்றது. எலும்பாகிற செங்கல்களால் அக்கினி சயனஞ் செய்வதால் உடம்போடு சயனம் பண்ணப்பட்டதாகின்றது என்பதாம்.

இவ்வாறுணர்ந்தவனைப் புகழ்கின்றது.

பிராமணம்—5

सात्माऽमुष्मिँल्लोके भवति य एवं वेद ।

என்பது.

உரை

இதையுணர்ந்தவன் 'சுவர்க்கத்திற்குரிய உடம்பை யடைகின்றான் என்பதாம்.

வைசுவாநர இஷ்டியைப் புகழ்கின்றது.

பிராமணம்—6

शरीरं वा एतदग्नेर्यच्चित्य आत्मा वैश्वानरो यच्चिते वैश्वानरं जुहोति शरीर-मेव संस्कृत्याभ्यारोहति ।

என்பது.

உரை.

சயனஞ் செய்த அக்கினியானது அக்கினிதேவதையின் உடம்பாம். உடம்புக்குள்ளிருக்கும் வைசுவாநரன் சீவஆன்மாவாம். ஆகவே, சயனக்கினியில் வைசுவானர புரோடாசத்தை ஓமஞ் செய்தல் அக்கினியினுடம்பே புநிதமாக்கப்பட்டு அதில் ஏறிக்கொள்ளுகின்றதாயிற்று என்பதாம்.

வைசுவானர புரோடாசத்தை, விதியால் வந்தபடி உடைத்தெடுத்தல் கூடாது, மற்றே, முழுதையும் எடுத்துக்கொள்ளல் வேண்டுமென்கின்றது.

பிராமணம்—7

शरीरं वा एतद्यजमानस्संस्कुरुते यदग्निं चिनुते यच्चिते वैश्वानरं जुहोति शरीरमेव संस्कृत्याऽऽत्मनाऽभ्यारोहति तस्मात्तस्य नावद्यन्ति जीवन्नेव देवानप्येति ।

என்பது.

உரை.

அக்கினி சயனஞ் செய்கின்ற எசமானன் தனது உடம்பையே புதிதப்படுத்திக் கொள்கின்றான். அதில் வைசுவானர புரோடாச ஹோமஞ் செய்தலால் தனது உடம்பைப் புதிதமாக்கிக் கொண்டு சிவான்மவடிவாய் அதில் ஏறிக்கொள்கின்றான். ஆதலின், சிவான்மாவாகிய புரோடாசத்தைக் கிள்ளுதல் கூடாதென்பதாம். அவ்வாறு செய்யாமையின் இவன் உயிருடனிருந்து கொண்டே தேவத்தன்மையை யடைகின்றான் என்பதாம்.

சயனத்தை, மணலால் மூடுதற்குரிய மந்திரத்தை விநியோகிக்கின்றது.

பிராமணம்—8

वैश्वानर्यर्चा पुरीषमुप दधातीयं वा अग्निर्वैश्वानरस्तस्यैषा चितिर्यत्पुरीष-
मग्निमेव वैश्वानरं चिनुत एषा वा अग्नेः प्रिया तनूर्यद्वैश्वानरः प्रिया-
मेवास्य तनुवमवरुन्धे ॥

என்பது.

உரை.

அம்மந்திரத்திற் கூறிய 'வைசுவானரன்' என்னும் அக்கினி, பூமிவடிவாம். மணல் சயனவடிவாம். ஆதலின், மணலால் மூடுவதால் பூமிவடிவாகிய வைசுவானர அக்கினியையே சயனஞ் செய்ததாயிற்று. மற்றும், 'வைசுவானரன்' என்னுஞ் சொல்லால் வந்த எல்லாவுயிர்கட்கும் இதமாகிய அக்கினியே பிரியவுடம்பாம். இதனால் அத்தகைய உடம்பையே அடைகின்றான் என்பதாம்.

ஆறுவது அநுவாகம்
முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் ஆறும்பிரபாடகம்

ஏழாவது அநுவாகம்

தீட்சைகளின் விகற்பங்களை விதிக்கும் பிராமணங்கள்.

மூன்று பஞ்சாதிக்குமேல் இருபத்தேட்டுப் பதங்களைக் கொண்டது.

अग्नेर्वै दीक्षया देवा विराजमाप्नुवन्तिस्रो रात्रीर्दीक्षितस्स्या-
त्रिपदा विराड्विराजमाप्नोति षड्रात्रीर्दीक्षितस्स्यात्षड्वा ऋतवं

स्संवत्सरस्संवत्सरो विराड्विराजमाप्नोति दश रात्रीर्दीक्षितस्स्या द्दशाक्षरा विराड्विराजमाप्नोति द्वादश रात्रीर्दीक्षितस्स्याद्द्वादश मासास्संवत्सरस्संवत्सरो विराड्विराजमाप्नोति त्रयोदश रात्रीर्दीक्षितस्स्यात्त्रयोदश [२७] मासास्संवत्सरस्संवत्सरो विराड्विराजमाप्नोति पञ्चदश रात्रीर्दीक्षितस्स्यात्पञ्चदश वा अर्धमासस्य रात्रयोऽर्धमासशस्संवत्सर आप्यते संवत्सरो विराड्विराजमाप्नोति सप्तदश रात्रीर्दीक्षितस्स्याद्द्वादश मासाः पञ्चर्तवस्स संवत्सरस्संवत्सरो विराड्विराजमाप्नोति चतुर्विꣳशतिꣳ रात्रीर्दीक्षितस्स्याच्चतुर्विꣳशतिरर्धमासास्संवत्सरस्संवत्सरो विराड्विराजमाप्नोति त्रिꣳशतꣳ रात्रीर्दीक्षितस्स्यात् [२८] त्रिꣳशदक्षरा विराड्विराजमाप्नोति मासं दीक्षितस्स्याद्यो मासस्स संवत्सरस्संवत्सरो विराड्विराजमाप्नोति चतुरो मासो दीक्षितस्स्याच्चतुरो वा एतं मासो वसवोऽबिभरुस्ते पृथिवीमाऽजयन्गायत्रीं छन्दोऽष्टौ रुद्रास्तेऽन्तरिक्षमाऽजयन्त्रिष्टुभं छन्दो द्वादशाऽऽदित्यास्ते दिवमाऽजयञ्जगतीं छन्दस्ततो वै ते व्यावृतमगच्छञ्छ्रैष्ठ्यं देवानां तस्माद्द्वादश मासो भृत्वाऽग्निं चिन्वीत द्वादश मासास्संवत्सरस्संवत्सरोऽग्निश्चित्यस्तस्याहोरात्राणीष्टका आप्तेष्टकमेनं चिनुतेऽथो व्यावृतमेव गच्छति श्रैष्ठ्यꣳ समानानाम् [२९] ॥ स्यात्रयोदश त्रिꣳशतꣳ रात्रीर्दीक्षितस्स्याद्द्वे तेऽष्टाविꣳशतिश्च ॥ ७ ॥

இதில், தீட்சைகளின் விகற்பங்கள் விதிக்கப்படுகின்றன.

தீட்சைகளின் விகற்பங்களை விதித்தற்பொருட்டு முன்னுரை கூறுகின்றது

பிராமணம்—1

अग्नेर्वै दीक्षया देवा विराजमाप्नुवन् ।

என்பது.

உரை.

சயனுக்கினியின் தீட்சையால், தேவர்கள் 'விராட்' என்பதை அடைந்தார்கள். 'விராட்' என்பது சிறப்புடைய ஒரு சந்தமாம். அதனால் அதைக் கொண்ட இராச்சியம் உபலட்சியமாம். ஆதலின், அத்தகைய இராச்சியத்தை யடைந்தார்கள் என்பதாம். ஈண்டு, விதிக்கப்படும் தீட்சையின் கால விகற்பங்களனைத்திலும் விராட்டின் பிராப்தியே கூறப்படுகின்றது என்பதை யுணர்க. தீட்சை = க்ஷவரம் மௌன முதலிய நியமங்களைக் கொள்ளல்.

அத்தகைய விகற்பங்களை விதிக்கின்றது.

பிராமணம்—2

तिस्रो रात्रीर्दीक्षितस्स्यात्त्रिपदा विराड्विराजमाप्नोति षड्रात्रीर्दीक्षितस्स्यात्षड्वा ऋतवस्संवत्सरस्संवत्सरो विराड्विराजमाप्नोति दश रात्रीर्दीक्षितस्स्याद्दशाक्षरा विराड्विराजमाप्नोति द्वादश रात्रीर्दीक्षितस्स्याद्द्वादश मासास्संवत्सरस्संवत्सरो विराड्विराजमाप्नोति त्रयोदश रात्रीर्दीक्षितस्स्यात्त्रयोदश मासास्संवत्सरस्संवत्सरो विराड्विराजमाप्नोति पञ्चदश रात्रीर्दीक्षितस्स्यात्पञ्चदश वा अर्धमासस्य रात्रयोऽर्धमासशस्संवत्सर आप्यते संवत्सरो विराड्विराजमाप्नोति सप्तदश रात्रीर्दीक्षितस्स्याद्द्वादश मासाः पञ्चर्तवस्स संवत्सरस्संवत्सरो विराड्विराजमाप्नोति चतुर्विंशतिं रात्रीर्दीक्षितस्स्याच्चतुर्विंशतिरर्धमासास्संवत्सरस्संवत्सरो विराड्विराजमाप्नोति त्रिंशतं रात्रीर्दीक्षितस्स्यात्त्रिंशदक्षरा विराड्विराजमाप्नोति मासं दीक्षितस्स्याद्यो मासस्स संवत्सरस्संवत्सरो विराड्विराजमाप्नोति चतुरो मासो दीक्षितस्याच्चतुरो वा एतं मासो वसवोऽबिभरुस्ते पृथिवीमाऽजयन्गायत्रीं छन्दोऽष्टौ रुद्रास्तेऽन्तरिक्षमाऽजयन्त्रिष्टुभं छन्दो द्वादशाऽऽदित्यास्ते दिवमाऽजयञ्जगतीं छन्दस्ततो वै ते व्यावृतमगच्छञ्छ्रैष्ठ्यं देवानाम् ।

என்பது.

உரை.

மூன்று, ஆறு, பத்து, பன்னிரண்டு, பதின்மூன்று, பதினைந்து, பதினேழு, இருபத்துநான்கு, முப்பது எனப்படும் இராத்திரிகள், ஒருமாதம், நான்குமாதம்; எட்டுமாதம், பன்னிரண்டு மாதம் என தீட்சையின் விகற்பங்கள் பதின் மூன்று வகைகளையுடையன. இவற்றுள், மூன்று இரவு தீட்சை பண்ணிக்கொண்டவன் பத்தெழுத்துக்கள் கொண்டதும் மூன்று பாதங்களையுடையதுமாகிய விராட்டை அடைகின்றான். ஆறு நாள் தீட்சையுடையவன், ஆறு இருதுக்களைக் கொண்டது வருடமாம் வருடமே விராட்டாம் ஆதலின் விராட்டை யடைகின்றான். பத்திரவு தீட்சையுடையவன், பத்து எழுத்துக்களைக்கொண்ட விராட்டை யடைகின்றான். பன்னிரண்டு இரவுகள் தீட்சையுடையவன் பன்னிரண்டு மாதங்கொண்ட வருடவடிவாகிய விராட்டை யடைகின்றான். பதின் மூன்று இரவுகள் தீட்சையுடையவன், அதிகமாதம் என்னும் ஒருபாதமுஞ் சேர்ந்து ஒரு வருடமானதால் வருடவடிவாகிய விராட்டை யடைகின்றான். பதினைந்து இரவுகள் தீட்சை யுடையவன் பாதி மாதத்திற்கு பதினைந்து இரவுகளானதால் அவ்வாறே முப்பது மாதங்கள்கொண்ட வருடமாகிற விராட்டை யடைகின்றான். பதினேழு இரவு தீட்சை யுடையவன், பனிக்காலம், குளிர்காலம் என்னும் இரண்டு இருதுக்களையும் உள்ளடக்கி இருதுக்கள் ஐந்தாக்கில், பன்னிரண்டு மாதங்களையுஞ் சேர்க்கப் பதினேழாமாதலின், இருதுக்களையும், மாதங்களையுங் கொண்ட வருடமாகிற விராட்டை அடைகின்றான். இருபத்து நான்கு அரைமாதங்களிருத்தலின் வருடமாகிற விராட்டை அடைகின்றான். முப்பது இரவு தீட்சை யுடையவன், மூன்றுபத்துக் கொண்டது விராட்டாதலின் விராட்டை அடைகின்றான். மாதம்வரை தீட்சையுடையவன், மாதமானது வருடத்தின் ஒரு அவயவமானதால் அவயவமுடைய வருடமாகிற விராட்டை யடைகின்றான். நான்கு மாதம் தீட்சையுடைய வசுக்கள், இவ்வுலகையும், காயத்திரிச்சந்தத்தையும் தன்வசமாக்கிக் கொண்டார்கள். ஆதித்தர்கள் பன்னிரண்டு மாதத்தீட்சை யுடையவர்களாய், வானுலகையும் தேவர்களையும் தம்வசப்படுத்திக் கொண்டனர். கூறிவந்த இப்பட்சங்களுக்குள், ஒருவருடத் தீட்சையே மிகச்சிறந்ததாமாதலின் அதைச் செய்த ஆதித்தர்கள், ஏனைய தேவர்களுள் வேறுபட்டவர்களாய் தேவர்களுக்குள் மிகுந்த சிறப்பை யடைந்தனர் என்பதாம்.

பன்னிரண்டு மாதம் உகாத்தியைத் தரித்தலில் அன்புகொண்டு மீண்டும் அதைப் புகழ்கின்றது.

பிராமணம்—3

तस्माद्द्वादश मासो भृत्वाऽग्निं चिन्वीत द्वादश मासास्संवत्सरस्संवत्सरोऽ-ग्निश्चित्यस्तस्याहोरात्राणीष्टका आप्तेष्टकमेनं चिनुतेऽथो व्यावृतमेव गच्छति श्रैष्ठ्यꣳ समानानाम् ॥

என்பது.

உரை.

பன்னிரண்டு மாதங்கள்வரை உகாத்தியைக் கழுத்திற் கட்டிக்கொண்டிருந்த பிறகு அக்கினி சயனஞ் செய்வதால் அக்கினிக்கும் வருடத்தன்மை வருகின்றது. அக்கினி யென்னும் வருடத்திற்கு இரவு பகல்கள் என்பது செங்கல்களாம். ஆகையால் நிறைந்த செங்கல்களையுடைய மகாக்கினி சயனஞ் செய்தவர்களுக்குள் இவன் சிறந்தவனுமாகின்றான் என்பதாம்.

ஏழாவது அநுவாகம்
முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் ஆறும்பிரபாடகம்

எட்டாவது அநுவாகம்

சிதியின்மேல் ஏறுதல் முதலியதைக் கூறும் பிராமணங்கள்.

ஆறு பஞ்சாதிக்குமேல் ஏழுபதங்களைக் கொண்டது.

सुवर्गाय वा एष लोकाय चीयते यदग्निस्तं यन्नान्वारोहेत्सुवर्गाल्लोकाद्यजमानो हीयेत पृथिवीमाऽक्रमिषं प्राणो मा मा हासीदन्तरिक्षमाऽक्रमिषं प्रजा मा मा हासीद्दिवमाऽक्रमिषꣳ सुवरगन्मेत्याहैष वा अग्नेरन्वारोहस्तेनैवैनमन्वारोहति सुवर्गस्य लोकस्य समष्ट्यै यत्पक्षसंमितां मिनुयात् [३०] कनीयाꣳसं यज्ञक्रतुमुपेयात्पापीयस्यस्याऽऽत्मनः प्रजा स्याद्वेदिसंमितां मिनोति ज्यायाꣳसमेव यज्ञक्रतुमुपैति नास्याऽऽत्मनः पापीयसी प्रजा भवति

साहस्रं चिन्वीत प्रथमं चिन्वानस्सहस्रसंमितो वा अयं लोक इममेव लोकमभि जयति द्विषाहस्रं चिन्वीत द्वितीयं चिन्वानो द्विषाहस्रं वा अन्तरिक्षमन्तरिक्षमेवाभि जयति त्रिषाहस्रं चिन्वीत तृतीयं चिन्वानः [३१] त्रिषाहस्रो वा असौ लोकोऽमुमेव लोकमभि जयति जानुदघ्नं चिन्वीत प्रथमं चिन्वानो गायत्रियैवेमं लोकमभ्यारोहति नाभिदघ्नं चिन्वीत द्वितीयं चिन्वानस्त्रिष्टुभै- वान्तरिक्षमभ्यारोहति ग्रीवदघ्नं चिन्वीत तृतीयं चिन्वानो जगत्यै- वामुं लोकमभ्यारोहति नाग्निं चित्वा रामामुपेयादयोनौ रेतो धास्यामीति न द्वितीयं चित्वाऽन्यस्य स्त्रियम् [३२] उपेयान्न तृतीयं चित्वा कां चनोपेयाद्रेतो वा एतन्नि धत्ते यदग्निं चिनुते यदुपेयाद्रेतसा व्यृध्येताथो खल्वाहुरप्रजस्यं तद्यन्नोपेयादिति यद्रे- तस्सिचावुपदधाति ते एव यजमानस्य रेतो बिभृतस्तस्मादुपेयाद्रेत- सोऽस्कन्दाय त्रीणि वाव रेताꣳसि पिता पुत्रः पौत्रः [३३] यद्द्वे रेतस्सिचावुपदध्याद्रेतोऽस्य वि च्छिन्द्यात्तिस्र उप दधाति रेतसस्संतत्या इयं वाव प्रथमा रेतस्सिग्वाग्वा इयं तस्मात्पश्य- न्तीमां पश्यन्ति वाचं वदन्तीमन्तरिक्षं द्वितीया प्राणो वा अन्त- रिक्षं तस्मान्नान्तरिक्षं पश्यन्ति न प्राणमसौ तृतीया चक्षुर्वा असौ तस्मात्पश्यन्त्यमूं पश्यन्ति चक्षुर्यजुषेमां च [३४] अमूं चोप दधाति मनसा मध्यमामेषां लोकानां क्लृप्त्या अथो प्राणाना- मिष्टो यज्ञो भृगुभिराशीर्दा वसुभिस्तस्य त इष्टस्य वीतस्य द्रविणेह

भक्षीयेत्याह स्तुतशस्त्रे एवैतेन दुहे पिता मातरिश्वाऽच्छिद्रा पदा धा अच्छिद्रा उशिजः पदाऽनु तक्षुस्सोमो विश्वविन्नेता नेष-द्बृहस्पतिरुक्थामदानि शꣳसिषदित्याहैतद्वा अग्नेरुक्थं तेनैवैनमनु शꣳसति [३५] ॥ मिनुयाच्तृतीयं चिन्वानस्स्त्रयं पौत्रंश्च वै सप्त च ॥ ८ ॥

இதில், மகாக்கினி சயனத்தின் மீது ஏறுதல் முதலியவைகள் கூறப் படுகின்றன.

அதன் விதியை ஊகிக்கிப்பிக்கின்றது.

பிராமணம்—1

सुवर्गाय वा एष लोकाय चीयते यदग्निस्तं यन्नान्वारोहेत्सुवर्गाल्लोकाद्यज-मानो हीयेत पृथिवीमाऽक्रमिषं प्राणो मा मा हासीदन्तरिक्षमाऽक्रमिषं प्रजा मा मा हासीद्दिवमाक्रमिषꣳ सुवरगन्मेत्याहैष वा अग्नेरन्वा-रोहस्तेनैवैनमन्वारोहति सुवर्गस्य लोकस्य समष्ट्यै ।

என்பது.

உரை.

இம்மகாக்கினி சயனம் சுவர்க்கத்தின் பொருட்டுச் செய்யப்படுகின்ற தாமாதலின், அதன்மீது ஏறுவிடில் சுவர்க்கத்திலிருந்து விடுபட்டவனுகின் ருன். ஆதலின்,

மந்திரம்:—“ எசமானனுகியயான் பூமியின்மீது ஏறுகின்றேன் இத ஞல் எனது பிராணனை நீக்கக்கூடாது. அந்தரிக்ஷத்தில் ஏறுவதாலும், மகன் முதலான பிரசைகளை விலக்காமலிருக்குக. சுவர்க்கத்திலேறுகின் றதால் சுவர்க்கத்தை யடைவேனுக ” என்னும் இம்மந்திரத்தை ஓதிக் கொண்டு மகாக்கினி சயனத்தின்மீது ஏறல்வேண்டும்.

இம்மந்திரம் அக்கினியின்மீது ஏறுவதற்கு நிமித்தமாம் இதனுல் ஏறு வது சுவர்க்கத்தை யடைவிக்கின்றது என்பதாம். இது-கா-4-பிர-6. அநு-1-ல் விநியோகிக்கப்பட்டது.

பதினேரு யூபங்களில் சிறிது விசேடத்தை விதிக்கின்றது. இது, விகிருதி யாகங்கட்குரியது.

பிராமணம்—2

यत्पक्षसंमितां मिनुयात्कनीयाꣳसं यज्ञक्रतुमुपेयात्पापीयस्यस्याऽऽत्मनः प्रजा स्याद्वेदिसंमितां मिनोति ज्यायाꣳसमेव यज्ञक्रतुमुपैति नास्याऽऽत्मनः पापीयसी प्रजा भवति ।

என்பது.

உரை.

கருடனுடைய சிறகுகள்வரைநீட்டாய்ப் பதினேரு யூபங்க (ஆட்டுக் கடாக்கள் கட்டுந்தறிக)ளை நட்டால் வேள்வி மிகச்சிறியதாய்விடும். இவ் வெசமானனுடைய பிரசைகளும் பாவிகளாகின்றனர். ஆதலின், மகாவேதி யின் நீளம் எவ்வளவோ அவ்வளவு அளந்து யூபங்களைக் குறிப்பெழுதி நடல் வேண்டும். இதனால் எக்ஞம் பெரிதாகும். எசமானனுடைய பிரசைகள் பாவி களாக மாட்டார்கள். முன், பசுக்கள் பதினென்று என்னும் பட்சத்திலும் யூபம் ஒன்றென்றே கூறப்பட்டது. இப்போது சயனவிகிருதிகளில் பதி னெரு யூங்கள் கூறப்பட்டமையால் மாறின்மை காண்க என்பதாம்.

ஐந்து செங்கல் அடுக்குக்களிலும் உள்ள மோத்தச் செங்கல்களின் எண்ணை விதிக்கின்றது.

பிராமணம்—3

साहस्रं चिन्वीत प्रथमं चिन्वानस्सहस्रसंमितो वा अयं लोक इममेव लोक-मभि जयति द्विषाहस्रं चिन्वीत द्वितीयं चिन्वानो द्विषाहस्रं वा अन्त-रिक्षमन्तरिक्षमेवाभि जयति त्रिषाहस्रं चिन्वीयं तृतीयं चिन्वानस्त्रिषा-हस्रो वा असौ लोकोऽमुमेव लोकमभि जयति ।

என்பது.

உரை.

முதல் முறை மகாக்கினி சயனஞ் செய்கின்றவன் ஐந்தடுக்கிலும் ஆயி ரஞ் செங்கல்களடுக்கல் வேண்டும். இதனால், இப்பூவுலகை வெற்றி பெறு கின்றான். இரண்டாம் முறை செய்கின்றவன் இரண்டாயிரங் கொண்ட ஐந் தடுக்கையும் அடுக்குவானாக. இதனால் அந்தரிக்ஷவுலகை வெல்கின்றான். மூன் றாவது முறை செய்கின்றவன் மூவாயிரஞ் செங்கல்களைக் கொண்டு ஐந்தடுக் கையும் அடுக்குக. இதனால் சுவர்க்கத்தை வெல்கின்றான் என்பதாம். ஈண்டு, இரண்டாவது முறை சயனஞ் செய்யும்போது, இரண்டு அடுக்குக்கள்

சேர்ந்தது ஒரு அடுக்காம். மூன்றுமுறை செய்யும்போது மூன்றடுக்குச் சேர்ந்தது ஒரு அடுக்காம் என்பதை யுணர்க.

உயரம் இவ்வளவேன்று விதிக்கின்றது.

பிராமணம்—4

जानुदघ्नं चिन्वीत प्रथमं चिन्वानो गायत्रियैवेमं लोकमभ्यारोहति नाभिदघ्नं चिन्वीत द्वितीयं चिन्वानस्त्रिष्टुभैवान्तरिक्षमभ्यारोहति ग्रीवदघ्नं चिन्वीत तृतीयं चिन्वानो जगत्यैवामुं लोकमभ्यारोहति ।

என்பது.

உரை.

முதன்முறை செய்கின்றவன் முழந்தாள் உயரம் செங்கல் அடுக்கல் வேண்டும். இதனல், காயத்திரிச் சந்தத்தால் இவ்வுலகின்மீது ஏறுகின்றுன். இரண்டா முறையில் நாபி உயரம் அடுக்குதல் வேண்டும். இதனல் திருஷ்டுப் சந்தத்தால் அந்தரிக்ஷ வுலகின்மீது ஏறுகின்றுன். மூன்றுவது முறையில் கழுத்துயரம் அடுக்குதல் வேண்டும். இதனல், சகதிச்சந்தத்தால் சுவர்க்கத்தில் ஏறுகின்றுன் என்பதாம். ஈண்டு, மூன்று சந்தங்களும் ஒன்றற்கொன்று மென்மேலும் எழுத்துக்களை மிகுதியாகக் கொண்டவைகள் என்பதை யுணர்க.

மேற்கூறிய மூவகைச் சயனங்களிலுமுள்ள நியமவிசேடங்களை விதிக்கின்றது.

பிராமணம்—5

नाग्निं चित्वा रामामुपेयादयोनौ रेतो धास्यामीति न द्वितीयं चित्वाऽन्यस्य स्त्रियमुपेयान्न तृतीयं चित्वा कां चनोपेयाद्रेतो वा एतन्नि धत्ते यदग्निं चिनुते यदुपेयाद्रेतसा व्यृध्येत ।

என்பது.

உரை.

முதன்முறை பகாக்கினிசயனஞ் செய்தவன், தன் மனைவிகளுக்குள் இவள் மிக அழகுடையவள் என்று காமங்கொண்டு அவளைச் சேரல்கூடாது. ஆனல் புத்திரப் பேற்றின் பொருட்டுமாத்திரம் அவளைச் சேரலாம். இது, வீணுக சுக்கிலங்கழிதல்கூடா தென்பதாம்.

ஏறுதல் முதலாயின)

இரண்டாமுறை சயனஞ் செய்தவன். எல்லாக்குலத்திற்பிறந்த மாதர்களையும் மணம் புரிந்திருப்பினும் ஏனைய குலமாதரைப் புணரல்கூடாது. இது, தனது குலமாதரைப் புணரலாம் என்பதாம்.

மூன்றுமுறை சயனஞ் செய்தவன், தன் குலமாது பிறர் குலமாது என்னும் எவளையும் இன்பத்தின் பொருட்டேனும், புத்திரப் பொருட்டேனும் புணரல் கூடாது. ஏனெனில் அக்கினிசயனஞ் செய்தல் சுக்கிலத்தை மறைத்து கட்டுப்படுத்திவைத்தலாம். ஆதலின், மாதர்களைப் புணரில் சுக்கிலங்கழிந்துவிடும் என்பதால் என்க.

மேற்கூறிய, மாதரைப் புணராமையை மறுத்து மூன்றிலும் மாதரைப் புணரலாம் என்று ஆணை கொடுக்கின்றது.

பிராமணம்—6

अथो खल्वाहुरप्रजस्यं तद्यन्नोपेयादिति यद्रेतस्सिचावुपदधाति ते एव यजमानस्य रेतो बिभृतस्तस्मादुपेयाद्रेतसोऽस्कन्दाय ।

என்பது.

உரை.

மாதரைப் புணரல் இலாதது சந்ததியின் கேட்டிற்கு நிமித்தமாதலின் அது நலமன்று. அற்றேல், புணரில் சுக்கிலம் கெடும் என்பதும் அமையாது. என்னை? சுக்கிலம்விடுஞ் செங்கலை இவன் முன் சயனத்தில் வைத்திருக்கின்றானாதலின் அவ்விரண்டு செங்கல்களும் இவனுடைய சுக்கிலத்தைப் பாதுகாக்கும். ஆதலின், சுக்கிலங்கெடாததற்கு புத்திரப் பேற்றின்பொருட்டு மாதரைப் புணரலாம் என்பதாம்.

முற்கூறிய 'ரேதசிக்' என்னுஞ் சேங்கல் வைப்பதில் ஒருவிசேடத்தை விதிக்கின்றது.

பிராமணம்—7

त्रीणि वाव रेताꣳसि पिता पुत्रः पौत्रो यद्द्वे रेतस्सिचावुपदध्याद्रेतोऽस्य वि च्छिन्द्यात्तिस्र उप दधाति रेतसस्संतत्यै ।

என்பது.

உரை.

பாட்டன் மகன் பேரன் என்பவர்கள் மூன்றுவகைச் சுக்கிலத்தாலானவர்கள். ஆதலின், சுக்கிலச் செங்கல் இரண்டைவைக்கில் எஞ்சிய சுக்கிலம்

கெடும். ஆதலின், மூன்று சுக்கிலச் செங்கல்கள் வைத்தல்வேண்டும் என்பதாம்.

மூன்று சுக்கிலச் செங்கல்களையும் முறையே புகழ்கின்றது.

பிராமணம்—8

इयं वाव प्रथमा रेतस्सिग्वाग्वा इयं तस्मात्पश्यन्तीमां पश्यन्ति वाचं वदन्तीमन्तरिक्षं द्वितीया प्राणो वा अन्तरिक्षं तस्मान्नान्तरिक्षं पश्यन्ति न प्राणमसौ तृतीया चक्षुर्वा असौ तस्मात्पश्यन्त्यमूं पश्यन्ति चक्षुः ।

என்பது.

உரை.

முதலாவது சுக்கிலச்செங்கல் முதன்மை ஒப்பாதலின் முதலாவதாகிய பூமியாம். பூமியோ, கீழிருக்குத்தன்மை ஒப்புமைபற்றி வாக்காம். முகத்தினுள்ள வாயில் வாக்கிருக்கின்றது. அதன்மேல் மூக்குத் துளைகளில் பிராணன் சலிக்கின்றது. அதற்குமேல் கண்களிருக்கின்றன. இவ்வாற்றால் வாக்கு, கீழே இருக்கின்றதாயிற்று. பூமியும் வாக்கும்கீழே இருத்தலின் பல்வகைப்பயிர்களுடன் கூடிய பூமியை அன்னையார்க் கொப்பென்று உலகமுங் கொள்கின்றது. அங்ஙனமே, இரண்டாவது சுக்கிலச்செங்கல் அந்தரிக்ஷமாம். நடுவிலிருக்கும் ஒப்புமையால் அவ்வந்தரிட்சம் பிராணவடிவாம். பிராணனும், வாக்கிற்கும் கண்ணிற்கும் நடுவிலிருத்தலின் என்க. இவ்வாற்றால் பிராணனும் அந்தரிட்சமும் ஒப்பானமையால் கண்ணிற்குக் காணப்படவில்லை. மூன்றாவது சுக்கிலச்செங்கல், மேலேயிருக்கும் ஒப்பால் சுவர்க்கமாம். கண்ணும், வாக்கிற்கும் பிராணனுக்கும் மேலேயிருக்கின்றது. இவ்வாறு, வானுலகாகிய சுவர்க்கமும் கண்ணும் ஒப்பானமையின், இரவிமதி, உடுக்களுடன்கூட வானில் தோற்றுகின்றது. கண்ணும் கருமை வெண்மைகளுடன் காணப்படுகின்றது என்பதாம்.

மேலே புகழப்பெற்ற மூன்று செங்கல்களில் ஒரு விசேடத்தை விதிக்கின்றது.

பிராமணம்—9

यजुषेमां चामूं चोप दधाति मनसा मध्यमामेषां लोकानां क्लृप्त्या अथो प्राणानाम् ।

என்பது

ஏறுதல் முதலாயின)

உரை.

முதலாவது செங்கலையும், மூன்றுவது செங்கலையும் அவைகளை வைத்தற்குரிய எசுர்மந்திரங்களை ஓதி வைத்தல்வேண்டும். நடுச் செங்கலை அதை வைத்தற்குரிய எசுர்மந்திரத்தை மனத்தில் நினைத்துக்கொண்டு வைத்தல் வேண்டும். இதனல் மூன்று உலகங்களும், பிராணன் முதலிய மூன்று இந்திரியங்களும் தத்தமது செயல்களில் வன்மையுடையவை ளாகின்றன என்பதாம்.

இரண்டு சமிஷ்டயசுர் ஹோமங்கட்கு மந்திரங்களைத் தோற்றுவிக்கின்றது.

பிராமணம்—10

इष्टो यज्ञो भृगुभिराशीर्दा वसुभिस्तस्य त इष्टस्य वीतस्य द्रविणेह भक्षीय ।

என்பது.

உரை.

பிருகுவிற்கு ஒத்த இருத்துவிக்குக்களாலும், வசித்தற்குக் காரணமான தேவர்களாலும் விரும்பப்பெறும் இந்தயக்ஞம் எசமானனுக்கு பயனை அளிக்குக. (1)

எக்ஞமே! அத்தகைய பிருகுக்களால் விரும்பப்படும் உனது பயன்களான தனங்களை இங்கு அடைவேனுக. (2)

இவ்விரண்டு மந்திரங்களாலும், சம்மிதை கா. 1. பி-4. அ-44. வதில் உள்ள மந்திரங்கள் ஒன்பதாலும் ஒன்பது சமிஷ்டயசுர்ஹோமங்களைச் செய்துவிட்டு, பத்தாவது பதினோராவது சமிஷ்டயசுர்ஹோமங்களைச் செய்தல்வேண்டும் என்பதாம்.

இம்மந்திரங்களாற் செய்யப்படும் ஹோமவிதியை அறிவுறுத்துகின்றது.

பிராமணம்—11

इत्याह स्तुतशस्त्रे एवैतेन दुहे ।

என்பது.

உரை.

இவ்விரண்டு மந்திரங்களையும் ஹோமஞ்செய்யும்போது ஓதல்வேண்டும். அதனல், துதி, சஸ்திரம் என்னும் இரண்டின் பயனையு மடைகின்றுன் என்பதாம். இது கா. 4, பிர 7. அநு 13-ல் விநியோகிக்கப்பட்டது.

ஹோதா, ஓதவேண்டிய மந்திரமும் விதியுங் கூறப்படுகின்றது

பிராமணம்—12

पिता मातरिश्वाऽच्छिद्रा पदा धा अच्छिद्रा उशिजः पदाऽनु तक्षुस्सोमो विश्वविन्नेता नेषद्बृहस्पतिरुक्थामदानि शꣳसिषदित्याहैतद्वा अग्नेरुक्थं तेनैवैनमनु शꣳसति ॥

என்பது

உரை.

பாதுகாக்கின்ற வாயு, கெடாத இடங்களைத்தேடுக. அன்பார்ந்த மகரிஷிகள், கேடிலாதவர்களாய் இடங்களைத் தேடுவார்களாக. எல்லாவற்றையும் அறிந்ததும், உலகைச் செலுத்துவதுமாகிய சோமம் அவைகளையடைக. பிருகஸ்பதி, களிப்புண்டாக்கும் சஸ்திரங்களை (துதி விசேடங்களை) ஓதுக. இதுவே, மந்திரவடிவ அக்கினிக்குப் பிரியமாகிற சஸ்திரமாம். இதனால், அக்கினி, முறையாகப் போற்றப்பெற்றதாகின்றது என்பதாம். இது கா-4. பி-6. அ-1. வதில் விநியோகிக்கத்தக்கது.

எட்டாவது அநுவாகம்

முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் ஆறும்பிரபாடகம்

ஒன்பதாவது அநுவாகம்

உகாத்தியை வைக்கும், நாற்காலி முதலியவைகளைக் கூறும் பிராமணங்கள்.

மூன்று பஞ்சாதிக்குமேல் இருபது பதங்களைக் கொண்டது.

सूयते वा एषोऽग्नीनां य उखायां भ्रियते यदधस्सादयेद्गर्भाः प्रपादुकास्स्युरथो यथा सवात्प्रत्यवरोहति तादृगेव तदासन्दी सादयति गर्भाणां धृत्या अप्रपादायाथो सवमेवैनं करोति गर्भो वा एष युदुख्यो योनिश्शिक्यं यच्छिक्यादुखां निरूहेद्योनेर्गर्भं निर्हण्यात्षडुद्यामꣳ शिक्यं भवति षोढाविहितो वै [३६] पुरुष आत्मा च शिरश्च चत्वार्यङ्गान्यात्मन्नेवैनं बिभर्ति प्रजापतिर्वा एष यदग्निस्तस्योखा चोलूखलं च स्तनौ तावस्य प्रजा उप जीवन्ति

यदुखां चोलूखलं चोपदधाति ताभ्यामेव यजमानोऽमुष्मिँल्लोकेऽग्निं दुहे संवत्सरो वा एष यदग्निस्तस्य त्रेधाविहिता इष्टकाः प्राजापत्या वैष्णवीः [३७] वैश्वकर्मणीरहोरात्राण्येवास्य प्राजापत्या यदुख्यं बिभर्ति प्राजापत्या एव तदुप धत्ते यत्समिध आदधाति वैष्णवा वै वनस्पतयो वैष्णवीरेव तदुप धत्ते यदिष्टकाभिरग्निं चिनोतीयं वै विश्वकर्मा वैश्वकर्मणीरेव तदुप धत्ते तस्मादाहुस्त्रिवृदग्निरिति तं वा एतं यजमान एव चिन्वीत यदस्यान्यश्चिनुयाद्यत्तं दक्षिणाभिर्न राधयेदग्निमस्य वृञ्जीत योऽस्याग्निं चिनुयात्तं दक्षिणाभी राधयेदग्निमेव तत्स्पृणोति [३८] ॥ षोढाविहितो वै वैष्णवीरन्यो विंशतिश्च ॥ ९ ॥

இதில், உகாத்தீயை வைக்கும் நாற்காலி முதலியவைகள் கூறப்படுகின்றன.

'விஷ்ணுமுகா' என்பது முதலிய அநுவாகத்தில் நான்கு மந்திரங்களால் வைக்கின்றான் என்று விதிக்கப்பட்டது, அதில் வைப்பதற்கு ஆதாரம் இதுவென்று விதிக்கின்றது.

பிராமணம்—1

सूयते वा एषोऽग्नीनां य उखायां भ्रियते यदधस्सादयेद्गर्भाः प्रपादुकास्स्युरथो यथा सत्रात्प्रत्यवरोहति तादृगेव तदासन्दी सादयति गर्भाणां धृत्या अप्रपादायाथो सत्रमेवैनं करोति ।

என்பது.

உரை.

உகையில் வைக்கப்பட்டுள்ள அக்கினி, ஏனைய அக்கினிகளுக்குள் பட்டாபிஷேகஞ் செய்யப்பெற்றதாய் அரசனாயிருக்கின்றது. இத்தகைய அக்கினியைப் பூமியில் வைக்கில் உலகப்பிராணிகளின் கர்ப்பங்கள் பூமியில் விழுந்துவிட்டது போலாகின்றன. இது, அரசனுந்தன்மையிலிருந்து கீழே விழுந்ததற்கு ஒப்பாகும். ஆதலின், நாற்காலியின் மீது உகாத்தீயை வைத்தல்

வேண்டும். அதனால், உயிர்களின் கருப்பநிலையும், விழுதலின்மையு முண்டாகின்றது. மற்றும், இவனை, அபிடேகஞ் செய்துகொண்ட இறைவனாகவுஞ் செய்கின்றது. இது, விதிக்குப் பிறகு வைத்தற்குரியது என்பதாம்.

முற்கூறிய, ஆறுபிரிகளுள்ள உறியை அநுவதித்துப் புகழ்கின்றது.

பிராமணம் – 2

गर्भो वा एष युदुख्यो योनिश्शिक्यं यच्छिक्यादुखां निरूहेद्योनेर्गर्भं निर्हण्यात्षड्डुद्यामः शिक्यं भवति षोढाविहितो वै पुरुष आत्मा च शिरश्च चत्वार्यङ्गान्यात्मन्नेवैनं बिभर्ति ।

என்பது.

உரை.

உகாத்தீ கருப்பமாம்; உறி யோனியாம்; அதிலிருந்து அது நழுகாதிருத்தற் பொருட்டு, கைகளிரண்டு, கால்களிரண்டு, தலையொன்று, ஆன்மா ஒன்று என்னும் அறுவகை அவயவங்களைப் போல் ஆறுபிரிகளையுடைய உறியில் வைக்கில், அதை, தன்னிடத்திலேயே நிறுத்தி வைத்துக் கொண்டதாகும் என்பதாம்.

முற்கூறிய, உகா வைப்பதையும், உரல்வைப்பதையுஞ் சேர்த்துப் புகழ்கின்றது.

பிராமணம்—3

प्रजापतिर्वा एष यदग्निस्तस्योखा चोलूखलं च स्तनौ तावस्य प्रजा उप जीवन्ति यदुखां चोलूखलं चोपदधाति ताभ्यामेव यजमानोऽमुष्मिँल्लोकेऽग्निं दुहे ।

என்பது.

உரை.

பிரசாபதியாற் செய்யப்பட்டதால் அக்கினி சயனம் பிரசாபத்யமெனப்படுகின்றது. அதற்கு, உகாவும் உரலும் முலைகளாகின்றன. ஏனெனின்? பயன்களுக்குச் சாதனங்களாதலினென்க. இதனைச் செய்வதால் வரும் பயனைக்கொண்டு உயிர்கள் பிழைத்திருக்கின்றனர். இதை வைத்தலால் எசமானனும் சுவர்க்கத்தில் அப்பயனைப் பெறுகின்றான் என்பதாம்.

உகாத்தீயைத் தரித்தல், சமித்துக்களை வைத்தல், செங்கல்களை யடுக்குதல் என்னும் மூன்றையும் புகழ்கின்றது.

பிராமணம்—4

संवत्सरो वा एष यदग्निस्तस्य त्रेधाविहिता इष्टकाः प्राजापत्या वैष्णवी-वैश्वकर्मणीरहोरात्राण्येवास्य प्राजापत्या यदुख्यं बिभर्ति प्राजापत्या एव तदुप धत्ते यत्समिध आदधाति वैष्णवा वै वनस्पतयो वैष्णवीरेव तदुप धत्ते यदिष्टकाभिरग्निं चिनोतीयं वै विश्वकर्मा वैश्वकर्मणीरेव तदुप धत्ते तस्मादाहुस्त्रिवृदग्निरिति ।

என்பது.

உரை.

சயனுக்கினியை, ஒரு வருடந்தரித்தால் வருடமாகின்றது. அவ்வக்கினிக்கு, பிரசாபத்தியம், வைஷ்ணவம், வைஶ்வ கருமம்என மூவகையாகச் செங்கல்கள் தேடப்படுகின்றன அவற்றுள், பகலிரவுகள், உகாவைத் தரித்தல், பிரசாபதியின் பொருட்டாதலின் பிரசாபத்தியங்களாகின்றன. வநஸ்பதிகள் விஷ்ணுவின் சம்பந்த முடையவைகளாதலின், சமித்துக்கள் வைஷ்ணவங்கள். இது விஷ்ணுவின் பொருட்டு வைத்தலின் என்க. செங்கலால் அக்கினியை அடுக்குதல் வைஶ்வ கருமத்தின் பொருட்டானதால் அவை வைசுவகர்மங்கள். இவ்வாற்றால், சயனுக்கினி, மூன்று தன்மைகளையுடையதென்பர் பெரியார் என்பதாம்.

செங்கலடுக்குவோன் இன்னன் எனவிதிக்கின்றது.

பிராமணம்—5

तं वा एतं यजमान एव चिन्वीत यदस्यान्यश्चिनुयाद्यत्तं दक्षिणाभिर्न राधयेदग्निमस्य वृञ्जीत योऽस्याग्निं चिनुयात्तं दक्षिणाभी राधयेदग्निमेव तत्स्पृणोति ॥

என்பது.

உரை.

அக்கினி சயனத்தைச் செய்கின்றவன் எசமானனே ஆகின்றான். வேட்போனலன். வேட்போனைக்கொண்டு செய்விக்கில் அவனுக்கு நிறையத் தட்சிணை கொடுத்துக் களிப்படைவித்தல் வேண்டும். ஏனெனின்? அவன் களிப்புறில் அக்கினி களிப்படைவதாலென்க. அங்ஙனம், தட்சிணையால் வேட்போனைக் களிப்படைவிக்காவிடில் எக்ஞங் கெடும் என்பதாம்.

ஒன்பதாம் அநுவாகம்

முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் ஆறாம்பிரபாடகம்

பத்தாவது அநுவாகம்

அக்கினி சயனத்தை பல்வகையாகத் துதிக்கும் பிராமணங்கள்.

மூன்று பஞ்சாதிக்குமேல் பதினைந்து பதங்களைக் கொண்டது.

प्रजापतिरग्निमचिनुतर्तुभिस्संवत्सरं वसन्तेनैवास्य पूर्वार्धमचिनुत ग्रीष्मेण दक्षिणं पक्षं वर्षाभिः पुच्छꣳ शरदोत्तरं पक्षꣳ हेमन्तेन मध्यं ब्रह्मणा वा अस्य तत्पूर्वार्धमचिनुत क्षत्रेण दक्षिणं पक्षं पशुभिः पुच्छं विशोत्तरं पक्षमाशया मध्यं य एवं विद्वानग्निं चिनुत ऋतुभिरेवैनं चिनुतेऽथो एतदेव सर्वमव [३९] रुन्धे शृण्वन्त्येनमग्निं चिक्यानमत्त्यन्नꣳ रोचत इयं वाव प्रथमा चितिरोषधयो वनस्पतयः पुरीषमन्तरिक्षं द्वितीया वयाꣳसि पुरीषमसौ तृतीया नक्षत्राणि पुरीषं यज्ञश्चतुर्थी दक्षिणा पुरीषं यजमानः पञ्चमी प्रजा पुरीषं यत्त्रिचितीकं चिन्वीत यज्ञं दक्षिणामात्मानं प्रजामन्तरियात्तस्मात्पञ्चचितीकश्चेतव्यं एतदेव सर्वꣳ स्पृणोति यत्तिस्रश्चितयः [४०] त्रिवृध्यग्निर्यद्द्वे द्विपाद्यजमानः प्रतिष्ठित्यै पञ्च चितयो भवन्ति पाङ्क्तः पुरुष आत्मानमेव स्पृणोति पञ्च चितयो भवन्ति पञ्चभिः पुरीषैरभ्यूहति दश संपद्यन्ते दशाक्षरो वै पुरुषो यावानेव पु[illegible] स्पृणोत्यथो दशाक्षरा विराडन्नं विराड्विराज्येवान्नाद्ये प्रतितिष्ठति संवत्सरो वै षष्ठी चितिर्ऋतवः पुरीषꣳ षट्चितयो भवन्ति षट्पुरीषाणि द्वादश संपद्यन्ते द्वादश मासास्संवत्सरस्संवत्सर एव प्रति तिष्ठति [४१] ॥ अव चितयः पुरीषं पञ्चदश च ॥ १० ॥

இதில், அக்கினி சயனம், பல்வகையாகப் புகழப்படுகின்றது

போற்றுதல்)

வசந்தம், முதலிய இருதுக் காலங்கள் வாயிலாகப் புகழ்கின்றது.

பிராமணம்—1

प्रजापतिरग्निमचिनुतर्तुभिस्संवत्सरं वसन्तेनैवास्य पूर्वार्धमचिनुत ग्रीष्मेण दक्षिणं पक्षं वर्षाभिः पुच्छꣳ शरदोत्तरं पक्षꣳ हेमन्तेन मध्यम् ।

என்பது.

உரை

இருதுகாலங்களால் வருடமுண்டாவது போல், பிரசாபதி, வசந்த இருதுகாலத்தால் கருடசயனத்தின் தலையையும் மேல்பாதியையும், முது வேனிற்காலத்தால் தெற்குச் சிறகையும், மழைக்காலத்தால் வாலையும், குளிர் காலத்தால் வடக்குச் சிறகையும், பனிக்காலத்தால் நடுவுடலையும் அடுக்கினர். இங்கு, வருடம் உவமை. இவ்வேள்வி இருதுமயம் என்னும் நினைவே அடுக்குதலாகும் என்பதை யுணர்க என்பதாம்.

சங்கற்பத்தால் பிராமணன் முதலானோரின் வடிவமெனப் புகழல்.

பிராமணம்—2

ब्रह्मणा वा अस्य तत्पूर्वार्धमचिनुत क्षत्रेण दक्षिणं पक्षं पशुभिः पुच्छं विशोत्तरं पक्षमाशया मध्यम् ।

என்பது.

உரை.

பிராமணனால், இக்கருட சயனத்தின் தலையையும், (முதற் பாதியையும்) அரசனால் (க்ஷத்திரியனால்) தென்பக்கச் சிறகையும், பசுக்க (விலங்குக)ளால் வடபக்கச் சிறகையும், மனோஇச்சை முதலியவைகளால் நடுவுடலையும் அடுக்கினர் எனபதாம்.

இவ்வாறுணர்ந்தவனைப் புகழ்கின்றது.

பிராமணம்—3

य एवं विद्वानग्निं चिनुत ऋतुभिरेवैनं चिनुतेऽथो एतदेव सर्वमवरुन्धे शृण्वन्त्येनमग्निं चिक्यानमत्त्यन्नꣳ रोचते ।

என்பது.

உரை.

எவ்வெசமானன், இவ்வக்கினி சயனத்தை வசந்த முதலிய இருது காலங்களாகவும், பிராமணன் முதலானோரின் வடிவமாகவும் உணர்ந்து பாவித்து அக்கினி சயனஞ் செய்கின்றானோ, அவன் பிரசாபதியைப்போல், இருதுக்களாலும், பிராமணன் முதலானோர்களாலும் அடுக்கியவனாகின்றான். மற்றும், அவைகளைத் தன்வயப்படுத்திக் கொண்டவனுமாகின்றான். அஃதன்றியும், எல்லாவற்றையும் இவன் அடைகின்றான். எல்லாராலும் புகழப்படுகின்றான். நல்லுணவுகளையே அருந்துகின்றான். எல்லாரும் இவனிடம் அன்புடையவர்களாகின்றனர் என்பதாம்.

ஐந்து செங்கல் அடுக்குக்களையும், மண்ணடுக்குக்களையும் புகழ்கின்றது.

பிராமணம்—4

इयं वाव प्रथमा चितिरोषधयो वनस्पतयः पुरीषमन्तरिक्षं द्वितीया वयाᳪसि पुरीषमसौ तृतीया नक्षत्राणि पुरीषं यज्ञश्चतुर्थी दक्षिणा पुरीषं यजमानः पञ्चमी प्रजा पुरीषम् ।

என்பது.

உரை.

முதலாவது செங்கலடுக்குப் பூமி, அதன்மீதுள்ள மண்ணடுக்குக் கொடி செடிகள். இரண்டாவது செங்கலடுக்கு அந்தரிக்ஷம், அதன்மீதுள்ள மண்ணடுக்குப் பறவைகள். மூன்றாவது செங்கலடுக்கு வான், அதன்மீதுள்ள மண்ணடுக்கு நக்ஷத்திர முதலியவைகள். நான்காவது செங்கலடுக்கு எக்ஞம், அதன்மீதுள்ள மண்ணடுக்கு தட்சிணை. ஐந்தாவது செங்கலடுக்கு எசமானன், அதன்மீதுள்ள மண்ணடுக்கு பிரசைகள் என்பதாம்.

வேறு சாகையிலுள்ள மூன்றடுக்கை மறுத்துவிட்டு, தன்னுடைய ஐந்தடுக்கை நிறுவுகின்றது.

பிராமணம்—5

यस्त्रिचितीकं चिन्वीत यज्ञं दक्षिणामात्मानं प्रजामन्तरियात्तस्मात्पञ्चचितीकश्चेतव्य एतदेव सर्वᳪ स्पृणोति ।

என்பது.

போற்றுதல்)

உரை.

நான்காம் அடுக்கும், ஐந்தாம் அடுக்கும் எக்ஞும் தட்சிணை. எசமானன், பிரசைவடிவங்கள் என்று மேலே கூறப்பட்டது. ஆதலின், மூன்றடுக்கைக் கொள்ளில் அவை விடுபட்டுப் போகின்றன. ஆதலின் ஐந்தடுக்கே அடுக்கல் வேண்டும். இதனுல், பூமி முதலியவைகளும், எக்ஞும் முதலியவைகளும் பிரியமடைகின்றன என்பதாம்.

முதல் மூன்றடுக்கையும், பிந்திய இரண்டு அடுக்கையும் வேறு பிரித்துப் புகழ்கின்றது.

பிராமணம் — 6

यत्तिस्रश्चितयस्त्रिवृद्ध्यग्निर्यद्द्वे द्विपाद्यजमानः प्रतिष्ठित्यै ।

என்பது.

உரை.

முதல் மூன்று அடுக்குக்களால், பிரசாபத்யம் முதலாக முற்கூறப்பட்ட மூன்று தன்மைகளை அக்கினி அடைகின்றது. பிந்திய இரண்டு அடுக்குக்களால் எசமானன் இருகால்களை யுடையவனுதலின் நிலையை அடைகின்முன் என்பதாம்.

கூட்டமாக எல்லாவற்றையும் புகழ்கின்றது.

பிராமணம்—7

**पञ्च चितयो भवन्ति पाङ्क्तः पुरुष आत्मानमेव स्पृणोति पञ्च चितयो
भवन्ति पञ्चभिः पुरीषैरभ्यूहति दश संपद्यन्ते दशाक्षरो वै पुरुषो यावा-
नेव पुरुषस्तꣳ स्पृणोत्यथो दशाक्षरा विराडन्नं विराड्विराज्येवान्नाद्ये
प्रतितिष्ठति ।**

என்பது.

உரை.

ஐந்து செங்கலடுக்குக்களும், ஐந்து மண்ணடுக்குக்களுஞ் சேர்ந்து பத்தானதால், பத்துத் துவாரங்களையுடைய மனிதனை முழுதும் பிரியப்படுத்துகின்றன. அங்ஙனமே, பத்து எழுத்துக்களையுடைய விராட் சந்தவாயிலாக அன்னத்தி (உணவுப் பொருள்களி) ல் பெருமையை அடைகின்முன் என்பதாம்.

ஆறுவது அடுக்கையும், அம்மண்ணடுக்கையும் புகழ்கின்றது.

பிராமணம்—8

संवत्सरो वै षष्ठी चितिर्ऋतवः पुरीषम् ।

என்பது.

உரை

ஆறு இருதுக்களைக் கொண்ட வருடவடிவம் ஆறுவது செங்கலடுக்காம். இருதுக்கள் மண்ணடுக்காம் என்பதாம்.

எல்லாவற்றையும் ஒன்று சேர்த்துப் புகழ்கின்றது.

பிராமணம்—9

षट्चितयो भवन्ति षट्पुरीषाणि द्वादश संपद्यन्ते द्वादश मासास्संवत्सर-स्संवत्सर एव प्रतितिष्ठति ॥

என்பது.

உரை.

செங்கலடுக்குக்கள் ஆறும், மண்ணடுக்குக்கள் ஆறுஞ் சேர்ந்து பன்னிரண்டாதலின், பன்னிரண்டு மாதங்களைக் கொண்ட வருடத்தில் நிலையை அடைகின்றான் என்பதாம்.

பத்தாவது அநுவாகம்
முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் ஆறும்பிரபாடகம்

பதினோராவது அநுவாகம்

இருபத்தாறு பதங்களைக் கொண்டது.

रोहितो धूम्ररोहितः कर्कन्धुरोहितस्ते प्राजापत्या बभ्रुररुण-
बभ्रुश्शुकबभ्रुस्ते रौद्राश्श्येतश्श्येताक्षश्श्येतग्रीवस्ते पितृदेवत्या-
स्तिस्रः कृष्णा वशा वारुण्यस्तिस्रश्श्वेता वशास्सौर्यो मैत्राबार्ह-
स्पत्या धूम्रललामा स्तूपराः ॥ [४२] ॥ ११ ॥

நிறப்பசுக்கள்)

இதில், அசுவமேத யாகத்திற்குரிய பதினெட்டு வகை நிறவேறுபாடுகளையுடைய ஆட்டுக் கூட்டங்கள் கூறப்படுகின்றன.

रोहितो धूम्ररोहितः कर्कन्धुरोहितस्ते प्राजापत्या बभ्रुररुण बभ्रुश्शुक बभ्रुस्ते रौद्राश्श्येतश्श्येताक्षश्श्येतग्रीवस्ते पितृदेवत्यास्तिस्रः कृष्णा वशा वारुण्यस्तिस्रश्श्वेता वशास्सौर्यो मैत्राबार्हस्पत्या धूम्रललामा स्तूपराः ॥

என்பது.

உரை.

பிரசாபதிக்கு, சிவப்பு, மங்கியசிவப்பு, இலந்தைப் பழச்சிவப்பு என்னும் மூவகைச் சிவப்பு நிறங்களையுடைய மூன்று ஆடுகளும், உருத்திரனுக்கு, கபிலநிறம், சிவப்புக் கபிலநிறம், பச்சைக் கிளிபோன்ற கபிலநிறம் என்னும் மூவகைக் கபிலநிறங்களையுடைய மூன்று ஆடுகளும், பிதிர்தேவதைகளுக்கு, உடம்பு வெள்ளை, இது, வெள்ளை இரத்தநிறமென்பர் சிலர். கண் வெள்ளை, கழுத்து வெள்ளை என்னும் மூவகை வெண்மை நிறங்களையுடைய மூன்று ஆடுகளும், வருணனுக்கு கறுத்த மூன்று மலட்டு ஆடுகளும், சூரியனுக்கு வெளுத்த மூன்று மலட்டு ஆடுகளும், மித்திர பிருகஸ்பதிக்கு, நெற்றியில் புகைநிறப்புள்ளிகளுடைய மூன்று ஆடுகளுங் கொன்று வேட்கவேண்டும் என்பதாம். இருபதாவது, அநுவாகம் வரையிற்கூறியுள்ள ஆடுகள் எல்லாம் மொட்டைகள் என்று உணரத்தக்கது.

பதினோராவது அநுவாகம்
முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் ஆறும்பிரபாடகம்

பன்னிரண்டாவது அநுவாகம்

இருபத்தாறு பதங்களைக் கொண்டது.

पृश्निस्तिरश्चीनं पृश्निरूर्ध्वं पृश्निस्ते मारुताः फल्गूर्लोहितोर्णी बलक्षीतास्सारस्वत्यः पृषतीस्थूल पृषतीक्षुद्र पृषतीतावैश्वदेव्यस्तिस्रश्श्यामा वशाः पौष्णियस्तिस्रो रोहिणीर्वशामैत्रिय ऐन्द्राबार्हस्पत्या अरुणललामास्तूपराः ॥ [४३] रोहितः पृश्निष्षड्विँशतिष्षड्विँशतिः ॥ १२ ॥

இதில், இரண்டாவது ஆட்டுக் கூட்டஞ் சொல்லப்படுகின்றது.

पृश्निस्तिरश्चीन पृश्निरूर्ध्व पृश्निस्ते मारुताः फल्गूर्लोहितोर्णी बलक्षीता-
स्सारस्वत्यः पृषतीस्थूल पृषतीक्षुद्र पृषतीतावैश्वदेव्य स्तिस्रश्श्यामा
वशाः पौष्णियस्तिस्रो रोहिणीर्वशामैत्रिय ऐन्द्राबार्हस्पत्या अरुणललामा-
स्तूपराः ॥

என்பது.

உரை.

மருத்துக்களுக்கு, வெண்மைப் புள்ளிகளாற் சித்திர நிறமுடையதும், குறுக்காக இருபக்கங்களிலும் அத்தகைய சித்திர நிறமுடையதும், நெடுக்கில் அத்தகைய சித்திர நிறமுடையதுமாகிய மூன்று ஆடுகளையும், சரசுவதிக்கு, உப்பு நிறமுடையதும், சிவந்த மயிர்களையுடையதும், வெண்மையான அவயவங்களையுடையதுமான மூன்று பெண் ஆடுகளையும், விசுவதேவர்கட்கு, வெண்புள்ளிகளை யுடையதும், பெரிய வெண்புள்ளிகளை யுடையதும், சிறிய வெண்புள்ளிகளை யுடையதுமான மூன்று பெண் ஆடுகளையும், பூஷா தேவதைக்குகறுப்பு நிறமுடைய மலட்டு ஆடுகள் மூன்றையும், மித்திர தேவதைக்கு சிவப்பு நிறமுடைய மூன்று மலட்டு ஆடுகளையும், இந்திரன் பிருகஸ்பதிகளுக்கு சாயங்கால வெயில் போன்ற நெற்றியில் புள்ளிகளை யுடைய மூன்று ஆடுகளையுங் கொன்று வேட்கவேண்டும் என்பதாம்.

பன்னிரண்டாவது அநுவாகம்
முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் ஆறும்பிரபாடகம்

பதின் மூன்றுவது அநுவாகம்

இருபத்தைந்து பதங்களைக் கொண்டது.

शितिबाहु रन्यतश्शितिबाहुस्समन्त शितिबाहुस्त ऐन्द्रवायवा-
श्शितिरन्ध्रोऽन्यतश्शितिरन्ध्रस्समन्त शितिरन्ध्रस्तैमैत्रा वरुणा-
श्शुद्धवालस्सर्वशुद्धवालो मणिवालस्त आश्विनास्तिस्रश्शिल्पावशा-
वैश्वदेव्यस्तिस्रश्श्येनीः परमेष्ठिने सोमा पौष्णाश्श्यामललामास्तू-
पराः ॥ [४४] ॥ १३ ॥

இதில், மூன்றாவது ஆட்டுக் கூட்டஞ் சொல்லப்படுகின்றது.

शितिबाहुरन्यतश्शितिबाहुस्समन्त शितिबाहुस्त ऐन्द्रवायवाश्शितिरन्ध्रो-ऽन्यतश्शितिरन्ध्रस्समन्त शितिरन्ध्रस्ते मैत्रावरुणाश्शुद्धवालस्सर्वशुद्ध-वालो मणिवालस्त आश्विनास्तिस्रश्शिल्पावशा वैश्वदेव्यस्तिस्रश्श्येनीः परमेष्ठिने सोमा पौष्णाश्श्यामललामास्तूपराः ॥

என்பது.

உரை.

இந்திர வாயுக்கட்கு ஒரு காலில் ஓரிடத்திற் சிறிது வெண்மையுடையதும், மற்றொரு காலில் மற்றோரிடத்தில் சிறிது வெண்மை நிறமுடையதும், கால்முழுதும் வெண்ணிறமுடையதுமான மூன்று ஆடுகளும், மித்திர வருணர்கட்கு வெள்ளைக் கோடுடையதும், மற்றொரு வகையில் வெள்ளைக் கோடுடையதும், எங்கும் வெள்ளைக் கோடுடையதுமான மூன்று ஆடுகளும், அசுவனிகளுக்கு வாலில் சிறிது வெண்மையுடையதும், வால் முழுதும் வெண்ணிற முடையதும், வெண்மையுங் கறுப்புமுடைய வாலுடையதுமான மூன்று ஆடுகளும், விசுவதேவர்கட்கு பல்வகை நிறங்களையுடைய மூன்று மலட்டாடுகளும், பரமேஷ்டிக்கு வெண்மை நிறமுடைய மூன்று ஆடுகளும், சோமனுக்கும் பூஷாவிற்கும் கறுப்பு நெற்றிப் புள்ளிகளுடைய மூன்று ஆடுகளும் கொன்று வேட்கத்தக்கவைகள் என்பதாம்.

பதின்மூன்றும் அநுவாகம்
முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் ஆறும்பிரபாடகம்

பதினான்காவது அநுவாகம்

இருபத்தைந்து பதங்களைக் கொண்டது.

उन्नत ऋषभो वामनस्त ऐन्द्रा वरुण श्शितिककुच्छिति पृष्ठश्शिति-भसत्त ऐन्द्राबार्हस्पत्या श्शितिपाच्छित्योष्टश्शितिभ्रुस्त ऐन्द्रा वैष्णवास्तिस्रस्सिध्मावशा वैश्वकर्मण्यस्तिस्रो धात्रे पृषोदरा ऐन्द्रा पौष्णाश्श्येतललामास्तूपराः ॥ [४५] शितिबाहुरुन्नतः पञ्चविꣳशतिः पञ्चविꣳशतिः ॥ १४ ॥

இதில், நான்காவது ஆட்டுக்கூட்டங் கூறப்படுகின்றது.

उन्नत ऋषभोवामनस्त ऐन्द्रा वरुणाश्शितिककुच्छितिपृष्ठश्शिति भसत्त-
ऐन्द्राबार्हस्पत्याश्शितिपाच्छित्योष्ठश्शितिभ्रुस्त ऐन्द्रावैष्णवास्तिस्रस्सि-
ध्मावशा वैश्वकर्मण्यस्तिस्रो धात्रे पृषोदरा ऐन्द्रा पौष्णाश्श्येतललामा-
स्तूपराः ॥

என்பது.

உரை

இந்திர வருணர்களுக்குப் பின்புறம் உயர்ந்ததும், யௌவனப் பருவமுடையதும், குட்டையான உடம்பையுடையதுமான மூன்று ஆடுகளும், இந்திர பிருகற்பதிகட்கு வெண்மைநிறக் கொண்டையுடையதும், பின்புறம் வெண்மை நிறமுடையதும், வெண்மையுள்ள தொடைகளையுடையதுமான மூன்று ஆடுகளும், இந்திர விஷ்ணுக்களுக்கு வெள்ளைக் காலுடையதும், வெள்ளை உதட்டையுடையதும், வெள்ளைப் புருவமுடையதுமான மூன்று ஆடுகளும், விசுவகருமனுக்கு வெண்மைநிறக் குறிகளுள் உடம்புகளையுடைய மூன்று மலட்டாடுகளும், பிரமனுக்கு வயிறு பெருத்த மூன்று பெண் ஆடுகளும், நெற்றியில் புள்ளிகளுள்ள ஆடுகள் மூன்றும் இந்திர பூஷாக்களுக்குங் கொன்று வேட்கத்தக்கவைகள் என்பதாம்.

பதினான்காம் அநுவாகம்
முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் ஆறும்பிரபாடகம்

பதினைந்தாவது அநுவாகம்

இருபத்துமூன்று பதங்களைக் கொண்டது.

कर्णास्त्रयोयामास्सौम्यास्त्रयश्श्वितिङ्गा अग्नये यविष्ठायत्रयो
नकुलास्तिस्रो रोहिणीस्त्र्यव्यस्तावसूनान्तिस्रोऽरुणादित्यौह्यस्ता-
रुद्राणांसोमैन्द्रा बभ्रुललामास्तूपराः ॥ [४६] कर्णास्त्रयोविंशतिः ॥
॥ १५ ॥

இதில், ஐந்தாவது ஆட்டுக்கூட்டங் கூறப்படுகின்றது.

ஆறவது பசுக்கூட்டம்)

कर्णास्त्रयोयामास्सौम्यास्त्रयश्श्वितिङ्गा अग्नये यविष्ठायत्रयो नकुलास्तिस्रो रोहिणीस्त्र्यव्यस्तावसूनान्तिस्रोऽरुणा दित्यौह्यस्तारुद्राणाꣳसोमैन्द्रा बभ्रु-ललामास्तूपराः ॥

என்பது.

உரை

எமதேவதைக்குக் காதறுபட்ட மூன்று ஆடுகளும், சோமனுக்கு வெண்மையான கால்களையுடைய மூன்று ஆடுகளும், கட்டிளமையுடைய அக்கினிக்குக் கீரிப் பிள்ளைபோன்ற நிறமுடைய மூன்று ஆடுகளும், வசுக்கட்கு ஒரு வருடமும் ஆறு மாதகாலமும் வயதுள்ள மூன்று சிவப்புப் பெண்ணாடுகளும், உருத்திரர்களுக்கு இரண்டு வருடம் வயதுடைய சிவப்புப் பெண்ணாடுகள் மூன்றும், சோம இந்திரர்கட்கு மங்கலான நெற்றியில் புள்ளிகளுடைய ஆடுகள் மூன்றும் கொன்று வேட்கத்தக்கவைகள் என்பதாம்.

பதினைந்தாவது அநுவாகம்
முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் ஆறும்பிரபாடகம்

பதினாறுவது அநுவாகம்.

இருபது பதங்களைக் கொண்டது.

शुण्ठास्त्रयो वैष्णवा अधीलोध कर्णास्त्रयो विष्णव उरुक्रमाय लफ्सुदिनस्त्रयो विष्णव उरुगायाय पञ्चावीस्तिस्र आदित्यानान्त्रि-वत्सास्तिस्रोऽङ्गिरसा मैन्द्रावैष्णवा गौरललामास्तूपराः ॥ [१७]
शुण्ठाविꣳशतिः ॥ १६ ॥

இதில், ஆறுவது ஆட்டுக்கூட்டஞ் சொல்லப்படுகின்றது.

शुण्ठास्त्रयो वैष्णवा अधीलोध कर्णास्त्रयो विष्णव उरुक्रमाय लफ्सुदिन-स्त्रयो विष्णव उरुगायाय पञ्चावीस्तिस्र आदित्यानान्त्रिवत्सास्तिस्रोऽ-ङ्गिरसा मैन्द्रावैष्णवा गौरललामास्तूपराः ॥

என்பது.

உரை.

விஷ்ணுவிற்கு மடிப்பில்லாத காதுகளையுடைய மூன்று ஆடுகளும், இவைகள் சிறியவுடம்புடைய ஆடுகளென்பர் சிலர். பெரிய திருவடிகளை யுடைய விஷ்ணுவிற்கு காதிற்குமேல் காதைப்போலெழும்பியுள்ள மூன்று ஆடுகளும், மகரிஷிகளால் துதிக்கப்பெற்ற விஷ்ணுவிற்கு நீண்ட வால்களை யுடைய மூன்று ஆடுகளும், ஆதித்தர்கட்கு இரண்டரை வருடகால வய துடைய மூன்று பெண்ணுடுகளும், ஆங்கிரசர்கட்கு மூன்று வருட வயது டைய மூன்று பெண்ணுடுகளும், இந்திர விஷ்ணுக்கட்கு நெற்றியில் வெள் ளைப் புள்ளிகளுடைய மூன்று ஆடுகளும் கொன்று வேட்கத்தக்கவைகள் என்பதாம்.

பதினாறுவது அநுவாகம்
முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் ஆறும்பிரபாடகம்

பதினேழாவது அநுவாகம்
இருபத்திரண்டு பதங்களைக் கொண்டது.

इन्द्रा॑यरा॒ज्ञे त्र्य॒॑शिशतिपृ॒ष्ठा इन्द्रा॑याधि॒राजा॒य त्र॒यशि॑शति॑ककु॒द
इन्द्रा॑यस्व॒रा॒ज्ञे त्र॒यशि॑शति॑भसद॒स्ति॒स्रस्तु॑र्यौ॒ह्य॑स्सा॒ध्याना॑न्ति॒स्रः
प॑ष्ठौ॒ह्यो॑ विश्वे॑षान्दे॒वाना॑मा॒ग्नेन्द्राः कृ॒ष्णल॑लामास्तू॒पराः ॥ [४८]
इन्द्रा॑यरा॒ज्ञे द्वावि॑ꣳशतिः ॥ १७ ॥

இதில், ஏழாவது ஆட்டுக்கூட்டங் கூறப்படுகின்றது.

इन्द्रायराज्ञे त्र्यशिशतिपृष्ठा इन्द्रायाधिराजाय त्र्यशिशतिककुद इन्द्रायस्वराज्ञे त्र्यशिशतिभसदास्तिस्रस्तुर्यौह्यस्साध्यानान्तिस्रः पष्ठौह्यो विश्वेषान्देवानामाग्नेन्द्राः कृष्णललामास्तूपराः ॥

என்பது.

உரை.

தேவர்கட்கு அரசனுகிய இந்திரனுக்கு பின்புறம் வெண்மை நிற முடைய மூன்று ஆடுகளும், அதிராசனென்னும் இந்திரனுக்கு வெள்ளைக் கொண்டையையுடைய மூன்று ஆடுகளும், சுவராசன் என்னும் இந்திரனுக்கு

எட்டாவது பசுக்கூட்டம்)

வெண்ணிறத் தொடைகளையுடைய மூன்று ஆடுகளும், சாத்தியர்கள் என்னுந் தேவர்கட்கு நாலரை வருட வயதுடைய மூன்று பெண்ணாடுகளும், விசுவதேவர்கட்கு நான்கு வருட வயதுடைய மூன்று பெண்ணாடுகளும், அக்கினி இந்திரர்கட்கு நெற்றியில் கறுப்புப் புள்ளிகளையுடைய மூன்று ஆடுகளும் கொன்று வேட்கத்தக்கவைகள் என்பதாம்.

பதினேழாவது அநுவாகம்

முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் ஆறும்பிரபாடகம்

பதினெட்டாவது அநுவாகம்

பதினெட்டு பதங்களைக் கொண்டது.

अदि॑त्यै॒ त्रयो॑रोहितैता इ॑न्द्राण्यै॑त्रय॑ः कृ॒ष्णैताः कु॒ह्वै॑त्रयो॑ऽरुणैता॒-
स्तिस्रो॒धेन॒वो॑रा॒का॒यै॒ त्रयो॑ऽनडु॒ाह॑स्सिनीवा॒ल्या आ॑ग्नावैष्ण॒वा
रोहि॑तललामास्तू॒पराः ॥ [४९] अदि॑त्या अ॒ष्टाद॑श ॥ १८ ॥

இதில், எட்டாவது ஆட்டுக்கூட்டங் கூறப்படுகின்றது.

अदित्यै त्रयोरोहितैता इन्द्राण्यैत्रयः कृष्णैताः कुह्वैत्रयोऽरुणैतास्तिस्रोधेन-
वोराकायै त्रयोऽनड्वाहस्सिनीवाल्या आग्नावैष्णवा रोहितललामा-
स्तूपराः ॥

என்பது.

உரை.

அதிதி தேவதைக்குச் சிவப்புக்கலந்த மஞ்சள் நிறமுடைய மூன்று ஆடுகளும், இந்திராணிக்கு கறுப்புக்கலந்த மஞ்சள் நிறமுடைய மூன்று ஆடுகளும், குகு என்னுந் தேவதைக்கு சிறிது சிவப்புக்கலந்த மஞ்சள் நிறமுடைய மூன்று ஆடுகளும், 'ராகா' என்னுந் தேவதைக்கு பால் கறக்கும் ஆடுகள் மூன்றும், 'சினீவாலி' என்னுந் தேவதைக்கு வண்டி இழுக்கும் மூன்று ஆடுகளும், அக்கினி விஷ்ணுக்களுக்கு நெற்றியில் சிவப்புப் புள்ளிகளையுடைய மூன்று ஆடுகளும் கொன்று வேட்கத்தக்கவைகள் என்பதாம்.

பதினெட்டாவது அநுவாகம்

முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் ஆறும்பிரபாடகம்

பத்தோன்பதாவது அநுவாகம்

பத்தோன்பது பதங்களைக் கொண்டது.

सौम्यास्त्रयः पिशङ्गास्सोमाय राज्ञे त्रयस्सारङ्गाः पार्जन्या नभोरूपास्तिस्रोऽजा मल्हा इन्द्राण्यै तिस्रोमेष्य आदित्याद्यावा पृथिव्यां मालङ्गास्तूपराः ॥ [५०] सौम्या एकान्नविंशतिः ॥ १९ ॥

இதில், ஒன்பதாவது ஆட்டுக்கூட்டங் கூறப்படுகின்றது.

सौम्यास्त्रयः पिशङ्गास्सोमायराज्ञे त्रयस्सारङ्गाः पार्जन्या नभोरूपास्तिस्रोऽजा मल्हा इन्द्राण्यै तिस्रोमेष्य आदित्या द्यावापृथिव्या मालङ्गास्तूपराः ॥

என்பது

உரை.

சோமனுக்குக் கோரோசனை நிறமான மூன்று ஆடுகளும், அரசனாகிற சோமனுக்கு புள்ளிமான் போன்ற நிறமுடைய மூன்று ஆடுகளும், மழைத் தேவதைக்கு மைநிறமுடைய மூன்று ஆடுகளும், இந்திராணியின் பொருட்டுக் கழுத்தில் முலைகள் தொங்குகின்ற மூன்று பெண்ணாடுகளும், அதிதிக்குப் பெண் செம்மறி ஆடுகள் மூன்றும், வான் மண் தேவதைகட்குப் பெருத்த வுடம்பையுடைய மூன்று ஆடுகளும் கொன்று வேட்கத்தக்கவைகள் என்பதாம்.

பத்தோன்பதாவது அநுவாகம்
முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் ஆறும்பிரபாடகம்

இருபதாவது அநுவாகம்

இருபது பதங்களைக் கொண்டது.

वारुणास्त्रयः कृष्णललामा वरुणायराज्ञे त्रयोरोहितललामा वरुणायरिशादसे त्रयोऽरुणललामाश्शिल्पास्त्रयो वैश्वदेवास्त्रयः पृश्नयस्सर्वदेवत्या ऐन्द्रास्सुराश्श्येतललामास्तूपराः ॥ [५१] वारुणाविंशतिः ॥ २० ॥

பத்தாவதும், இரட்டைப் பசுக்களும்)

இதில், பத்தாவது ஆட்டுக்கூட்டங் கூறப்படுகின்றது.

वारुणास्त्रयः कृष्णललामा वरुणायराज्ञे त्रयोरोहितललामा वरुणाय रिशा-
दसे त्रयोऽरुणललामाश्शिल्पास्त्रयो वैश्वदेवास्त्रयः पृश्नयस्सर्वदेवत्या
ऐन्द्रासूराश्श्येतललामा स्तूपराः ॥

என்பது.

உரை.

வருணனுக்குக் கரிய நெற்றிப்புள்ளிகளையுடைய மூன்று ஆடுகளும், அரசனாகிய வருணனுக்குச் சிவந்த நெற்றிப்புள்ளிகளையுடைய மூன்று ஆடுகளும், பகைவரைக்கெடுக்கின்ற வருணனுக்கு அருண நிறமுள்ள நெற்றிப் புள்ளிகளையுடைய மூன்று ஆடுகளும், விசுவதேவர்கட்குச் சித்திரப்புள்ளி களையுடைய மூன்று ஆடுகளும், சர்வதேவதைகட்கு வெண்மை நிறமுடைய மூன்று ஆடுகளும், இந்திரசூரர்கட்கு, வெண்மைநிற நெற்றிப்புள்ளிகளையுடைய மூன்று ஆடுகளும் கொன்று வேட்கத் தக்கவைகள் என்பதாம். இத்துடன் மொட்டையான ஆடுகள் முடிந்துவிட்டன.

இருபதாவது அநுவாகம்
முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் ஆறும்பிரபாடகம்

இருபத்தோராவது அநுவாகம்

முப்பத்துநான்கு பதங்களைக் கொண்டது.

सोमायस्वराज्ञेऽनोवाहावनड्वाहा विन्द्राग्निभ्यामोजोदाभ्यामुष्टारा
विन्द्राग्निभ्याम्बलदाभ्याꣳसीरवाहाववीद्वेधेनूभौमी दिग्भ्योवडबेद्वे-
धेनूभौमी वैराजीपुरुषीद्वेधेनूभौमी वायव्य आरोहणवाहावनड्वाहौ
वारुणी कृष्णेवशे अराड्यौ दिव्यावृषभौ परिमरौ ॥ [५२]
सोमाय स्वराज्ञे चतुस्त्रिꣳशत् ॥ २१ ॥

இதில்மாத்திரம், இரட்டை இரட்டையான பசுக்கள் கூறப்படுகின்றன.

सोमायस्वराज्ञेऽनोवाहावनड्वाहा विन्द्राग्निभ्यामोजोदाभ्यामुष्टारा विन्द्रा-
ग्निभ्यास्बलदाभ्याꣳसीरवाहाववीद्रेधेनूभौमी दिग्भ्योवडबेद्वेधेनूभौमी
वैराजीपुरुषीद्वेधेनूभौमी वायव आरोहणवाहावनड्वाहौ वारुणी कृष्णे-
वशे अराड्यौ दिव्यावृषभौ परिमरौ ॥

என்பது.

உரை.

சோமனுக்கு பாரவண்டியிழுக்கத்தக்க இரண்டு எருதுகளும், இந்திர அக்கினிகட்கு வண்டி யிழுப்பவைகட்கு உதவியாக முன்னுள்ள நுகத்தடியைத் தாங்கிக்கொள்ளுகின்ற இரண்டு எருதுகளும், ஏரிழுக்கும் சிறிய எருதுகளிரண்டும், பலத்தையளிக்கும் இந்திர அக்கினிகளின் பொருட்டும், பூமியின் பொருட்டும், இரண்டு பால்பசுக்களும், திசைகட்கு கோவேறு கழுதைகள் இரண்டும், மீண்டும் பூமிக்கு பால்பசுக்கள் இரண்டும், விராட் என்னுந் தேவதைகட்கு இரண்டு மனித மாதர்களும், மீண்டும் பூமியின் பொருட்டு இரண்டு பால்பசுக்களும், வாயுவின் பொருட்டு சவாரிவண்டி யிழுக்கும் இரண்டு காளைமாடுகளும், வருணனுக்கு குட்டிபோடாத இரண்டு கரும் பெட்டைமான்களும், வானுலக தேவதைக்கு மேல்தூக்கின கொம்புகள் உடையவைகளும், முன்பிறந்ததும், பின்பிறந்ததும் இறந்துபோயுள்ளவைகளும் பொலிதற்குரியவைகளுமான காளைமாடுகளிரண்டும் கொன்றுவேட்கத் தக்கவைகள் என்பதாம்.

இருபத்தோராவது அநுவாகம்
முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் ஆறும்பிரபாடகம்

இருபத்திரண்டாவது அநுவாகம்

இருபத்தைந்து பதங்களைக் கொண்டது.

एकादश प्रातर्गव्याः पशव आलभ्यन्ते छगलः कल्माषः
किकिदीविर्विदीगयस्ते त्वाष्ट्रास्सौरीर्नवश्वेतावशा अनूबन्ध्याभव-
न्त्याग्नेय ऐन्द्राग्न आश्विनस्ते विशालयूप आलभ्यन्ते ॥ [५३]
एकादशप्रातः पञ्चविꣳशतिः ॥ २२ ॥

சிலபசுக்கள்)

இதில், நல்லதினமாகிய அதிராத்திரியில் அநுட்டிக்தக்க சில பசுக்கள் கூறப்படுகின்றன.

एकादश प्रातर्गव्याः पशव आलभ्यन्ते छागः कल्माषः किकिदीविर्विदीगयस्ते त्वाष्ट्रास्सौरीर्नवश्वेतावशा अनूबन्ध्या भवन्त्याग्नेय ऐन्द्राग्न आश्विनस्ते विशालयूप आलभ्यन्ते ॥

என்பது.

உரை.

மூன்றும்நாட்காலையில் பதினொரு கோக்களைக்கொண்று வேட்கவேண்டும். இங்கு, வேறுதேவதை காணப்படாமையின் இவைகள் பிரசாபதி தேவதையுன் பொருட்டு என்பதை யுணர்க. துவஷ்டா தேவதைக்கு கறுப்புக்கலந்த ஆட்டுக்குட்டி கோழிவிசேடம் தித்திரிப்பறவை என்பவைகளும் அதேதினத்திற்கொன்று வேட்கத்தக்கவைகள். சூரியதேவதைக்கு அநுபந்தத்தி (முடிவுகாலத்தி)ல், வெள்ளை நிறமுடைய ஒன்பது மலட்டாடுகளும், மற்றும், அக்கினிக்கும் இந்திராக்கினிக்கும் அசுவினுக்கும் நடுவில் மிக விரிந்த அக்கினிஷ்டா என்னும் யூபத்திற்கட்டிக்கொன்று வேட்கத்தக்கவைகள் என்பதாம்.

இருபத்திரண்டாவது அநுவாகம்
முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் ஆறும்பிரபாடகம்

இருபத்துமூன்றும் அநுவாகம்

இருபது பதங்களைக் கொண்டது.

पिशङ्गास्त्रयो वासन्तास्सारङ्गास्त्रयो ग्रैष्माः पृषन्तस्त्रयो वार्षिकाः पृश्नयस्त्रयश्शारदाः पृश्निसक्थास्त्रयोहैमन्तिका अवलिप्तास्त्रय श्शैशिरास्संवत्सराय निवक्षसः ॥ [५४] पिशङ्गा-विंशतिः ॥ २३ ॥

रोहितः कृष्णाधूम्रललामाः पृश्निश्श्यामा अरुणललामाश्शिति-बाहुश्शिल्पाश्श्येनी श्श्यामललामा उन्नतस्सिध्मा धात्रे पौष्णा-

श्येतललामाः कर्णा बभ्रुललामाश्शुण्ठा गौरललामा इन्द्राय कृष्णललामा अदित्यै रोहितललामास्सौम्यामालङ्गा वारुणास्तूरा श्येतललामादश ॥

இப் பிரபாடகத்திலுள்ள அநுவாகங்களின் தலைப்புச் சொற்களைக் கொண்ட தொகை:—

हिरण्यवर्णा अपाङ्गहान्भूतेष्टका स्सजूस्संवत्सरं प्रजापतिस्संचक्षुरपविरग्नेवै दीक्षया सुवर्गायतं यन्नब्रुयते प्रजापतिर्क्रतुभीरोहितः पृश्निश्शिति बाहुरुन्नतः कर्णाश्शुण्ठा इन्द्रायादित्यै सौम्यावारुणास्सोमायैकादश पिशङ्गास्त्रयोविꣳशतिः ॥ २३ ॥

பஞ்சாதிகளின் தலைப்புச்சொற்களைக் கொண்டதொகை:—

हिरण्यवर्णाभूतेष्टकाश्छन्दो यत्कनीयाꣳसन्निवृध्यग्निर्वारुणाश्चतुः पञ्चाशत् ॥ ५४ ॥ हिरण्यवर्णानिवक्षसः ॥

இவ்வநுவாகத்தில் இருது பசுக்கள் கூறப்படுகின்றன.

पिशङ्गास्त्रयो वासन्तास्सारङ्गास्त्रयो ग्रैष्माः पृषन्तस्त्रयो वार्षिकाः पृश्नयस्त्रयश्शारदाः पृश्निसक्थास्त्रयो हैमन्तिका अवलिप्तास्त्रयश्शैशिरास्संवत्सराय निवक्षसः ॥

என்பது.

உரை.

வசந்த இருதுவிற்கு கோரோசனை நிறமுடைய மூன்று பசுக்களும், கிரீஷ்ம இருதுவிற் (மிகுவேனிற்காலத்திற்)கு புள்ளிமானிறமுடைய மூன்று ஆடுகளும், வர்ஷாரிதுவிற் (மழைகாலத்திற்)கு வேறுசாதியான புள்ளிகளையுடைய மூன்று ஆடுகளும், சரத்காலத்திற் (முன்பனிக்காலத்திற்)கு வெண்ணிற ஆடுகள் மூன்றும், பின்பனிபனிக்காலத்திற்கு இடுப்பில் வெண்ணிறமுடைய மூன்று ஆடுகளும், சிசிர இருதுவிற்கு, அனேகவர்ணங்களையுடைய மூன்று ஆடுகளும், வருடதேவதைக்கு குனிந்தமார்புடைய மூன்று ஆடுகளும் கொன்று வேட்கத்தக்கவைகள் என்பதாம்.

இருபத்துமூன்றும் அநுவாகம்
முற்றிற்று.

ஐந்தாங்காண்டத்தின் ஆறும்பிரபாடகம் முடிந்தது.

ஏழாம்பிரபாடக விடயச்சுருக்கம்.

ஏழாம் பிரபாடகத்தில், முற்கூறிய ஔபாநு வாக்கியங்களில் எஞ்சியவைகள் கூறப்படுகின்றன.

गायत्र्यादिभिराग्नेय मन्त्रैः पञ्च चितीस्स्पृशेत् ।
अग्ने देवानिहेत्याद्या नाचिकेतचितीरिताः ॥ १ ॥
गायत्र्याद्याः पञ्चमन्त्रा इहाऽऽनेया यथाक्रमम् ।
सौरी चित्रवती चित्रं देवानामित्यसौ भवेत् ॥ २ ॥
त्वामग्ने वृषभं दध्यात्प्रत्येकं चितिपञ्चके ।
संवत्सरस्येति दध्यात्प्राजापत्यामिहेष्टकाम् ॥ ३ ॥
येनदेवा उख्यमिन्धे दध्यादज्यानिसंज्ञिकाः ।
शतायुधायेति पञ्चमन्त्रैः पञ्चेष्टका इमाः ॥ ४ ॥
इन्द्रस्य वज्रिणीर्दध्यादग्ना विष्णू घृताहुतिः ।
चित्तिं जुहोमिचाग्ने तं सप्तते त्रीन्जुहोतिहि ॥ ५ ॥
अग्ने यशेत्युपादध्याद्राष्ट्र भृत्संज्ञकेष्टकाः ।
सुवर्न पञ्चभिर्हुत्वा तेजस्तिस्रो दधातिहि ॥ ६ ॥
यास्ते तिस्रो जुहोत्येवं तत्वा यामीति होमकः ।
यदाकूतादितिप्रोक्तैर्मन्त्रैराकूतिहोमकः ॥ ७ ॥
यास्तेस्पर्शश्चतस्रेति मन्त्रात्कूर्मं दधातिहि ।
मयीत्यग्नि ग्रहो गायत्र्याद्याः पूर्वमुदीरिताः ॥ ८ ॥
ताभिः पञ्चेष्टका दध्या दग्निकाण्डमितीरितम् ।
स्तेगानित्यश्वमेधाङ्ग मन्त्राष्षोडशसु श्रुताः ॥ ९ ॥
अनुवाकेषु काण्डं यत् पञ्चमं यद्भिसु स्थितम् ॥

இவ்வேழாம் பிரபாடகத்தில் இருபத்தாறு அநுவாகங்களுள்ளன. அவற்றுள், முதலநுவாகத்தில் செங்கலடுக்கைத் தொடுவதும், இரண்டாவதில், ரிஷபேஷ்டகை முதலியவைகளும், மூன்றுவதில், வஜ்ரிணீ, என்னும் கூழாங் கல்லுகளும். நான்காவதில், சில ஹோமங்களும் ராஷ்ரபிருத்துக்களும், ஐங்வாவதில், உகாத்தி அணைந்தால் மீண்டும் உண்டாக்குதலும், ஆறுவதில் விரதம் முதலியவைகளும், ஏழாவதில் ஆகூதி, என்னும்

ஹோமங்கட்குரிய மந்திரங்களும், எட்டாவதில், ஸ்வயஞ்சிதி, என்னும் மந்திரத்தால் மகாக்கினி சயனத்தைத் தொடுதல் முதலியதும், ஒன்பதாவதில் அக்கினியைத் தன்னுள் கவர்ந்துக் கொள்வதும், பத்தாவதில் பசுக்களின் தலைகளை வைப்பதின் விதி முதலியதும், பதினொன்றாவது முதல் இருபத்தாறாவது வரையுள்ள பதினொரு அநுவாகங்களில் அசுவ மேகத்தில் செய்ய வேண்டிய நெய் ஹோமங்கட்குரிய மந்திரங்களுங் கூறப்படுகிறன. இத்துடன் ஐந்தாங் காண்டம் முடிந்தது என்பது.

ஐந்தாங்காண்டம் ஏழாம்பிரபாடகம்

முதலாவது அநுவாகம்.

செங்கலடுக்கைத் தொடுவதை விதிக்கும் பிராமணங்கள்

இரண்டு பஞ்சாதிக்குமேல் நாற்பது பதங்களைக் கொண்டது.

यो वा अयथादेवतमग्निं चिनुत आ देवताभ्यो वृश्च्यते पापी-
यान्भवति यो यथादेवतं न देवताभ्य आ वृश्च्यते वसीयान्भव-
त्याग्नेय्या गायत्रिया प्रथमां चितिमभि मृशेत्त्रिष्टुभा द्वितीयां
जगत्या तृतीयामनुष्टुभा चतुर्थीं पङ्क्त्या पञ्चमीं यथादेवत-
मेवाग्निं चिनुते न देवताभ्य आ वृश्च्यते वसीयान्भवतीडायै वा
एषा विभक्तिः पशव इडा पशुभिरेनम् [१] चिनुते यो वै प्रजा-
पतये प्रतिप्रोच्याग्निं चिनोति नाऽऽर्तिमार्छत्यश्वावभितस्तिष्ठेतां
कृष्ण उत्तरतश्श्वेतो दक्षिणस्तावालभ्येष्टका उप दध्यादेतद्वै
प्रजापते रूपं प्राजापत्योऽश्वस्साक्षादेव प्रजापतये प्रतिप्रोच्याग्निं
चिनोति नाऽऽर्तिमार्छत्येतद्वा अह्नो रूपं यच्छ्वेतोऽश्वो रात्रियै
कृष्ण एतदह्नः [२] रूपं यदिष्टका रात्रियै पुरीषमिष्टका उप-
धास्यञ्छ्वेतमश्वमभिमृशेत्पुरीष मुपधास्यन्कृष्णमहोरात्राभ्यामेवैनं

चिनुते हिरण्यपात्रं मधोः पूर्णं ददाति मधव्योऽसानीति सौर्या चित्रवत्याऽवेक्षते चित्रमेव भवति मध्यंदिनेऽश्वमवं घ्रापयत्यसौ वा आदित्य इन्द्र एष प्रजापतिः प्राजापत्योऽश्वस्तमेव साक्षादृध्नोति [३] ॥ एनमेतदह्नोऽष्टाचत्वारिंशच ॥ १ ॥

இதில், செங்கல் அடுக்குக்களைத் தொடல் வேண்டுமெனல் சொல்லப்படுகிறது.

மந்திர விசேடங்களால் செங்கலடுக்கைத் தொடல் வேண்டுமென்னும் விதி.

பிராமணம்—1

यो वा अयथादेवतमग्निं चिनुत आ देवताभ्यो वृश्च्यते पापीयान्भवति यो यथादेवतं न देवताभ्य आ वृश्च्यते वसीयान्भवत्याग्नेय्या गायत्रिया प्रथमां चितिमभि मृशेत्त्रिष्टुभा द्वितीयां जगत्या तृतीयामनुष्टुभा चतुर्थीं पङ्क्त्या पञ्चमीं यथादेवतमेवाग्निं चिनुते न देवताभ्य आ वृश्च्यते वसीयान्भवति ।

என்பது.

உரை.

ஒவ்வொரு செங்கலடுக்கிற்கு உள்ள அவ்வத்தேவதையை விட்டு மாறிச் செய்யில் வேள்வித் தலைவன் தேவர்களிடத்திலிருந்து நழுகியவனாவான். மற்றும், பாவமுடையவனும் ஆவான். முறையாய்ச் செய்யில் நழுகாதவனாவதுடன் பாவமுடையவனுமாக மாட்டான். ஆதலின், ''அக்னே தேவாங் இஹ ஆவஹ'' என்னும் அக்கினியின் காயத்திரியாலும் 'அகன்ம மஹாமனஸாயவிஷ்டம்,' என்னுந் திடுரிஷ்பாலும், 'மேதாகாரம்,' என்னுஞ் சகதியாலும், ''மநுஷ்வத்வா நிதிமஹி'' என்னும் அநுஷ்டுபாலும், அக்னிர்ஹி வாஜினம், என்னும் பங்க்தியாலும், ஐந்து அடுக்குக்களையுந் தொடுதல் வேண்டும். இம்மந்திரங்கட்கு, நாசிகேத சயனத்தில் உரை கூறப்படும் என்பதாம். இதன் விரிவை நான்காங் கண்டத்திற் காண்க. (1)

ஒவ்வொரு செங்கலடுக்கைத் தொடுவதற்கு மந்திரங்களை அவ்வைந்தாக வேறு படுத்தியதைப் புகழ்கின்றது

பிராமணம்—2

इडायै वा एषा विभक्तिः पशव इडा पशुभिरेनञ्चिनुते ।

என்பது.

உரை.

'இடா, என்பதன் பொருட்டு இவ்வாறு பிரித்தது. ஏனெனின்? இடா என்பது பசுவாம். பசுவோ, காயத்திரி முதலிய ஐந்து சந் தங்களின் வடிவமாம் ஆதலின் என்க. இவ்வாறுகவே, காயத்திரி முதலிய சந்த ரூபமாகிய பசுக்களால் செங்கல் அடுக்கப் பெற்றதாகின்றது என்பதாம்.

செங்கலை அடுக்கும்போது குதிரையைத் தொடல் வேண்டுமென்று விதிக்கின்றது

பிராமணம்—3

यो वै प्रजापतये प्रतिप्रोच्याग्निं चिनोति नाऽऽर्तिमार्छत्यश्वावभितस्तिष्ठेतां कृष्ण उत्तरतश्श्वेतो दक्षिणस्तावालभ्येष्टका उप दध्यादेतद्वै प्रजापते रूपं प्राजापत्योऽश्वस्साक्षादेव प्रजापतये प्रतिप्रोच्याग्निं चिनोति नाऽऽर्तिमार्छति ।

என்பது.

உரை.

பிரமன், அக்கினியைப் படைத்ததாலும், முதலில் செங்கலடுக்கைச் செய்ததாலும் அக்கினிக்குத் தலைவனாகின்றான். ஆதலின், பிரமனிடஞ் சொல்லிவிட்டு அநுக்ஞை பெற்றுக்கொண்டு அக்கினி சயனஞ் செய்யாவிடில் அது கெட்டுவிடும். அதன் பொருட்டு, பிரமன் படைத்ததால் பிரமனுடைய வடிவான வெண் குதிரையை, செய்யுஞ் சயனத்திற்குத் தெற்கிலும், வடக்கில் கறுப்புக் குதிரையையும் நிறுத்தி வைத்து 'அவ்விரண்டையுந் தொட்டபின் செங்கலடுக்கல் வேண்டும்'. இதனால், பிரமனிடத்தில் அநுக்ஞை பெற்றுக் கொண்டு அக்கினி சயனஞ் செய்தவனாகின்றான் என்பதாம்.

தொடுதல்)

குதிரையைத் தொடும் விடயத்தில் பகுப்பை விதிக்கின்றது.

பிராமணம்—4

एतद्वा अह्नो रूपं यच्छ्वेतोऽश्वो रात्रियै कृष्ण एतदह्नो रूपं यदिष्टका रात्रियै पुरीषमिष्टका उपधास्यञ्छ्वेतमश्वमभिमृशेत्पुरीष मुपधास्यन्कृष्णमहो-रात्राभ्यामेवैनं चिनुते ।

என்பது.

உரை.

வெள்ளைக் குதிரையும் செங்கலும் பகலாம், கறுப்புக் குதிரையும் மணலும் இரவாம், ஆதலின் செங்கலை வைக்குமுன் வெண் குதிரையையும், மணலைப் போடுவதற்கு முன் கறுப்புக்குதிரையையுந் தொடல் வேண்டும். இதனால், பகலிரவுகளால் அக்கினி சயனஞ் செய்யப்பட்டதாகின்றது என்பதாம்.

தட்சிணை கொடுக்கும் போது செய்ய வேண்டிய தானத்தை விதிக்கின்றது.

பிராமணம்—5

हिरण्यपात्रं मधोः पूर्णं दधाति मधव्योऽसानीति ।

என்பது

உரை.

'பரவுலகில் தேன்சுவையுடைய பொருள்களை யுடையவனுவேன்' என்னுங் கருத்துக் கொண்டு தேன் நிறையப் பெற்ற பொற் பாத்திரத்தை அளித்தல் வேண்டும் என்பதாம்.

தானஞ் செய்யுமுன், அப்பாத்திரத்தை வேள்வித் தலைவன் பார்த்தல் வேண்டுமென்னும் விதி.

பிராமணம்—6

सौर्या चित्रवत्याऽवेक्षते चित्रमेव भवति मध्यं दिने ।

என்பது.

உரை.

உச்சிப் போது தட்சிணை கொடுத்தற் குரிய காலமானதால், அதற்கு முன், 'சித்ரம், என்பது முதலிய சூரிய மந்திரத்தால் அப் பாத்திரத்

தைப் பார்த்தல் வேண்டும். இதனால் விசித்திரமான பல்வகை ஐசுவரியங்களை யடைகின்றான் என்பதாம்.

பிறகு குதிரை முகந்து பார்த்தல் வேண்டு மென்று விதிக்கின்றது.

பிராமணம்—7

अश्वमव घ्रापयत्यसौ वा आदित्य इन्द्र एष प्रजापतिः प्राजापत्योऽश्वस्तमेव साक्षादृध्नोति ॥

என்பது.

உரை.

விசித்திரமுடையவனெனப்பெற்ற சூரியன், மிகுந்த ஐசுவரிய முடையவனாதலின் இந்திரனும், பிரசைகளைப் பாதுகாப்பதால் பிரமனுமாகின்றான். குதிரையோ, பிரமனுடைய தாம். ஆதலின், குதிரை, அப்பாத்திரத்தை முகந்து பார்த்தால் அத்தகைய சூரியனை நேரே மிகுந்த ஐசுவரிய முடையனைச் செய்கின்றது என்பதாம்

முதலாம் அநுவாகம்
முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் ஏழாம்பிரபாடகம்

இரண்டாம் அநுவாகம்

இடபச் செங்கலைக் கூறும் பிராமணங்கள்.

ஐந்து பஞ்சாதிக்குமேல் இருபத்தைந்து பதங்களைக் கொண்டது.

त्वामग्ने वृषभं चेकितानं पुनर्युवानं जनयन्नुपागाम् । अस्थूरिणो गार्हपत्यानि सन्तु तिग्मेन नो ब्रह्मणा सꣳ शिशाधि । पशवो वा एते यदिष्टकाश्चित्यांचित्यामृषभमुप दधाति मिथुनमेवास्य तद्यज्ञे करोति प्रजननाय तस्माद्यूथेयूथ ऋषभः । संवत्सरस्य प्रतिमां यां त्वा रात्र्युपासते । प्रजाꣳ सुवीरां कृत्वा विश्वमायुर्व्यश्नवत् । प्राजापत्याम् [४] एतामुप दधातीयं वावैषैका-

ष्टका यदेवैकाष्टकायामन्नं क्रियते तदेवैतयाऽवं रुन्ध एषा वै
प्रजापतेः कामदुधा तयैव यजमानोऽमुष्मिँल्लोकेऽग्निं दुहे येन देवा
ज्योतिषोर्ध्वा उदायन् येनाऽऽदित्या वसवो येन रुद्राः । येनाङ्गि-
रसो महिमानमानशुस्तेनैतु यजमानस्स्वस्ति । सुवर्गाय वा एष
लोकाय [५] चीयते यदग्निर्येन देवा ज्योतिषोर्ध्वा उदायन्नि-
त्युख्यꣳ समिन्ध इष्टका एवैता उप धत्ते वानस्पत्यास्सुवर्गस्य
लोकस्य समष्ट्यै शतायुधाय शतवीर्याय शतोतयेऽभिमातिषाहे ।
शतं यो नश्शरदो अजीतानिन्द्रो नेषदति दुरितानि विश्वा । ये
चत्वारः पथयो देवयाना अन्तरा द्यावापृथिवी वियन्ति । तेषां
यो अज्यानिमजीतिमावहात्तस्मै नो देवाः [६] परि दत्तेह सर्वे ।
ग्रीष्मो हेमन्त उत नो वसन्तश्शरद्वर्षास्सुवितं नो अस्तु । तेषा-
मृतूनाꣳ शतशारदानां निवात एषामभयेस्याम । इदुवत्सराय
परिवत्सराय संवत्सराय कृणुता बृहन्नमः । तेषां वयꣳ सुमतौ
यज्ञियानां ज्योगजीता अहतास्स्याम । भद्रान्नश्श्रेयस्समनैष्ट
देवास्त्वयाऽवसेन समशीमहि त्वा । स नो मयोभूः पितो [७]
आ विशस्व शं तोकाय तनुवे स्योनः । अज्यानीरेता उप दधा-
त्येता वै देवता अपराजितास्ता एव प्र विशति नैव जीयते ब्रह्म-
वादिनो वदन्ति यदर्धमासा मासा ऋतवस्संवत्सर ओषधीः
पचन्त्यथ कस्मादन्याभ्यो देवताभ्य आग्रयणं निरुप्यत इत्येता
हि तद्देवता उदजयन् यदृतुभ्यो निर्वपेद्देवताभ्यः समदं दध्यादाग्र-

यणं निरुप्यैता आहुतीर्जुहोत्यर्धमासानेव मासानृतून्त्संवत्सरं प्रीणाति न देवताभ्यस्समदं दधाति भद्रान्नश्श्रेयस्समनैष्ट देवा इत्याह हुताद्याय यजमानस्यापराभावाय [८] ॥ प्राजापत्यां लोकाय देवाः पितो दध्यादाग्रयणं पञ्चविंशतिश्च ॥ २ ॥

இதில் இடபச் செங்கல் முதலியன கூறப்படுகின்றன.

ரிஷபேஷ்டிகையை விதித்தற் பொருட்டு மந்திரத்தைத் தோற்றுவிக்கின்றது.

பிராமணம்—1

त्वामग्ने वृषभं चेकितानं पुनर्युवानं जनयन्नुपागाम् । अस्थूरिणो गार्हपत्यानि सन्तु तिग्मेन नो ब्रह्मणा सꣳशिशाधि ।

என்பது.

உரை

வேண்டியவற்றை நிறைவிப்பவனும், எல்லாவற்றையும் உணர்கின்றவனும, கட்டிளமையுடையவனுமாகிய அக்கினியே! உன்னை, பிரசைகளையுண்டாக்கிக்கொண்டு மீண்டும் மீண்டும் அடைகின்றேன். எங்களுடைய வீட்டுக்காரியங்கள் சார முடையவைகளாக இருக்குக. பிரமவொளியால் எங்களை நன்கு போதிப்பாயாக என்பதாம்.

இம்மந்திரத்தால் ரிஷபம் என்னுஞ் செங்கலை வைத்தல் வேண்டும். இது ஐந்தடுக்கிலும் வைக்கப்படுவது. இதன் விரிவை, கா-4-பிர-3, அநு-1ல் காண்க.

இம்மந்திரத்தால் வைக்க வேண்டியதை விதிக்கின்றது.

பிராமணம்—2

पशवो वा एते यदिष्टकाश्चित्यां चित्यामृषभमुप दधाति मिथुनमेवास्य तद्यज्ञे करोति प्रजननाय तस्माद्यूथेयूथ ऋषभः ।

என்பது.

. உரை.

அக்கினி சயனத்திலுள்ள ஏனைய செங்கல்கள் கோக்கள் எனப்படுகின்றன. அக் கோக்களின் புணர்ச்சியின் பொருட்டு இவ்விருஷபச் செங்கல்

முதலானவைகள்)

வைக்கப்படுகின்றதாம். இது பிரசையுண்டாக்குதற் பொருட்டுப் புணர்ச்சியை யுண்டாக்குகின்றது. இது பற்றியே, உலகிலும் ஒவ்வொரு பசுமந்தையிலும் ஒவ்வொரு இடபம் (பொலிகாளை) இருக்கின்றது என்பதாம்.

பிராசாபத்யம் என்னுஞ் செங்கலை வைத்தற்குரிய மந்திரத்தை யுண்டாக்குகின்றது.

பிராமணம்—3

संवत्सरस्य प्रतिमां यां त्वा रात्र्युपासते । प्रजाꣳ सुवीरां कृत्वा विश्वमायुर्व्यश्नवत् ।

என்பது.

உரை.

எல்லா எசமானர்களுஞ் சேவிக்கின்ற, வருடத்தின் பத்தினி யென்னும் இரவாகிய எகாஷ்டகாச் செங்கலே! உன்னை வைத்து விட்டு, நல்ல ஏவலாளர்களுடன் கூடிய புதல்வர் முதலானவைகளையும் அடைவதுடன் முழு ஆயுளையும் இனி தடைகின்றான் என்பதாம்.

இம்மந்திரத்தால் வைக்க வேண்டிய பிராசாபத்திய மென்னுஞ் செங்கலை விதிக்கின்றது.

பிராமணம்—4

प्राजापत्यामेतामुप दधातीयं वावैषैकाष्टका यदेवैकाष्टकायामन्नं क्रियते तदेवैतयाऽवरुन्ध एषा वै प्रजापतेः कामदुघा तयैव यजमानोऽमुष्मिँल्लोकेऽग्नि दुहे ।

என்பது.

உரை.

இவ்வேகாஷ்டகை, வருடமாகிற பிரமனுடைய பத்தினியாமாதலின் பிராசாபத்ய யெனப்படுகின்றது. மற்றும் இது பூமி வடிவாம். ஆதலின் பூமியிலுண்டாகும் எல்லா வகையான உணவுப்பொருள்களையும் அடைகின்றான். அஃதன்றியும், வருடமாகிய பிரசாபதியின் காமதேனுவாம். ஆதலின் இதனால் எசமானன் அவ்வுலகிலும் எல்லாவகையான பொருள்களையும் அடைவான் என்பதாம். ஏகாஷ்டகை=மாசி கிருஷ்ணபக்க அஷ்டமி. இதன் விரிவை, கா-4. பிர-4- அநு-7-ல் காண்க.

ஒட்டைச்சாண் அளவுடைய சமித்துக்களால் உகாத்தீயை வளர்த்தற்குரிய மந்திரத்தைத் தோற்றுவிக்கின்றது.

பிராமணம்—5

येन देवा ज्योतिषोर्ध्वा उदायन्येनाऽऽदित्या वसवो येन रुद्राः । येनाङ्गिरसो महिमानमानशुस्तेनैतु यजमानस्स्वस्ति ।

என்பது.

உரை.

எவ்வக்கினியால், தேவர்களனைவரும் ஆதித்தர்களும் அங்கிரசர்களும் மகரிஷிகளும் பசுக்களும் உயர்வையும் வன்மையையும் அடைந்தார்களோ, அவ்வக்கினியால் இவ்வெசமானும் நலத்தை யடையவனுக என்பதாம்.

இம்மந்திரத்தை விநியோகிக்கின்றது.

பிராமணம்—6

सुवर्गाय वा एष लोकाय चीयते यदग्निर्येन देवा ज्योतिषोर्ध्वा उदायन्नि-त्युख्यꣳ समिन्ध इष्टका एवैता उप धत्ते वानस्पत्यास्सुवर्गस्य लोकस्य समष्ट्यै ।

என்பது.

உரை.

சுவர்க்கத்தின் பொருட்டு மகாக்கினி சயனஞ் செய்யப் படுவதால் சுவர்க்கத்திலுள்ள ஆதித்தர்கள் முதலான தேவர்களுடைய மந்திரங்களால் சமித்துக்களை வைத்தலால் வனஸ்பதியாகிற செங்கல்களை வைத்ததாகின்றது. அது சுவர்க்கத்தை யடைவதற்குக் காரணமாம் என்பதாம்

அஜ்யானி என்னுஞ் செங்கல்களை வைத்தற்குரிய மந்திரங்களுள் முதலாம் மந்திரம்.

பிராமணம்—7

शतायुधाय शतवीर्याय शतोतयेऽभिमातिषाहे । शतं यो नश्शरदो अजी-तानिन्द्रो नेषदति दुरितानि विश्वा ।

என்பது.

முதலானவைகள்)

உரை.

எவ்விந்திரன், யாம் செய்த பாவங்களனைத்தையுந் தொலைத்து விட்டு நூறு வருடம் வரை ஒருவகைப்பிணியும் வாராமற் கொண்டு செலுத்த வல்லுநனோ, நூறு வகையான ஆயுதங்களையும், நூற்றுக்கணக்கான எமது பாதுகாப்புக்களையும், பாவிகளைத் தொலைக்குந் தன்மையையுமுடைய அத்தகைய இந்திரனுக்கு வணக்கம் என்பது.

இரண்டாவது மந்திரம்

ये चत्वारः पथयो देवयाना अन्तराद्यावा पृथिवी वियन्ति । तेषां यो अज्यानिमजीतिमावहात्तस्मै नो देवाः परिदत्तेह सर्वे ।

என்பது.

உரை.

வானுக்கும் மண்ணிற்கும் நடுவில் உள்ள தேவலோக பிதிர்லோக பிரமலோக மனிதவுலக மார்க்கங்களிற் றிரிகின்றவர்களைப் பீடையின்றிக் கொண்டு செலுத்துகின்ற இந்திரனுக்கு, தேவர்காள்! நீவிரனைவரும், எமது எசமானனும் அம்மார்க்கத்திற் செல்லுங்கால் அவனையும் பாதுகாக்க வேண்டுமென்று சொல்வீர்களாக என்பது.

மூன்றாவது மந்திரம்

ग्रीष्मो हेमन्त उत नो वसन्तश्शरद्वर्षास्सुवितं नो अस्तु । तेषामृतूनाꣳ- शतशारदानां निवात एषामभयेस्याम ।

என்பது.

உரை.

வேனிற்காலம், பனிக்காலம், குளிர்காலம், மழைகாலம் பின்பனி, முன்பனிக் காலங்கள் என்னும் அறுவகை இருதுக் காலங்களும் தத்தமது சமயத்திலுண்டாகும் உணவுப் பொருள்களை எமக்குக் கொடுத்துக் கொண்டிருப்பதாகுக. நூறு வயதின் சம்பந்தமான இந்த இருதுக் காலங்களின் அருளால் யாமும் பயமில்லாத இடத்தில் வாழ்ந்திருப்போமாக என்பது.

நான்காவது மந்திரம்

इदुवत्सराय परिवत्सराय संवत्सराय कृणुता बृहन्नमः । तेषां वयꣳ सुमतौ यज्ञियानां ज्योगजीता अहतास्स्याम ।

என்பது.

உரை.

வேள்வித் தலைவ! வேட்போர்களே! நீங்கள் இதுவச்சரம், பரிவச்சரம், சம்வச்சரம் என்பது முதலிய பகுப்புக்களையுடைய வருடங்களின் வடிவாகிய காலத்திற்குப் பேரன்போடு வணக்கஞ் செய்வீர்களாக. வேள்வியையுண்டாக்கும் வருட விசேடங்களின் அநுக்கிரகமிருக்கில் யாம் நீண்டகாலம் பிறர் வயப்படாமலும், கொல்லப்படாமலும் இருப்போம் என்பதாம்.

ஐந்தாவது மந்திரம்

भद्रान्नश्श्रेयस्समनैष्ट देवास्त्वयाऽवसेन समशीमहि त्वा । स नो मयोभूः पितो आविशस्व शंतोकाय तनुवे स्योनः ।

என்பது.

உரை.

தேவர்காள்! நீவிர் நலந்தரும் எமது கரும சாதனங்களால் மிகுந்த சிறப்புடைய பயன்களை அடையச் செய்வீர்களாக. சிதித்தீயில் ஓமஞ் செய்த சோமமே! உனது பாதுகாப்பால் யாம் உன்னை இனிதடைவோம். உணவாகிய சோமமே! நீ சுக நிமித்தமாய் எம்மில் புகுவாயாக. அதாவது உடம்பிற்கு நலஞ்செய்வாயாக என்பது.

மேற்கூறிய மந்திரங்களால் வைக்க வேண்டியவைகளை விதிக்கின்றது.

பிராமணம்—8

अज्यानीरेता उप दधात्येता वै देवता अपराजितास्ता एव प्रविशति नैव जीयते ।

என்பது.

உரை.

'அஜ்யாநி' என்னுஞ் சொல்லுடன் கூடிய மந்திரங்கள் ஐந்தாலும் நாலு திசைகளில் நான்கும் நடுவில் ஒன்றுமாக வைத்தல் வேண்டும். இம் மந்திரங்களிற் கூறப்படும் தேவதைகள் பிறரால் வெல்ல முடியாதவர்களாதலின், இவ்வெசமானும் பிறரால் வெல்ல முடியாதவனுவான். இதன் விரிவை, கா-4. பிர-4. அநு-7ல் காண்க என்பதாம்.

முதலானவைகள்)

இனி, மேற்கூறிய ஐந்து மந்திரங்களாலும், ஆக்ரயணேஷ்டியில் அவியின் பொருட்டு நெல்லெடுத்து நீர் தெளிக்குமுன் ஹோமங்களைச் செய்தல் வேண்டுமென விதிக்கின்றது.

பிராமணம்—9

ब्रह्मवादिनो वदन्ति यदर्धमासा मासा ऋतवस्संवत्सर ओषधीः पचन्त्यथ कस्मादन्याभ्यो देवताभ्य आग्रयणं निरुप्यत इत्येता हि तद्देवता उदजयन् यदृतुभ्यो निर्वपेद्देवताभ्यस्समदं दध्यादाग्रयणं निरुप्यैता आहुतीर्जुहोत्यर्धमासानेव मासानृतून्त्संवत्सरं प्रीणाति न देवताभ्यस्समदं दधाति ।

என்பது.

உரை.

புதுத் தானியங்களை அருந்துவதன் பொருட்டுச் செய்யப்படும் ஆக்ரேயணேஷ்டியில், கொடி செடி பயிர் முதலியவைகளை விளையுமாறு செய்யும். பக்ஷம், மாதம், இருது, வருடம் என்னுந் தேவதைகட்கு அவியெடுக்காமல், இந்திரன் அக்கினி முதலான தேவர்கட்கு அவியெடுத்தல் என்ன காரணம்? என்று பிரமவாதிகள் தம்முள் ஆராய்ச்சி செய்ததற்கு, இந்திரன் அக்கினி முதலிய தேவர்கள், ஒடதிவிடயமாக ஏனைய தேவர்களுடன் போர் செய்து வெற்றி யடைந்தனர் என்பது இராச சூயத்திற் கூறப்பட்டிருக்கின்றது. ஆதலின், அவர்களைத் தவிர்த்து வேறு தேவதைகட்கு அவியெடுக்கில் கலகம் வரும் ஆதலால் இந்திராக்கினியின் பொருட்டு அவியெடுத்தலே பொருத்தமென்று அவர்களுட் சிலர் கூறினர். அற்றேல், மாத முதலான தேவதைகள் எவ்வாறு களிப்படைவார்களெனின்? இந்திராக்கினி முதலானோர்களின் பேருக்கு அவியை யெடுத்து, மாதம் முதலான தேவதைகட்கு இவ்வஞ்ஞானி ஹோமங்களைச் செய்தல் வேண்டும். அதனால் களிப்படைவார்கள் என்பதை யுணர்க என்பதாம்.

முற்கூறிய ஐந்தாவது மந்திரமாகிய 'பத்ராங்ந :, என்பது முதலியதால், மேற்கூறிய ஆக்ராயணேஷ்டியில் எசமானன் தனது பாகத்தை அருந்தல் வேண்டு மென்னும் விதியை மந்திரவுரை வடிவ அர்த்தவாதத்தால் தெரிவிக்கின்றது.

பிராமணம்—10

भद्रान्नश्श्रेयस्समनैष्ट देवा इत्याह हुताद्याय यजमानस्यापराभावाय ॥

என்பது.

(வச்சிரிணி என்னுங்

உரை.

எசமானன் அருந்தும்போது, 'பத்ராங்கः, என்பது முதலிய மந்திரத்தை ஓதல் வேண்டும். ஏனெனின்? அதில் 'அஶீமஹி, (உண்பேனாக) னுஞ் சொல்லிருத்தலினென்க. இவ்வாறருந்தில் எசமானன் தோல்வியடையான் என்பதாம்.

இரண்டாவது அநுவாகம்

முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் ஏழாம்பிரபாடகம்

மூன்றாவது அநுவாகம்

வச்சிரிணீ என்னுங் கூழாங்கல்லுகள் முதலானதைக் கூறும் பிராமணங்கள்.

மூன்று பஞ்சாதிக்குமேல் நாற்பத்துஆறு பதங்களைக் கொண்டது.

इन्द्रस्य वज्रोऽसि वार्त्रघ्नस्तनूपा नः प्रतिस्पशः । यो नः पुरस्तांद्दक्षिणतः पश्चादुत्तरतोऽघायुरभिदासत्येतꣳ सोऽश्मानमृच्छतु । देवासुरास्संयत्ता आसन्तेऽसुरा दिग्भ्य आऽबाधन्त तान्देवा इष्वा च वज्रेण चापानुदन्त यद्वज्रिणीरुपदधातीष्वा चैव तद्वज्रेण च यजमानो भ्रातृव्यानप नुदते दिक्षूप [९] दधाति देवपुरा एवैतास्तनूपानीः पर्यूहतेऽग्नाविष्णू सजोषसे मा वर्धन्तु वां गिरः । द्युम्नैर्वाजेभिरा गतम् । ब्रह्मवादिनो वदन्ति यन्न देवतायै जुह्वत्यथ किंदेवत्या वसोर्धारेत्यग्निर्वसुस्तस्यैषा धारा विष्णुर्वसुस्तस्यैषा धाराऽऽग्नावैष्णव्यर्चा वसोर्धारां जुहोति भागधेयेनैवैनौ समर्धयत्यथो एताम् [१०] एवाऽऽहुतिमायतनवतीं करोति यत्काम एनां जुहोति तदेवाव रुन्धे रुद्रो वा एष यदग्निस्तस्यैते तनुवौ घोराऽन्या शिवाऽन्या यच्छतरुद्रीयं जुहोति यैवास्य घोरा

तनूस्तां तेन शमयति यद्वसोर्धारां जुहोति यैवास्य शिवा तनूस्तां तेन प्रीणाति यो वै वसोर्धारायै [११] प्रतिष्ठां वेद प्रत्येव तिष्ठति यदाज्यमुच्छिष्येत तस्मिन्ब्रह्मौदनं पचेत्तं ब्राह्मणाश्चत्वारः प्राश्नीयुरेष वा अग्निर्वैश्वानरो यद्ब्राह्मण एषा खलु वा अग्नेः प्रिया तनूर्यद्वैश्वानरः प्रियायामेवैनां तनुवां प्रति ष्ठापयति चतस्रो धेनूर्दद्यात्ताभिरेव यजमानोऽमुष्मिँल्लोकेऽग्निं दुहे [१२] ॥ उपैतां धारायै षट्चत्वारिꣳशच्च ॥ ३ ॥

இதில் வச்சிரணீ என்னுங் கூழாங்கல்லுகளை வைப்பதன் விதி கூறப்படுகின்றது.

அவ்விதிக்கு மந்திரத்தைத் தோற்றுவிக்கின்றது.

பிராமணம்—1

इन्द्रस्य वज्रोऽसि वार्त्रघ्नस्तनूपानः प्रतिस्पशः । यो नः पुरस्ताद्दक्षिणतः पश्चादुत्तरतोऽघायुरभिदासत्येतꣳ सोऽश्मानमृच्छतु ।

என்பது.

உரை

பகைவனைக் கொல்கின்றவைகளும், எமது உடம்பைப் பரிபாலிக்கின்றவைகளும், பிணி முதலிய பீடைகளைப் போக்குகின்றவைகளும், செங்கல்களைப் போன்றவைகளுமான கூழாங்கல்லுகளே! நீங்கள், வச்சிராயுதமாக இருக்கின்றீர்கள். மற்றும் எப் பகைவன் கிழக்குத்திக்கிலிருந்து கொண்டு எமக்குத் துன்பஞ் செய்கின்றானோ, அவன், இங்கு (கிழக்கில்) வைக்கும் கூழாங்கல்லை யடைவானாக. அதாவது அதனால் தானே பிணியுடையனாவானாக என்பதாம்.

ஈண்டு, மந்திரத்திலுள்ள, தெற்கு வடக்கு மேற்கு என்னுஞ் சொற்களை எடுத்துக் கொண்டு முன் பின் மந்திரப் பகுதிகளையுஞ் சேர்த்துக் கொண்டு நான்கு மந்திரங்களாகப் பிரித்துக் கொள்ளல் வேண்டும் என்பதை யுணர்க.

மேற்கூறிய மந்திரங்களால் வைக்க வேண்டியவைகளை விதிக்கின்றது.

பிராமணம் — 2

देवासुरास्संयत्ता आसन्तेऽसुरा दिग्भ्य आऽबाधन्त तान्देवा इष्वा च वज्रेण चापानुदन्त यद्वज्रिणीरुपदधातीष्वा चैव तद्वज्रेण च यजमानो भ्रातृव्यानपनुदते ।

என்பது.

உரை.

தேவர்களும் அசுரர்களும் போரிட்ட போது அசுரர்கள் நாற்றிசைகளிலும் வந்து சூழ்ந்து கொண்டு தேவர்களைத் துன்பப் படுத்தினர். அப்போது, தேவர்கள், வச்சிரங்கட் கொப்பான கூழாங்கற்களால் அசுரர்களை வெருட்டி விட்டார்கள். ஆதலின், எசமானனும், பகைவனை வெருட்டுதற் பொருட்டு நான்கு திக்குக்களிலும் நான்கு கூழாங்கல்லுகளை நான்கு மந்திசங்களாலும் வைத்தல் வேண்டும். அவைகட்கு வச்சிரிணிகள் என்று பெயர் என்பதாம். இதன் விரிவை, கா-4. பிர-4, அநு, 7-ல் காண்க.

அக்கூழாங்கற்களை, செங்கலடுக்கிற்கு வெளியில் வைத்தல் வேண்டுமென்று விதிக்கின்றது.

பிராமணம்—3

दिक्षूप दधाति देवपुरा एवैतास्तनूपानीः पर्यूहते ।

என்பது.

உரை.

இக் கூழாங்கற்கள், இந்திரன் முதலிய தேவர்களுடைய பட்டினமாம். இவை வெளியிலிருந்து கொண்டே எமது உடம்புக்களைப் பரிபாலிக்கத் தக்கவைகளாம். இது பற்றியே, செங்கலடுக்கிற்கு வெளியில் நாற்றிசைகளிலும் வைக்கப்படுகின்றன என்பதாம்.

முற்கூறிய வசோர்த்தாரை மந்திரத்தை மீண்டும் எடுத்துச் சில விசேடத்தைக் கூறுதற் பொருட்டு அம் மந்திரத்தையே மீண்டுங் கூறுகின்றது.

பிராமணம்—4

अग्नाविष्णू सजोषसेमा वर्धन्तु वां गिरः । द्युम्नैर्वाजेभिरागतम् ।

என்பது.

கூழாங்கல்லுகள்)

உரை.

இதன் உரையை நான்காங் காண்டத்தின் ஏழாம் பிரபாடகத்திற் காண்க என்பதாம்.

மந்திரத்தை விநியோகித்து, அவ்விசேடத்தைக் கூறுகின்றது.

பிராமணம்—5

ब्रह्मवादिनो वदन्ति यस्मै देवतायै जुह्वत्यथ किं देवत्या वसोर्धारेत्यग्निर्वसु-स्तस्यैषा धारा विष्णुर्वसुस्तस्यैषा धाराऽऽग्नावैष्णव्यर्चा वसोर्धारां जुहोति भागधेयेनैवैनौ समर्धयत्यथो एतामेवाऽऽहुतिमायतनवतीं करोति यत्काम एनां जुहोति तदेवावरुन्धे ।

என்பது.

உரை.

பிரம்வாதிகள், 'வாசஸ்சமே, ப்ரஸவஸ்சமே' என்பது முதலிய வசோர்த்தரை மந்திரத் (சமகத்தி)ல், பயனைவேண்டுதல் மாத்திரங் காணப்படுகின்றதேயலாது ஒரு தேவதையேனுங் காணப்படவில்லை. விதியிலும், நெய்த்தாரையே காணப்படுகின்றது தேவதை இல்லை. ஆதலின் வசோர்த்தாரை ஹோமம் எந்தத் தேவதையின் பொருட்டுச் செய்யப்படுகின்றது? என்று தம்முள் ஆராயும் போது, சில அறிஞர்கள், 'வசோர்த்தாரை' என்னும் விதி வாக்கியத்தாலேயே ஹோம தேவதையும் பொருளுங் காணப்படுகின்றன என்றனர். எவ்வாற்றாலெனின்? தனத்தை வைத்தலால் 'வசு' என்பது அக்கினியாம். அதற்குத் தாரை நெய்த்தாரை என விரிக்கப்படுதலின் என்க. இவ்வாறே விஷ்ணுவிற்கும் விரித்துரைத்துப் பொருள் கொள்க. ஆதலின், வசோர்த்தாரை ஹோமத்தால் அக்கினியும் விஷ்ணுவுங் களிப்படைந்து வேண்டும் பயன்களை அளிக்கின்றார்கள் என்பதாம்.

மற்றொரு வகையால் அதைப் புகழ்கின்றது.

பிராமணம்—6

रुद्रो वा एष यदग्निस्तस्यैते तनुवौ घोराऽन्या शिवाऽन्या यच्छतरुद्रीयं जुहोति यैवास्य घोरा तनूस्तां तेन शमयति यद्वसोर्धारां जुहोति यैवास्य शिवा तनूस्तां तेन प्रीणाति ।

என்பது.

உரை.

சயனஞ்செய்த அக்கினிக்கு, உருத்திரத்திருமேனி, மங்களத் திருமேனி என இருவகைத்திருமேனிகள் உள்ளன. அவற்றுள், உருத்திரத் திருமேனி

யானது, சதருத்திரீய ஹோமத்தால் சாந்தமாகின்றது. வசோர்த்தாரை ஹோமத்தால் மங்களத் திருமேனி களிப்படைகின்றது என்பதாம். இதனுல் வசோர்த்தாரை ஹோமம் புகழப்பட்டதாகின்றது என்பதை யுணர்க.

எடுத்துக் கோண்ட விசேடத்தை விதிக்கின்றது.

பிராமணம்—7

यो वै वसोर्धारायै प्रतिष्ठां वेद प्रत्येव तिष्ठति यदाज्यमुच्छिष्येत तस्मिन्ब्रह्मौदनं पचेत्तं ब्राह्मणाश्चत्वारः प्राश्नीयुरेष वा अग्निर्वैश्वानरो यद्ब्राह्मण एषा खलु वा अग्नेः प्रिया तनूर्यद्वैश्वानरः प्रियायामेवैनां तनुवां प्रतिष्ठापयति ।

என்பது.

உரை.

வசோர்த்தாரை ஹோமத்தின் பெருமையை யுணர்ந்தவன் பெருமையை யடைகின்றுன். அப்பெருமை யாதெனின்? ஹோமஞ் செய்து எஞ்சிய நெய்யில் அன்னஞ்சமைத்து நான்கு அந்தணர்களுக்கு அருத்துவிக்கில், அந்தணர் யாவருக்கும் விருப்புடையனுதலால் வைசுவாநரமாதலானும். வைசுவானரயென்பதும் அக்கினியின் பிரிய உடம்பாமாதலானும், பிரியவுடம்பில் அக்கினியை நிறுவிய தாகின்றது. இதுவே பெருமையாம் (பிரதிஷ்டையாம்) என்க.

உண்ட அந்தணர்களுக்கு தானங் கோடுத்தல் வேண்டுமென்று விதிக்கின்றது.

பிராமணம்—8

चतस्रो धेनूर्दद्यात्ताभिरेव यजमानोऽमुष्मिँल्लोकेऽग्निं दुहे ॥

என்பது.

உரை.

நான்கு கோக்களைத் தானஞ் செய்வதால், எசமானன், சுவர்க்கத்தில் அக்கினியால் சில பயன்களை யடைகின்றுன் என்பதாம்.

மூன்றும் அநுவாகம்

முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் ஏழாம்பிரபாடகம்

நான்காவது அநுவாகம்

சில ஹோமங்களையும் ராஷ்ட்ர பிருத்து என்னுஞ் செங்கல்களையுங் கூறும் பிராமணங்கள்.

நான்கு பஞ்சாதிக்குமேல் ஏழு பதங்களைக் கொண்டது.

चित्तिं जुहोमि मनसा घृतेनेत्याहादाभ्या वै नामैषाऽऽहुतिर्वैश्वकर्मणी नैनं चिक्यानं भ्रातृव्यो दभ्नोत्यथो देवता एवाव रुन्धेऽग्ने तमद्येति पङ्क्त्या जुहोति पङ्क्त्याऽऽहुत्या यज्ञमुखमा रभते सप्त ते अग्ने समिधस्सप्त जिह्वा इत्याह होत्रा एवाव रुन्धेऽग्निर्देवेभ्योऽपाक्रामद्भागधेयम् [१३] इच्छमानस्तस्मा एतद्भागधेयं प्रायच्छन्नेतद्वा अग्नेरग्निहोत्रमेतर्हि खलु वा एष जातो यर्हि सर्वश्चितो जातायैवास्मा अन्नमपि दधाति स एनं प्रीतः प्रीणाति वसीयान्भवति ब्रह्मवादिनो वदन्ति यदेष गार्हपत्यश्चीयतेऽथ क्वास्याऽऽहवनीय इत्यसावादित्य इति ब्रूयादेतस्मिन्हि सर्वाभ्यो देवताभ्यो जुह्वति [१४] य एवं विद्वानग्निं चिनुते साक्षादेव देवता ऋध्नोत्यग्ने यशस्विन् यशसेममर्पयेन्द्रावतीमपचितीमिहाऽऽवह । अयं मूर्धा परमेष्ठी सुवर्चास्समानानामुत्तमश्लोको अस्तु । भद्रं पश्यन्त उप सेदुरग्रे तपो दीक्षामृषयस्सुवर्विदः । ततः क्षत्रं बलमोजश्च जातं तदस्मै देवा अभि सं नमन्तु । धाता विधाता परमा [१५] उत संदृक्प्रजापतिः परमेष्ठी विराजा । स्तोमाश्छन्दाꣳसि निविदो म आहुरेतस्मै राष्ट्रमभि सं नमाम । अभ्यावर्तध्वमुप मेत साकमयꣳ शास्ताऽधिपतिर्वो अस्तु । अस्य विज्ञानमनु सꣳरभध्वमिमं

पश्चादनु जीवाथ सर्वे । राष्ट्रभृत एता उप दधात्येषा वा अग्नेश्चिती राष्ट्रभृत्तयैवास्मिन्राष्ट्रं दधाति राष्ट्रमेव भवति नास्माद्राष्ट्रं भ्रंशते [१६] ॥ भागधेयं जुहुति परमा राष्ट्रं दधाति सप्त च ॥ ४ ॥

இதில், சில ஹோமங்களும் 'ராஷ்ட்ரபிருத்' என்னுஞ் செங்கல்களுங் கூறப்படுகின்றன.

கா - 4. பிர - 6. அநு - 6 ல் கூறிய ஹோமங்களிரண்டினுள் முதலாம் ஹோமவிதியை, மந்திரத்திற்கு உரை கூறுமுகத்தால் அறிவுறுத்துகின்றது.

பிராமணம்—1

चित्तिं जुहोमि मनसा घृतेनेत्याहादाभ्या वै नामैषाऽऽहुतिर्वैश्वकर्मणी नैनं चिक्ष्यानं भ्रातृव्यो दभ्नोत्यथो देवता एवावरुन्धे ।

என்பது.

உரை.

"சித்திம் சுஹோமி மனஸாகிருதேன" என்றது, அம் மந்திரத்தை ஓதி ஓமஞ் செய்தல் வேண்டு மென்பதாம். இம் மந்திரத்தில் 'விசுவகருமா' என்னுஞ் சொல்லிருத்தலால் இது விசுவகரும தேவதைக்குரியதாம். இவ் வோமஞ் செய்தவனை, பகைவர் ஒருவரும் துன்புறுத்த முடியாமையின் அதாப்யம் எனப்படும். இதனால் தேவர்களையும் அடைகின்றான் என்பதாம். இதன் விரிவை, கா-5. பிர-5. அநு-4-ல் காண்க.

இரண்டாவது ஆகுதியை விதிக்கின்றது.

பிராமணம்—2

अग्ने तमद्येति पङ्क्त्या जुहोति पङ्क्त्याऽऽहुत्या यज्ञमुखमारभते ।

என்பது.

உரை.

'அக்னே தமத்ய' என்பது முதலிய பந்திச்சந்த மந்திரத்தால் இவ் வோமஞ் செய்யில், பந்திச்சந்தம் எக்ஞவடிவமாதலின் எக்ஞந் தொடங்கப் பெற்றதாகின்றது என்பது. இதை, கா-4. பிர-6-அநு-8ல் காண்க.

ராஷ்டிரபிருத் சேங்கலும்)

கா-5. பிர-4. அநு-8-ல், கூறிய பூரணாகுதியை எடுத்துக் கொண்டு புகழ்கின்றது.

பிராமணம்—3

सप्तते अग्ने समिधस्सप्त जिह्वा इत्याह होत्रा एवाव रुन्धेऽग्निर्देवेभ्योऽपाक्रामद्भागधेयमिच्छमानस्तस्मा एतद्भागधेयं प्रायच्छन्नेतद्वा अग्नेरग्निहोत्रमेतर्हि खलु वा एष जातो यर्हि सर्वश्चितो जातायैवास्मा अन्नमपि दधाति स एनं प्रीतः प्रीणाति वसीयान्भवति ।

என்பது.

உரை.

"சப்ததே அக்னே சமிதஃ சப்த ஜிஹ்வா" என்றது. ஏழு ஹோதாக்கள் என்று இம்மந்திரத்திலிருத்தலால் இந்த ஆகுதியால் ஏழு ஹோதாக்களையும் தன் வசப் படுத்திக் கொள்கின்றான். இவ்வா குதி, தேவர்கள் அக்னிக்குக் கொடுத்த பாகமானதால் இம் மகாக்கினி சயனத்திற்கு அக்கினி ஹோத்திரம் எனப்படுகின்றது. சயனம் முழுதும் முடிந்தவுடன் தோன்றும் அக்கினிக்கு, இவ்வாகுதி அன்னந் தேடப்பட்டதாகின்றது. இதனாற் களிப்புற்ற அக்கினி, எசமானனைக் களிப்புறச் செய்கின்றது. அதனால் எசமானன் தனமுடையவனாகின்றான் என்பது. இதை கா-4. பிர-6. அநுவாகம்-5-ல் காண்க.

சயனஞ் செய்த அக்கினியை, கடாவிடைகளால் சூரியனாகப் புகழ்கின்றது.

பிராமணம்—4

ब्रह्मवादिनो वदन्ति यदेष गार्हपत्यश्चीयतेऽथ क्वास्याऽऽहवनीय इत्यसावादित्य इति ब्रूयादेतस्मिन्हि सर्वाभ्यो देवताभ्यो जुह्वति य एवं विद्वानग्निं चिनुते साक्षादेव देवता ऋध्नोति ।

என்பது.

உரை.

பிறவிடத்தில், அக்கினியைக் கிருகபதி யென்று கூறியிருத்தலானும் கிருகபதியைத் தலைவனாகக் கொண்ட ஒரு இடமே கார்ஹபத்யமாம், முன் வாக்கியத்தில் சயனத் தீயிற் செய்யப்பட்ட பூரணாகுதி அக்கினியைத் தலைவனாகக் கொண்டதானும் சயனாக்கினி எல்லமாம் காருகபத்தியமேயாம். எல்லாத் தேவதைகட்கும் ஹோமஞ் செய்யுமிடமாகிய ஆகவனீயம் கிடைக்கவில்லை என்று பிரமவாதிகள் ஆராயும் போது, சில

அறிஞர், சீயமான(அடுக்கப்படும்)அக்கினியாகிய சூரியனே ஆகவனீயமாம், என்னை? எல்லாத் தேவர்கட்கும் சூரியன்பால் ஹோமஞ் செய்யப்படுதலி னென்க என்றனர்.

அற்றாகலினன்றே, மிருதியும். "தீயிலிட்ட ஆகுதி பருதியில் நிலைக்கின்றது" என்கின்றது. இவ்வாற்றால், சயனக்கினியைச் சூரிய னென்றுணர்ந்து சயனஞ் செய்கிறவன் நேரே தேவர்களைப் பிரியப்படுத்துகின்றான் என்பதாம்.

'ராஷ்டிரபிருத், என்னுஞ் செங்கல்களை வைத்தற்குரியவைகளாய்த் தோற்றுவிக்கும் மந்திரங்களுள் முதலாவது இருக்கைக் கூறுகின்றது.

முதலாவது மந்திரம்.

अग्ने यशस्विन्यशसेममर्पयेन्द्रावतीमपचितीमिहाऽऽवह । अयं मूर्धा परमेष्ठी सुवर्चास्समानानामुत्तमश्लोको अस्तु ।

என்பது.

உரை.

மிகுந்த பெருமையையுடைய அக்கினியே! நீ, இவ் வெசமானன் கீர்த்தியை யடையுமாறு செய்வாயாக. இந்திரனுடைய ஆராதனையை, இவ் வேள்விக் கருமத்தில் கொண்டு வந்து சேர்ப்பாயாக. இவ் வெசமானன் ஏனைய எசமானர்களுக்குள் தலைமையனுகச் செய்வாயாக. மற்றும், நல்ல அழகும், கீர்த்தியும் உண்டாக்குவாயாக என்பதாம்.

இரண்டாவது மந்திரம்

भद्रं पश्यन्त उप सेदुरग्रे तपो दीक्षामृषयस्सुवर्विदः । ततः क्षत्त्रं बलमोजश्च जातं तदस्मै देवा अभि सं नमन्तु ।

என்பது.

உரை.

முன் காலத்தில், இருடிகள் சிலர், நூல்களால் கரும பயனை யுணர்ந்து துணிந்து, கருமத்திற்கு அங்கமாகிய உண்ணுமை, மொட்டை யடித்தல் முதலான தீட்சைகளை அநுட்டித்தார்கள். அதனுல் க்ஷத்திரியத் தன்மை, அதாவது, பயத்திலிருந்து பாதுகாக்குந்தன்மை அவர்கட்கு உண்டாயிற்று. அப் பயன்களனைத்தும் இவ் வெசமானுக்கு உண்டாகுக என்பதாம்.

மூன்ரு மந்திரம்

धाता विधाता परमोत संदृक्प्रजापतिः परमेष्ठी विराजा। स्तोमाश्छन्दाꣳसि निविदो म आहुरेतस्मै राष्ट्रमभि सं नमाम।

என்பது.

உரை.

மிகப் போஷிப்பவனும், படைப்பவனும், எல்லா முணர்பவனும் பிரசைகளைப் பாதுகாப்பவனும், பரமேஷ்டியும், அதாவது பரமாகிய சத்திய லோக முதலியவைகளில் வாழ்பவனும், விராட் வடிவுடையவனுமாகிய தேவனும், திருவிருத் முதலிய ஸ்தோமங்களும், சந்தங்களும், நிவித்தும் (தேவேத்தஃ மந்வித்தஃ என்பது முதலியன) எமக்குச் சொல்வார்களாக. எதைச் சொல்வார்களெனின்? இவ் வெசமானனுக்கு எல்லா வகையாலும் இராச்சியத்திற்குத் தலைவனுதற் தன்மையைத் தேடல்வேண்டும் என்பதை என்பதாம்.

நான்காவது இருக்கு மந்திரம்

अभ्यावर्तध्वमुप मेत साकमयꣳ शास्ताऽधिपतिर्वो अस्तु। अस्य विज्ञानमनु सꣳ रभध्वमिमं पश्चादनु जीवाथ सर्वे।

என்பது.

உரை.

மனிதர்காள்? நீவிர், எல்லாரும் வருவீர்களாக. எல்லாருஞ் சேர்ந்து எமது எசமானனுக் கருகில் வருவீர்களாக. இவ் வெசமானன் உம்மைப் பரிபாலிக்கின்றவன் இவ்வெசமானனுடைய மனே விருத்தியைத் தழுவி முயல்வீர்களாக இவ் வெசமானன் அறிந்து கொடுக்கு பிழைப்பை ஏற்றுக் கொள்வீர்களாக என்பதாம்.

மேற்கூறிய நான்கு மந்திரங்களாலும் வைக்கவேண்டியவற்றை விதிக்கின்றது.

பிராமணம்—5

राष्ट्रभृत एता उप दधात्येषा वा अग्नेश्चिती राष्ट्रभृत्तयैवास्मिन्राष्ट्रं दधाति राष्ट्रमेव भवति नास्माद्राष्ट्रं भ्रꣳशते ॥

என்பது.

உரை.

ராஷ்டிரபிருத் (இராச்சியத்தை நிறுவுவது) என்னுஞ் சொல்லுடன் கூடிய மந்திரங்களால் வைக்கப்படுஞ் செங்கல்கள் ராஷ்டிரபிருதுக்கள் எனப்படுகின்றன. இவற்றை வைத்தலால் உண்டாகிய சித்தி, (கல்லடுக்கு) 'ராஷ்டிரபிருத்' எனப்படுகின்றது. ஆதலின் இவ்வெசமானனிடத்தில் இராச்சியத்தை நிலை நாட்டுகின்றது. அவ்விராச்சியம் இவன் வசமாகின்றது. அதாவது எசமானனிடத்திலிருந்து எப்போதும் நழுக்மாட்டாது என்பதாம்.

நான்காம் அநுவாகம்
முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் ஏழாம்பிரபாடகம்

ஐந்தாம் அநுவாகம்

உகாத்தியை மீண்டும் வளர்த்தல் முதலானவற்றைக் கூறும் பிராமணங்கள்.

ஆறு பஞ்சாதிக்குமேல் நாற்பத்தைந்து பதங்களைக் கொண்டது.

यथा वै पुत्रो जातो म्रियते एवं वा एष म्रियते यस्याग्निरुख्य उद्वायति यन्निर्मन्थ्यं कुर्याद्वि च्छिन्द्याद्भ्रातृव्यमस्मै जनयेत्स एव पुनः परीध्यस्स्वादेवैनं योनेर्जनजति नास्मै भ्रातृव्यं जनयति तमो वा एतं गृह्णाति यस्याग्निरुख्य उद्वायति मृत्युस्तमः कृष्णं वासः कृष्णा धेनुर्दक्षिणा तमसा [१७] एवतमो मृत्युमप हते हिरण्यं ददाति ज्योतिर्वै हिरण्यं ज्योतिषैव तमोऽप हतेऽथो तेजो वै हिरण्यं तेज एवाऽऽत्मन्धत्ते सुवर्न घर्मस्स्वाहा सुवर्नार्कस्स्वाहा सुवर्न शुक्रस्स्वाहा सुवर्न ज्योतिस्स्वाहा सुवर्न सूर्यस्स्वाहाऽर्को वा एष यदग्निरसावादित्यः [१८] अश्वमेधो यदेता आहुतीर्जुहोत्य-र्काश्वमेधयोरेव ज्योतींषि सं दधात्येष ह त्वा अर्काश्वमेधीयस्यै-तदग्नौ क्रियत आपो वा इदमग्रे सलिलमासीत्स एतां प्रजापतिः

प्रथमां चितिमपश्यत्तामुपाधत्त तदियमभवत्तं विश्वकर्माब्रवीदुप त्वाऽयानीति नेह लोकोऽस्तीति [१९] अब्रवीत्स एतां द्वितीयां चितिमपश्यत्तामुपाधत्त तदन्तरिक्षमभवत्स यज्ञः प्रजापतिमब्रवीदुप त्वाऽयानीति नेह लोकोऽस्तीत्यब्रवीत्स विश्वकर्माणमब्रवीदुप त्वाऽयानीति केन मोपैष्यसीति दिश्याभिरित्यब्रवीत्तं दिश्याभिरुपैत्ता उपाधत्त ता दिशः [२०] अभवन्त्स परमेष्ठी प्रजापतिमब्रवीदुप त्वाऽयानीति नेह लोकोऽस्तीत्यब्रवीत्स विश्वकर्माणं च यज्ञं चाब्रवीदुप वामाऽयानीति नेह लोकोऽस्तीत्यब्रूताᳫं स एतां तृतीयां चितिमपश्यत्तामुपाधत्त तदसावभवत्स आदित्यः प्रजापतिमब्रवीदुप त्वा [२१] आऽयानीति नेह लोकोऽस्तीत्यब्रवीत्स विश्वकर्माणं च यज्ञं चाब्रवीदुप वामाऽयानीति नेह लोकोऽस्तीस्त्यब्रूताᳫं स परमेष्ठिनमब्रवीदुप त्वाऽयानीति केन मोपैष्यसीति लोकंपृणयेत्यब्रवीत्तं लोकं पृणयोपैत्तस्मादयातयाम्नी लोकं पृणाऽयातयामा ह्यसौ [२२] आदित्यस्तानृषयोऽब्रुवन्नुप व आऽयामेति केन न उपैष्यथेति भूम्नेत्यब्रुवन्तान्द्वाभ्यां चितीभ्यामुपायन्त्स पञ्चचितीकस्समपद्यत य एवं विद्वानग्निं चिनुते भूयानेव भवत्यभीमाँल्लोकाञ्जयति विदुरेनं देवा अथो एतासामेव देवतानाᳫं सायुज्यं गच्छति [२३] ॥ तमसाऽऽदित्योऽस्तीति दिश आदित्यः प्रजापतिमब्रवीदुप त्वाऽसौ पञ्चचत्वारिᳫंशच्च

॥ ५ ॥

இதில், உகாத்தி அணைந்துவிடில் மீண்டு வளர்க்க வேண்டியது முதலியதைக் கூறுகின்றது.

காருகபத்யத்திலிருந்து எடுத்துக் கொண்டு வந்து வளர்த்தல் வேண்டுமென்று விதிக்கின்றது.

பிராமணம்—1

यथा वै पुत्रो जातो म्रियत एवं वा एष म्रियते यस्याग्निरुख्य उद्वायति यन्निर्मन्थ्यं कुर्याद्विच्छिन्द्याद्भ्रातृव्यमस्मै जनयेत्स एव पुनः परीध्यस्स्वादेवैनं योनेर्जनजति नास्मै भ्रातृव्यं जनयति ।

என்பது.

உரை.

எவனுடைய உகாத்தி அணைந்து விட்டதோ, அவனுக்கு, தனது மகன் இறந்தது போன்று துன்பமுண்டாகின்றது. அவன், தீயைக் கடைந்தெடுக்கில் முன்னுள்ள அக்கினி கேடடையும். அவ்வாறு கெடில், இவனுக்குப் பகைவனை யுண்டாக்கும். ஆதலின், காருகபத்தியத்திலிருந்து தீயை எடுத்துக் கொண்டு வந்து வளர்க்கில், தனது காரணத்திலிருந்தே தோன்றியதால் பகைவனை யுண்டு பண்ணுது என்பதாம்.

இதில், பிராயச்சித்தமாகக் கொடுக்க வேண்டிய தட்சிணையை விதிக்கின்றது.

பிராமணம்—2

तमो वा एतं गृह्णाति यस्याग्निरुख्य उद्वायति मृत्युस्तमः कृष्णं वासः कृष्णा धेनुर्दक्षिणा तमसैवतमो मृत्युमपहते ।

என்பது.

உரை.

எவனுடைய உகாத்தி அணைந்து விட்டதோ, அவனை, இருட்டாகிற மிருத்துப் பிடித்துக் கொள்கின்றது. அதை நீக்குதற் பொருட்டு, அவன், கரிய ஆடையையும், பசுவையும் தானஞ்செய்தல் வேண்டும். இதனால், தானம் கறுப்பு வடிவானதால் கறுப்புநிறமாகிய மிருத்து நீங்கி விடுகின்றது என்பது.

வளர்த்தல் முதலானவைகள்)

அதற்கே, மற்றொரு தானத்தை விதிக்கின்றது.

பிராமணம்—3

हिरण्यं ददाति ज्योतिर्वै हिरण्यं ज्योतिषैव तमोऽपहतेऽथो तेजो वै हिरण्यं तेज एवाऽऽत्मन्धत्ते ।

என்பது.

உரை.

பொன்னையுந் தானஞ் செய்தல் வேண்டும். பொன் ஒளி யுடைய தாதலின் இருட்டாகிய மிருத்து அதனால் கெட்டு விடுகின்றது. மற்றும், பொன் ஒளியாமாதலின் ஆன்மாவிற்கு ஒளியைக் கொடுக்கின்றது என் பதாம்.

ஐந்து ஆகுதி மந்திரங்களைத் தோற்றுவிக்கின்றது.

5. மந்திரங்கள்

सुवर्न घर्मस्स्वाहा सुवर्नार्कस्स्वाहा सुवर्न शुक्रस्स्वाहा सुवर्न ज्योतिस्स्वाहा सुवर्न सूर्यस्स्वाहा ।

என்பது.

உரை.

சுவர்க்கம் போல் ஒளிர்கின்ற அக்கினிச்கு அர்ப்பணம், சுவர்க்கம் போல் போற்றத்தக்க அக்கினிக்கு அர்ப்பணம், சுவர்க்கம் போல் அழுக் கில்லாத அக்கினிக்கு அர்ப்பணம், சுவர்க்கம் போல் பிரகாசமாகிய அக்கி னிக்கு அர்ப்பணம், சுவர்க்கம் போல் சூரிய வர்ணமுடைய (ஆதித்தனுகிய) அக்கினிக்கு அர்ப்பணம் என்பது.

மேற்கூறிய மந்திரங்களாற் செய்யப்படும் ஹோமங்களை விதிக்கின்றது.

பிராமணம்—4

अर्को वा एष यदग्निरसावादित्य अश्वमेधो यदेता आहुतीर्जुहोत्यर्काश्व-मेधयोरेव ज्योतीꣳषि सं दधात्येष हत्वा अर्काश्वमेधीयस्यैतदग्नौ क्रियते ।

என்பது.

உரை.

வேள்விக்குச் சாதனமாய்ச் சயனஞ் செய்த இவ்வக்கினி 'போற்றத் தக்கதாமாதலின் அர்க்க மெனப்படும். ஆதித்தன், யாக பயன் வடிவ னதலின் அசுவ மேதம் எனப்படும். இம் மந்திரங்களாற் செய்யப்படும்

ஹோமங்கள் அர்காஸ்வமேதமாகிய அக்கினி ஆதித்தர்கட்குள்ள ஒளிகளைத் தேடுகின்றன. இவ்வைந்து ஹோமங்களையுஞ் செய்தவன், அர்க்க அசுவ மேதமாகிய வேள்வியையும், அதன் பயனையும் அடைந்தவனாகின்றான் என்பதாம்.

ஐந்து செங்கல் அடுக்குக்களைப் போற்றுவதில் முதலாவது அடுக்கைப் போற்றுகின்றது.

பிராமணம்—5

आपो वा इदमग्रे सलिलमासीत्स एतां प्रजापतिः प्रथमां चितिमपश्यत्ता-मुपाधत्त तदियमभवत् ।

என்பது.

உரை.

இவ்வுலகந் தோன்றுவதற்கு முன், இவ்வாறில்லை. மற்றோ, அனைத்தும் நீர் மயமாக இருந்தது. அதில் ஏனைய பூதக் கலப்பில்லை. அப்போது, பிரமன், தானிருப்பதற்கு இடம் யாதெனஆராய்ந்து முதலாவது செங்கலடுக்கைக்கண்டு பிடித்துச் செய்து அதன்மேல் பிரமனிருந்தனன். அதுவே பூமியாயிற்று என்பதாம்.

இரண்டாவது செங்கலடுக்கைப் போற்றுகின்றது.

பிராமணம்—6

तं विश्वकर्माब्रवीदुप त्वाऽयानीति नेह लोकोऽस्तीत्यब्रवीत्स एतां द्वितीयां चितिमपश्यत्तामुपाधत्त तदन्तरिक्षमभवत् ।

என்பது.

உரை.

விசுவகருமன் என்னும் மற்றொருவன், தானிருப்பதற்கு இடமில்லாமல், யானும் உனக்கருகில் வந்து விடுகின்றேன் என்று பிரமனை இடங் கேட்டதற்கு, பிரமன், பூமியில் இடம் இல்லை என்றதால் இரண்டாவது செங்கலடுக்கைத் தனக்கு இடமாகச் செய்தனன். அது அந்தரிக்கமாயிற்று. அதில் விசுவகருமன் வசித்திருந்தனன் என்பதாம்.

வளர்த்தல் முதலானவைகள்)

' திசியங்கள் ' என்னுஞ் செங்கல்களைப் புகழ்கின்றது.

பிராமணம்—7

स यज्ञः प्रजापतिमब्रवीदुप त्वाऽयानीति नेह लोकोऽस्तीत्यब्रवीत्स विश्वकर्माणमब्रवीदुप त्वाऽयानीति केन मोपैष्यसीति दिश्याभिरित्यब्रवीत्तं दिश्याभिरुपैत्ता उपाधत्त ता दिशोऽभवन् ।

என்பது.

உரை.

எக்ஞபுருடன், பிரமனை இடங் கேட்டதற்கு இடம் இல்லை யென்றனன். விசுவகருமாவைக் கேட்டதற்கு, அவன், எச்சாதனத்தால் என்னிடம் வருவாய்? என்று கேட்டனன். அதற்கு, திசியங்கள் என்னுஞ் செங்கல்களை வைத்தலால் உன்னை யடைவேன் என்றனன். அவ்வாறே செய்து அதை யடைந்தனன். அச் செங்கல்கள் திக்குக்களாயின. இதனால் எக்ஞ புருடனுக்கு இடமாயிற்று என்பது.

மூன்றுவது செங்கலடுக்கைப் புகழ்கின்றது.

பிராமணம்—8

स परमेष्ठी प्रजापतिमब्रवीदुप त्वाऽयानीति नेह लोकोऽस्तीत्यब्रवीत्स विश्वकर्माणं च यज्ञं चाब्रवीदुप वामाऽयानीति नेह लोकोऽस्तीत्यब्रूताꣳस एतां तृतीयां चितिमपश्यत्तामुपाधत्त तदसावभवत् ।

என்பது.

உரை

பிரசாபதி, விசுவகருமா, பரமேட்டி என்பவர்கள் ஒரேமூர்த்தியின் உருவ வேறுபாட்டையுடையவர்கள். அவர்களுள், பரமேஷ்டி, பிரசாபதியை இடங் கேட்டதற்கு பூமியில் இடம் இல்லை யென்று மறுத்தனன். அவ்வாறே விசுவகருமன், எக்ஞ புருடன் என்னு மிருவரும், அந்தரிக்ஷத்திலும் திக்குக்களிலும் இடமில்லை யென்றனர். பிறகு, பரமேஷ்டி ஆராய்ந்து பார்த்து மூன்றுவது செங்கலடுக்கைச் செய்தனன். அது வானமாயிற்று. பிறகு தான் அதன்மேல் இருந்தனன் என்பது.

'உலகம்பிருணு, என்னுஞ் செங்கலைப் புகழ்கின்றது.

பிராமணம்—9

स आदित्यः प्रजापतिमब्रवीदुप त्वाऽयानीति नेह लोकोऽस्तीत्यब्रवीत्स विश्वकर्माणं च यज्ञं चाब्रवीदुप वामाऽयानीति नेह लोकोऽस्तीत्यब्रूताꣳ स परमेष्ठिनमब्रवीदुप त्वाऽयानीति केन मोपैष्यसीति लोकं पृणयेत्यब्रवीत्तं लोकं पृणयोपैत्तस्मादयातयाम्नी लोकं पृणाऽयातयामा ह्यसावादित्यः ।

என்பது.

உரை

இடங் கிடைக்காத ஆதித்தன், லோகம் பிருணு என்னுஞ் செங்கலைக் கொண்டு வந்து வைத்த பிறகு இடத்தை யடைந்தனன். ஆதித்தனுல் கொண்டு வரப்பட்டதால் அச் செங்கல் சாரங் கெடாததாகின்றது. இது பற்றியே, ஆதித்தன் போல் மீண்டும் மீண்டும் வைக்கினுங் கெடுவதில்லை. எங்கெங்குச் செங்கலடுக்கில் இடை வெளி யிருக்கிலும் அங்கங்கு லோகம் பிருணு என்பதால் செங்கல் வைக்கப் படுகின்றது என்பதாம்.

நான்காவது, ஐந்தாவது செக்கலடுக்குக்களைப் புகழ்கின்றது

பிராமணம்—10

तानृषयोऽब्रुवन्नुप व आऽयामेति केन न उपैष्यथेति भूम्नेत्यब्रुवन्तान्द्वाभ्यां चितीभ्यामुपायन्त्स पञ्चचितीकस्समपद्यत ।

என்பது.

உரை.

பிரசாபதி முதலியோர்கட்கு வேருன சில மகரிஷிகளும் இடங்கேட்டுப் பெருதவர்களாய், எவ்வாறு அடைவீர்கள் என்று மறுத்துக் கேட்டதற்கு நான்காவது ஐந்தாவது அடுக்குக்களைச் செய்து அவைகளால் இடத்தை யடைந்தார்கள். இதனுல் ஐந்தடுக்குக்களாயின என்பதாம்.

இவ்வாறுணர்ந்து அநுட்டிப்பதைப் புகழ்கின்றது.

பிராமணம்—11

य एवं विद्वानग्निं चिनुते भूयानेव भवत्यभीमाꣳल्लोकाञ्जयति विदुरेनं देवा अथो एतासामेव देवतानाꣳ सायुज्यं गच्छति ॥

என்பது

உரை.

இவ்வாறுணர்ந்து செய்தவன், கல்வி முதலிய செல்வ மிகுதியையும், மூன்றுலக வெற்றியையும், தேவகீர்த்தியையும், தேவர்களுடைய சாயுச்சியத்தையு மடைகின்றான் என்பது.

ஐந்தாம் அநுவாகம்

முற்றிற்று.

ஐந்தாங்காண்டம் ஏழாம்பிரபாடகம்

ஆறுவது அநுவாகம்

விரதாநுட்டான முதலியவைகளைக் கூறும் பிராமணங்கள்.

ஆறு பஞ்சாதிக்குமேல் மூன்று பதங்களைக் கொண்டது.

वयो वा अग्निर्यद॒ग्निचित्पक्षिणोऽश्नीयात्तमेवाग्निमद्यादार्तिमा-र्छेत्संवत्सरं व्रतं चरेत्संवत्सरꣳ हि व्रतं नाति पशुर्वा एष यद-ग्निर्हिनस्ति खलु वै तं पशुर्य एनं पुरस्तात्प्रत्यञ्चमुपचरति तस्मा-त्पश्चात्प्राङुपचर्य आत्मनोऽहिꣳसायै तेजोऽसि तेजो मे यच्छ पृथिवीं यच्छ [२४] पृथिव्यै मा पाहि ज्योतिरसि ज्योतिर्मे यच्छान्तरिक्षं यच्छान्तरिक्षान्मा पाहि सुवरसि सुवर्मे यच्छ दिवं यच्छ दिवो मा पाहीत्याहैताभिर्वा इमे लोका विधृता यदेता उपदधात्येषां लोकानां विधृत्यै स्वयमातृण्णा उपधाय हिरण्येष्टका उप दधातीमे वै लोकास्स्वयमातृण्णा ज्योतिर्हिरण्यं यत्स्वयमा-तृण्णा उपधाय [२५] हिरण्येष्टका उपदधातीमानेवैताभिर्लोका-ञ्ज्योतिष्मतः कुरुतेऽथो एताभिरेवास्मा इमे लोकाः प्रभान्ति यास्ते अग्ने सूर्ये रुच उद्यतो दिवमातन्वन्ति रश्मिभिः । ताभि-स्सर्वाभी रुचे जनाय नस्कृधि । या वो देवास्सूर्ये रुचो गोष्वश्वेषु

या रुचः । इन्द्राग्नी ताभिस्सर्वाभी रुचं नो धत्त बृहस्पते । रुचं
नो धेहि [२६] ब्राह्मणेषु रुचꣳ राजसु नस्कृधि । रुचं विश्येषु
शूद्रेषु मयिधेहि रुचा रुचम् । द्वेधा वा आग्न चिक्यानस्य यश
इन्द्रियं गच्छत्यग्निं वा चितमीजानं वा यदेता आहुतीर्जुहोत्यात्म-
न्नेव यश इन्द्रियं धत्त ईश्वरो वा एष आर्तिमार्तोर्योऽग्निं चिन्वन्न-
धिक्रामति तत्त्वा यामि ब्रह्मणा वन्दमान इति वारुण्यर्चा [२७]
जुहुयाच्छान्तिरेवैषाऽग्नेर्गुप्तिरात्मनो हविष्कृतो वा एष योऽग्निं
चिनुते यथा वै हविस्स्कन्दत्येवं वा एष स्कन्दति योऽग्निं चित्वा
स्त्रियमुपैति मैत्रावरुण्याऽऽमिक्षया यजेत मैत्रावरुणतामेवोपैत्या-
त्मनोऽस्कन्दाय यो वा अग्निमृतुस्थां वेदर्तुर्ऋतुरस्मै कल्पमान
एति प्रत्येव तिष्ठति संवत्सरो वा अग्निः [२८] ऋतुस्थास्तस्य
वसन्तश्शिरो ग्रीष्मो दक्षिणः पक्षो वर्षाः पुच्छꣳ शरदुत्तरः पक्षो
हेमन्तो मध्यं पूर्वपक्षाश्चितयोऽपरपक्षाः पुरीषमहोरात्राणीष्टका
एष वा अग्निर्ऋतुस्थाय एवं वेदर्तुर्ऋतुरस्मै कल्पमान एति प्रत्येव
तिष्ठति प्रजापतिर्वा एतं ज्यैष्ठ्यकामो न्यधत्त ततो वै स ज्यैष्ठ्यम-
गच्छद्य एवं विद्वानग्निं चिनुते ज्यैष्ठ्यमेव गच्छति [२९] ॥
पृथिवीं यच्छ यत्स्वयमातृण्णा उपधाय धेहृचाऽग्निश्चिनुते त्रीणि
च ॥ ६ ॥

இதில், விரதா நுட்டான முதலியன கூறப்படுகின்றன.

பறவையைத் தின்னுவதை மறுத்தலாகிய ஒரு வருட விரதாநுட்டானத்தை விதிக்கின்றது.

பிராமணம்—1

वयो वा अग्निर्यदग्निचित्पक्षिणोऽश्नीयात्तमेवाग्निमद्यादार्तिमार्छेत्संवत्सरं व्रतं चरेत्संवत्सरꣳ हि व्रतं नाति ।

என்பது.

உரை.

மகாக்கினி சயனஞ் செய்தவன் பறவையைத் தின்றால் இறந்து விடுவான். ஏனெனின், சயனஞ் செய்த அக்கினி பறவை வடிவாமாதலின் அக்கினியையே தின்றவனாதலினென்க. ஆதலின், ஒரு வருடம் வரை பறவையைத் தின்னாமையாகிய விரதத்தை அநுட்டித்தல் வேண்டும். இவ்வாறு ஒரு வருடம் விரதம் இருத்தலால் உலகில் எவ்விரதமும் ஒருவருடத்திற்கு மேல் இல்லை என்பது.

செங்கலடுக்கின் மேற்குப் புறத்திலிருந் (மேற்கிலிருந்)தே ஏறல் வேண்டுமென்னும் நியமத்தை விதிக்கின்றது.

பிராமணம் —2

पशुर्वा एष यदग्निर्हिनस्ति खलु वै तं पशुर्य एनं पुरस्तात्प्रत्यञ्चमुपचरति तस्मात्पश्चात्प्राङुपचर्य आत्मनोऽहिꣳसायै ।

என்பது.

உரை.

சயனஞ்செய்த அக்கினி பசுவாமாதலின், முன்பக்கமாய் அதன் மேலேறில் பசு கொம்புகளிரண்டாலும் பாய்ந்து கொல்வது போற் கொன்றுவிடும். ஆதலின், வாலிலிருந்து (மேற்கில்) கிழக்குமுகமாய் நின்றுகொண்டு ஏறுதல் வேண்டும். இது ஏறுகின்றவனுக்குத் துன்புறுத்தாமையின் பொருட்டாம் என்பதாம்.

பொன் துண்டுகளை வைப்பதற்கு மந்திரங்களைத் தோற்றுவிக்கின்றது.

பிராமணம்—3

तेजोऽसि तेजो मे यच्छ पृथिवीं यच्छ पृथिव्यै मापाहि ज्योतिरसि ज्योतिर्मे यच्छान्तरिक्षं यच्छान्तरिक्षान्मापाहि सुवरसि सुवर्मे यच्छ दिवं यच्छ दिवो मापाहि ।

என்பது.

உரை.

முதலடுக்கில் பொன் துண்டை வைக்கும்போது, பொற் செங்கலே! நீ, தேசசுவடிவா யிருக்கின்றாய். எனக்கு ஒளியைக் கொடுப்பாயாக. பூமியைக் கொடுப்பாயாக. அல்லது, பூமியை எனக்கு உதவிசெய்யும்படி ஏற்பாடு செய்வாயாக. அப்பூமியிலிருந்து எம்மைப் பாதுகாப்பாயாக. பூமி துன்புறுத்தாதவாறு செய்வாயாக. இவ்வாறே அந்தரிக்ஷத்திற்கும் சுவர்க்கத்திற்கும் பொருளுரைத்துக் கொள்க என்பதாம்.

மேற்படி மந்திரங்களால் வைக்க வேண்டியவற்றை விதிக்கின்றது.

பிராமணம்—4

इत्याहैताभिर्वा इमे लोका विधृता यदेता उपदधात्येषां लोकानां विधृत्यै ।

என்பது.

உரை.

மூன்றடுக்கிலும் மூன்று பொன் துண்டுகளை வைக்கும் போது இம் மந்திரங்களை ஓதல் வேண்டும். இதனால் மூன்றுலகங்களும் தாங்கப்படுகின்றன. இவைகளை வைத்தல் மூன்றுலகங்களையுந் தாங்குதற் பொருட்டாம் என்பது.

இயற்கைத்துளைகளையுடைய சுக்கான் கற்களை வைத்த பிறகு பொன் துண்டுகளை வைத்தல் வேண்டு மென்று விதிக்கின்றது.

பிராமணம்—5

स्वयमातृण्णा उपधाय हिरण्येष्टका उप दधातीमे वै लोकास्स्वयमातृण्णा ज्योतिर्हिरण्यं यत्स्वयमातृण्णा उपधाय हिरण्येष्टका उपदधातीमाने- वैताभिर्लोकाञ्ज्योतिष्मतः कुरुतेऽथो एताभिरेवास्मा इमे लोकाः प्रभान्ति ।

என்பது.

உரை.

இயற்கைத் துளையுடையச் சுக்கான் கற்களை வைத்து விட்டு பொன் துண்டுகளை வைத்தல் வேண்டும். இயற்கைச் சுக்கான் கற்கள் உலகங்களாம். பொன் துண்டுகளால் உலகங்கள் ஒளி யுடையவைகளாகச் செய்யப்பெற்றன. இவைகளால் இவ்வுலகங்கள் இனிது விளங்குகின்றன என்பது.

‘ ருக்கு ’ (ஒளி) என்னும் ஹோமங்களின் மந்திரங்கள் மூன்றனுள்
முதலாவது மந்திரம்

यास्ते अग्ने सूर्ये रुच उद्यतो दिवमातन्वन्ति रश्मिभिः । ताभिस्सर्वाभी रुचे जनाय नस्कृधि ।

என்பது.

உரை.

